0,1B:5

க

கணபதி துணை.

சங்கமருவிய எட்டுத்தொகை நூல்களுள்

ஆறாவதாகிய

கலித்தொகை

(மருதக்கலி, முல்லைக்கலி)

மூலமும்

மதுரையாசிரியர்

பாரத்துவாசி

நச்சினார்க்கினியருரையும்

இவை

ஐடையாற்று மகாலம்

வைதீச்வரையர்கள் தாபித்தருளும்

சென்னை,

பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதருமாகிய

அனந்தராமையரால்,

தன்கு பரிசோதித்து,

தாம் புதிதாக எழுதிய ஆராய்ச்சிக் குறிப்புடனு

சென்னை

தோபில் அச்சுக்கூடத்தில்,

பதிப்பிக்கப்பெற்றன.

1925

ரிஜிஸ்டர்ட் காபிரைட்.

கணபதி துணை.

இரண்டாஞ் சம்புடத்தின்.

முகவுரை.

**கிளருந் திருவல்லிக் கேணிக்க ணன்பர்
தளருந் துயர்தீர்ப்பான் சார்ந்து—வளருந்
தொருகோட்டுக் கற்பகத்தா ளுற்றேன் கலிக்கட்
டிருகோட்டும் வெப்பொழியச் செய்து.**

இந்நூலையும் இப்பதிப்பையும்பற்றிய செய்திகள் பலவும், கடவுள் வாழ்த்தும் பாலேக்கலியும் குறிஞ்சிக்கலியும் அடங்கிய முதற்சம்புடத்தின் தலேப்பில் எழுதப்பெற்றுள்ளன.

இவ்விரண்டாஞ் சம்புடத்தில் மருதக்கலியும் முல்லேக்கலியும் அடங்கியுள்ளன. இதில் முதற்சம்புடத்திற்போலவே இப்பகுதிகளிலுள்ள செய்யுட்களோ செய்யுட்பகுதிகளோ மேற்கோளாகவந்துள்ள இடங்களும் ஒத்த பாடங்களும் ஆங்காங்கு எண்கள் முதலியன இட்டுக் குறித்திருப்பதோடு, சொல்லாராய்ச்சிக்கும் விலங்கு பறவை மரஞ் செடி கொடிகளேப்பற்றிய ஆராய்ச்சிக்கும் உதவியாக உரியவிடங்களில், சில குறிப்புக்களும் குறிக்கப்பெற்றிருக்கின்றன.

முதற்சம்புடத்திலன்றி இச்சம்புடத்தில் பிற்கூறிய குறிப்புக்களேச் சேர்த்ததற்குக்காரணம், முதற்சம்புடத்தைப் பார்த்த தமிழபிமானிகளான அன்பர்களிற் சிலர், உரையிலுள்ள சொற்கள், பண்டை இலக்கியத்துள்ளன; இல்லன; இவை இன்னசொல்லின் கிதையுள்ளன்ற செய்திகளேயும் இயன்ற அளவு தெரிவித்தில் நன்றென்றும், வேறு சிலர், உயிர்களேப்பற்றிக் கூறுமிடத்து மிருகவிசேஷம் பக்ஷிவிசேஷம் விருக்ஷ விசேஷமென்று சிறிதும் அறிய இயலாதபடி விட்டுவிடாமல் இப்பொருள் இன்னதென்றறியும்படி அவற்றையும் இயன்ற அளவு விளக்கல் பேருபகாரமாமென்றும் விரும்பிக் கூறியனவாகும். ஆதலால் அவற்றையும் பற்றி இயன்ற அளவு குறித்திருக்கின்றேன்.

இம்முகவுரையின்பின், முதற்சம்புடத்திலன்றி இச்சம்புடத்தில் வந்துள்ள தூற்பெயர் முதலியவற்றின் அகாராதியும் செய்யுள் முதற் குறிப் பகாராதியும் இப்பதிப்பைப்பற்றி மஹாமஹோபாத்தியாயர் தாக்ஷிணாத்திய கலாநிதியென்னும் சிறப்புப் பட்டங்களைப்பெற்று விளங்கும்பிரஹ்மஶ்ரீ உ.வே. சாமிநாதையரவர்களும் மதுரைத்தமிழ்ச் சங்கத்துச் செந்தமிழ் முதலிய பத்திரிகைகளின்ஆசிரியர்களும் எழுதி யுள்ள அபிப்பிராயங்களும் சேர்க்கப்பெற்றிருக்கின்றன.

இந்நூல் விரைவில் இனிது நிறைவேறத் தமிழ்த்தெய்வத்தின் திருவருளே வேண்டுகின்றேன்.

திருவேட்டீசுவரன்பேட்டை
குரோதனஞ
ஆனிமீ உசுஉ

இங்ஙனம்:
இ. வை. அனந்தராமையன்.

கணபதி துணை.

முதற்சம்புடத்திலன்றி இதில் எடுத்துக்காட்டப்பெற்ற நூற்பெயர் முதலியவற்றின் அகராதி

அஷ்டாங்கஹ்ருதயம்
சித்தாஸ்தானம்
[இராமாயணம் (உத்தர ராமாயணம்)]
சந்திரகேதுநாகர்ப்படலம்
இருசமயவிளக்கம்
இன்னூற்பாற்பது
[உத்தமகோசமங்கைப்புராணம்]
அரித்துவசன் சாபநிர்த்தப்படலம்
உக்கணகுமாரகாவ்யம்
உஞ்சைக்காண்டம்
உரிசொனிகண்டு
[கந்தபுராணம்]
அக்கினிமுகாசுரன்வதைப்படலம்
அசுரர் யாகப்படலம்
ஆற்றுப்படலம்
சூரம்புகுபடலம்
திக்குவிசயப்படலம்
திருவவதாரப்படலம்
தேவகிரிப்படலம்
பானுகோபன்வதைப்படலம்
மூவாயிரர்வதைப்படலம்
[சம்பராமாயணம்]
இராவணன்சோகப்படலம்
உருக்காட்டுப்படலம்
கடிமணப்படலம்
குகப்படலம்
சூடாமணிப்படலம்
சேதுபந்தனப்படலம்
திருவடிதொழுதபடலம்
தேரேறுபடலம்
நிர்த்தனைப்படலம்
படைக்காட்சிப்படலம்
படைத்தலைவர்வதைப்படலம்
பிணிவீட்டுப்படலம்
பிரமாத்திரப்படலம்
மாரீசன்வதைப்படலம்
வாலிவதைப்படலம்
களவழிநாற்பது
[காசிகண்டம்]
அமுதேசன்முதலியவிலிங்கத்தின் சிறப்புரைத்தது
பஞ்சாக்ஷத்தின் வரலாறு
மணிகன்னிகையின்சிறப்பு
[காஞ்சிப்புராணம்]
சித்தீசப்படலம்
குண்டலகேசி
[குறள்.]
பரிப்பெருமாஞரை
மணக்குடவருரை
[கூர்மபுராணம்]
ஆதிவர்சிறப்புரைத்தது
இக்ஷ்வாகுத்தியமன் முத்திபெற்றது
இராமன் வைகுண்டமடைந்தது
தக்கனேசபித்தது
திருக்கல்யாணம் [யுரைத்தது
நவகண்டத் துரைவோ ரியற்கை
கோவையார் (திருக்கோவையார்)
சிதம்பரமும்மணிக்கோவை
[கோளத்திபுராணம்]
காண்முகச்சருக்கம்
சுக்கிரநீதி.
[சூளாமணி]
அரசியற்சருக்கம்
குமாரகாலச்சருக்கம்
தூதுவிசருக்கம்
நகரச்சருக்கம்
சேந்தன்றிவாகரம்
[தணிகைப்புராணம்]
இந்திரனருள்பெறுபடலம்
வீராட்டகாசப்படலம்
திணைமொழியைம்பது
[திருக்கழுக்குன்றப்புராணம்]
தீர்த்தச்சருக்கம்
நகரச்சருக்கம்
பசுவராசச்சருக்கம்
திருக்கழுமலமும்மணிக்கோவை
திருப்புகழ்
[திருவானைக்காப்புராணம்]
புராணவரலாற்றுப்படலம்
[திருவிளையாடற்புராணம்]
திருநகரப்படலம்
நான்மாடக்கூடலான்படலம்

நூற்பெயர் முதலியவற்றின் அகராதி

பரிகரியாக்கியபடலம்
பாயிரம் [லம்
மாமனுசவங்து வழிக்குறைத்தபட
மாயப்பசுவைவதைத்தபடலம்
வரகுணனுக்குச் சிவலோகம் காட்
டியபடலம்
வன்னியுங்கிணை றாமிலிங்கமும்மழை
நீர்த்தகிரிப்புராணம் [த்தபடலம்
கந்தகிரித்தச்சருக்கம்
[காலாயிரதிவ்வியப்பிரபந்தம்.]
இயற்பா
திருச்சந்தவிருத்தம்
பெரியாழ்வார்திருமொழி
நிகண்டு
[நீலகேசி.]
குண்டலகேசிவாதச்சருக்கம்
[கைட தம்.]
அரசாட்சிப்படலம்
கைக்கிளைப்படலம்
நிறப்புப்பாயிரம்
நகரநீக்குபடலம்
போதுகொய்படலம்
மாலைப்படலம்
வேற்றருவமைத்தபடலம்
[பதினொராந்திருமுறை.] [மாலை
மூத்தநாயனார் திருவிட்டைமஹி
[பாகவதம்.] [வத்தியாயம்
(9) அரிசசந்திரன் கதையுரைத்த
உருக்குமிணியுடநீர்த்தவத்தியாயம்
சகடமுதைத்த வத்தியாயம் [யம்
சுபத்திரை மணமுரைத்த வத்தியா
மித்துமனன்மணம்புரியத்தியாயம்
சையாதிகதையுரைத்தவத்தியாயம்
(8) வாமனவதார முரைத்த வத்தி
யாயம்
ஸ்ரீ நாரதர் கஞ்சனுணர்த்தவத்
[பிரபுலிங்கலீலை.] [தியாயம்
பிரபுதேவர்வரலாறு
மாயையினுற்பத்திகதி
[பிரமோத்தரகண்டம்.] [தியாயம்
பத்திராயுவுக்கு அரசியலளித்தவத்
புள்ளிருக்கு வேளூர்க்கலம்பகம்
[புறப்பொருள் வெண்பாமாலை.]
உழிஞைப்படலம்
பெருந்திணைப்படலம்
வென்றிப்பெருந்திணை
[பெரியபுராணம்]
கழறிற்றறிவார் நாயனர் புராணம்
சேரர்கொங்கட் சோழ நாயனர்
புராணம்
சிறுத்தொண்ட நாயனர்புராணம்
சேக்கிழார்
திருநாட்டுச்சிறப்பு
வாட்போக்கிக்கலம்பகம்.
[விநாயக புராணம்.]
கௌசாணனர் திருவவதாரப்படலம்
[வில்லிபாரதம்.]
இராசசூயச்சருக்கம்
எட்டாம்போர்ச்சருக்கம்
காண்டவதகனச்சருக்கம்
நான்காம்போர்ச்சருக்கம்
மணிமாண்வதைச்சருக்கம்
[வேதாரண்யபுராணம்.]
சோமசருக்கம்

இவற்றுள் சில நூல்கள் முதற் சம்புடத்தில் எடுத்துக்காட்டப் பெற்றிருந்தும் உட்பிரிவுகளின் வேறுபாட்டால் இதிலும் எடுத்துக்காட்ட வேண்டியவையாயிருந்தமையால் அந்நூல்கள் இவைஎன்பதற்கு அறிகுறியாக அந்நூற்பெயர்களின் இருபக்கத்தும் இருகோட் பகரம் [] அமைக்கப் பெற்றிருக்கிறது. அதனில் இல்லாது, இச்சம்புடத்தில் எடுத்துக் காட்டப் பெற்ற நூல்கள்;

(கச)

மற்றும் சில.

மருதக்கலி முல்லைக்கலிகளின்
செய்யுள் முதற்குறிப் பகராதி.

செய்யுள்	பக்கம்	செய்யுள்	பக்கம்.	செய்யுள்	பக்கம்.
அகன் றுறை	சஎ அ	காராரப்பெய்த	எ0கூ	பொதுமொழி	ச0க
அரிநீர்வீழ்நீலம்	நிசஉ	கார்முற்றியிண	க0கூ	பொய்கைப்பூப்	சசஉ
அரைசுபடக்	சுசுச	காலவைவ, சுடு	நி0க	போதவிழ்பனிப்	சகநு
அன்னேகதிரு	நிகூஉ	ஞாலம்வறந்தீர	சஅசு	மணிநிறமலர்	சஉக
ஆகல்வேந்தன்	சுகஉ	தளிபெறுதண்	சுகள	மலிதிரையூர்ந்து	சுசக
இணைபடநீவந்த	சஎக	தீம்பால்கறந்த	எகங	மாணவுருக்கிய	எகஅ
இணையிரண்டி	சநிசு	தோழிகாங	எகஉ	மெல்லிணர்க்	சுகநி
ஈண்டுநீர்மிசை	சுகச	நயந்தலைமாறு	சளச	மைபடுசென்னி	நிகக
உறுவளிதூக்கு	சகள	நலமிகநந்திய	எஉஉ	மையறவிளங்கிய	சளசு
எல்லாவிஃதொன்	சுஅசு	நறவினேவலைக்	க0நி	யாரிவனெம்	நிக0
என்னெறாறனே	நிசுநி	நில்லாய்குதில்	நிஎசு	யாரிவனென்னே	எகள
ஏர்தெழின்மார்ப	நிஅங	நீரார்செறுவி	சசசு	யாரைகேயெம்	நிகூஅ
ஒருஉக்கொடி	நிஉங	பன்மலர்ப்பழ	சசுஉ	வண்டுதுகாத்தம்	நிநிள
ஒருஉநீயெந்து	நிஉ0	பாங்கரும்பாட்	எகநி	வாரிநெறிப்பட்	எஉள
கடிகொளிருங	எ0க	புள்ளிமிழகல்வய	சகள	விரிகதிர்மண்டி	சஉள
கணைதேணின்	நிகநி	புனவளர்பூங	நிசநி	வீங்குநீவிழ்	ங்கள
கண்ணகனிரு	சுஉஅ	புனையிலழு	சநிஉ	ஆக செய்யுள்	நிஉ
கழுவெய்கெடு	சுஎள	பெருந்திருநிலை	சகூஉ	கலி. சு-க்கு ,,	சகள

ஆ. மாணிக்கம்,

மணவழகர் தமிழகம்,

செவ்வாயபேட்டை, சேலம்.

வ்

கணபதி துணை.

கனித்தோகை விளம்பரம்.

இது மூன்று சம்புடமாகும்.

இருபது பவுண்டு பெதர்வெய்ட் பேபர்

டிம்மி சைட்டுப்பக்கம் ஸைஸ்.

கல்ல காலிகோ பைண்டு செய்யப்பெற்று இதுவரை வெளிவந்த சம்புடம் 2.

அவற்றுள்;

க-ஆம் சம்புடம் பக்கம் நூறு விலை ரூ ரு 0 0

உ-ஆம் சம்புடம் பக்கம் நூஎ - எசநூ விலை ரூ. ரு 0 0

தபாற்கூலி தனி.

ந-ஆம் சம்புடம் பதிப்பிக்கப்பெற்று வருகிறது; அது சுமார் ச00 பக்கமாகும். அதில் செய்தற்கரியும் ஆசிரியர்களின் சரித்திரமும் அரும்பத முதலியவற்றின் அகராதியும் உளவாம். அதற்கு விலை வெளிவந்தபின்-குறிக்கப்பெறும்.

கூஉ (ஒரு) செப்டம்பர் மாதத்துள் முன்பணமனுப்பும் உள்நாட்டாருக்கு, தபாற்கூலி உள்பட மூன்று சம்புடத்தின் விலை ரூ. கஉ அ 0

வேண்டுவோர் அடியிற்குறித்த விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

இ. வை. அனந்தராமையர்.

பிரஸிடென்ஸி காலேஜ், தமிழ்ப் பண்டிதர்

கசு. நாகப்பையர் தெரு,

திருவல்லிக்கேணிப் போஸ்ட்,

சென்னை.

முதற்சம்புடத்தின் அபிப்பிராயம்.

(பிரஹ்மஶ்ரீ மஹாமஹோபாத்தியாய உ. வே. சாமிநாதையாவர்கள்.)

சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதராகிய பிரஹ்மஶ்ரீ, இ வை. அநந்தராமையரவர்கள் பலவருடங்களாக மிக முயன்று நன்கு பரிசோதித்துப் பதிப்பித்துச் சில மாதங்களுக்கு முன்பு வெளிப்படுத்திய கலித்தொகையின் முதற்பகுதிப்* புத்தகத்தைப் படித்துப்பார்த்துப் பரிசோதனைமுறை முதலியவற்றை யறிந்து மிக்க ஆநந்தமடைந்தேன். இருபது வருடங்களுக்குக் குறையாமற் பழகி இவர்களுடைய ஆற்றல்களை ஒருவகையாக யான் அறிந்திருப்பினும் இதுகாறும் இவர்கள்பாற் கண்டறியப்படாமலிருந்த விசேட ஆற்றல்கள் பலவற்றை இப்பதிப்பால் நன்கு அறிந்தேன். சிறந்த ஒரு நூல் எத்தனைவகையாக ஆராய்ச்சிசெய்து பதிப்பிக்கப்பட வேண்டுமோ அத்தனைவகையினும் சிறிதும் குறைவின்றி ஆராய்ச்சி செய்யப்பெற்று இப்புத்தகம் விளங்குகின்றது. இப்பதிப்பிலுள்ள விசேடங்களெல்லாம் இதன் முகவுரையைப் படிப்பவர்களுக்கு நன்கு விளங்குமாதலின், இங்கே அவற்றை எழுதவில்லை.

அருந்தமிழ்ப்புலவர்கள், புதுமொழிகளும் புதியபொருள்களுமாகிய அமுதப்பெருக்கத்தைக் கூட்டுண்ணுதற்கு கல்விருந்தென்றும் செந்தமிழ்ச் செல்வர்களுக்கு வாய்த்த ஒரு கருவூலமென்றும் இப் புத்தகத்தைச் சொல்லலாம்.

தமிழ்ப் பாஷாபிமானிகள் இதனை வாங்கிப்படித்து, இக்கன் முயற்சியிற் சிறிதும் சலிப்படையாதபடி இப்பதிப்பாசிரியர்க்குப் பொருளுதவிசெய்து ஊக்கமளிப்பார்களாயின், அவ்வுதவி தமிழ்ப் பாஷைக்கே செய்த பெரியதோ ருதவியாகுமென்பதிற் சந்தேகமில்லை. எந்தக்காரியத்திற்கும் பொருள் இன்றியமையாததென்பது யாவரும் அறிந்ததன்றே!

சென்னை,
திருவேட்டீசுவரம்பேட்டை,
நியாராஜுவிலாஸம். 5-4-25.

இங்ஙனம்:
வே. சாமிநாதையர்.

(செந்தமிழ்.)

கலித்தொகை (பாலைக்கலி, குறிஞ்சிக்கலி) மூலமும் நச்சினார்க் கினிய ருரையும்:—இப்புத்தகம் சென்னைப் பிரஹிடென்ஸி காலேஜின் தமிழ்ப்பண்டிதர் பிரும்மஶ்ரீ அநந்தராமையரவர்களால், பலபிரதிகளோ வைத்து ஒப்புப்பார்த்து நன்குபரிசோதித்து அச்சிடப் பட்டிருக்கிறது. இதற்குமுன்பு இந்நூல் ஶ்ரீமத். சி. வை. தாமோ தரம் பிள்ளை யவர்களாற் பதிக்கப்பட் டிருப்பினும் இப்பதிப்பில் மூலமும் உரையும் பல திருத்தமடைந்துள்ளன. பாட்டுக்களேனும் அவற்றின் பகுதிகளேனும் பிறநூலுரைகளில் எடுத்தாளப்பட்ட வற்றை அவற்றிற் குரிய விவரங்களுடன் ஆங்காங்குக் குறித்தும் இன்னும் தோன்றிய பிற குறிப்புக்கள் வரைந்தும், மூற்காலத்தவீம் பிற்காலத்தவுமான நூற்றக்கணக்கான நூல்களிலிருந்து பிரயோகங் கள் எடுத்துக்காட்டியும் அச்சிடப்பட்டிருக்கிறது. கஅ, ககூ-ம் பக்கங் களில் கூ-வது குறிப்பில் அருந்ததியைப்பற்றிய பல புராணங்களி லுள்ளகதைகளும் பலநூல்களிலும் வழங்கிவந்தபெயர்களும் ஒருங்கு சேர்த்துக் காட்டியிருப்பதும், இன்னும் கொல்லிப்பாவை முதலிய சில பல குறிப்புக்கள் அருமையான் ஆராய்ந் தெழுதியிருப்பதும் பாராட்டத்தக்கன. (ரக்தாக்ஷிஜூ மார்கழிமீ.)

(சுதேச மித்திரன்.)

கலித்தொகை மூலமும் நச்சினார்க்கினியருரையும் (முதற் சஞ்சிகை. பாலையும் குறிஞ்சியும்) சென்னை பிரஹிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதர் ஶ்ரீமான் இ. வை. அனந்தராமையரால் பதிப்பிக்கப்பட்டது.

.....இக்காலத்தவராலும் இது போற்றற்குரியதோவெனின் உரியதே யென்பது பல துறைகளிலுமுழைப்பவர் துணிபு. பண்டைக் காலத்துத் தமிழரின் மதக் கோட்பாடுகள் எப்படிப்பட்டன. அவர் நன்றென்றும் தீதென்றும், அழகியதென்றும், அல்லாததென்றும் கருதியனயாவை. அவர்தம் அரசாட்சி எந்நிலைமையிலிருந்தது. அவ ருண்ட உணவும், உடுத்த உடையும், காதலித்த முறையும், கைப் பிடித்த ஒழுக்கங்களும் இன்றுபோலல்லாது வேறுபட்டிருந்தனவோ வென்றும் பலவும் ஆராய்ச்சி செய்வோர் கலித்தொகையை ஒரு பொற் சுரையேபோல் பாராட்டுவர்.

இஃதொரு புறமிருக்க,.....விரிவஞ்சி மேற்கோட்கள் சேர்க்காது விடுத்தாம்.

இனி, இந்நூலைக் காலம்சென்ற கி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் கஅஎன-ஆம் வருடத்திற் பதிப்பித்தார்கள் அப்பதிப்பிலடங்கிய பிரதிகள்யாவும் செலவாகி விட்டமையான் அவை பணத்தாலும் முகேகத்தாலும் மற்றெவ்விதத்தாலும் கொளற்கரியனவாய் மூடிந்தன. ஆதலின் வேறுவழிகாணுது எனக்கு இனியனவாத்தோன்றிய சிற்சில பாட்டுக்களை மாத்திரம் கையெழுத்தில் பெயர்த்துக்கொண்டேன். என்னைப்போலவே பலரும் இப்புதிய பதிப்பை எதிர்ப்பார்த்திருப்பராதலின் இதனை இரண்டாம்முறை அச்சிட்டு உதவியவருக்கு யாம் பெரிதும் நன்றிபாராட்டக்கடமைப்பட்டவராயிருக்க, இதற்குத்தாம் பல வாண்டுகளாக அரிய ஆராய்ச்சிக் குறிப்புகளும் சேர்த்தருளிய பிரும்மஸ்ரீ அனந்தராமையருக்கு நாமனைத்தினைக் கடமைப்பட்டுளோமென்பது கூறுமலே விளங்கும்..... ....

(14—2—25.)

(நவசக்தி.)

கலித்தொகை என்பது பழைய சங்க நூல்களுள் ஒன்று. அஃது எட்டுத்தொகையுள் ஒன்றாயிருப்பது. கலித்தொகையைக் "கற்றறிந்தார் போற்றுங் கலி" என்று தமிழர்கள் போற்றி வருவது கவனிக்கற்பாற்று.

கலித்தொகை, மக்கள் இன்பவாழ்விற் குரிய அகப்பொருளை அறிவுறுத்தும நூல. அகப்பொருளை யுணர்த்தும் நூல் பலவற்றுள் கலித்தொகை தலையாயது என்று கூறுவது மிகையாகாது. அகப்பொருளிலக்கணம் பயின்ற ஒருவன் கலித்தொகை வாசித்து வருவானுயின், அவன் உடல் உணவு முதலியவற்றையும் மறந்து இன்பத்தால் விழுங்கப்படுவன் என்பது திண்ணம். அவன் நுகரும் இன்பத்தை எழுத்தால் எழுத முடியாது. அத்தகை இன்பத்தை யூட்டும் நூலன்றே நூல்? கலித்தொகையில் அத்தகைப் பேரின்பமிருப்பதாலன்றே கற்று அறிந்தார் போற்றுங்கலி என்று அந்நூல் புகழப்படுகிறது? அவ்வின்பநூல் பயின்று இயற்கை யின்பத்தில் திளைத்திருந்த நம்மவர்கள் இதுகாலே போலிஇராவல்லசு பயின்று, களித்து, இன்பமிழந்து வருவது குறித்து எவரே வருந்தார்?

முன்னே நாளில் கலித்தொகை பயிலாத ஒருவனிக் கற்றவரென எவரும் போற்றார். திருத்தக்க தேவர் சேக்கிழார் கம்பன் சிவஞான முனிவர் முதலிய புலவர் பெருமக்கள் கலித்தொகை பயின்ற கல்வியாளர்கள் என்பதனாலனிக்கத்தக்கது. பாட்டின்பத்துக்குஊற்றுயுள்ள கலித்தொகை படியாத ஒருவன் எங்ஙனஞ் சிறந்த பாவலனுவன்?

இத்தனிச் சிறப்புவாய்ந்த கலித்தொகை, பாலிக்கலி, குறிஞ்சிக் கலி, மருதக்கலி, முல்லிக்கலி, நெய்தற்கலியென ஐந்து ஊகுதிகளை யுடையது. ஆகவே இந்நூலில் ஐந்தினை காணலாம். இந்நூல், இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர் முதலிய உரையாசிரியர் ஆட்சியையும் பெற்றது.

கலித்தொகை மூலமும், அதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் வரைந்த அரிய உரையும் இற்றைக்குச் சுமார் நாற்பதாண்டுகளுக்கு முன்னர்த் தமிழ்த்தாயின் தவப்புதல்வருள் ஒருவராய அன்பர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்டன. இது போழ்து சென்னை பிரவிடென்வி காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான், அனந்தராம ஐயர் அவர்களால் கலித்தொகையின்பாலியும், குறிஞ்சியும், நச்சினார்க்கினியர் உரையோடு வெளியிடப்பட்டிருக்கின்றன. ஸ்ரீமான் ஐயர் அவர்கள் தமிழ்ப்புலமையும் உழைப்பும் இக் கலித்தொகைப் பதிப்பில் நன்கு புலனுகின்றன. தமிழ்ப்புலமை மிக்க ஐயர் எழுதியுள்ள ஆராய்ச்சிக் குறிப்புக் கலித்தொகை பயில்வோர்க்குப் பெருந்துணை செய்வதாகும். இப்பதிப்பிலுள்ள விசேடம் முகவுரையில் விளக்கப்பட்டிருக்கிறது. அது வருமாறு:—

க. பல ஏட்டுச் சுவடிகளோடு ஒப்பிட்டதினுலும்.....
அகராதியும் எழுதிச் சேர்த்தல் முதலியவையாம். *

அநபாயன் சடையப்பவள்ளல் போன்றூர் இல்லா இக்காலில், தமிழ்வளம் அருகிவரும் இக்காலத்தில், தமிழ்ப்புலவர்கள் மிடியால் பீடிக்கப்பட்டு வருந்தும் இச்சமயத்தில் ஸ்ரீமான் அனந்தராம ஐயர் சங்க நூல்களில் தலையாயதை ஆராய்ச்சிக்குறிப்புடன் வெளியிடப் புகுந்தது குறித்து எமது நன்றி யறிதலான வணக்கத்தை அத்தமிழ்ப் பெரியார்க்குச் செலுத்துகிறேம். ஏனைய பகுதிகளும் ஸ்ரீமான் ஐயர் விரும்புமாறு விரைவில் வெளிவர எல்லாம்வல்ல இறைவன் அருள் செய்வானுக.

---

* முதற்சம்புடத்தின் முகவுரை பக்கம் 10-1, முதல் 11-9 வரை பார்க்க.

இப்பதிப்புக்குத் தமிழ்மக்கள் எத்தகை ஆதரவு நல்குதல் வேண்டுமென்று சொல்லவும் வேண்டுமோ? தமிழ்ச்செல்வர்கள் தங்களாலியன்ற உதவி புரிந்து கற்றறிந்தார் போற்றுங் கலியைத் தமிழ்நாட்டிற் பரப்புவாராக. (3—4—25.)

(பாரத மித்திரன்.)

கலித்தொகை: இந்நூல்கடைச்சங்கமேறிய பனுவல்களின்பகுப்பு ளொன்றுகிய ஏட்டுத்தொகையுள் ஆறுவதாக வுள்ளது.

இதனுள் பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்னும் ஐந்திணைகளினுடைய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் களும், அவற்றின் இயற்கையணிகளும் கற்றார்களிப்புறுமாறு விளக் கப்பட்டிருக்கின்றன. 'கற்றறிந்தார் போற்றுங் கலி' என்பதனாலும், இவ்வுண்மை அறியலாம்.

இது, படிப்போருக்கு இன்பச்சுவையுடன் அந்தணர், அரசர், அமைச்சர், வணிகர், வேளாளர்களும் பிறருமாகிய ஆடவரும் மகளிரும் இளமையிலும் முதுமையிலும் அறிந்தொழுகவேண்டிய பலப்பலநீதிகளைக்கற்பித்துநன்னெறிகாட்டிப்பயன்றுய்க்கச்செய்வது.

இச்செந்தெறி நூலுக்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி உச்சி மேற் புலவர்கொள் நச்சினர்க்கினியர் உரை யெழுதியிருக்கின்றார். உரையோடு கூடிய இந்நூலை சென்னபட்டினம் அரசாங்கக் கல்லூரித் தமிழ்ப்பண்டிதர் பிரம்மஸ்ரீ இ.வை. அனந்தராமையர் அவர்கள் பன் னெடுங்காலமாக ஆராய்ச்சிசெய்து அச்சிட்டு வருகின்றார்கள்.

கடவுள்வாழ்த்து, பாலை, குறிஞ்சி ஆகிய மூன்று பகுதியும் தொகுத்த முதற் புத்தகம் வெளிவந்து விட்டது. கசடு நூல்களி லிருந்து மேற்கோள்களும் கதைகளும் எடுத்துக் காட்டி ஐயமகற்றி அச்சிட்டிருக்கின்றார்கள். இதனை ஊன்றிப் படிப்பவர்களுக்கு ஐய ரவர்களுடைய பேருழைப்பு விளங்காமற்போகாது.....(பெதர் வொ ய்ட்டுக்காகிதத்தில் இச்சம்புடத்தின் விலை ரூ. நி.).....தமிழ் மக்கள் பலரும் இச்சிறுதொகைப் பொருளைப் பொருட்படுத்தாது அனுப்பி ஒவ்வொரு காப்பி வாங்கிக்கொண்டால் ஐயரவர்கள் இதுபோன்ற பல நூல்களை அச்சிட்டு உதவிபுரிவார்களென்பது ஒருதலை. இதனாற் புகழும் புண்ணியமும் இரு பகுதியினர்களுக்கும் உண்டென்பதைத் தமிழறிஞர்கள் செவ்வனே அறியவேண்டும். (6—4—25.)

NEW INDIA, Thursday February 19, 1925.

REVIEW.

***Kalithohai*, Edited by Pandit E. V. Anantarama Iyer of the Presidency College, Madras; with the commentary of Nachinarkiniar and with notes of his own research, Vol. 1. pp. 395.**

Tamil scholars and others who are interested in tamil literature are well aware of this work, "Kalithohai" being the sixth of the famous eight higher literary productions styled "The Ettuthohai" of the ancient Tamil Sangams. All the commentators of the world renowned work, "Tholkappiam" have sung in praise of the literary merit of this unique work, so much so that the famous "Nachinarkiniar" spared no pains to write an exhaustive commentary for this work which excites the admiration of the renowned scholars of Tamil Literature. This work is of the highest importance as it throws much light on the highly dignified civilisation of the Ancient Tamils. This production is admired as the best contribution to the Tamil literature of the Sangam Age.

Pandit E. V. Anantaramier has exhibited his scholarly erudition in his research notes in this edition of the work and has shown himself as fitted for bringing out a good edition of this famous literary production.

The present volume has brought out two of the five "Kalis" as well as the "Kadavul Vazth" of this work and the other three "Kalis" are expected to be out in a short time.

The HINDU, Saturday February 28, 1925.

VERNACULAR PUBLICATIONS.

THE TAMIL SANGAM CLASSICS.

***Kalithohai*:—Edited by pandit E. V. Anantarama Iyer of the Presidency College, Madras; with the commentary of Nachinarkiniar and with notes of his own research, Vol. 1, pp. 395.**

Tamil Scholars and those others that are interested in Tamil literature are well aware of this work "Kalithohai" being the sixth of the famous eight higher literary productions styled "the Ettuthohai" of the ancient Tamil Sangams. All the Commentators of the world-renowned work "Tholkappiam" have sung in praise of

the literary merit of this unique work, so much so that the famous "Nachinarkiniar" spared no pains to write an exhaustive commentary for this work which excites the admiration of the renowned scholars of Tamil Literature. This work is of highest importance as it throws much light on the highly dignified civilization of the Ancient tamils. This production is admired as the best contribution to the Tamil literature of the Sangam age. A through knowledge and mastery over the other literary contributions of that age, such as the "Ahananooru", the "Natrinai," "The Kurunthohai," etc., as well as over "The Tholkappiam" and its commentaries are of the utmost necessity for bringing out a really good edition of this work.

Pandit E. V. Anantharama Iyer has exhibited his talents in his research notes in this edition of the work and has brought out a good edition of this famous literary production. Not only the Tamil Nadu but also scholars all over the world have been placed under a deep debt of gratitude to our Pandit by this work of his. It is a praisworthy effort in bringing out from obscure corners the light of ancient wisdom.

The present volume has brought out two of the five "Kalis" as well as the "Kadavul Vazth" of this work and the other three "Kalis" are expected to be out in a short time.

இரண்டாஞ் சம்புடத்தின் அபிப்பிராயம்.

மஹாமஹோபாத்தியாயர் தாக்ஷிணாத்தியகலாநிதி,
பிரஹ்மஶ்ரீ உ. வே, சாமிநாதையரவர்கள்.)

சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டித ராகிய ப்ரஹ்மஶ்ரீ. இ. வை. அனந்தராமையரவர்கள் பலவருடங்களாக மிக முயன்று நன்காராய்ந்து பதிப்பித்துவரும் 'கலித்தொகை நச்சினார்க்கினியருரை' யின் மூன்றாவது மருதக்கலியும், நான்காவது முல்லைக்கலியும் அடங்கிய உ - ஆம் பகுதிப் புத்தகத்தைப் பார்த்து ஆனந்தம் அடைந்தேன். அவர்களுடைய தமிழ்க்கல்வியின் மேம்பாடு இதற்குமுன் யான் பதித்துள்ள புத்தகங்களில் எழுதி யிருப்பவற்றாலும், இவர்களுடைய பதிப்பின் அருமை, இத்தாலின் முதற் பகுதிக்கு யான் எழுதியுள்ள அபிப்பிராயத்தாலும் யாவருக்கும் நன்கு விளங்குமாயினும், இப்பகுதியைப் பற்றியும் எனக்குத் தோற்றியவற்றை எழுதும்படி இதன் பதிப்பாசிரியர் விரும்பினமை யால் எழுதலானேன்.

"தன்னெஞ்சம் ஏடெனக் கற்றான் தழைமுத் தமிழையுமே" என்றபடி, பிறருடைய சகாயத்தைச் சிறிதும் விரும்பாமல் தம் மூடைய மனத்தையும், மற்றைக் காரணங்களையுமே துணையாகக் கொண்டு இவ்வளவு பெருங்காரியத்தைச் செய்து முடித்த தொன்றே இப்பதிப்பாசிரியரின் ஆற்றலை நன்கு அறிவிக்கும்.

இப்பதிப்பிற் காணப்படும் அரியவிஷயங்கள் பல.

க. இதுகாறும் நன்கு விளங்காமலிருந்த கடின பதங்களுக்கு உரியபொருளை யறிந்து விளக்கித் தக்க மேற்கோள்களைக் காட்டி யிருத்தல்.

உ. உரையிலிருந்த பிழைகளை மூலத்தைக் கொண்டும், மூலத்திலிருந்த பிழைகளை உரையைக் கொண்டும், இவ்விரண்டிலும் இருந்த பிழைகளை வேறுபிரதிகளைக்கொண்டும்நீக்கிச் செப்பஞ்செய்திருத்தல்.

ங. ஒவ்வொரு பொருளினுடைய இயற்கையும் நன்கு புலப்படும்படி பழைய நூல்களிலிருந்தும், பிற்காலத்து நூல்கள் பலவற்றிலிருந்தும் பற்பல மேற்கோள்களைக் காட்டியிருத்தல்.

ச. இந்நூலிலிருந்தும், வேறு நூல்களிலிருந்தும் ஆங்காங்கு ஓப்புமைப் பகுதிகள் பலவற்றைக் காட்டி யிருத்தல்.

ஞ. பழைய இலக்கண வுரையாசிரியர்கள், உரியவிடங்களில் மேற்கோள்களாக ஆண்டிருக்கும் இடங்களைக் கண்டு பிடித்து அவற்றை விளக்கி யிருத்தல்

இவை போல்வன பிறவும் காணப்படுகின்றன.

இயல்பாகவே கலித்தொகை மிக்க மதிப்புடையதாயினும், இப் பதிப்பால் இந்நூல் பின்னும் மிக்க கௌரவத்தையடைந்து விளங்கு கின்றதென்றே சொல்லலாம்.

மேற்படி ஐயரவர்களுடைய பெருமையைப்பற்றி இன்னும் பல படக் கூறுவதற்கு மனமிருந்தும், இதன்மேலெழுதுதற்கு இப் பொழுது நேரமில்லாமையால் இம்மட்டோடே நிறுத்துகின்றேன்.

தெம்பரம்
ஸ்ரீ மீனாட்சி தமிழ்க்காலெஜ்
18—7—25.

இங்ஙனம்:
வே.சாமிநாதையர்

தேவர்கோமான் அணை

கலித்தொகை

மூலமும்

நச்சினார்க்கினியருரையும்.

மூன்றாவது மருதக்கலி.

(அசை) வீங்குநீ ரவிழ்நீலம் பகர்பவர் வயற்கொண்ட
ஓங்கர் மலர்சூழ்தண் தூர்புகுந்த வரிவண்
டோங்குய லெழில்யாணைக் கீகைடாங் கமழ்காற்ற
மாங்கவை விருந்தாற்றப் பகலல்கிக் கங்குலான்
நீ வீங்கிறை வடுக்கொள வீழுநர்ப் புணர்ந்தவர்
தேங்கமழ் கதுப்பினு ளரும்பவிழ் நறுமுல்லை
பாய்ந்தூதிப் படர்தீர்ந்து பண்டுதா மீ இய
பூம்பொய்கை மறந்துள்ளாப் புனலணி நல்லூர;

கூ அணைமென்றோள் யாம்வாட வமர்துணைப் புணர்ந்துநீ
மணமணியா யெனவந்த மல்லலின் மாண்பன்றோ
பொதுக்கொண்ட கவ்வையுட் பூவணிப் பொலிந்தநின்
வதுவையயங் கமழ்காற்றம் வைகறைப் பெற்றதை;

கக கனலுநோய்த் தலையுநீ கனங்குழை யவரொடு
புனலுளா யெனவந்த பூசலிற் பெரிதன்றோ
தாங்கொண்டா டலைக்கோதை தடுமாறிப் பூண்டநின்
னீரணி நிதையாதெம் மில்வந்து நின்றதை;

கஎ தணந்ததன் றலையுநீ தளரிய லவரொடு
துணங்கையா யெனவந்த கவ்வையிற் கடப்பன்றோ

வொளிபூத்த நுதலாரோ டோரணிப் பொலிந்தகின்
களிதட்ப வந்தவிக் கவின்காண விையைத்தாை;

எனவாங்கு;

உஉ அளிபெற்றே மெம்மைநீ யருளினீ விளியாது
வேட்டோர் நிறத்து விரும்பியநின் பாகனு
நீட்டித்தா யென்று கடாஅங் கடுந்திண்டேர்
பூட்டு விடாஅ நிறுத்து.

இது பரத்தையிற் பிரிந்துவந்த தலைவன் *தனது ஆற்றுமையே வாயி லாகத் தலைவியுழைச் சென்றுந்த அவனினீழன்பு வதுவையயர்ந்ததூஉம்அப் போழது புனலாடியதூஉம் இப்போழது துணங்கையாடியதூஉங் கூறிப் புலந்தாள் † தலைவி, அவள் புலந்தவாறுகண்டு சென்றுசார்ந்த தலைமக னுடன் ஊடல் தீர்கின்றுள் கூறியது.

இதன் பொருள்.

(க)வீங்குநீ ரவிழ்நீலம் பகர்பவர் வயற்கொண்ட
ஞாங்கர் மலர்சூழ்ந்த தூர்புகுந்த (உ)வரிவண்

க. கலியடி பதினெண்கெழுத்தான்வந்ததற்கு, "வீங்குநீ ரவிழ்நீலம் பகர்பவர் வயற்கொண்ட" என்பது மேற்கோள். தொல். செய். சூ. கடி. 'அள வடி' இளம். ('வீங்கு' என்பதிலுள்ள குற்றியலுகரம் அலகுபெறுதி.)

உ. (அ) "சுரும்புணக் களித்த புகர்முக வேழம்" ஐங். உருக. (ஆ) "வரிஞிமி ரூர்க்கும் வாய்புகு கடாஅத்துப், பொறிதுதற் பொலிந்த வயக்களிற் றெருத்தல்" அகம். எஅ: ஈ-ச. (இ) "மிஞிரூர்க்கும் கமழ் கடாஅத்து.....மழகளிறு" (ஈ) "வரிஞிமி ரூர்க்கும் வாய்புகு கடாஅத், தண்ணல் யானை" புறம். உஉ சு -அ, கூஉ: கஉ - ஙஉ. (உ) "வரிவண் டூர்க்கும் வாய்புகு கடாஅத்த, வண்ணல்யானை" தொல். களவி. சூ. கக. நச். 'எண்ணியது' மேற்கோள். (ஊ) "அந்தணூற்றத்து, மதக்களி சுவைக்கு மணிநிறப் பறவை.....குஞ்சரம்" பெருங். (க) நிஅ: கஉ - அ. (எ) "கரிமதத் தளியைப் போன்றும்..... தெரிவின்றி நுகர்ந்ததெல்லாம்" மேரு. அ: கூ. (ஏ) "வேழத்தின், வண் ணோர் நறுமதமழையும்" (ஐ) "மூசு வண்டின மும்மத யானையி, னுைசை கொண்டன போற்றெடார்ந் தாடின, வோசையொண்கடற் குன்றெ டவைபுக, வேசை மங்கைய ராமென மீண்டவே" கம்ப. பம்பை. கஉ. சேதுபந்தன. நிஅ. (ஒ) "மடந்தைய ளாகமு மார்தர் மாலையு, முடைந் தகு கடகரி மதமு முண்ணியே, தடந்தொறு முரலவி தமரி னண் புறத், தொடர்ந்துடன் வரவரச் சோலையெய்தினர்" (ஒ) "தும்பி மேன்மதத் நிடைவிழும் தும்பிபோல்" (ஓவ) "வண்டின மொய்க்க

(பிரதிபேதம்) * தன்னுற்றமை, † தலையீண புலந்தவாறு.

டோங்குய செழில்யானைக் கணை(க)கடாங் கமழ்ஞாற்ற
(உ) மாங்கவை விரிந்தாற்றப் பகலல்கிக் கங்குலான்
ஞ வீங்கிறை வடிக்கொள வீழுநர்ப் புணர்ந்தவர்
தேங்கமழ் கதுப்பினு ளரும்பனிப் நறு*மூல்லே
பாய்ந்(ங)தூதிப் (ச)படர்தீர்ந்து பண்டுதா மீ இய
பூம்பொய்கை மறந்துள்ளாப் புனலணி நல்லூர

எ - து: பெருகுகின்றநீரி லலிழ்ந்த கருங்குவளையைக் கொண்டுவந்து விற்பார் வயலிடத்தே பலித்துக்கொண்டவை சுமத்தலிற் றலையிடத்தனவாகிய மலரைச் சூழ்தலேச்செய்து ஊரிடத்தே புகுந்த பாட்டிணியுடைய வண்டுக்கு † உத்தமலிலக்கணங்கள் ஒங்குஞ் நிறைந்த அழகினையுடைத்தாகிய யானையினுடைய நாறுகின்ற நாற்றத்தையுடைய செறிந்த மதத்தை அம்மதத்தில் முன் படிந்திருந்த (ஞ)வண்டென் விருந்துசெய்ய‡அப்பூவொடு வந்த வண்டுகள் பகற்பொழுதெல்லாம் தங்கிக் கங்குலிடத்து வீங்கின நிறையிற் கிடந்த (கூ) தொடியாலே தங் கணவர் மேனி வடிக்கொள்ளும்படியாகத் தாம் விரும்பின

மதம்பொழி கரியும்" (ஃ) "இகலி யளிமுர லிருகவு ளினுமூட னிழியு மதமழை குழிழிக ளெழவெழ..... .....மூடுகின கரிகளே" வில்லி. சூதுபோர். கூக. எட்டாம்போர். டு. பதினருரும்போர். ச, உ. (அஅ)"வண்டு, மூசுண்ட தான முகமா" திருவிளை. வரகுணனுக்கு கூ. என்பவைகளும் (ஆஆ) "தன்மதந் தெண்ட வண்டு தங்கிய காட்டுள் வேழம், பின்மதஞ் செறித்திட் டஞ்சிப் பிடிமரந் திரிந்து போகும், வென்மதக் களிற்று வெய்ய வசனிவே கத்தின் மேலான்" சீவக. உருகரு. என்பதும். (இஇ) "நீலயானை.....வண்டுபடு, பூராறு கடாஅஞ் செருக்கி" மணி. கக. உ0-உஉ. என்பதும் இங்கே அறிதற் பாலன.

க. யானைமதம் கமழுமென்பதனை, "கமழ்கடாஅத் தினம்பிரி யொருத்தல்" (கலி. உக: உ.) என்பதனாலும் அதன் குறிப்பாலும் உணர்க.

உ. "விரிந்து அரிற்றிணைக்கு வருமென்பதற்கு "ஆங்கவை விரிந்தாற்றப் பகலல்கி" என்பது மேற்கோள்; தொல். இளவி. சூ. இள. நச்.

ங. "ஊதுதல் - முகருதல்" அகம். கஉ: கக; புறம். ஏ0: கஉ.

ச. "படரே யுள்ளல்" தொல். உரி. சூ. சஉ.

ஞ. "இரிந்தநேன் குவளையி னெற்றி தைவர, மூரிந்துபோ தவிழ்ந்து கொகுடி குயிர்க்கு மூல்லையி, னரும்புசேர்ந் தணிஞிமி ரூர்ப்ப வாய்பதம், விருந்தெதிர் கொண்மெனத் தழுவி வீழ்ந்தவே" சீவக. சஅ.

ட. "தொடி யுற்றவடு" (கலி. எஅ: உஉ.) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

பிரதிபேதம்) * மூல்லைப்பாய் †தம உடலிலக்கணங்கள் ‡ பூவோடு,

கண்ணைச் சூழ்ந்த மயிரிருடைய தேன் சாறென்ற மயிரினுள்ளே பெய்த விருப்பத்தின்மை முற்றி விரித்த கற்றாயே முல்லையைப் பாய்த்து நுகர்ந்து வேறெங்கே புக்கனை உறவேண்டுமென்னும் நினைவின்றிப் பண்டைநாம் விரும்பி புக்கினையுடைய பொய்கையை மறந்து அதனை ஒரு காலத்தும் நினையாத புனல் பூவித்த கல்ல ஊரனே; எ - து.

கடாம் - மதம்படுதலை; ஆகுபெயர். வீங்கிறை, பிரிந்து வருந்தாமையின் மெலியாவிறை.

(க)வீங்குநீர் பரத்தையர்சேரியாகவும், அதன்கணவிழ்ந்தலேம் காமச் செல்லி நிகழ்ந்த பரத்தையராகவும், பகர்பவர் பரத்தையரைத்தேற்றித் தொண்டுவரும் பாணர்முதலிய வாயில்களாகவும், அம்மலரைச சூழ்ந்த வண்டு தலைவனுகவும், யானையின் கடாத்தை ஆண்டைறைந்த வண்டுகள் வந்த வண்டிற்கு விருந்தாற்றுதல் பகற்பொழுது புணர்கின்ற சேரிப்பரத்தையர் தமது நலத்தை அத்தலைவனே †நுகர்வித்தலாகவும், கற்குலில் வண்டு மூல்லையை ஊதுதல் இற்பரத்தையருடன் இரவுதியிலுதலாகவும், பண்டு மருவிய பொய்கையை மறத்தல் தலைவியை மறத்தலாகவும் பொருள் தந்து ஆணுப் புலப்படக்கூறிய கருப்பொருள்கள் புலப்படக்கூறுத மருதத்தினைப்பொருட்கு உள்ளுறையுவமமையவா நுகாண்க. இது "மெழுவோட்குவம(உ)மீரிடத்துரித்தே" (ங.)என்பதனுள் மருதத்துக்கண் உவமப்போலி ‡கூறினுன்.

இது சேர்வகைக்கலியாகலின் வரிவண் டோன்குயரென நேரீற்றியற் ரீரும் ஈற்றது.

கூ (அ)அணைமென்றோள் யாம்வாட வமர்துணைப் புணர்ந்துநீ
மணமணியா யெனவந்த மல்லலின் மாண்பன்றே
பொதுக்கொண்ட||கவ்வையிற் பூவணிப் பொலிந்தநின்
வதுவையயல் கமழ்நாற்றம் ←வைகறைப் பெற்றதை

க. நோல். 'அகத். சூஅ - ஆம் சூத்திரத்தினுரையில் இவ்வுரையாசிரியர் உள்ளுறை யுவமத்திற்கு 'வீங்குநீர் .. ..நல்லூர்' என்னும் பாடலை மேற்கோள் காட்டி, இக்குறிப்பையும் சிறிது வேறுபடக் குறித்துள்ளார். இ - வி. சூ. இஅக. உரையில் இ - வி. உரைகாரரும் அதனையே எழுதினர்.

உ. கடிம் - மருதமும் செய்தலும்.

ங. நோல். உஅம. சூ. உக.

ச (அ) "துணைமென்றோள்" (கலி. க: ங, கூ:கஉசு: கஉ.) (இ) "துணை மென்றோளாய்" (கலி. கூ: ச) (ஈ) "அணைத்தோளாய்" (கலி. நிஅ. கூ: ஈ) என்பவைகளும் (ஈ) இத்தாற்பர்யம் உசுக: ச - ஆம் குறிப்புரை நோக்கற்பாலன.

† நுகர்வித்தல் என்னும். ‡ கூறியது இது. ← வைகறை பெற்றனை.

எ-து: ஆவாரத்தாற்*பொலிவுபெற்ற (க)சிறப்பில்லாமையைக்கொண்ட(உ) பரத்தையரைப் பூப்பேசிக்கொள்கின்ற †கலியாணத்திலுண்டான நின் னுடைய அழகினையுடைய ‡நாறுகின் றமணத்தினை விடியற்காலத்தே யாங்கள்பெற்றது யாம் ||அணைபோலும் மெல்லியதோள் மெலியும்படியாக நின் கெஞ்சிற்கு அமர்ந்த பரத்தையரைக் கூடி மணமனையிடத்தா யென்று பிறர்சொல்ல நினக்கு உண்டான வளப்பத்திலும் மாட்சிமையுடையதொன்றன்றே ? எ-று.

÷கௌவையிற் பொலிந்த பொதுக்கொண்ட பூவணி வதிவையென மாறுக.

(கூ)மருதத்திற்குச் சிறுபொழுது வைகறையென்பதுதோன்ற × வை கறைப்பெற்றதை என்றுரை.

கஙூ. கனலுநோய்த் தலையுநீ கனங்குழை யவரொடு
புனலா யெனவந்த பூசலிற் பெரிதன்றே
(சு)தார்கொண்டா டலைக்கோதை தடுமாறிப் பூண்டநின்
னீரணி சிதையாதெம் மில்வந்து நின்றதை

(அ) பொதுவென்பது சிறப்பென்பதற்கு எதிர்மொழியாக வழங்குதலும், (ஆ) "எதின் மாக்கள் பொதுமொழி கொள்ளார்" (புறம். நிசா: உஎ) என்புழி, பொதுமொழியென்பதற்குச் சிறப்பில்லாதமொழியையென்றும் (இ) "புலமிக் கவரைப் புலமை தெரிதல்,.....பொது மக்கட் காகாதே" (பழ.ஙூ) என்புழி, பொதுமக்கட்கென்பதற்குச் சிறப்பில்லாத மக்கட்கென்றும் முன்னோரால் உரை எழுதப்பெற்றிருத்தலும் இங்கே அறிதற்பாலன.

உ. "தூறுபத் தடுக்கி யெட்டுக்கடை நிறுத்த, வீறுயர் பசும்பொன் பெறுவ திம் மாலை, மாலை வாங்குநர் சாலுநங் கொடிக்கென " சீலப். கூ: கசுசு – கசுஙு.

கூ. தொல். அகத். சூ. அ. நச். உரையிலும் மருதத்திற்கு வைகறை வந்ததற்கு, "அணைமென்றோள்.....பெற்றதை" என்னும் பகுதி மேற்.

சு. (அ) "தலைந்தகோதை தாரொடுபொலியப், புணர்ந்துட னுமிசையே" (மது. உஙடு-உசுசு.) (ஆ) "தாருங்கோதையும் – மைந்தர்தாரும்மகளிர் கோதையும்" (இ) "மகளிர் கோதை மைந்தர் பூணெவு, மைந்தர் தண்டார் மகளிர்பெய்யவும்" (பரி. கூ: சசு.உரை, உ0: உ0-உக.) (ஈ) "கோதையுந் தாரும் பிணங்கக் கொடுங்குழைக், காதன் மகளிரு மைந்தருங் காணிய" (சீவக. உககக.) எனவும்(உ) "மைந்தர் கண்ணி மகளிர் சூடவு, மகளிர் கோதை மைந்தர்மலையவும்" (பட். கo-கஙo.) எனவும்

(பிரதிபேதம்) * பொலிபெற்ற: † கல்லியாணத்தி லுண்டான ‡நாறுமணத்தினே ||அணைபோல மெல்லிய ÷கௌவையுட்பொலிந்த. × வைகறைபெற்றதை'

எ - து: நின் மார்பின் மாலையை வாங்கிக்கொண்டவளுடைய நெற்றிக் கட்டை வைகறையிலேவருதலின் மனத்தமோறிப் *பூண்ட இறுண்டுஅணியுங் கெடாமல் எம் இல்லிடத்தே வந்திருந்தது எம் மேனி கனலுதற்குக் காரண மான காமநோய்க்கு மேலேயும் நீ(க)பொன்னுற்செய்தமகரக்குழையையுடைய (உ)பரத்தையருடனே புனலிடத்தே வீளையாடுகின்றுயென்று பிறர்சொல்ல நினக்கு உண்டான ஆரவாரத்திலும் பெரியதொன்றன்றே ? எ - று.

ஆடவர் கோலமும் மகளிர் கோலமுங் கொண்டு வந்திற்றலின் இரண்டணியென்றுள்.

களை தணந்ததன் றலையுநீ (ங)தளரிய லவரொடு
(ச)துணங்கையா யெஃஅவந்த கவ்வையிற் (ஞ)கடப்பன்றே
வொளிபூத்த நுதலாரோ டோரணிப் பொலிந்தநின்
களிதட்ப வந்தகில் கவின்காண வியைந்ததை

எ - து: ஒளி பொலிவுபெற்ற நுதலினையுடையாரோடே கூடுதலாலுண்டான(சு)பூணின்வடுக் கிடத்தலின் அவர்க்கும்நினக்கும் ஓரணியாகப் பொலிவு பெற்ற நின் செருக்குப் பிறர்பாற் செல்லாமல் அமைதி பிறப்பித்துத் தடுக்கையினாலே வந்த இவ்வழகை யாங்கள் காணும்படி பொருந்தினது நீ எங் களைப்பிரிந்த இதற்குமேலேயும் நின்னைப் பெறுதலாற்ற இயல்பினையுடை யாரோடே தணங்கைக்கூத்தாடினுயென்று பிறர்சொல்ல நினக்கு உண்டான ஆரவாரத்திலும் மிகுதியானதொன்றன்றே ? எ - று.

†எனவாங்கு

(ஹ) "தாரு மாலையு மயங்கிக் கையற்ற" (சீலப். உ: ஈடு.) எனவும் வருவன ஈண்டு ஒப்புநோக்கற்பாலன.

க. கனங்குழை யென்பதற்கு, பொன்னுற்செய்த மகரக்குழை யென்றே பலவிடத்தும் இவர் பொருள் கூறினும் இந்நூல். கசு: எ. இல். பொன்னுற்செய்த கனலியகுழை என்று எழுதியிருத்தலால் பொன் மற்றைய உலோகங்களினும் கனலுடையதென்பது பற்றி இவ்வாறு பொருள் கொண்டனர்போலும்; குறள் கஅஅக. பரி. உரையும் பார்க்க. கனமென்பது பொன்னின் பரியாயநாம மென்பாரு முளர்.

உ. "கூடியார் புனலாடப் பூணையாய மார்பினில்" (கலி. எஉ: கடி) என்ப தும் அதன் குறிப்பும்பார்க்க.

ங. (அ) "தளரியால்" கலி. கசஙஃ: சு. (ஆ) "தளரியலாய்" காரி. எ. (இ) "தளரியல்பொருட்டின்வந்தசீற்றமும்" கம்ப. இராவணவதை. உசை.

ச. "துணங்ஙையுளரவும்" கலி. எஅ: கச என்பதன் குறிப்புப்பார்க்க.

ஞ. "கடப் பன்றே கனங்குழாய்" கலி. ஙிஎ: கடி.

சு. "பொன்னணும் புக்கொளிப்பப் புல்லுவன்" நள. சுயம். அசை.

(பிரதிபேதம்) * பூண்டவீரண்டினையுங் கெடாமல். †'எனவாங்கு - ஆக்கலை அவிபெற்றே யெம்மை.

எ-து: என்று யாங்கள் காணும்படியாக; எ - று.

ஆங்கு, அசை.

உஉ அளிபெற்றே மெம்மைநீ யருளினை விளியாது
(க)வேட்டோர் நிறத்து விரும்பியநின் பாகனு
நீட்டித்தா யென்று கடாஅங் கடிந்திண்டேர்
பூட்டு விடாஅ;நிறுத்து.

†எ - து: நீ ஈண்டு வருதலாலே நினது அளியைப்பெற்றேம்; நீயும் எம்மை அருளினை; இதுவே அமையும்; இனி நீ விரும்பியோர்நிறத்தே நீ செல்லுதலே விரும்பிய நின்பாகனும் பூட்டுதலேவிடாத கடிய திண்ணியதேரை நீ இவ்விடத்தே தாழ்த்தாயென்று கருதி அது நிற்கும் நிலையிலே செலுத்தும்; அதற்கு முன்னே சென்று அப்பரத்தையர் அன்பு கெடாமல் அவ்வண்பை ‡நிறுத்துவாயாக; எ - று.

விளியாது நிறுத்து எனக் கூட்டுக.

இதனால், இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது வெள்ளோச்சுரிதகத்தாலிற்ற ஒத்தாழிசைக்கலிப்பா. (க)

(சுஎ.) காமுறற்றி யிணரூழ்த்த கமழ்தேர்தட்ட மலர்வேய்ந்து
சீர்முற்றிப் புலவர்வாய்ச் சிறப்பெய்தி யிருநிலந்
தார்முற்றி யதுபோலத் தகைபூத்த வையைதன்
னீர்முற்றி மதில்பொரூஉம் பகையல்லா னேராதார்
போர்முற்றுென் றறியாத புரிசைசூழ் புனலூரன்;

சு நலத்தகை யெழிலுண்க ணல்லார்தந் கோதையா
லலைத்தபுண் வடுக்காட்டி யன்பின்றி வரினெல்லா
புலப்பேன்யா னென்பேன்ம னந்நிலையே யவற்காணிற்
கலப்பே னென்னுமிக் கையறு நெஞ்சே;

க. "காம நிலையுரைத்தலும்" என்னும் தொல். கற்பியல், ஙக-ஆம் சூத்திரத்தின் இவருரையில் "பாங்கன் கூறுவன நோய்மருந் தறிதருளடக்கிக்கொண்டு எடுத்து மொழியப்படுதலன்றிக் கூற்று அவணின்மை உணர்க;' அது: 'வேட்டோர்.....நிறுத்து' என[வும்] வரும்" என்பது காணப்படுகிறது; அதனை நோக்கப் பாங்கனே இங்குத்தேர்ப் பாகனு மிருந்தனனென்றுகொள்ள வேண்டுமென்று தோற்றுகிறது. இஃது ஆராய்தற்பாலது.

(பிரதிபேதம்) * நின்பாகனீ நீட்டித்தாயென்று † எ - து என்று யாங்கள் காணும்படியாக நீ யீண்டு ‡நிறுத்துவாயென்பதே விளியாது நிறுத்தெனமாறுக இதனுல்.

கo கோடெழி லகலல்குற் கொடியன்னர் முலைமூழ்கிப்
பாடழி சாந்தினன் பண்பின்றி வரினெல்லா
வூடுவே னென்பேன்ம னங்கிலேயே யவற்காணிற்
கூடுவே னென்னுமிக் கொள்கையி னெஞ்சே;

கச இனிப்புணர்ந்த வெழினல்லா ரிலங்கெயி றுறுஅலி
னனிச்சிவந்த வடுக்காட்டி நாணின்றி வரினெல்லா
துனிப்பேன்யா னென்பேன்ம னங்கிலேயே யவற்காணிற்
றனித்தே தாழுமித் தனியி னெஞ்சே;

எனவாங்கு;

கசு பிறைபுரை யேர்நுதா ரெமெண்ணி யவையெல்லாக்
துறைபோத லொல்லுமோ தூவாகா தாங்கே
யறைபோகு நெஞ்சுடை யார்க்கு.

இது வாயின்மறுத்த தலைமகள் ஆற்றமைவாயிலாகப் புக்குக்கூடிய தலைமகனது நீக்கத்துக்கட் புக்க தோழிக்குக் கூறியது.

இதன் பொருள்.

கார்முற்றி யிணரூழ்த்த கமழ்தோட்ட (1)மலர்வேய்ந்து
சீர்முற்றிப் (2)புலவர்வாய்ச் சிறப்பெய்தி யிருநிலந்

க. (அ) "மலரு, நாறுபு நிகழும் யாறுவர லாறு" (ஆ) "மாறுமென் மல
ருந் தாருங் கோதையும்... .....மண்டி.....வேரு கின்றிவ் விரி
புனல் வரவென" (இ) "மலியி னிழியருவி மல்கிணர்ச் சார்ச்சார்க்,
கரைமரஞ் சேர்ந்து கவினிமடவார், நனைசேர் கதுப்பினுட் டண்போது
மைக்தர், மலர்மார்பிற் சோர்ந்த மலரித்ழ் தாஅய், மீளுரம் பூத்த
வியன்கங்கை நந்திய, வானம்பெயர்ந்த மருங்கொத்த லெஞ்ஞான்றும்,
தேனிமிர் வையைக் கியல்பு" பரி. சு: சக - உ, சு: சசு - டுo, கசு,
கூஉ-ஙஅ. (ங) "வையையென்ற பொய்யாக் குலக்கொடி,.....புண்
ணிய நறுமல ராடை போர்த்து... .....புனல்யா றன்றிது பூம்புனல்
யாறென" சிலப். கசு: கஎo - கஎச. என்பவையும் (உ) "பூங் கரைத்து
மென் முது பொருந்தியும்,.....வான வில்லே நிகர்த்தது வாரியே"
கம்ப. ஆற்று. அ. (ஊ) "கொங்கு லாமலர்க் கொன்றைகூ விளகுர
வுழிஞை, பொங்குமாசுணக் தாதகிபாடலம் புன்னை, துங்க மார்திருத்
தலைமிசைக் கொண்டுறர் தொடர்பா, லெங்க ணுயகன் றன்னையு
மொத்ததவ் விருநீர்" கந்த. ஆற்றுப். கசு என்பவையும் ஒப்புநோக்குக.

உ. (அ) "வையையிரு பத்தாறு மாமதுரை நான்கென்ப, செய்யபரி பாடற்
றிறம்" (ஆ) "புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி, வையை

(க)தார்மூற்றி யதுபோலத் தகைபூத்த(உ)வையைதன்
(ங)னீர்மூற்றிமதில்பொருஉம் பகையல்லா னேராதார்
போர்(ச)மூற்றென்றறியாத புரிசைசூழ் *புனலூரன்

யென்ற பொய்யாக் குலக்கொடி" சீலப். காங: ககக - கஎ0. என்பன ஈண்டறிதற் பாலன.

க. (அ)"மாநில மடந்தை.....ஆரம் போலச், செல்புன லுழந்த சேய்வரற் கான்யாற்று" சிறுபாண். க - ங. (ஆ) "ஆரப் பேரியாற்று ..... மண்ணக மடந்தை" சீலப். இ: க - ங. (இ) "காவிரி, மாதர்மண் மடந்தைபொன் மார்பிற் ருழ்த்தோ, ரோதநீர் நித்திலத் தாம மொக்குமால்" பெரிய. திருநாட்செ. உ.

உ. (அ) "அமிழ்த வெண்டிரை வையையு மொருபுறத் தகழாம்" (ஆ) (வையை) "கல்லென்றதிர் சும்மைப்புனல் கடிமாமதிற் புறம்போய், ...புல்லும்புரி சையுந்தள்ளியுள் புகுகின்றதை யன்றே" திருவிளை. திருநகரப். கள. பரிதரி. இ - அ. என்பனவும் (இ) "புனல் பொரு புதவி னுறந்தை" அகம். உஙஎ: கச. (ஈ) "புல்லிலை வஞ்சிப் புறமதி லலைக்குங், கல்லென் பொருநை" புறம். ஙஅ: ஙங - ஙச. என்பனவும் (உ) "நிவந்துகரை யிழிதரு னனந்தலைப் பேரியாற்றுச், சீருடை வியன்புலம் வாய்பரந்து மிகீஇய, ருவலே சூடி யுருத்திவரு மலிர்நிறைச், செந்நீர்ப் பூச லல்லது, வெம்மை யரிதநின் னகன்றலை நாடே" பதிற். உஅ: கo - கச. என்பதும் (ஊ) "ஒருகொம் பானையு மொராயிரத் திரட்டிவெண் கோட்செ, செருவின் வேழமுந் திரளியிற் றருமவெள் ளேறும், பொருவி லோகையிற் பொருதி[ய](டப் படுவ தல்லாது, மருவ லார்களிற் பொருகிடப் படாததவ் வரையே" திருவாலவா. புராணவரலாற்றுப். கூ. என்பதும் (எ) "கோற்றொடிப் புரிசை முற்றிக் குளிர்நிழற் படப்பை சாய்த்துத், தோற்றிடு காட்டி லுள்ள பல பொருள் சூறை யாடி, யேற்றம ருடற்றும் வேந்தர் நாட் டினி லிகலி னேகும், வேற்றர சிறுத்தா லென்ன மேவும்வை தரணி யாறும்" கூர்ம. நவகண்டத். நடு. என்பதும் இங்கே அறிதற்பாலன.

ங. "அதிராச்சிறப்பின்மதுரைமூதூர்" என்பதற்கு, 'பகைவரால் நடுக்க மில்லாத சிறப்பினையுடைய மதுரையாகிய மூதூர்' என்று பொருள் கூறி அதற்கும், "முதிர்கடன் ஞாலம்" என்புழி 'முதிர்தல்' என்ப தற்கு, 'முற்றுதல், சூழ்தலுமாம்' என்று பொருள்கூறி அதற்கும், "நீர்முற்றி மதில்பொருஉம்" என்னும் பகுதியை மேற்கோள் காட்டி னர், அடியார்க்கு நல்லார்; சீலப். பதிகம். ஙக, உ: ஙo.

ச. "மூற்று - வளைத்தல்" பு - வே. உழிஞை. உஇ.

(பிரதிபேதம். *புனனாரன்

எ - து: கார்காலம் முதிர்கையினலே பூங்கொத்துக்கள் அலர்ந்த தமழ் இன்ற இதழ்களையுடையனவாகிய மலர்களைச் சூடித் தலைமைமுதிர்ந்து புலவர் வாயிற் கவிகளைத் தான்பெற்று, ஊரைச் சூழ்ந்து வருதலிற் பெரிய நிலமடந் தைதான் ஒரு பூமாலையைச் சூழ்ந்துகொண்டிருந்த தண்மைபோல அழகு பொலிவுபெற்ற வையையாற்றினது நீர் சூழ்ந்து மலிலைப்பொரும் பகை யன்றிப் பகைவர் போரால் *வளைத்தலைச் சிறிதும் அறியாத புரிசை சூழ்ந்த புனலையுடைத்தாகிய மதுரையை யுடையவன்; எ - று.

புனலூரனென்றது பாண்டியனையாதலிற் பாட்டுடைத் தலைவனை இளவித்தலைவனுக்கூறிய அகப்புறமாயிற்று. இதற்கு விதி "காமப் பகுதி கடவுளும் வரையா, ரேனோர் பாங்கினு மென்மனர் புலவர்" (க)என்பதனுள் 'ஏனோர்பாங்கினும்' என்பதனைத் கூறினும்.

சு நலத்தகை பெழிலுண்க (உ)ணல்லார்தங் கோதையா
லலைத்தபுண் வடிக்காட்டி யன்பின்றி வரினெல்லா
(ங)புலப்பேன்யா னென்பேன்ம னங்நிலையே யவற்காணிற்
கலப்பே னென்னுமிக் கையற வெஞ்சே

க. தொல். புறத். சூ. உஅ. (அ) இதனுரைபிலும் இவரால், குறிப்பினுற் பாட்டுடைத்தலைவனைக் இளவித் தலைவனுக்கு கூறியதற்கு, "சீர்முற்றி .....புனலூரன்" என்பது மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது; (ஆ) முன்னோர்கூறிய குறிப்பினு மென்பதற்கு, முதலாகிரியர் கூறிய காமக்குறிப்பினு மென்று பொருள்கூறி, அஃது இயற்பெயர் சார்த்தி வருதற்கு "வையைதன் னீர்முற்றி..... .....புனலூரன்" என் பதை மேற்கோள்காட்டி, இது குறிப்பினுற் பாட்டுடைத் தலைமகனைக் இளவித் தலைமகனுக் கூறியதென்பர், இளம்பூரணரும்; தொல். புறத். சூ. உஉ. 'வழக்கியன்'

உ. (அ)"குறகலென் ரெள்ளிழை கோதைகோ லாக, வீறுகிறுகயாத்துப் புடைப்ப" (ஆ) "கமழ்கோதை கோலாப் புடைத்து" பரி. க: ஙக-சஂ, கஉ: ஙஅ. (இ) "கோதை கோலா வீறைஞ்சி நின்ற, வூதையஞ் சேர்ப்பனை யலேப்பேன் போலவும்" கலி. கஉஅ: கஅ - க. (ஈ)"மகளி ரோச்சு, மட்டவிழ் மாலை போல மலிழ்துபூண் மார்பத் தேற்று" (உ) "சந்தனத் தளிர்கள் மாலை, யோக்கினர் கண்ணி சுண்ண மூடற்றினர்" சீவக. உஉகக. உசகக. (ஊ) "நீர்தலைக் கொண்ட நெடும்பெருக் துறைவயிற், போர்தலைக் கொண்டு பொங்குபு மறலிக், கொங்கலர் கோதை கொண்டுபுறத் தோச்சியும்" பெருங். (க) சஉ: கஅச - கஅக. (எ) "கோதைகொண் டோச்சு வாரும்" கம்ப. நீர்விளை. ஙி.

ங. "புலப்ப லெனச்சென்றேண் புல்லினே னெஞ்சங், கலத்த லுறுவது கண்டு" தூது. கஉஙக.

(பிரதிபேதம்) * யாதன.

எ-து: ஏடி! எழிலேயுடையவரிய மையுண்கண்ணினையுடைய பரத்தையர்தங் கோதைகளாலே அடித்தலத்தினையுடைய அழகினையும்(க)கதத்தாலும் எயிற்றாலும் அரத்தபுண்களையும்(உ) பூண்கள்பொறித்த வடுக்களையுங்காட்டி என்னிடத்து அன்பின்றி வருவானுயின் யான் புலப்பேனென்றிருப்பேன், அதனும் பெற்றதென்? இச்செயலற்ற நெஞ்சு அவனைக்காணில் அத்தவறுகளோடு கூடிய அந்நிலைதன்னிலே யான் கூடுவேனென்று கூறுகிற்கும்; எ-று.

கo கோடெழி லகலல்குற் (ங)கொடியன்னார் மூலைமுழங்கிப்
பாடழி சாந்தினன் பண்பின்றி வரினெல்லா
வூடுவே னென்பேன்ம னங்நிலையே யவற்காணிற்
கூடுவே னென்னுமிக் கொள்கையி னெஞ்சே

எ-து: ஏடி! பக்கமுயர்ந்த எழுச்சியையுடைய அகன்ற வல்குலையுடைய கொடியையொக்கும் பரத்தையர் மூலைகள் அழுங்கிப் பூசின பாடழித்த சந்தனத்தையுடையவனுய்ந்மக்கள்குணமின்றிவருவனுயின் ஊடியிருப்பேனென்று றூவேன், அதனுற் *பெற்றதென்? யான் கூறியதனைக் கொள்ளுதலில்லாத நெஞ்சு அவனைக் காணில் அத்தவறுகளோடுகூடிய அந்நிலைதன்னிலே ான்கூடுவேனென்று கூறுகிற்கும்; எ-று.

கச இனிப்புணர்ந்த வெழினல்லா ரிலங்கெயி றுரூஉவி
னளிச்சிவந்த வடுக்காட்டி நாணின்றி வரினெல்லா
நுனிப்பேன்யா னென்பேன்ம னங்நிலையே யவற்காணிற்
றுனித்தே தாழுமித் †தனியி னெஞ்சே

எ-து: ஏடி! இப்பொழுது புதிதாகக் கூடிய அழகினையுடைய பரத்தையருடைய வளர்ங்குகின்ற எயிறுகள் அழுந்துதையினுலே மிகுநியையுடைத்தாய்ச் சிவந்த வடுக்களைக் காட்டி நாணமின்றியே வரின். துனித்திருப்பேன் யான்றன்று கூறுவேன், அதனும் பெற்றதென்? ‡இத்தனிமையான மனத்தைத்தனக்கு ||உரித்தாக்குதலில்லாத நெஞ்சு அவனைக்காணில் அத்தவறுகளோடுடிய அந்நிலைதன்னிலே என்னை நீக்கித் தான் அவனிடத்தேதாழும்; எ-று.

உரூஉல், விகாரம்.

க. "பேணுனென் றடன்றவ ருயிர்செய்த வடுவினும், மேனுணின் ரேன்சேர்ந்தார் நகைசேர்ந்த லிதழினே" கலி. எஉ: கக-உ. என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

உ. "தொடி வடுக்காணிய" கலி. எக: கக. என்பதும் அதன் குறிப்பும் ஈண்டறிதற் பாலன.

ங. "அலமர லுண்கண்ணு ராய்கோதை குழைத்தினின், மலர்மார்பின் மறுப்பட்ட சாந்தம்வர் துரையாக்கால" கலி. எங. கஉ-ங. என்பதும் அதன் குறிப்பும் ஈண்டு ஒப்புநோக்கற்பாலன.

‖நிபேதம்) *பெற்றதென் இத்தயான், †தனிநெஞ்சே, ‡இத்தத்தனிமனத்தை, || உரிதாக்குதலில்லாத.

இத்தாழிசைமூன்றும்(க)மறுத்தரைப்பதுபோல்உவகைபற்றிக்கூறியன. "உடம்பு மூயிரும் வாடியக் காலு, மென்னுற்றனகொ லிவையெனி னல்லது, நிழலோற் சேர்த்தல் நிழத்திக் கில்லே" (உ) என்பதனுல் இக்கெஞ்சிற்குத் தன் றன்மை*யென்பதொன்றன்றியது என்னென்றவாறுகாண்க.

†எனவாங்கு

எ - து. என்று ; எ - று.

ஆங்கு, அசை.

கக பிறைபுரை ‡யேர்நுதலா (ங)யெண்ணியவை யெல்லாங்
துறைபோத லொல்லுமோ தூவாகா தாங்கே
(ச)யறைபோகு நெஞ்சுடை யார்க்கு

எ-து: பிறையையொத்த ||அழகினையுடைய நுதலினையுடையாய்! தமக்கு வலியாகாதே அவனிடத்தே சீழ் அற்றுச் செல்லும் நெஞ்சினையுடைய மகளிர்க்குத் தாம் நினைத்தவையெல்லாம் முடிவுபோல் பெருந்துமோ? பொருந்தாதன்றே! என்றுள் ; எ - று.

இதனுல், தலைவிக்கு இளிவுபிறந்தது.

இது வெண்ணேச்சுரித்தகத்தால் இற்ற ஒத்தாழிசைக்கலி. (உ)

க. மறுத்தரைப் பதுபோல் உவகைபற்றிக் கூறியதற்கு, "கோடெழில் .....கொள்கையி னெஞ்சே" என்பது (தோல். பொருளி. சூ. உ. நச்.) மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ளது.

உ. "தோல். பொருளியல். சூ. கூ. இச்சூத்திரத்தின் இவருரையில் "இனிப் புணர்ந்த.....நெஞ்சே" என்பது மேற்கோளாக "இதனுல் யான் துணித்தல் வல்லேன் என்னெஞ்சிறகுந் தன்றன்மை யென்பதான் றில்லே; ஈதென் னென்றலின் அவ்வாறு காண்க" என்றும் குறிப்புக் காணப்படுகின்றது.

ஙு. (அ) "நின்மார்பு தோயல மென்னு, மிடையு நிறையு மெளிதோகிற் காணிற், கடவுபு கைத்தக்க நெஞ்சென்னுந் தம்மோ, டென்னுழ் பகையுடை யார்க்கு" கலி. எ: உக - ச. (ஆ) "நின்நீமை, பொறை யாற்றே யென்றல் பெறுதுமோ யாழ, நிறையாற்று நெஞ்சுடை யேம்" கலி. கo: உஎ - கூ.

ச. (அ)"நெஞ்சறை போகிய வறிவி னேற்கே" அகம். உக: உக. (ஆ) "அறைபோய் நெஞ்ச மவன்பர லணுகினு, மிறைவளே முன்கை யீகை யிவன் பற்றினுந், தொன்று காதலன் சொல்லெதிர் மறுத்த, னன்றி யன்றென நடுங்கினண் மயங்கி" மணி. கச: கஙo-கஙூ. (இ) "நின்ற

(பிரதிபேதம்) *என்பதொன்றின்றியது. †எனவாங்கு ஆங்கை, ‡ஏர்நுதலாய்தாமெண்ணிய வெல்லாம், ஏர்நுதாருமெண்ணியவையெல்லாம்; ||அழகியதலினை.

(சூஅ.) (க)பொதுமொழி பிறர்க்கின்றி முழுதாளுஞ் செல்வர்க்கு
மதிமொழி யிடன்மாலை யினைவர்போல் வல்லவர்
செதுமொழி சித்த செவிசெறு வாக
முதுமொழி நீராப் புலனு வுழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர;

சு ஊடன்மன் னுரனல்ல னாமக்கென்ன வுடன்வாளா
தோடார்தொக் கிருந்தநின் பெண்டிரு ணோராகிக்
களையாநின் குறிவந்தெங் கதவஞ் சேர்ந் தசைத்தகை
வளையின்வாய் விடன்மாலை மகளிரை நோவேமோ
கோலனாமக்கவன் குறுகன்மி னெனமற்றெங்
தோளொடு பசைபட்டு நினைவாடு நெஞ்சத்தேம்;

கூ ஊடியார் நலந்தேம்ப வொடியெறிந் தவர்வயின்
மாதிர்க்ரு மவன்மார்பென் றெழுந்தசொன் னேவேமோ
முகைவாய்த்த முலைபாயக் குழைந்தநின் ரூரெள்ள
வகைவரிச் செப்பினுள் வைகிய கோதையேம்;

கசு சேரியாற் சென்றுநீ சேர்ந்தவில் வினையினன்
றேரொடு திரிதரும் பாகனைப் பழிப்பேமோ

செஞ்ச, மறைபோன தன்றிங் கவன்வழியே" அம்பிகா. டுகூ. (ரு) "மகிழ்நர் தம்மே, லன்போடு நன்னெஞ் சறிவறை போக" நற்றிணை. ஈஎஅ. என்பவைகளும் (உ) "மொய்கொண் டெழுந்த 'வமரகத்து மாற்றுர் வாய்ப், பொய்கொண் டறைபோய்த் திரிபவர்க்கு" பழ. உசக. (ஊ) " அறிவறை போகிய பொறியறு நெஞ்சத் திறை" சிலப். உ0: உடி. (எ) "அறைபோக் கமைச்சின் முறைபோக் கெண்ணினும்" பெருங். (ரு) கஎ: டுசு. (ஏ) "கீழ்ந்தறை போகிய கிளவு ராமென" கந்த. மார்க்கண்டேய. அசு. (ஐ) "காசுண்ட பூணு னறை போய கருத்த னுனன்" (ஒ) "நானறைபோய மனத்தோ டிங்குப், பரிவுறலும்" திருவிளை. வரகுணனுக்குச். கo; வன்னியும். உஉ என்ப வைகளும் (ஓ) "ஓட்டை நெஞ்சினராய்" (தேவ. சுஈஉ) என்பதற்கு, 'அறைபோய நெஞ்சினராய்' என்றெழுதியிருக்கும் உரையும் இங்கு ஒப்புநோக்கற் பாலன.

கo புல்லுதன் மயக்கும் புலவிக்கண் காமக்கிழத்தியர் கூற்று-நிகழ்தற்கு இச்செய்யுளை மேற்கோள் காட்டி, இது மூவரை யார்க்கும் பொது வென்பர், இளம்; தொல். கற்பி. சூ. அ. 'புல்லுதன் மயக்கும்'

வொலிகொண்ட சும்மையான் மணமலி குறித்தெம்மிற்
பொலிகெனப் புகுந்தநின் புலியணைக் கண்டியாம்;

எனவாங்கு;

உக நனவினுன் வேறுரும் வேளா முயக்க
மலைவரிற் பெற்றுவந்து மற்றெந்தோள் வாட
வினைய ரெனவுணர்ந்தா ரென்றேக்கற் றுங்குக்
கனவினு னெய்திய செல்வத் தனையதே
யைய வெமக்குநின் மார்பு.

இது பாத்தையர் சேரியினின்றும் வந்த தலைவனெடு ஊடிய காமக் கிழத்தி தன்காதன்மிதுதி கூறி ஊடியவாறு கண்டு சென்று சார்ந்த தலைமக னுடன் ஊடல் தீர்கின்றன் கூறியது.

இதன் பொருள்.

(க)பொதுமொழி பிறர்க்கின்றி முழுதாளுஞ் செல்வர்க்கு
மதிமொழி யிடன்மாலை (உ)†வினைவர்போல் (ங)வல்லவர்

க. (அ)"வையங்காவலர்வழிமொழிந்தொழுகப், போகம்வேண்டிப்பொதச் சொற்பொருஅ, திடஞ்சிறி தென்னு மூக்கந்துரப்ப, வொடுங்கா வுள்ளத்து.....சேரலாதனே" (ஆ) "வழுதி, தண்டமிழ் பொது வெனப் பொருஅன்" புறம். அ: க-ஞி; ஙக: ச - ஞி. (இ) "பெருநில முழுதாளும் பெருமகன்" சிலப். க: ஙக. (ஈ) "ஞாலம் பொதுவெனப் பொருவரசர்" குறள். சகூஉ. பரி. (உ) '"கோசசெகடட் செம்பியர் கோன், பூவலயம் பொதுநீக்கி யாண்டருளி" பெரிய. கோசசெகடட். கஎ. (ஊ)"உலகம்பொது வறநூன்முறை யோராழி செலுத்தி" கூர்ம. இந்திரத்துய்மன்உஉ. (எ)"நிலமுழு தாண்டநேமி நாவிகிர்த்தியாள னளனெனு நாமமேத்தன்" வில்லி. அருசசுனன்தபு. (ஏ) "முழு தலகம் பொதுநீக்கி முழுசசெங்கோல் செலுத்தினான்" உரோகோ அரித்துவசன் சாபத்தீர்த்த: உ. (ஐ) "கொய்ய நின்ன கொத்தலை குடையும், பிறர்கொளப் பொருஅன்ன கொண்டுபெ துநிலை திகிரி நிசை நிசை போக்கி நீதுபார்முன்னி, உடு

உ. (அ) "கொலையஞ்சா வினைஞராய" [illegible] போல்" கலி. கo: ங, சக: அ. (ஆ) "[illegible] ராயினும்" பெருங். (ச) ஙஎ: அ.

ங. "வல்லவர் செதமொழி [illegible] தொகைக்கு மேற்கோள்; தொல். எ[illegible]

(பிரதிபேதம்) *மொழிவிடன்மாலை;†வினையர்

(க)செதுமொழி சித்த (உ)செவி(ங)செறு வாக
முதுமொழி *நீராப் (ச)புலனு வுழவர்
(ஞ)புதுமொழி கூட்டுண்ணும் (ட)புரிசைசூழ் புனலூர

எ-து: பிறர்க்கும் இம் மண்ணுலகம் பொதுவென்னும் மொழி இன்றுக மண்ணுலகமுழுதையும்ஆளுஞ்†சக்கரவர்த்திகளுக்கு(எ)அறிவாகிய சொல்லைச் சொல்லுதலே இயல்பாகவுடைய அமைச்சரைப்போல, நால்வல்ல ஆகிய நாலே பொல்லாவாகியசெறற்கள் இடையிற் புகுதாமற் போக்கப்பட்ட தஞ்

க. (அ) "செதுகாற் குரம்பை"(ஆ)"செதுகாழ் சாய்த்த" அகம். ஈக: ச; ஈஎங: ச; (இ) "புதுக்கண் மாக்கள் செதுக்கணர" புறம். உசு: ங (ஈ) "செதுமதித்தக்கன்" தே. திருஞான. அம்பர். 'படியுளார்' (உ) "செதுமதிச்சமண்" திருவிசைப்பா. கள.(ஊ) "செதுமகப் பெற்று" சீவக. ககஉச. (எ) செதுவன் மரத்தில்" பெருங். (ங) கஙி: உ0. (ஏ) "செதுநெறி நிலையினரே" (ஐ) "செதுகைப் பெருந்தானவர்" கம்ப. இலங்கைகாண். ஈ; காகபாசப். உஉ. (ஒ) "செதுவதட்டி" தணிகை. திருநாட்டு. ககo. என்பவற்றுல் செதுவென்பதன் பொருள் தணிக.

உ. (அ) "வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்திய்தா, முள்ளியது முடிக்கு மூரணுடை யுள்ளத்து.....பரிசிலர்க்கு" (ஆ) "பொய்த்த லறியா வுரவோன் செவிமுதல், வித்திய பனுவல் விளைத்தன்று நன்றென" புறம். உ0ச: உ - ஙி. உஈ: ச - ஙி. (இ) "மறையோன் மறைநா வுழுது வான்பொரு, ளிறையோன் செவிசெறு வாக வித்தலின்" சீலப். உஅ: கஅள - கஅஅ.

ஊ. செய்ஞயச் செறுவென்பது அருவா காட்டி வழக்கு; தோல். எச்ச. சூ. ச. நச்.

ச. "புலனுழு தண்மார்" புறம். சசு: ஈ.

ஙி. (அ) "புதுமொழிகூட் டுணத்தமிழாற் புனைதல் செய்தான்" நைடதம். சிறப்புப். (ஆ) "ஈண்டுலகந் தருதல் வேண்டிப் பாண்டியர், பாதெமிழ் வளர்த்த கூடலின்" ஆசிரிய. 'நிறசெவி யன்னே'

க. "புரிசைசூழ் புனலூரன்" கலி. கள: ஙி.

எ. (அ)"தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச், சொல்லலுஞ், வல்ல தமைச்ச" (ஆ) "அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றும், நிறனறிந்தான் றேர்ச்சித் தணை" (இ) "மதிநுட்ப னுவெர் டைபோர்க் கதிநுட்பம், யாவுள முன்னிற் பனை" (ஈ) "அறிகொன் றறியா னெனினு முறுதி, புழையிருந்தான் கூறல் கடன்." (உ) "சொலல் வல்லன் சோர்விலனஞ்சா னவனை, யகல்வெல்லல் யார்க்கு மரிது" குறுங். கூச, கூஙி, கூக, கூஅ,கசள.(ஊ)"செறித்தவர் தெளித்த

பிரதிபேதம்) *நீராப்புலன், † சக்ரெவர்த்திகளுக்கு.

செவிகள்(க)செய்யாத, முன்னுள்ளசான்றோர்கூறிய செய்யுட்கள்தஞ்சொல்லே வளர்க்கும் நீராக, அறிவினையுடைய நாவாகிய எரால உழுதுண்ணும் புலவ ருடைய புதிய கவிகளைக் கொள்ளைகொண்டு உண்ணும் மதில் சூழ்ந்த புனலை புடைத்தாகிய மதுரையையுடையவனே ; எ - று.

இதுவும் பாட்டுடைத்தலைவனைக் கிளவித்தலைவனுக்குக் கூறியது.

கூ ஊரன்முன் னுரனல்ல *னமக்கென்ன வுடன்வாளா
தோரூர்தொக் கிருந்தநின் பெண்டிரு ணேரரசிற்
களையாநின் குறிவஞ்செங் கதவஞ்சேர்ந் தசைந்ததை
வளையின(உ)வாய் விடன்மாலை மகளிரை ரோவெம்மை
தோளால னமக்கவன் குறுகன்மி னெனமற்றெற்
தோளொடு பசைபட்டு †நீணீவாடு நெஞ்சத்தீதும்

எ - து: நமக்கு ஊரன் மிகவும் பற்றுக்கோடல்லனெனச் சொல்லிப் பின்னர் ஒருவர்கூறியது ஒருவர்கூறுதே ஏரூர் குடியேற்றவேண்டுவாராய்த் நிரண்டிருந்த நின் சேரிப்பரத்தையருடனே யாங்களும் ஒப்பாகி, நமக்கு ‡அவன் உறவல்லன் அவனே முயங்குதீதிகொள்ளுந்தோளெனச் || சொல்லி முயங்கக்கருதின எற்தோள்களுடனே மாறுபட்டுப் பின்னே முயங்கக்கருதின

நூலார் சிறந்தவை தெரிந்து சொன்ன, நூறிந்தவை யமர்ந்து செய்யு மமைதியான ரசனுவான், செறிந்தவர் தெளிந்த நூலார் சிறந்தவை தெரிந்து கூறி, யுறிந்தவை யியற்றுதற்கு மமைதியர் முமைச்ச ராவர்" சூளா. மந்திரசூ. கூ. (எ) "தம்மூரிற்குறுகி யெண்ணூர் தலைமகன் வெகுண்ட போதும்; வெம்மையைத் தாங்கி நீதிவிடாதுநின் றமைக்கு மெய்யர்" கம்ப. அயோத்தி. மந்திப். கூ. (ஏ) "மன்னவர் செவி யழன் மடுத்த தாமென, நன்னெறி தருவதோர் நடவுநீதியைச், சொன்ன ரமைச்சர்கள்" கந்த..... .....(ஐ) "மதிநுட்பரு மாகிச் சோர்வில், சொல்லா லடைபார் மனமுங்களி தூங்கச் சொல்லிப், பல்லார் பிறர்சொற் பயனுய்ந்து கவர வல்லார்" திருவிளை. பன்றிக் குட்டிகளை. கச. (ஒ)"செவிசுடச் சென்றுங் கிடத்தறிவு மூட்டி, வெகு ளினும் வாய்வெரீஇப் பேரா.....யமைச்சு" நீதிநெறி. சகி. (ஓ) "சுருக்கிமெய் விளக்கி யினிமையும் பயனுந் தொகுத்திய லார்மொழிக் கிடையாத், திருக்கிளர் மொழியைச் சோர்வற வவைக்கட் ,செல்லுமா றஞ்சுத லின்றி, யுரைக்கவல் லவரே யமைச்சர்க ளாவர்" விநாயக. அரசியற்கை. கoசு.

க. "பன்றி நாட்டார் செறுவைச் செய்யென்று வழங்குவர்" நன். பெயரி. சூ. கக. மயிலை.

உ. "வாய்வீசுந் தானென்ப" கலி. சக: கடி.

(†) நீதியேநும் *மகக்கென்னவுடன்வாளாது, ‡நீணீவாடு, ‡இயலுறவல்லன், ||சொல்லமுயங்க,

நினைவு கெடுகின்ற நெஞ்சத்தினையுடைய யாங்கள் நின்பெண்டிருள் கோசிகனார் உரனல்லனென்ற வார்த்தையைக் கேளாத்து நின்குறியிடத்தே வந்து ஆண்டுக் காணுமையின் எம்மிடத்தே வந்தாயென்று கருதி எங் கதவத்தைச் சேர்த்து தட்டின கையின் வியர்ஞலே தம் வரவினைச் * சொல்லுதலே இயல்பாகவுடைய அப்பரத்தையரை நோவேமோ ? அதற்கு யாங்கள் உரியேமல்லேமே; எ - று.

இது †"வண்ணம் பசந்து புலம்புறு காலை, புணர்ந்த போல‡வுறுப்பினைக் கிழவி, புணர்ந்த வகையிற் புணர்க்கவும் பெறுமே"(க)என்பதனுள் உறுப்பினை உணர்வுடையதுபோற் கூறிற்று.

கஉ ஊடியார் கலந்தேதம்ப வொடியெறிந் தவர்வயின்
மாறிக்கு மவர்மார்பென் றெழுந்தசொன் னேவேமோ
முகை‖வாய்த்த (உ)முலைபுரையக் குழைந்தநின் றுரெள்ள
(ங)வகைவரிச் (ச)செப்பினுள் வைகிய கோதையேம்

எ-து: முகையின்றன்மை வாய்த்த முலைகள்முயங்குகையினலே÷செவ்வி தூலைந்த நினதுமாலை எம்மை இகழ்ந்துகூறத், கூறுபாட்டினே × புடைத்தாகிய ∴வரியினேயுடைய 1பூச்செப்பிலே பயன்படாது தங்கிய மாலைத்தன்மையை புடைய யாங்கள் இற்பரத்தையர் ஊடினமகளிர் ஊடலைத்தீர்த்துமுயங்காதே

க. தொல். பொருளி. சூ. அ. இச்சூத்திரத்தினுரையிலும் இவர், தலைவி தன்மேனி பசந்து தனிப்பட நுறுங் காலத்துத் தனது உறுப்பினை உணர்ந்ததுபோலத் தூதினத்திற்கு, "கேளல.....நெஞ்சத்தேம்" என்பதை மேற்கோள் காட்டியிருக்கிறார்.

உ. "ஒல்லா முயக்கிடைக் குழைகவென் றூரே" புறம். எகூ: கச.

ங. "வகைவரிச் செப்பினுள் வைகிய மலர்போற், றகைகலம் வாடி மலர்வனம் புகூஉ", மாதவி பயந்த மணிமே கலையொடு" மணி. சு; கஞ-கஎ.

ச. (அ) "பெய்யாது வைகிய கோதை போல, மெய்சா யினையவர் செய்குறி பிழைப்ப" நற்.கக:க-உ.(ஆ)"மடைமாண் செப்பிற் றமிய வைகிய, பெய்யாப் பூவின் மெய்சா யினளே" குறுந். கூ.(இ)"பீர்தங்கெப் பெய்யா மலரிற்பிறி தாயி னளே" சீவக.ககஉ0.என்பவையும்(ஈ)"பாதிரிக் குறுமயிர் மாமலர், நறுமோரோடமொ டெனைறிந் தடைச்சிய, செப்பிடைத் தன்ன காற்றம்" நற். கூஎ:ச-கூ.(உ)"செப்புவாயவிழ்த்த தேம்பொதி நறுவிரை, நறுமலர்" சிலப். உஉ: 'கூக - கஉஉ. (ஊ) "பித்திகைக் கோதை செப்புவாய் மலரவும்" பெருங். (க) கூஉ: எக. (எ) "கற்பக

1 ரதிபேதம்) * சொல்லுதலையுடைய பரத்தையரை † வண்ணம்கிளர்ந்து புலம்புறுகாலை ‡ உறுப்பினைக்கினவி புணர்க்க; ‖ வாய்த்த, ÷ செல்விருந்தை மாலையெம்மை × உடைத்தாகிய வச்செப்பிலே ∴ வரியினையுடையசெப்பிலே

அவர்கள் நலங்கெடும்படி அவரை (க) இடையன்கொன்ற *மாமாக்கிணைத்து
க. (அ) "வெறிகொ ளினச்சுரும்பு மேம்பத்தோர் காவிக், குறைபடுதேன் வேட்டுங் குரும்-றைமது சேர்ந், தண்டாதக் தன்முகத்தே செவ்வி யுடையதோர், வண்டா மரைபாய்த்த வண்டி" தொல். அகத். சூ. இள. மேற். (ஆ) "முழுநீர்ப் பொய்கைப் பொழுதொடு விரிந்த, செழுமலர்த் தாமரை செவ்விப் பெற்றது, வைக லூதா வந்தக் கடைத்து, மெல்லவீ ரோது கேட்டற் கவாவும், வண்டே யனையர் மாக்த னென்பது, பண்டே யுரைத்த பழமொழி மெய்யாச், சண்டே ஞெழினிக் காமக்கிழப்பெ" பெருங். (உ) கக: கூஉ - கூஅ (இ) "செங்கதிர் விரித்தெச் திருமலர்த் தாமரைப், பெருந்தே னருந்தி யெப் பேரிசை யனைதிறு, முதலிசைச் செவ்வழிவிதிபெறப் பாடியத், தாதுடைதைந்த மென் றழைசிறை வண்டினம், பசுந்தாட்புல்லிதழ்க் கருந்தா ளாம்பற், சிறிதுவா மதுவமும் குறைபெற வருந்தியப், பாசடைக் குலகவர் பயிலாத்தாரினை, மருளோடு குறிக்கும் புனலணி யூர" ஆல். கூ: கக - உங். (ஈ) "கன்னி நறுந்தேறன் மாக்கிக் கமலத்தின், மன்னித் துயின்ற வரிவண்டு, பின்னையும் போய், செய்தத் கவாவு தொரொட" நள. கலிநீக்கு சக.

உ. இச்சூத்திரப்பகுதி சூஉஅ: க - ஆம் குறிப்புப்பார்க்க.

ங. குழை யென்னு மூறுப்பு மரத்திற்கு வருதற்கு "கொய்குழை..... கல்லூர" என்பது மேற்கோள்; தொல். மரபி. சூ. அஎ. பேர். கச்.

†ரதிபோலும் ‡செப்பினள், † போலும் யவும், ‡ மைதழைப்புனைர்,

வயலிடத்துப் பயில இலையினையுடைய தான்றோன்றும் நிழலிடத்தைக் கை செய்து பண்ணினதுபோலப் *பூத்த, தரிய இதழ்பொருந்த, நீங்குகின்ற தாமரைப்பூவினது விளங்குகின்ற கொட்டையாகிய மாட்சிமையையுடைய பதியிடத்தே மீண்டுவரும் (கு)மகளிர்கொம்புத் தழை தளிர்க்கின்றகாஞ்சியைத் தினையுடைய துறையணிந்த நல்ல கூட்டினே! எ - று.

மைதபுதாமரையெனக் †கூட்டுத. தேறேற்றிக்கொண்டுவந்த பாத்தையரை முற்படதகர்ந்து பின்னர்க் தேரிற்பரத்தையை நகர்ந்து வீடியர்†காலத்தும் தலைவிமனைவயிற் செல்கின்ற ஒழுக்கினை யுடைமையின் காமக்கிழத்தி புலந்துகூறினாள்.

கூ (உ) அம்பில னாயினு மெனைப்படா வெனை யேந்தி
நின்புகழ் பலபாடும் பாணனு மொழிந்தனன்

எ-து: அவன் அன்புடையனல்லனென்றும் அறனுடையனல்லனென்றும் நீ சொல்லப்படானென்று நின்னைப் புகழ்ந்து நின் முகழ் பலவற்றையும் பாடிக்காட்டும் பாணனும் பிரிதேறினான். எ - று.

அ (கூ) நஞ்சுயிர் செகுத்தலு மறிந்துநின் னாண்டுந் துளிநின்னை
கஞ்சிலின் மொழிதலும் பெற்றது மொழிபுபு மொழிந்தனர்

எ-து: நஞ்சு தன்னை நுகர்ந்தாருயிரைப் போக்குதலையும் அறிந்து வைத்து உண்டாற்போல நின் மனக்கருத்து அந்நின்றி வருதலுமுலக்கண்டு ||வைத்தும் பின்னும் நின்பொய்மொழியை மெய்யாகத் தெளிவுபடுத்தையரும் பத்தேறினர். எ - று.

÷செகுத்தலுமென்ற உம்மை. தெறப்பு.

க. தழைத்த காஞ்சி யென்பதற்கு "வியாயாட்டுமகளிர் பலரும் தழிஞ்சும் முறியும் தாதும் பூவும் கோடலார் கையுபட்டிலிடகின்ற காஞ்சி" என்று எழுதியிருக்கும் விளக்கம் இவ்வக அறிபத்தகத்து; பதிப்பு. உரை: கக-உரை.

உ. (அ) "அருளு மன்பு நீக்கித் தூணதுறந்து, பொருள்வயிற் பிரிவோ ருரவோராயி, னுரவோ ருரவோ ராக, மடவ மாக மடந்தை நாமே." குறுந். உ0. (ஆ) "அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை, பண்பும் பயனு மது" குறள். சூடு.

கூ (அ) "முந்தை யிருந்த நட்டோர் கொடுப்பி, னஞ்ச முண்பர் நனி நாகரிகர்" நற். கூடுடு: கூ - எ. (ஆ) "பெயக்கண்டு நஞ்சுண் டடையலர் நயத்தக்க, நாகரிகம் வேண்டி பவர்" குறள். கிஅ0.

(பிரதிபேதம்) * பூத்த தாமரைப்பூவினது, † கூட்டிக காரியமிதற் பொறித்த நீக்குகின்ற தாமரையென்க. தேறேற்றி. ‡ காலத்தைத் தெரித்தலினி, || வைத்துப்பின்னும் ✣ செகுத்ததுமென வும்மை தெறப்பு.

கo (க)முன்பகற் றிலைக்கூடி (உ)நன்பக லவணீத்துப்
பின்பகற் புறத்தேரு நெஞ்சமு மேமுற்றுய்

எ - து: காட்காலமெல்லாம் ஒருத்திபிடத்தே கூடியிருந்து உச்சிக்கால மெல்லாம் அவளைக்கைவிட்டுப் பலரிடத்தே சென்று அந்திக்காலத்திற் கூடி தற்கு வேறுசிலரை ஆராயும் நின்னெஞ்சமும் பித்தேறினுய். எ - று.

அவளையென்னும் இரண்டாவது *ஒழியாதுவருதலும்" (கூ) என்றதனைத் தொடர்ந்து முடித்துரைத்தது. நெஞ்சமுமேமுற்றுய்யனச் சினையினை முதலொடு முடித்தது. உம்மைகள், எண்ணுமை.

†எனவாங்கு, அசை.

கக கிண்கிணி மணிக்தாரா டொலித்தாப்ப வொண்டொடிப்
பெயரத் ‡கண்ணுக்கும் படுவல் யிதுவென
பூவ நூடலைத் நிரிதருந்
தீதில்பே முற்றுன்று நினனும் பெரிதே

எ - து: ||சந்தனம் சுற்றை சிறுமணிகள் கோத்த நூருடனே ஒலி யெழுந்து தூவாரிப்ப ஒள்ளிதாகிய தொடியினையுடைய பெருந்தி(ரு)அமர்த்த

க. "முற்பகல் பிரிதல் லென்பன, பின் முன்னுந் தொக்க தூரும் வேற்றுமைத்தொகை" என்பர், பரி; தூவா. கூக.

உ. உச்சிப்பொழுது என்னும் பொருளில் "பகலென்பதே யன்றி நன் பகலென்பதுமடியுண்டாதை, "நன்பகலுச்சி" (பொருந. சக.) "நன்பகலுங் கூறக் கரும்" (பு - வெ. வஞ்சி. ச.) என்புழி நன்பக லென்பதற்கு எழுத்தெண்ணுதற்றிருந்தும் உரையும் "பைங்கருங் காலிச் செங்கணி யாம்பல், நன்பகற் கமலத் வெந்துவர்க் காயு, மிருங்கண் மலேக்கும் பெரும்பழுக் காயும், வைகறைக் கமலைக் கைபுனைக் தியற்றிய, மின்றே னன்னுமிப் பிறவும்பகுகாயும்" (பெருங். கூ) கச: அந - அரி) என்று வரும் பகுதியும் வலியுறுத்தும்.

கூ. தொல். தொகை. சூ. கஅ.

சு. (அ)ஏழுறுதல் என்புதற்கு மயக்கமுறுதலென்று பொருள்கூறி,"தேரே மூதறன்று நின்னினும் பெரிதே" என்பதனை மேற்கோள் காட்டினர் நச; தொல். களவி. சூ. கஅ. சீவக. உசசக. (ஆ) பித்துறுதலென்று பொருள்கூறுவர், பரி; தூவா அளக.

இ. அமர்க்க ணென்பதற்கு, (கலி. எரி: எ) போரைச்செய்யுங் கண் ணென்று எழுதியிருக்கும் உரை இங்கே அறிதற்பாலது.

(பிரிபேதம்) * ஒழிய னெனதகமு மெபன், † எனவாகு சூங்கை, ‡ கண்ணுக்கும் படுவேன், || சந்தனத்தண்டை

கண்ணினையுடைய *பரத்தையர்க்கும் (அவர்கள் அகப்படுத்தற்குக் கர்ண மான வலை இதுவென்று சொல்லி ஊரிலுள்ளார் சேரச் சிரிக்கும்படி நிரிதருந் தேர் நின்னினும் பெரிதாகப் பிற்றேறிற்று ; யான் † பிற்றேறிலேனென்று ஊடினுள். எ - று.

தேரென்றது, ‡ஆகுபெயராய்ப் பாகனையுணர்த்திற்று.

இதனால், இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது சிறுமைக்கெல்லைகூறிய ஈரடித்தாழிசையான்வந்தவந்தாழிசைக்கலி

(எடு.) (க) நீரார் செறுவி னெய்தலொடு நீடிய
நேரிதழ் நாம்ப னிரையிதழ் கொண்மார்
சீரார் சேயிழை பொலிப்ப வோடு
மோரை மகளி ரோதை வெரீஇயெழுந்
தாரார் மார்பை யஞ்சிறைத் தொழுதி
யுயர்ந்த பொங்க ருபர்மர மேறி
யமர்க்கண் மகளி ரலப்பிய வந்தோப்
தமர்க்குரைப் பனபோற் பல்குரல் பயிற்று
முயர்ந்த போரி னெருமில் லூரன்
கo புதுவோர்ப் புணர்தல் வெய்ய ளெனின்
வதுவை நாளால் வைகலு மஃதிய
னெவ்வென் றோழி நோவாய் நீயென
வெற்பார்த் துறைவாப் பெயரினித் தெற்றென ;

கச எல்லினை வருதி யெவன் நுதித் தினையளச்
சொல்லா திருப்பே னுயி னெல்லென
விரியுளைக் கலிமான் றேரொடு வந்த
விருந்தெதிர் கோடலின் மறப்ப லென்றும்

கஅ வாடிய பூவொடு வாரலெம் மனையென
வூடி யிருப்பே னுயி னீடா
தச்சா முகவுணரிய வருபவன்
பொய்ச்சூ ளஞ்சிப் புலவே னுலவல் ;

க. இச்செய்யுள் கற்பின்கண் தலைவிகூற்றுப் பெட்பின்கண் வந்ததற்கு மேற்கோள்; தொல். கற்பி. சூ. க. இளம். நச.

(பிரதிபேதம்) * பரத்தையர்க்கவர்களைப், † பிற்றேறித்தினே சொன்று, ‡ ஆகுபெயரை பாகனை, நெருல்.

உஉ பகலாண் டல்கினீ பாத்த வென்றியா
னிகலி யிருப்பே னுயிற் றுன்றன்
முதல்வன் பெரும்பெயர் முறையுளிப் பெற்ற
புதல்வற் புல்லிப் பொய்த்துயி றுஞ்சும் ;

ஆங்க;

உள விருந்தெதிர் கொள்ளவுப் பெய்ச்சூ ளஞ்சவு
மரும்பெறற் புதல்வனீ ரழங்கத் தானைவ
மாங்கவிக் தொழியிலொன் புலவி தாங்கா
தவ்வவ் விடத்தா னலையலை காணிர்
பூங்கண் மகளிர் புனலுல் சிதைத்து
மாய மகிழ்நள் பாத்தைக
கோமான் மோழி கடனாக் தெனவே.

இது தலைவன் ராடோறும் வதுவையயயர்ந்து வந்தால் யான் அதற்குப் பொறேனெ நீ ஊடலின்றி அவன் வந்தபொழுதே எதிர் கொள்ளுகியேன்ற தோழிக்குத் தலைமகள் அதற்குக் காணங் கூறியது.

இதன் பொருள்.

(க) *கீரார் செறுவி னெய்தலொடு கிடிய
கேரித ழாம்ப னிரையிதழ் †கொண்மார்
நீரார் சேயிறை பொலிப்ப வோங்கி
மோரை முகளி தோதை ‡வெரீஇபொழற்
(ங) நாரல் லார்கை யஞ்சிறைத் தொழுதி
யுபர்ந்த பொங்க ||ருபர மேறி
யமர்க்கண் மகளி ÷ரலப்பிய வக்கோய்
தமர்க்குரைப் பனபோற் பல்குரல் பயிற்று
முயர்ந்த =போரி னெலிகல் லூரன்

க. (அ)தரவு தனக்குப் பேரெல்லையாகிய பன்னிரண்டடியை யிகக்து புகின்மூன்றடியான் வருத்திற்கு. "கீரார்.....தெற்றன" என்னும் இப்பகுதி மேற்கோள்; தொல். செய். சூ. கஙஉ. கச். புன்னிரண் டடியின் இகந்தன துள்ளலோசையான் வாராமையின் இலேசினைத் தொண்டாரெனன்பர் போ.

(ஆ)"நீர்ச்செறுவி னீணெய்தல்" பட். கக. இந்நூற்பக்கம் சகக: க-ஆம் குறிப்பும் சஉஉ: க-ஆம் குறிப்பும் பார்க்க.

(பிரதிபேதம்) *கீரே செறுவின், †கொய்மமார், ‡வெரீஇயால். || ஊர்மம், ÷ அலைப்பிய, = போர்வினெலி,

கo புதுவோர்ப் புணர்தல் வெய்ய னுயின்
வதுவை நாளால் வைகலு முஃகிப
னுனேவேன் றோழி நோவாய் நீயென
வெற்பார்த் தறிவாய் தேளினித் தெற்றென

எ - து: நீர் நிறைந்த செய்யில் வளர்ந்த ஒத்த இதழையுடைய செய்தற் பூவோடேயும்பலனுதநீரைத்த இதழையுடையபுக்கோப்பறித்துக்கோடற்குத் தலைமை நிறைந்த சிவந்த நிலம்புழலியன ஒலிப்ப நடுகின்ற வினையாட்டினை புடைய மகளிருடைய ஆரவாரத்திற்கு வெருவியுருத்து ஆல்லீனை புண்டலை புடைய அழகிய நிறகினையுடைய பூவைத்திற்கள் உயர்ந்த மரத்தில் உயர்ந்த தொம்பிலே எறியிருந்து போரைசெய்யுங் கண்ணினையுடைய மகளிர் தம்மை † அலைத்த அந்தோனை அம்மகளிருடைய சுற்றத்தார்க்குக் கூறுவன போலப் பலருமலிலே பலகாலுஞ் சொல்லும் உயர்ந்த நோக்களால் உண்டாகிய ஆரவாரத்தினையுடைய நல்லகாளினை யுடையவன் புதிய பரத்தை யரை மணஞ்செய்தலே எக்காலமும்விரும்பவனையின் அதற்கேற்ப(1)ச்சான்களும் வதுவைக்கு உரிய காலாயிருக்கு மாயின். அவ்வாறுகுந்திருக்கோழி! யான் வருந்துவேன்; நீ அதற்கு முரணாமும் வருந்தாயெனக் கொலி என்னைப் பார்த்து வருந்தமுறுகின்றனை! இனி அவன் செய்தியை நின் மெய்ந்த தெளிபும்படியாகச் சொன்ன. எ - று.

உயர்ந்தாரோடு இழிந்தாரையும் தந்தம் மனைனினின்றும் கொண்டு போந்து வருந்த விதத்து வீரலி முதலிய வாயிலோர் சென்றிந்த ஆரவாரத் தைக் கேட்டு வெருவி அவனை அரிதிற்பெற்று, நுகர்ந்து வருகின்றிருக்கின்ற சேரிப்பரத்தையர் பின்பு அவன் பெருந்துவில்லோர்க்கு எய்தாத இடங் களிலே புலந்திருந்து அவன் வாயில்கள் தம்மை வருந்தின கோலை அவர் சுற்றத்தார்க்குப் பலகாலும் முறைப்பட்டுக்கூறும் பாணனை உள்ளுறையுவமம் கொள்க.

கச (உ) ‡எல்லினை வருகி யெவன் குறிப் தினையெனச்
சொல்லா திருப்பே னுயி ||னெல்லென

கo. நல்ல காளில் வதுவை செய்தல் மரபென்பதை, கலி. கூட: கஉ - ச - ஆம் அடிகளின் குறிப்பாலுணர்க.

உo. "இடை நிலேப்பாட்டே தரவகப்பட்ட மாயினது" என்பதி அகப்படு தல் என்பதற்கு அகம்புறமென்றிரு கூறு செய்தவழி முற்கூற்றினுட் படுதல்; முன், காலமுன்னும்; எனவே ஆறடிமுதல் இரண்டடிகாறும் வரப்பெறுமென்று கொள்க..... பன்னீரடி யிகந்த "தேரார் செறுவின்" என்ற தாவிற்கும் "எல்லிவருதி..... மறைப்ப

(பிரதிபேதம்) * நிறைந்தவிதழை. † அலைக்க, ‡ வெள்ளினையருகி, எல்லிவருகி, || எல்லென.

(க) *வினியுளைக் கலிமான் றேரொடு வந்த
(உ) வினருந்தெதிர் †கோடலின் மறப்ப லென்றும்

எ - து: வதுவை அயர்ந்த‡பின்பு வினைக்கத்தினையுடையையாய் வாராநின்றாய், எம்மை எத்தன்மையாகக் கருதினையெனப் புலர்த்துகூறிப் பின்னர் ஒரு மொழியைக் கூறுதிருப்பேனையின் அது||நீங்கப் புறந்த கழுத்தின்மயிரினையும் மனச்செருக்கினையுமுடைய குதிரை பூண்ட தேரிலே ஆரோரிப்பக் கொண்டு வந்த விருந்தினரை எதிர்கொள்ளுகையினாலே எக்காளும் புலவியை(ங) + மறப்பேன். எ - று.

கஅ வாடிய பூவொடு வாரலெம் மனையென
வூடி யிருப்பெ னையி னீடா

லென்றும்" எனத் தாவகப்பட்ட தாழிசை வருதல் கொள்கவென்பர், ஈச; (தொல். செய். சூ. ஈருச.

க. தனக்கொத்த இல்லறம் இன்னதென்று தலைமகன் மனத்துட்படுதலாகிய "புணர்யறத் தெளிதல்" என்பதற்கு,"வினியுளை.....மறப்ப லென்றும்" என்னும் பருதியை மேற்கோள் காட்டி, இது அவனெடு சொல்லாடாது ஊடியிருப்பேனையின் விருந்து கொண்டு புகுதரும்; அதனால் ஊடலே மறப்பே னென்றமையிற் புணர்யறந்தெளிதலாயிற் றென்பர், பேர்; தொல். மெய்ப். சூ. உச; இ - வி. நூலாரும் இதனையே எழுதுவர்; இ - வி. சூ. நிஅo.

உ. "உருவிலாள னெருபெருஞ் சேனை, யிகமல ராட்டி யெதிர்நின்று விலக்கியவ, தெழுதுவரி கோல முழுமெயு முரீஇ, விருந்தொடு புக்க பெருந்தோட் கணவனொ, டினனுறைவு மரீஇ யொழுக்கொடுபுணர்ந்த, வடமீன் கற்பின் மனையுறை மகளிர், மாதர்வாண் முகத்து மணித் தோட்டுக்குவிப், போது புறக்கொடுத்துப் போகிய செல்கடை, விருந்திற் றீர்ந்தில தாயின் யாவது, மருந்துந் தருங்கொலிம் மாநில வரைப்பெனக், கையற்று நடுங்கு கல்லினு நடுங்கான்" சீலப். இ: உ2ச - உசு.

ஊ. "மறைப்ப லென்றும்" என்று தொல். செய். சூ. ஈருச. நச். உரை மேற்கோளிற்காணப்படு மூலமும்; மறைப்பேனென்று ஒரு பிரதியிற் காணப்படும் உரையு மாகிய பிரதிபேதம், 'விருந்து கண்டொளித்த ஊடல் பள்ளியிடத்து வெளிப்படல்' என்னும் கோவைக்கினவியை கோக்குப் பொருத்தமுடையதாய்த் தோற்றுகிறது; தலித்தொகை எடு ஏல்லாவுறரின் மூலமும் பலவற்றினுரையும் அவ்வாறு இல்லை.

(பிரதிபேதம்) *வினியுழைக்கலிமான் றேரொடும் வந்த, † கொண்டலின் மறைப்பல், ‡ பின் னினக்கத்தினே, || நீக்கத்தேரிலே கொண்டெனத்த, +மறைப்பேன் பன்தலைத் தின் மயி.....கொண்டி வந்தவிருந்து. வாடிய பூவெடி.

(க)தச்சா ருக *வுணரிய வருபவன்
பொய்ச்சூ ளஞ்சிப் புலவே னுதுவல்

எ - து: முயக்கத்தால் வாடிய பூவோடே எம்மனையிடத்து வாராதே கொள்ளென்று கூறி யான் ஊடியிருப்பேனையின் † நீடியாமல், (உ)தன்பொய்ச் சூளுக்கு நாம் அஞ்சும் அச்சமே தான் ‡ ஊடலுணர்த்தும் வழியாக ஊட லுணர்த்துதற்கு வருபவனுடைய பொய்யாகிய சூளுக்கு அஞ்சிப் புலவேனு யிருப்பேன். எ - று.

"அஞ்சியச்சுறுத்தலும்" (கூ)என்றாற்போல (ஈ)அச்சம் அச்சு எண விகார மாய் நின்றது.

உஉ பகலாண் டல்லினு பரத்த வென்றியா
னிகலி யிருப்பே னையிற் றன்றன்
(டு)மூதல்வன் பெருஞ்பெயர் ‖முறையுளிப் பெற்ற
புதல்வற் புல்லிப் பொய்த்துயி லுஞ்சும்

க. "தெய்வ மஞ்சல்" என்னும் மெய்ப்பாட்டிற்கு, "அச்சாருக..... ஆருவல்" என்பது மேற்கோள்; தொல். மெய்ப். சூ. உசை. பே. இ - வி. சூ. நிஅ0.

உ. "என்னே யருளி யருண்முருகு குன்சூளி, னின்னே யருளி லணங்கான் மெய் வேறின்னும், விறல்வெய்போ னூர்மயில் வேனிழ னேக்கி, யறவ ரடிதொடினு மாங்கவை சூனேல், குறவன் மகளரணே கூறேலா கூறே, லேய சூளி னடிதொடு குன்றேறு, வையைக்குப் தக்க மணற்சீர் சூள் கூறல்." பரி. அ: சுநு - எக.

ங. தொல். களை. சூ. உசு. இத்னுரையில் இவர் 'அஞ்சுதல் அச்சென்னு யிற்று' என்று எழுதியிருக்கிறார்.

ச. (அ) "அச்சற் றேம மாகி" (பதிற். கo: உ.) என்புழி, அச்சமென்பது கடைக்குறைந்த தென்று எழுதியிருத்தலும். (ஆ) "கையச் சாக கல்லமிர்து கலந்த" பரி. கூ: கூசு.' (இ) "அச்சிடை யிட்டுத் திரியின்" பழ. உகக. என்பவையும் ஈண்டறிதற்பாலன.

ஞ. "புதல்வன் பொன்மகுடம் பொறுத்தலான், மூதல்வன் பேருவகைக்கு மூத்தவர், னுதவும் பூமகள் சேர வொண்மலர்க், கதவஞ்செய்ய கரத்தி னீக்கினுன்" கம்ப. அயோத். உக. என்பதனுல் முதல்வனென்பது தகப்பனுர் பெயராய் வருதலேயும் "அறைதரு மாந்தா தாமுன மூயிர்த்தோ ரம்பரீ டன்புரு குசை, னெறியுறு புகழ்சார் தருமுசு குந்த னிகழ்த்துமிம் மூவரின் முன்னேன், குறைவறு குணஞ்சாலொருமகனென்னக்குலவி.....பிதாமகனுகு, முறைமையின் புவனஞ் சுவனெனு நாம மூதல னிற்பெறீஇச் சென்றான்" பாக. (பிரதிபேதம்) * புனரிய, † நீட்டியாமல், ‡ ஊடனுண ராதலும் வழி. ‖ முறையுளிபெற்ற.

எ - து: *பரத்தைமையையுடையவனே! பகற்பொழுதெல்லாம் பரத்தையர் மனையிலே தங்கினையென்று கூறியான் அவனுடனே மாறுபட்டிருப்பேனையின்,தான்தன்னுடையதந்தையுடையபெரியபெயரைப்பெறு(க)முறையாற் பெற்றபுதல்வனைத் தழுவிப்(உ)பொய்யாகியதுயிலைக்கொண்டெழுந்தும். எ-று

துஞ்சுதல் - இறந்துபடுதல். 'பகலாண்டல்லினை' எனவே உண்டிக் காலத்தும் வந்திலையென்றாள்.

†ஆங்க, அசை.

,உள (ரூ)விருந்தெதிர் கொள்ளவும் பொய்க்கூ ளஞ்சவு
மரும்பெறற் புதல்வனை முயங்கக் காணவு
‡மாங்கவிர் தொழியுமென் புலவி தங்கா
‖தவ்வவ் விடத்தா னவையவை காணப்
பூங்கண் மகளிர் புனைநலஞ் சிதைத்து
(சு)மாய ÷மகிழ்நன் பரத்தைமை
நோவன் றோழி (டு)கடனமக் கெனவே

(கூ) அரிச்சந்திரன்கதையுரைத்த. க. என்பதனுலும் "வந்தை பெயரினையாங் கொள்வேம்" கலி. அக: ஈடு. எனப் பின்பு இந்நூலுள்ளே வருதலாலும் ஒருவன் தன்தகப்பனுர்பெயரைத் தன்பிள்ளைக்கு இடுதல் மரபென் பதையும் அறிக.

க. உளியென்பது மூன்றும்வேற்றுமைப்பொருள்பயிலதோ ரிடைச்சொல்.

உ. (அ) "நிந்தையெய்த் திரு வினேகப், பூவிய லமளி மேலாப் பொய்யுறக் குறங்குவானே" கம்ப. ஊர்தேடி. உகூ. (ஆ) "பொலங்கொடி காணி னேடும் பொய்த்துயில் கூர்ந்த னன்றே" நைடத. மணம். சஉ.

ஊ. கற்பெண்ணுக் கைகோளில் உணர்தலுக்கு "விருந்தெதிர்.....புலவி" என்னும் இப்பகுதி மேற்கோள். தோல். செய். சூ. கசஅ. பேர். கச்.

சு. (அ) "அன்புடைக் கணவ ழிதகச் செயினும், பெண்பிறக் தோர்க்குப் பொறையே பெருமை" பெருங். (ச) கச: கூஅக. (ஆ) "நிறையும் பெருமையுந் தெரிந்தி லரபெனப், பொறுமையொன் றின்றியே பொங்கு கன்னையை, யறமல குலமிஞர்க் கன்பர் பாற்செயுர், நிறமல னெமென வருணன் றேற்றுவான்" திருக்கழுக்குன்றப். தீர்த்தச்சருக்கம். உசு.

டு. புலையாக் தெளிதலாவது: தனக்கேற்ற அறம் இன்னதெனத் தெளிதல்; "கடனமக்கெனவே யென்றவழி, 'பரத்தைமைகண்டு புலவாது *அணைப்பொறுத்தல்[*]இதனைப் பொத்துவது என்றும் பிரதிபேதம்.

(பிரதிபேதம்) * பரத்தையையுடையனே, † எனவர்கு ஆங்கு அசை. ஈண்டை. ‡ ஆங்கே தொழியும் ‖ அவ்வவிடத்தான், ÷ மகிழ்

எ - து: தோழி! பூப்போலுங் கண்ணையுடைய மகளிருடைய கைசெய்த
நலத்தைக் கெடுக்கும் பொய்வலவ! மழிந்தன துயரத்தைமையாலேயதுவை
யயர்ந்து வந்த மனைதோறும் அவர் புலவியாற் செய்த வடுக்களைக் கண்டிருக்க
நமக்கு முறைமையாயிற்றென்று கருதி யான் கொந்திருப்பேன்; ஆயின் யான்
இவ்வனமாகவும் விருந்தினரை எதிர்கொள்ளுகலேச் செய்கையினலும் அவன்
பொய்யாகிய சூளால் நமக்கு வருத்தம் வருமென்ற அஞ்சுகையினலும் பெற
தற்கரிய புதல்வனை முயங்கிக்கொண்டு வருத்தக்காண்கையினலும் என்
னெஞ்சு புலவியை முழுக்கத் தாங்காது; † தாங்காதபடியாலே அவ்விடத்துப்
புலவி சிட்டுப்போகாநிற்கும்; இதுகாண் யான் உறுகின்ற துன்பமென்றாள்.
எ - று.

இதனுல், பிறர் இகழ்ந்தமைபற்றித் தலைவிக்கு எள்ளல் பிறந்தது.

இது "தாவே தானு நாலடி யிழிபா;யாரிண்‡யா வேறவும் பெறுமே"
(க)என்றதனில் ஏறவுமென்ற உம்மையாற் தெய்வமை பதின்மூன்றடியும்
வருமென்றலிற் புதின்மூன்றடியான் வந்த தாழும் || தாழம்பட்ட நூசை
யின்றித்தரவகப்பட்ட இடைநிலைப்பரட்டும்ஆங்கவென்னுங் X தனிச்சொல்லும்
எழுடிச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. (60)

(61ச.) புணியிழை கோக்கியும் புனலாடப் புறஞ்சூழ்ந்து
மணிவரி தைஇயுகம் மில்வந்து வணங்கியு
நினையுபு வருந்துமிக் கெடுத்தகை திறத்தெல்லு
நினையளென் றெடுத்தோதற் கினையையோ நீயென
வினவுதி யாயின் விளங்கிழாய் கேளினி;

சு செவ்விரல் சிவப்பூரச் சேட்சென்ற பென்றயன்
பௌவநீர்ச் சாய்க்கொழுநிப் பாவைதற் கினைத்தற்கோ
கௌவைநேர யுற்றவர் காணுத கடத்தசொல்
லொவ்வாவென் றுணராய்நீ பொருளிலே யுரைத்ததை;

கஎ ஒடுங்கியாம் புகலொல்லேம் பெயர்தர வவன்கண்டு
நெடுங்கய மலர்வாங்கி நெறித்துத்தந் தினைத்தற்கோ
கிடுந்தவர் விரகின்றி யெடுத்தசொற் பொய்யாகக்
கடிந்தது மிலையாய்நீ கழறிய வந்ததை;

இல்லுறைமகளிர்க்கு இயல்பென்னும் அறத்தினனே' எனக்கூறிய
வாறு கண்டுகொள்க" என்பர், இனம்; தொல். மெய்ப். சூ. உசை.

க. தொல்: செய். சூ. கசுஉ இர்ளுற்பக்கம். சசஎ: க-ஆம் குறிப்புப்
பார்க்க.

(பிரதிபேதம்) * பாத்தமையாலே, † சிக்காத படியாலே, ‡ உயிர்பேற்பவும் படுமே, உயிர்
பேறவும்பெறுமே, உயிர்வென்றைபவும் படுமே, || தாழப்பட்ட, X தனி
நிலைச்சொல்லும்.

கச வரிதேற்றுப் பீயென வணங்கிறை யவன்பற்றித்
தெரிவேய்த்தோட் கரும்பெழுதித் தொய்யில்செய்தணித்தற்கோ
புரிபுரம் மாயத்தார் பொய்யாக வெடுத்தசொல்
நிரிதென வுணராய்நீ யுலமந்தாய் போன்றதை;

எனவாங்கு;

கக அரிதினி யாயிழா யதுதேற்றல் புரிபொருங்
கன்றுகம் வதுவையு ணபர்செய்வ தின்றிங்கே
தானயந் திருந்த திவ்வூ ராயி னெவன்தொலோ
நாஞ்செயற் பால தினி.

இஃது "அந்த நீடினும்" (க) என்றதனுற் கூட்டமுண்மை உணர்ந்த தோழிக்கு உண்மைகூறுதற்கு அந்தீய அச்சம் நீட்டித்துத் தலைவி கூறியது. இது "தீணை*மயக் குறுதலுங்கடிநிலையிலவே" என்னும்(உ)சூத்திரவிதியான் மருதத்துக் குறிஞ்சி வந்தது.

இதன் பொருள்.

புனையிழை நோக்கியும் புனலாடப் புறஞ்சூழ்ந்து
மணிவரி தையிபுகம் மில்வந்து வணங்கிய
நினையுபு வருந்துமிந் நெடுந்தகை திறத்தில்வ
ரினையனென் றெடுத்தேதற் கணிபையோ நீயென
(ரு)வினவுதி யாயிழை விளங்கிழாப் தேளினி

எ - து: கைசெய்த பூண்களோ டிடக்கும் முறைமையிலே டிடக்கத் திருத்தியும், காம நீரிலே விளையாட கமக்கு நேரம் வாராமற் புறத்தே சூழ்ந்து நிரிந்தும் அழகிய தொய்யிலெழுதியும் கம்முடைய சிற்றிலிலே வந்து எவ்வஞ்செழிலேச் செய்தும் கூட்டத்தை † நினைந்து வருந்துகின்ற இத்தப் பெரிய தருஞப்பாட்டையுடையவனிடத்தே கூட்டத்தையுடையனென்று இவ் வூரிலுள்ளார் பலகாலும் கூறுதற்கு நீ அங்ஙனம் ஒருகூட்டத்தையுடையை யோவென்று கேட்கின்றாயாயின், விளங்குகின்ற இழையினையுடையாய்! இப்பொழுது யான் கூறுகின்றதனைக்கேள். எ - று.

க. தொல். களவு. சூ. 20. இச்சூத்திர வுரையிலும் இச்செய்திக்கே இக் குறிப்போடு இச்செய்யுளை இவர் மேற்கோள் காட்டியிருக்கிறார்.

உ. தொல். அகத். சூ. 52. இச்சூத்திரத்தின் இவருரையிலும் மருதத்துக் குறிஞ்சி மயங்கியதற்கு இச்செய்யுள் மேற்கோள்.

ரு. "வினவுதி யாயிழை வேண்மதி" ஆசிரிய. 'ஒளிவிடு'

(பிரிபேதம்) * மயக்குறுதலும், † நினைந்தும் என்க.

(க)செவ்விரல் சிவப்பூரச் சேட்சென்ற பெண்றவன்
பௌவநீர்ச் (உ)சாய்க்கொழுதிப் பாவைதந் தணைத்தற்கோ
*கௌவைநோ யுற்றவர் காணுது கடுத்தசொல்
லொவ்வாவென் றுணராய்நீ யொருநிலையே (ங)புரைத்ததை.

எ - து: அலர்தூற்றுத லில்லாதபொழுது வருத்தமுற்றிருந்த மகளிர் இது தகாதென்று ஆரயாதே ஐயுற்றுக் கூறயசொல் இவட்குப் †பொருந்தா வென்று அறியாயாய் நீயும் அவர்கள் சொன்ன நிலையிலேசொன்னது, சிவந்த விரல் மிகச் சிவப்புப் பரக்கும்படியாக நெடும்பொழுதுநின்று வாங்கினு மென்றுசொல்லி அவன் கடல் நீர் வந்து ஏறின கழியிடத்துத் தண்டான் தோரையைப் பறித்துக் கிழித்துப் பாவைபாக்கித் தந்த அச்சிற்றுபகாரத் திற்கோ? எ - று.

நீர், ஆகுபெயர். "ஒன்றேவேறே" (சு) என்பதனுல் வேற்றுநிலமாயிற்று. மருதத்திற் றலைவி நெய்தலில் சேர்பட்டமையின்.

ஓடுங்கியாம் புகலொல்லேம் பெயர்தர வவன்கண்டு
நெடுங்கய மலர்வாங்கி நெறித்துத்தந் தணைத்தற்கோ
‡விடுந்தவர் விரகின்றி யெடுத்தசொற் பொய்யாகக்
கடிந்தது மிலையாய்நீ கழறிய (ரு)வந்ததை

எ - து: தீயரென்று எல்லாருங் கைவிடப்பட்ட மகளிர் அவனை யுறுதல் தீதென்று உணரவல்ல விரகின்றிப் பல்காற் கூறிய சொல் பொய்யாகக் கெடும்படி தவிர்த்தலுமிலையாய் நீ என்னைக் கோபித்தற்கு வந்தது, யாம் உட்புகுதலைப்பொருந்தேமாய்நீள அவன் அதனைக்கண்டு செய்ய

க. (அ) "ஒலுமுழ் நெடுஞ்சுவர் நாள்பல வெழுதிச், செவ்விரல் சிவந்த..... .....அரிவையர் பதிம். சுஅ: சுஎ-சூ., (ஆ) "சேந்தக ணிதழுஞ் செவ்வந்து நீருக" கம்ப. மாரீசன்வதை. சூஅ. (இ) "சிவந்த நளிர்க்கை சிவப்பூர" பாக, உருக்குமிணி யூடதீர்த்த. உ.

உ. "தாய்தாட் பிள்ளை தந்து கொடுத்தும்" கல். சுசு: உச.

ங. "வள்ர்ந்ததை" என்பது வினைத்திரி சொல்லென்பதற்கு 'உரைத்ததை' என்பது மேற்கோள்; சீவக. உஉசு - உரை.

ச. தொல். களவி. சூ. உ. இச்சூத்திர வுரையில் "செவ்விரல்..... உரைத்ததை" என்னும் பகுதியை மேற்கோள்காட்டி 'இது மருதத்திற் றலைவி களவொழுக்கங் கூறவாள் பௌவநீர்ச் சாய்ப்பாவை தந்தா ளெருவனென செய்தனிலத்தெதிர்ப் பட்டமைகூறியது' என்பர். ரச்.

ஞ. வந்ததை யென்பது வினைமுற்றாக வருதல். சுந்த. தேவகிரி. உஉ.

(பிரதிபேதம்) * கௌவையோவுற்றவர். † பொருந்தாதென்று. ‡ விடுத்தவர்.

யத்தின் மலரைப் பறித்துப் *புறவிதழையொடித்துத் தந்த அச்சிற்றுபகாரத் திற்கோ? எ - று.

தந்த, விடுத்த: இவை விகாரம்.

௪ச ஊரிதேற்றூப் நீயென வணங்கிறை யவன்பற்றித்
தெரிவேய்த்தோட்கரும்பெழுதித் தொய்யில்செய் தனைத்தற்கோ
பூரிபுரம் மாயத்தார் பொய்யாக வெடுத்தசொல்
(க)†லூரிதென வுணராய்நீ ‡(உ)யுலமந்தாய் போன்றதை

எ - து: காவல்புரிந்து காக்கின்ற நம் ஆயத்தார் காவல் ||பொய்யாய்ப் போம்படி இவ்வூரார் பலகாற் கூறியு கூற்றை நீ பொய்யென்றுணராயாய் இவட்கு உரித்தென்றுகருதி —அலமந்தாரைப்போலே இருந்தது, நீ தொய்யி லெழுத அறியாயென்று கூறி வ்ளைந்த முன்கையை அவன் பிடித்துத் தெரிந்தவேய்போலுந்தோளிலே கரும்பைழுதித்தொய்யிற்குழம்பான்(கூ)மற் றும் எழுதுதற்கு உரியனவற்றை எழுதின அசிற்றுபகாரத்திற்கோ? எ - று

செய்த, உரித்து: இவை விகாரம்.

∴எனவாங்கு

எ - து: என்றியான் நினக்குக் கூறும்படியாக. எ - று.

ஆங்கு, அசை.

௪க அரிநினை யாயிழா யதுதேற்றல் பூரிபொருங்
கன்றுநம் வதுவையு ணமர்செய்வ தின்றீங்கே
தானயந் திருந்த திவ்வூ ராயி னெவன்கொலோ
நாஞ்செயற் பால தினி.

எ - து: ×நின்னெஞ்சிடத்து நிகழ்ந்த இக்காரியம் ஆயிழாய்! இனித் தெளிவித்தல் அரிது; இனி நம்முடைய வதுவையிடத்தே நஞ் சுற்றத்தார் சேரவிரும்பி அன்று செய்யுங் காரியத்தை இன்று இவ்விடத்தே இவ்வூர் விரும்பி யிருந்ததாயின் அதற்கு நாம் + செய்தற்பருதியையுடைய காரியம் எக்காரியம்? =எ - று.

க. "உரிது" குறிஞ்சீ. கடி; பரி. கூ: கஉ; கஅ: டுடு; கலி. கூ: எ; அகம். ஙகூ: உ0. சிலப். உ: ச0.

உ. "உலமால், சொற்புற நடையாற் கொள்க" என்பர், நச்; தொல். உரி. சூ. கஉ. கலி. அ: உ: ககஙு: ஙு; கஙுஎ: டுi; கசடு: ச; அகம். கஅ: கஙு: ஙுகடு: க0. கம்ப. மீட்சி. உஉ ச.

ஙு. "தரும்பும் வல்லியும் பெருந்தோ னெழுதி" சிலப். உ: உக.

(பிரதிபேதம்) * புறவிதழொடித்து, † உரித்தென, ‡உலம்வந்தாய், || பொய்யாய்ப்படி, ÷ உலமந்தாரை, ∴ ஆங்கசை. என அரிநினி, × என்றியான் நினக்கும் கூறும் படியாக நின்+ செய்தற்குப் பருதியை, = எனத்தினி தோழிக்குக்கூறிஞன் பன்னாறு.

இது தலைவி தோழிக்குக் கூறியது.

"பன்னூறு வகையினுந் தன்வயின் வரூஉ, நன்னய மருங்கி னூட்டம் வேண்டலிற், றுணைச்சுட்டுக் கிளவி கிழவிய தாகுந், துணையோர் கரும மாக வான" (க) என்பதனுன் வினவுதியாயினென நாட்டம் நிகழ்த்தவாறும் சரிதகத்துக் கூட்டங் கூறித்துணைச்சுட்டுக் *கிளவி கிழவியதாயவாறுங்காண்க.

இதனுல், தலைவிக்கு அச்சம் நிகழ்ந்தது. இதனைத் தோழி கூற்றாகி உரைப்பாரும் உளர்.

இஃது † ஆசிரியத்தளையும் கலித்தளையும் விரவி ஐஞ்சீரடி வந்த வெள்ளைச்சுரிதகமும் பெற்றவொத்தாழிசைக்கலி. "வெண்பாவியலினும் பண்புற முடியும்"(உ) என்பதனுல் வெள்ளைச்சுரிதகத்தாலிற்றது. இது "வெண்டளை விரவிய மாசிரியம் விரவியு, மைஞ்சீ ரடியு முளவென மொழிப" (ங) என்பதனுன் ஐஞ்சீரடியும் வந்தது. (கக)

(எஎ.) இணையிரண் டிபைத்தொத்த மூகைநாப்பட் பிறிதியாதுந்
துணையின்றித் தளிவிட்ட தாமரைத் தனிமலர்
திருமுக மிறைஞ்சினள் வீழ்பவற் ஹினபவ
ளிருமிதர் மழைக்கண்ணீ ரலர்முலைமேற் றெறிப்பபோற்

நு றகைமலர்ப் பழனத்த புள்ளொற்ற வொசிந்தொல்கி
மிகுகனி சேர்ந்தவம் மூகைமிசை யம்மல
ரகவித்தத் தண்பனி யுறைத்தரு மூரதேள் ;

அ தண்டளிர்த் தகைபூத்த தாதெழி னலஞ்செலக்
கொண்டுநீ மாறிய களின்பெறல் வேண்டேன்ம
னுண்டாதல் சாலாவென் னுயிர்சாத வுணர்ந்துநின்
பெண்டெனப் பிறர்கூறும் பழிமாறப் பெறுகற்பின்;

கஉ பொன்னெனப் பசந்தகண் போதெழி னலஞ்செலத்
தொன்னல மிழந்தகன் டுயில்பெறல் வேண்டேன்ம
னின்னணங் குற்றவர் நீசெய்யுங் கொடுமைக
ளென்னுழை வந்துகொந் துரையாமற் பெறுகற்பின்;

க. தொல். கள. சூ. கூஉ. இச்சூத்திரத்தின் இவருரையில் "புனையிழை நோக்கியுமென்னும் மருதக்கலியுள் 'வினவுதியாயின்' என நாட்டம் நிகழ்ந்தவாறும் அதன் சுரிதகத்துக் கூட்டமுணமை கூறுதலின் துணைச்சுட்டுக் கிளவி கிழவியதாயவாறுங் காண்க" என்பது காணப் படுகிறது.

உ. தொல். செய். சூ. எஎ. ங. தொல். செய். சூ. கூஉ.

(பிரதிபேதம்) * கிளவியதாயவாறும், † ஆசிரியத்தளையும் விரவி ஐஞ்சீரடியும்.

கசு மாசற மண்ணுற்ற மணியேசு மிருங்கூந்தல்
வீசேர்ந்து வண்டார்க்குங் கவின்பெறல் வேண்டேன்ம
னேய்சேர்ந்த திறம்பண்ணி நின்பாண னெம்மனை
நீசேர்ந்த வில்லினுய் வாராமற் பெறுகற்பின்;

ஆங்க;

உக கடைஇய நின்மார்பு தேயல மென்று
மிடையு நிறையு மெனிதோநிற் காணிற்
கடவுபு கைத்தங்கா நெஞ்செனுந் தம்மோ
டுடன்வாழ் பதையுடை யார்க்கு.

இது பரத்தையர் *சேரியிற்சென்றுவந்ததலைவனோடு ஊடிய தலைவி ஊடறீர்கின்றாள் கூறியது.

இதன் பொருள்.

(க) இணையிரண் டிடைக்கொத்த முகைநாப்பட் பிறிதியாதுந்
தணையின்றித் தளைவிட்ட †காமரைத் தனிமலர்;
திருமுக மிறைஞ்சினள் வீழ்ப்பவற் கினைய
(உ) ளுரிமுதற் (ங) முழைத்தகண்ணி ரலர்முலைமேற் றெறிப்பபோற்
நிறைமலர்ப் பழனத்த புள்ளொற்ற வொசிந்தெல்லி
மிதவனி சேர்ந்தவம் முகைமிசை யம்மல
ரகவிதழ்த் தண்பணி யுறைத்தரு மூரதேன்;

எ - து: தாமரையிற் றனித்த மலர்கள் இரண்டு தம்மிற் சேர்த்து ஒப்பொத்த மூகைகளுக்கு நடுவே நின்று †வேரொரு பூச் சிறிதுந் தம் அருகு சேர்தலின்றி முறுக்கு ‡அவிழ்ந்தன; தான் விரும்பப்பட்டவனுக்கு அழகினையுடைய முகங் கவிழ்த்து அழுகின்றவளுடைய செவ்வரியினையுஞ் செருக்கினையுங் குளிர்ச்சியினையுமுடைய கண்ணின் நீர் அடிக்கொண்ட முல்லைமேல்

க. இவ்வடி இணைமோனைக்கு மேற்கோள்; தொல். செய். சூ கூ. நச்.

உ. இவ்வடி பொழிப்பு மோனைக்கு மேற்கோள். தொல். செய். சூ. கூ. நச்.

ங. (அ) "கண்ணீர்நிறுத்தல்செல்லாண், முல்லைமுக னினைப்ப" புறம். கசகூ: கங - கச. (ஆ) "முல்லைமேல், வடிக்கேழ் மலர்கெடுக்கண்வார்புயலுங் காலும்" சீவக. உ-சகூ. (இ) "வாருங் கண்ணீர் வளர்கொங்கை வரைமே லருவி யெனவீழ" வில்லி. சுதபோர். உகூ. (ஈ) "மைக்க ணில வாலி சித்த வைகிய, மங்கை மென்மு லேத்த டத்து" நைடதம். கைக்கிளை. க.

(பிரதிபேதம்) * சேரிச்சென்றுவந்தகணவனோடு மூடிய, † வேரொரு பூக்கள், ‡அவிழ்ந்தனவென முற்றாயுரைக்க. அப்பூக்கள் அழகினை.....மணமே.

வீழ்வன * போல, அப்பூக்கள் அழகிலோயுடைத்தாகிய மலர்களோயுடைய பழனத்திடத்தனவாகிய பரவைகள் வந்து தாக்குமிகவுஞ் சாய்ந்து வளைந்து மிகவும் இணைந்த † அந்த முகைகளின்மேலே தம்முடைய உள்ளிதழினின்ற நீரைத் துளித்தலைத் தருகின்ற ஊரனே! ‡கேள். எ - று.

அம்மலர் புள்ளொற்ற ஒல்கி அம்முகைகளின்மேலே தண்பனி யுறைத் தரும் ஊர என்றதனுற் சேரிப்பரத்தையர் நின்மனைவியரை இகழ்ந்து வந்து அவர்மனை தோறும் நின்னைத் தேடுகையினாலே அவர் வருந்தி அழுகின்ற ஊரவெனத் தலைவி புலந்து கூறினாள்.

அவிழ்ந்தன என வினைமுற்றாக உரைக்க.

அ தண்டளிர்த் தகைபூத்த தாதெழி னலஞ்சிதலக்
(க)கொண்டுநீ மாறிய கனின்பெறல் வேண்டேன்ம
ணுண்டாதல் சாலாவென் றுயிர்||சாத லுணர்ந்து(உ)நின்
(ங)பெண்டெனப் பிறர்கூறும் பழி மாறப் பெறுகற்பின்

எ - து: உண்டென்று கூறுதல் அமையாத் என்றுயிர் அற்றிலேயினும். நில்லாமற் சாதலே உணர்ந்துவைத்தும் நின் பெண்டென்ற பிறர்கூறும் பழி போகப்பெறின், குளிர்த்த(உ)தளிரிடத்தே வீழ்ந்து அழகுபொலிவுபெற்றதாது

க. (அ)"பிறனைக், கொலையொக்குங் கொண்டுகண்மாறல்" நாலாயிரம். அ.
(ஆ)"கொண்டுகண் மாறல் கொடுமையிற் றவறாது" முதுமொழி. ஙஎ.

உ. (அ) "சுட்டுமுதலாகிய வுண்ணும் ஆனும், அவைமுதலாகிய பெண்டென் கிளவியும்" என்பதன் விசேடவுரையில் என்னை, 'நின், பெண்டெனப் பிறர் கூறும் பழிமாறப் பெறுகற்பின்' எனச் சான்றோர் கூரலின் பெண்டென்பதே பாடமென்றும் அப்பெண்டென்னுஞ் சுட்டு, "கடி சொல் லில்லே" என்பதனுல் பெண்டென நின்றது என்றும் கூறுவர் நச்; தொல். பெயரி. சூ. க. (அ) 'கோல்காப்பியர் காலத்தே பெண் டென்னும் சொல் வண்டென்பது, "வண்டும் பெண்டு மின்னெடு வெணும்" "பெண்டென் கிளவிக் கன்னும் வரையார்" தொல். குற். சூ. கடு, கசு. என்பவற்றுல் வினங்குகின்றது. இச்சொல் பிறவற்றிலும் வந்துள்ளதேனும் ஐங்குறுநூற்றில் மிக வந்துள்ளது. (இ)'இன்னன' என்பதனுல் பெண்பாற் பெயர்களுள் பெண்டென்பது மொன்றென்று கூறி அதற்கு, "நின் பெண்டென ....பெறுகற்பின்" என்பதனை மேற்கோள்காட்டுவர், இ - வி. உரைகாரர்; இ - வி. சூ. கஎஅ.

ங. ஒரூஉமொனைக்கு இவ்வடி மேற்கோளாகக் காட்டப்பெற்றிருக்கிறது; தொல். செய். சூ. கூஉ. நச். வேறுசிலர் கருத்தின்படி இது பிழைக் கதுவாய் மோனையாகும்.

ச. இச்சுரப்பகம், கடுஅ: ங - ஆம் குறிப்பில் இவ்விடத்துக்கு ஒத்தன ஒப்புநோக்கற்பாலன.

(பிரதிபேதம்) * போல் அம்மலர் புனனொற்ற.....கூறினுன், தண்டளிர்த் † அம்முகை களின் ‡கேளெனக். தான் விரும்பப்பட்ட. || சாய்தலுணர்ந்து.

போலும் எழிலேயுடைய மூமையுஞ் சுணங்கும் எம்மிடத்தினின்றும் போம்படியாக வாங்கிக்கொண்டு நீ பின்பு ஒருகாலுக்தாராதலிட்ட அழகை யான் பெறுதலே விரும்பேன்; அதனாற் பெற்றதென்? பெண்டென்னும் பெயர் போகாதாயிற்றே! எ - று.

(க) பெறுகற்பின், வினைத்திரிசொல். மன், கழிவு.

சாதலுணர்ந்துமென்பது நெடுங்காலங் கைவிட்டமை தோன்ற நின்றது.

கஉ (உ)பொன்னெனப் பசந்தகண் போதெறி னலஞ்செலத்
தொன்னல மிழந்தகண் டுயில்பெறல் வேண்டேன்ம
(ங)னின்னணங் குற்றவர் நீசெய்யுங் கொடுமைக
ளென்னுழை வந்துகொ(அ)துரையாமற் பெறுகற்பின்

எ - து: •கண்கள் பூவினது அழகையுடைய நலம்போம்படியாகப் (ஙு)பொன்போலப் †பசந்தன; நின்னுல் வருத்தமுற்ற பரத்தையர் நீ செய்யுங் கொடுமைகளே என்னிடத்தே வந்து வெறுத்துச்சொல்லாமையை யான் ‡பெறின், இயற்கைநலத்தையும்இழந்தஅக்கண் துயில்பெறுதலேவிரும்பேன்; அதனாற் பெற்றதென்? அங்ஙனம் என்னை இகழ்ந்து கூறுதல் ||தவிராரே! எ - று.

க. 'பெறுகற்பின்' என்பதற்குப் பெறின் என்னும் பொருள் இங்கே காணப்படுகின்றது. இதைப்போலத் திருக்குறளிற் 'செல்கற்பின்' ஏன ஒரு வாய்பாடுகாணப்படுகின்றது; அதற்கெழுதியுள்ளபொருளே நோக்க அது 'செல்கிற்பின்' என்றிருக்க வேண்டுமெனத் தோற்றுகிறது. இஃது ஆராய்ச்சிக்பாலது.

உ. இந்நூற்பக்கம் சசுக: ங-ஆம் குறிப்புப்பார்க்க.

ங. (அ)பரத்தையர்தாமுற்ற துன்பத்தினைக்கூறக்கேட்டதலைமகன் அதனைப் புலவியின்கண் தலைமகற்குக் கூறியதற்கு "நின்னணங்கு..... பெறுகற்பின்" என்பது மேற்கோள்; தொல். பொருளி. சூ. ங. 'தம்முறு விழுமம்' இளம்.

(ஆ) "நோதக்கா யெனநின்னை நொந்தீவா ரில்வழி" கலி. எங: க.

ச. (அ) "பிறவாம னல்கு பெரிதோய்" கம்ப. காகபாச. உடுஅ. (ஆ) "தற்பழி யாமலுஞ் சான்றோ ரவாணன் றமிழ்த்தஞ்சைநங், கற்பழி யாமலுங் காரணமாக" தஞ்சை. உஉள. (இ) "என்சொல் வழு வுறுமல் வேண்டு மென்ன" வில்லி. பதினென்காம். கஎ. (ஈ) "வனைத் திழுத்துக் குட்டா மலுக்கு" நளிப்படாடல். என்பவற்றாலும் 'மல்' எதிர்மறைத் தொழிற்பெயர் விகுதியாய் வருதல் அறியலாகும்.

ஞ. "பூப்போ லுண்கண் பொன்போர்த் தனவே" ஐங். கக.

(பிரதிபேதம்) * உரையாமை பெறு, † பசந்தனவென முற்றுக்க, இயற்கை லத்தை பிழந்த அக்கண்னெனச்சட்டச்சியுரைக்க. நின்னுல், ‡ பெறின் அக்கண் துயில்பெறுதல். || தவிராரேயென்க. மாசா.

பசந்தனவென மூற்றுக்குக. இயற்கை நலத்தையும் இழந்த அக்கண் ணைச் சுட்டாக்கி உரைக்க.

கசு (அ)மாசற (உ)மண் ணுற்ற (ங)மணியேசு மிருங்கூந்தல்
(ச)வீசேர்ந்து வண்டார்க்குங் கவின்பெறல் வேண்டேம்ம
(ஞ)னெய்சேர்ந்த திறம்பண்ணி நின்பாண னெம்மினை
நீசேர்ந்த வில்லினுப் வாராமற் பெறுகற்பின்

எ - து: நின்னுடைய பாணன்(சு)நோவுசேர்ந்த திறப்பண்ணைப்பண்ணி எம்மூடைய மனையிடத்தே நீ சென்று சேர்ந்த பரத்தையர் மனையை என்னைக் கேட்டு வாராதிருத்தலே யான் பெறின், மாசறக் கழுவுதலுற்ற நீலமணியை நீ எனக்கு ஒல்வாயென்று ஏசுங் கரியகூந்தல் பூவணிந்து வண்டுகள் ஆரவாரிக் கும் அழகைப்பெறுதலே யான் விரும்பேன்; அதனைப் பெற்றதென் ? அவன் வினவுதலைத் தவிரானே. எ - று.

எம்மினை, *வேண்டேனென்ப, ஒருமைப்பன்மைமயக்கம்.

ஆங்க, அசை.

க. "நெய்யொடு துறக்த மையிருங் கூந்தன், மண்ணுறு மணியின் மாசற மண்ணிப், புதுமலர் கஞல" புறம். கசஎ: சு - அ.

உ. "மண்ணுர் மணியின் வணர்குரல் வண்டார்ப்ப" பரி. கo: அக

ங. "அணிக்கயிற் றவழ்ந்த மணிக்குர லேம்பால்" "நீல மாமணி நிமிர்ந்தி யன்றன்ன, கோலங்கொண்ட குழலெறிக் கூழை" "மணியிருங் கூந் தல்" பெருங். (க) சo: கதிஅ, (ர) கதி: கo - கக. (ங) க: கஙிங.

ச. (அ) "அருந்துய ருழக்குநின் றிருந்திழை யரிவை, கலிமயிற் கலாவங் கால்குவித் தன்ன, வொலிமென் கூந்தற் கமழ்புகை கொளீஇத், தண் கமழ் கோதை புனைய" (ஆ) "புணர்ந்தோர் பூவணி யணைய" புறம். கசக: எ-கo; ககச: ங. (இ) "பெறுக நின் செவ்வி பெருமகன் வந்தா, ன்றுமலர்த் கூந்த னளணி பெறுகென" சிலப்.உ: உ: கதி - உகசு. எனவும் (ஈ) "போதில் வறுங் கூந்தல்" கலி. அo: உங. (உ) "தன்ன வன் றணந்த காலைப், பூமலும் புனைதலின்றி" சீவக. கதிகஅ. எனவும் வருவன இங்கு அறிதற்பாலன.

ஞ. "நோய் சேர்ந்த.....பெறுகற்பின்" என்பது தற்பின்கண் மடந்தை வரைத்தலென்னும் மெய்ப்பாட்டிற்கும் (தொல். மெய்ப். சூ. ககஉ. பேர்.) ஊடலுக்கும் (தொல். செய். கஅஎ. போ, கசி.) மேற்கோள்.

க. பரி. பதின்மூன்றும்பாடலின்பண் நோதிறமென்றிருத்தலும் சீலப். ச: எஞ். "பாண்வாய் வண்டு நோதிறம்பாட" என்றிருத்தலும் இங்கு ருதற்பாலன.

பிரதிபேதம்) * வேண்டேனென்பது.

எ - து: "தம்முறு விழுமம் பாத்தையர் கூறினு, மெய்ம்மையாக வவர்வயி னுணர்ந்து, தலைத்தாட் கழறறம் † மெனநிரம்பொழு தின்றே, மலிதலு மூடலு மவையலங் கடையே" (கூ) என்பதனுற் பரத்தையர் முன்னான்மையின் மலிதலும் ஊடலும் ‡நிகழ்த்துதலேக்கழிஞள். நின்னைக் காணில் என்னை உன்னிடத்தே செலுத்தும் தாரமும் நினவிடத்தே ||தங்கி வருத்துநெஞ் சென்று சொல்லப்படுங் தடமோடி ஒன்றும் வாழப்படுகின்ற உட்பகையை யுடையார்க்கு முன்னர் எம்மை நின்மேல் வீழ்வித்த நின் மார்பைக் கூடக் கடவேமல்லேமென்று +கருதும் (ச) நிறையென்னுங குணத்தையும் பெறுத லெளிதோ? அஃது அரிதன்றோ? என ஊடனீர்த்தான். எ - று.

இடையும் - நெஞ்சென்க. நிறையுமென்னும் உம்மை, சிறப்பு.

இதனுள், தலைவிக்குப் புணர்ச்சிபுவகை பிறந்தது.

×"அருணமுந் துறுத்த வண்டுபொதி கிளவி, பொருள்பட மொழிதல்கிழ வோட்கு முரித்தே."(ஙு)என்பதனுல் =‘வாயாமற் பெறுகற்பின்’ என்ற தலைவி ‘நீர்தாணன்ற கடவுபு கைத்தங்கா நெஞ்சு’ என அவனுற்றுமை கண்டருளி நெஞ்சு எவல் ∴செய்தென வேற்றுப் பொருள்பயப்பத் தன் அன்பினைத் தரத்தவாறு காண்க.

இது வெள்ளோச சுரிதகத்தா லிற்ற ரத்தாழிசைக்கலி. (கூ)

க. பெயரொச வினைத்திரி சொல்லுக்கு, ‘கடையிய நின் மார்பு’ என்பது மேற்கோள்; தொல். எச்ச. சூ. கூ. நச.

உ. (அ) “அவர்நெஞ் சவாவாதல் கண்டு மெவனெஞ்சே, நீயெமக் காகா தது”குறள கஉகக. என்பதும்(ஆ)“அறைபோகு நெஞ்சுடை யார்க்கு” (கலி. சுஎ: உக) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

ங. தொல். பொருளி. சூ. சக. இசருத்திரத்தின் இவருரையில் “பொன் னென .. .. .. உரையாமற் பெறுகற்பின்”என்பதுமேற்கோளாக ‘இது பரத்தையர்முன்னவனமையின மலிதலும் ஊடலும் நிகழ்த்து தலைத் தாட்கழறியது.’ என்னும் திருத்தமான குறிப்புக் காணப்படுகின்றது.

ச. இக்நூற பக்கம் சகக சு - ஆம் குறிப்புப் பார்க்க.

ஞ. தொல். கற்பி சூ. உ0 இசருத்திரத்தின் இவருரையிலும் இப்பாட்டு மேற்கோளாக இக்குறிப்பு, சிறிது வேறுபடக் குறிக்கப்பெற்றனது.

(பிரதிபேதம் *தடையிய, †எனப்பொழுது,‡நிகழ்த்துதலேக்கழிஞன்,||தங்கிவருத்து நெஞ் சென்று +கருதுமிடனிறை, + நெஞ்சென்கட்டே. × அருணமுதுறுத்த வயாமை பெறுகற்பின். ∴ செய்தென வென்றே.

(எஅ.) பன்மலர்ப் பழனத்த பாசடைத் தாமரை
யின்மல ரிமிர்தூதுங் தூணிபுண ரிருந்தும்பி
யுண்டுறை யுடைந்தபூப் புனல்சாய்ப்பப் புலந்தூடிப்
பண்புடை நன்னட்டுப் பதைதலை வந்தென

நி வதுதைவிட் டகன்றெரீஇக் காக்கிற்பான் குடைநீழற்
பதிபடர்ந் திறைகொள்ளுங் குடிபோலப் பிறிதுமொரு
பொய்தைதேர்ந் தலமரும் பொழுதினுன் மொய்தப
விறைபதை தணிப்பவக் குடிபதிப் பெயர்ந்தாங்கு
நிறைபுன லீங்கவந் தத்தும்பி யம்மலர்ப்
பறைதவிர் பசைவிடூஉம் பாய்புன னல்லூர ;

கக நீங்குங்கா னிறஞ்சாய்ந்த புணருங்காற் புகழ்பூத்து
நாங்கொண்ட குறிப்பிவ ணலமென்னுந் தகையோதா
னெரியிதழ் சோர்ந்துக வேதிலார்ப் புணர்ந்தமை
கரிகூறுங் கண்ணியை யிங்கெம்மில் வருவதை ;

கஎ சுடர்நோக்கி மலர்ந்தாங்கே படிற்கூம்பு மலர்போலென்
றெடர்நீப்பிற் றெருமிவ ணலமென்னுந் தகையோதா
னலர்நாணிக் கரந்தேநாப் கைம்மிகப் பிறர்கூந்தன்
மலர்நாறு மார்பினை யிங்கெம்மில் வருவதை ;

கஅ பெயினந்தி வறப்பிற் சாம் புலந்திற்றப் பெயல்போல்யான்
செலினந்திச் செறிற்சாம்பு மிவளென்னுந் தகையோதான்
முடியுற்ற கோதைபோல் யாம்வாட வேதிலார்
தொடியுற்ற வடுக்காட்டி யிங்கெம்மில் வருவதை ;

ஆங்க;

உச ஐய வமைந்தன் றணைத்தாகப் புக்கீமோ
வெய்யாரும் வீழ்வாரும் வேறுகக் கையின்
முகைமலர்ந் தன்ன முயக்கிற் றகையின்றே
தண்பணி வைக லெமக்கு.

இது பரத்தையர் *சேரியிற் சென்று வந்த தலைவனோடு ஊடிய காமக் கிழத்தி ஊடறீர்கின்றன் கூறியது.

இதன் பொருள்.

(பிரதிபேதம்) * சேரிச்சென்று.

பன்மலர்ப் பழனத்த (க)பாசடைத் தாமரை
யின்மல ரிமிர்பூதுந் துணைபுண ரிருந்தும்பி
யுண்டுறை யுடைந்த பூப் புனல்சாய்ப்பப் புலர்தூடிப்
பண்புடை (உ)நன்னாட்டுப் பகைதலை வந்தென
நி வுதுதைவிட் டகன்றூரீ இக் காக்கிற்பான் குடைநீழற்
பதிபடர்ந் திறைகொள்ளுங் குடிபோலப் *பிறிதுமொரு
பொய்கைதர்ந் †தலாரும் பொழுதினுன் மொய்தப
விறைபதை தணிப்பவக் (ரு)குடிபதிப் பெயர்தங்கு
நிறைபுன னீங்கவந் தத்தும்பி யிமலர்ப்
(சு)றைதனிர் (டு)பகைவிடூஉப் (கூ)பாய்புன னல்லூர

எ - து: பலமலர்களையுடைத்தாகிய மருதநிலத்திடத்தனவாகிய பசிய இலைகளையுடைய தாமரையினது கட்கினிய மலரை ஆரவாரித்துச் சென்று

க. "பாசடைத் தாமரை" கலி. எசு: எ.

உ. ஒரு நாட்டுப் பகைவராற் றன்பம் வந்துழி அங்குள்ள குடிகள் அந்நாட்டைக் கைவிட்டுச் செல்லுதல்மரபு: (அ)"பதியெழ வறியாப் பழங்குடி செழீஇ" மலைபடு. சஎசு. (ஆ) "பதியெழு வறியப் பழங்குடி செழிய"சிலப். க: கசு என்பவையும் 'பதியெழு வறியா-பதியினின்றும் பெயர்தலை யறியாத; எனவே பகையின்மை கூறிற்று' என்று அடியார்க்கு நல்லாரெழுதியிருப்பதும் (இ) "அதிரார்சிறப்பின் மதரை மூதூர்" (சிலப். பதி. ஙக) என்பதி 'அதிரார்சிறப்பு' என்பதற்கு, 'பகைவரால் அதிர்ச்சியில்லாத சிறப்பு' என்று அரும்பத வுரையாசிரியரும், 'பகைவரால் நடுக்கமில்லாத சிறப்பு' என்று அடியார்க்கு நல்லாரும் எழுதியிருப்பவையும், (ஈ) "ஆனெலா மழிந்த தேரு மானேயு மாடன் மாவு, காளெலா மெண்ணி னுலுக் தொலிவிலா காதினின்றித், தாளெலாங் குலைய வோடித் திரிவன தாக்க லாற்றுங், கோளிலா மன்ன ஞட்டிற் குடியெனக் குலவ கண்டான்" கம்ப. பிமாத்திர. கசஎ. என்பதும் ஈண்டு அறிதற்பாலன.

ரு. "சூறை யாட்டயர் வார்கொலை வெய்தலும், பாறி னேர்படர்ந் தாக்குப் படுகோ, கோறல் செய்தவர் நீக்கலுங் கொம்மெனச், சேற சூவயம் செறறின புள்ளெலாம்" நணிகைப். திருநாட்டுப். கஉஉ.

சு. பறை - பறத்தல்; இஃது ஆகுபெயராய்ப் பறவைக்கும் வரும்.

டு. அகை, மூதனிலைத் தொழிற் பெயர்.

கூ. (அ) புரய்தலென்பது பரத்தலாகிய குறிப்புணர்த்தி வருதற்கு, 'பாய் புனல்' என்பது மேற்கோள். தொல். உரிச். சூ. கடு. சே. சூ. டுo.

(பிரதிபேதம்) *பிறிதமோர், † அலம்வரும்.

ஊதுத் திணையைப்புணர்ந்த கரிய தும்பி பலரும் நீர் உண்ணுந் துறையில் அலர்ந்த பூவைப் பெருகிவந்த நீர்சாயப்பண்ணுகையினாலே அப்பூவிலிருந்தலே வெறுத்து * அப்புனலுடனே ஊடி நற்குணங்களோடுடைய கல்ல நாட்டிற்கு உரிய பகை தம்மிடத்தே வந்ததாக அந்நாட்டை † இருப்பல்லவென்று ஒதை விட்டு நீங்கிப் போய்த் தன்னூட்டைக் காக்கின்றவனுடைய குடைநிழலி னின்னே இருப்பாக நினைத்துத் தங்குதல் கொள்ளுங் குடிமக்களைப்போல வேறுமொரு பொய்கையைத் தனக்கு இருப்பாக ஆராய்ந்திருந்து பழைய பொய்கையை நினைத்துச் சுழல்கின்ற காலத்தே ‡அவ்விறைவன் வந்தபகை யின் வலிகெடும்படியாக அப்பகையைப்போக்க அருந்தமக்கள் பதியிடத்தே மீண்டு சென்றாற்போல அந்நிலத்துள்ளார் போக்க அப்பெரும்புனல் நீங்கு கையினாலே || மீண்டுவந்து அத்தும்பி அந்தத் தாமரைப்பூவிலே பறத்தலைத் தவிர்த்து இளைப்பாறும் புதுத்த புனலிலுடைய கல்ல÷ஊரனே ! எ – து.

பகைத்தலைவனுடைய இறைகொள்ளுங் குடிபோலத் தும்பி ஊடித்தோற்று அலமரும்பொழுதிலே அவ்விறை பகைதணிப்ப அக்கூட பதிப் × பெயர்ந் தாற்போலே புனனீங்க மீண்டுவந்து அத்தும்பி அம்மலரிலே அசைவிடும் ஊர என்றதனாற் பல பரத்தையரையுடைய பரத்தைபர் சேரியிலே சிலகாள் ஒரு பரத்தையை ஆவாரத்துடனே மீவதுவையர அவளே நின் காதற்பரத்தை வந்து கோபித்துத் தீங்கு கூறுகையினாலே வதுவையயர்த்தவளிடத்துக் கூட்டத்தையும் வெறுத்துக் காதற்பரத்தையொடும் ஊடி வேறொரு பரத்தையர் சேரியிலே சென்றிருந்து மீவதுவையயர்த்தவளே நினைத்து + வருந்துகின்ற காலத்தே அவள் சுற்றத்தார் காதற்பரத்தை கோபத்தைநீக்க மீண்டு சென்று அவளிடத்தே தங்குகின்றமையெனக் காமங்கிழத்தி புலந்து கூறினாள். இது வினையுவமப்போலி. வினையுவமமும் வினையுவமம்.

கக (க)நீங்குங்கா னிறைந்தாய்ந்து புனலுங்கற் புகழ்பூத்து
நாங்கொண்ட குறிப்பிவணலமென்னுந் தகைமேபோதா
னெரியிதழ் சேர்ந்தன்ன (உ)வெதிலிப் புணர்ந்தமை
தரிகூறுங் கண்ணியை யீங்கெம்மில் வருவதை

‘ஞெமர்தலும்’ தெய். (ஆ) வினையியலுள் ஒகாமையாற் பெயரெச்ச உம்மை இடைச்சொலென்று கொள்ளப்படும். பாயும் புனலென்பது பாய்புனலெனத் தொக்குழி வேற்றுமைப்பொருட்கண் உருபு பெயர் நிற்பத்தொக்க வாறுபோல வினை நிற்ப உருபு தொகுதலானும் செய்பு மென்பது வினையு முருபுமாகிய இரு நிலைமைத்தென்று கொள்க. என்பர் தெய்; தோல். இடை. சூ. எ. ‘எச்சஞ்’

க. கலி. நூஅ. இன்தாழிசைகள் ஈண்டு அறிதற்பாலன.

உ. கலி. எக: கஎ – கஅ. அடிகள் ஒப்புநோக்குக.

(பிரதிபேதம்) * அப்புனலுடனே நற்குணங்களே. † விருப்பல்ல, ‡அவ்விறையவன் ||மீண்டு வந்தலத்தம்பி. + ஊரனெனக பகை × பெயர்ந்தாய்போலே + வரு கின்றகாலத்தே.

எ - து: எளிபோலும் நிறத்தையுடைய இதழ்கள் வாடி உதிரப் பரத்தையரைப் புணர்ந்தபடியைச் சான்றாய் எமக்குக் கூறுங் கண்ணியையுடையையாய் எம்முடைய இல்லில் யாமிருக்கின்ற இடத்தே வருகின்ற நிலைமை, இவளுடைய *கலம்யாம் பிரியுங்காலத்து நிறங்கெட்டுப் புணருங்காலத்துப் பிறர் புகழ்தல் பொலிவுபெற்று நாம் மனத்திற் கொண்ட கருத்தாயிருக்குமென்று நீ குறித்திருக்குந் தகைமைப்பாடோதான். எ - று.

கஙு (க)சுடர்நோக்கி மலர்ந்த நெய்தல் படிற்கூம்பு மலர்போலென்
றொடர்நீப்பிற் றொகுமிவ ளலரென்னுந் தகைமேயாதா
னலர்நாணிக் கரந்தீநோய் தைம்மிகப் பிறர்(உ)கூந்தண்
மலர்நாறு மார்பினை யீங்கொர்பில் வருவதை

எ - து: பிறர் கூறும் அலருக்கு நாணி மறைத்த காமநோய் ஒழுக்கத் தெல்லையைக் கடவாநிற்கப் பிறர் கூந்தலின் மணம் நாறுகின்ற மார்பினையுடையையாய் எம்முடைய இல்லிலே †யாயிருக்கின்ற இடத்தே வருகின்ற ‡நிலைமை இவள் கலம் ஆதித்தனைக் கண்டு அலர்ந்தாமரைப்பூ அந்தஆதித்தன் அடக்குமளவிற் குவிந்தாற்போல ||எனது தொடர்ச்சி நீங்கின் வறிதுபட்டிருக்குமென்னுந் தகைமைப்பாடோதான். எ - று.

கக (ங)பெயினெய்தி வறப்பிற்சாம் பலுத்திற்றுப் பெயல்போல்யான்
செலினெஞ்சிற் செறிற்சாம்பு மிவளென்னுந் தகையோதான்

க. (அ)"கொழுநனைக் காணை. .. ..அவன் வடிவெலா நோக்கித், தென்னு தெண் டிரைசூழ் பொலங்கிரி முகட்டிற் சேட்டிளம்பரிதிகண்டாங்கே, மூன்னரை முனரி முறுக்கவிழ்த் தென்ன முகமலர்ந் தகமலர்ந்தனே" பிரமோத்தர. உமாமகேசுவரபூசாபல. இஉ. (ஆ) "தணந்தவென் கணவன் வல்லே சார்தர வருளு கென்னுப், பணந்தழை யரவ மாலைப் பகவனைக் கரங்கள் கூப்பு, மணந்தவழ் கமல மென்றாழ் வருதலுந் தழுவி மார்பம், புணர்ந்திடக் கூப்புங் கைகள் .பொருக்கென லிடைத்து நின்ற" பேரூர்ப். குழகன் குளப்புச் சுவற்ற. இஙி.

உ. (அ)"சார்த்தரு நறியோள், கூந்த லுறுநின் மரபே தெய்யோ" ஐங். உசஂ. (ஆ) "வேந்த, னெரிமணி யார மார்பி னின்றுயில் பொருந்தி னனே" நைடதம். மண. சசு.

ங. (அ) "வறனுழக்கும்பைக்கூழ்க்கு வான்சோர்வினிதே" இலியது. கக. (ஆ) "தளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்த, னளியின்மை வாழுமுயிர்க்கு" குறள். இஙிஎ. என்பவையும். (இ)"வையெயிற் றெய்ய மகளிர் நிறமினிப், பெய்ய வுழற்கு மழைக்காரமற் றைய" பரி. ங: ஙஉஙச. என்பதும்அதனுள் 'மழைக்கா'என்பதனை விளக்குமிடத்து,

(பிரதிபேதம்) * கைம்பிரியும் † யாணிருக்கின்றவிடத்தே, ‡ நிலைமை சூழ்த்தனைக், ||னைத.

(க)முடியுற்ற கோதைபோல் யாம்வாட வேதிலார்
(உ)தொடியுற்ற வடுக்காட்டி யீங்கெம்மில் வருவதை

எ - து: முடியிலே பொருந்தும் மாலைபோல யாம் வாட நின் பரத்தையது தொடியினுழுற்ற வடுவினைக் காட்டி இவ்விடத்து எம் இல்லிலே *யாமிருக்கின்ற இடத்தே வருகின்றவிலைமை, இவள் மழைபெய்யிற் செருக்கி அது பெய்யாதொழியிற் புலர்கின்ற நிலத்திற்கு (க) † அப்பெயல் பெய்து வீளைவித்தும் பெய்யாது கெடுத்தும் போமாறுபோல யான் சென்றேனுயிற் செருக்கிச் செல்லாமல் வருத்திற் கெடுமென்ற நீ குறித்திருக்குந் தகைமைப் பாடோதான். எ - று.

‡ஆங்க, அசை.

உசை ஐய வமைந்தன் றணைத்தாகப் புக்கீமோ
(ச)வெய்யாரும் ||வீழ்வாரும் வேறுகக் கையின்
முகை × மலர்ந் தன்ன =முயக்கிற் றகையின்றே
தண்பனி வைக லெமக்கு

"காலையொத்தலாவது: காலை தனக்கு இன்றி யமையாத மழையை வருவித்துக்கொள்ள மாட்டாது அது தானேவந்துழிப் பொலிந்து வாராதவழியும் ஆமளவும் ஆற்றி ஆகாதவெல்லைக்கண் இறந்துபடுதல்" என்றெழுதி யிருத்தலும் இங்கே அறிதற்பாலன.

க. (அ)"சேக்கை யாகி மலர்ந்தசெந் தாமரைப், பூக்கள் பட்டதப் பூவையும் பட்டனள்" (ஆ) "அரக்கர், ... புறத்திலைடின மோடிய குருதியேபோல" (இ) "கரைவித்தா னுயிரைக் கண்போல்" கம்ப. மிதிலைக். எக: கும்பகருணப். உஉக. நாகபாச. உ௪o. (ஈ) "கின்னிடை யெனத்தா, மெய்வண்ணம்வாடி" தஞ்சை. க௨o. (உ) "மாலை யென வேதவளுறம்" விநாயக.

உ. "தொடிவடு" கலி. எக: கக. இன் குறிப்புப் பார்க்க.

ஊ. "தெடுப்பதூஉஞ் செட்டார்க்குச் சார்வாய்மற் றுங்கே, யெடுப்பதூஉ மெல்லா மழை" நாலடி. கடி. என்பதும் அதன் பரிஉரையும் இங்கே அறிதற்பாலன.

எ. உள்ள துவர்த்த லென்பதற்கு உள்ளதனை உவர்த்துக்கூறுதலென்று பொருள் கூறி 'வெய்யாரும்.....லெமக்கு' என்பதை மேற்கோள் காட்டி இது தலைவன் செய்கின்ற தலையளியை வெறுத்த லென்பர் இளம்; தொல். மெய்ப்பாட். சூ. உச.

(பிரதிபேதம்) *யாணிருக்கின்றவிடத்தே, † அப்பெயல்கண்பெய்து, ‡ ஆக்கை. || வின்யாழும். × அலர்ந்தன்ன, =முயங்கிற்.

எ - து: நும் பரத்தைமையாற் பலரும் வியக்கத்தக்கனஎல்லாம்நுமக்குப் பொருந்திற்று; (க) நும்மைவிரும்புவாரும் நீர்தாம்விரும்புவாருமாயிபரத்தையரும் உமக்கு வேறுபடிம்படியாக ஈண்டு நில்லாதே அவர் மனைக்கண்ணே செல்வீராக; தன் செவ்வியான் அலராது கையினுலே வலிய அலர்த்துதலின் முகையலர்த்தாற்போல இனிதல்லாத முயக்கத்தில் எமக்குக் குளிர்ந்த பனிக்காலம் அப்படிக் கொடிதாயிருந்த, நும்மையின்றித் தங்குதல் தகைமையில்லையோ அது தகைமையுண்டோவென ஊடல்தீர்வின்றுள் *கூறினுள். எ - று.

தண்பனி அனைத்தாகவென்க.

இது கைம்மிகலும் †இழிவுமென்னும் மெய்ப்பாடுகள் உணர்த்திற்று.

இது குரவும் தாழிசையும் ‡அசைநிலையாகிய அடைநிலைக்கிளவியும், வெள்ளைச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. (கக)

(எக.) (உ) புள்ளிமி முகல்வய லொலிசெக்கெ லிடைப்பூத்த
முள்ளரைத் தாமரை முழுமுதல் சாய்த்ததன்
வள்ளித ழுறநீடி வயங்கிய வொருகதி
ரவைபுக முரங்கின்மே லாடுவா ணணிநுதல்
வகைபெறச் செரீஇய வயந்தகம் போற்றேறுன்றுந்
தகைபெறு கழனியந் தண்டுறை யூரகேள்;

எ அணியொடு வந்தீங்கெம் புதல்வனைக் கொள்ளாதி
மணிபுரை செவ்வாய்நின் மார்பகல நனைப்பதாற்
றேங்கொரை பறிகுவென் யானெனக் கமழுநின்
சாந்தினைற் குறிகொண்டாள் சாய்குவ ளல்லளோ;

கக புல்லலெம் புதல்வனைப் புகலக னின்மார்பிற்
பல்காழ்முத் தணியாரம் பற்றினன் பரிவானுன்
மாணிழை மடநல்லார் முயக்கத்தை நின்மார்பிற்
பூணினுற் குறிகொண்டாள் புலக்குவ ளல்லளோ;

கடி கண்டேயெம் புதல்வனைக் கொள்ளாதி நின்சென்னி
வண்டிமிர் வகையிணர் வாங்கினன் பரிவானு

க. "நின்வெய்ய ஞயி னவன்வெய்யை நீயாயின்" கலி. கoஎ: உக.

உ. ஏனையாயில்களோ மறுத்தவழி இன்னகைப் புதல்வனைத்தழீஇ இவை யணிக்து' அவன் வாயிலாக வந்ததற்கு இச்செய்யுள் மேற்கோள்; தொல். கற்பி. சூ. கo. இளம்.

(பிரதிபேதம்) * கூறியது தண்பனி †இழிவுமென்னும், ‡நிலையாகிய இடைநிலைக்.

ணண்ணியார்க் காட்டுவ தீதுவெனக் கமழுநின்
கண்ணியாற் குறிகொண்டான் காய்குவ னல்லனோ;

எனவாங்கு;

உ0 பூங்கட் புதல்வனைப் பொய்பல பாராட்டி
நீங்கா யிகவாப் நெடுங்கடை நில்லாதி
யாங்கே யவர்வயிற் செல்மி யணிசிதைப்பா
னீங்கெம் புதல்வனைத் தந்து.

இது செல்லாக் காலைச் *செல்கெனக்கூறிவிடுத்தது.(க)அது தலைவன் இனிச் செல்லானென்பது இடமுங் காலமும்பற்றி அறிந்த காலத்து ஊட லுள்ளத்தாற் கூடப் பெறதாள் செல்கெனக் கூறி விடுத்தாற்றுதலாம்.

@தன பொருள்.

புள்ளிமி முகல்(உ)வய லொலிசெந்நெ லிடைப்பூத்த
முள்ளரைத் தாமரை முழுமுதல் சாய்த்ததன்
வள்ளித ழுறீஇ வயங்கிய வொருததி
ரவைபுக ழரங்கின்மே லாடுவா ணிறுதல்
வகைபெறச் செரீஇய †வயத்ததம் போற்றீரென்றுந்
தகைபெறு கழனியந் தண்டுறை யூரகேள்

எ - து: பறவைகள் ஒலிக்கின்ற அகன்ற வயலிடத்து(ங)ஒலிக்கின்றசெந் நெலிடையிலே பூத்த முன்னே அமையிலுடைய தாமரையை ஒன்றிய செந்நென் முதல் ‡சாய்க்கையினுலே அதனுடைய வள்ளிய இதழையுறும்படி வளர்ந்து அப்பூவிலே கிடந்து விளங்கின ஒரு கதிர் அவையினுள்ளார் புகழப் பட்ட அரங்கின்மேலே ஆடுகின்றவளுடைய தலைக்கோலத்தினின்று நுதலிலே

க. தொல். கற்பி. சூ. சு. இதனுரையில் இளம் பூரணரும் நச்சினார்க் கினியரும்செல்லாக்காலைச்செல்கென விடுத்தாரு, "பூங்கட் புதல்வனை ....தந்து" என்பதனை மேற்கோள் காட்டி யுள்ளார.

உ. (அ) "செந்தா மரைப்பூ வாநிமிர்ந்த செக்கெலின், பைந்தார்ப் புனல் வாய்ப்பாய்ந் தாவோ-ளந்தார், வயந்தகம்போற் றேரென்றும் வையூரன்" தினைமாலை. கூஅ. (ஆ) "கரும்பணி வளவயற் காமர் தாமரை, சுரும் பணைந் ததனுதற் கிடந்த வார் செந்நெ, லரும்புரு ழிலம்பகத் தோற்ற மொத்ததே." சீவக. கசசஉ.

ஊ. ஒலித்தல் - தழைத்தல்.

பிரதிபேதம்) *செல்கென விடுத்தது. † வயத்தகமேபோற்றேரென்றும் ‡ சாய்கையினுலே பிதழுடைய.

தாழும்படி ஒரு வடமாகச் செருகி வைத்த வயந்தகமென்னும் அணிபோலத் தோன்றும் அழகு பெறுகின்ற கழனியையுடைத்தாகிய அழகினையுடைய குளிர்ந்த திறையினையுடைய ஊரனே! கேள். எ - று.

சாய்த்துவயங்கியவென முடிக்க. அணி - தலைத்தோலம். பரத்தையர் சேரியிற் பரத்தையரிடத்தே பொலிவுபெற்ற நின்னை அவர்கள் தம்மசமாகக் கொள்கையினாலே அவர்களில் ஒருத்தி நின்னிடத்தே விடாமற் றங்கி நினக்கு அணியாய்த் தோன்றினமை உள்ளுறையுவமம் கொள்க.

எ அணிமொடு வந்திங்கெம் புதல்வனைத் தொட்டாரதி
(க)மணிபுரை செவ்வாய்நின் (உ)பரப்பகல *நனைப்பதாற்
(கூ)றெய்த்தாரை †பறிதலோ பாலெனக் காழுநின்
சாத்தினுற் றுறிதொட்டாள் சாய்த்துவ லல்லளோ

எ - து: பரத்தையரிடத்து அணிந்த அணியுடனே இவ்விடத்தே வந்து எம்புதல்வனைத் தடவினாளாதலின், அவளுடையமார்பை ஒத்தின்ற நினது(கூ)வாயினீர் நின் மார்பினுடைய பரப்பையெல்லாம் நனைப்பதனாலன்றோ இவ்வாறின்றது; அஃது அங்ஙனம் நனைத்தல் யான் நின் மார்பின் முயக்கினை அறிவேனெனச் சொல்லும் அமைந்தின்ற நின்னுடைய சுற்றத்தாலே பிறர் மூயக்கத்தைத் தான் கருதுதலே மனத்தாற்கொண்டவள் வருந்துவளல்லளோ? எ - று.

கக புல்லலெம் புதல்வனைப் †புகலக (ங)னின்மார்பிற்
பல்லாம்முத லணிபரம் பற்றினன் பரிவுளன்

க. (அ) "மணிபுரை செவ்வாய்" அகம். கூக: கச. (ஆ)"மணிமருளவ் வாய்" (கலி. அக - உ.) என்பதும் அடி குறிப்பும் பார்க்க.

உ. (அ)"மலைமாதமும்நிறமாபகலஞ் தீசன்" தேவாரம். (ஆ) "உற்றவரம்புதம் பாசையுங் கருவியும், முருவிமார் பகலமு முருவிவீழ் செருவர்" கலிங்கு. சஅஉ.

கூ. நற். திரு: கூ-கஉ.

சு. (அ) "மண்டிணைச் செவ்வாய் முழலையம் இளவி, புலர்த்தகைச் சாந்தம் புலர்தொறு நனைப்ப, காணு மாகலோ கொடிதே." தொல். கற்பி. சூ. கூ. நச. மேற்கோள். (ஆ) "மைவார் குழன்மட மஞ்ஞையர் தங்கள் வதனவை யுன்னிக், கைவார் வளைக்கட வும்பெரு மானைக் கலுழ்ந்தழைத்துன், செவ்வா யமுத மனைந்து செஞ் சாந்தஞ் தெய்யப்புல்லி, யிவ்வா றுசெய்தெல் லாமவர் மேனியி லேறவதே" அம்பிகா. இ0கூ.

இ. "நுந்தை வியன்மார்பிற்,.....கோதை பரிபாட" கலி. அ0: உச-இ.

(பிரதிபேதம்) *னனைப்பவால்.†அறிதலல், ‡புகலலி னின்.

மாணிழை மடநல்லார் முயக்கத்தை நின்மார்பிற்
(க)பூணினுற் குறிகொண்டாள் புலக்குவ ளல்லளோ

எ - து: எம் புதல்வனே நீ தழுவாதேகொள்; பரத்தையர் தொண்டாடு தலேயுடைத்தாகிய நின்னுடைய அகன்ற மார்பிற் கிடக்கின்ற பல வடங்களே யுடைத்தாகிய முத்து அணிந்த ஆரத்தைப் பிடித்து அறுப்பானெருவனைய் இராநின்ருன்; அவன் அறுத்தால் மாட்சிமைப்பட்ட இழையினேயும் மடப்பத் தினேயுமுடைய மகளிர் முயங்கின முயக்கத்தை நின் மார்பிற் கிடக்கின்ற பூணலே கருதுதலே மனத்தாற்கொண்டவள் புலப்பளல்லளோ? எ - று.

கரு கண்டேயெம் புதல்வனைக் கொள்ளாதி நின்சென்னி
வண்டிமிர் வகையிணர் வங்கின பரிவானு
(உ)னண்ணியார்க் காட்டுவ தெதுவெனக் கமழுநின்
கண்ணியாற் குறிகொண்டாள் காய்குவ ளல்லளோ

எ - து: எம் புதல்வனைத் தேடி எடுத்துக்கொள்ளாமல் அவன்தானேவரக் கண்டு எடாதேகொள்;நின்னுடையதலேயில்வண்டுகள்மொய்க்கின்ற கூதாளியை புடைய பூங்கொத்திற் பூக்களே வாங்கி அம்மாலேயை அறுப்பானெருவனைய இராநின்ருன்; அவன் அறுத்தால் நின்னே முயங்கினவர்களே அறிவிப்பது இக்கண்ணியென்று கூறி மணக்கின்ற நின்கண்ணியாலே பிறர்முயக்கத்தைத் தான் கருதுதலே மனத்தாற்கொண்டவள் கோபிப்பளல்லளோ? எ - று.

*ெனவாங்கு, அசை.

உ0 (ங)பூங்கட் புதல்வனைப் பொப்பல பாராட்டி
நீங்கா யிகவாய் நெடுங்கடை நில்லாதி
யாங்கே யவர்வயிற் †சென்றீ யணிசிதைப்பா
னீங்கெம் புதல்வனைத் தந்து

எ - து: பூப்போலுங் கண்ணினேயுடைய புதல்வனைப் பல பொய்களேச் சொல்லிப்பாராட்டிப்புதல்வனேவிட்டுப் போகாயாய்ப்பரத்தையர்குறிக்கொண்ட நிலேமையைக் கடவாயாய்ப் பெரிய வாயிலில் நில்லாதேகொள்; நின்ருல்

கு. "ஒளிபூத்த நுதலாரோ டோரணப் பொலிந்தநின், களிதட்ப" (கலி. கக: கக - உ0.) என்பதும் அதனுரையும் அதன் குறிப்பும் பார்க்க.

உ. கலி. எஅ: கங - கச.

ங (அ) வாயிலின் வருஉம் வகைகளுட் புதல்வனேவாயிலாக்கொண்டு சென்றதற்கு, "பூங்கட்.....பாராட்டி" என்பது மேற்கோள்; தொல். கற்பி. சூ. உ. நச்.(ஆ) "பூங்கட் புதல்வனே கோக்கி" அகம். கக: கஉ. (இ) "பூங்கட் புதல்வன்" ஐந் - யெழு. சஎ.

(பிரதிபேதம்) * ஆங்கை பூங்கட், † சென்றி.

அவன் அணியைச் சிதைப்பானெருவனுமிருப்பான்; ஆதலால் எம்புதல்வனே (க)இக்கேதந்து அப்பரத்தையர்சேரியிலே அங்ஙனங்குறிக்கொண்டபரத்தைய ரிடத்தே செல்வாயாக. எ - று.

'ஈங்கெம் புதல்வனைத் தந்து' என்றது (உ) தலைவனிடத்தினின்றும் புதல் வனைச் சிறைத்தது.

(இதனுல்) தலைவற்குக்கையம்மிகலுந் தலைவிக்கு இளிவரலும் பிறந்தன.

*இது தரவும் தாழிசையும் அசைநிலைத் தனிசொல்லும் கட்டளையாகிய வெள்ளைச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. (சு)

(அ0.) (ங)நயந்தலை மாறுவார் மாறுக மாறுக்
கயந்தலை மின்னுங் கதிர்விடு முக்காழ்ப்
பயந்தவெங் கண்ணுர யாங்கா ணல்கித்
திகழொளி முத்தங் கரும்பாகத் தைஇப்

(இ) பவழம் புனைந்த பருதி சுமப்பக்
கவழ மறியாநின் கைபுனை வேழம்
புரிபுனை பூங்கயிற்றிற் பைபய வாங்கி
யரிபுனை புட்டிலி னுங்கணீர்த் தீங்கே
வருகவெம் பாக மகன்;

க0 கிளர்மணி யார்ப்பார்ப்பச் சாஅய்ச்சா அய்ச் செல்லுக்
தளர்நடை காண்ட லினிதுமற் றின்னுதே
யுளமென்னு நுந்தைமாட் டெவ்வ மூழப்பார்
வளைநெகிழ் பியாங்கா ணுங் கால்;

கச ஐய, காமரு நோக்கினை யத்தத்தா வென்னுகின்
றேமொழி கேட்ட லினிதுமற் றின்னுதே

க. இவ்வுரைகாரர் "ஒழிகாம மீதுகென" சீவக. எஉ என்பதன் விசேட வுரையில் "ஈங்கு: தன்மையை உணர்த்துதல், 'செலவினும் வரவினும்' என்னும் (தொல். இளவி. உஅ) சூத்திரத்துக் கூறினும்" என்று எழுதியிருத்தலும், அச்சூத்திரத்தின் உரையில், "ஈங்கு முதலியன தன்மைக்கண்ணும் ஆங்குமுதலியன படர்க்கைக்கண்ணும் அடக்கப் பட்டன" என்று எழுதியிருத்தலும் இங்கே அறிதற்பாலன.

உ. தலைவனிடத்தினின்றும் புதல்வனைச் சிறைத்ததற்கு "அணியொடு வந்தீங்கெம்.....புதல்வனைத் தந்து" என்பது மேற்கோள்; தொல். கற்பியல். சூ. க.

ங. பல்வேறு புதல்வர்க்கண்டு மனிபுவர்து கூறினதற்கு இச்செய்யுள் மேற்கோள்; தொல். கற்பி. சூ. க0.

(பிரதிபேதம்) * இது அசைநிலைத்.

யுய்வின்றி நுந்தை நலனுணச் சாஅய்ச்சா அய்மா
ரெவ்வமோ யாங்காணுங் கால்;

கஅ ஐய, திங்கட் குழவி வருகென யானின்னே
யம்புலி காட்ட லினிதுமற் றின்னுதே
நல்காது நுந்தை புறமாறப் பட்டவ
ரல்குலவ ரியாங்காணுங் கால்;

உஉ ஐயளங்; காதிற் கனங்குழை யாங்கிப் பெயர்தொறும்
போதில் வறுங்கூந் தற்கொள்வதை நின்னையா
னேதிலார் கண்சாய நுந்தை வியன்மார்பிற்
றூதுசேர் வண்டின் கிளைபாடத் தைஇய
கோதை பரிபாடக் காண்கு.

இது பாத்தையிற்பிரிந்துவந்த தலைவன் சிறைப்புறத்தானாகத் தலைவி மகனுக்கு உரைத்தது.

இதன் பொருள்.

நயந்தலை மாறுவார் மாறுக மாறுக்
(க)கயந்தலை மின்னுங் கதிர்விடு முக்காழ்ப்
பயந்தவெங் கண்ணரா யாங்காண நல்கித்
†திதலொளி முத்தங் கருப்பாகத் தைஇப்
(உ)பவழம் ‡புனைந்த பருவரு சுரப்பக்
கவழ மறியாநின் (ங)கைபுனை வேழம்
புரிபுனை ||பூங்கயிற்றிற் பைபய வாங்கி

க. (அ) "கைபுனை முக்காழ் கயந்தலை தாழ" கலி. அசு: உ. (ஆ) "மயிர்ப் புறஞ் சுற்றிய கயிற்கடை முக்காழ், பொலம்பிறைச் சென்னி நலம் பெறத் தாழ" மணி. கூ: கஙு - கஙூ.

உ. (அ) "கவழத் களியியன்மால் யானைச்சிறு ளூளி, தவழத்தா னில்லாதது போற் - பவழத், கடிகை யிடைமுத்தம் காண்டொறு நில்லா" நீ்ணமாலை. சூஉ. (ஆ) "பவழமே யனையன பன்மயிர்ப் பேரெரி, யகழுமிக் குலிகமஞ் சனவரைச் சொரிவன, கவழயா னையிறுதற் றவழுங்கச் சொத்தவே" சீவக. கஅகஅ. (இ) "பவழவரை யன்னதிர் டோட்பரவை மார்பன், றவழுமணி யாரமொடு தார்மணி தயங்கக், கவழமனே மேவு களி யானையென வந்தாங்கு" சூளா. துறவுச். ஙகங. என்பனற்றுள், பவழம் கவழமென்னும் வழக்குண்மை அறியலாகும்.

கூ. "கை புனைவேழம்.....வந்தீக" கலி. அசு: எ - ஙo.

(பிரதிபேதம்) *முக்காழ்பயந்த, †திகொளொளி; ‡புனைந்த,||பூங்கையிற்புடையுடையவாங்கி,

யரிபுனை புட்டிலி *னுங்கணீர்த் தீங்கே
வருகவெம் பாக மகன்

எ - து: நின்னிடத்து அன்பு ஒழிவார் ஒழிந்தேபோக; நின்னைப் பெற்ற எம்முடைய கண்ணிறைய அன்பு மாறுத † யான் நின் வரவைக் காணும்படி அருளி மென்மையையுடைய தலையிடத்தே கிடந்து மின்னும் ஒளிவிடுகின்ற மூன்று வடத்தையுடைய பாகனுடைய மகன்! வீளிம்பிடத்தே விளங்குகின்ற ஒளியையுடைய முத்தை அரும்பாக அழுத்திப் பவழத்தாற்செய்த வட்டப் பலகை சுமந்திறிப நின்ற கவழத்தைக் கொள்ளுதலறியாத தையாற் புனைந்த வேழத்தை ‡நின்னுடையகாலிற் கட்டினஉள்ளிமுளையாற் புனைந்தகெச்சை யாலே (யாவாரிப்ப) நீ வளைத்து முப்புரியாக முறுக்கினகயிற்றாலே ||பையப் பைய ஈர்த்து இக்கே வருவாயாக. எ - று.

கயந்தலை, வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடுதோன்றியது. (க)மக னென்றது, இயல்புவினி.

கo கிளர்மணி யார்ப்பார்ப்பச் சாஅப்சாஅப்ச் செல்லுந்
(உ)தளர்நடை ÷காண்டலினி தமற் றின்னதே
யுளமென்னு நுண்தைமாட் டெய்ய முழைப்பார்
வளை +கெழிஇ யியாங்காணுங் காலை.

எ - து: வீளங்கின மணிகள் ஆரவாரிப்ப ஆரவாரிப்ப அசைத்தசைத்து நடக்குந் தளர்ந்த நடையைக் கண்டு மகிழ்ந்திருத்தல் எமக்கு இனிது; அஃது தொழிந்துநுண்தையிடத்து எங்கள்உள்ளமென்றகூறி வளைகெழிஇநின்றவருத் தத்திலே தங்கும் மகளிரை யாங் காணுமிடத்து அக்காட்சி இன்னாது. எ - று.

மற்று, வினைமாற்று. இது(கூ)நின் தந்தையாலுற்றவருத்தம் நீக்குதற்கு நின்னைத்தொண்டு பொழுதுபோக்குவமென்பது போதர நின்றது. மேல் வருவனவும் அன்ன.

க. தோல். தொகை. சூ. கடி. கயந்தலை, பண்புத்தொகையென்பது ஒர் கருத்து.

உ. (அ) "தேரோடு, தளர்நடைப் புதல்வனை யுள்ளி" (ஆ) "சிறுதேருருட் டேந் தளர்நடை" ஐங். கக, சoக. (இ) "குழவி தளர்நடையைக் காண்ட லினிதே" இனியது. கடி. (ஈ) "தளர்நடை தாங்காக் கொள் பூட் புதல்வரை" மணி. கூ: கசக.

கூ. இச்சூற்பக்கம் சாகச: சo-ஆம் குறிப்புப்பார்க்க.

(பிரதிபேதம்) * ஆங்கணிங்கே, † யானினி ‡ நின்காலிற், || பையவியற்ற இங்கே + கண்டலினிது, + கெழிப்பியாம்.

கச ஐய, காமரு நோக்கினை (க)யத்தத்தா வென்னுநின்
றேமொழி கேட்ட லினிதுமற் றின்னதே
*யுய்வின்றி நுந்தை நலனுணச் சாஅய்ச்சா அய்மா
ரெவ்வநோ யாங்காணுங் கால்

எ - து: †ஐயனே! வீருப்பமருவுகின்ற அழகினையுடையையாய் அத்தா அத்தாவென்று கூறும் (உ)னது இனிய மொழியைக்கேட்டு மகிழ்ந்திருத்தல் இனிது; அஃதொழிந்து நுந்தை மகளிர் நலஞ சாய்தற்கு அவர் நலத்தை உண்கையினலே உய்வின்றிச் சாய்த்தற்ற எவ்வத்தைத் தரும் நோயை யாங் காணுமிடத்து அக்காட்சி இன்னது. எ - று.

(கூ)‡காமர் கடைக்குறைத்து நின்றது. மருவும்ஊற்றுமிசை உகாம் மெய் யொடுங்கெட்டு மவ்வீறு கந்தியாற் கெட்டது. அத்தா கடைக்குறைத்து நின்றது. சாய்மார், ||மாரீற்றுமூற்று எதிர்காலமுணர்த்திற்று. அது நலனுண வென்னும் வினையோடு முடிந்தது.

க. "ஓவா தடுத்தடுத்தத் தத்தாவென் பான்" கலி. அக: ககூ.

உ. (அ)" யாழொடுகொள்ளா பொழுதொடும்புணரா, பொருளறி வாரா வாயினுந் தந்தையர்க், கருள்வந் தனவாற் புதல்வர்தம் மழலை" புறம். கூஉ: க - கூ. (ஆ) "அவர்மழலை கேட்ட லமிழ்தினினிதே" இனியது. கஙி. (இ) "குழலினி தியாழினி தென்பதம் மக்கண், மழலைச்சொற் கேளாத்வர்" தூவள். கூக. (ஈ) "எழுத்தி னுதாது வழுத்து பொரு ளின்றிக், குறிப்பொடு படாது வெறித்த புன்சொல்லை, யாயினும் பயந்தருஞ் சேயவர் சொலுமொழி, குழலினும் யாழி னுமழகெனாம்" நீருக்கழமலமும். உச: உ - டு. (உ) "குழலும் யாழு மினியவெனக் கூரு வண்ண மென்கணிவாய், மழலை மொழிக்கு" பிரபு. மாயையின் டுஉ. (ஊ) "குழலினும் யாழினுங் குழைத்த செவ்வியாய், மழலையஞ் சிறுவர்சொன் மருங்கி லின்பமாம்" தீர்த்தகிரி. கந்தபீர்த்த. உள.

கூ. காம னென்பதற்கு, விருப்பமென்ற பொருளே (புறம். ககஅ: அ. மது. உஅஉ.) உரைகளிற் காணப்படுகின்றது; (ஆ)"காமர் கண்டிகை" சீலப். கு: அக. என்புழி, 'காமம், காமமென விகாரமாயிற்று' என்று அடியார்க்கு நல்லாரும் எழுதியிருக்கிறார். இவ்வுரையாசிரியரோ பல விடத்து (முருது. எடி. சீறுபாண். எஎ. மது. சா உ.) அதற்கு விருப்பு மருவினை என்றும் எழுதியிருக்கிறார். அடியார்க்கு நல்லார் (ஆ) "காமரு குவளை" (சீலப். சு: சஏ.) என்புழி, 'காமம்வருமென்பது விகாரத்தாற் காமருவென நின்று கண்டார்க்கு விருப்பம் வருமென்ப தாயிற்று' என்று எழுதியிருக்கிறார். இவை ஆராய்தற்பாலன.

(பிரதிபேதம்) * எய்வின்றி, † ஐயெனவிருப்பம், ‡ காம்கடைக்குறைத்து. || மாரீற்று எதிர் காலமுற்றுணர்த்திற்று.

இஃது (க)ஒப்புவழிபுவத்தல்; காமருநோக்கு இனிதென்றலின்.

கஅ ஐய, திங்கட் குழவி வருகென யானின்னே
(உ)யம்புலி காட்ட வினிதுமற் றின்னுதே
(ங)நல்காது நந்தை புறமாறப் பட்டவ
*ரல்குல்வரி யாங்கா ணுங்கால்

எ - து: ஐயனே! திங்களாகிய குழவி! நீ இவணுடனே விளையாடும்படி வருவாயாகவென்று கூறி அவ்வம்புலிக்கு யான் நின்னைக் காட்டி மகிழ்தல் எமக்கினிது. அஃதொழிந்து நுந்தை அருளாதே தனக்குப் புறஞ்சொல் உண்டாக அருளாதவிடப்பட்ட மகளிருடைய அல்குலிற் பசப்பொழுக்கை யாங் காணுமிடத்து அக்காட்சி இன்னாது. எ - து.

(ச)உயர்நிணைமருங்கின் ஒழிர்துஞ்சிறுபான்மைவருமென்றலின் † எவ்வ முழப்பார் கலனுணப்பட்டாரென இண்டாவது வீரியாதுகின்றது.

உஉ ஐயளங், காதிற் களங்குழை வாங்கிப் பெயர்தொறும்
(ந)பாதில் வறுங்கூந்தற் கொள்வதை நிற்னையா
மேதிலர் தண்சாய(சு)நுந்தை யிபன்மார்பிற்

க. (அ) "காமரு சோக்கினோ யத்தத்தா வென்னுதின், நேமொழி கேட்ட லினிதுமற் றின்னுதே, என்பது ஒப்புவழி யுவந்தது; என்னை? காமரு சோக்கினை பென்றமையின்" என்ற குறிப்பு தொல். மெய்ப். சூ. உஉ. பேராசிரிய ருரையிற் காணப்படுகின்றது. (ஆ) இ - வி. நூலாரும் இதனையே பின்பற்றுவர். இ-வி. சூ. கிஅ0. (இ) "தந்தைய ரொப்பர் மக்கள்" (தோல். கற். சூ. சு.) (ஈ) "நின்னே ரன்ன நின் புதல்வர்" புறம். ககஅ: கச. என்பவையும். (உ) "புதல்வனை ....செத்தனள்பேண்" (அகம். கக: கி-அ.) என்பழி, 'செத்து ஒப்பு மாம்; ஒப்பு - தலைவனை யொப்பு' என்று எழுதியிருக்கும் உரையும் இங்கே அறிதற்பாலன.

உ. (அ)நாலாயிரதிவ்யப்ரபந்தம் பெரியாழ்வார் திருமொழி. முதற்பத்தில் இ-ஆவது 'என்முகத்து' என்னும் தொடக்கத்த பாசுர முதலானவை இங்கே அறிதற்பாலன. (ஆ) "அங்கண் விசும்பி னகனிலாக் காண் பினிதே" இனியது. க0. (இ) "பின்னை மணமருட்டுக் தாயர்போ லும் புலமே, லொள்ளிய காட்டி" பழ. கூஉங.

ங. "நல்காள்தண் மாறி விடின்" கலி. ஙக: உச.

ச. தோல். தொகை. மரபு. சூ. கஇ. இள. நச். உரைபார்க்க.

ஞ. இக்கூற்றப்க்கம் சஙக0: ச-ஆம் குறிப்புப் பார்க்க. "பூவில் வதுத்தலே" குறுந். கக.

சு. "புல்லலெம் புதல்வனைப் புகலக ணின்மார்பிற், பல்காழ்முத் தணி யாரம் பற்றினன் பரிவானுல்" கலி. ஙக: கக - கஉ.

(பிரதிபேதம்) *அல்குவாயாக், † எவ்வமுழப்பாரை கலனுணப்பட்டாரைபென,

முதுதேர் வண்டின் *கிளைபாடத் தைஇய
கோதை பரிபாடக் †காண்கும்

எ - து: ஐயனே! எம்முடைய காதிற் பொன்னுற்செய்த மகரக்குழையை வாங்கிக்கொண்டுபோய் எம்மிடத்தே மீண்டுவருந்தோறும் எம்முடைய பூ இல்லாத வறுவிய கூந்தலிலே நின்னை யாங்கள் வைத்துக்கொள்வது, நுந்தை அகற்சியையுடைய மார்பிற் கோதையை அறுத்து நீ வீளையாடுதற்கு; நீ அங்ஙனம் வீளையாடினால் ‡ யாரும் எமக்குப் பகையாயவரிடத்து அவன் வைத்த அன்பு தேயச் || காண்போம், எ - று.

இனி, எதிலார் இடஞ்சாயக் ÷காண்போமென்றுமாம்.

தாதைத் தேடும் வண்டின் சுற்றம் விழும்படி கட்டின +கோதை.

(இதனால்) தலைவிக்கு இழிவும் தலைவர்க்குக் கைம்மிகலும் பிறந்தது.

இது தரவு (வெண்பாவாய் எனைவெண்பாக்கள் ஐயவென்பதனோடுங் கூடி ஐஞ்சீரடுக்கிவருதலிற் கலிவெண்பாட்டு. "தரவும்போக்கும்" எனப் போத்தினைத் தரவோடு கூறியவதனால், தரவிறுதி போல இது ×காண்கும் எனத்(க)தேமாவாலிற்றது. (கஞ)

(அக.) மையற விளங்கிய மணிமரு ளவ்வாய்தன்
மெய்பெரு மழலியின் விளங்குபூ ணணைத்தரப்
பொலம்பிறை யுட்டாழ்ந்த பூணிவீண் யுருள்கல
னலம்பெறு கமழ்சென்னி நகையொடு தயல்வர
வருவெஞ்சா திடைகாட்டு முடைகழ லுந்துகி
லரிபொலி கிண்கிணி யார்ப்போவா வடிதட்டப்
பாலோ டலர்ந்த முல்லைமறந் துற்றத்துக்
கால்வறேர் கையி னியக்கி நடையயிற்ற
வாலமர் செல்வ னணிசால் பெருவிரல்
போல வருமென் னுயிர் ;

க. வெள்ளைச்சுரிதகம் ஓரோவழிச சீராணிறுமென்றுகூறி அதற்கு "ஐய, எங்.....காண்கும்" என்பதை நச்சினார்க்கினியரும் "தாதுதேர் வண்டின்.....காண்கும்" என்பதைப் பேராசிரியரும் மேற்கோள் காட்டிச் சிறிதுவேறுபட இக்குறிப்பையுமெழுதியுள்ளார். தொல். செய். சூ. கஞிச.

(பிரதிபேதம்) * இனைட. † காண்கு, ‡ யாதும், || காண்பேனெனக் · உறினுள் இனி, + காண்பே னென்றுமாம். தாதைத்தேடும், + கோதை தலைவிக்கு இன்னும் × காண்குவெனத்தேமாவால்.

ஈச பெரும, விருந்தொடு கைதூவா வெம்மையு மூ.
பெருந்தெருவிற் கொண்டாடி ஞாயர் பயிற்றத்
திருந்துபு நீகற்ற சொற்கள்யாங் கேட்ப
மருந்தோவா நெஞ்சிற் கமிழ்த மயின்றற்றுப்
பெருந்தகாய் கூறு சில ;

ஈசு எல்லிழாய், சேய்நின்று நாங்கொணர்ந்த பாணன்சிதைந்தாங்கே
வாயோடி யேனதிப் பாடிய மென்றற்று
நோய்காந் தணிக்கு மருந்தெனப் பாராட்ட
வோவா தடுத்தடுத்தத் தத்தாவென் பான்மாண
வேய்மென்றோள் வேய்த்திறஞ் சேர்த்தலு மற்றிவன்
வாயுள்ளிற் போகா னரோ ;

உஉ உள்ளி யுழையே பொருங்கு படைவிடக்
கள்ளார் படர்தக் கதுபோலத் தாமெம்மை
யெள்ளுமார் வந்தாரே யிங்கு ;

உடு ஏதப்பா டெண்ணிப் புரிசை வியலுள்ளோர்
கள்வரைக் காணது கண்டேமென் பார்போலச்
சேய்நின்று செய்யாத சொல்லிச் சினவனின்
ஞாண் கடக்கிற்பார் யார்;

உசு அகிர்வில் படிறெருக்கி வந்தென் மகன்மேன்
முதிர்பூண் முலைபொருத வேதிலாண் முச்சி
யுதிர்துக ளுக்கநின் னுடை யொலிப்ப
வெதிர்வளி நின்றுய்நீ செல் ;

ஊஊ இனியெல்லாயாம், தீதிலே மென்று தெளிப்பவுங் கைந்நீவி
யாதொன்று மெங்கண் மறுத்தர வில்லாயின்
மேதக்க வெந்தை பெயரோ யாங்கொள்வேங்
தாவா விருப்பொடு கன்றியாத் துழிச்செல்லு
மாபோற் படர்தக நாம்.

இது தலைவன் பரத்தையிற்பிரிந்து வந்துழித் தலைவி தன் மகனைத் தழீஇ வினையாடுகின்ற வினையாட்டின்கண், தன்வரவு அறியாமைச் சென்று நின்ற தலைவன் அவன் ஊடலுணர்வனவும் உறழ்த்து சொல்லி மகன்வாயி லாக ஊடலீர்த்தது.

இதன் பொருள்.

(க)மையற விளங்கிய (உ)மணிமரு (ங)ளவ்வாய்தன்
(கு)மெய்பெறு(டு)முழுமையின் விளங்குபூ ணணிந்தரப்
பொலம்பிறை யுட்டோழ்ந்த புனைவினீ *யுருள்கல
னலம்பெறு கமழ்†(ஙா)சென்னி நகையொடு துயல்வர
நி வருவெஞ்சா திடைகாட்டு முடைகழ லந்துகி
லரிபொலி (எ)கிண்கிணி யார்ப்பவா வடிதட்பப்

க. மெய்ப்பாடென்னும் செய்யுளுறுப்பிற்கு, "மையற..... .....என்னுயிர்" என்பது (தொல். செய். சூ. உ०ச. நச. உரையிலும்) "மையற ....பூணணைத்த" என்பது (தொல். செய். சூ. உ०ச. பே. இ - வி. சூ. நிசஅ. உரையிலும்) மேற்கோள்.

உ. (அ) "மணிமருளவ்வாய் .. ..புல்லவனே" அகம் கசு: ஙூ-நி.(ஆ) "மணி மருளவ்வாய்க் கிண்கிணிப்புதல்வர்" புறம். கசுஅ: ச - நி. (இ) "மணி புரை செவ்வாய்" கலி. எசு. அ; அகம். சுசு: கச.

ங. (அ)"மயிர்ப்புறஞ் சுற்றிய கயிற்கடைமுக்காழ்பொலம்பிறைச் சென்னி நலம்பெறத் தாழச், செவ்வாய்க் குதலை மெய்பெறு மழலை, சிந்துபு சின்னீ ரைம்படை கனைப்ப, வற்றல காவாச் சுற்றுபடப் பூந்துகி, ருெடுத்தமணிக் கோவை யுடுப்பொடு துயல்வரத், தளர்நடை தாங்காக் கிளர்பூட் புதல்வரைப், பொலந்தேர்ப் பிறைமுகப் வேழத், திலங்கு தொடி நல்லார் கிளர்ந்ன் முற்றி, யாலமர் செல்வன் மன்விழாக் கால்கோள், காண்டி னேனெனக் கண்டிற் குரும்" மணி. ங: கருடு - கசடு. (ஆ)"அழகிய வாயி லமுத வூறா ரெளிவுரு, மழலை மூற் றூத வினஞ்சொல்லால்" நாலா. பெரியாழ்வார். (க) நி: நி.

ச. "மெய்பெறு வெழுத்துயிர்க்கு மழலை" சீவக. கஅக.

ஞ. மழலை - இளஞ்சொல்; (அ) "வீளையா மழலையின்" சீலப். அ: கூஎ. (ஆ) "வீளையா மழலை வீளேந்து" மணி. ச: ஙஙு.

ரு. "மத்தக நித்திலம்" பரி. கசு: நி.

எ. (அ) "செல்வச் சிறுசிர் சீறடிப் பொலிந்த, தவுகோ லாய பொலஞ்செய் கிண்கிணி" தருநீ. கசஅ. (ஆ) "காலவை, சுடுபொன் வளைஇய வீரமை சுற்றெடு, பொடியழற் புறக்தந்த செய்வுறு கிண்கிண்" (இ) "கிண்கிணி யார்ப்ப வியலுமென், பேரியானே" கலி: அஇ: க-உ. அசு: கூ-கo; (ஈ) "கிண்கிணி கோத்தகா லொண்கழ றெடுப்ப" (உ) "கிண்கிணிப் புதல்வர்" புறம். எ: க. கஙஅ: நி) (ஊ) "தானரிச் சதங்கை யார்ப்பத் தவழ்கின்ற பருவத் தன்னில்" கம்ப. இராவணன்

(பிரதிபேதம்) * உருள்கலனம், † கண்ணிகையொடு.

(க)பாலோ டலர்ந்த முலைமறந்து முற்றத்துக்
(உ)காலவறோர் கையி னியக்கி நடை பயிற்று
(ங)வாலமர் செல்வ னணிசால்(சு)பெருவிறல்
போல வருமென் னுயிர்

எ - து: மாசற விளங்கிய (ஙி)மணியை ஒக்கின்ற அழகினையுடைய வாய் தன்னுடைய எழுத்துவடிவு பெறுத(சு)மழலைச்சொல்லைக் கூறுதலாற் பிறந்த நீராலே விளங்குகின்ற பூணை நனைத்தலைச்செய்யாநிற்க. நன்மை பெறுகின்ற கமழ்ந்தலையிற் கிடந்த பொன்னாற்செய்த பிறையுட் சேர்த்த முத்துவடத் தோடே நெற்றியிலே ஞாண்ற *புனைந்த வினையினையுடைய உருண்ட சுட்டி விளக்கத்தோடே அசைய, நிறத்தை ஒழியாமல் தன் நடிவே தோற்றுவிக்கும்

சோக. சசு. (எ) "கிண்கிணிக்கான் மைத்தர்" கூர்ம. தக்கனைச்சபித்த. அ. (ஏ) கிண்கிணிக்காற் புதல்வன்" காசி. அமுதேசன். எ.

க. "காலத்திற் றோன்றிய சொண்மூப்போ லெம்முலை, பாலொடு வீங்க" கலி. அஉ: உ - ங.

உ. "வைக, லெண்டோ் செப்புத் தச்சன், றிங்கள் வலித்த காலன் னேனே" (புறம். அஎ: உ - சு) என்பதும் 'தேர்க்காலோடி உவமை விரைவுந்திண்மையுமாகக்கொள்க' என்னும் அதன்பகுதியின் விசேட வுரையும் இங்கே அறிதற்பாலன.

ங. (அ) சிறப்புச்சொல், உயிரோடு சிறந்தானை உயிரென்றல் என்பர். சேனாவரையர்; தொல். கிளவி. சூ. இக. (ஆ) நச்சினார்க்கினியர் இவ் வாறுகூறி, "ஆலமர் ....உயிர்" என்பதை மேற்கோளும் காட்டுவர். (இ) உயர்திணை அஃறிணையாய்ச் சிறப்பின்கண் திணைமயங்கி வந்த தற்கு இதனை மேற்கோள்காட்டுவர். இ-வி. தாலார்; இ-வி. சூ. உகக. (ஈ) 'ஆலமர் செல்வன் மகன்" கலி. அங: கச என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

சு. 'பெருவிறல்' விறற்சொல்லென்பர் சேனாவரையரும். நச்சினார்க்கினிய ரும். தொல். கிளவி. சூ. இக. இள.

ஙி. மணி - பவளம்; மாணிக்கமுமாம்.

க. (அ) "பொன்னெடி குயின்ற பன்மணித் தாலித், தண்மார்பு நனைப் பதன் றலையு மிரீஇ, மணித்தகைச் செவ்வாய் பழுலையங் கிளவி, புலர்த்தகைச் சாந்தம் புலர்தொறு நனைப்ப" தொல். கற். சூ. க. நச். மேற்கோள்; (ஆ) "செந்துகிர்வா, யூறு நீர்நனை மார்பினு டினமகா ருள்ளி, யேறு மின்பமுள் ளதனையே யுடம்பென விசைப்பார்" சீகாளத்தி. கண்ணப்பர். கo.

(பிரதிபேதம்) * புனைந்த விழையினை.

உடுத்துதல் கழன்ற அழகினையுடைய(க)துகில்(உ)ள்ளிமணியாற்பொலிந்த சதங்கையொலிக்கும் ஒலிமாறாத அடியைத் தடுக்க, பாலாலே விம்மின முலையைமறைத்து முற்றத்தே உருளையோடுதல்(ங)வல்ல(சு)தேரைக் கையாலே செலுத்தி கடத்தலைக் கற்ற ஆலின்கீழ் அமர்ந்த இறைவனுடைய அழகமைந்த முருகனைப்போல வரும் என்னுயிரே ! எ - று.

கால்வலோர் வினைத்தொகையாதலின் 'மருவின்பாத்திய' வாய் நின்றது. *ஈனைத்தரத் தயல்வரத் தட்ப மறைத்து †இயக்கிப் பயிற்றுப் பெருவிறல்போல வரும் என்னுயிரே ! பெருமா ! பெருக்தகாய் ! யாங் கேட்பச் சில கூறென மேலுறுப்போடுமுடிக்க.

கக (ஞ்)பெருமை விருந்தொடு கைதூவா வெம்மையு முள்ளாய்ப்
பெருந்தெருவிற் கொண்டாடி (சு)ஞாயர் பயிற்றத்
திருந்துபு நீகற்ற சொற்கள் ‡யாங் கேட்ப
மருந்தோவா தெஞ்சிற் கமிழ்த மயின்றற்றுப்
பெருந்தகாய் கூறு சில.

‖எ - து: பெருமா ! பெருந்தகாய் ! நினது (எ)மழலைச்சொல்லைக்கேட்டே அவ்வினிமை மாறாத மனத்திற்கு, அமுதத்தை உண்டாற்போல இன்னும் இனிதாக, விருந்தினர் வருதலாற் கையொழியாத எம்மையும் நினையாயாய்த்

க. துகில், சிறந்த உடைவகையுள்ளொன்று; "பட்டுத் துகிலுமுடித்து" நாலடி. உசுச. "அரையது துகிலே மார்பினதாரம்" ஆசிரிய. "வண்ணத்துகில் ஓடுப்பின் வாய் விட்டழுவதுபோல் வருந்துமல்குல்" சீவக. உகஉடு. இது பலவகைப்படுமென்பர் அடியார்க்கு நல்லார்; சிலப் கச: கoஅ. வீசேடவுரை. கலி. கந்: ச. அந்: டு.

உ. ஆரியனென்பதற்கு, தவளையென்று பொருள்கொள்ளலுமாம்; "தேரை வாய்க் கிண்கிணி" கலி. அக: க. என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

ஙூ. 'கால்வலோர், வினைத்தொகை' என்பதை நோக்க வல்லினவென்றுவது வல்லுமென்றுவது இருக்கவேண்டுமென்று தோற்றுகிறது.

ச. ஆண்பாற் பின்னைத்தமிழ்களில் நெதேர்ப்பருவமெனப்படும்.

ஞ. தலைவியும் காமக்கிழத்தியைப் போலத் தன்மகனைக்கொண்டு வினையாடியவழி, தலைவிமாட்டுக் கூற்றுநிகழ்ந்ததற்கு, "பெருமை, விருந்தொடு கைதூவா.....எள்ளுமார் வந்தாரே யீங்கு" என்னும் பகுதிகள் மேற்கோள். தொல். கற்பி. சூ. க. இளம்.

ஙக. ஞாயர் - நின்றுயர்; என்றது, ஐவகைத்தாயருள் நொடி பயிற்றுவாரை.

ஙஎ. "அவர் மழலை கேட்ட லமிழ்தி னினிதே" இனியது. கடி.

(பிரதிபேதம்) * ஈனைத், † இயக்கிம் இயற்றிப்பெருவிறல், ‡ யான் கேட்பவருந்தோவா நெஞ்சிற் கமிழ்தயின்றற்றும், ‖ எ - து: நினதுமழலை.

தாய்மார் பெரிய தெருவிலே நின்னைக் *கொண்டாடிக் கற்பிக்கக் கற்பிக்க நீ அவர்பால் திருந்திக்கற்றசொற்களே யாங் கேட்கும்படி அதிலே லெயற்றைக் †கூறு. எ - று.

இது புதல்வனை நோக்கிக் கூறியது. மேல் தோழியை நோக்கிச் செய்தி கூறின்றுள்.

௧௬ எல்லிழாய்

எ - து: ஒளியுடைத்தாகிய பூணினையுடையாய்! ‡எ - று.

சேய்நின்று ‖ ஈங்கொணர்ந்த பாணன் நிதைந்தாங்கே
வாயோடி யேனுதிப் ÷ பாடிய மென்றற்றா
நோய்நாள் தணிக்கு மருந்தெனப் பாராட்ட
வோவா +தடுத்தடுத்(த)தத் தந்தாவென் பான்மாண
× வேய்மென்றோள் வேய்ந்திறஞ் சேர்த்தலு மற்றிவன்
வாயுள்ளிற் போகா னரோ.

எ - து: நாம் பழக்கங்கொண்டு போக்கு பாணன், நீ இப்பொழுது எவ் விடத்தாயென்று வினவ, பரத்தையர் கூற்றிலே மனந் தங்கி நமக்குச் சேயுனைநின்று =வாயிற்கூறும் மொழிகளைந்து ஏனுதிப்பாடியிடத்தேமென்ற தன்மைத்தாக, நாம் நம்முடையநோயைத்தணித்தற்குக் காரணமாகிய மருந் தென்று கருதிப், ∴பாராட்டாநிற்க, மாறுமல் அடுத்தடுத்து அத்தா அத்தா வென்று கூறின்றவனை அவன் தவறு பாராது நம்முடைய வேய்போலும் மெல்லிய தோள்களிலே மாட்சிமைப்பட ஏறட்டுக்கொள்ளுங் கூற்றிலே ஏறட்டுக்கொண்ட அளவிலும், பின்னேயும் இவனுடைய வாயிடத்தினின்றும் போகானுயிராநின்றுன்; இதற்குக் காரணமென்னென்றுள். எ - று.

வாய்ளைக்கென்க. ஏனுதிப்பாடி-(உ)ஏனுதிப்பட்டங் கட்டினுனெருவன் ஏற்றிய பரத்தையர்சேரி. தான் இல்லறமே பூண்டு புதல்வனைக்கொண்டு

க. "அத்தத்தாவென்னு நின், றேமொழி" கலி. அ0: ௧௪ - ௧௫.

உ. ராஜ பதத்திற்கு அடுத்தபதம் சேனுபதிபதமென்றும் அது மந்திரி பதத்திலும் சிறந்ததென்றும் தெரிகிறது. ஏனுதி யென்னுஞ் சொல், 'பாண்டியன் ஏனுதி கெடுக்கண்ணனுர்' அகம். ஈஎஈ. 'ஏனுதி திருக்கின்னி', 'மலையமான் சோழியவேனுதி திருக்கண்ணன்', 'சோழிய ஏனுதி திருக்குட்டுவன்' புறம். ௧௬, ௧௮, ஈ௯. என உரை கடை யிலும், 'சோழிக வேனுதி தன் முக நோக்கி" மணி. உ: உ0இ.எனச் செய்யுளடையிலும் பயின்றவருகிறது. இதனை ஈறுகுறைந்த சொல்

(பிரதிபேதம்) * கொண்டாடிக்கற்பிக்கர், † கூறெனப் புதல்வனை நோக்கிக்கூறினுன் எல் லிழாய்.‡ எனத்தோழியைநோக்கிப் பின்னைச்செய்கிறுன்னென் சேய். ‖ தாங் கொணர்ந்த, ÷ பாடியோ மென்ருக, + எடுத்தெடுத்த, × வேயுமென் ருேளிறஞ். =வாயாதகூறுங்கூற மொழித்து, ∴பாராட்டினிற்க.

வீளியாடுதலே * இனிதென்று இருத்தமை தோன்ற நோய்தணித்தற்குப் பின்னையை மருந்தென்றுள். "நிறைந்த செய்கை யவ்வழித் தோன்றி, யறம்புரி யுள்ளமொடு தன்வர வறியாமைப், புரஞ்செய்து †பெயர்த்தல் வேண்டிடத் தானும்" (க)என்பதனுள், தலைவன் இவள் பூதல்வதினுடு வீளியாடுகின்ற மனை

லென்றும் நன். பத. சூ. கஉ. சிறப்புப் பெயரென்றும் நன். பொது. சூ. சஉ. கூறவர் மயிலைநாதர். இவனைத் தளவீரருக்கு மேலதிகாரி என்பர் நீலகேசி யுரையாசிரியர். நீலகேசி. சூ. குண்டல. சஅ. இவனுக்கு அரசன் தன் போரையில் தன்கையினுலே நெற்றிக்கு எனநிப்பட்டமும், வீரருக்கு எனநிமோதிரமும் அணிவது மரபு. இதனை, "போர்க்கடல் லாற்றும் புரவித்தேர்ப் பல்படைக்குக், கார்க்கடல் பெற்ற கரையன்றே - போர்க்கெல்லாக், தானுமியாகிய தார்வேந்தன் மோதிரஞ்சே, ரேனைப் பட்டத் திவன்" என்றும் (தொல். புறத். சூ. அ. மேற்கோள்). செய்யுளும் 'உவகையின் மலிந்தாண் டுறையும் காலை, யுயர்பெருந் தொல்சீ ருருமண் ணுவாவிற், கெழுதா டோறு மூழுகர் புகழப், படிவ முத்திக் கடிகைக் கணனு, மைம் பெருங் குழுவு மத்தி கோசமு, மன்பெருஞ் சிறப்பின் மனைப்பெருஞ் சனமுந், தேனோர் தீஞ்சொற் றேவி மார்களுந், தானையுஞ் சூழத் தானே யணிந்தது தன். னைமோதி ரன்னுட்கொண்டு, சேனு பதிபிவ னுகெனச் செறித்துப், பன்னூறாயிரம் பாடிகின்ற வருவன, மன்னூர் வேண்டுவ மற்றவற் கீத்துக், குதிரையுக் தேருங் கோமகருப் பியானையு, மெதிரிய சிறப்போ டெனைப்பலரல்கி" பெருங். (ச) கூ. க-கச. என்னுஞ் செய்யுட்பகுதியும். "ஆழிதொட்டான்" என்பதற்கு எனநிமோதிரஞ்செறித்த சேனபதி என்றும் "ஆழ்கடல் வையத்தில்லா வருநிதியாசு நல்ல, சூழ்மணியாழி செம்பொற் சுட்டொடு கண்ணி காத்தற், றோழற்கட் கருளி" என்பதற்கு, 'மன்னவன். காத்தற்றோழர் தட்கு உலகில் வேறுசிலர்க்கில்லாத பழைய அரசையும் எனநிமோதிரத்தையும் செம்பொனுற் செய்த பட்டத்தையும் கண்ணியையும் நிதியையும் அருளி' என்றும் எழுதியிருக்கும் உரைகளும். சீவக. உகசுஎ. உதிகூக. "மண்பட்ட வார்த்தனரு மண்மருட வார்த்தனரு முறையால்வணங்க வொளிகா, னண்பட்டமுற்தனது கையா லணிந்து படை காலுக்கு நாயகமெனு, மின்பட்ட வோடைதுத லிபராசன் வன்பிடரின் மிசைவைத் திகந்தன னரோ, வென்பட்ட தப்பொழுது குருசேனை மெய்ப்புனக மெழவொண்கண் முத்த மெழவே." வில்லி. பதினெட்டாம்போர். கூ. என்னுஞ் செய்யுளும் வலியுறுத்துவ. கந்த. திருவீளையாட்டுப். கஉ0-கூக - ஆம் செய்யுட்களும் இங்கே அறிதற் பாலன.

க. தொல். கற்பி. சூ. கூ. இப்பகுதியினுரையில் இச்செய்திக்கு இச் செய்யுளை மேற்கோள் காட்டினார் கச்சினார்க்கினியர்.

யறத்தினைக் காணவேண்டி மறைந்து இவள்பின்னேநிற்ப, எதிராக நின்ற தலைவனைக் கண்டு பின்னே அத்தா அத்தாவெனவும், எதிர்நின்ற தோழி முதலியோர் தன்னைக் கண்டு (க) ஆசாரஞ்செய்தாற் றலைவி அறிவனென்று அவர்களே ஆசாரஞ்செய்யாமற் கைகவித்தலிற் றோழி ஆசாரஞ்செய்யாதிருத்தலின், தலைவன் அவள் பின்னின்றதை உணராமல் தோழியை வினவினாள்.

உஉ உள்ளி யுழையே பொருங்கு படைஇடக்
கைகள்ளர் படர்தக் ததுபோலத் தாமெம்மை
(உ)யெள்ளுமார் வந்தாரே யீங்கு.

எ-து: அங்ஙனம் வினவின தலைவி தோழிகுறிப்பானும் புதல்வன் அத்தா அத்தாவென்றதனானும் தலைவன் வந்தவாறு (ங) கண்டு பகைவரைநினைத்து அவரிடத்திற் படைக்கலங்களைச் சேர விடுதற்குக் கள்வர் வருதலைச் செய்தல் போல இவ்விடத்தே தாம் எம்மை இகழ்தற்கே வந்தார்; நம்மேல் அன்பாக வந்தாரல்லரெனத் தலைவன் கேட்பத் தோழியைநோக்கிக் கூறினாள். எ - று.

தலைவி துனி போக்குதற்கு, தலைவன் இங்ஙனம் வந்தான்.

உடு ஏதப்பா டெண்ணிப் புரிசை விபுலுள்ளோர்
கள்வரைக் காணாது கண்டேமென் பார்போலச்
சேய்நின்று செப்பாத சொல்லிச் சினவ(உ)னின்
ஞாண் கடக்கிற்பா யார்

எ - து: அதுகேட்ட தலைவன் மதிலையுடைய ஊரிற் காவலாளர் கள்வரைக் கண்ணுற் காணாதிருக்கவும் அவரால் வருங் குற்றத்தைக்கருதி இங்கே கள்வரைக் கண்டேமென்று கூறுவாரைப்போலே முன் நில்லாது ஒருசிறைப்

க. எழுந்து வணங்குதல் முதலிய ஒழுக்க முறை.

உ. மாரீற்று வினைமுற்றுச்சொல் பல்லோர்படக்கையாய்ப் பெயர்கொள்ளாது வினைகொண்டு முடிதற்கு, "எள்ளுமார் வந்தார்" என்பது மேற்கோள்; தொல். வினை. சூ. கo. சேனா. நச்சினார்க்கினியரும் இ - வி. உரையாசிரியரும் இதற்கு இவ்வடியை மேற்கோள் காட்டி, மார் உகரத்தை அடுத்துநின்றது என்பர். தொல். வினை. சூ. கo. இ-வி. சூ. உசுஉ. "சாய்மார்" (கலி. அo: கக.) என்பதற்கு நச்சினார்க்கினியர் எழுதியிருக்கும் இலக்கணக்குறிப்பும் இங்கே அறிதற்பாலது.

ங. காணல் - விளங்க அறிதல்.

ச. தலைவன் தன்றவறு பெரிதாகிய இடத்துத் தலைவிமுன் பணிந்து கூறுங் கூற்றிற்கு, "நின், ஞாண் கடக்கிற்பார் யார்" என்பது மேற்கோள்; தொல். கற்பி. சூ. கக. நச்.

(பிரதிபேதம்) * கள்வர் படைத்தது.

போய் நின்று யான் செய்யாத குறைகூறிச் சினவாதேகொள்; நின் ஆணைவழி ஒழுகுதலன்றி ஈண்டு நின் ஆணையைத் தப்புவார் யாரென்ருன். எ - று.

'சேய்நின்று செய்யாத சொல்லிச் சினவல்' என்றது(க)புலவிபொருளாக அச்சம்பிறக்கது. அது "நின் றூணி பிரிவி னஞ்சி யையுளும்" என்னும்(உ) விதியான் உணர்க.

உக அதிர்வில் படிறெருக்கி வந்தென் மகன்மேன்
முதிர்பூண் முலைபொருத (ங) வேதிலரண் முச்சி
யுதிர்துக ளுக்கதின் ஞடை யொலிப்ப
வெதிர்வளி நின்றுப்பீ செல்

எ - து: அதுகேட்ட தலைவி *நெக்கில்லாத வஞ்சனையாலே வருத்தி என் மகன்மேல் வேட்கைநீழ† னையாயாய் வந்து, பூண்னையுடைய முதிர்ந்த முலைகளால் நின் மார்பொடு பொருத பட்டைமுடியினின்றும் உதிர்ந்த துகள் செற்றிக்கிடந்த நின்ஞடையது தானே விளக்கக் காற்றின் எதிரே நின்ருய்; இவ்வனம் நில்லாதே போவென்ருள். எ - று.

படிறெருக்கி - வஞ்சனையைப்பாக்கியென்றுமாம். ஆடையெதிர்ப்பவும் பாடம்.

ஙஉ இனியெல்லாயாம், (சு)தீதிலே மென்று தெளிப்பவுங் கைந்நீவி
யாதொன்று மெங்கண் மறுத்தர வில்லாயின்

க. புலவிபொருளாக அசசம் பிறந்ததற்கு, "சேய் நின்று ... ...யார்" என பதை மேற்கோள் காட்டினர், பேராசிரியரும்; தொல். மெய்ப். சூ. அ.

உ. தொல். கற்பி. சூ. கி. இசுருத்திரப் பகுதியின் உரையில், "எப்பா டெண்ணி..... .....கடக்கிற்பார்யார்" என்பதனை மேற்கோள்காட்டி, சேய் நின்று என்றதனால் தூணித்து நின்றவாறும் சினவலென்றதனாற் பிரிவுநீட்டித்தவாறும் நின்னினை கடக்கிற்பார்யா ரென்(றதனால்) அஞ்சியவாறு கூறியவாறுங் காண்க. என்றனர், இவ்வுரைகாரர்.

ங. "ஒருஉக், தொடியய னல்லார் குரனுற்ற துற்ற, முடியுநர் பூந்தா துமொய்ம்பின வாகத், தொடிய வெமக்குரி யாரை" கலி. அக: க-ங.

ச. கற்பிடத்துத் தலைவி கூடியவழித் தலைவன்தேற்றத் தேறுமெல்லே இகந்த பொழுது தலைவன் கூடுதற்கு, 'தீதிலே மென்று..... மறுத்தர வில்லாயின்" என்பது மேற்கோள்; தொல். கற்பி. சூ. கஞ். நச்.

(பிரதிபேதம்) * வஞ்சனேயும், † நீயாய்வந்து.

மேதக்க (க)வெந்தை பெயரோ யாங்கொள்வேம்
தாவா (உ)விருப்பொடு கன்றியாத் தழிச்செல்லு
*மாபோற் புடர்தக நாம்

எ - து: அது கேட்ட தலைவன், எழு! யாம் தீங்குடையேமல்லேமென்று ஞாறவும், அசாருறவைக் கைகடந்து யாம்மிடத்துச் சிறிதும் தளர்த்தநிலைமை மீட்சியில்லையாயின், தன்கன்றைக்கட்டின இடத்தே தொடர்ந்துவிருப்பத்தோடே செல்லும் பசப்போலத் †தாம் இனி நம்பாற் படர்தல் தகும்படி, மேம்பாடுதக்க எந்தை பெயரோ யாம் எடுத்துக்கொள்ளுவேம். ‡எ - று.

(க)காமென்றது இடவழு||வமைதி. தாமென்றும் பாடம். "முறைப்பெயர் மருங்கிற் கெழுதகைப் பொதுச்சொ, னிலேக்குரி மரபி னிருவீற்று முரித்தே" (சு) என்பதனுல் எல்லா — வென்றுள். புதல்வனை வாக்கலே தனிதீர்ந்தா

க. "அகன்பெருஞ் சிறப்பிற் றந்தை பெயரன்" ஐங்குறு. சஅக. என் பதும், கலி. எதி: உச-இன் குறிப்புரையுள்ள பாகவதசெய்யுளும் ஈண்டு அறிதற்பாலன.

உ. (அ) "கன்றமர் கறவை மான, ...வருமே." (ஆ) "கற்ருவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே" (இ) "கன்றுகாண் கறவை யிற் சென்றவட் பொருந்தி" (ஈ) "தனிக்கன் றுள்ளிய புனிற்றுப் போல, வீடைவிற் செல்லும் விருப்பின ஞெ" (உ) "கன்றுபிரி கற்ருப்போற் கற்றவித்தி" (ஊ) "கன்றுகாண கறவை யன்ஞன்" (எ) "கன்று பிரித்தழிக், கறவையொப்பக் கரைத்து கலங்கினுன்" (ஏ) "தாயருக் கன்று சார்ந்த கன்றெனத் தகைய ஞனுன்" (ஐ) "கனைத்தன் கன்றை சோக்கிக் கடைத்துசெல் புனிற்றுப் போல,... ....எதிர் போந்தான்" என்பவைகளும் (ஒ) "கறவைதம் பதி வயிற், கன்றமர் விருப்பொடு மன்ற நிறை புகுதர" (கலி. ககக: க - கo.) (ஓ) "தொழுதெழுவி னூட்டப்பட்ட கன்றிற்கு சூழும், கடுஞ்சூலா" கலி. கக0: கக - ச. (ஔ) "கன்றுசேர்க் தார்கட் கதவிற் றுய் சென்ருகு, வன்கண்ணு னாய்" (கலி. ககக.) என்பவைகளும் அவற்றின் குறிப்புக்களும் இங்கே அறிதற்பாலன.

கூ. தலைவன், நாமென்றது தலைவியை ஆகலின் இடவழுவமைதியென்ருர். "நங்கையிவ ளெனைநெரு னடந்தவரோ நாமென்ன" (கம்ப. சூர்ப்ப. ககச) என்பது இங்கே அறிதற்பாலது.

சு. தோல். பொருளி. சூ. உக. இளுரையில் இவ்வரைகாரர், "அதிர்வில்..... .....ஈ கெல்; இனியெல்லா" என்ற பகுதிக்கே மேற்கோள் காட்டி, தலைவன் தலைவியை எல்லாவெனவிளித்துக்கூறலின் வழுவமைத்தென்பர்.

(பிரதிபேதம்) * ஆபோல் படர, † காம் இன், தான் இனி. ‡ என்று புதல்வன் வாக்கலே, || அமைதி முறைப்பெயர். ÷ என்ருன் சென்றதை,

ளாயிற்று. மறத்தர வில்லாயி னெனவே இறந்துபடுவனென்று * தணி நீர்ந்தான். "தரணத்தி னமைந்து" என்னும் (க) சூத்திரத்தில், "சென்றகை யிகந்து பெயர்த் தள்ளிய † வழியும்" என்பதனுள் உணர்க.

இதனுள், தலேவிக்கு எள்ளலும் தலேவற்கு அசைவும் பிறந்தது.

இது "வெளிப்பட" (ச) என்றதனுள், இயற்கிர்னையொன்றிப் பாவேறு பட்ட தரவும் போக்கும் ஐஞ்சீர்மிக்கிவந்த வாட்டும் வந்த கலிவெண்பா. (கசு)

(அஉ.) ஞாலம் வறந்தீரப் பேய்பய நுணங்கீர்ப்
காலத்திற் றேன்றிய கொண்மூப்போ லெம்முலே
பாலொடு வீங்கத் தவகெடி தாயினே
புத்தேளிர் கோட்டம் வலஞ்செப் திவனெதி
புக்க வழியெல்லாங் கூற;

சு கூறுவேன், மேயாய போல மினளி வழிமுறைக்
காயாமை வேண்டுவல் யான் ;

காயேல்;

கூ மடக்குறு மாக்கணோ டோரை யாக
மடக்கமில் போழ்தின்கட் டந்தைகா முற்று
தொடக்கத்துத் தாயுழைப் புக்காற் கவஞ
மருப்புப்பூண் கையுறை பாக வணிந்து
பெருமா னகைமுகங் காட்டெம்மாள் கண்ணீர்
சொரிமுத்தங் காழ்சோர்வ போன்றன மற்றும்

கஞ வழிமுறைத் தாயுழைப் புக்காற் கவஞ
மயங்குகோய் தாங்கி யகனெதிர் வந்து
முயங்கினண் முத்தின மேணக்கி நீணோக்தே

க. தோல். கற்பியல். சூ. நே. இச்சூத்திரப் பகுதிக்கு, தலேவன் ஆற்று ளுய்த் தணியைத்தீர்த்தற்கு அவளே அணுகச்சென்று. அவன் மெய்க் கட்கிடந்த தவதகண்டு தலேவி அழுளாய் நீக்கிநிறுத்தலானே அவன் ஒருவாற்றன் அவளாறுமையைச் சிறிது மீட்கையினலே அவன் கூடக்கருதிய விடத்தும் தலேவன் கூற்று நிகழும் என்று பொருள் கூறி, "அதிர்வில்..... காய்" என்ற பகுதிகளே மேற்கோள் காட்டினர்; இவ்வுரைகாரர்.

உ. தோல். செய். சூ. கஞஞ.

(பிரதிபேதம்) * தணிர்ந்தான் எனமென்றது. † யகையாதலாக.

நினக்கியாம் யாரே மாகுது மென்று
வனப்புறக் கொள்வன நாடி யணிந்தன
உ0 ளாங்கே, யரிமத ருண்கண் பசப்பதோய் செய்யும்
பெருமான் பரத்தைமை பொவ்வாதி யென்ரு
ளவட்கினி தாகி விடித்தனன் போகித்
தலேக்கொண்டு கம்மொடி காயுமற் றீதோர்
புலத்தகைப் புக்கீதனில் புக்கா னலேக்கொரு
உடு கோரு நினக்கவன் யாரா குமெல்லா
வருக்கியா கோப்கூ றுந்தையை யென்றும்
பருக்தெறிக் தற்றகக் கொள்ஞ்கொண் டாங்கே
தொடியு முகிரும் படையாக நுந்தை
கடியுடை மார்பிற் பிறகன்ரு மூட்கான்
கூ0 வடுவஞ் குறித்தாங்கே செய்யும் விகினி
யன்ன பிறவும் பெருமா னலவ்வயிற்
றுன்னுத லோம்பிக திறவதின் முன்னிரீ
யையமில் லாதவ ரில்லெழிப வெய் போலத்
தையா றுடையவ ரில்லல்லாற் செல்ல
கூடு லமைக்க தினிரின் றெழில்

இது புத்தேளிர் கோட்டம் வலஞ்செய்வித் துக்கொண்டு வருதற்குச் சேடியருடன் மகற் போகிய தலைமகவ அவன் நீட்டித்து வந்தவழித் "தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனே, மாயப் பரத்தை யுள்ளிய வழி" (க)யால், தலைமகன் சிறைப்புறத்தானகச் சொல்லியது.

இதன் பொருள்.

(உ)ஞாலம் வறந்தீரப் பெய்யக் (கூ)குணகோர்பு
காலத்திற் றோன்றிய கொன்மூப்போ (ஏ)லெம்முலே

க. தோல். கற். சூ. கூ.

உ. "காவேறஞ் கூரினுமிவ் வோவேறஞ் கூரா து" மணி. கச: கஉ.

கூ. (அ)"குணகடல் கொண்டு.....வான்ஞெடிர்ந்து, சிதரற் பெரும்பெயல் சிறக்கலின்" மது. உகஅ - உசச. (ஆ) "குணகடன் முகந்த கொண்மூ வானம் .....பெருமலே மீமிசை முற்றின வாயின" அகம். உஎஅ: க - கூ.

ச. "சென்ரு, புனலிலே, யூட்டலென் றீம்பால் பெருகு மனவெல்லை, நீட்டித்தகாரணமென்" கலி. அகூ: ச.- கூ.

(க)பாலொடு வீங்கத் தவநெடி தாயினை
(உ)புத்தேளிர் கோட்டம் வலஞ்செய் திவனெடு
புக்க வழியெல்லாங் கூறு

எ - து: உலகம் வற்கடம் நீங்கும்படி பெய்தற்குக் கிழக்கே எழுந்து கூதிர்க் காலத்தே தோன்றிய மேகம்போல எம்முடைய மூலை பாலாலே விம்மும்படி நீபோனகாலம் மிகவும்நீட்டித்தனைக் கூறும்நிலையிலே யாயினை; ஆதலால், தேவர்கோயில் வலம்வந்து பின்னர் இவனெடே நீ சென்ற இடங் களையெல்லாம் எமக்குச்சொல்லென்றாள். எ - று.

கூ கூறுவேன், மேயாயே போல வினவி வழிமுறைக்
காயாமை வேண்டுவல் யான்

எ - து: அது கேட்ட தோழி. யான்கூறுவேன்; கூறுகின்றதனை மேலை யேபோலக் கேட்டு அதன்பின்னுங்கு கோபியாதிருத்தலே யான் நின் னிடத்தே பெற வேண்டுவே னென்றாள். எ - று.

தாயம்

எ - து: அதுகேட்ட தலைவி, யான் சின்னைக் கோபியேன் நீ கூறுகின்ற வற்றையெல்லாங் கூறென்றாள். எ - று.

கூ மடைக்(ங)குறு மாக்களோ (டு)டோரை யயரு
(ற)மடைக்கமில் போர்த்தின்கட் டங்தைதா முற்ற

க. "பாலோ டலர்ந்த மூலை மறந்து" கலி. அக: எ.

உ. (அ) "தக்கியா னரக்கவும், கைதில்லோ மீங்கெ, சுரந்தவென் மெண் முலைப் பால்பழு தாகீ. கல்வாயிற் போர்த்த பொழுதினு மெல்லா, கடவுட் கடிகைத்தோ றுமினே, வலம் கொளீ இ வாவெனச் சென்றாய் விலங்கினே. யீரமிலாத வினந்தை பெண்டிருள், யாரிர் தவிர்த்தனே கூற" கலி. அச: கூ - கூ. (ஆ) "குன்றே யனைய கடவுட் குலம்வலங் கொண்டு வந்த, தெ](ரு, கெ)ன்றே விடுத்திருவினை யேயிரி யெங் கையர்பாற், சென்றே வருக மறக்கவின் றேசெம்ம லூன்செல்வல், கன்றே புனக்குங் கசர்தன வோவிச் கனதனமே" அம்பிகா. ஒ0இ.

கூ (அ)"ஒண்குறமாக்கள்" மது. சகக.(ஆ)"இறுகுறமாக்கள்" நற். உஉ0: ச. (இ) "ஊர்க்குறு மாக்கள் வெண்கோடி கழாவின்"(ஈ) "ஊர்க்குறு மாக்க ளாட" (உ) "பல்குறு மாக்கள்" புறம். கூச: க, கoச: உ, கஙிக: எ.(ஊ) "அடர்க்குறு மாக்களொடு" (எ)"ஊர்க்குறு மாக்களும்" மணி. கசு: சo; கஙி: ஙிக.

ச. "கற்றறிந்தார் கண்ட தடக்கம்"

ஙி "பல்வேறு புதல்வர்க் கண்டு கனி யுவப்பினும்" என்னுஞ் சூத்திரப் பகுதியுரையில், "ஞாலம் வறந்தீர வெண்ணும் மருகக் கலியுன்,

தொடக்கத்துத் தாயுழைப் புக்காற் கவளு
மருப்புப்பூண் கையுறை யாக வணிந்து
பெருமர னகைமுகங் காட்டென்பாள் (க)கண்ணீர்
சொரி(உ)முத்தங் காழ்சோர்வ போன்றன மற்றும்
கரி வழிமுறைத் தாயுழைப் புக்காற் கவளு
மயங்குநோய் தாங்கி மகனெதிர் வந்து

'அடக்கமில் .....போன்றன' என்பது முதிர்ந்தாள் உண்ணவந்து கூறியது. 'மற்றும், வழிமுறை .....அணிக்தனன்' இதனுள் நோய் தாங்கின னென இளமைப்பருவத்து மிழிச்சியும் முதிர்ந்த பருவத்து மறவியுந்தோன்றக் கூருமையினுனும் வழிமுறைத்தாய் என்னை யானும் இஃது இடை நிலைப்பருவத்தான் கூற்று. 'அவட்கெனிதாகி .....புக்கான்' என்றவழி, புத்தேளென்றதுவும் தலைநின்றெழுகு மினையோனைக் கூறியது" என்ற (தொல். கற்பி. சூ. கo.) நச்சினார்க் கினியரும், "முதலொடு புணர்ந்த" என்பதனுரையில், "ஞாலம்வறக்நீர வென்னு மருதக்கலியுள், 'அடக்கமில் .....புக்கான்' எனவும் 'வழிமுறைத் தாயுழைப் புக்கான்' எனவும் 'புத்தவளில் புக்கான்' எனவும் வருவனவற்றுள், தொடக்கத்தித்தாய், வழிமுறைத்தாய், புத்தவள் இவ்வாறு வகுத்திக் கூறக் கேட்கின்ற காமக்கிழத்தி யென மனேவியர் நால்வருளரன்றே! அவரெல்லாரையும் கூறுது மனைக்கிழத்தியர் இருவரென்றதனற் பயனின்றேயெனின், அவரெல்லாரும் இரண்டாகிய காமக்கிழத்தியென்ற இரண்டுபெருப்பினுள் அடங்குப என்க" என்றும். (தொல். களவி. சூ. கக.) "புல்லுதன் மயக்கும்" என்பதனுரையில், 'பிறவும்' என்றதனுல், தலைமகட்குரித் தாகச் சொல்லப்பட்டவற்றுள் ஒப்பன கொள்ளப்படும் என்று கூறி, "ஞாலம் வறக்நீரவென்னு மருதக்கலியுள், 'அடக்கமில்..... புக்கான்' எனவும். 'வழிமுறைத் தாயுழைப் புக்கான்' எனவும் 'தலைக் கொண்டு..... .....புக்கான்' எனவும் கூறுதலிற் புதல்வனை ஈன்ற ஒன்று மூன்றாகிய காமக்கிழத்தியாயினாரும் இவன் மாட்டுத் தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை, மாயப்பரத்தை புன்னிலக் கூற்று நிகழ்த்த வாறும் கண்டுகொள்க" என்றும் (தொல். கற்பி. சூ. கo.) இளம்பூரணரும் எழுதியிருப்பவை இக்கே ஆராய்தற்பாலன.

க. "கலங்காவுள்ளங் கலக்கக் கடைவெர்து, விலங்கி நிமிர் நெடுங்கண் புலம்புமுத் தாறைப்ப" சிலப். சு: எo - எக.

உ. "முத்த கோப்பு புணர்காழ்" பரி. கக: இ.

முயங்கினண் *முதின ணேக்கி நினோன்தே
†நினக்கியாம் யாரே மாகுது மென்று
வனப்புறக் கொள்வன நாடி யணிந்தன
உo ளாங்தே, யரிமத ருண்(க)கண் பசப்பநோய் செய்யும்
பெருமான் ‡பரத்தைமை யொல்வாதி யென்ரு
(உ)ளவட்கினி தாகி விடுத்தனன் போகித்
தலேக்கொண்டு நம்மொடு காயுமற் றீதோர்
புலத்தகைப் ||புத்தேளில் புக்கர(ங)னலேக்கொரு
உடு தோரு நினக்கவன் யாராகு மெல்லா
வருந்தியா நோய்கூர நந்தையை யென்றும்
(ச)பருந்தெறிந் தற்ருகக் கொள்ளுங்கொண் டாங்கே
(டு)தொடியு முகிரும் படையாக நந்தை
÷கடியுடை மார்பிற் சிறுகண்ணு முட்கள்
கூo வடிவுங் குறித்தாங்கே செய்யும் விடுவினி
யன்ன பிறவும் பெருமா னவல்வயிற்
றுன்னுத லோம்பித் ×றிவதின் முன்னிநீ
யையமில் லாதவ ரில்லெழிய வெம்போலக்
கையா றுடையவ ரில்லல்லாற் செல்ல
கூடு (கூ)லமைந்த தினிதின் றெழில்.

க. இந்நூற் பக்கம் உஎக: ச, ஙி ஆம் குறிப்புக்கள் பார்க்க.

உ. தலேவனிலும் தான் புதல்வற்குச் சிறந்தாளாதி அவன் காதலித்த பரத்தையர் மாட்டிச்செல்லாமல் புதல்வனேத் தன்பாற் சிறைசெய்த தற்கு "அவட்கினிதாகி..... .....தின்றெழில்" என்பது மேற்கோள்; தொல். கற்பியல். சூ. கூ. நச்.

கூ. "மகளெனு, தானே புகுதந் தோனே யானது, படுத்தனெ ஞருத ஞணி யிடித்திவர், கலக்கினன் போலுமிக் கொடியோ னெனச்சென், றலேக்குங் கோலொடு குறுகத் தலேக்கொண்டு" அகம். கூக: கஎ-உக.

ச. "பாரூங்கெனப் புகப்பாய்ந்தவ னெடுவில்லினைப் பறித்தான்" கம்ப. அதிகாயன். ககஅ.

ஙி. இந்நூற்பக்கம் சகo: உ-ஆம் குறிப்பும் சகடு: க-ஆம் குறிப்பும் பார்க்க.

க. "அமைதல்" என்பது தவிர்தலென்னும் பொருளில் வருதற்கு இவ் வடி மேற்கோள். தீவத. கூஅஉ.

(பிரதிபேதம்) * முகத்தினிருேக்கி. † நினக்கியாமேம், ‡பரத்தமை, || புத்தவனிற் புக்கான். ÷கடியுண்ட × தறவதன்முன்னினி.

எ - து: அதுகேட்டசேடி, மடப்பத்தையுடைய நெறிய(க)அறிவில்லாத மகளிரோடே (உ)ஒரைப்பாவையைக் கொண்டு வீளையாடும், வேண்டியவாறு ஒழுகும் பொழுதிலே இவன் தன்தை விரும்பின * பரத்தமை தொடங்கு கின்ற காலத்துளளாகிய தாயிடத்தேசென்றவனுக்கு அவளும்(ங)இடப இலச்சினையைக் (ச)கைக்காணியாக இட்டு, பெரியோனே! நின துநெஞ்சினையுடைய முகத்தை யான் முத்தங்கோடற்குக் காட்டென்று கூறுகின்றவளுடைய சொரிகின்ற கண்ணீர்கள் முத்துவடங்கள் முத்தங் கழன்று விழுவனபோலே இருந்தன; பின்னே அவட்குப் பின்னர்வந்த தாயிடத்தே சென்றவனுக்கு அவளும் மனம் மயங்குதற்குக் காரணமான காமநோயைப் பொறுத்துத் தன் மகனென்றிருந்து தழுவிக்கொண்டு பின்னர் முத்தங்கொண்டு இவனைப்பார்த்து, தலைவன் தன்னைக் கைவிட்ட தன்மையை நினைந்து நினக்கு யாங்கள் தாயாகின்ற முறைமை எம்மிடத்தின் நீங்கினமையின் இனி எம்முறையே மாவேமென்று கூறி இவனுக்கு அழகு மிருப்படி இவன் வடிவு தாங்கும்படி யான (ஞ)பிள்ளைப்பருவத்தை ஆராய்ந்து அணைத்தபொழுதே, மகளிருடைய செவ்

க. (அ) "மாவு மாக்களு மையறி வினவே," "மக்க டாமே யாதறி வுவிரே," தொல். மரபு. சூ. கூஉ, கூஈ. (ஆ) "அவமறிப்பு மான்ற மதிப்பு மிரண்டு, மிகைமகளானமதிக்கற்பால-நயமுணராக்கையறியா மாக்களிழிப்பு மெடுத்தற்பாற்றும், வையார் வழக்குரை யார்" நாலடி. சுகூஈ. என் பவையும்(இ)"தவஞ்செய் மாக்க டம்மூடம் பிடாஅ, ததன்பயமெய்திய வளவை மான" பொருந. சுகூ - சுஉ என்புழி, 'மக்களென்னுதல் மாக்களென்றார்; வீடுபேறு குறியாது செல்வத்தைக் குறித்தலின்' என்றும் (ஈ) "மூவறு பாடைமாக்களால்" சீவக. சுகூ, என்புழி, 'மிதிலைச ராதலின், ஐயறிவிற்குரிய மாக்களென்னும் பெயராற கூறினர்' என்றும், (உ) "கோபின் மாக்கள் மலைதிறக்திட்ட தொத்தார்" சீவக. சுஉஅ. என்புழி, 'மக்கட்குரிய மனனின்றி அறிவுகெட்டமையின், ஐயறிவுடையரென்று மாக்களென்றார்' என்றும் இவ்வுரையாளர் எழுதியிருக்கும் விசேடவுரைகளும் (ஊ) 'ஐயறிவா மாக்கட்கன்றி நாலியற்றும் அறிவினையுடைய மக்கட்கு' என்னும் நச். வி. சு. சுஉஎ. விசேடவுரையும் இங்கே அறிதற்பாலன.

உ. நுரை - மகளிர் வினையாட்டு.

ங. "பூண்டவை, எறிபா வாளு மெற்று மழுவுஞ், செறியக் கட்டி யீரிடைத் தாழ்ந்த, பெய்புல மூதாய்ப் புகர்நிறத் திகிரின், மையற விளங்கிய வானேற் றவிர்பூண்." கலி. அடி: அ - சுக.

ச. தெய்வத்துக்கு கோர்த்த பொருளென்ற பொருளிற் காணிக்கை யென இக்காலத்து வழங்குமொழி, கைக்காணியின் நிலை மாறுதல் போலும்.

ஞ. "என்பெறு மென்று பின்னைப் பணிகளுங் கவர்ந்தார்" நீருவினை. மாமனுரை. உஇ.

(பிரதிபேதம்) * பரத்தமை தொடங்கு.

வரியினையும் செருக்கினையுமுடைய மையுண்கண்கள் பசக்கும்படி அவர்க்கு
நோவைக் கொடுக்கும் நின் தந்தையுடைய *பரத்தைமைக்குணமொன்றையும்
ஒல்வாதே சொன்னென்ருள்: அவ்வனங் கூறினவளுக்கு இனிதாயிருக்கும்படி
லெ மறுமொழிஎன்க் கூறிப் போய்ப் பின்னே கம்மோடு ஒப்பானாகத்
தலைமைப்பாடுகொண்டு நம்மைக் காய்ந்திருக்கும் இந்தப் புலக்குர் தலைமை
யினையுடைய புதியவன் இல்லிலேசென்ருனென்ருள்; அதுகேட்ட தலைவி,
ஏடா! யான் வருந்தி நோய்மிக உன் தந்தையை எக்காலும் தான் குறித்த
தொன்றை நினைவறப் பருக்தெடுத்துக் கொண்ட தன்மைத்தாக நினைவறக்
கைக்கொண்டுபோம்; கைக்கொண்ட அப்பொழுதே தொடியும் உரிரும்
அவைபோல்வனபிறவும் தனக்குப் படைக்கலமாகக் கொண்டு உரோலே நம்
தையுடைய புதுமையையுடைய †மார்பின் கண்ணும் அனையவற்ருலே ஒழிந்த
நிய இடங்களிலும் தான் குறித்தபடியிலே வடுக்களையும் அஞ்சாளாய் நிகழ்த்
தும்; ஆதலால் நினக்கு அவள் என்ன உறவுடையாள்? இவனை அடித்தற்கு
ஒரு கோல் ‡தருவாயாகவென்ருள்; அதற்கு அஞ்சி அவன் அழுதமைகண்டு
இனி அழுகையை விடுவாயாகவென்று கூறி, நின் தந்தையுடைய காதற்பரத்
தையிடத்து நீ சேர்தலைப் பாதுகாத்து நீ செல்லுதற்குத் ||நிறைவதாகிய இல்லி
லும் மனத்தாற் கருதி அவன் நீங்குவனே நீங்காளேவென்று ஐயப்படாமல்
ஒருதலையாக நீங்காளென்று துணிந்த பரத்தையர் இல்லிலும் நின் செல
வொழிந்தது கிடந்த, எம்மைப்போலே கையாற்றையுடையவர் இல்லிற்
சேறலன்றி வேருேர் இல்லில் நீ செல்லாதேகொள்; இனி நின்னுடைய புறத்
துப் போர் தொழில்தான் மூடிந்ததெனக் கூறினுள். எ - று.

(க)÷தொடக்கத்தத்தாயென்றமையான் அவள்முதிர்ந்தமையும்வழிமுறைத்
தாயென்றமையான் அவள் இடைநிலைப்பருவத்தாளானமையும் புத்தேளென்
றமையான் அவள் இளமைப்பருவத்தாளானமையும் கூறினுள். நுகைமுகம்
காட்டென்பாள் கண்ணீர்வீழ்ந்தது இப்புதல்வனுலுள்ள பயனே துகர்ந்து
இனிமைபுரிது பயனில்லாப் புறத்தொழுக்கம் நிகழ்த்துதின்றமைகருதி.

இது பரத்தையரில்லிற் புதல்வன் செல்லாமற் றிறைத்தது.

இதனுல், தலைவிக்கு இளிவும் தலைவற்கு அசைவும் பிறந்தது.

இஃது ஐஞ்சேடுக்கித் தனிச்சொற்பெற்று வந்த கலிவெண்பா. (கஎ)

(அஉ.)பெருந்திரு நிலைஇய வீங்குசோற் றகன்மணைப்
பொருந்துநோன் கதவொற்றிப் புலம்பியா முலமர
வினையவர் தழூஉவாடு மெக்கர்வாய் வியன்றெருவின்
வினையாட்டிக் கொண்டு வரற்கெனச் சென்ரு

க. இத்தூற்பக்கம் சமஅ: இ-ஆம் குறிப்புப்பார்க்க.

(பிரதிபேதம்) * பரத்தமை யென்றையும். † மார்பின்கண்ணே யினைய, ‡ கொண்மோ
வென்ரும். || குலையே + முடக்கத்தாற்.

யுலாவிலே, யூட்டலென் றீம்பால் பெருகு மளவெல்லா
நீட்டித்த காரண மென்;
கேட்டீ;

அ பெருமடற் பெண்ணைப் பிணர்த்தோட்டுப் பைங்குரும்பைக்
குடவாய்க் கொடிப்பின்னல் வாங்கித் தளரும்
பெருமணித் திண்டேர்க் குறுமக்க ணைப்ப
ணைகனகர் மீடருவா ளுகப் புரிஞெகிழ்பு
நீல நிரைப்போ துறுகாற் குலைவனபோற்
சாலகத் தொல்கிய கண்ண நயர்ர்த்தி
யாலமர் செல்வ னணிசான் மகனவிழாக்

கஞ கால்கோளென் றாக்கிக் கதுமென நோக்கித்
திருந்தடிநூ புரமார்ப்ப வியலி விருப்பிஞற்
கண்ணு நுதலுங் கவுளுங் கவவியார்க்
கொண்மை யெதிரிய வங்கையுந் தண்ணெனச்
செய்வன சிறப்பிற் சிறப்புச்செய் திவ்விரா

உ0 வெம்மொடு சேர்ந்துசென் றீவாயாற் செம்மா
னலம்புதி துண்டுள்ளா நாணிலி செய்த
புலம்பெலாந் தீர்க்குவே மன்னென் நிரங்குபு
வேற்றுனைத் தாய ரெதிர்கொள்ள மாற்றுத
கள்வனுற் றங்கிய தல்லாற் கதிபாதி
யொள்ளிழா யான்றீ திலேன்;

உஉ எள்ளலான், அம்மென் பணைத்தோ ணுமர்வேய்ந்தகண்ணியோ
டெம்மில் வருதியோ வெல்லாநீ தன்மெய்க்க
ணந்தீஞ்சொ னல்லா ணிந்த கலங்காட்டி
முந்தை யிருந்து மகன்செய்த கோய்த்தலே
வெந்தபுண் வேலெறிந் தற்றால் வடுவொடு
தன்தையும் வந்து நிலே.

இது வீணையாட்டிக்கொண்டு வரற்குச் சேடியரோடு மகற்போக்கிய தலைவி அவன் நீட்டித்துவந்தவழி, "தாயர் கண்ணிய * நல்லணிப் புதல் வனை, மாயப் பரத்தை †யுள்ளிய வகை"(க)சிறைப்புறமாகக் கேட்டு வந்த தலைவனைக் கண்டு அவன் தன்னுள்ளே புலந்தது.

க. தொல். கற்பியல். சூ. க.

(பிரதிபேதம்) * கல்லை. † உள்ளியவழி, உள்ளியவளை.

இதன் பொருள்.

பெருந்திரு நிலைஇய வீங்குசோற் றகன்மனைப்
பொருந்துநேர்ந் ததவொற்றிப் புலம்பியா மூலமர
விளையவர் தழூஉவாடு மெக்கர்வாய் வியன்றெருவின்
விளையாட்டிக் கொண்டு வரற்கெனச் (க)சென்ரு
யுளையில், யூட்டலென் றீம்பால் பெருகு .ளவெல்லா
நீட்டித்த காரண மென்

எ - து: பெரிய செல்வம் நிலைபெற்ற, மிருகின்ற சோற்றையுடைய அகன்ற மனையிடத்து இரட்டையாய் வந்து சேரும் பலகைகள் தம்மிற் பொருந்தின கதவைத் தீண்டிநின்று பின்னையைக் கைவிட்டுத் தனித்து யாம்வருந்தப் பிள்ளைகள் தம்மிற்கூடி விளையாடும் * இடுமணலே இடத்தேயுடைய அகற் சியையுடைய தெருவிலே பிள்ளையை †விளையாடிவித்துக்கொண்டு வருகற் கென்று போன நீ, இனிய பாலே யான் பிள்ளைக்கு ஊட்டாமல் அப்பால் பெருகச்சுரக்கும் அனவெல்லாம் பிள்ளை பாலுண்ணிருத்தற்கு நின்மனத் தில் வருத்தமிலையாய்த் தாழ்த்த காரணம்பாது? அதனைக்கூறு. ‡எ - று.

கேட்டீ,

அ பெருமடற் பெண்ணைப் பிணர்த்தோட்டுப் பைங்தாறு நம்பைக்
குடவாய்க் கொடிப்பின்னல் வங்கித் தாரும்
பொருமணித் திண்டேர்க் குயத்த ணைப்ப
ணைகளைர் மீடருவா னுகப் புரிஞெகிழ்ப்பு
நீல ||நிரைப்போ துறுகாற் குலைவ ரபோற்
சாலகத் தொல்கிப கண்ணருபர்ச்சி
(உ)யாலமர் செல்வ ணணிசான் மகன்மிழாக்

க. "எம்மூலே, பாலொடு வீங்கத் தவுடெடி தாயினை, புத்தேளிர் கோட்டம் வலஞ்செய் திவ்வினை, புக்கவழியெல்லாங் கூறு" கலி. அ:உ - ஙி.

உ. (அ)"ஆலமர் செல்வ ணணிசால் பெருவிறல், போல வருமென் னுயிர்" கலி. அக: க-கo. (ஆ) "புதல்வரைப், பொலந்தேர் மீமிசைப் புகர்முக வேழத், திலங்குதொடி கல்லார் கெல்நின் றேற்றி, யாலமர் செல்வன் மகன்விழாக் காள்கோள், காண்மி னேவெனக் கண்டநிற் கூரும்" மணி. கூ: கசக - கசஙி. எனவும் (இ) "ஆல்தெழு கடவுட் புதல்வ" முருகு. உஙிக. (ஈ) "ஆலமர் செல்வன் புதல்வன்" சீலப்ப. உச. "வேலனர்" எனவும் (உ) "ஆலமர் செல்வற்கு" சீறுபாண். கஎ. (ஊ) "ஆலமர்கடவுள்" புறம். ககஅ: க. எனவும் வருதல் காண்க.

(பிரதிபேதம்) * கண்மேணிலை. † விளையாட்டி வித்த. ‡ என்றும். || கிலப்போது.

கடி கால்கோளென் றாக்கிக் கதுமென கோக்கித்
(க)திருந்தடிநா புரமார்ப்ப வியலி விருப்பிறை
கண்ணு நுதலுங் கவுளுங் கவர்வார்க்
கொண்மை யெதிரிய வங்கையுந் தண்ணெனச்
(உ)*செய்வன சிறப்பிற் சிறப்புச்செய் தில்லிரா
உ0 வெம்மொடு சேர்ந்தசென் றீவாயாற் செம்மா
(ங)னலம்புகி தண்டுள்ளா நாணிலி செய்த
புலம்பெலாந் தீர்க்குவே மன்னென் றிரங்குபு
வேற்றுரைத் தாய ரெதிர்கொள்ள மாற்றாத
கள்வனுற் றங்கிய தல்லாற் றதியாதி
யொள்ளிழா யான்றீ திலேன்

எ - து: அதனைக்கேட்பாய்; பெரிய மடலேயுடைத்தாகிய பனையினுடைய குடம்போலத் திரண்ட இடத்தையுடைத்தாகிய சர்ச்சரையையுடைய மூங்கிழையுடைய பசியகுரும்பையைக் கொழுமையாகத் தட்டிப் பின்னின பின்னலே இழுத்து அதனுல் இளைக்குஞ் சிறிய பிள்ளைகளுக்குவே பெரிய மணியழுத்தின திண்ணிய தேரிலேயிருந்து அகன்ற மனையை நோக்கி மீளுதலைச் செய்வானாகிற்க, நிலத்திற்படைய முற்குருகெழிந்து நிலைத்த பூக்கள் மிக்க காற்றுக்கு அசைவனபோலே சாளரங்களிலே ஒதுங்கிப் பார்த்த கண்ணினையுடையார் பரந்த மிக்க புகழையுடைய ஆலிலைத் இருந்த இறைவனுடைய மகனுகிய(ஈ)பிள்ளையார் திருநாளுக்கு அடிக்கொள்ளுகின்ற காளென்ற கருதி, †வரலிலே முயன்று கடுகிவந்து பார்த்து, இவளதலாற் றிருந்தின அடியிற் நிலம்போலிப்ப அணுகி, நின் கண்ணுலும்‡நுதலாலும் கதப்பாலும் நின்னைத் தழுவிய தாயார்க்கு விளக்கத்தைக்கொடுத்தலே ஏற்றுக்கொண்டிருக்கின்ற அழகிய கையினுலும் நின் தந்தைக்குத் ||தண்ணென நீ செய்யுஞ் சிறப்புக்கள் போலே எமக்குஞ் சிறப்புக்கள் செய்து இவ்விராக்காலத்து எம்மோடே தங்கிப்போதலேச் செய்யவேண்டும்; [சிறப்பாலே] தலைவா! எங்கள் கலத்தின்

க. இதனை ஐஞ்சீரடியாக்கலுமாம். உரையின் பிரதிபேதத்தால் 'கவுளும்' என்பதை நீக்கி விருப்பிறையென்பதை அடுத்த அடி ஆக்கலுமாம்.

உ. தலைவன்றமரைக் கண்டவழி உவத்தலாகிற "அவன்றம குவத்தல்" என்னும் மெய்ப்பாட்டிற்கு 'செய்வன சிறப்பிற்.....நீக்கு வேமன்' என்பது மேற்கோள்; தொல்; மெய்ப்பாடி. சூ. உஉ. இளம்.

ங. "மாண மறந்துள்ளா நாணிலிக்கு" கலி. அக: கஉ.

சு.- பின்னையாரென்றது, முருகவேளை; 'பின்னையார் அயனச்சபித்தலின்' 'சித்தனென்பது பின்னையாருக்குத் திருநாமம்' 'பின்னையார் வேலைத்

(பிரதிபேதம்) * செல்வன.†வாயிலே.‡ அதலாது நின்னை, || கண்ணெனை.

கலித்தொகை அரு.

புதுமையை நுகர்ந்து பின்னர் எம்மை நினையாத நாணில்லாதவன் நந்த தனிமையெல்லாம் மிகவும் போக்குவேமென்று கூறி, இவனிடத்து விருப்பத் தாலே அமையாத வேற்றுத்தாயர் எதிர்கொள்ள, அதனை*மாற்றாத இக்கன்று ஞலே ஆண்டுத் தாழ்க்க நின்றதன்றி, யான் வேறோர் நீதுடையேனல்லேன்; ஒள்ளிழாய்! என்னைக் கோபியாதேகொள்ளென்றாள் சேடி. எ - று.

உசு எள்ளலான், அம்மென் பணைத்தோ ணுமர்வேய்ந்த கண்ணியோ
டெம்மில் வருதியோ வெல்லாநீ தன்மெய்க்க
ணன்நீஞ்சொ(க)னல்லா ரணிந்த கலந்தாட்டி
முந்தை யிருந்து மகன்செய்த நோய்க்குலே
(உ)வெந்தபுண் வேலெறிந் தற்றால் வடுவோடி
தந்தையும் வந்து நிகில

எ - து: அதுகேட்டுப் †புதல்வனை நோக்கி, எடா! அழகையுடைய மெத் தென்ற ‡மூங்கில்போலுந் தோளினையுடைய நும்முடைய தாய்மார் சூடின கண்ணியோடே எம்முடையில்லிலே நீ வருவையோவாராயோவென வெறுத் துக்கூறி, தலைவன்வந்தமைகண்டு, முன்னேயிருந்து மகன் எமக்குச் செய்த நோய்குமேலே எம்மைமனத்தால் இகழ்ந்திருத்தலாலே தம் மெய்யிடத்துக் கிடந்த அழகிய இனியசொல்லையுடைய நல்ல மகளிர் அணிந்த கலந்தாளில் வடுவைக்காட்டி எனை வடுக்களோடே தந்தையும் வந்து நிற்றல், வெந்ததொரு புண்ணிலே வேலால் எறிந்த தன்மைத்தாயிருந்ததென அவனெடு புலந்து கூறினள். எ - று.

தனக்கு அடையாளமாகக் கொண்டு நிரிதலின் வேலனென்றார்' 'நகர் - பிள்ளையார் கோயிலென்றமாம்' முருத. சுசுஉ, சுஎசு, உஉஉ' உசுஅ; 'பிள்ளையாரால் வந்ததென முற்கூறி' மது. சுசுசு. என்ப வற்றாலும் இவ்வழக்கு அறியலாகும்.

க. "ஒளிபூத்த நுதலாரோ டோரணிப் பொலிந்த" கலி. சுசு: சுசு - உ0'

உ. (அ) "வெந்தபுண் வேலெறிந்தற்றால்" (ஆ) "வெந்தோர் புண்ணின் கண் வேல்கொண்டு நுழைப்பான் போல்" கலி. அச:உசு. உஉ0: சுஎ. (இ) "வெந்தயர்க் கண்ணின் வேலிட்டதுபோல்" (ஈ) "தழலுறு புண்மேற் கருவி பாய்ந்தென" பெருங். (உ) சுஙு: கஇ; (ச) சுசு: சுஙு0. (உ) "புண்செய் சோலில் வேலெறிந்தாற் போலும்" பெரிய. நெருத்தொண்ட. இ0. (ஊ) "நீறுழை புண்ணில் வேல் செறித்த தென்ன" கந்த. குமார. சசு. (எ) "வெந்த புண்ணிடை வேல்பட்ட வெம்மையான்" கம்ப. இராவணன்சோக. க0. (ஏ) "வெவ்வே லெறிந்த விழுப்புண்ணின் மீட்டும் வெதுப்பியதோர், செவ்வேலுழைப் பவர் சேமன்றே" நந்தி. சுசுசு. (ஐ) "புண்ணி னூடெரி, யியி னுழைச் தாலென வலமர் தேக்கினள்" நைடதம். சுசர்கீக்கு. அ.

(பிரதிபேதம்) * மாருத, † அப்புதல்வனே, ‡அணைபோதும் தோளினையுடைய தாய்மார.

இதனால், தலைவிக்கு இளிவும் தலைவற்குக் கையிகலும் பிறந்தது.

இது தலைவிரவி ஐஞ்சேடியும் வந்த வெள்ளைத்தரவும் தனிச்சொல்லும் தலைவிரவின வெண்பாவும் ஐஞ்சேடுக்கிய வெள்ளைச்சுரிதகமும் பெற்ற கலி வெண்பா. (கசு)

(அக.) உறுவளி தூக்கு முயர்சினை மாவி
னறுவடி யாரிற் றவைபோ லழியக்
கரந்தியா னாக்கவுங் கைநில்லா வீங்கிச்
சுரந்தவென் மென்முலைப் பால்பழு தாகநீ
நி நல்வாயிற் போத்தந்த பொழுதினு னெல்லா
கடவுட் கடிநகர் தோறு மிவணீ
வலங்கொளீஇ வாவெனச் சென்றாய் விலங்கினீ
யீர மிலாத விவன்றங்கை பெண்டிருள்
யாரிற் றவிர்த்தனீ கூறு ;

கo நீருள், அடைமறை யாயிதழ்ப் போதுபோற் கொண்ட
குடைநிழற் றேன்றுளின் செம்மலைக் காணூஉ
விவன்மன்ற யானெனவ வுள்ளங்கொண் டுள்ளா
மகனல்லான் பெற்ற மகனென் றகனகர்
வாயில் வரையிறந்து போத்தந்து தாயர்

கரு தெருவிற் றவிர்ப்பத் தவிர்ந்தனன் மற்றவர்
தத்தங் கலங்களுட் கையுறை பென்றிமற்
கொத்தவை யாராய்ந் தணிந்தார் பிறன்பெண்டி
ரீத்தவை கொள்வானு மிஃதொத்தன் சித்தை
செறுதக்கான் மன்ற பெரிது;

உo சிறுபட்டி, ஏதிலார் கையெம்மை யெள்ளுபு நீதொட்ட
மோதிரம் யாவோயாங் காண்கு ;

உஉ அவற்றுள், நருவிதழ் கண்டன்ன செவ்விரற் கேற்பச்
சுரும்வே றெழுதிய மோதிரக் தொட்டாள்
குறியறிந்தேன் காமன் கொடியெழுதி யென்றுஞ்
செறியாப் பரத்தை யிவன்றங்கை மார்பிற்
பொறியொற்றிக் கொண்டாள்வ லென்பது தன்னீ
யறீஇய செய்த வினை;

*அன்னையோ இஃதொன்று,
உக முன்தையக் கண்டு மெழுகல்லா தென்முன்னர்
வெந்தபுண் வேலெறிந் தற்ற விஃதொன்று
தந்தை யிறைத்தொடி மற்றிவன் றன்கைக்கட்
டந்தாரியா ரெல்லாஅ விது;

கூக இஃதொன்று, என்னைத்துக் காண்க பிறரு மிவற்கென்னுந்
தன்னலம் பாடுவி தந்தாளா நின்னை
யிதுதொடு கென்றவர் யார் ;

கூசு அஞ்சாதி, நீயுந் தவறிலை நின்கை யிதுதக்க
பூவெழி லுண்க ணவளுந் தவறிலள்
வேனிற் புனலன்ன நுந்தையை கோவார்யார்
மேனின்று மெள்ளி யிதுவிவன் கைந்தந்தா
டான்யாரோ வென்று வினவிய கோப்பாலேன்
யானே தவறுடை யேன்.

இது கடவுட் கடிநகர்தோறும் வலம்கொளீஇ வரற்குச் சேடியரோடு மகற்போக்கிய தலைவி அவன் நீட்டித்து வந்தழி. "தாயர் கண்ணிய †நல்லணிப் புதல்வனை-மாயப் பரத்தை யுள்ளிய 'வழி"(க)யிற்கண்ட,நந்தை தோடி மகன்கைக்கண்டு புலந்தாள் தன்னுள்ளே அழிந்து கூறியது.

இதன் பொருள்.

க. தொல். கற். சூ. க. இச்சூத்திரப் பகுதிக்கு. 'தாயரைக்கிட்டிய நல்ல அணியையுடைய புதல்வனை மாயப்பரத்தை குறித்த வழியும் கூற்று நிகழும்; புதல்வனைப பரத்தை குறித்தலாவது தலைவன் புறப் பெண்டிர் மாட்டுப்போகிய வழி வெகுளுமாறுபோலப் புதல்வனையும் அவரிடைச் சென்றவழி வெகுளல்; கண்ணிய நல்லணி யெனவே அவர்கொடுத்த நல்லணியென்பது பெறுதும்; பரத்தைமை உள்ளாத வழி இவண்மாட்டுக் குறிப்புரை ஏழாதாம்; மாய மென்பது பரத்தைமைக்குப் பண்பாகி இனஞ் சுட்டாது வந்தது' என்று கூறி, அத்திரு இச்செய்யுளை மேற்கோள் காட்டினார் இளம்பூரணர்; நச்சினார்க்கினியரும் இச்சூத்திரப்பகுதியில், 'அவருள் (தாயருள்) தனியாலே வருந்திய பரத்தையர் தம் வருத்தத்தினை உணர்த்தியும், தலேன்றெழுகும் பரத்தையர் தம் சிறப்புணர்த்தியும் அணிவு ரென்றற்கு, 'கண்ணிய' வென்றார்" என விசேடவுரை எழுதி, இச்செய்யுளை இதற்கே மேற்கோள காட்டியுள்ளார்.

* 'அன்னையோ முன்தையன்' என, தொல். கற். சூ.க. இன. உரையிலுள்ளது. (பிரதிபேதம்) † கல்லிசைப், ‡ வகையின்கண்.

(க)உறுவளி தூக்கு முயர்சினை (உ)மாவி
னறுவடி யாரிற் றவைபோ லழியக்
கரந்தி*யா(ங)னரத்தவுங் கைநில்லா வீங்கிச்
சுரந்த (ச) வென் மென் † முலைப் பால்பழு தாகவீ
நல்வாயிற் போத்தந்த‡பொழுதினு னெல்லா
கடவுட் கடிநகர் தோறு மினீ
வலங்கொளீஇ வாவெனச் சென்றாய் விலங்கினீ
யீர மிலாத வினன்றந்தை பெண்டிருள்
யாரிற் றவிர்ந்தனீ கூறு

எ - து: எடீ! நீ நல்||வாயிலினின்றும் போதலைச்செய்த காவத்தின் கண்ணே தெய்வங்களையுடையதாகிய மிகுதிகளையுடைய கோயில்தோறும் இவனை வலஞ்செய்வித்து வாவென்று யான் கூறச் சென்றாய்; யான் கூறிய கூற்றினைத் தப்பினாய்; இனி மாவி னுடைய உயர்ந்த கொம்புகளினின்றமிக்க காற்றால் அசைக்கும் காய்(ங)வடுக்கள் தாம்பு மூறித்தனபோலே பால் மிகக் குதிக்கையினாலே அதனைமறைத்து—யான் அங்ஙனபால் அமுக்கித் தேய்க்கவும் அந்தக் கையினெல்லையில் நல்லாவாப் விம்மிச் சுரந்த என்னுடைய மெல்லிய முலையிற் பால் பிள்ளை யுண்ணமற் பாழ்படுபோம்படி அருளில்லாத இவன் தந்தையுடைய பற்றத்தையர்களுள் யாருடைய இல்லிலே தங்கினாய்; சொல் லென்றாள். எ - று.

க. உறு என்னு மூரிச்சொல் மிகுதியின்னும் பண்புணர்த்தி வருதற்கு இவ்வடி மேற்கோள். நன். உரி. சூ. கடு. மயிலை; விருத்தி. இரா.

உ. "உறுவடிமாவின்" (தொல். சொ: கச) என்பதன் அரன் குறிப்பும்பார்க்க.

ங. "அரக்க நில்லா கண்ணு நீர்கள்" நாலாயிர. கார்கியரர். ங: ச.

ச. (அ)"எம்முலை, பாலொடுவீங்கத்தவடிதாயினை புத்தேளிர்கோட்டம் வலஞ்செய் நிவலெஞ்ஞு. புக்க வழியெல்லாம் கூற" (ஆ) "சென்ரு, யுளேவீலை, யூட்டலென் றம்பால் பெருகு முளவெல்லா, நீட்டித்த காரணமென்" தொல். அஉ: க - ஙி. அங: ச - சு.

ஞ. "முனித்தலைக் கண்ணி நெற்றிச் சிறார்மூலை முழாவீழ் பில்லிப், புனிற்றுப்பால் பிலிற்றித் தேமா வடவிழுத் தாங்குப் பாய, துனித்துக் கண் ணாரகி நோக்கா தொசித்தநின் முர்க ளன்றே, கனிப் பொதை மலித்து நின்ற கற்பகப் பூங்கொம் பொத்தார்" சீவக. உரிசை.

(பிரதிபேதம்.) *யாங்காக்கவும். †முலைபால் பழுதாக. ‡போழ்நிலுஞ், ||வாலிலே நின்றும்.
+ யாங்கையால்.

கo நீருள் (க)அடைமறை *யாயிதழ்ப்(உ)போதுபோற் கொண்ட
குடைநிழற் றோன்றுகின் செம்மலைக் காணூஉ
விவன்மன்ற யானைவை வள்ளங்கொண் டுள்ளார
மகனல்லான் பெற்ற மகனென் றகனகர்
வாயில் வரையிறந்து போத்தந்து தாயர்
கரு தெருவிற் றவிர்ப்பத் தவிர்ந்தனள் மற்றவர்
தத்தங் கலங்களுட் கையுறை யென்றிவற்
கொத்தவை †யாராய்ந் தணிந்தார் பிறன்பெண்டி
நீத்தவை ‡கொள்வான் (ங)மீஞ்தொத்தன் (சு)சீத்தை
‖செறுத்தக்கான் மன்ற பெரிது

எ - து: நீரிடத்தே (ரு) இலையின்கீழே மறைந்துள்ள அழகிய இதழையுடைய தாமரைப்பூப்போலே எடுத்த பசைக்குடையின் கீழிலே தோன்றுகின்ற நின்பிள்ளைபைக்கண்டு தாய்மார் யான் தோம்படி மனத்தைக்கைக் கொண்டு பின்னர் என்னை நீ நீடாத நன்கு மதிக்கும் மகனல்லாதவன் பெற்ற மகன் அறுதியாக இவனென்ற கருதி அகன்ற மனையினுடைய ÷வாயிலினல்லையைக் கைவிட்டுப்புறப்பட்டுத் தெருவிலேவந்து தடுப்ப அவரிடத்தே

க. இத்துறைப்பக்கம் உக: க-ஆம் குறிப்புப பார்க்க.

உ. (அ) "திண்கதிர் மதாஅய் மென்மெல நடாஅய்
தோம்பினர்த் தழீஇத் தாம்புணர்ந்து முயங்கி.
தாதணி தாமரைப் போதுபிடித் தாலகுத்,
தாமு மவரு மோராங்கு விளைக்" மதுரை. சகக - சகச. (ஆ)
"போதவிழ் தாமரை யன்னநின் கருதலம்புதல்வன்" ஐங். சஉச. (இ)
"வழுவில் பொய்கையண்மெலென வளர்த்துமை யாடி" சீவக.உஎஞக.
(ஈ) "இவர்பெரி தளவி லாற்றலைப், பொருந்தின ராயினும் பூவின்
மெல்லியர்" கம்ப. தாடகை. ச்ச. எனவும்(உ) "பொய்கைப் பூவினும்
நறுந்தண்ணியனே" ஐங். கஉ. (ஊ) "பதுமப் போதனுள்" கம்ப.
மீட்சி. எக. எனவும் (எ)"புன்னிறத்துத் தாமரைப் போதுழுமூழ்கி"
ஐந்-எழு. ஞ்o. எனவும் வருதல்காண்க.

ங. "இமீந்தொத்தன்" இத்துறைப்பக்கம் ங அக: ங-ஆம் குறிப்புப்பார்க்க.

ச. சீத்தை. கலி. கச: உஉ குறிப்புப்பார்க்க.

ஞ. (அ) "தாமரை, தேமரு குடையிலை கலிப்பத் தேவியர், பூமரு மடர்
தையர் போன்று தோன்றினர்" தஞ. சுயம்வர. கஙக. (ஆ)
"பாசடை கலிகை யாக.....பொய்கை சேய்க்கு வனம்பட
வொழுகிற் றன்றே" கந்த. நிருவதாரா. சகo.

(பிரதிபேதம்) * ஆயிதட்போது. † ஆபயாங்கே, ‡ கொள்வானீந்தொத்தன், ‖ செறுத்தற்
கான், ÷வாசலின்,

தங்கினனென்; அதனாலே பின்னே அவர்கள் தம்முடைய தம்முடைய அணிகளில் இவன்வடிவிற்கு ஒத்தவையிற்றை * ஆராய்ந்து (ஈ) கைக்காணியென்று அணிந்தானென்றுள்சேடி; அதுகேட்டதலைவி தனக்குஅயலாயிருக்கின்றதாய்தை யுடையபரத்தையர்கொடுத்தவையிற்றை இவனெருவன் †வாராகுவா (உ)னும், இனி இவன் கைவிடப்படுமவன் அறுதியாக மிகவும் நம்மாற்கோபித்தல் தக்காரென னெஞ்சொகூறினாள். எ - று.

'அடைமறை... ... ...செம்மல்' என்றது: இலையும்பூவும், குடைக்கும் புதல்வர்க்கும் உவமையாய் (ங்) விரிந்தாற்போன்றது. இதற்கேற்ப முதல்வர்க்கது. உ0 (ச) சிறப்பட்டி.

எ-து: காவலின்றி வேண்டியவா றொழுகுவாய். எ - று.

எதிலார் கைபெய்மை பெற்றுப் பிதிர்தோட்ட
மோதிரம் யாலோயாய் காண்கு

எ - து: நீ எம்மை இகழ்ந்து இட்ட பரத்தையர் கையின் மோதிரங்கள் யாவை? யாம் அவற்றைக்காணேம். எ - று.

யாங் காண்கு, பன்மையொருமை மயக்கம். யாணும் ‡பாடம்.

உஉ அவற்றுள், (ங்) கருவிரற் கண்டனை செவ்விரற் கேற்பச்
(ஈ) || சுருவே றொழுதிப (ஏ) பிரதோர் தொட்டாள்

க. இந்நூற்பக்கம் சகக: சுவைப் குறிப்புப்பார்க்க.

உ. "ஒருவனு மாணுட னேதை மாகார், வருவனும் வீரன்மணி மாளை ஞ்சமர், பொருவனு மவனுயிர் பொன்ற வென்றிடர், தருவனும்" விஸ்ஸ. மஹாவான். அ0: என்பது முதலியவற்றில் ஆமென்பது இவ் வாறே செறற்குறிப்பில் வந்திருத்தல் காண்க.

ங. "அடைமறை..... காணுமூ" என்பது உவமை பலபொருள் வீரவி வந்தற்கும் தோல். உவம. சூ. உ. இளம். முதற்குச் சினுபுவமமாய் வந்தற்கும் மேற்கோள்; தோல். உவம: சூ. க. இளம்: பேர்; இ - வி. சூ. சுசக.

ச. "இறப்பட்டி" கலி. நெய: சு என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

ஞ. "நறுமலர்விழித் தன்னலென் மெல்லிரற் போது" கலி. நெச: க.

க. "அல்வாய் மகரத் தணிதிகழ் மோதிரம்"

எ. (அ) "மணிநாம மோதிரஞ் தொட்டு" சீவக. கoசெ. (ஆ) மாதிரத்தம சேனையோடையும் வல்லே வென்றதன் முத்திரை, மோதிரச்சுவ டேற்றிறைஞ்ச முடித்து" விநாயக. சித்தாமணிவிகாயகர். எக.

(பிரதிபேதம்) * ஆய்ந்தாய்ந்து, † வாங்குவாமுயினவன், கைவிடப்படும்இவன் அறுதியாக. ‡ பாடம் நமவிதழ், || சுறவேறெழுதிய.

குறியறிந்தேன் காமன் (க)கொடியெழுதி யென்றுஞ்
செறியாப் பரத்தை யிவன்றன்தை மார்பிற்
பொறியொற்றிக் கொண்டாள்வ லென்பது தன்னை
* யறியிட செய்த வினை

எ - து: அம்மோதிரங்களுள் †கரும்பூவைக் கண்டாற்போன்ற வெற்ற வீரலுக்குப் பொருந்தச் சுறாவிலேற்றைக் குழித்த மோதிரத்தை இட்டவளுடையகருத்தை அறிந்தேன்; காமன்கொடியாகியமகரத்தை மோதிரத்தே ‡குழித்தற்போல வேறொன்றிலே அழுத்தி அதனை எக்காலமும் அடங்காத பரத்தைமைக்குணத்தையுடைய இவன் றன்தைமார்பிலே பொறியாக ஒற்றி அடிமைக்கொண்டு ஆண்டுபோதுவேனென் றுசொல்கின்ற வார்த்தை தன்னை எனக்கு அறிவித்தற்குச் செய்ததொரு தொழிலெனப் புலத்து அவளெடு கூறினள். எ - று.

"கடல்வாழ் சுறவு மேறெனப்படுமே"என்றதனால்(உ)||சுறாவேறென்றார். பரத்தைமை பரத்தை யென÷நின்றது; "தன்னையு மிரிமையு மவன்வயிற் பரத்தையும்" (ங)என்றார் ஆசிரியராகலின்.

அண்ணீயோ

எ - து: நீயும் அத்தன்மையையோ ! எ - று.

புதல்வளுடைய நீயும் எம்மை இகழுந்தன்மையையோ × என்றதாம். இது புதல்வனை நோக்கிக்கூறியது.

இஃதொன்று,

எ - து: இவ்விகழ்ச்சியும் நாமே செய்துகொண்டதொன்றென நெஞ் சொடு கூறினள். எ - ஐ.

உக +முந்தைய கண்டி மொழுகல்லா தென்முன்னர்
(ச)வெந்தபுண் வேலெறிந் தற்று

க. (அ) "வில்லா னிடுகொடி யகலம்" (ஆ) "ஆடுகொடி யணிந்தவய லலங்கல்வரை மார்பன்" சீவக. உதயண, உசனை.

உ. தோல். மரபி. சூ. சஅ. பேர். ஙஅ. ஙச். இத்னுரையில் சுறாவின் ஆண் ஏறெனப்படுதல் மரபென்பதற்கு, "சுறாவே றெழுதிய மோதிரந்தொட்டாள்" என்பது மேற்கோள்.

ங. தோல். கள. சூ. உஅ.

ச. "வெந்தபுண் வேலெறிந் தற்றால்" (கலி. அங: ஙஅ) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

(பிரதிபேதம்) *'அறியிய, † நாய்பூவை. ‡ குறித்தாற்போல.||சுறாவேறென்றார், ÷நிற்கும், × என்றதாம் புதல்வனோக்கி இஃதொன்று. + முன்தை யனகண் டெழு.

(க) தந்தை யிறைத்*தொடி மற்றிவன் றண்கைக்கட்
டந்தாரியா ரெல்லா அ விது

எ - து: பின்னே என்மூற்பட்டனவற்றைக்†கண்டும்தலேயெடுக்கமாட்டாத என்முன்னே வெந்தோர் புண்ணிலே வேலாலே எறிந்த ‡தன்மைத்தாக இஃதொன்று இவன்றந்தையுடைய மூன்கையிற் றொடியை இவன் கையிடத்தே || இட்டவர் யார்தான் ? கூறென்றாள். எ - று.

நக இஃதொன்று, என்னெத்தக் காண்க பிறரு மிவற்கென்னுர்
தன்னலம் பாடுஇ× தந்தாளா நின்னே
யிதுதொடு +கென்றவர் யார்

எ - து: அவன்=கூருமையின், எடா! இத்தொடி என்னேஒழிந்தவர்களும் இத்தலேவற்கு என்னேயொழித்த வனப்பை வழிபடும்படியைக் காண்பார்களாக(?)வென்று கூறுந் தன் கலத்தை மிருத்துப் புகழ்கின்றவளாயிருக்குந் தந்தவள். இவ்விகழ்ச்சியும் நாமே செய்துகொண்டதொன்றென நெஞ்சொடு கூறினுள்; கூறி, 'புதல்வனே கோக்கி நின்னே இத்தொடியை இகுகவென்று சொன்னவர் யார்தானென்று கூறினுள். எ - று.

நக அஞ்சாதி, (உ)நீயுந் தவறிலே நின்கை யிதுதந்த
பூவெழி லுண்க ணவளுந் தவறிலள்
(ங)வேனிற் புனலன்ன தும்தையை நோவார்யார்
மேனின்று மெள்ளி யிதுநினேவள் கைத்தந்தா

க. "தந்தை யிறைத்தொடி ....எல்லாவிது" என்பது, 'பல்வேறு புதல்வர்க் கண்டு களியுவப்பினும்' என்புழி, தாயர்தொடுப்பப்புதல்வன் கொண்டமைக்கு மேற்கோள்; தொல். கற்பி. சூ. கo. நச.

உ. "நீயுந் தவறிலே நின்னேப் புறங்கடைப், போதர விட்ட நுமருந் தவறிலர், நிறையழி கொல்யானே நீர்க்குவிட் டாங்குப், பறையறைத் தல்லது செல்லற்க வென்னு, விறையே தவறுடையான்" (கலி. நிக: ஙo-ஙச.) என்பதும் அதன் குறிப்பில் இவ்விடத்துக்குப் பொருத்துவனவும் கோக்குக.

ங. வானாதே யுவமஞ்செய்து உற்றது உணர்த்தாத வழியும் தெளியுமாறு உண்டென்பதற்கு, "வேனிற் புனலன்ன தும்தையை நோவார் யார்" என்பது மேற்கோள்; தொல். உவம. சூ. உo.

(பிரதிபேதம்) * தொடீஇமற்றிஃனின், † கண்டதில், ‡ தன்மைத்தாக வினன். || இட்டவன் யார் தானெனக் கூறென்முன, × தந்தானோனினே, + என்றவர்யார். = கூருமையின் இத்தொடி.

டான்யாரோ வென்று வினவிய நோய்ப்பாலேன்
யானே தவறுடை யேன்.

எ - து: அவன் அதற்கு அஞ்சினமை கண்டு அஞ்சாதேகொள்; இதனைத் தொட்டுவந்த நீயுந் தவறுடையையல்லை; நின் கையிலே இத்தொடியையிட்ட பூவினது அழகையுடைய மையுண்கண்ணையுடைய பாத்தையுந் தவறுடைய ளல்லள்;(க)வேனிற்காலத்துப் புதுப்புனல்போல எல்லார்க்கும்பயன்படுகின்ற தன்தையை ஈண்டு நோவாரில்லை; நமக்கு மேலாய்நின்றுந் தன்னலம்பாடிப் பின்னரும் நம்மை இகழ்ந்து இத்தொடியை இவன் கையிலிட்டவள் யாரோ வென்றுகேட்ட இந்நோயின் கூற்றேஞகிய யானேயன்றே தவறுடையே னெனத் தன்னுள்ளே அழிந்து கூறினள். எ - று.

இது, பாத்தை தன் (உ) சிறப்பு உணர்த்தி அணிந்தமைகூறிற்று. 'மேனின்று மெள்ளி' என்றதற்கு, முற்காலந் *தொடங்கி இகழ்ந்தென்றுமாம்.

இதனுல், தலேவிக்கு எள்ளல் தோன்றிற்று.

இது தலேவிரவி ஐஞ்சீடுக்கிவந்த கலிவெண்பா. (கக)

(அரு.) காலவை, சுடுபொன் வளைஇய வீரமை சுற்றிறடு
பொடியழற் புறந்தந்த செய்வுறு கிண்கிணி;

கூ உடுத்தவை கைவினேப் பொலிந்த காசமை பொலங்காழ்மேன்
மையில் செந்துகிர்க் கோவை யவற்றின் மேற்
றைஇய பூந்துகி லேதுகழ லொருதிரை;

சு கையதை, அலவன் கண்பெற வடங்கச் சுற்றிய
பலவுறு கண்ணுட் சிலதோ லிவிர்தொடி ;

அ பூண்டவை, எறியா வாளு மெற்று மழுவுஞ்
செறியக் கட்டி யீரிடைத் தாழ்ந்த
பெய்புல மூதாய்ப் புகர்நிறத் துகிரின்
மையற விளங்கிய வானேற் றவிர்பூண்;

கஉ சூடின, இருங்கடன் முத்தமும் பன்மணி பிறவு மாங்
கொருங்குடன் கோத்த உருளமை முக்காழ்மேற்
சுரும்பார் கண்ணிக்குச் சூழ்நூ லாக

க. ஆன வேனிலின் மாந்தர்போ லலர்த்தடம் பொழிலுள், தானு மாதெல் கருதியோ.....புனல்பரந் தொழுகியதால்" தீநுவானேக். ஆஞ் சாத்து. உ0.

உ. இந்நூற்பக்கம் சகஅ: க-ஆம் குறிப்புப்பார்க்க.

(பிரதிபேதம்) * தடங்கி.

வரும்பனிழ் நீலத் தாயிதழ் நாணச்
சுரும்பாற்றுப் படுத்த மணிமருண் மாலை;

களஆங்க, அவ்வும் பிறவு மணிக்கணி யாகநின்
செல்வுறு திண்டேர்க் கொடுஞ்சினை கைப்பற்றிப்
பைபயத் தூங்குநின் மெல்விரற் சீறடி
நோதலு முண்டீங் கென்கை வந்நீ
செம்மானின் பாலுண் ணிய;

உஉ பொய்போர்த்துப், பாண்டலை யிட்ட பலவல் புலியணைத்
தூண்டிலா விட்டுத் தடக்கித்தான் வேண்டியார்
நெஞ்சம் பிணித்த நெழிலாக் திரிதரு
நுந்தைபா லுண்டி சில;

உசு நுந்தைவாய், மாயச்சூ டேறி மயங்குநோய் கைமிகப்
பூவெழி லுண்கண் பனிபரப்பக் கண்படா
ஞாயர்பா லுண்டி சில;

உஎ அண்ணியோ, யாமெம் மகனைப்பா ராட்டக் கதுமெனத்
தாம்வந்தார் தம்பா லவரொடு தம்மை
வருகென்றூர் யார்கொலோ வீங்கு;

ஊஉ என்பாலல், பாராட் டுவந்தோய் குடியுண் டீத்தையென்
பாராட்டைப் பாலோ சில;

ஊசு செருக்குறித் தாரை யுவகைக்கூத் தாட்டும்
வரிசைப் பெரும்பாட்டொ டெல்லாம் பருகித்தை
தண்டுவென் ஞாயர்மாட்டைப் பால்.

இது தலைவி தன் மகனைப் பாராட்டிப் பால் கூறிட்டு * ஊட்டுகின்ற வழிச் சிறைப்புறமாகக் கேட்டுப் புக்க தலைவனைக்கண்டு தன்னுள்ளே புலந்து புலவ்வாடு பின்னும் பாராட்டியது.

இதன் பொருள்.

(க)காலவை, சுடுபொன் வளை இய வீரமை சுற்றொடு
பெரியழற் புறந்தந்த (உ)†செய்வுறு திண்திணி

க. இச்செய்யுளின் க, ங, சு, அ, கஉ. இவ்வடிகளின்முதலிலும். பரி. உக: க, ங, அ, கo, கஉ. இவ்வடிகளின்முதலிலும் கூன்வந்திருத்தல் ஒப்பு நோக்கற் பாலது.

உ. "செய்வு" இந்நூற்பக்கம் சுள: க-ஆம் குறிப்புப்பார்க்க.

(பிரதிபேதம்) * ஊட்டுவழி, † செய்யுறு,

எ - து: செம்மால்! நின்(க)காலிற் கிடக்கின்றவை, *சுடும்பொன்னுலே வினைத்த இரண்டாய் அமைந்த †தாற்சரியோடே பண்ணுதலேத் தான் உறுகின்ற, (உ)பொடி மூடுதழலாலே நிறம் உண்டாகப்பட்ட ‡ சதங்கை. எ - று.

(உ)சுடுபொன், எக்காலமும் பொன்னென (சு) முக்காலத்திற்கும் உரிய பொன்னின் இயல்பு கூறிற்று; சுடுபொன்னென வினேத்தொகையாகாமை உணர்க.

ங உடுத்தவை,(ரு)கையினைப் பொலிந்த தாசமை பொலங்காழ்மேன்
மையில் (சு)செந்துகிர்க் கோவை யவற்றின் மேற்
றைஇய பூந்துகி லேதுகழு ||லொருதிரை

எ - து: (எ)அல்குலிற்கு உடுத்தவை,கைத்தொழிலாலே பொலிவுபெற்ற மணிகள் இடையிடை அமைந்த பொன்மணிகளேயுடைய வடம்; அதின் ÷மேலே அழுத்தில்லாத வெந்த பலவடம்; அவற்றின்மேலே ×உடுத்தின ஐதாய்க் கழல்கின்ற ஒன்றுகிய திரைத்த பூந்துகில். எ - று.

வடங்கள் தோன்றத் +திரைத்தாரென்றார்.

க. இந்நூற்பக்கம் சுளஅ: எ - ஆம் குறிப்புப் பார்க்க.

உ. (அ)"நிறம்பெறப், பொடியழற்புறத்தந்த பூவாப்பூம் பொலன்கோதை" கலி. நிச: க - உ. (ஆ) "ஒள்ளழற்புரிந்த தாமரை" (இ) "அழல்புரிந்த வடர்தாமரை" புறம். கக: ககூ, உக: க.

ங. |"சுடுபொன்" ஐங். சாஉ; பரி. உக: கஅ.

ச. தோல்.

ஞ. பவழக் காசொடு பன்மணி விரைஇத், திகழக் கோத்த செம்பொற் பாண்டில், கைவினைக் கொளுவிற் செய்துநலங் குயின்ற, வெண்ணூற் காழ்நிரை" பெருங். (உ) கக: கசஉ - கசஞ.

ட. (அ) "தூண்டுகி னுழைத்த வல்குற் பவளமொத்து" சீவக. ககஅச. (ஆ) "செந்துகிர்க் கோவை சென்றேற் றல்கு, லந்துகின் மேகலே யசைந்த னவருந்த" (இ) "அந்துகிர்க் கோவை யணியொடு பூண்டு" சிலப். ச: உக - ஈ0, கச: கூஈ. (ஈ) "அனபவள மேகலேயோ டப்பாலைக் கப்பாலா னென்கின் ரூளால்" தேவாரம்.....(உ)"பவழஞ் சேர்ந்த பல்காழல் குலர்" பெருங். (க) சாக: கசசு.

எ. (அ) "கொள்ளீ ரல்குலோர் கோவணம்" தே..... .....(ஆ) "தூளிக்கு நெய்க் கருங்குழற் றேகைமாருயிர், வினிக்குமென் றல்குலே மறைத்த மேதகு, பளிக்குவெள் ளுடையின்மேற் பசும்பொனம்பரம், களிக்கும் வேன் மன்னவன் கலினச் சுற்றினன்" காஞ்சி. நகரேற்று. உ00.

(பிரதிபேதம்) * சுடுபொன் எக்காலமும்.....உணர்க சுடுபொன்னுலே. † காற்கற்றை யோடே, ‡சதங்கைஉடுத்தவை ||ஒருதிறை, ÷ மேலேயழுத்தில்லாத, × உடுத்தினவை ஐதாய், + திரைத்தார் கையதை.

சு தையதை, அலவன் கண்பெற வடங்கச் சுற்றிய
பலவுறு கண்ணுட் சிலகோ லவிர்தொடி.

எ - து: கையிடத்தது, ஞெண்டின்கண் தன்மைபெற நெருங்கப் பல அருப்புத்தொழில் சூழப்பட்ட சில கோற்றொழில் அவிர்கின்ற இரண்டாய்ச் சேருந் தொடி. எ - று.

(க)கண்ணுள் - தொழில்.

அ பூண்டவை, எறியா வாளு மெற்றூ மழுவுஞ்
செறியக் கட்டி யிரிடைத் தாழ்ந்த
பெய்புல (உ)மூதாய்ப் புகர்நிறத் துகிரின்
மையற விளங்கிய (ரு)வாலேற் றுகிர்பூண்

எ - து: பூணப்பட்டவை, வெட்டாத வாளும் வெட்டாத மழுவும் நெருங்கக் கட்டி இரண்டு புறத்திலுந் தங்கின மழைபெய்த *புலத்து ஈயன்

க. (அ) "கண்ணுள் வினைஞர் கைவினை முற்றிய, நுண்வினைக் கொல்லர்" சிலப். சூசு: க0டு - க0சு. (ஆ) "கண்ணு ளாளர் கைபுனை இடுகும்" பெருங்.(நி)க: ரு0. எனவருதல்காண்க. (இ)கண்ணுளென்பது சித்திர மெழுதுதலும் சூத்தாடுதலுமாகிய கண்ணுள் நிறுத்தும் தொழிற்றிறத் திற்கும் பெயராம்.

உ. (அ) "தண்பெய லெழிலி, யணிமிகு காணத் தகன்புறம் பரந்த, கடுஞ் செம் மூதாய்" நற். சுசஉ: சு - டு. (ஆ) "தண்பெயல் பொழிந்த பைதறு காலைக், குருதியுருவி ஞெண்செம் மூதாய், பெருவழி மருங் கிற் சிறுபல வரிப்ப" அகம். எச: சு - டு. எனவும் (இ) "அரக்கு நிற வுருவி னீயன் மூதாய்" அகம். கசூ: கசு.(ஈ)"ஈயலின் மூதாய் பரப்ப வினமரீஇக், கோலல ரூதுங குழலிரங்கக்-கோவந், தவழக்கார் செய் தன்ற" நாற்கவி. சூ. ஈஎ0. மேற்கோள். எனவும் (உ) "அரக்கத் தன்ன செந்நிலப் பெருவழிக், காயாஞ் செம்ம ரூஅய்ப் பலவுட, னீயன் மூதாய் வரிப்பப் பவளமொடு, மணிமிடைந் தன்ன குன்றம்" (ஊ) "மணிமிடை பவளம் போல வணிமிகக், காயாஞ் செம்ம ரூஅய்ப் பலவுட, னீயன் மூதா யீர்ம்புறம் வரிப்பப், புலனணி கொண்ட காரெதிர் காலே" (எ) "பெயல்பெய்து கழிந்த பூநாறு வைகறைச், செறிமண னிவந்த களர்தோன் றியலிற், குறுமோட்டு மூதாய் குறுகு றேடி, மணிமண்டு பவழம் போலக் காயா, வணிமிகு செம்ம லொளிப்பன மறையக், கார்கலின் கொண்ட காமர் காலே" அகம். கச: க - ச, ரூ0ச: கசு - கசு, ரூஎச: க0 - கடி. எனவும் வருவன காண்க.

ரு. (அ) "மருப்புப்பூண்" (ஆ) "பொலஞ்செய் மழுவொடு வாளணி கொண்ட, நலங்கிள ரொண்பூண்" கலி. அஉ: கஉ; அசு: ரு - ச.

(பிரதிபேதம்) * புலத்தின் மூதாயினது.

மூதாயினது புகரையுடைத்தாகிய நிறத்தையுடைய பவளத்தாற் செய்த அழுக்
தூறவினங்கிய இடபத்தையுடைய விளங்குகின்ற பூண். எ - று.

கஉ சூடின, இருங்கடன் *முத்தமும் பன்மணி †பிறவு மாங்
கொருங்குடன் கோத்த வருளமை (க)முக்காழ்மேற்
சுரும்பார் கண்ணிக்குச் சூழ்நூ லாக
வரும்பவிழ் நீலத் தாயிதழ் நாணச்
(உ)சுரும்பாற்றுப் படுத்த மணிமருண் மாலை

எ - து: சூடப்பட்டன, கரிய கடலின் முத்தும் அதனுடனே பல மணிகள் பிறவுஞ் சேரக்கோத்த உருட்சி அமைந்த மூன்றுவடம்; அதின்மேலே கிடக்கும் நூலாற் சூழ்ந்த சுரும்புகள் ஆருங் கண்ணிக்குப்‡பொருந்தும்படியாக நடுவே கிடக்க அரும்புகள் அலர்ந்த சில நீலத்தினது ஆய்ந்த இதழ் நாணும் படியாக நீலமணியாற் பண்ணின சுரும்புகளைப் போக்கின கண்டார் மருளும் மாலை. எ - று.

கள ஆங்க, உரையசை.

அவ்வும் பிறவு மணிக்கணி யாகநின்
‖செல்வுறு திண்(ங)டேர்க் கொடுஞ்சின கைப்பற்றிப்
பைபயத் தூங்குநின் மெல்விரற் சிறடி
நோதலு÷முண்டிங் கென்கை வந்தீ
செம்மானின் பாலுண் ணிய

எ - து: யான் கூறியவையும் பிறவும் நின்னழகிற்குமேலே ஓர் அழகாகச் செறியும் நின்னுடைய மெல்லிய விரல்களையுடைய சிறிய அடிகள் இங்ஙனந் திரிந்ததற்கு நோதலுமுண்டு; அதனைத் தவிர்ந்து நின்னுடைய உருட்டுதலுறு கின்ற திண்ணிய தேரில் வளைந்த(ஈ)தாமரைமுகையினைக் கையாலே பிடித்து மெத்தென மெத்தென அசையாநின்ற இவ்விடத்து என் கையிடத்தே வரு வாய்; நினக்கென்று வைத்த பாலையுண்டற்கு. எ - று.

க. (அ) "மூக்காழ் கயந்தலைத்தாழ" கலி. அசு: உ. (ஆ) "மயிர்ப்புறஞ் சுற்றிய கயிற்கடை முக்காழ்" மணி. கூ: கஎடு.

உ. (அ) "கன்முற்றுப் படுத்த புன்றலைச் சிறுஅர்" குறுந். உசஅ. (ஆ) "கதிராற்றுப் படுத்த முதிராத் தன்பமொடு" மணி. டு: கஅக.

ஙூ. (அ)"நெடுந்தேர்க் கொடிஞ்சிபற்றி, நின்றேன்" அகம். கஅ0: உசூ-டு. (ஆ)"மணித்தேர்க் கொடுஞ்சி கையாற் பற்றி" மணி. ச: சஅ.

ச. (அ) "பண்டரித னுந்தியன வந்தபழ முந்தைப், புண்டரிக மொட்டனைய மொட்டினது" கம்ப. தேரேறு. சஎ. (ஆ) "கோகனக முகையனைய கொழுங்கனகக் கொடுஞ்சியன" இராமா. சுந்திர. அ.

(பிரதிபேதம்) * முத்தம், †பிறவு, மொருங்கு,‡பொருத்தம்படி. ‖செல்வுறு,÷உண்டிங்கு.

அணியாகத் தங்கும் நின்னென்க. தேர்க்குத் தாமரை (க)னையாதலின் அதனைச் னையென்றார்.

உஉ பொய்போர்த்துப், பாண்டலை யிட்டபலவல் புலையனைத்
தூண்டிலா விட்டுத் துடக்கித்தான் வேண்டியார்
நெஞ்சம் பிணித்த நெழிலாத் திரிதரு
(உ)நுந்தைபா *லுண்டி சில

எ - து: தலைமேல் ஏறட்டுக்கொண்ட பாண்மையாலே வஞ்சனையை மறைத்து வசீகரித்தற்நெழில் பலவும் வல்ல பாணனைத் தூண்டிலாகப் போகட்டுப் பரத்தையரை அகப்படுத்தித் †தான் விரும்பின பரத்தையருடைய நெஞ்சம்தன்வசமாக்குதல்தனக்குத்தொழிலாகக்கொண்டு திரியும் நுந்தைக்குப் பட்ட சிலகூற்றை உண்பாய். எ - று.

உசு நுந்தைவாய், மாயச்சூ டேறி மயங்குநோய் கைமிகப்
பூவெழி லுண்கண் பனிபரப்பக் கண்படா
ஞாயர்பா ‡லுண்டி சில

எ - து: நுந்தை வாயிற் பொய்ச்சூளை மெய்யாகத் தெளிந்து பூவினது அழகையுடைய உண்கண் நீர் பரக்கும்படியாக மயங்குகின்ற நோய் கைகடந்தாலாலே அக்கண்கள் துயிலாத் நின் தாய்மார்க்குப்பட்ட சில கூற்றை உண்பாய். எ - று.

உக அண்ணையோ,

அண்ணையோவென்றது, அம்மையோவென ஒரு வியப்பு.

க. 'கொடுஞ்சினைத் தைப்பற்றி' என்று ககரவொற்று மிக்கபடம் காணப்படின், "கொடுஞ்சினத்தேரும்" பெருங்.(க)சக. நிஎ. என்புழிப்போல, 'கொடுஞ்சு' என்பதையே தாமஎமொட்டின் பெயராக்கலுமாம். இப்பொருளில் 'கொடிஞ்சி,என்றசொல்லே பெருவழக்கிற் றுயினும், அச்சொல் 'கொடுஞ்சி' என்று (புறம். எஎ: ரு, ருசுஅ: சு, சிலப்.கச: ககஅ; உசு:கருஉ, உகரு; உஎ: ருஎ; மணி. ச: சஅ) இவற்றிற் காணப்படுதலால் இடையிகரம் உகரமாய்த்திரிந்துவழங்குதலும், 'கொடிஞ்சு' என்று (சூளா. அரசியல். கூ0. உஎரு; கிபி.ப. குக. நிக, கரன்வதை. கசக, தேமொ. சரு) இவற்றில் வந்திருத்தலால் ஈற்றிகரம் குற்றியலுகரமாய்த் திரிந்துவழங்குதலும் உண்டென்பதுவிளங்கும். இத்திரிபுகளோடு பரிதிமுதலியவற்றில் இடையிகரம் உகரமாயும் பஞ்சிமுதலியவற்றில் ஈற்றிகரம் குற்றியலுகரமாயும் திரிந்து வழங்குதலே ஒப்புநோக்குக. இச்சொல் தேர்த்தட்டுக்கும் பெயராய் வரும்.

உ. இந்நூற் பக்கம். ருசக; உ - ஆம் குறிப்புப்பார்க்க.

(பிரதிபேதம்) * உண்டிலை. † தான்விரும்பின. ‡உண்டிலை.

(க)யாமெம் மகணேப்பா ராட்டக் கதுமெனத்
தாம்வந்தார் தம்பா லவரெமடி தம்மை
வருகென்றூர் யார்கொலோ வீங்கு

எ - து: வாராத தலைவன் வந்தமை கருதி, யாம் எம்முடைய மகளைப் பாராட்டாநிற்கத் தம் பகுதியிலுள்ள பாணன்முதலியோருடனே தாம் கடந்து வந்தார்; தம்மை இவ்விடத்து வருகவென்று கூறினர் யார்தானெனத் தன் னெஞ்சொடு கூறினள்.

மேல், பிள்ளையைநோக்கிக் கூறுகின்றாள்.

நூ என்பால்ல, பாராட் டெந்தோய் குழியுண் மத்தை(உ)மென்
பாராட்டைப் பாலோ சில

எ - து: என்னுடைய குழியின்பகுதியிடத்தன அல்லவாகிய பாராட்டுக் கேட்டு மகிழ்ந்தவனே! எனக்குப்பட்ட கூற்றை யுண்பாய்; அப்பால்தான் சிறிது காணென்றாள். எ - று.

(ங)கொருக்குரித் தாரை யுவகைக்கூத் தாட்டும்
வரிசைப் பெரும்பாட்டொ டெல்லாம் பருகித்தை
தண்டுவென் *(சு)ஞாயர்பாட்டைப் பால

†எ-து: அவன் அதனை உண்ணுமாறுபோகலிற் கோபிக்கக்கருதின அன்னை, தன் பிள்ளையாட்டால் மனமகிழ்ச்சி செய்தவனை நோக்கிக் கோபிக்கக் கருதினவர்களை உவகையாகிய கூத்தாட்டெவிக்கும் உன்னுடைய தாகத்தாலே

க. ஆரும் வேற்றுமைக்கு உரித்தென்றோதிய முறைப் பொருட்கண், உயர்திணைப் பொருள் இரண்டு சேர்ந்த விடத்து நிலைமொழி யீற்றில் உருபு விரிப்புழி, குசம் வரும்; அதுவன்றி ஆறும வேற்றுமையை விரிப்புழி, அதுவென் னுருபுகெட அதன் உடைமைப் பொருள் விரியும்; என்று கூறி, "யாமெம்மகணைப் பாராட்ட" என்பதை மேற் கோள் காட்டி, இது உருபு நிலைக்களத்துப் பொருண் மயங்கிற் றென்றும், இதற்கு நான்க னுருபு விரிப்பின் எமக்கு மகளுடையவளை யென ஆக்கங்கொடுத்துக் கூறல் வேண்டுமென்றும் கூறுவர், நச் சினர்க்கினியர்; தொல். வேற்றுமைமயங்கு. சூ. கக.

உ. "அழுதகண் னீர்கண் மைந்த ளுவிபோழ்ந் திட்ட வன்றே" என் பதன் விசேடவுரையில் நீர்கவென்றதனை, "என் பாராட்டைப்பாலோ சில" என்றற்போலக் கொள்க வென்பர், நச்; சிவக. உoஅஎ.

ஙூ. மூன்பதிப்பில் அடிப்பிரிப்பு வேறுகவள்ளது.

சு. "ஞாயர்" கலி. அக: கஉ; "ஞாயையு மஞ்சுஇ" கலி. கoஎ என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

(பிரதிபேதம்) * ஞாயர்பாட்டைப், † எ - து: அஃது அவனை உண்ணுமற்,

இனி யான் பாராட்டும் பெரிய பாட்டுக்களோடு நின் தாய்மாருக்குப்பட்ட கூற்றையுடைய பாலைப்பருகு; இத்தையெல்லாம் நின்னை *ஊட்டல் அமைவே னென்று (க) கூறிட்டு ஊட்டினள். எ - று.

தண்டுதல் அமைதலென்னும் பொருடரூதல், (உ) தண்டாமையென்னும் அதன் மறையால் உணர்க; "தண்டாக்காற் ளரியல்" (ங)"தண்டாவிருப்பி னள்" (சு) எனவரும். †ஞாயலொன்றது தன்னைப் பிறர்போற் கூறிற்று.

(இதனுல்) தலைவிக்குத்தலைவனைக்கண்டுதுமைபற்றிவியப்புத்தோன்றிற்று. தலைவற்கு ‡ நினைத்தல் பிறந்தது. புதல்வனுல் தலைவிக்குச் செல்வமாகிய உவகை பிறந்தது;(ஙு)புதல்வனுஞ் செல்வமாதலின்.

இது "தரவும் போக்கும் பாட்டிடைமிடைந்தும்" என (சூ) || இடை நிலைப்பாட்டினை ஈற்றின் வைத்தமையால், (எ) தரவும் போக்குமின்றி இடை நிலைப்பாட்டுக்களே ழுஞ்சீரடுக்கிவந்து கலிவெண்பாவிற் கூறிய உறுப்பொத்து யாப்புவேறுபட்டு வந்த கொச்சகம். (உ)

(அசு.)மைபடு சென்னி மழகளிற் றோடைபோற்
கைபுனை முக்காழ் கயந்தலைத் தாழப்
பொலஞ்செய் மழுவொடு வாளணி கொண்ட
நலங்கிளை செண்டு ணினைத்தரு மவ்வாய்
நி கலந்துதண் ணேக்கார்க் காண்பின் றுகிற்மேற்
பொலம்புனை செம்பாகம் போர்கொண் டிமைப்பக்
கடியரணம் பாயாநின் கைபுனை வேழந்
தொடியோர் மணலி னுழக்கி யடியார்ந்த

க. "பால்பெய் வள்ளஞ் சால்கை பற்றி, யென்பா ணெண்ணே யாயி ஞருகா, னுந்தை பாடு முண்ணெண் ணாட்" அகம். உகக: ங - எ.

உ. இவர் இவ்வாறுரைப் பொருள், கொள்ளு முறைமையை, "எய்யாமையே யறியாமையே" (தோல். உரி.சூ. சசச) என்பதற்கு இவர்கூறியிருக்கும் விசேடவுரையாலும் அறிக.

ஙு. சு.

ங. (அ) "தம்பொரு ளென்பதம் மக்கள்" குறள். சுஙு. எனவும் (ஆ) "பொன்போற் புதல்வனெடு" ஐங். உசுங. (இ) "பொன்போற் புதல் வர்ப் பெறுஅ தீரும்" புறம். க: ச. எனவும் வருதல் காண்க.

சு. தோல். செய். சூ. கஙுச.

எ. தரவும் போக்கு-மின்றிக் கொச்சகம் பலதொடர்ந்து இற்றதற்கு, இச் செய்யுளே மேற்கோள்காட்டி உறழ் பொருட்டுஅன்மையிற் கொச்சகக் கலியாயிற் றென்பர். பேராசிரியர் நச்சினர்க்கினியர், இருவரும்; தோல். செய். சூ. கஙுஙு.

(பிரதிபேதம்) *ஊட்டாமல்விடுவேனென்று, † தாயென்றது தன்னைப்பிறன்போற்கூறினுன்; இது தலைவிக்கு ‡நினைதல் பிறந்தது, || இடைநிலைப்பாடனவை யீற்றின்.

தேரைவாய்க் கிண்கிணி யார்ப்ப வியலுமென்
போர்யானை வந்தீக வீங்கு ;

கக செம்மால், வனப்பெலா நுந்தையை யொப்பினு நுந்தை
நிலைப்பாலு ளொத்த குறியென்வாய்க் கேட்டொத்தி
கன்றிய தெவ்வர்க் கடந்து களங்கொள்ளும்
வென்றிமாட்டொத்தி பெருமமற் றெவ்வாதி
யொன்றினேம் யாமென் றுணர்ந்தாரை நுந்தைபோன்
மென்றே ணெகிழ விடல் ;

கஎ பால்கொள வின்றிப் பகல்போன் முறைகோடாக்
கோல்செம்மை யொத்தி பெருமமற் றெவ்வாதி
கால்பொரு பூவிற் கவின்வாட நுந்தைபோல்
சால்பாய்ந்தார் சாய விடல் ;

உக வீத லறியா விழுப்பொரு ணச்சியார்க்
கீதன்மாட் டொத்தி பெருமமற் றெவ்வாதி
மாதர்மென் னோக்கின் மகளிரை நுந்தைபோ
னேய்கூர நோக்காய் விடல் ;

ஆங்க;

உசு திறனல்ல யங்கழற யாரை நகுமிம்
மகனல்லான் பெற்ற மகன் ;

உஅ மறைநின்று, தாமன்ற வந்தீத் தனர் ;
ஆயிழாய், தாவாத வெற்குத் தவறண்டோ காவாதீங்
கீத்தை யிவணீயாங் கோடற்குச் சித்தையாங்
கன்றி யதனைக் கடியவுங் கைதீவிக்
குன்ற லிறுவரைக் கோண்மா விவர்ந்தாங்குத்
தந்தை வியன்மார்பிற் பாய்ந்தா னறனில்லா
வன்பிலி பெற்ற மகன்.

இது "தந்தைய ரோப்பர் மக்களென் பதனு, லந்தமீல் சீறப்பின் மகப்பழித்து நெருங்கலும்" (க) என்பதனுள் மகனைத் தலைவனே ஒக்க

க. தொல். கற்பி. சூ. கூ. இச்சூத்திர வுரையில் "வனப்பெலா..... ..... நெகிழவிடல்"என மகனைக்கொண்டு வினையாடியவழி, அவன் தலைவன் மேல் வீழ்தலில், "தந்தை வியன்மார்பிற்.....மகன்" எனத் தன்றிறத்தன்பிலனெனநெருங்கிக்கூறியவாறுகாண்கவென்பர், நச்.

லாய் தணனும் ஒக்கலாகாக் தணனும் தலேவி கூறுகின்றுழி மறைந்துபுக்க தலேவன் அவள் ஊடலுணர்வனை சொல்ல, மகன்வாயிலாக ஊடறீர்வான் தன்னுன்லே கூறியது.

இதன் பொருள்.

(க)மைபடு சென்னி மழகளிற் றேடைபோற்
கைபுனை (உ)முக்காழ் கயந்தலித் தாழப்
பொலஞ்செய் மழுவொடு வாளணி கொண்ட
நலங்கிள ரொண்(ங)பூ ணணைத்தரு மவ்வாய்
(ச) கலந்துகண் ணேக்காரக் *காண்பின் றுகிர்மேற்
பொலம்புனை (ச)செம்பாகம் போர்கொண் டிமைப்பக்
(டு)கடியரணம் பாயாநின் கைபுனை வேழந்
தொடியோர் மணலி னுழக்கி யடியார்ந்த

க. (அ) "அஞ்சன மெழுதின.....குஞ்சரம்" (ஆ) "மையணி மத யானை" நீலக. உஉ.ம, உசஙச. (இ) "மையணி பிரும்பிடி" (ஈ) "மையணி யானை" (உ) "மையணி வேழமும்" (ஊ) "மையணி யுயர் நுத, விருங்களிற்றியானை" பெருங். (க) சஅ: கஅச, (இடை: கஙச; (ங: கஙங:(உ) கஉ: ஙஎ; (ங) உஉ: ககக - உ00.(எ)"இழையஞ் சனமால் களிறு" கம்ப. அதிகாயன். உக.

உ. "முக்காழ்" (கலி. அடி: கங) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

ங. "அவ்வாய் தன் மெய்பெரு மழலேயின் விளங்குபூ ணணைத்தர" கலி. அக: க-உ. என்பதும் இக்நூற்பக்கம். சளக: சு-ஆம் குறிப்பும் பார்க்க.

ச. | "செம்பாகம்" குறள். கo கூஉ.

டு. (அ) "ரீண்மதி லரணம் பாய்ந்தெனத் தொடிபிளக்து, வைந்நுதி மழுகிய தடங்கோட் டியானே" (ஐங். சசச) (ஆ) "எழுஉப்புறச் தீரீஇப் பொன்பிணிப் பலகைக், குழுஉநிலேப் புகலிற் கதவுமெய் காணிற், றேம்பாய் கடாத்தொடு காழ்கை நீவி, வேங்கை வென்ற பொறிகிளர் புகர்நுத, லேக்தகை சுருட்டித் தோட்டி நீவி, மேம்படி வெல்கொடி நுடங்கத், தாங்க லாகா வாங்குநின் களிறே" பதிற். டுங: கடி - உக. என மெய்யாகிய யானேயையும் (இ) "கவழ மறியாநின் கையுனேவேழம்" (கலி. அo: ங) எனப் பொய்ம்மையானேயையும். கூறியிருத்தலும் (ஈ) "கொய்யுஞ் சுவற்பரி யுக்குலப் பாகுமூட் டோலு மில்லா, வையங் கடவு மதகளி றேவருந், தாமலெங்கை, செய்யும் பெருந்தவ 'மேகலர் தாருழைத் நீமையையும், பொய்யுங் கலாதொழி வாய்புன 'ரூரனேப் போலவின்றே" அம்பிகாபதி. டுoச. என்பதும் ஈண்டு அறிதற் பாலன.

(பிரதிபேதம்) * காண்மின் றுகின்மேற்.

தேரைவாய்க் கிண்கிணி யார்ப்ப வியலுமென்
போர்(க)யானை (உ)வந்தீக வீங்கு

க. (அ) "காதற் சொல், யானையென ஒப்புமை கருதாது காதல் பற்றி வருவது; காதல் பற்றிச் சிறுவனை யானையென்றலும் ஆகுபெயராமன் றோவெனின்;—யாதானுமோ ரினையுபற்றி ஒன்றன்பெய ரொன்றற் காயது ஆகுபெயராம்; இயைபு கருதாது காதன் முதலாயினவற்றான் யானை யென்றவழி ஆகுபெயருளடங்கா வென்பது. ஒன்றன்பெயர் ஒன்றற்காத லொப்புமையான் ஆகுபெய ரென்பாரு மூளர்" என்பர் சேனாவரையர்; (ஆ) நச்சினார்க்கினியர், காதற் சொல் யானை வந்தது என ஒப்பின்றிக் காதல் பற்றி நிற்கும் என்று கூறி, "போர்யானை வந்தீக வீங்கு" என்பதை மேற்கோளும் காட்டுவர்; தொல். இளவி. சூ. நிஎ. (இ) உயர்திணை அஃறிணையாகி ஒப்புமை கருதாது உவப்பின்கண் திணைமயங்கி வந்ததற்கு, "என்போர் யானை வந்தீக வீங்கு" என்பதை மேற்கோள் காட்டுவர், இ - வி. நூலார்; இ-வி. சூ. உகக. (ஈ) ஒருவனை என் யானை வந்தது என்பது உவப்பினும், திணை மயங்கிற்றென்பர், மயிலைநாதர்; நன். பொது. சூ. உஅ. இவைகளும் (உ) "உயர்ந்தது மேற்றே யுள்ளுங் காலை" தொல். உமை. சூ. ஈ. என்னுஞ் சூத்திர வுரையில் "உள்ளுங்காலை என்றதனான் முன்னத்தி னுணருங் கிளவியான் உவமங்கோடலும், இழிந்தபொருள் உவமிப்பினும் உயர்ந்த குறிப்புப்படச் செயல்வேண்டு மெனவுங்கொள்க. அவை 'என்யானை' 'என்பாவை' என்றவழி அவை போலும் என்னுங் குறிப்புடையான், பொருள் கூறித்திலனாயினும், அவன்குறிப்பினன் அவை வினையுவமையெனவும் மெய்யுவமையென வும்படும்; இவற்றுக்கு நிலைக்களம், காதலும் கலனும் வலியு மென்பது சொல்லுதும்; அவைபற்றாது சொல்லுதல் குற்றமாகலின்" என்று காணப்படுகை குறிப்பும் இங்கே அறிதற் பாலன. (ஊ) "மாதர், வருக வென் களிறென்றேத்தி வாங்குபு தழுவித் கொண்டாள்" கீவக. கஉஉக. (எ) "இன்றுணை மகளிரோ டொன்றியான் விடுதருஞ், சொல்லொடு படுத்துச் செல்கவென் களிறென" பெருங். (க) உசு: உசஉ - எ. (ஏ) "அன்னே, பொருகளிறு வருகவளர் போரேறு வருகவெழிற் பூவை வண்ணை, வருகவெனத் தகிரில்வினை மணிமுத்தம் கொண்டன ளுண் மகிழ்வு பூத்தாள்" பாக. கo: சகடமுதைத்த. உக. எனவருதலும் காண்க.

உ. (அ) வந்தீக வென்பதனை "வினைகலந்து வென்றீக" குறள். கஉஅ. (ஆ) "யார்மேற்றூக் கொள்ளினுங் கொண்டீக" (இ) "என்செய்தே யாயினு மூய்ந்தீக" பழ. உஙக; ஙஅச. என்பவை ஒப்புநோக்கற் பாலன.

எ - து: பட்டத்தையுடைய இளையகளிற்றினது கருமை*யுண்டாகின்ற தலையில் காலுகின்ற மூன்று வடம்போலே கையாற் பிணைந்த மூன்று வடம் மென்மையையுடைய தலையிடத்தே தாழ, (க) பொன்னுற் செய்த மழுவோடே வாளம் அணிதலைக்கொண்ட நன்றே விளங்குகின்ற ஒள்ளிய பூணை நனைத் தலைச் செய்யும் அழகிய வாயைக் கண் கலங்க நினை வேட்கையதாக †கரட்சி யினிய பவளப் பலகைமேலே (உ) செம்பாதி வடிவு வேறேர் யானையை இறக் குத்துகின்ற போர்த்தொழிலைத் தண்ணிடத்தே கொண்டு விளங்கும்படியாகப் பொன்னுற் செய்த, காவலையுடைய அரணங்களைக் குத்தாத கையாற் பிணைந்த நின் வேழத்தோடே, நின்னடியில் நிறைந்த (ங) தேனையின் வாய்போலும் வாயையுடைய சதங்கை ஆரவாரிப்ப, (சு) தொடியினையுடைய மகளிர் இழைத்த வண்டலின் கண்ணே உழக்கி நடக்கும் என்னுடைய போர்த்தொழிலையுடைய யானை! இவ்விடத்தே வருக. எ - து.

‡ பொலம்பூணேவழமென்க. உழக்கியியலுமென்க.

கக செம்மால், வனப்பெலா நுந்தையை பொப்பினு நுந்தை நிலைப்பாலு ளொத்த குறியென்வாய்க் கேட்டொத்தி;

க. இங்கே கூறிய பிள்ளைப்பணி, திருமாலின் ஐம்படைகளின் வடிவு மான தாலியேயன்றி இறைவன் படை வடிவமான தாலிபோலும். "பூண்டவை, எறியாவாளு மெற்று மழுவுஞ், செறியக் கட்டி யீரிடைத் தாழ்ந்த, பெய்புல மூதாய்ப் புகர் நிறத் துகிரின், மையற விளங்கிய வானேற் றவிர்பூண்" கலி. அதி: அ - கக. என முன் வந்திருத்தலும் காண்க.

உ. "சம்பாதி யருச்சிப்பத் தம்பிசடா யுவும்பரவச், செம்பாதி யவள் வணங்கத் திருப்பாத மளித்தனையே" புள்ளிருக்குவேளூர்க்கலம். க.

ங. இது மெய்யுவமம்; வாயென்றது வாயிலெலியைக் குறிப்பதாகக் கொள்ளின் வினையுவமமாம். (அ) "தவளைக் கிண்கிணித் தாமரைச் சீறடி" (ஆ) "தவளைக் கிண்கிணித் தாமம்" சீவக. உசஉ, ஙகஉசு. (இ) "அரிக்குரற் கிண்கிணி யரற்றஞ் சீறடி".....(ஈ) "அரிப்பொற் கிண்கிணி யார்ப்ப" (உ) "தவளைக் கிண்கிணி தழும்புசீ றடியர்" (ஊ) "தவளையங் கிண்கிணிச் சேவடி" பெருங். (க) உ0: கஅ, சக: உசசு. (ங) கூ: ககஎ - அ. (எ) "தவளையங் கிண்கிணித் தாளும்" கூர்ம. கல் யாண. உஅ. (ஏ) "தவளைவாய்ச் சதங்கை" காசி. பஞ்சாதத். ஙூ. (ஐ) "தவளைவாய்ச் செம்பொற் கிண்கிணி" சீகாளத்தி. ரான்மூக. உக. என்பவைகளும் இந்நூற்பக்கம் சஎஅ: எ - ஆம் குறிப்பும் இக்கே அறிதற் பாலன.

ச. இந்நூற்பக்கம் கஙிஅ: உ - ஆம் குறிப்புப்பார்க்க.

(பிரதிபேதம்) *உண்டாகின்ற ஒள்ளியபூண, †காணும் இனியபவளப் ‡புலம்பூண,

தன்றிய தெவ்வர்க் கடந்து (க)களங்கொள்ளும்
வென்றிமாட் டொத்தி; பெருமமற் றெவ்வாதி
யொன்றினேம் யாமென் றுணர்ந்தாரை நுந்தைபோன்
மென்றோ ணெகிழ விடல்.

எ - து: தலைவா! பெருமா! *நுந்தையை அழகெல்லாம் ஒத்திருப்பினும் நுந்தை நிற்கின்ற நிலைகளின் கூற்றில் உனக்கொத்த குறிக்கப்படுங் குணங்களை யான் கூறக்கேட்டு ஒப்பாய்; அவற்றுள் மாறுபாட்டிற்பட்ட பகைவரை வென்று களத்தைக்கொள்ளும் வெற்றிக்குணத்திடத்து அவனை ஒப்பாய்; மற்றுள்ள குணங்களிலே யாம் இவ்வெனதி ஒருமனமாயினேமென்று உணர்ந்திருந்த மகளிரை நுந்தை மென்றோள் மெலிய விடுமாறுபோல நீயும் அவர் மெல்லியதோள் மெலியும்படி விடுதலாகிய†பரத்தமையை ஒவ்வாதேகொள்.

எ - று.

களை (உ)றல்கொள லின்றிப் பகல்போன் ‡முறைக்கொற்றத்
தோல்செம்மை யொத்தி பெருமமற் றெவ்வாதி

க. (அ) "களங்கொள் யானைக் கடமான் பொறைய" (ஆ) 'அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர், தாமாய்ந் தனரே குடைநிழ லினவே, யுரைசால் சிறப்பின் மூரைசொழிந் தனவே, பன்னூ றடுக்கிய வேறு படு பைஞ்ஞில, மிடங்கெட வீண்டிய வியன்கட் பாசறைக், களங் கொளற் குரியோ ரின்றித் தெறுவர், வுடன்வீழ்ந் தன்ரு லமரே" புறம். நிகூ: நி; சுஉ: எ - கசு.(இ)'அமர்க்கள மரசன தாகத் துறந்து, தவப் பெருந் தோலாங் கொண்டோர்' சீலப். உஅ: கo ச - நி. (ஈ) "வென்று களங் கொள்ளுமேல் வேந்து" பெரும்பொருள். (தோல். புறத். சூ. நி. நச். மேற். (உ) "இருங்களி யானை யினமிரிந் தோட, கருங்கழலான் கொண்டான் களம்" (ஊ) "வென்று களங் கொண்ட வேல்வேந்தே" பு - வெ. வாகை. உசூ. பாடாண். சுஎ. (எ) "களங் கோடற் குரியசெருக் கண்ணி யக்கால்" கம்ப. சூர்ப்பணகை. கருக. (ஏ) "வென்று வெங்களங்கொண்டு" (ஐ) "இக னெடுங்களம் வென்று கொள்குவம்" (ஒ) "பொரு களங் கொண்டி வாகை புனைந்து" வீல்லி. காண்டவதகன. நிகூ. பதின்மூன்றும். உசூ. பதினேந்தாம். கஉ. என்பவைகளும் (ஓ)"தேன்மிடைந்த தாரினஞ் செங்களஞ் சிறந்தே" (தீவகஉஎக) என்புழி, 'இத்துணையும் இவன் வெற்றியாதலின், இவன் களமென்ரூர்' என்னும் விசேடவுரையும் ஈண்டு அறிதற்பாலன.

உ. "பால்கொள.....ஒவ்வாதி" என்னும் இரண்டடிகளை 'ஒப்பு வழி பழுத்தற்கு உதாரணமாகச் சொல்லுப' என்பர் பேராசிரியர்; தொல். மெய்ப். சூ. உஉ.

(பிரதிபேதம்) * அந்தை அழகெல்லாம்; † பரத்தமை. ‡முறைகோடாக்,

கால்பொரு பூவிற் கவின்வாட நுந்தைபோல்
சால்பாய்ந்தார் சாய விடல்

எ-து: பெருமா!(க)நுகத்துப் பகலாணிபோல் ஒருபக்கத்தைக் கொள்ளுத லின்றி (உ)முறைமைசெய்தற்குச் சாயாத தோல் செவ்விதாக நிகழ்த்துதலில் அவனே ஒப்பாய்; மற்றுள்ள குணங்களில், தன்னுடைய அமைதிக்குணத்தாலே இவன் நம்மைத் தப்பானென்று ஆராய்ந்த மகளிரைக் காற்றுப் பொருகின்ற பூப்போலே அழகுகெடும்படி நுந்தை சாயவிடாமலிருப்போலச் சாயவிடுதலாகிய *பரத்தைமையை ஒவ்வாதேகொள். எ - று.

உக (ங)வீத லறியா விழுப்பொரு (ஞ)ணச்சியார்க்
(ற)கீதன்மாட் டொத்தி பெருமமற் றெவ்வாதி
(ஈ)மாதர்மென் னோக்கின் மகளிரை நுந்தைபோ
னெய்கூர நோக்காய் விடல்

எ-து: பெருமா ! நின்னையுடையார் கெடுதலன்றித் (எ)தானே கெடுத லறியாத சீரிய பொருளை நச்சினரிகளுக்குக் கொடுத்தலிடத்து அவனை

க. (அ) "கெடுதகத்துப் பகல்போல், நடுவுநின்ற நன்னெஞ்சினோர்" பட். உஅசு - உஎள; (ஆ) "நுகத்துப் பகலாணி போன்று" பழ. கஞ். (இ) "நுகத்திற் பகலனையாய்" தஞ்சை. சஅ.

உ. "ஓர்வுற் றெருநிற மொல்காத நேர்கோ, லறம்புரி நெஞ்சத் தவன்" கலி. சஉ: கச - ஙி.

ஙா. "வீதலறியா..... .....விடல்" என்பது தந்தையொப்பர் மக்களென்ப தலால் மகப்பழித்து நெருங்கும் தலைவிகூற்றுக்குமேற்கோள்; தோல். கற்பி. சூ. ஙா. இளம்.

ச. "நச்சியார்க் கீதலும்" காரி. எ.

ஞ. "ஈதன்மாட் டொத்தி பெருமை" என்பது இகரவீற்று தகரத்தை யூர்த்து எதிர்காலம்பற்றிவருமென்பதற்கும் (தோல். 'வினையியல். சூ. உசு. நச்; இ - வி. சூ. உஙஅ) தகரம் சிறுபான்மை எதிர்காலம் காட்டி வருமென்பதற்கும். (இ - வி. சூ. சகூ) மேற்கோள். ககர தகரங்களை ஊர்ந்துவரும் இகரம் எவ்வகண்ணியே நிற்குமென்பர். நச.

ஙா. (அ) "மாதர்கொண் மானேக்கின் மடநல்லாய்" (ஆ) "மாதர்கொண் மானேக்கின் மடந்தை" கலி. இசு: கஎ; ஙூக; ச.

ஙா. (அ) "வெள்ள மறவி விறல்வேந்தர் தீத்தாயம், கள்ளரென் றிவ்வாறிற் தகரப்பத் தீர்ந்தகலும்" செல்வப்பொருளை, வீதலறியா விழுப்பொரு ளென்றதற்கு நச்சினார்க்கினியர் எழுதியிருக்கும் உரை பாராட்டத் தக்கது. (ஆ) "கேடில் விழுப்பொரு டருமார்" குறுந். உகஅ.

(பிரதிபேதம்) * பரத்தமை.

ஒப்பாய்; மற்றைக் குணங்களில், காதலியுடைய மெல்லிய நோக்கினையுடைய மகளிரை நுந்தை நோய் கூர நிற்க நோக்காது விடுமாறுபோல நீயும் அவர்களே நோய்மிகாநிற்கப் பாராது விடுதலாகிய பரத்தைமையை ஒவ்வாதே கொள். எ - று.

(க) *ஆங்க; அசை.

என்பது ஒப்புநோக்கற்பாலது. (இ) இலக்கணக் கொத்து நூலாரால் அந்நூலின் அ-ஆம் சூத்திரத்து 'அரும்பொருள்' என்பதன் விசேட வுரையில், "பொருளென்னும் பெயர் பொதுவாயினும், கல்விப் பொருளினை மாத்திரம் அங்ஙனங் கூறுது, நற்பொருள், பெரும் பொருள், அரும்பொருள், குறையாப்பொருள், துணைப்பொருள், நீங்காப்பொருள், கேடில்பொருள், விளக்கும்பொருள், விழுமிய பொருண் முதலாக யாதானு மோரடை கொடுத்தே கூறுவர்; 'கேடில் விழுச் செல்வங் கல்வி' எனச் சிறுபான்மை பலவடையும் கொடுத்துக்கூறுவர். அக்கருத்துப் பண்டை நூல்களெல்லா வற்றினுள்ளுங்காண்க. அந்நியமம் மறந்துந்தப் பார்களென்பது தோன்ற அரும்பொருள் பெறுகவென்றும். கலித்தொகையின் ஓர்காரண நோக்கு நிதிப் பொருளைக் கேடில் விழுச் செல்வமென்றார். இவ்வடை கல்விக் குரித்தன்றிப் பிறவற்றிற்கு முரித்தோ வென்பாரை நோக்கி, வழு வமைத்தார் நச்சினர்க்கினியர்" என்று எழுதப்பெற்றிருப்பது இங்கே ஆராய்தற்பாலது.

க. "ஆங்கத் திறனல்ல..... .....பெற்ற மகன்" என்பதை ஆங்கென்பது அசைநிலையாய் வருதற்கு (நன். இடை. சூ.அ) மேற்கோள்காட்டினர், மயிலைநாதர்; அங்கு என்னு மசைநிலை 'ஆங்க' என இறுதி விகாரமாய் நின்றதென்று பொருத்தினர் விருத்தியுரைகாரர். "அந்திலாஅங் கசைநிலைக் கிளவியென், முரிப்பண் டாகு மியற்கைத் தென்ப' என அந்தில் என்பது ஆங்கு என்னும் இடப்பொருளும் அசைநிலையுமா மென்றதை இவர் அந்திலும் ஆங்கும் இடப்பொருளும் அசைநிலையுமாமெனச் சூத்திரஞ்செய்தார். அது ஆசிரியர் கருத்தன்றென்றதை அவர் சூத்திரத்தாலும் ஆங்கு என்பது இடச்சுட்டுப் பெயர்ச் சொல்லாதலாலும் (அறிக) ஆங்கு அசைநிலையெனக் கூறி ஆங்க என உதாரணங் காட்டியது[தினுலு](தும்) பொருத்தா தென்க. இனி ஆங்க என்னும்அகரவீற்றிடைச்சொல் அசைநிலையெனக்கொளின் அமையும். என்னெனின் 'ஆங்கவரையசை' எனக் கூறியதினுலும் 'ஆங்கக்குயிலு மயிலுங்காட்டி' எனவும். 'ஆங்கத் திறனல்ல யாங் கழற' எனவும், பயின்று வருதலாலு மென்க" என்று மறுத்துரைப்பர் இராமானுசகவிராயர்; இலக்கண விளக்க நூலாரும் இக்கருத்துடையரென்பது ஞ - வி. உஎக - ஆம் சூத்திரத்தால் விளங்கும்.

(பிரதிபேதம்) * ஆங்கசை.

உசு (க)திறனல்ல யாங்கழற யாரை நகுமிம்
(உ) மகனல்லான் பெற்ற மகன்

எ - து: பின்வந்துநின்ற தலைவனைக்கண்டு நக்க புதல்வனைநோக்கி, இந்த நன்குமதிக்கும் மகனல்லாதவன் பெற்ற மகன் நற்குணங்களல்லாதவற்றை *ஈ ஒவ்வாதே கொள்ளென்று யாம் கோபிக்க யாரைகோக்கி நகும். எ - று.

† என்று கருதிப் பார்த்துப் பின்னின்ற தலைவனைக் கண்டாள்.

உஅ மறைநின்று, தாமன்ற வந்தீத் தனர்

எ - து: கண்டு, வாராத தாம் பின்னே மறையநின்று பின்னர் நாம் தெளியும்படி முன்னே வந்தார் ‡ரென்றாள். எ - று.

உசு ||ஆயிழாய், தாவாத வெற்றுத் தவறுண்டோ காவாதீங்
கித்தை யிவனீயாங் கோடற்குச் (நு)சித்தையாங்
கன்றி யதனைக் கடியவுங் கைநீவித்
குன்ற (ஈ)விறுவரைத் தோண்மா விவர்ந்தாங்குத்
தந்தை வியன்மார்பிற் பாய்ந்தா ÷னறனில்லா
வன்பிலி பெற்ற மகன்.

எ - து: அதுகேட்ட தலைவன், இங்ஙனங் கொடுமைகூறுகின்றாயாயின் அழகிய இழையினையுடையாய்! நின்னிடத்துச் செய்வதோர் வருத்தம் இல்லாத எனக்கும் ஒரு தப்புண்டோ? இவனை யாம் எடுத்துக்கொள்ளுதற்கு நின்னிடத்தே காத்துக்கொள்ளாதே என்னிடத்தே தருவாயென்றான்; அதுகேட்ட புதல்வன் அவன்மேலே வீழ்ந்தவனைத் தலைவி தோக்கித் தைவிடப்பட்டவனுடைய அன்பிலி பெற்ற பிள்ளை யாம் அவன்மேலே வீழ்தலை மனங்கன்றி விலக்கவும் ×நம்மைக் கைகடந்து மலையிடத்து உறுகின்ற அடி

க. "திறனல்ல..... .....மகனல்லான் பெற்ற மகன்" என்பது தன் இளமை பொருளாகப்பிறந்த நகைக்கும், (தொல்.மெய்ப்.சூ. ச.பேர்.) பிரிவின்பாற் படுவதாகிய ஊடலிற் பிறந்த துனிக்கும் (தொல். செய். சூ. கஅ.ஏ.பேர்; நச்) மேற்கோள்.

உ. "மகனல்லான் பெற்ற மகன்" கலி. அசு: கசு.

ங. "சித்தை" கலி. கூச: உஉ.

ச. "இறுவரை யிவர்வதோ நிலங்கையிற் றரியென" தீவக. கஅசுங. இறுவரை - பெரியமலை. தீவக. கசசுங, கஅசுங, உடிஉஉ; பக்கமலை. கலி. சசு: கசு.

பிரதிபேதம் * ஈ கொள்ளாதேகொள்னென்று, † எனக்குரிப் பின்னின்றதனை, ‡ என்றான் ||ஆயிழாய். ||ஆயிஞயிழாய், ÷ அறனிலா, ×நம்மைக்கடந்து.

வரையிலே நெகும் பாய்ந்தாற்போல அறனில்லாத தர்தைபுடைய அகன்ற மார்பிலே * பாய்ந்தானென்னுள். எ - று.

இது மகப்பழித்துநெருங்கியது. அன்பிலி பெற்ற மகனென (க)அவன் வயிற் † பிரித்தவாறுங் காண்க. அறனில்லாவென்றது, ஆங்கு நெஞ்சழிதல்.

இதனுல், இருவர்க்கும் புணர்ச்சிபுவகை பிறந்தது.

இஃது ஆங்கவெனத் தனிச்சொற்பெற்று ஐஞ்சீரடுக்கி வந்த கலி வெண்பா. (உக)

(அள.)ஒருஉநீ யெங்கூந்தல் கொள்ளல்யா நின்னை
வெருஉதுங் காணுங் கடை;

ங தெரியிழாய், செய்தவ றில்வழி யாங்குச் சினவுவாய்
மெய்பிரிந் தன்னவர் மாட்டு;

ஙி ஏடா, நினதகுத் தவறுண்டோ நீவீடு பெற்ரு
யிமைப்பி னிதழ்மறை பாங்கே கெடுதி
நிலேப்பா லறியினு நின்னெஞ்து நின்னைப்
புலப்பா ருடையர் தவறு;

கூ அணித்தோளாய், தீயாரைப்போலத் திறனின் றுடற்றுதி
காயுந் தவறிலேன் யான்;

ககூ மானேக்கி நீயழ நீத்தவ ஞனது
நாணில ஞயி னலிதந் தவன்வயி
னூடித லென்னே வினி;

ககூ இனியாது மீக்கூற்றம் யாமில மென்னுங்
தகையது காண்டைப்பாய் நெஞ்சே பனியானுப்
பாடில்கண் பாயல் கொள.

இது பாத்தையர்சேரிச் சென்றமை அறிந்திலனெனத் தலைவிமாட்டுச் சென்றவனேடு அவள் ஊடி உறழ்ந்துகூறித் தோழி வாயிலாக ஊடறீர்வாள் தன் னெஞ்சோடு கூறியது.

இதன் பொருள்.

க. தலைவி தன்னெடு மைந்தனிடைட் உறவுகீக்கி, அவனேத் தலைவனெடு சார்த்திக் கூறதலாகிற அவன்வயிற் பிரிப்பு என்பதற்கு "மறைநின்று .....மகன்" என்னும் பகுதியை மேற்கோள்காட்டி, "அறனில்லா வன்பிலி பெற்ற மகனெனப் பிரித்தவாறு காண்க" என்பர் நச்சி னர்க்கினியர்; தொல். கற்பி. சூ. சு.

(பிரதிபேதம்) * பாய்ந்தானெனமகப்பழித்துநெருங்கியவாறும் அன்பிலி. †பிரித்தவாறுங்.

(க) ஒருஉநீ; யெங்கூந்தல் கொள்ளல்*யா நின்னை
வெருஉதுந் காணுங் கடை

எ - து: †யாம் நின்னைக் காணுமிடத்து வெருவுவேம்; ஆதலால் எங்கூந்தலைத் தீண்டாதேகொள்; நீ நீங்கென்றாள் தலைவி. எ - று.

இது வெருவவேண்டாப் பொருட்கட் கடிதிற் பிறந்தோர் வெறியாதலின், (உ) வெருவுதலென்னும் மெய்ப்பாடு.

ஈ தெரியிழாய், செய்தவ றில்லழி யாங்குச் சினவுவாய்
மெய்பிரிந் தன்னவர் மாட்டு

எ - து: அதுகேட்ட தலைவன், தெரிந்த இழையினையுடையாய்! அத் தன்மையாகிய பரத்தையர்மாட்டு உண்மையாகப் பிரிந்து யான் செய்த தவறில்லாத இடத்து நீ எங்ஙனஞ் சினப்பாயென்றான். எ - று.

அன்னவரென்றது, நீ புலக்குந் தன்மையுடையரென்றது.

க. (அ) தலைவன் மூன்று தலைவி தன்னைப் புகழ்தல், தலைவன் பரத்தையிற் பிரிந்து வந்தவழி இரத்தலும் தெளித்தலுமாகிய ஈரிடத்து மட்டுமுண்டென்று கூறி, 'ஒருஉநீ..... ....காணுங் கடை' என்பதை முதலாவதற்கு மேற்கோள் காட்டி, 'இதில் தன்னை உயர்த்துக் கூறுதலாற் புகழ்ந்தாளாம்; நின்னை வெருவாதார் பிறருளரென்னு மூள்ளக்கருத்தினல்' என்றும், தொல். கற்பியல். சூ. ஈடு. 'தற்புகழ் கிளவி' (ஐ) "பரத்தைவாயி னல்வர்க்கு மூரித்தே" (தொல். பொருளி. சூ. உக. என்பதன் விசேடவுரையில், 'நால்வர்க்கு மென்றமையால், நாண்கு வருணத்துப் பெண் பாலாருள் அவரோடு ஊடப்படுபவர்' என்றுகூறி, இப்பகுதியை (பார்ப்பனியும் அரசியுமொழிந்த) 'ஏனைய வருணத்தார் கூற்று' என்றும் கூறுவர் இளம்பூரணர். (இ) ''யாரிவ னெங்கூந்தல் கொள்வா னினதுமோ, சூராண்மைக் கொத்த படிறுடைத்து'' கலி. அக: க - உ. (ஈ) ''தோடேத்து பூங்கோதை வேண்டேங் கூந்த லிருடேல்'' கீவக. கஉஉக.) என்பவையும் (உ) "கலிமயிற் றலைவுத் தன்னவிவ, ளொலிமென் கூந்த லுரியவர நினக்கே' குறுந். உஉடி. என்பதும் (ஊ) "நாறிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே" (புறம். ககஈ: க) என்னு மூலமும் 'மணங்கமழும் கரிய கூந்தலைத் தீண்டுதற் குரியவரை நினைந்து' என்னும் அதனுரையும் ஒப்புநோக்கற்பாலன.

உ. 'வெருஉதலென்பது அச்சம்போல நீடுநில்லாது கதுமெனத் தோன்றி மாய்வதொரு குறிப்பு; அதனைத் துணுக்கென்றலுமாம்' என்று கூறி, அதற்கு, "ஒருஉநீ.....கடை" என்னும் பகுதியை மேற்கோள் காட்டி, 'இதில் அஞ்சத்தகுவது கண்டஞ்சுதலின்மையும் அஞ்சினோர்க்கு உள்ள வேறுபாடு அதன் பின்னிகழாமையும் காண்க' என்றுமுரைப்பர்.

(பிரதிபேதம்) * யானின்னை, † யானின்னை.

இஃது (க) ஊடல்பற்றிய வெகுளியென்னும் மெய்ப்பாடு.

இனி (உ) ஒருயிராயிருக்க உடம்பிரண்டாயிருப்பாயென்றல், தன்னைப் பிறன்போற் கூறிற்றாகாது; பன்மையாய் நிற்றலின்.

நி ஏடா, நினக்குத் தவறுண்டோ நீவீடு பெற்ற
யிமைப்பி னிதழ்மறை பாங்கே கெடுதி
நிலேப்பா லறியினு நின்னெஞ்சு நின்னைப்
புலப்பா ருடையர் தவறு

எ - து: ஏடா! நின் கண்ணே மறைத்த இமைக்குள்ளே மறைந்த பொழுதே தோன்றுமற் போதி; ஆதலால், நீ கைவிடுதலைப் பெற்றாய்; அந் நிலேமைப் பகுதியை அறிந்திருப்பினும் அறியாதாரைப்போலே நின்னை நொந்து நின்னைப் புலக்கின்றவர் தவறுடையர்; நினக்கு ஒரு தவறு உண்டோ வென்றாள். எ - று.

கூ அணைத்தோளாய், தீயாரைப் போல ✻ திறனின் றுடற்றுதி
காயுந் தவறிலேன் யான்

எ - து: அதுகேட்ட தலைவன், (கூ) அணைபோலுந் தோளினையுடையாய்! தீய மக்களே உடற்றுமாறுபோல ஒரு தீய திறனின்றுகவும் உடற்றுகின்றாய்; யான் நீ காய்கைக்குக் காரணமாவதோர் தவறுடையேனல்லே னென்றான். எ - று.

இளம்பூரணரும்; தொ. மெய்ப். சூ. கஉ. 'ஆங்கவை, ஒரு பால்' (ஆ) இதனை அச்சத்திற்கு மேற்கோள் காட்டி, தலைவனைக் கள்வன்பாற் சார்த்தி உரைத்தமையின் கள்வர் பொருளாக அச்சம் பிறந்த தென்பர் பேராசிரியரும், இ-வி. தூலாரும்; தொல். மெய்ப். சூ. கூ. இ-வி. சூ. இஎ.

க. ஊடற்கண் தலைமகள்வெகுட்சி கூறியதற்கு, "செய்தவ றில்வழி யாங்குச் சினவுவாய்" என்பது மேற்கோள்; தொ. மெய்ப். சூ. கo. பேர்.

உ. (அ) "காதத் திருகண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவ, ராகத்து ளோருயிர் கண்டனம்யாம்" (ஆ) "ஆனந்த வெள்ளத் தழுந்துமொ ராரூயி ரீருருக்கொண், டானந்த வெள்ளத் திடைத்திளைத்தாலொக்கும்" கோவையார். எக, ஈoஎ. (இ) "பாவைநீ புலவியி னீடல் பாவியேற், காவியொன் றிரண்டிடம் பல்லது" சீவக. கoகஎ. (ஈ) "காவிபோற் கண்ணிக்குங் கண்ணியர்தோட் காளைக்கு, மாவிபோ லாடையு மொண் ணுதே" நள. கலிதொடர். அச. (உ) "மருங்கிலா நங்கையும் வசையி லியனு, மொருங்கிய வீரண்டுடற் குயிரொன் றுயினுர்" கம்ப. மிதிலேக். நஅ. என்பவை ஈண்டு அறிதற்பாலன.

கூ. இந்நூற்பக்கம் ஈஉஉ: சூ; ஈசஈக: சு; சoo: சு-ஆம் குறிப்புப் பார்க்க.

(பிரதிபேதம்) ✻ திறனின்றுடற்றுதி.

கக மானேக்கி நீயழ நீத்தவ ளைது
நாணில ளுயி னலிதந் தவண்வயி
*னூடுத லென்னே வினி

எ - து: அதுகேட்ட தோழி, மான்போலும் நோக்கினையுடையாய்! நீ அழும்படி நின்னைக் கைவிட்டவன்†பரத்தமையில் அமையாமல் நாணமற்றிருப்பளையின், மேல் அவனிடத்தே கவிதலைக்கொடுத்து ஊடுகின்றதன்மை என்னபயன் தருமோவென்றாள். எ - று.

இஃது "உறுதகை யில்லாப் புலவியுண் மூழ்கிய, கிழவோன் பானின்று கெடுத்தற்கண்" (க) தோழி கூறியது.

கச இனியாது நீக்குற்றம் ‡யாமில மென்னுந்
தகையது காண்டைப்பாய் நெஞ்சே பனியாளப்
பாடில்கண் பாயல் கொள

எ - து: அதுகேட்ட தலைவி, நெஞ்சே! நீர்விழுதல் அமையாத, துயிலுத லில்லாத கண் துயில்கொள்ளும்படியாக நாம் இனிச் சிறிதும் மேலாகக் கூறுங் கூற்றையுடையேமல்லே மென்று இவள்கூறுந் தகைமையினையுடைய கூற்றினைக் காரியமென்று நினைத்துப் பார்ப்பாயென நெஞ்சொடு ||கூறி ஊடநீர்ந்தாள். எ - று.

இதனுள், ÷தலைவர்க்கும் தலைவிக்கும் உணர்வென்னும் உவகை பிறந்தது.
இது (உ)தாவும்போக்குமின்றி ஐஞ்சீரடுக்கி வந்த உறழ்கலி. (உஉ)

(அஅ.) ஓருஉக், கொடியிய னல்லார் குரனுற்றத் துற்ற
முடியுதிர் பூந்தா தமொய்ம்பின வாகத்
தொடிய வெளைக்கு யாரை பெரி ...பர்க்க
கடியரோ வாற்ரு தவர்;

தோல். கற். சூ. கூ. இச்சூத்திரப்பகுதிக்கு, இவர், 'தலைவன் சென்று சேரும் தகைமை இல்லாமைக்குக் காரணமாகிய புலவியின்கண் அழுந்திய தலைவி பக்கத்தாளாய்நின்று அவள் புலவியைத் தீர்த்தற் கண் (தோழிகூற்றுநிகழும்)'என்று பொருள்கூறி அ.ஐகும், "மானேக்கி .....இனி" என்பதை மேற்கோள் காட்டியிருக்கிறார். இஃது இளம்பூரணர் கருத்தைத் தழுவியதே.

உ. இச்செய்யுளை, தாவும் போக்குமின்றி ஐஞ்சீரடுக்கி வந்த உறழ்கலிக்கு மேற்கோள் காட்டினார் போசிரியரும் நச்சினார்க்கினியரும்; தோல். செய். சூ. கடுக.

(பிரதிபேதம்) * ஊடலென்னே. † பரத்தமை... ‡ காமிலமன்றகையது. || கூடியூட.
+ தலைவனும் தலைவியும் உணர்...ம் உவகையைப்பெற்றார்.

இ கடியர்தமக், கியார்சொல்லத் தக்கார் மாற்று;

ஈ வினைக்கெட்டு, வாயல்லா வெண்மை யுரையாது கூறுநின்
மாய மருள்வா ரகத்து;

அ ஆயிழாய், நின்கண் பெறினல்லா லின்னுயிர் வாழ்கல்லா
வென்க ணெவனே தவறு;

கo இஃதொத்தன், புள்ளிக் களவன் புனல்சேர் பொதுக்கம்போல்
வள்ளுகிர் போழ்ந்தனவும் வாளெயி றுற்றனவு
மொள்ளிதழ் சோர்ந்தநின் கண்ணியு நல்லார்
சிரறுபு சீறச் சிவந்தநின் மார்புந்
தவறுதல் சாலாவோ கூறு;

கஇ அதுதக்கது, வேற்றுமை யென்கண்ணே வோராதி தீதின்மை
தேற்றக்கண் டீயாய் தெளிக்கு;

கள இனித் தேற்றேம்மாம்;

கஅ தேர்மயங்கி வந்த தெரிகோதை யந்நல்லார்
தார்மயங்கி வந்த தவறஞ்சிப் போர்மயங்கி
நீயுறும் பொய்ச்சூ ளணங்காகின் மற்றினி
யார்மேல் விளியுமோ கூறு.

இஃது அவ்வாற்றும் புக்க தலைவனுடன் ஊடியும் உறழ்ந்துஞ்சொல்லி, போய்த்தளத்தி ஊடறீர்ந்தது.

இதன் பொருள்.

(க)ஓரூஉக், (உ)கொடியிய னல்லார் சூளறற்றத் தற்ற
முடியுதிர் பூந்தா தெமரய்ம்பின வாகத்

க. *கற்புக் காலத்துத் தலைமகள் புலவிக்கண் அவளுயர்வும் 'தலைமகன் சூழ்வு முரியவென்பதற்கு, 'ஓரூஉக் கொடியிய னல்லார்.....தவறு' என்றபகுதிகளே மேற்கோள் காட்டி, 'இதனுள் தலைமகன் பணிவும் தலைவியுயர்வும் காண்க; இஃதீண்டுக் கூறிய தென்னை? காமக் கடப் பினுட்பணிந்த இளவி யென மேற் கூறப்பட்ட தாலெனின், ஆண்டுக் கூறியது ஊடல் புலவி தானிளவென்னு மூன்றிற்கும் பொதுப்படநிற்றலின் இது புலவிக்கே யுரித்தென்னுஞ் சிறப்பு நோக்கிக் கூறியவாறு' என் பர். இளம்பூரணர்; தொல். பொருளி. சூ. கூ. 'மனைவி யுயர்வும்'*

உ. *"ஏதிலான் முச்சி, யுதிர்த்த ளுக்கநின் னுடை யொலிப்ப, வெதிர்வளி நின்னுயிர் செல்" கலி. அ - கூo - கூ.*

*தொடிய வெமக்கு(க)நீ யாரை (உ)†பெரியார்க்
கடியரோ வாற்ற தவர்

‡எ - து: கொடியினதியல்பையுடைய பரத்தையருடைய புழுகுமுதலிய வற்றிலே அளேந்த மயிர்முடியினின்றும் உதிர்ந்த பூந்தாதுகள் நின் தோட் கட்டிலே கிடவாநிற்க, எம்மை நீ ஈண்டுதற்கு எமக்கு நீ யாராந் தன்மையை யுடையை ? எம்மைவிட்டு நீ நீங்குவாயாத; பிரிவாற்றாதவர் பிரியவல்ல பெரியோர்க்கு அடியரோ ? அன்றே ||யென்றாள். எ - று.

சூரல் - மயிர். நாற்றம், ஆகுபெயர்.

இது "எனனே பேதைமை நிம்பிரி நல்குர, வினைகால் வகையுஞ் சிறப்பொடு வருமே" (ங) என்பதனால்,'தொடிய வெமக்குநீயாரை'ஏனச்சினம் பற்றி வரினும் அது தன் காதலேச்சிறப்பித்தலின் அமைந்தது.

க. (அ) "நம்பிநீ யாரை யென்றாள்" (ஆ) "ஐயநீ யாரை யென்றாற்கு" சீவக. சுரிசை, கலகஅ. (இ) "அய்யநீ யாரை" கம்ப. நாகபாச. உசுஎ. என்பவையும் "யாரைநீ யெம்மில் புகுதர்வாய்" கலி. கூஅ: க; என்ப தும் அதன் குறிப்பும் இங்கே அறிதற்பாலன.

உ. "பரத்தை வாயி னுல்வர்க்குமாற்றே" என்பதற்கு, பரத்தையர் மாட்டு வாயில் விடுதல் நான்கு வருணத்தார் (ஆடவர்) க்கும் உரித்தென்று முதலிற் பொருள் கூறிப் பின் நான்கு வருணத்துப் பெண்பாலாரும் அவ்வோடு ஊடப்பெறுவரென்றுமாம் என்றுகூறி, "பெரியார்க் கடி யரோ வாற்றாதவர்" என்பதைப் * பார்ப்பனி கூற்றுக்கு (* அரசிகூற் றென்றும் பிரதிபேதம்) மேற்கோள் காட்டியும், இவ்வுரை பொருளி. சூ. உஅ.

ங. தோல். பொருளியல். சூ. நிக. (அ) இச்சூத்திரத்தின் இவருரை யிலும் இப்பகுதி இக்குறிப்போடு இச்செய்திக்கு மேற்கோள். (ஆ) இளம்பூரணர் இச்சூத்திரத்திற்கு,"மெய்ப்பாட்டியலுள் (சிலகுணங்கள் நடுவ ணேந்நிணைக்குரிய தலேமைக்கட் காதாவென வெடுத்தோதுகின்ற ராகலின் அவற்றுள் ஒரு சாரன ஒரோவிடத்து வருமென்பதுணர்த் திற்று; இச்சூத்திரம் எதிரதுநோக்கிற்று; இனமுதலியநான்கும்யாதானு மொருபொருளேச் சிறப்பித்தல் காரணமாக வரும்" என்று உரை வகுத்து, "கொடி யிய னல்லார்.....ஆற்ற தவர்" என்ற பகுதியை முதலாவதற்கு மேற்கோள்காட்டி,இதனுள் தொடிய வெமக்கு நீயாரை யென்பது னினம்பற்றிவரினும் காமக்குறிப்பினேற் புணர்ந்த தலேமகள் கூறுதலின் அவள் காதலேச் சிறப்பிக்க வந்த தென்றனர் ; தோல். பொருளி. சூ. சஎ.

(பிரதிபேதம்) * தொடிய. † பெரியோர்க்கு, ‡ எ - து: சூரல் - மயிர்.....பெயர் கொடியினியல்பை, ||என்குள் கடியதமக்கினியார் சொலத்தக்காமதறு.

நி (க)கடியர்தமக், கியார்சொல்லத் தக்கார் மாற்று

எ - து: அதுகேட்டுக் கடியராயிருப்பார்தமக்கு மாற்றஞ்சொல்லத் தக்கவர் யாவரென்றான். எ - று.

வினைக்கெட்டு, (உ)வாயல்லா வெண்மை யுரையாது †கூறுநின் மாய மருள்வா ரகத்து

எ - து: அதுகேட்டு நீ போகின்றதொழிலைத் ‡தவிர்த்துநின்று உண்மை யல்லாத வெண்மைகளைச் சொல்லாதே நின் பொய்ம்மைகளே மெய்யென்று மயங்குவாரிடத்தே ||சொல்லென்றான். எ - று.

'வினைக்கேட்டு' பாடமாயின் வினைக்கேடாகிய வாயல்லாவென்க. உரையாதியும் பாடம். வெண்மை, பண்புப்பெயர்.

அ ஆயிழாய், நின்(ஊ)கண் பெறினல்லா லின்னுயிர் வாழ்கல்லா வென்க ணெவனோ தவறு

எ - து: அதுகேட்ட தலைவன், ஆராய்ந்த இழையினையுடையாய்! நின்னுடைய ÷ கண்ணினில் (ச) அருளைக்கினைப் பெறிலன்றி இனிய உயிர் வாழமாட்டாத என்னிடத்துத் தப்பு யாதுதானென்றான். எ - று.

"தாமக் கடப்பினுட் பணிந்த கிளவி, காணுங், காலைக் +கிழவோற் குரித்தே"(ஞ)என்பதனால், தலைவன் பணிந்து கூறினான்.

க. "கடியர் தமக்கு... .....மாற்று" என்பது உரைநடை நான்கனுள், பாட்டிடை வைத்துக் குறிப்பிற்கு மேற்கோள்; தொல். செய். சூ. ககஞ. 'பாட்டிடை' இளம்.

உ. பெருந்தினைக்குரிய மெய்ப்பாடுகளுள் தலைவன்கூற்றைத் தலைவி பொய்யாக் கோடற்கு, "வாயல்லா வெண்மை... ....ரகத்து" என்பது மேற்கோள்; தொல். மெய்ப். சூ. உஉ. 'இன்பத்தை' இளம்.

ங. தண்ணென்பது அருளென்னும் பொருளில் வருதலை, "கண்மாறி விடின்" கலி. சுக: உச; என்பதனாலும் அதன்குறிப்பாலும் அறிக.

ச. "நின், னருணேக்க மழியினு மவலங்கொண் டழிபவள்" கலி. கo: கஅ - ககு.

ஞ. தொல். கற்பி. சூ. ககு. (அ)இச்சூத்திரத்தின் இவருரையிலும் தலைவன் தலைவி மாட்டுக் காமம் மெயிகந்துழித் தாழ்த்து கூறியதற்கு, "கடியர் தமக், கியார்சொல்லத் தக்கார்மாற்று" என்பதும் "ஆயிழாய், நின்கண் .....தவறு" என்பதும் மேற்கோள். (ஆ) இளம்பூரணரும், "பெரியார்க், கடியரோ'வாற்றுதலெனத் தலைவி கூறியவழி, 'கடியர்

(பிரதிபேதம்) * வினைகெட்டு, † சென்றீரின், ‡ தவிர்ந்துநின்று. ||செல்லென்றான், +கண்ணில் வருகோக்கினைப், +கிழவோர்க்கு.

க0 (க)இஃதொத்தன்,(உ)புள்ளிக்(ங)களவன் புனல்சேர்பொதுக்கம்
(ச)வள்ளுகிர் போழ்ந்தனவும் வாளெயி றுற்றனவு [போல்
மொள்ளிதழ் சோர்ந்தநின் கண்ணியு (ஞ)ங்கல்லார்
சிறுறுபு சீறச் சிவந்தநின் மார்புந்
தவறுதல் *சாலாவோ கூறு

எ - து: அதுகேட்ட தலைவி இவளொருத்தனென நெஞ்சொடு வியந்து கூறி, பின்னர், புள்ளியையுடைய (சு) நண்டுகளின் கடையாலுண்டான வடு நீருருகைச் சேர்ந்து கிடந்தாற்போலப் பெரிய உதிரார்ந்த பிளந்த வடுக்களும் ஒளியையுடைய எயிறு அழுந்தின வடுக்களும் ஒள்ளிய இதழ்கள் வாடின நின் கண்ணியும் பரத்தையர் நின்னோடு வேறுபிரிக் கோபித்து அடிக்கச் சிவந்த நின்னுடைய மார்பும் தப்பாதலுக்கு அமையாவோ? அமையாவாயிற் கூறு என்றாள். எ - று.

சேர்பென்னும் எச்சத்திற்கு வினை வருவித்து முடிக்க. ஒதுக்கமென்னுந் தொழிற்பெயர் ஆகுபெயர். "சிறுசே லாடிய நீர் வாய்ப்பத்த"(எ)என்றும்

தமக், யொர்சொல்லத் தக்கார் மாற்று' எனத் தலைவன்பணிந்து கூறியது காண்க" என்பர்; தொல். கற்பி. சூ. கஎ. 'காமக்கடப்பின்'.

க. இந்நூற்பக்கம் நஅசு: ங - ஆம் குறிப்புப்பார்க்க.

உ. (அ)பொறியலவன் (சிலப்.எ: நக. முதற்பதிப்பு) என்பதற்கு, 'புள்ளிக் கள்வன்' என்பது மேற்கோள்; (ஆ) "புள்ளி ள்வன்" ஐங். உக, உஉ, உச.

ங. (அ) "களவன் மண்ணளைச் செறிய வகல்ர் ற், இளவிரி கரும்பின் கணைக்கால் வான்பூ" அகம். உஙஞ: கக - கூ. (ஆ) "அவவ னள்ளி குளிர்ஞெண் டார்மதி, களவ னென்றிவை கறுடகப் பெயரே" சேந்தன் றிவாகரம். (இ) "களவன் குளிர்ஞெண்டு கற்கடம்" உரிச் சொனிகண்டு. கo. என்பவற்றுல் நண்டிற்குக் களவனென்னும் பெயரும் பயின்று வருதலறிக.

கூழி. சுஎ: கச - கஙி; அடியும், எஉ: கக - கஉ; அடியும், குறிப்பும் பார்க்க.

"ஊடிய் கொதித்து மேற்றிசை யணங்கலத் தகப்பதன் கொடுமை, துதைத்த தாமெனச் சிவந்தது வெய்யவ னுடலம்" நைடத. மாலை. உக.

செய்ச்சேத கத்திற் குளிர்நடந் தாங்குச் செறிந்த வடு, மெய்ச்சே யிழைக்கொடி யென்னுர் கடைத்தலை மேயினதால்." திருவேங்கைக் கோவை. நஅக.

எ. "சிறுகிலை வூறிய நீர்வாய்ப் பத்தல்" என்பது பதிற். உஉ: கங.

(பிரதிபேதம்) * சாலாதோ.

போல, நெறுதல் நெறுதன்மேல் நின்றது. "வேட்கை மறுத்துக் கினந்தாங் *குரைத்தன், மரீஇய மருங்கி னுரித்தென மொழிப" (க)என்பதனுள், "ஒன் றெனமுடித்தலென்பதனுன் மரீஇயவாறு எனையவற்றிற்குங் கொள்க" என்ற லின், இழிந்தோர் கூற்றை உயர்ந்தோர் கூறுவனவும் அமைத்தாம். அதனுன் வள்ளுவர் போழ்ந்தன முதலியன கொள்க.

கரு அதுதக்கது, வேற்றுமை யென்கண்ணே வோராதி; தீதின்மை தேற்றக்கண் டீயாய் தெளிக்கு

எ - து: நீ கூறுகின்ற மெய்வேறுபாட்டையோ என்னிடத்துண்டாக ஓராதேகொள்; அங்ஙனம் ஓராதிருத்தல் நினக்குத்தக்கது; அதற்குக் காரண மென்னெனில் அத்தீது என்கண் இல்லாமையை யான் நினக்குத் தெளிவிக்க நீ காணுய்; யான் இனித்தெளிவிப்பேனென்றன். எ - று.

களஇனித் தேற்றேம்பாம்

எ - து: இக்கற்புக்காலத்து நீ சூளுறுகின்றதனைக்கொண்டு யாம் எற்நெஞ்சைத் தெளிவியேம் ; அதற்குக்காரணங்கேள். எ - று.

கஅ தேர்மயங்கி வந்த தெரிகோதை (உ)யக்நல்லார்
தார்மயங்கி வந்த தவறஞ்சிப் போர்மயங்கி
(ங)†நீயுறும் (ச)‡பொய்ச்சூ ளுணங்காகின் மற்றினி
யார்மேல் விளியுமோ கூறு

க. தொல். பொருளி. சூ. கள. இச்சூத்திரத்தின் இவருரையிலும் இச்செய் திக்கு இக்குறிப்புக்களோடு "புள்ளிக் களவன்.....கூறு" என்பது மேற்கோளாகக் காணப்படுகின்றது.

உ. "தார்கொண்டா டலைக்கோதை தடுமாறிப் பூண்டகின், னீரணி" (கலி. சுசு: கடி - கசு.) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

ங. (அ) தலைவி தலைவன் முன் தன்னைப் புகழ்தல் தலைவன் பரத்தையிற் பிரிந்துவந்தவழித் தெளித்தற்கண் வருமென்பதற்கு, "நீயுறும் பொய்ச் .....கூறு" என்பதை மேற்கோள் காட்டி, 'இதில் பெண்டிர் பல ருளராயினும் அவரெல்லார்மாட்டும் செல்லாது தன்மேல் வரு மெனக் குறித்தாளாதலிற் றன்னைப்புகழ்ந்தாளாம்' என்பர். இளம். தொல். கற்பி. சூ. ஙக. 'தற்புகழ்' (ஆ) இப்பகுதியையே இவர் அழிவில்கூட்டத்திற்குரிய பொருள்களுள் தெய்வமஞ்சலென்பதற்கும் மேற்கோள்காட்டுவர்; தொல். மெய்ப். சூ. உச. 'தெய்வ' (இ) ஓசை வேற்றுமையால் நகாவுகரம்வியங்கோள்முற்றுயும் நிற்குமென்பதற்கும் இப்பகுதியே மேற்கோள்; தொல். வினே. சூ. சு. நச்.

ச. (அ)"என்னை யருளி யருண் முருகு சூள்சூளி, னின்னை யருளி லணங் கான்மெய் வேறின்னும், விறல் வெய்யோ னூர்மயில் வேனிழ னேஞ்சே,

(பிரதிபேதம்) உணர்த்தன்மரீஇய. † நீ கூறும், ‡ பொய்ச்சு ணுணங்காகும்.

எ-து: (க) தேரேறிவருகின்ற சிறப்பிலேமயங்கி நின் நீங்ஙைக் கருதாது வந்த தெரிந்த கோதையையுடைய அழகிய பரத்தையருடைய (உ)தாரை நின் தாராக நினைத்து அணிக்துவந்த தப்பிற்கு அஞ்சி யாம் ஊடிப் பொருத போரிலே கலங்கி இக்கற்புக்காலத்து நீ சூளறும் மிகப்பொய்யாகிய *சூளறவு வருத்தத்தைச் செய்யுமாயின், பின்னை அதுதான் எங்கண்மே லன்றி யார் மேல் வரும்? அங்ஙனம் வாராமற் களவுகாலத்துச் சூளறவுபோற் தெய்மோ? நீதானே கூறுவாயாகவென ஊடநீர்ந்து கூறினள். எ - று.

யார்மேல் வருமென ஒருசொல் வருவிக்க. இனி நீயுறுமென்க.

இஃது "இன்னுந்தொல்சூளெடுத்தற்கண்ணும்" (ங)என்பதனுட்கூறிற்று. என்றது, இன்னுங்குப் பயக்குஞ் சூளறவினைத் தலைவன் சூளறவுவெனக் கூறுமிடத்துமென்றவாறு. தலைவன், "வந்த குற்றம் வழிகெட வொழுகி"(ச) களவிற் சூளறவான் வந்த ஏதம் நீக்கி, இக்கற்புக்காலத்துக் கடவுளரையும் சுரவரையும் புதல்வனையுஞ் சூளறுதலின் இன்னதருளென்றாள்; இது

யுறவு ரடிதொடினு மாங்கவை சூளேல், குறவன் மகளாணை கூறேலா கூறே, லேய சூளி னடிதொடி குன்றுமே, வையைக்குத் தக்க மணற் சீர்சூள் கூறல்" பரி: அ: சுநி - எக. (ஆ) "பொய்ச் சூளா னென்ப தறியேன்யா னென்றிரந்து, மெய்ச்சூ ளறவானே மெல்லியல் பொய்ச் சூளென், றெல்லுவ சொல்லா தரைவழுவச் சொல்ல" பரி. கஉ: சுங - சுநி.

க. "கேரிழை நல்லாரை நெடுநகர்த் தந்துநின், றேர்பூண்ட நெடு நன் மான் றெண்மணிவந் தெடுப்புமே" கலி. எ0: கஅ - கக.

உ. தாரென்பது ஆடவர்மார்பின் மாலைக்குவருதலே பெருவழக்கு; மகளிர் மாலைக்கும் அருகி வழங்கும்.

ங. தொல். கற்பி. சூ. ங. (அ) இச்சூத்திரப்பகுதியினுரையில் "வேற்றுமை .....கூறு" என்ற பகுதிகளே மேற்கோள்காட்டி, தலைவி எம்மேலே இப்பொய்ச்சூளால் வருங்கேடுவருமெனமறுத்தவாறுகாண்கவென்பர். நச். (ஆ) இச்சூத்திரத்து, "தன்வயிற் சிறப்பினு மவன்வயிற் பிரிப் பினு, மின்னுத்தொல்சூ ளெடுத்தற் கண்ணும்" எனப்பாடங்கொண்டு, தன் மாட்டு நின்ற மிகுதியானும் அவன் மாட்டு நின்ற வேறுபாட் டானும் இன்னுத பழைய சூளறவைத் தலைவி யெடுத்தவழியும் கூற்று நிகழும்; தலைமகண் மாட்டு மிகுதியாதோ வெனின், 'மனைவி யுயர்வும் .....உரிய' என்ற ராகலின், அக்காலத்து மிகுதி யுளதாம்" என்று கூறி, "தேர்மயங்கி.....கூறு" என்பதை மேற்கோள் காட்டுவர் இளம்பூரணர்.

ச. தொல். கற். சூ. டி.

(பிரதிபேதம்) *சூளறவாயின வருத்தத்தைச்செய்யும் பின்னை.

களவுபோலச் சூளுறுதலின், தொல்லு ளாயிற்று; இதனுள் (க) இரத்தலும் தெளித்தலும் வந்தவாறுணர்க.

இதனுள், தலைவிக்கு அணங்கால் அச்சம் பிறந்தது; தலைவற்குப் புணர் வாகிய உவகை பிறந்தது.

இஃது(உ)ஒரூஉவென ஒழியசையாகிய சொற்சேரடிவந்து ஓஞ்சேரடுக்கியும் ஆறுமெய்பெற்றும் வந்த கலிவெண்பா. "தரவும் போக்கும் பாட்டிடை யிடைத்தும்"(ங)எனப் பாப் போக்கின்பின் *வைத்தனரற் 'கடியர்தமக் கியார் சொல்லத் தக்கார் மாற்று' எனப் போக்குப்போல் தாற்சீரான் இறும் பாட்டும் வந்தது. (உங)

(அகo.) யாரிவ னெங்கூற்றல் கொள்வா னிதுவுமோ
ரூராண்மைக் கொத்த படிறுடைத் தெம்மூ
வாரனீ வந்தாங்கே மாறு;

ச என்னிவை, ஒருயிர்ப் புள்ளி னிருதலை யுள்ளொன்று
போரெதிர்க் கற்றுப் புலவனீ கூறினென்
ரூருயிர் நிற்குமா றியாது;

எ ஏஎ, தெளிந்தேதம்யாங் காயாதி யெல்லாம்வல் லெல்லா
பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய்கொடித் தாங்கு
வருந்தனின் வஞ்ச முரைத்து;

கo மருந்தின்று, மன்னவன் சீறிற் றவறுண்டோ வீயக்க
வின்னகை தீதோ விலென்;

கஉ மாண மறந்துள்ளா நாணிலிக் கிப்பொ
புறஞ்சாய்ந்து காண்டைப்பாய் வெஞ்சே யுறழ்ந்திவணீ
பொய்ப்ப லிடைள மெனைநெருங்கிற் றப்பினே
னென்றடி சேர்தலு முண்டு.

க. இரத்தலுந் தெளித்தலும் வந்தமைக்கு. இசையுள் மேற்கோள்; தொல். அகத். சூ. சச. 'ஒன்றுதம்மினும்' இளம். சூ. சங. கச்.

உ. தொல். செய். கஉ-ஆம் சூத்திர வுரையில (அ) "ஒரூஉ..... .....தவர்" என்பதை மேற்கோள்காட்டி, 'ஒரூஉ வென நின்ற இயலசைதானே ஒழியசையாய் நின்றது' என்று பேராசிரியரும் (ஆ) "ஒரூஉ ச் கோடியீய னல்லார் குரூஉத்தக் தற்று" என்பதை மேற்கோள்காட்டி, 'ஒரூஉ வென நிரையசைதானே ஒழியசையாயிற்று' என்று நச்சினார்க்கினியரும் கூறியுள்ளார்.

ஊ தொல். செய். சூ. கஞிச.

(பிரதிபேதம்) * வைத்தநரும் சொலத்தக்கார்.

இது தலைவன் "காமத்தின்வலியும்" (க) *என்றதனுல் ஆற்றமைவாயி லாக வலிந்துபுக்கு நேருங்கிக் கூடுமிடத்து †அவனுடன் தலைவி ஊடிச் சில ‡சொல்லி, அவன் ஆற்றமை கூறுவது கேட்டு ஊடறீர்த்தது.

இதன் பொருள்.

(உ)யாரிவ னெங்கூந்தல் கொள்வா (ரு)னிதுவேமா
(தெ)ரார்மணியைக் கொத்த படிறுடைத் (டு)தெரியாணை
வாரானீ (ஈ)||வந்தாங்கே ÷ மாறு

க. தோல். கற். சூ. நி.

உ. (அ)"பாத்தை வாயி னுலைக்கு முரித்தோ" என்பதற்கு, பாத்தையர் மாட்டு வாயில்விடுதல் தான்கு வருணத்தார்க்கு முரித்தென்று முன் னூலைக் கூறி, பின்பு தான்குவருணத்திற்பெண்பாலாரும் அவரோடேப் பெறுபவென்ற வாறுமா மென்று கூறி, "பாரிவனெங்..... ..படி றுடைத்து" என்பதை *அதிகூற்றுக்கு (பார்ப்பனி கூற்றுக்கு என் றும் பிரிதேபதம்) பார்த்தான் காட்டினன்; இனம்பூரணர்; தோல். பொருளி. சூ. உசா. (ஆ) இப்பகுதி, கூறுகின்றுள் தலைவி யென்ப தூஉம் கூறப்பட்டான் தலைவனென்பதூஉம் முன்னத் தானுணரப்படு தற்கு மேற்கோளாகு தோல். செய்.சூ. உ.ெ. பேர். சூ. இ-வி. சூ. இள. (இ)தலைவி, தலைவன் குறிப்பறிதல்வேண்டி வெற் றுமைக்கினலி கூறிய தற்கு; "யாரிவ னெங்கூந்தல்கொள்வான்"என்பதுமேற்கோள்; தோல். கற்பியல். சூ. சூ. அன்குறிப்பு இளம்.

(ஈ)"ஞாரீ யெங்கூந்தல் கொள்ளியா நின்னை, வெரூஉதல் காணுங் கடை" (கலி. அள: க - உ) என்பதும் அதன் குறிப்பும்பார்க்க.

ஊ. தலைவி தலைவ ஞணமைந்தற் பழிபட்டு கூறுதலாகிய மாறிலாண்மையிற் சொல்லிய மொழிக்கு "இதுவோ..... .....றுடைத்து"என்பது மேற் கோள்; தோல். பொருளி. சூ. இ.ெ. சூ. இதனை, உள்ளுறைப்பாற் படுவ தாகிய அலையுண் மையாழிக்கு மேற்கோள்காட்டி, இது நீயெழுக்க மொழிவதெனத் தோழிக்குக் அலையுண்மொழியால் ஒழுக்கக்குறை பாடு கூறியவா தென்ப, இனம்; தோல். பொருளி. சூ. சஅ. மக்கல்

எ. (அ)"தண்டையூர் நகுவ தோ-வொண்டொடியைப்,பாரார் மனைதுறந் தச்சேரிச செல்வதனை. ஞாண்மை யாக்கிச் செல்வ" ஐந்.எழு. இச. எனவும் (ஆ) "ஞாராண்மை யென்னுஞ் செருக்கு" நீதிநெறி. சூ. (இ) "ஊராண்மை மற்றதனெஞ்சு" குறள். எனவுமெனவும் வருவனகாண்க. (ஈ) ஆண்மை, ஆளுந்தன்மையென்னும் பொருளில் வருதற்கு, "ஊரா ....றுடைத்து" என்பது மேற்கோள்; தோல். எனெ. சூ. ெ.ச.

ஏ. "யாரைநீ யெம்மில் புகுதர்வாய்" கலி. சூ: க.

ஐ. "ஆற மயங்கினை போறிநீ வந்தாங்கே, மாறினி" கலி. சூ: ங - சூ

பிரதிபேதம்; * என்றதனுல் வாயிலாகப்புக்கு, † அவனுடைய தலைவி, ‡ சொல்லியந்தா ஞற்றுமை. || வந்தேனின்று. ÷ மாற்றென்னினை, மற்றென்னினை.

எ - து: இவன் யார்? *எங் கூந்தலைத் தொடுதற்கு இவன் என்ன தொடர்புடையனென நெஞ்சொடு கூறி, பின்னர் இங்ஙனங் கூந்தலைப் பிடித்தின்றஇதுவும் நீபாதுகாத்தலின்றிப்பாதுகாப்பாரைப்போலே†பண்ணிக் கொண்டு ஊரையாளுந் தன்மைக்குப் பொருந்தினதொரு தொடுமையை யுடைத்து; இதனை ஓர்ந்துபார்; இனி நீ எம் மனையிடத்தே வாராதேகொள்; வந்தாற்போலே மீண்டுபோவென்றாள். எ - று.

இது (க)வலிந்துபுக்கது கூறிற்று. வான், வினையெச்சம்.

ச ‡என்னிலை, (உ)ஒருயிர்ப் புள்ளி னிருதலை யுள்ளொன் றை
போரெதிர்ந் தற்றுப் ||புலவனீ கூறினென்
ஞருயிர் நிற்குமா றியாது

க. தலைவன் வலிந்து சென்றதனைத் தலைவி தோழியால் மறுத்துக் கூறிய தற்கு, "யாரிவன்.....மாறு" என்பது மேற்கோள்; தொல். கற். சூ. நி. நச்.

உ. (அ) "யாமே, பிரிவின் றியைந்த துவரா சட்பி, னிருதலைப் புள்ளி னொருயி ரம்மே" (ஆ)"ஒரு குடற் படுதர வோரிரை தற்றி, யிருதலைப் புள்ளி னொருயிர் போல" (இ) "உள்ளத் துவகை யொருதலைப் பட்ட விருதலைப்பைம், புள்ளொத் தினிய புதுமலர்ப் பாயற் புணர்ந்த வின்ப, வெள்ளக் கடலிடை வீழ்த்துட னீங்குவர்" (ஈ) "ஒருயிர்த்தா, யிருதலைப் புள்ளி னியைந்தது கேண்மையை யெண்ணி" (உ) "இருதலைப்புள் ளுற்றவோருயி ரென்ன நும்முட னுயிர், மருவு தன்பமு மின்பமும்வழு வாதுதற்திடு மாட்சியேன்" (ஊ) "இரு தலைசே ரொருபுள்ளி னேகவுயி ராய்நீவிர், மருவியிட றியாமே வாழு நாள்" என்பவைகளும்.(எ)"அத்தா மலையன்ன மேனின்னே யானகன் றூறுவனே" என்புழி, யானென்பதற்கு, 'இருதலைப் புள்ளி னொருயி ரொருயி யான்' என்று. (கோவையார். கஉ.) பேராசிரியரும், (ஏ)"யார் பிரிய யார்வர யார்வினவ யார்செப்பு" என்புழி, 'இருதலைப் புள்ளி னொருயிரே னுதலாற் பிரிவும் வரவும் வினவும் செப்பும் நம்மிடை உளவாகா' என்றும். பரி. அ: எஉ. (ஐ) "ஊட லுணர்தல் புணர்த லிவைகாமஞ், சூடியார் பெற்றபயன்" என்னுங்குறளில், '(இம் மூன்று பயனும்) இருதலைப்புள்ளி னொருயிராய உழுவலன் புடைய எமக்குவேண்டா' என்றும் (குறள். கசஅ) பரிமேலழகரும். (ஒ) "காதலாளுட னுள்ளுயிர் கைவிடி, னேதமென்னுயி ரெய்தி யிறக்கும்" என்புழி, 'யாம் இருதலைப் புள்ளி னொருயிரேமாதலிற் காதலா ளுயிர் நீங்கின்' என்னுயிரும் ஏதமெய்தி நீங்கும்' என்று (தீவக. கசஙக.)

(பிரதிபேதம்) *இவனெங் கூந்தலைத்தொடுதற்கு என்ன, † பணிக்கொண்டு, ‡ என்னவை, ஏனிலை, || புலவுநீ கூறியென்.

எ - து: அதுகேட்ட தலைவன், உடலும் உயிரும் ஒன்றாய்த் தலை இரண்டாகிய புள்ளினுடைய அவ்விரண்டு தலையில் ஒருதலை மற்றத்தலையோடே *பேசார்செய்தலை மேற்கொண்ட தன்மைத்தாக, நீ இக்கொடுமைகளைக் கூறிப் புலந்தாற் பயனென்? அதனைக் கைவிட்டு இனி என்னுடைய அரிய உயிர் நிற்கும்வழி யாது? அதனைக் கூறுவாயென்றான். எ - று.

இஃது (க)ஆற்றுமைகூறிற்று. புலவல், புலத்தலெனப் படுத்தலோசையாற் பெயராய்நின்றது. இவை கூறிப் †புலவலென்னைக. கூறுஎன வருவிக்க.

எ (உ)ளா. இகழ்ச்சிக்குறிப்பு.

நீங்கினை காலமெல்லாம் மறந்து ஈண்டு வந்தால் இறந்து ‡படுவேனைக் கூறலின், அதனை ஏயென இழித்து நெஞ்சொடுகூறினாள்.

தெளிந்தேம்யாங்; காயாதி ;|| யெல்லாம்வல் ÷லெல்லா
(ங)பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய் ×நொடித் தாங்கு
வருந்தினின் வஞ்ச முரைத்தி.

எ - து: எடா! எல்லாம் உணர்ந்திருக்கும் பெரிய காட்டிடத்திற் கொற்றவைக்கு அவள் அறியாதன சில உண்டாகப் பேய் நொடிசொன்னாற்போல, நின்பொய்களே எனக்குச் சொல்லி வருந்தாதேகொள்; யாம் முன்பே நின் வஞ்சனைகளைத் தெளிந்துவிட்டேமென்றாள். எ - று.

நச்சினார்க்கினியரும் எழுதியவரைகளும் ஈண்டு அறிதற்பாலன. (ஒ) "எட்டுக் காலொடு மிரண்டுவன் றலையொடு மெரிநால், வட்டக் கண்ணெடும் வானிற வெயிற்றெறுத் தழங்கிக். கிட்டிக் கொண்டவச் சிம்புளின் இளர்ச்சியை யஞ்சி, விட்டுக் கண்ணுதற் குரைத்திட வோடினன் விமலே" (ஒள) "பிரிவரும் புள்ளி னெருமையி னெட்டி" என்பவற்றிற்குறித்த புள்ளும் இஃதென்பாரு முளர்.

க. தலைவன் வலித்து சென்றதனைத் தலைவி கூறிய வழி, "என்னிவை... .....யாது" என்பது தலைவன் ஆற்றுமை மிகுதியாற் சென்றமை கூறியதற்கு மேற்கோள்; தொல். கற்பியல், சூ. ஙி. நச்.

உ. "எள தெளிந்தேம்யாம்" என்பதை எ அசைநிலையாய் வருதற்கு மேற் கோள்தாட்டினர்.செ ிவுச்; தொல். இடை. சூ. உங. 'எயுங் குரையும்'

ங. (அ)"துணங்கையஞ் செல்லிக் கணங்குகொடித் தாங்கு"பெரும்பாண். சூடுக. (ஆ) "அரற்றென்பது அழுகை யன்றிப் பலவுஞ்சொல்லித் தன் குறைகூறுதல்; அது காடுகெழுசெல்விக்குப் பேய்கூறும்அல்லல்போல வழக்கினுள்ளோர் கூறுவன"; தொல். மெய்ப். சூ. கஉ. பேர்.

(பிரதிபேதம்) * போர்தலைமேற்கொண்ட, † பலவலெனைக கூறியென, புலவலெனைக கூறியென, ‡ படுவலெனக்கூறலின், || அல்லாய தெல்லா, எல்லாவெல்லா, ÷ஏடா, × நொடிந்தாங்கு.

கo மருந்தின்று, (க)மன்னவன் சிறிற் றவறுண்டோ நேயந்த
வின்னகை தீதோ வினேன்

எ - து: அதுகேட்ட தலைவன், என்னைப் பேயென்று காயாதே *கொள்; எனக்குத் தவறுகளைத்தற்குக் அமைதாதேகொள்; எனக் கூறி, † பின்னும் இனிய நகையினையுடையாய்! நீ என்மேல் எற்றிச்சொல்ல விரும்பிய தீதோ யான் உடையேனல்லேன்: அரசன் கோபிக்கப்படுகின்றவன்மேல் ஒருதவறு உண்டோ? தவறில்லாயினும் கோபிப்பனன்றே? அம்மனம்கோபிக்குமிடத்து அதற்கொரு (உ)பரிகாரமில்லை யென்றான். எ - று.

கஉ (ங)‡மாண மறந்துள்ளா நாணிலிக் கிப்பேதார்
புறஞ்சாய்ந்து ‖ கண்ணைப்பாய் நெஞ்சே ÷ புறம்நின்றவினைப்
பொய்ப்ப விடேஎ மெனநெருங்கிற் (சு)றப்பினே
னென்றடி சேர்தலு முண்டு

க. 'உற்றெருரு தனியே தானே தன்கனே யுலக மெல்லாம், பெற்றவன் முனியப் புக்கா னடுவினிப் பிழைப்ப தெங்கே, குற்றமொன் றிலா தோர் மேலுங் கோள்வயக் குறுகு மென்னு, மற்றைய பூத மெல்லாம் வருணனை வைத மாதோ" கம்ப. வருணனை வழிவேண்டி. சூசு.

உ. மருந்து - பரிகாரம். ।றும். சூ: கஉ, சoஃ: உஉ.

ங. (அ)"கொடியோர் கொடுமை கூடுமென வொடியாது, நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇப், பகுதி னீங்கிய தகுதிக் கண்ணும்" என்பதற்கு, "கொடியோரதுகொடுமைகூடாதென்றதினைப் புணர்ச்சியை யொடியாது புகழை விரும்பினோர் சொல்லோடே யொருப்பட்டு வேறு படுதலி னீங்கிய தகுதிக் கண்ணும் என்றவாறு; அஃதாவது: அக்காலத்துத் தப்பறிதல்; புகழை விரும்பினோர் சொல்லுஞ் சொல்லாவது காமம் விரும்பும் பாத்தையரைப் போலாது அறத்தை விரும்புதல்" என்று உரைவகுத்து. "மாண .. .. உண்டி" என்பதை மேற்கோள் காட்டுவர் இளம்; தொல். கற்பி. சூ. சு. (ஆ) இப்பகுதி, கற்பென்னுங் கைகோளுள் தினைதவி பிறர்க்கின்மை யென்னு மெய்ப்பாட்டிற்கும் மேற்கோள்; தொல். மெய்ப். சூ. கக. (இ) மாணுமை யென்பது மிகாமை யென்னும் பொருளிலும் வருமென் பதற்கு, "மாண மறந்துள்ளா நாணிலி" என்பது மேற்கோள்; தொல். மெய்ப். சூ. உஉ. 'தெய்வம்' இளம்.

சு. புலவியுள் தலைவியுயர்வும் இழுவோன் பணிவும் உண்டென்பது தலைவி மனத்து நிகழ்தலுண் டென்பதற்கு, "தப்பினே, னென்றடி சேர்தலு முண்டு" என்பது மேற்கோள்; தொல். பொருளி. சூ. கூஉ. கச்.

(பிரதிபேதம்) * கொன்னென் றெனக்கு. † பின்னு மின்னகாய் நீ. ‡ மானமறந்துள்ளாத. கண்டைப்பாய்நெஞ்சே, கண்டெய்ப்பாய் நெஞ்சே ÷ புரந்தவனை.

எ - து: அதுகேட்ட தலைவி,*நெஞ்சே! இவனைப்(க)பொய்சொல்லலிடே மென்று மாறுபட்டுக் கோபிக்கின், தப்பினேனென்று வணக்கஞ்செய்தலும் இவனுக்குப் பரிகாரமுண்டு; ஆதலான் நம்மை மறந்து ஒருகாலமும் நாம் மாட்சிமைப்பட்டிருக்க நினையாதாணையில்லாதவனுக்கு இவ்வுடற் போரைத் தோற்று அதனுள்ள பயனைக் காண்பாயென்று ஊடநீர்ந்தாள்.

இதனால், தலைவிக்குச் † சூழ்ச்சியும் தலைவற்குப் புணர்வாகிய உவகையும் ‡பிறந்தன.

"ஒருசிறை நெஞ்சமொ சொவுங் || காலை, யுரிய தாகலு முண்டென மொழிப" (உ)என்பதனால், இவன் —ஆற்றுனென நெஞ்சுடன் உசாவினாள்.

இஃது ஐஞ்சீரடுக்கிவந்த (ங)கலிவெண்பா. (உசை)

(கூO.) கண்டேனின் மாயங் களவாதல் பொய்ங்ஙகா
மண்டாத சொல்லிக் தொடாஅ றுமை இயதின்
பெண்டி ருளர்மன்னே வீங்கு;

சா ஞண்டொடிநீ, கண்ட தெவனை தவறு;

க. "இற்றதென் னுவி யென்னு வெரிமணி யிமைக்கும் பஞ்சிச், சிற்றடிப் போது புல்லித் திருமகன் கிடப்பச் சேந்து, பொற்றதா மரையிற் போந்து கருமுத்தம் பொழிய வேபோ, லுற்றமை கலந்து கண்கள் வெம்பனி யுகுத்தவன்றே" என்னும் (சீவக.உ0O அ) செய்யுளுரையில், 'உற்று' என்பதற்கு, ஊடநீர்த்தலுற வென்று திரித்துப் பொருள் கொண்டு, "பொய்ப்ப விடேஎ மென .. ..முண்டு" என்றுரைகலின், என இவ்வுரைக்கு மூலமான பகுதியை மேற்கோள் காட்டி, அடியில் வணங்கியபின்னும் ஊடநீரா தழுதாளென்றல் கற்பிற்குப் பொருந்தா தென்பர் நச்சினார்க்கினியர்.

உ. தொல். பொருளி. சூ. கo. இச்சூத்திரத்தின் இவருரையிலும் நெஞ் சுடன் உசாவுதற்கு, "மாண ....முண்டு" என்னும் பகுதி மேற்கோ ளாகக் காட்டப்பட்டுள்ளது.

ங. இனம்பூரணர் இச்செய்யுளை உறழ்கலிக்கு மேற்கோள்காட்டி, "'யாரிவ ணெங்கூந்தல் .....மாறு' இது தலைமகள் கூற்று; 'என்னிவை..... ... .யாது' இது தலைமகன் கூற்று; 'எவ, தெளிர்தேம்..... .. உரைத்து' இது தலைவி கூற்று; 'மருந்தின்று.....விலேன்' இது தலைமகன் கூற்று; 'மாண மறந்துளா .....(.....முண்டு' இது தலைவி கூற்று; "இப்பாட்டுச் சுரிதக மின்றி வந்தபாடு கண்டு கொள்க. எற்றுக்கு? இறுதியின்கண்வந்ததுசுரிதகமாதோவெனின், ஆகாது; சுரிதகமாவது ஆசிப் பாட்டினும் இடை நிலைப்பாட்டினு முள்ள பொருளைத்தொகுத்துமுடிப்பது; இஃது அன்னதன்றென்க" என்பர்; தொல். செய். சூ. கசஅ. 'கூற்று மாற்றமும்' இதனுலும்

(பிரதிபேதம்) * விடேனென்று, † சூட்டி, ‡ பிறந்தது,||காணியுமுரியது, +ஆற்றுனென.

நி கண்டது, நோயும் வடுவுங் கரந்து மகிழ்செருக்கிப்
பாடு பெயனின்ற பாணனிரவிற்
றெறுடிபொலி தோளு முலையுங் கதுப்பும்
வடிவார் குழையு மிழையும் பொறையா
வொடிவது போலு நுசுப்போ டடிதளரா

கo வாராக் கவலி னெருத்திவந் தல்கற்றன்
சீரார் ஞெகிழஞ் சிலம்பச் சிவந்துநின்
போராரா கதவ மிதித்த தமையுமோ
வாயிழை யார்க்கு மொலிகேளா வவ்வெதிர்
தாழா தெழுந்துநீ சென்ற தமையுமோ

கநி மாரூள் சினை இ யவளாங்கேநின் மார்பி
னூறிணர்ப் பைந்தார் பரிந்த தமையுமோ
தேறிநீ நீயே னலேனென்று மற்றவள்
சீறடி தோயா விறுத்த தமையுமோ
கூறினிக் காயேமோ. யாம்;

உo தேறிற், பிறவுந் தவறிலேன் யான்
அல்கற், கனவுக்கொ னீகண் டது;

உஉ. கணபெயற், றண்டுளி வீசும் பொழிநிற் குறிவந்காட்
கண்ட கனவெனக் காணது மாறுற்றுப்
பண்டைய வல்லநின் பொய்ச்சூ ணினக்கெல்லா
நின்றுய்நின் புக்கில் பல;

உசு மென்றோளாய், நல்குநின் னல்லெழி லுண்கு;

உள ஏடா, குறையுற்று நீயெம் முரையனின் றீமை
பொறையாற்றே மென்றல் பெறுதுமோ யாழ
நிறையாற்று நெஞ்சுடை யேம்.

இது "புல்லுதன்மயக்கும் புலவிக்கண்ணும்" (க)என்பதனுல்தலைவன் புலப்படப்பரத்தையரிடத்து ஒழுகாது மறைந்தொழுகிவந்து*நின்றவனுடன் உறழ்தற்பொருளாலும் இச்செய்யுளைக் கலிவெண்பா என்று கொள்ளாது உறழ்கலியென்று கொள்ளுதலே பொருத்த முடையது.

க. தொல். கற்பியல். சூ. கo. இச்சூத்திரப்பகுதிக்கு இவ்வுரைகாரர் அன்கு, "இரட்டுறமொழிதலென்பதனுல், பரத்தையரிடத்துப் புலப்பட (பிரதிபேதம்) * நின்றவனுடன்.

காமக்கிழத்தி ஊடிச்சொல்லித் தலைமகன் ஆற்றமைகண்டு தன் ஆற்றமை யுரைத்சொல்லி ஊடறீர்ந்தது.

இதன் பொருள்

கண்டேனின் மாயங் களவாதல்;பொய்ந்நகா
(3)*மண்டாத சொல்லித் †தொடாஅ நறுமுகை இயங்கின்
பெண்டிர் நுளர்மன்னே வீங்கு

எ - து: நின் ‡பரத்தைமை இக்காலத்துக் களவொழுக்கத்தேயாதலைக் கண்டேன்; ஆதலாற் பொய்யாகவே நக்கு, யான் விரும்பாதனவற்றைக் கூறி என்னைத் தீண்டாதேகொள்; நீதீண்டுதற்கு இவ்விடத்து நினக்குப் பெண்டிரா யிருப்பார் உளரோ? இல்லையே என்றாள். எ - று.

மன்னும் (உ)ஓவும் அசை.

சா ஒண்டொடியீ, கண்ட தெவனே தவறு

எ - து: அதுகேட்ட தலைவன், ஒள்ளிய தொடியினையுடையாய்! நீ என்னுடைய தவறுகக் கண்டது எவனென்றான். எ - று.

நு (ரு)கண்டதூ, (சு)நோயும் விடுவுங் காந்து மகிழ்செருக்கிப்

ஒழுகாது அவர்புல்லுதலே மறைத்தொழுகுதலாற் காமக்கிழத்தியர்க்குப் பிறக்கும் புலவிக்கண்ணும் அவர்க்குக் கூற்றுநிகழுமெனவும் பொருள் கூறுக" என்று பின்னதாக ஒரு விசேட வுரை யெழுதி, "உதாரணம், 'கண்டேனின் மாயங் களவாதல் பொய்ந்நகா' என்னும் மருதக் கலியுட் காண்க" என்பர்.

க. "மண்டாத கூறி" கலி. கo அ: உக.

உ. ஓவும் அசையென்பதை நோக்க, உளரென்பதற்கே ஓசை வேற்றுமை செய்து உளரோவென்று பொருள்கொண்டாரென்று தோற்றுகிறது.

ங. "தான் முன் கண்ட தவற்றினை ஈதலிற், சென்ற வாயிற் கொன்றல ஞடி" பெருங். (க) நக: ஈகூ - கசு அ.

ச. "முதலொடு.....ஐந்நிலம் பெறுமே" என்னும் சூத்திரத்திற்கு, 'ஐந்நிலம்: களவும் உடன்போக்கும் இற்கிழத்தியும் காமக்கிழத்தியும் காதற்பரத்தையு மெனப்பட்ட ஐவகைக் கூட்டமென்றும், ஐக்கில மென்பதனை முல்லை குறிஞ்சி முதலாயின வென்று ஞாயாலெனின், முதலொடு புணர்ந்தவென்பதனுன் நிலம் பெறு மாதலான், நில மென்பதற்கு வேறுபொரு ளுரைத்தல்வேண்டுமென்றும், இற்கிழத்தி காமக்கிழத்தி யென்பார் உள்ளப்புணர்ச்சியானுதல் மெய்யுறு புணர்ச்சி யானுதல் வரையப் பட்டா ராக, பொருட்பெண்டி ராகிய காதற்

(பிரதிபேதம்) * வண்டாத. † தொடாஅற்றொடுகிய, ‡பரத்தமை.

பாடு பெயனின்ற (க)பாண ளிரவிற்
றெடிபொலி தோளு முலையுங் கதுப்பும்
வடிவார் குழையு மிழையும் பொறையா
வொடிவது போலு நுசுப்போ*டடிதளரா
கo (உ)வாரார் †கவவி னெருத்திவந் தல்கற்றன்
சீரார் (ங)ளெகிழுஞ் நிலம்பச் சிவந்தூரின்
(ச)‡போரார் கதவ மிதித்த தமையுமோ
வாயிழை ‖யார்க்கு மொலிகோளா (ஞ)வ்வெதிர்
தாழா தெழுந்தூ சென்ற தமையுமோ

பரத்தையர்கூட்டம், ஒத்தகாம மாகியவாறு என்னையெனின், அவரும் பொருளானுதல் அச்சத்தானுத லன்றி, அன்பினற்கூடுதலின் அதுவும் கற்றிருவத் தின்பாற்பிம்; அவ்வாறன்றி அவரைப் பிரிது நெறியாற் கூடினுயின், இவன்மாட்டித்தலைமையின்றும்' என்ற உரைவகுத்து, "நோயும் வடிவங்.....இறத்த தமையுமோ" என்பதனை மேற்கோள் காட்டி, 'பரத்தையர் அன்பினுற் * கூடியவாறும், (* கூறியவாறும் என்றும் பிரதிபேதம்) இவர் இற்கிழத்தியும் காமக்கிழத்தியும் அன் மையும் அறிந்துகொள்க' என்பர். இளம்பூரணர். தோல். களவி.சூ.கடு.

க. "பாணு, ளிரவினிற் றூது கொண்டோன்" திருவிளை. பாயிரம். உo.

உ. "அரிமத ருண்கண்ணு ராமாக் கவவின்" கலி. கூக: கச.

ங. "அஞ்சிலம் பொடுக்கி யஞ்சினள் வந்து, தஞ்சூர் யாமத்து மூயங் கினள் பெயர்வோள்" (அகம். கo: கக.) என நாணு மகளிர்க்குக் கூறுதல் காண்க.

ச. "போர்க்கதவின்" பட். சo. சிலப். கo: எ. உரைபார்க்க; இஃது இரட்டைக்கதவு.

ஞ. (அ) 'வடவேங்கடந் தென்குமரி யாயிடை' (தொல். சிறப்பு) என் புழி, ஆயிடையென்பதற்கு, அவற்றை எல்லையாகவுடைய நிலத் தென்று இளம்பூரணரும், அதற்கு, அவ்விரண்டெல்லைக்குளென்றும், (ஆ)"யார், மாகமே நோக்கி மடவாளே யலவிருந்தா, ளாகும்" (சீவக. கoங.அ) என்புழி, அவ்விருந்தாளென்பதற்கு, அவ்விடத்திருந்தாளென் றும் இவ்வுரைகாரரும் பொருளெழுதியிருத்தலும். இவ்வாறே இகரச் சுட்டையும் (இ) "குகனென்பான் இந்நின்ற குரிசிலென்றான்" (ஈ) "இந்நின்ற, தூணினுமுளன்" (உ) "இம்முதலோர்" (ஊ) "மறக்கண் வெஞ்சின மலியென விந்நின்ற வயவர்" (கம்ப.குகப்.கக.இரணியன் வதை. கஉச. நாகபாச. உகங. படைக்காட்சி. உக.) எனவும்,

(பிரதிபேதம்) * அடித்தளர. † கவவினெடொருத்தி. ‡ போராகதவம். ‖ சூக்குமொலி.

கரு மாரூள் இனை இ யவளாங்கே நின்மார்பி
ஞிணர்ப் பைந்தார் பரிந்த தமையுமோ
தேறிநீ தீயே னலேனென்று மற்றவள்
சிறடி தோயா விறுத்த தமையுமோ
கூறினிக் காயேமோ யாம்

எ - து: யான்கண்டது, ஒருத்தி தானுற்ற காமநோயையும் அதனைப் பிறர்த் அலரையும் பிறர் அறியாமல் மறைத்து மழிச்சியின்றியிருக்கவும் மழிச்சியுண்டாக்கிச் செருக்கிச் சொரிகின்ற மழை மாறுமல் நின்ற ஒரு நாளிற் பாதியாகிய இராப்பொழுதிலே தொடி பொலிவுபெற்ற தோளும் மூலேயும்கூந்தலும்(க) * மகரத்தின்வடிவுசிறைந்த† குழையும் எனை அணிகலங் களும் தனக்குச்சுமையாக மூறிவதொரு(உ)வஞ்சிக்கொம்புபோலும்இடையைத் தாங்கிக்கொண்டு அமைதி பிறவாத மூயக்கத்தாலே அடிதளர்ந்து வந்து தங்கு தலேயுடைய தன் தலேமைநிறைந்த நிலம்பொலிப்ப, கோபித்து நின்னுடைய பலகை பொருத நிறைந்த கதவுத்தைப் பாய்ந்தது; அது தவறுதற்கு அமை யுமோ? அந்த ஆராய்ந்த இழையினையுடையவள் ஆரவாரிக்கும் ஆரவாரத்தைக் கேட்டு அவ்வாரவாரந்திற்கெதிரே நீ நீட்டியாது எழுந்திருந்து போனது; அது தவறுதற்கு அமையுமோ? அவள் மாரூளாய்க் னெஞ்சு அவ்விடத்தே நின் மார்பிற் கிடந்த காறுகின்ற இதழையுடைய செவ்விமாலேயை அறுத்தது; அது தவறுதற்கு அமையுமோ? பின்னே அவளுடைய சிறிய அடியைச் செறிந்து யான் தீமை யையுடையேனல்லேன்; அதனே நீ தெளியென்று கூறி அவளிடத்தே தங்கினது; அது தவறுதற்கு அமையுமோ? இனிச்சொல்லு; யாம் நின்னைக் கோபிமையுமோ? என்றாள். எ - று.

(கூ)பாடுபெயல், பாடெனவிகாரம். நாளிற்பால், பாளுளென மரூஉ. நுசுப் போடென உருபுமயக்கம். கண்டது, மிதித்தது; அது அமையுமோ? கண் டது, சென்றது; அது அமையுமோ? கண்டது, பரிந்தது; அது அமையுமோ? கண்டது, இறுத்தது; அது அமையுமோ? என முடிக்க.

(எ) "பரிதியிவ் விருந்த தேவே" (ஏ)"இவ்விருந்த வேந்தல்"(ஐ) "இவ் விருந்த மீளி" (நைடத. சுயம்வர. கூசு, கஙஎ, கஙக) எனவும் பெரு தூலாசிரியர்கள் அமைத்திருத்தலும் இங்கே அறிதற்பாலன; (ஒ) அகரச்சுட்டு, தனித்துநின்று பொருளுணர்த்தலாறுமென்று வெ ஞானமுனிவர் தோல். பாயிரவிருத்தியில் கூறியிருக்கிறார்.

க. "காதிசையு, மான்மகர வார்குழையாய்" ஏலாதி. சக.

உ. வஞ்சியென்பது, ஒரு கொடிக்கேயன்றி ஒருமரத்திற்கும்பெயர்; இதன் கொம்பும் வஞ்சிக்கொடியும் மகளிரிடைக்கு உவமை கூறப்படும்.

ஙூ. பார்த்தபிரதிகளிலெல்லாம் இவ்வாறேகாணப்படுகின்றது; 'பாடுபெயல், பாடுபெயலென விகாரம்' என்று இருக்கவேண்டியதுபோலும்.

(பிரதிபேதம்) * சூசுத்தின், † மகரக்குழையும்.

உ0 தேறிற், பிறவுக் தவறிலேன் யான்
அல்கற், (க)*கனவுக்கொ னீகண் டது

எ - து: அதுகேட்ட தலைவன் யான் தேற்றத் தெளிவையாயின் இக் கேட்பதோர் தவறு யான் உடையே †னல்லேன்; (உ) இராக்காலத்து நீ கண்டதுதான் கனவுபோல இருந்ததென்றான். எ - று.

உஉ (ங)கணியெயற், றண்டுளி வீசும் பொழுதிற் குறிவந்தாட்
கண்ட கனவெனக் காணுது மாறற்றப்
பண்டைய வல்லநின் பொய்ச்சூ ‡ணினைக்கெல்லா
நின்றுய்நின்(ச)புக்கில் பல

க. முற்றியலுகமும் ஒற்றுதித்து உரியசையானதற்கு, "கனவுக்கொ னீகண் டது" என்பதை மேற்கோள் காட்டி, இங்ஙனம் வருமொழியொற்று மிகினும் நிரைபாமெனவும் நிலைமொழியொற்று நின்றவழிப் புணிமரவா மெனவும் விளக்குவர், பேராசிரியர்; தொல். செய்யுளி. சூ. கo.

உ. "இரவு கண்டே னெருகன வதனின், புதுமை கேட்கிற் புரைதீர்ந்தது வெனச், செவ்வாய் வெண்ணகைத் திருந்திழை கண்ட, தெவ்வா ரூரெனை வியம்பினன் கேட்பநின், மனத்துழைப் பெயரா வெனைக் கரம் தெழுந்தனை, தனித்துப் போயோர் நடந்தோண் மடந்தையோ, டாடரங் கேறி யணங்கிருந் தவளோ, டிடியு முணர்ந்தும் கூடிவீளை யாடியுந், தேறினி ராகித் தெளிவுட னிருவிரு, மாறுமா றெழுதிய வாச கங் கூறி, மாதரு நீயு மயலுரைத் தெழுந்து, போதரும் போதையின் மோதிர மருளிப், பெயர்த்தனை நயனமு மலர்த்தன வாங்கே, புலர்ந் தது கங்குலும் புரவல வாழ்கென, வண்டலர்ந் தோதாய் மனத்தினு மில்லது, கண்டனை யாதலிற் கலங்கினை மற்றுநின், னுள்ளத் துள்ளே யுறைகுவே னுகவுங், கள்வ னென்று கருதினை யன்றியு, நெறியுடை மகளிர் நீனைப்பவுங் காண்பவு, மிவையிவைபோலுங் கனவர்த் திறத்தனக், கனவிற் கண்டது பிறரொடு பேசுக், குறைபோ மென்றலிற் கூறினே னன்றியும், யாவை காண்னுங் காலவுற் கன்றிப், பேசுவ தெவரொடு பெரியோ யென்று, மாஞர் நோக்கி மனத்தொடு நகையா, வானு நீனைவுட னகறல வேந்தன், றேவியை யையந்தெளித்தனமொரு வகை, யாரு மில்லென வினிதிருந் தவப்ப" பெருங். (ச) கூ: கஅக - உகசு.

ங. இந்நூற்பக்கம் உஎங: ங - ஆம் குறிப்புப் பார்க்க.

ச. "புக்கில்" குறள். கூசo.

(பிரதிபேதம்) *.கனவிற்கொல், கனவுகொல். † அல்லேன்கீகண்டதுதான் இராக்காலத்துக் கனவுபோலே, ‡ நினைக்கேடா.

எ - து: அதுகேட்ட தலைவி, செறிந்த மழையாகிய தண்ணிய துளியைப் பெய்கின்ற இராக்காலத்தே ஒருவன் செய்த குறியிடத்தே வந்தாளொருத்தியைநீ(க)கண்டதனால் உனக்குநிகழ்ந்த கனவு இதுவெனச்சொல்லி, நீ செய்த தவறினையாதே அச்செய்தியை மாறுதலுற்று நின்றாய்; அங்ஙனம் நின்று பின்னர் நீ சூளுற்ற நின்னுடைய பொய்யாகிய சூளுறவு *யாம் நுண்மையாகக் கண்டமையின் நினக்குப் பண்டுபோற் பயன்றரும் தன்மையையுடைய வல்ல; ஆதலால், எடா! நினக்குப் புகும் இல்லப்பலவால்; ஆண்டே செல்லென்றாள். எ - று.

கண்ட கனவு, உண்ட எச்சில்போல †நின்றது.

உ ஊ மெல்தோளாய், நல்யாழின் னல்லெழி லுண்கண்

எ - து: அதுகேட்ட தலைவன், மெல்லிய தோளினையுடையாய்! இனியான் செய்த குறையைக் கைவிட்டு நின்னுடைய நன்றாகிய அழகை எனக்கு அருள்; அதனை யான் நுகர்வேனென்றான். எ - று.

உஎ ஏடா, குறையுற்று நீயெம் முரையனின் றுமை
(உ)பொறையாற்றே மென்றல் பெறுதுமோ யாழ
நிறையாற்று நெஞ்சுடை யேம்.

எ-து: எம் வயத்தராக நிறுத்தமாட்டாத நெஞ்சையுடைய ‡யாம் நினது திமையைப் பொறுத்தலே கடத்த மாட்டேமென்று கருதுதலைப் பெறவேமோ? ||பெறேம்; ஆதலால், இக்காரியத்திலே ஏற்று எமக்குச் சில குறை கூறுதே கொள்ளென்று ஊடினாள். எ - று.

"பிறவும்" (ஈ)என்றதனால், சேரிப்பரத்தையாற் புலந்துகூறினாள். இதனால், தலைவிக்கும் தலைவற்கும் புணர்வாகிய வுவகை பிறந்தது.

இஃது ஒண்டொடி நீயெனவும் றேறினெனவும் ÷அல்லலெனவும் ஒழியுரையும் பிறவுந் தவறிலேன்யானெனவும் கனவுக்கொளீக்கண்ட தெனவும்

க. "நனவிற்றான் செய்தது மனந்தாகவிற், கனவிற் கண்டு" (கலி. சசு: ஈ - சு) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

உ. "எண்ணியவையெல்லாந், துறைபோதலொல்லுமோ தூவாகாதாங்கே, யுறைபோரு நெஞ்சுடையார்க்கு" (கலி. சுஎ: ககூ - உக) என்பதும் இந்நூற்பக்கம் சஅ: ஈ-ஆம் குறிப்பும் பார்க்க.

ஈ. தொல். கற்பி. சூ. கஅ. இச்சூத்திரப் பகுதியின் இவ்வுரையிலும் "ஆராக் கவவின்.....இறுத்த தமையுமோ" என்னும் இப்பாட்டின் பகுதி, காமக்கிழத்தியர் சேரிப்பரத்தையராற் புலத்தி தலைவனெதிர் கூறியதற்கு மேற்கோள்.

(பிரதிபேதம்) * யாமுண்மையாக, நாணுண்மையாக. † நின்றன. ‡ யானினது திமையை, || பெறேமேயாதலால், ÷ அல்லலெனவும் விளவும் தவறிலேன்.

வழியசையும் புணர்த்து, கண்ட *தெவ்ஞேதவனென முற்றடியின்றிக் குறைவு சீர்த்தாகிய சொற்சீரடியும்பெற்று, கலிவெண்பாவின் வேறுபட்டு, † "பாரிலே வகையே கொச்சகக் கலியென, தானவில் புலவர் தவன்றறைத் தனரே" (க)என்னும் விதியாற் கொச்சகக்கலியாயிற்று. (உரி)

(கூக.) அரிநீ ரவிழ்நீல மல்லி யனிச்சம்
புரிகெகிழ் முல்லை நறவோ டணைந்த
தெரிமலர்க் கண்ணியுந் தாரு நயந்தார்
பொருமுரண் சீறச் சிதைந்து நெருகையி
னின்றுநன் றென்னீ யணி;

கூ அணிமென்றோளாய், செய்யாத சொல்லிச் சினவுவ தீங்கெவ
னீயத்தா லென்னைக் கதியாதி தீநிம்மை
தெய்வத்தாற் கண்டூ தெளிக்கு;

கூ மற்றது, அறிவல்யா னின்சூ ளணைத்தாக நல்லார்
செறிதொடி யுற்ற வடுவுங் குறிபொய்த்தார்
கூருகிர் சாடிய மார்புங் குழைந்தநின்
முருந் ததர்பட்ட சாந்தமுஞ் சேரி
யரிமத ருண்கண்ணு ராராக் கவவிற்
பரிசழிந் தியாழநின் மேனிகண் டியாவுஞ்
செருவொழிந்தேன் சென்றீ யினி;

கக தெரியிழாய், தேற்றாய் சிவந்தனீ காண்பாய்நீ தீதின்மை
யாற்றி னிறப்பல் பணிந்து;

கஅ அன்னதே லாற்றல்கான்;
வேறுபட் டாங்கே கலுழ்தி யகப்படிம்
மாறுபட் டாங்கே மயங்குதி யாதொன்றும்
கூறி யுணர்த்தலும் வேண்டா தது மற்றுநீ
மாணை செயினு மறுத்தாங்கே நின்வயிற்
காணி னெகிழுமென் னெஞ்சாயி னென்னுற்றாய்
பேணைநீ பெட்பச் செயல்.

இதுவும் அது.

இதன் பொருள்.

க. தொல். செய். சூ. கடுஅ.

(பிரதிபேதம்) * னவனென்றவனெனமுட்டடி. † பாரிலவகையே.

அரிசீ ரவிழ்நீல மல்லி யனிச்சம்
*புரிநெகிழ் முல்லை நறவோ டடைந்த
தெரிமலர்க் கண்ணியுந் தாரு நயந்தார்
பொருமுரண் சிறச் †சிதைந்து நெருநையி
னின்றுகன் றென்னை யணி

எ - து: ‡நரும்பூவோடே அழகிய நீரில் அவிழ்ந்த அல்லியையுடைய நீலப்பூ அனிச்சப்பூ ·மூறுக்கு நெகிழ்ந்த முல்லைப்பூ ‖ பொருந்தின (க) மார்பின்மாலையும் ஆராய்ந்த நறியமலராற்செய்த கண்ணியும் விரும்பின பரத்தையர் ஊடுகின்ற மாறுபாட்டாலே கோபித்துப் பற்ற நிறங்கெட்டு என்னையுடைய ஒப்பனை கேற்றையில் இன்றுகன்றுபிரிந்ததென்றாள். ÷எ - து.

கண்ணி, வகைமாலை.

"அன்னை யென்னை யென்றலு முளவே, தொன்னெறி முறைமை சொல்லினுமெழுத்தினுந், தோன்ற × மரபின வெண்மனர் புலவர்"(உ)என்பதனால், தலைவனை என்னை யென்றாள்.

சு (ரூ)அணிமென்றோளாய், செய்யாத சொல்லிச் சினவுவ தீங்கெவ
னையத்தா லென்னைக் கதியா தநீ தின்னமை
தெய்வத்தாற் கண்டு தெளிக்கு

எ - து: அதுகேட்ட தலைவன், அணைபோலு மெல்லிதாய தோளினையுடையாய்! இவன் + நீங்கிற் பரத்தையரிடத்தல்லது நீங்கானென்று உட்கொண்டு அவ்வையத்தாலே யான் செய்யாதகாரியங்களைச்சொல்லி இவ்விடத்தே னெக்கின்ற குறை யாதுதான்? என்னிடத்துத் தீதில்லாமையைத் தெய்வத்தாலே நினக்குத் தெளிவிப்பேன்; அதனைக் காண்பாய்; இனி என்னைக் கோபியாதே கொள்ளென்றான். எ - து.

கூ மற்றது, அறிவல்ய னின்ரு ளணைத்தாக நல்லார்
செறி(ச)தொடி யுற்ற வடுவுங் குறிபொய்த்தார்

க. "தாருந் தானையும் பற்றி" அகம். உஎக: கூ.

உ. தோல். பொருளி. சூ. நிஉ.

ங. இந்நூற்பக்கம், ஙசஙூ: ச - ஆம் குறிப்பும் சoo: ச - ஆம் குறிப்பும் பார்க்க.

ச. தொடியால் வடு வுறுத்தலை, கலி. எக. கச-ம் அடியாலும் அதன்குறிப் பாலும் உகிரால் வடு வுறுத்தலை, கலி. எஉ: கக-ம் அடியாலும் அதன் குறிப்பாலும் அறிக.

(பிரதிபேதம்) * புரிநெகிழ்தழல்லை, †நைதை. ‡நாம்பூவோடே அழனீயுடைய நீரிலே அலர்ந்த. ‖ பொருந்தினதலைமாலையும் ஆராய்ந்த.....கண்ணி. இது வகைமாலை கண்ணியும் மார்பின் மாலையும் நின்னை விரும்பின பரத்தையர், ÷எ - று. அன்னையென்ன. × மரபினென்மனர்.+ நீங்கிப்பரத்தையரிடத்து.

கூருகிர் சாடிய மார்புங் (க)குழைந்தநின்
றூருந் (உ)தகர்பட்ட சாந்தமுஞ் சேரி
யரிமத ருண்கண்ணு (ங)ரராக் கவவிற்
பரிசழிந் தியாழநின் மேனிகண் டியாளுஞ்
செருவொழிந்தேன் சென்றீ யினி

எ-து: அதுகேட்ட தலைவி, *யான் நீ நீக்கியபின்னர் நீசெய்த காரியமும் அறிவேன்; நின்சூளறவு பொய்யாதலும் அறிவேன்; புதிய பரத்தையருடைய செறிந்த தொடியழுந்தின வடுவையும் அவர் †மூயக்கத்தாற் குழைந்த நின் தாரையும் நீ குறியாற் பொய்க்கப்பட்ட பரத்தையர் கோபித்துக் கூரிய உகிரால் தாம் விரும்பியாங்கு வடுச்செய்த மார்பையும் சேரியிலிருந்த செவ்வரியினையுஞ் செருக்கையுமுடைய மையுண் கண்ணினையுடையாருடைய நிறையாதமுயக்கத்தாலே பூசின பாடழிந்த தெறுதல்பட்ட சந்தனத்தையுமுடைய நின்வடிவைக் கண்டு இதற்குரிய யாதும் நின்னெடு ஊடுதலைத் தவிர்த்தேன்; இனி அப்பரத்தையரிடத்தே செல்வாயென்றாள். எ - று.

கசு தெரிபிழாய், தேற்றாப் கிவக்தணே காண்பாய்நீ தீதின்மை
யாற்றி னிறப்பல் பணிக்து

எ - து: அதுகேட்ட தலைவன் தெரிந்த இழையினையுடையாய்! யான் தெளிவித்ததனைக்கொண்டு நின்னெஞ்சைத் தெளிவியாயாய்க் கோபித்தாய்; யான் தீயனல்லாமையை நின்னைத்தாழ்த்து தெறியாலே நின்னெஞ்சிடத்தே நிறுத்துவேன்; அதனைக் காண்பாயாகவென்றான். எ - று.

கஅ ‡அன்னதே லாற்றல்தாண்
வேறுபட் டாங்கே கலம்பற்றி யகப்படின்
மாறுபட் டாங்கே ||மயங்குதி யாதொன்றுங்
கூறி யுணர்த்தலும் வேண்டாது மற்றுநீ
மாணு செயினு மறுத்தாங்தே நின்வயிற்
காணி னெகிழுமென் னெஞ்சாயி ÷னென்னுற்றாய்
(ச பேணுய்நீ பெட்பச் செயல்

க. கலி. சுஅ: கச; ககஉ: உங. புறம். எங: கச.

உ. (அ) "ஊன்றதர்ந் திழிந்த வுதிர வெம்புனல்" (ஆ) "மிதிதோற் கொல்லன் பொதியுலைச் செந்தீத், ததர்வனபோலச் தெர்வன சிந்தி" (இ) "ஞதரிதழ் ஞாழல்" பெருங்.(க) நிஉ: ககஎ, நிஅ: கூ - கo. (ங) க: உஎ.

ஙு. "ஆராக் கவவி னெருத்தி" கலி. கo· கo.

சு. (அ) "பேணுதி பெட்டா ருளர்மன்னே மற்றவர்க், காணு தமைவில கண்" (ஆ) "பேணுது பெட்பவே செய்யினுங் கொண்கனைக், காணு தமையலகண்" தூறல். ககஎஅ; கஉஅஙு.

(பிரதிபேதம்: * யானீக்கியபின்னர் நீ செய்தகாரியமுமறியேன்கின். †மூயக்கத்தாற்குழ்ந்த கின், ‡ அன்னதேயாற்றல், || மயங்குமியாதொறும். ÷ னன்றுற்றாய்பேணுமீ

எ - து: அதுகேட்ட தலைவி, இவன் கருத்து இன்னும் நீதின்மையே யென்பது நெஞ்சிடத்தே நிறுத்துதலேயாயின், இவன் வலியை நெஞ்சே காண்பாயாகவென நெஞ்சொடு கூறி, அவனோக்கி, யான் நின்னோடு வேறு பட்ட *அப்பொழுதே நெஞ்சு கலங்குவை; யான்வேறுபடாமல் நின்கையிலே அகப்படுவேனுமின், அக்கலக்கத்தை மாறுபட்டபொழுதே என்னே இகழ்ந்து பரத்தையர்பாற்சேறற்கு மனம் மயங்குவை; ஆதலால், யாதொரு வார்த்தையையுஞ் சொல்லி என்னே ஊடலுணர்த்துதலும் உனக்கு வேண்டாததொரு காரியம்; † இக்குறையையொழிய நீ வேறு மாட்சிமைப்படாத குறைகளைச் ‡செய்யினும்அதற்றைத்தள்ளி, நின்னைக்காணின், அப்பொழுதே என்னெஞ்சு நின்னிடத்தே நெகிழ்ந்துவருமாயின், என்னெஞ்சின்றன்மையை உட்கொள்ளாயாய் நீ யான் விரும்பும்படி என்னெஞ்சைத் தெளிவிக்குஞ் செயல்களே என்ன காரியத்திற்குச் செய்தாயென ஊடறீர்ந்தாள். எ - று.

இதனுல், இருவர்க்கும் புணர்ச்சியாகிய உவகை பிறந்தது.

இஃது ஐஞ்சீரடுக்கியும் ஆறுமெய்பெற்றும் வந்து போக்கின்றி உற்ற உறழ்கலி. "கூற்று மாற்றமு மிடையிடை மிடைந்தும், ||போக்கின்றாக வுறழ் கலிக் கியல்பே" (க)என்பது விதி. (உசு)

(கூஉ.) புனவளர் பூங்கொடி யன்னுய் கழியக்
கனவெனப் பட்டதோர் காரிகை நீர்த்தே
முயங்கிய நல்லார் முலேயிடை மூழ்கி
மயங்கிமற் ருண்டாண்டுச் சேறலுஞ் செல்லா

க. தோல். செய். சூ. கஞ்சு. இச்சூத்திரத்தினுரையில் உறழ்கலிக்கு இச் செய்யுளேமேற்கோள்காட்டி,"'காணினெஞ்சும்.....செயல்'என்பது வெள்ளேச்சுரிதகமாகாதோ வெனின், ஆகாதன்றே? 'போக்கியல் வகையே வைப்பெனப் படும்'என்றவிலக்கணத்தான் மூற்கூறியவற்றை யெல்லாந் தொகுத்து இதன்கண் வைத்தில்லாமையி னென்பது; அல்லதூடம் அவ்வாறு முடிதலே யன்றி இன்னும் ஓர் தொச்சகம் பெய்து சொல்லி உறழ்ந்த வழியும் அஃதேற்பதாகலான், அஃது ஒருதலேயாக அமைத்தனெப்படாது;என்னே? 'அன்னதேயாயினுமாகமற்றியாய், நின்னகை யுண்க முயங்குவாய் நின்னெஞ்சு, மென்னெஞ் நின்ற தெனின்' என்றற்போலப் பின்னுமொன்று தலேமகன் உரைத்தற்கு இடம் பட்டு நின்றமையின், இது போக்கியல் வகைத்தாகியவற்றைப் பெனப்படா தென்க" என்பர் பேராசிரியர். நச்சினர்க்கினியரும் இதனையே தழுவிச் சுருக்கி யெழுதுவர்.

(பிரதிபேதம்) * அப்பொழுதே நின்னெஞ்சு கலங்குவையாயின் வேறு, † இக்குறைகளே ‡ சீசெய்யினும். || போக்கின் முதலு முறழ்.

துயங்கி யிருந்தார்க் குயர்ந்த பொருளு
மரிதி னறஞ்செய்யா வான்றே ருலகு
முரிதி னெருதலே யெய்தலும் வீழ்வார்ப்
பிரிதலு மாங்கே புணர்தலுந் தம்மிற்
றருத றகையாதான் மற்று;

கo நனவினுற் போலு நறுநுதா லல்கற்
கனவினுஞ் சென்றேன் கலிகெழு கூடல்
வரையுறழ் நீண்மதில் வாய்சூழ்ந்த வையைக்
கரையணி காவி னகத்து;

கச உரையினி, தண்டாத்தீஞ் சாய னெடுந்தகா யவ்வழிக்
கண்ட தெவன்மற்று நீ;

கஉ கண்டது, உடனம ராயமொ டவ்விசும் பாயு
மடநடை மாயின மந்தி யமையத்
திடன்விட் டியங்கா விமையத் தொருபா
லிறைகொண் டிருந்தன்ன நல்லாரைக் கண்டேன்
றுறைகொண் டுயர்மணன் மேல்; ஒன்றி நிறைவதை

உக ஓர்த்த திசைக்கும் பறைபோனின் னெஞ்சத்து
வேட்டதே கண்டாய் கனை;

உங கேட்டை, விரையனீ மற்று வெகுள்வா யுரையாண்
டிதுவாகு மின்னகை நல்லாய் பொதுவாகத்
தாங்கொடி யன்ன தகையா ரெழுந்தோர்
பூங்கொடி வாங்கி யிணர்கொய்ய வாங்கே
சினையலர் வேம்பின் பொருப்பன் பொருத
முனையரண் போல வுடைந்தன்றக் காவிற்
றுணைவரி வண்டி னினம்;

ஙo மற்றுங்கே, நேரிணர் மூசிய வண்டெல்லா மவ்வழிக்
காரிகை நல்லார் நலங்கவர்ந் துண்பபோ லோராங்கு மூச (க)
அவருள்,
ஒருத்தி, செயலமை கோதை நகை
ஒருத்தி, யியலார் செருவிற் றெடியொடி தட்ப
ஙஉ ஒருத்தி, தெரிமுத்தஞ் சேர்ந்த திலகம்
ஒருத்தி, யரிமா ணணிர்குழை யாய்காது வாங்க

க. இஃது ஆறுமெய்பெற்றதென்பதனால் இவ்வாறு பிரிக்கப்பட்டது.

ஒருத்தி, வரியா ரகலல்குற் காழகம்
ஒருத்தி, யரியார் ஞெகிழத் தணிசுரும் தட்ப
ஒருத்தி, புலவியாற் புல்லா திருந்தா ளலவுற்று
வண்டின மார்ப்ப விடைவிட்டுக் காதலன்
றண்டா ரகலம் புகும்;

சஉ ஒருத்தி, அடிதாழ் கலிங்கக் தழீஇ யொருகை
முடிதா ழிருங்கூந்தல் பற்றிப்பூ வேய்ந்த
கடிகயம் பாயு மலந்து;

சநி ஒருத்தி, கணங்கொண் டவைமூசக் கையாற்றுள் பூண்ட
மணங்கமழ் கோதை பரிபுகொண் டோச்சி
வணங்குகாழ் வங்கம் புகும்;

சஅ ஒருத்தி, இறந்த களியா னிதம்மறைந்த கண்ணள்
பறந்தவை மூசக் கடிவாள் கடியு
மிடங்தேற்றுள் சோர்ந்தனள் கை;

நிக ஆங்க, கடிகாவிற் காலொற்ற வொல்கி யொகியாக்
கொடிகொடி தம்மிற் பிணங்கி யவைபோற்
றெரியிழை யார்ப்ப மயங்கி யிரிவுற்றூர் வண்டிற்கு
வண்டலவர் கண்டே னியான்;

நிநி நின்னினின் பெண்டிர் புலந்தனவு நீயவர்
முன்னடி யொல்கி யுணர்த்தினவும் பன்மாண்
கனவின் றலையிட் டுரையல் சினனியான்
செய்வதி லென்பதோ கூறு;

நிசு பொய்கூறேன், அன்ன வகையால்யான் கண்ட கனவுதா
னன்வாயாக் காண்டை நறுதுதால் பன்மாணுங்
கூடிப் புணர்ந்தீர் பிரியன்மி னீடிப்
பிரிந்தீர் புணர்தம்மி னென்பன போல
வரும்பனிழ் பூஞ்சினை தோறு மிருங்குயி
லானு தகவும் பொழுதினுன் மேவர

சுஎ நான்மாடக் கூடன் மகளிரு மைந்தருந்
தேனிமிர் காவிற் புணர்ந்திருந் தாடுமா
ரானு விருப்போ டணியயர்ப காமற்கு
வேனில் விருந்தெதிர் கொண்டி.

இது பரத்தையிற்பிரிந்து வந்த தலைவன் வாயில்பெறாது ஆற்றமை வாயிலாகப் புக்கு, தலைவியை நயப்பித்தல் காரணமாகத் தெய்வமகளிர் *பொய்தலயர்வதோர் கனாக்கண்டேன்; அது †நன்வாயாப் பருவம் வந்து இறுத்தது பாராயேன ஊடநீர்வது பயனகத் ‡தலைவிக்குக் கூறியது.

இதன் பொருள்.

‖ புனவளர் பூங்கொடி யன்னாய் கழியக்
கனவெனப் பட்டதோர் காரிகை நீர்த்தே
முயங்கிய கல்லார் முலையிடை மூழ்கி
மயங்கிமற் றுண்டாண்டுச் சேறலுஞ் செல்லா
நி துயங்கி÷ யிருந்தோர்க் குயர்ந்த பொருளு
மரிதி னறஞ்செய்யா வான்றே ருலகு
(க)முரிதி ஞெருதலை யெய்தலும் வீழ்வார்ப்
பிரிதலு மாங்கே புணர்தலுந் தம்மிற்
+ றருத றகையாதான் மற்று

எ - து: புனத்திடத்துவளர்ந்த பூவையுடைய கொடியையொப்பாய்! (உ) × பொருள்வயிற்சென்று முயலாதே வருந்தியிருந்தவர்களுக்கு அவர்கள் இருந்த இடங்களிலே இடங்களிலே மிக்க பொருளும் தானே செல்லுதலும் **அரிதாயிருத்தலாலே உலகம்தமக்குஉரித்தாக அறத்தைச்செய்யாது இப்படி இருக்கவும், அறஞ்செய்தற்கு அமைந்தோர் அறுதியாக அவ்வறத்தைச்செய்தலும் கனவிடத்தின்றுய்ப்போகத் தாம் முயங்கிய மகளிருடைய முலையினிடையிலே அழுந்திய இன்பத்தே மயங்கி விரும்புகின்ற கணவரை மகளிர் (ங) ஊடலாற் பிரிதலும் அப்பொழுதே ஊடநீர்த்து புணர்தலுமாகிய தம்மின் †† மாறுன இன்பத்தைச் ‡‡கனவிடத்தே தருதலே விலக்காதாம்; இனி மிகுத்த காதலாற் கனவென் றுசொல்லப்பட்டது ஓர் அழகினையுடைத்தாகியநீர்மையையுடைத்தா யிருந்த தென்றான். எ - று.

க. 'உரிது' இந்நூற்பக்கம் சூடுடு: க-ஆம் குறிப்புப்பார்க்க.

உ. "சென்றோர் முதப்பப் பொருளுங் கிடவாது" (கலி. கஅ:டு) என்பதும் (ஆ) "மடியிலான் செல்வம்போன் மரனந்த" (கலி.ஙஉ:க.) என்பதும் அதன் குறிப்பில் இவ்விடத்துக்குப் பொருந்துவனவும் ஈண்டு ஒப்பு நோக்கற்பாலன.

ங. "ஊதெல் காமத்திற் இன்ப மதற்கின்பங், கூடி முயங்கப் பெறின்" குறள். கஙூ0.

(பிரதிபேதம்) *பொய்தலாடுவதோர், †னவாய்ப்பருவம், ‡தலைவன்றலைவிக்கு, ‖புனம்வளர், ÷ இருந்தார்க்கு, + தருதறகேயாதார் மற்று, × பொருள்வயிற் சென்று, **அரிதாவிருத்தலாலே, †† மாற்றுன, ‡‡கனவிடத்தே யொருதல்.

என்றது "இன்பமும் பொருளும் அறனும்"(க)என்றுஆசிரியர்கூறியஇலக்கணம்பற்றிச் சிறந்த இன்பத்தையே*தந்தது எனேஅறனும்பொருளுந் தாராமற் போயிற்று, † இக்கனவு; ஆதலால், அத்தேர் காரிகைநீர்த்தென்றான்.

‡ பொருளுமென்ற உம்மை, சிறப்பு. மற்று, அசை.

கo நனவினுற் போலு நறுநுதா லல்கற்
கனவினுஞ் சென்றேன் (உ)கலிகெழு கூடல்
(ரு)வரையுறழ் நீண்மதில் வாய்சூழ்ந்த (சு)வையைக்
கரையணி காவி னகத்து

எ - து: நறிய நுதலினையுடையாய்! ஆவரம்பொருந்தின || மதுரையினுடைய வரையை மாறுபடுகின்ற நீண்ட மதிலிடத்தைச்சூழ்ந்த வையையாற்றங்கரையை அழகுபெறுத்தின பொழிலினிடத்தே நனவிடத்தே சென்றாற் போல இராப்பொழுதிலே கனவிடத்தே சென்றேனென்றான். எ - று.

கச உரையினி, (ரு)தண்டாத்தீஞ் சாய னெடுந்தகா யவ்வழிக்
கண்ட தெவன்மற்று நீ

எ - து: அதுகேட்ட தலைவி, அமையாத இனிய மென்மையினையுடைய (சு)நெடுந்தகாய்! பின்னைநீ அவ்விடத்துக்கண்டது எத்தன்மைத்து?÷அதனை இனிச்சொல்லென்றாள். எ - று.

கசு கண்டது, உடனமர் காயமோ டவ்விசும் பாயு
மடநடை மாயினை மந்தி யமைபயத்
திடன்விட் டியங்கா விமையத் தொருபா
ழிறைகொண் × டிருந்தன்ன நல்லாரைக் கண்டேன்
றுறைகொண் டுயர்+ மணல் மேல், ஒன்றி நிறைவதை

எ - து: அதுகேட்ட தலைவன், யான்கண்டது கேள்; அன்னங்கள் தன்னிடத்திலிருந்து நீங்கிப்போகாத இமயமலையில்ஒருபக்கத்தே அழகியசிறுமிலே

க. தோல். கள. சூ. க.

உ. "கலிகெழு கூடல்" சிலப். கo: கசசு.

ரு. (அ) "கோடுறழ்ந் தெடுத்த கொடுங்க ணிஞ்சி" பதிற். கசு: க. (ஆ) "கிடங்கை நாமவேலை யாமெனு, மேக மொண்டு கொண்டெழுந்து விண்டொடர்ந்த குன்றமென், முகைதொந்துநின் றுதாரை யம்மதித்கண் வீசுமே" கம்ப. நகரப். கஙி.

சு இத்தூற்பக்கம் கசுசு: க-(ஃ) குறிப்புப் பார்க்க.

ஙி. "தண்டாத்தீஞ் சாயற் பரத்தை வியன்மார்ப" கலி. கூஙு: உ:

ஙு. இத்தூற்பக்கம் சக: க-ஆம் குறிப்புப்பார்க்க.

(பிழைதிருத்தம்) * தந்தீமை பயனும்; † கனவாதலால், ‡ பொருளும்உம்மை, || மதுரையினுடையை, + அதனைச்சொல், × இருந்த நல்லாரை. + மணல்மேல். எ-து.

இரைகவர்ந்த இளைப்பால் ஓய்ந்து பறக்கும் மடப்பத்தையுடைத்தாகிய
நடையினையுடைய அன்னத்திரள் அந்திக்காலத்தே தங்குதல்கொண்டிருந்த
தன்மையவாக, தறை தன்னிடத்தேகொண்டு உயர்ந்த மணற்குன்றிலே
நல்லார், தம்மூடனே அமர்ந்த ஆயத்தாருடனே பொருந்தி நிறைந்திருக்கின்ற
தனைக் கண்டேனென்றான். எ - று.

மா + இனம் மாயினமென மரூஉவான் (க) யகரவுடம்படுமெய் பெற்றது.
அன்னவாகவெனவிரிக்க.

உக (உ)ஓர்த்த திசைக்கும் பறைம்பாணின் (ங)வெஞ்சுத்து
வேட்டதே கண்டாய் கனை

எ - து: அதுகேட்ட தலைவி, தொட்டுகின்றவன் தன்மனத்தில் ஓர்த்த
ஓசையைத் தானும் ஒலிக்கும் பறைபோல நின்னுடைய நெஞ்சத்து விரும்பின
இன்பத்தையே கனவாகக் கண்டாயென்றாள். எ - று.

உங கேட்டை, விரையனீ மற்று வெகுள்வா; யுரைநாண்
டிதுவாகு மின்னகை நல்லாய் பொதுவாகத்
தாங்கொடி யன்ன தகையா ரெழுந்தோர்
பூங்கொடி வாங்கி யிணர்கொய்ய வாங்கே
(அ)தினையலர் வேம்பின் பொருப்பன் பொருத
முனையரண் போல வுடைந்தன்றக் காவிற்
றுணைவரி வண்டி னினம்

க. 'கோயில்' 'மாயிருஞாலம்' என வருதலையும் நோக்குக.

உ. "ஓர்த்த திசைக்கும் பறை" என்னும் பழமொழியும் "இரட்டுறு மூரச
மென்ன விசைத்தலே யிசைக்கின் முயை" என்னும் கம்பர் வாக்கும்
ஈண்டு ஒப்புநோக்கற்பாலன.

ங. "வானம் மகளிரிற் றுனைஞர் சுடர், முகைநலக் காந்தண் முகிழ்விர
னுவத், தகைமலர்ப் பொய்கைத்தண்செங்கழுநீர், நில்லெனப்பிடித்து
மெல்லென விழித்து, ணண்ண வருவோள் போலுமென்க, நுறைத்தே
னவிட னஞ்சார் தினைமுலை, நோற்றே யாயினு நுகர்வல் யானெனத்,
தெய்வ நல்யாழ் கையமைத் தியற்றிய, வைகறைத் தல்கு லவர்திகை
வீவு, முறுதுணைத் தோழ னிறுதியு நினையான், மாண்ட குழச்சி மந்திர
வமைச்சர், வேண்டுங் கொள்கைய ஞகி நீண்ட, தடம்பெருங் கண்ணி
தபோ ராட்டி, யுறுவகை யண்ண றறுகண் பொருந்துறுங், கைவிற்
கொண்ட கழுநீர் நறும்போது. கொய்மலர்க் கண்ணி கொடுப்போன்
போலக், கனவிற் றோன்றி" பெருங். (ங) எ: சக - கஎ.

ச. "தினையலர் வேம்பன் றோரா ஞகி" சிலப். பதிகம். உஅ.

எ - து: அதுகேட்ட தலைவன், நீயிரையாதேகொளள்; பின்னைக் கோபிப்பா யென்றான். அதுகேட்ட தலைவி மேல் உரையென்றாள். அதுகேட்ட தலை வன் இனிய நகையினையுடைய நல்லாய்! ஆண்டுப் பிறந்தது இதுவாயிருக் கும்; அதனைக்கேள்; கொடியையொத்த அழகினையுடையார் தாம் அக்கா வீடத்து எழுந்து நின்றதோர் பூங்கொடியை எல்லார்க்கும் பொதுவாகக் கொண்டு வளைத்து அதிற் கொத்துக்களைப் பறிக்க விரைந்த வரியினையுடைய வண்டின்றிரள் கொம்புகள் அலர்ந்த வேப்பந்தாரினையுடைய (க) * பொதி யிலையுடையவன் பொருத பகைப்புலத்து அரண்போல அவ்விடத்தே உடைந்தது. எ - று.

உடைந்தன்றென்பது, றகரம்ஊர்ந்த குன்றியலுகரவீற்று முற்றுச்சொல்; "வந்தன்று" (உ)என்பதுபோல.

ங0 மற்றுங்கே, நேரிணர் மூசிய (ங)வண்டெல்லா மவ்வழிக் காரிகை நல்லார் நலங்கவர்ந் தன்பபோ †லோராங்கு மூச அவருள்,

---

க. பொருப்பென்பது பொதியின்மலைக்குப் பெயராய் வருதலை இந்நூற் பக்கம் ககஎடு: க - ஆம் குறிப்பாலும் "பொருப்பு கறுஞ்சந் தனஞ்சேறு" (பிரபு. பிரபுதேவர். சுo.) என்பதனாலும் அறிக.

உ. கலி. உசு: உடு; ஙஉ: கஅ; ஙங: அ; ஙசு: கo; கசஙட: சக.

ங. (அ) "வண்டு வழிபடரும் வாட்கண்ணாய்" (ஆ) "பூப்பிழைத்து வண்டு புடையாடுங் கண்ணினாய்" (இ) "எரிர்நீர் நாவு மீளாயோர் திருமுகத், தாழ மிகவா வரிபரந் தகன்ற, மாழை யுண்கண் மலரென மலித்துத், தண்செங் கழுநீர்த் தகைமலர்த் தாது, மொண்செந் தாமரைப் பைம்பொற் றாது, மாராய்ந் துழிதரு மஞ்சிறை வண்டின, மோராங்கு நிலைபெற் றுண்ணெகிழ்ந் தவிழ்ந்த, பேரா விலையெனப் பேர்தல் செல்லா, மொய்த்தலின் மற்றவை மொய்ப்பினீங்கத், தத்தரிநெடுங் கண் டகைவிரல் புதைஇப், புதமணமகளிரிற் கதுமெனத் தோன்று, மதா மழலை மடவோர்க் காண்மின்"(ஈ)"ஆட்டு குங்குமக் கொழுங்களி யளாயசெங் கமலஞ், சேட்டிளங்கதிர் மூலையென வொழித்துவெண் டிங்கள், காட்டு வாணுதற் கன்னிய ரெழுதுசாந் தழித்த, மோட்டு வெம்மூலை முளரியென் றளிகுல மொய்ப்ப" (உ)"விரும்பித் தேனுகர் வீகலை யுந்தொறுங், கரும்பிற் றேமொழிக் காரிகை யார்மூலைச், சரும் புற் றூர்ப்பவித் தோடவிழ் செவ்வியு, மரும்பிற் றேனுமுண் பாமெனு மாசையால்" (ஊ)"களையக் கைகளை பற்று தொறுந்தொழி, லுளையப் பூவென் றெளிமுகம் பாய்வன, வீனமட் டேட்டலர் வீத னிறுத்துமத், தெளிவைத் தேறிய போற்சிறை வண்டினம்" என்பவை இங்கே அறிதற்பாலன.

(பிரதிபேதம்) * பொதியினையுடையவன். † ஓராங்காங்க மூச வவருள்.

ஒருத்தி, செயலமை தோகை நுகை
ஒருத்தி, *யியலார் செருவிற் றெடியொடு தட்ப
ந.நி ஒருத்தி, தெரிமுத்தஞ் சேர்ந்த (க)†திலகம்
ஒருத்தி, ‡யரிமா ணவிர்குழை யாய்காது வாங்க
ஒருத்தி, வரியா ‖ரகலல்சூற் காழகம்
ஒருத்தி, யரியார் ஞெகிழத் தணிசுறுத் தட்ப
(உ)ஒருத்தி, புலவியாற் புல்லா திருந்தா ளலவுற்று
வண்டின மார்ப்ப ÷ விடைவிட்டுக் காதலன்
றண்டா ரகலம் பூசும்

எ - து: பின்னே அப்படியே உடைந்த, தம்மிலொத்த இணர்களிலே மொய்த்த வண்டெளெல்லாம் அவ்விடத்து நின்ற அழகினையுடைய மகளிர் கலத்தைக் கைக்கொண்டு நுகர்தனபோல, ×ஒருபடிப்பட மொய்க்கையினாலே அவ்வண்டின் போரிலே அவர்களில் ஒருத்தியுடைய பூமாலையும் பண்ணுக லமைந்த முத்தமாலையும் வேறொருத்தியுடைய அசைதலார்ந்த தொடியோடே தடித்துக்கொள்ளாநிற்க, ஒருத்தியுடைய நெற்றியிற் றிலகத்தைச் சேர்ந்த தலையிற் கிடந்த தெரிந்த முத்துவடத்தை வேறொருத்தியுடைய அழகினையுடைய காதிற்கிடந்த அழகுமாட்சிமைப்பட்ட விளங்குகின்ற மகரக்குழை தடக்கிக்கொள்ளாநிற்க, ஒருத்தியுடைய திதலைநிறைந்த அகன்ற அல்குலிற் றங்கிலே வேறொருத்தியுடைய உள்ளிமணியமைந்த சிலம்பிடத்திற் கிடந்த சுரு வடிவாகியமூட்டுவாயிரும்புகள்(?)தனைத்துக்கொள்ளாநிற்க, ஒருத்திபுலவியாலே கணவனைப் புல்லாதிருந்தவள் வண்டினம் மொய்த்த ஆரினிக்கையினாலே +வருத்தமுற்று அப்புலவியை நடுவேவைகவிட்டுக் கணவன்வணங்குகையினாலே அவனுடைய குளிர்ந்த மாலையையுடைய மார்பிடத்தே முயங்கும். எ - று.

**செயவெனெச்சங்கள் புகுமென்னும் பிறவினை கொண்டன.

கூஉ ஒருத்தி, யடிதாழ்(உ)கலிங்கந் தழீஇ யொருதை
முடிதூ ழிருங்கூந்தல் பற்றிப்பூ வேய்ந்த
கடிகயம் ††பாயு மலந்து

க. திலகமென்பது சாந்துமுதலியவற்றைக் குழைத்தணியும்நெற்றிக்குறிக் கன்றியும் ஓரணிகலத்துக்கும் பெயரென்று தோன்றுகிறது; 'ஒண் ணுதல் யாத்த திலக வவிரோடை" கலி. கூஉ: கக. என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

உ. (அ)"அதிலேந்துகூந்தலொருகையிலேந்தியசைந்தொருகை,திதிலேந்தி" (தஞ்சை. உஎ.) என்பதும் (ஆ) "புதல்வரை யொருகையர்ப் பழீஇப்,

(பிரதிபேதம்) * இகலார், † நிலதம், ‡ வரிமாண், ‖ அகலல்குலிற்காழகம். × ஒருபடிப் படிபொய்கையினாலே. + வருத்தமுற்ற புலவியை. **செய்தெனெச்சங்கள், †† பாயுமலர்ந்து.

எ - து: ஒருத்தி, அடியிலே தாழ்ந்த *துணியை ஒருகையாலே தழுவிக் கொண்டு மற்றைக்கையாலே முடித்த முடி குலைந்த கரிதாகிய கூந்தலைப் பிடித்துக்கொண்டு அலவற்று மிகுதியையுடைய பூ வேய்ந்த குளத்திலே பாயாநிற்கும். எ - று.

சநி (க)ஒருத்தி, கணங்கொண் டவைமூசக் கையாற்றுரள் பூண்ட
மணங்கமழ் (உ)கோதை பரிபுகொண் டோச்சி
வணங்குகாழ் வங்கம் புகும்

எ - து: ஒருத்தி, திரட்சிகொண்டு வண்டுகள் மொய்க்கையினாலே கையாற் கடியமாட்டாளாய் மணம் நாறுகின்ற மாலையை அறுத்துக்கொண்டு ஓட்டி, அதற்கு(ங) அவை போகாமை கண்டு வளைந்த தண்டுகள் தனக்கு உள் வலியாக உள்ளே பூண்ட ஓடத்தே பாயும். எ - று.

காழ்பூண்டவென்க. பரிபு, † செய்பெனைச்சம்.

சஅ ஒருத்தி, இறந்த களியா னிருத்துமறைந்த கண்ணள்
பறந்தவை மூசக் கடிவாள் (ச)கடியு
மிடந்தேற்றுரள் சோர்ந்தனள் கை

பவழஞ் சேர்ந்த பல்காழல்குல், ரவிழ்ந்த பூந்துகி லங்கையி னசைஇ, நகைப்பூங் கோதையொடு நான்ற கூந்தற்கு, மிகைக்கை காணாது..... பொய்கை புக்கனள்" (பெருங். (க)சஙு:கசநி-கடிஉ) என்பதும் காண்க.

க. "பொறிவரி வண்டினம் புல்லுவழி யன்றியு, நறுமலர் மாலையின் வறிதிடங் கடிந்தாங்கு" என்புழி, புல்லுதல் என்பதற்கு இன மென்று புல்லுத லென்று பொருள் கூறி, "ஒருத்தி கணங் கொண்டவை..... ..... கொண்டோச்சி", "ஒருத்தி, இறந்த.....சோர்ந்தனள் கை" என்பவற்றை மேற்கோள்காட்டினர் அடியார்க்குநல்லார்; சிலப். கசு: கஙூ - கசநி. உரை.

உ. (அ) "வண்டே வம்மருங்கு னுமென்று பூமாலை, கொண்டோச்சுங் காதலர்" (ஆ)"கறபெனு மாலை வீதி நாணெனுங் களிவண் டோப்பிச், சொற்புக ரின்றித் தோழிக்குறத்திஞ டரிவை நின்றாள்" சீவக. கஎ०, உஎசு.

ங. (அ) " நதியினுங் குளத்தும் பூவா களினங்கள் குவளை யோடு, மதி தூதல் வல்லி பூப்ப நோக்கிய மாலைத் தும்பி, யதிசய மெய்திப் புக்கு வீழ்ந்தன வலைக்கப் போகா, புதியன கண்ட போழ்து விடவரோ புதுமை பார்ப்பார்'' கம்ப. பூக்கொய். கூ. (ஆ) "கோல காண்மலர் கொய்பவ ளகையி, லோலி டுஞ்சரும் போசுவும் போகில, மாலுழந்து மறிந்து விழுவன" நைடத. போதுகொய். கச.

ச. (அ) "நட்பாட றேற்றாதவர்" என்புழி,,தேற்றாமை தன்னினையாய் நிற்றற்கு,"கடியு, மிடந்தேற்றுரள் சோர்ந்தனள் கை" என்பதுமேற்கோள்;

(பிரதிபேதம்) * துகிலினை, † செய்தெனைச்சம்.

எ - து: ஒருத்தி அறிவுபோதற்குக் காரணமான (க)*கள்ளின்களிப்பால் இமை கூடுகையினுலே † பார்வை மறைந்த கண்ணையுடையளாய்ப் பதைத்த வண்கேள் மொய்க்க ஒட்டுகின்றவள் தன் களிப்பாலே அவற்றை ஒட்டிமிடம் அறியாளாய்க் கைசோர்ந்தாள். எ - று.

கைசோர்ந்தனள்; சினவினே, முதலொடு முடிந்தது.

நிக ஆங்க, உரையசை ; அங்ஙனே ‡யெனகின்றது.

(உ)கடிகாவிற் காலொற்ற வொல்கி யொசியாக்
கொடிகொடி தம்மிற் பிணங்கி யவைபோற்
றெரியிழை யார்ப்ப மயங்கி பிரிவற்றூர் வண்டிற்கு
‖வண்டலவர் கண்டே னியான்

எ - து: வீளையாட்டையுடைய மகளிர், மிருதியையுடைய பொழிலிலே காற்றடிக்க ஒதுங்கி வளைந்து கொடியுங் கொடியும் தம்மிற் பிணங்கியவை போலத் தெரிந்த அணிகள் ஆரவாரிப்பத் தம்மிலேமையங்கி அவ்வண்கேளுக்குக் கெடுதலுற்றூர்; யான் கனவைக்கண்டேனென்றூன். எ - று.

நிநி நின்னேநின் பெண்டிர் புலந்தனவு (ங)நீயவர்
முன்னடி யொல்கி யுணர்த்தினவும் புன்மாண்
கனவின் றலையிட் டுரையல் சினை இயான்
செய்வதி லென்பதோ கூறு

குறளி. கஅ. பரி. (ஆ) "தேற்றூப் புன்சொ லேற்றிசிற் பெரும" புறம். உ0உ: கசு.

க. (அ)"அந்தீக் தேறன் மாந்தினர் மயங்கிப், பெறிவரி வண்டினம் புல்லு வழி யன்றியு, நறுமலர் மாலையின் வறிதிடங் கடிந்தாங்கு" சீலப். கச: கஙூ - கநூ. (ஆ) "கூடிய நறைவாயிற் கொண்டன வீழிகொள்ளா, மூடிய களிமன்ன முடுகின நெறிகாணு, வாடிய சிறைமாவண் டந்தரி னிசைமுன்னுப், பாடிய பெடைகண்ணு வருவன பலகாணுய்" கம்ப. வனம்புகு. கங.

உ. (அ) கடியென்னும் உரிச்சொல் காப்பு என்னும் பொருளில் வருதற்கு, 'கடிகா' என்பது மேற்கோள்; தொல். உரிச். சூ. அஎ. சேனு. (ஆ) "உறுகா லொற்ற வொல்கி" நற். ஙo0: ங. (இ) "கடிகாவிற் காற்றற் றெறிய வெடிபட்டு, வீற்றுவீற் ரூடு மயிலினம்போ-ஞற்றிசையும், கேளி ரிழந்தா ரலமருப" களவழி. உக.

ங. "நீ நீயே னலேனென்று மற்றவள், சீறடி தோயா விறுத்தது" கலி. கo: கஎ - கஅ.

(பிரதிபேதம்) * களிப்பால், † பாலை மறைந்த. ‡ எனனென்றது, ‖ வண்டலவாய வாக்கண்டேன்,

எ - து: அதுகேட்ட தலைவி, நின்னை நின்னுடைய பெண்டிர் புலந்தனவற்றையும் நீ அவருடைய அடிமுன்னே வணங்கிப் புலவிதீர்த்தனவற்றையும் (க)பலபடியாகக் கனவின்மேலிட்டுக் கூறுதல், யான் *எனக்கு செய்வதொரு படிறின்றென்பதனை உட்கொண்டோ? சொல்லென்றாள். எ - று.

உரையல், படுத்தலோசையாற் றொழிற்பெயராயிற்று.

நிக பொய்கூறேன், †அன்ன வகையால்யான் கண்ட ‡கனவுதா
னன்வாயாக் காண்டை நறுநுதால் பன்மாணுங் ;
(உ)கூடிப் புணர்ந்தீர் பிரியன்மி ||னீடிப்
பிரிந்தீர் புணர்தம்மி னென்பன போல
வரும்பனிழ் பூஞ்சினை தோறுமிருங்குயி
லாஞ தகவும் பொழுதினுண் மேவர
சூடு நான்மாடக் கூடன் (ங)மகளிரு மைந்தரும்
தேனிமிர் காவிற் புணர்ந்திருந் தாடுமா
ரானு விருப்போ டணியயர்ப காமற்கு
வேனில் விருந்தெதிர் கொண்டு

எ - து: அதுகேட்ட தலைவன், யான் பொய்சொல்லேன்; நறிய நுதலினையுடையாய்! பல மாட்சிமையும் உண்டாய்ப் புணர்ந்தீர் பிரியாதேகொள்ளும்;

க. [இந்நூற்பக்கம் உஅஅ: ங - ஆம் சூறிப்புப்பார்க்க.

உ. (அ) "புணர்ந்தீர் புணர்மி னெனவென வீணர்மிசைச், செங்க ணிருங் குயி லெதிர்குரல் பயிற்று, மின்ப வேணிலும்வந்தன்று"(ஆ)"பொதும்பு தோ றல்கும் பூங்க ணிருங்குயில், கவறுபெயர்த் தன்ன நில்லாவாழ்க் கையிட், டகற லோம்புமி னறிவுடை யீரெனக், கையறத் துறப்போர்க் கழறுவ போல, மெய்யுற விருந்து மேவர துவல" நற். உஉச: ச - சு. உசஙட: ச - அ. (இ)"ஊடினீ ரெல்லா முருவிலான் றன்ணை, கூடுமெ னென்று குயில்சாற்ற - நீடிய, வேனற்பா ணிக்கலத்தாண் மென்பூங் கிருமுகத்தைக், கானற்பா ணிக்கலத்தாய் காண்" சிலப். அ. இறுதி.

ஙூ. (அ) "தேவியருந் திருமாலுஞ் செழுமலர்த்தார்த் தனஞ் சயனும் தேவி மாரு, மேவியனந்தம்வேனில் விழவயர்வான்முரசறைந்து வீதிதோறு, மோவியமு முயிர்ப்பெய்த வுபேந்திரனுமிந்திரனுமுவமைசாலப்,பூவின முஞ் சுரும்புமெனப் புரமுழுதும் புறப்படவண் பொலிகர் சேர்ந்தார்" வில்லி. வசந்தகாலச்: ச. (ஆ) "விருந்து வேனிலாற் கெதிரிய விசை மலர்க் காவு, முருந்து வாணகை முகிழ்முலை மடைந்தையோ டாடிப், பொருந்த விண்ணிடைப் போகமுண் டெற்தனர்போன்முன்" நைடத. அரசாட்சி. கஇ. (இ) கலி. உஎ: உச, ஙூ: கங - கச, ஙஇ: கஙூ-கச.

(பிரதிபேதம்) *னெற்த. †அனவகை‡னவுத்தா, னனவாக்கண்டை.|| டீடிப்புனர்தம்மின்.

புணர்ச்சி நீட்டித்து இடையே பிரிந் தீர்! கூடுதலைத் தருமினென்று கூறுவன் போல, கரியவாகிய குயில்கள் அரும்பு அவிழ்ந்த பூக்களையுடைய கொம்புக டோறும் இருந்து அமையாமற் பெடையை அழைக்கும் இளவேனிற்பொழு தின் கண்ணே காமற்கு விருந்திடுதலே மேவுதல்வர எதிர்கொண்டு கூடலின் மகளிரும் அவர் கணவரும் தேனினம் ஒலிக்குங் காவிலே கூடியிருந்து வினை யாட வேண்டி அமையாத விருப்பத்தோடே அணிகளை அணிவார்; ஆதலாற் பிரிதலும் புணர்தலுமாகிய கூற்றிலே யான்கண்ட கனவு நன்றாகிய உண்மை யாம்படி நெஞ்சாலே(க) கருதுவாயென்றான். எ - று.

கனவு(உ)செய்யுண்முடிவு. (கூ)நான்கு மாடங்கூடலின், நான்மாடக்கூட லென்றாயிற்று; அவை: திருவாலவாய், திருக்கள்ளாறு, திருமுடங்கை, திருகடவூர்.

க. காணுதல், கருதுதலென்னும் பொருளிலும் வருதல்: கலி. கூ: உங.

உ. தோல். உபிர்மயங்கியல். சூ. கூஉ.

ங. (அ) "நான்மாடக் கூட லெதிர்கொள்ள" பரி. 'வாஞ்மெழிலி' ங. (ஆ) "தென்னவ, னான்மாடக் கூட னகர்" பரி: உலகம்: ங - ச. (இ) "உம்பரு நாகருலகந் தாறு மொலிகடல் சூழ்ந்த வுலகத் தோரு, மம்புத நால்களா னீடுங் கூட லாவவா யின்க ணமர்ந்த வாறே" தே. (ஈ) "நன்றறிவார் வீற்றிருக்கு நான்மாடக் கூடலுள நகரி யாளும், வென்றிபுனைவடிசுடர்வேன்மீனவனே" விலி. அருச்சுனன் தீர்த்த. உக. (உ) "வியந்தநான் மேகக் கூடல் விளங்கு நான் மாடக் கூடல்" (ஊ) "வாடுவோர் தம்மைப் போற்ற வயங் கொளி மாககர்க்கட், கூடருமேக நான்கு மாடமாக் கூடலாலே, நாடவ ரதிசயிப்ப நான் மாடக் கூட லென்று, நீடுலை நகர்க்கு நாம மெங்களும் பிறங்கிற் றன்றே" திருவால. திருநகர. கூ. நான்மாடக் கூடலான: கஉ. (எ) "முன்னவன் முன்பா னுன்கு முகிலேயு நோக்கி யின்ன, தொன்னக ரெல்லே நான்குஞ் சூழ்ந்தநான் மாட மாகி, வின்னெடு நாரியேழும் விலக்குமி னெனவி டித்தான்", "வந்தநான் மாட மாகி வளைந்தநாற் றிசையுஞ் சூழ்ந்து, சந்துவாய் தெரியா தொன்றித் தானெரு குடிவாய் மாடப், பந்திகோ புரஞ்செய் குன்றங் கால்கள் போற் பரிப்பப் போர்த்த, வித்துவார் சடையோ னேய வெழிலிமா நகரமெங்கும்", "அன்னநான் மாடத் துள்ளு நகருளர மைச்சர் வேந்தன், றன்ன நாற் கருவித் தானை சமாசரம் பிறவுந் தாழ்ந்து, முன்னை நா டனினு மின்ப மூழ்கினன் றிருந்தார்" திருவிளை. நான்மாடக் கூடலான. கச - கசு. என்பவைகளும் (ஏ) "மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்.....மதுரை" (மது. சஉக - கஉக) என்பதற்கு, 'நான்மாடத்தாலே மலிந்த புகழைக் கூடுதலையுடைய மதுரை' என்று இவர் எழுதியிருக்கும் உரையும் (ஐ) இந்நூற்பக்கம் கசூ: உ-ஆம் குறிப்பும் இங்கே அறிதற்பாலன.

இனி,(க)கன்னி, கரியமால், காளி, ஆலவாய் என்றுமாம். புணர்தம்மின்: "நல்லெயி லுழந்த *செல்வர்த் தம்மின்" (உ)என்றுற்போலத் திரிசொல்.

இஃது, † "உறலருங்கு குண்மையி னூடன் ‡ மிகுந்தோளோ. பிறபிற பெண்டிரிற் பெயர்த்தற் கண்ணும்" (ங) என்பதனுற் பிறபிற பெண்பால் காட்டி || ஊடநீர்த்தது. புல்லாதிருந்தாளென்றதனுன் ஊடன்மிகுதி கூறி; மகளிரும்மைந்தரும் விருந்தெதிர்கொண்டணையயர்வர்; நாமும் ÷ அதுசெய்ய வேண்டுமென்றவாறு காண்க.

இதனுல், தலைவற்குக் கனவு முதற் றேன்றிப் பின்னர் விரைவு தோன்றிற்று. இது "யாறுங் குளனுங் காவு மரமுஞ் சாத்திரத்தாற் காவித் புணர்ந்திருந்தாட னீயுங் கருதெனத் தலைவிக்குக் + கூறியது.

இஃது ஐஞ்சீரடுக்கியும் ஆறுமெய்பெற்றும் வந்த கலிவெண்பா; அகவியத் தளையும் வந்தது. (உஎ)

(கூஙூ.) வண்டே துகாந்தம் பாடிக்கொ ணீயிய
தமாடாத்தேஞ் சாயற் பாத்தை வியன்மார்ப

க. (அ) "வடதிரு வால வாய்திரு நடுவுர்.....கன்னிசெங் கோட்டுக் கரிமியான் றிருவுறை" கல். கூக. (ஆ) "கரும்பின மயிடற் காய்ந்த கண்ணிமுன் காக்கு மூரர்" (இ) "கனகவெண் சங்கச் செங்கைக் கரியமால் காக்கு மூரர்" (ஈ) "றிருடைக் காளி நாமச செல்விமூன் காக்கு மூரர்" (உ) "ஆலவாய்த் தரும மூர்த்தி, யெங்கிலக் கினுமுயர்ந்த திங்கில மென்று தோன்ற, மன்னுமைக் குரைத்து மற்றை மாதிரங் காக்கு மூரர்" திருவால. திருநகரச்சிறப்பு. கூ - கடு.

உ. மது. எஙூ.

ங. (அ) தொல். கற்பி. சூ. நு. இதனுரையில், தலைவன் பிறபெண்டிரோடு வாக ஊடன்மிக்கவனை ஊடலுணர்த்தியதற்கு "ஒருத்தி புலவியாற்... .....அகலமபுகும்" என்பதை மேற்கோள் காட்டினர் இளம்; (ஆ) நச்சினர்க்கினியர் இதனுரையில் "அன்னவகையால்... .....கொண்டு" என்பதையுஞ்சேர்த்துக்காட்டி, 'புல்லாதிருந்தா ளென்றதனுன் ஊடன் மிகுதி தோன்றுவித்தது, மகளிருமைந்தரும் வேளில் விழாச்செய்கின்றூர்; நாமும்அதுசெய்யவேண்டுமென்றுகூறியவாறுகாண்க' என்றனர்.

சு. தொல். கற். சூ. நெ. (அ) இச்சூத்திரத்தின் இவ்வுரையில் இச்சுரிதகம் காவிற் புணர்ந்திருந்தாட னீயுங் கருதெனத் தலைவன் தலைவிக்குக் கூறியதற்கு மேற்கோள். (ஆ) தொல். புறத். சூ. கூஉ. இவ்வுரையில், "இதனுள் ஆறுகுறினூர்; 'புனவளர் புன்கொடி' என்னு மருதக் கலியு மது" என்று காணப்படும் பகுதி இங்கே ஆராய்தற்பாலது.

(பிரதிபேதம்), * செல்வர்தம்மின். † உறலருங்குடைமையின், உறலருங்குரைமையின், ‡ மிகுத் தோன், || ஊடநீர்த்தான், ÷ அதுவேண்டுமென்ற வாற்றுற்காண்க, + கூறி னுன் இது முச்சீரடுக்கியும்.

பண்டின்னே யல்லேமன் னீங்கெல்லி வந்தீயக்
கண்ட தெவன்மற் றுரை;

நி நன்றும், நடைஇய மென்றேளாய் கேட்டீவா யாயி
னுடனுறை வாழ்க்கைக் குதவி யுறையும்
கடவுளர் கட்டங்கி னேன்;

அ சோலை, மலர்வேய்ந்த மான்பிணை யன்னார் பலர்நீ
கடவுண்மை கொண்டொழுகு வார்;

கo அவருள், எக்கடவுண் மற்றக் கடவுளைச் செப்பீமன்

முத்தேர் முறுவலாய் நாமணம் புக்கக்கா
லிப்போழ்து போழ்தென் றதுவாய்ப்பக் கூறிய
வக்கடவுண் மற்றக் கடவு ளதுவொக்கும்
நாவு ளழுந்து தலைசாய்த்து நீகூறு
மாயமோ கைப்படுக்கப் பட்டாய்நீ கண்டாரை
வியாக யாங்கூற வேட்டீவாய் கேளினி;

கள பெறனசை வேட்கையி னின்குறி வாய்ப்பப்
பறிமுறை நேர்ந்த நகாராகக் கண்டார்க்
கிறுமுறை செய்யு முருவொடு துஞ்மிற்
செறிமுறை வந்த கடவுளைக் கண்டாயோ;

உக நறுந்தண் டகரமு நானமு நாறு
நெறிந்த குழற்கூந்த னளணிக் கொப்ப
நோக்கிற் பிணிகொள்ளுங் கண்ணெடு மேனணீ
பூப்பலி விட்ட கடவுளைக் கண்டாயோ;

உடு சரணிக் கேற்ற வொடியாப் படிவத்துச்
சூர்கொன்ற செவ்வேலாற் பாடிப் பலநாளு
மாராக் கணிகாமங் குன்றத்து நின்னெடு
மாரி யிறுத்த கடவுளைக் கண்டாயோ;

உசு கண்ட கடவுளர் தம்முளு நின்னை
வெறிகொள் வியன்மார்பு வேறுகச் செய்து
குறிகொளச் செய்தார்யார் செப்புமற் றியாருஞ்
சிறுவரைத் தங்கின் வெகுள்வர் செறுதக்காய்
தேறிநோன் சென்றீநீ செல்லா விடுவாயே
னன்று ரகலத்துக் கோர்சார மேறிய

கெட்டிருங் கூந்தற் கடவுள ரெல்லார்க்கு
முட்டுப்பா டாகலு முண்டு.

இது "காவற் பாங்கி ஞங்கோர் பக்கமும்" (க) என்புழி, ஆங்கோர் பக்கமான (உ) கடவுளரைக்கண்டு தங்கினேனென்ற தலைவற்கு நீ கண்ட கடவுளர் இவரெனக் கூறிப் புலந்தது.

இதன் பொருள்.

(ரு)வண்டீது சாந்தம் வடிக்கொள நீவிய
(சு)தண்டாத்தீஞ் சாயற் பரத்தை யியன்மார்ப
பண்டின்னே யல்லேமன் னீங்கெல்லி வந்தீயக்
கண்ட தெவன்மற் றுரை.

எ-து: அமையாத இனிய மென்மையினையும் *பரத்தைமைக் குணத்தையு முடைய, வண்டுகள் ஊதுஞ்சந்தனத்தைக் கை வடிக்கொளப் பூசின அகற்சியையுடைய மார்பனே! முன்பு இத்தன்மையையுடையையல்லே; (ரு) அத்தன்மை போயிற்று; இவ்விடத்து இராக்காலத்தேவர நீ புறத்துப்போய்க் கண்ட வீழைதம் எத்தன்மைத்து? பின்னே அதனைக் கூறென்றாள். எ - று.

(ரு நன்றும், (சு)தடையிய மென்றோளாய் கேட்டீவா யாயி
(எ)னுடனுறை †வாழ்க்கைக் குதவி யுறையுங்
கடவுளர் கட்டங்கி னேன்

க. தோல். அகத். சூ. சக.

உ. கடவுளர்மாட்டுப் பிரிந்து வந்த தலைமகனைத் தலைவி புணர்ச்சி மறுத்தற்கு இச்செய்யுளை மேற்கோள் காட்டி, இது புணர்ச்சிக்கு உடன்படாது கூறியதென்றும், கலித்தொகையில், கடவுட் பரட்டினுள் உறிப்பொருண்மைபற்றிவரும்பாட்டு மருதநிலத்துத் தலைமகன்பெயர் கூறுது பிறபெயர்படக் கோத்தமையானும் ஊடற்பொருண்மையின் வேறுபாடின்மை அறிகவென்றும் கூறுவர் இளம்பூரணரும்; தோல். அகத். சூ. சக. 'ஒன்றுத்தமரினும்'

ரு. 'வண்டீதுதல்' நீலக. கஎ○○; நள. சுயம்: கூக; காஞ்சி. சித்திரப். க.

சு. "தண்டாத்தீஞ் சாய னெடுந்தகாய்" கலி. கூட: கச.

ஞ. "கழிவே.....என்ப மன்னைச் சொல்லே" தோல். இடை. சூ. ச.

சு. (அ) "அம்பணைத் தடையிய மென்றோள்" நெடுநல். கசக. (ஆ) "தடையிதழ் திரண்டநின் றோள்" அகம். உகஅ: அ: என்பவையும் (இ) "தடையின திரண்டதோள்" (கலி. சஞ: கடு.) என்பதும் அதன் குறிப்பும் ஒப்புநோக்கற்பாலன.

எ. ["உடனுறை வாழ்க்கைக்கு கோற்றுடம் படுவர்" மணி. உ: சஎ.

(பிரதிபேதம்) * பரத்தமை, † வாட்கை.

எ-து: அதுகேட்ட தலைவன், (க)பெரிதும் பெருத்த மெல்லிய தோளினை யுடையாய்! யான் கூறுகின்றதனைக் (உ)*கேட்பாயாயிற்கேள்; யாம் இருவரும் போய் உடனே†துறவுகத்திருக்கும்வாழ்க்கைக்குத்தவியாயிருக்குங்கடவுளைக் கண்டு அலரிடத்தே தங்கினேனென்றான். எ - று.

இல்லறம் நிகழ்த்தி வானப்பிரத்தம் நிகழ்த்துங்கால் உடனுறைதலின் உடனுறைவாழ்க்கையென்றான். தூல்களான் உணர்த்துதலே உத்தியென்றான். அது,"காமஞ்சான்ற" என்னும்(கூ)சூத்திரத்தில், "நிறந்தபயிற்றா‡லிறந்தன் பயனே" என்பதனு ணுணர்க.

அ சோலை, மலர்வேய்ந்த மான்பிணை யன்னர் பலர்தீ
(ஈ)கடவுண்மை கொண்டொழுகு வார்
க0 அவருள், எக்கடவுண் மற்றைக் கடவுளைச் செப்பி மன்

எ - து: அதுகேட்ட தலைவி, கடவுட்டன்மை உண்மையாகக் கொண்டு நடத்துவார், சோலையில் மலரைச் சூடின மான்பிணைபோலும் கோக்கினை யுடைய ||பாத்தையர் பலருளர்; அப்பாத்தையருள் நீ கூறிவந்தகடவுள் எந்தக் கடவுள்? அக்கடவுளைச் சொல்லுவாயென்றாள். எ - று.

மற்று, வினைமாற்று.

(ஈ)முத்தேர் முறுவலாய் நா(சூ)மணம் ÷ புக்கக்கா
+ லிப்போழ்து போழ்தென் றறுவாய்ப்பக் கூறிய
× வெக்கடவுண் மற்றைக் =கடவுள்

க. "தன்று பெரிதாகும்" "தடவும்... ...பெருமை" தொல். உரி. சூ0, உ உ.

உ. இப்பொருளுக்கு மூலமாகிய "கேட்டீரோயாயின்" என்பது வினை யெச்ச வினைத்திரிசொல்லுக்கு மேற்கோள்; தொல். எச்ச. சூ. சூகஉக.

கூ. தொல். கற்பி. சூ. நிக.

ச. கலி. கூஅ: கஉ-ஆம் அடிக்குரிப்பிலுளதாகும். அம்பிகாபதிகோவை. நிகo-ஆம் செய்யுள் இங்கும் அறிதற்பாலது.

ஞ. (அ)"தொன்முதுகடவுள்" என்புழி, இருடியைக் கடவுளென்று கூறிய தற்கு, "முத்தேர்.....மற்றைக் கடவுள்" என்னும் பகுதியை மேற் கோள்காட்டினார் நச்; மது. சo - சஉ. உரை. (ஆ) "முத்தேர் முறுவ லாய்" கலி. சுச: உக; கூஎ: சு. இந்நூற்பக்கம் நகo: உ - ஆம் குறிப்புப் பார்க்க.

ஃ. (அ)"நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனே முந்நூறீ இ..... வந்தனன்" (கலி.நக:சஉ-நிo) என்பதிற் அதன்உரையும்,(ஆ)"பல்லா

(பிரதிபேதம்) *கேட்பையாயின்யாம். † துறக்கத்து. ‡ இறந்தது, || பாத்தையர் அவருள்ளீ, ÷ புக்ககால், + இப்பொழுது பொழுதென், × எக்கடவன், = கடவுளது வொக்கும். நாவு.....கேளினி. எ - து. பின்னே.....உளவாகலின். அதுகேட்ட.....கூறினன், உள்ளேயழுத்து.

எ - து: பின்னை அந்தக் கடவுள், முத்தையொக்கும் முறுவலையுடையாய்! நாம் மணத்தைச் செய்ய இப் பொழுது *மூருத்த மென்று (க) அம் முருத்தம் வாய்ப்பச்சொன்ன அந்தக் கடவுள் காணென்றான். எ - று.

புக்கக்கால், காலீற்று வினையெச்சம். மூற்கூறிய கடவுடன்னையே இவள் அறியுமாற்றான் மீட்டுங்கூறினான்; அவற்கு எல்லாக் கண்களும் உளவாகலின்.

அதுவொக்கும்

எ - து: அதுகேட்ட தலைவி, நீ கூறியது எனக்கும் ஒக்குமெனத் தன தொவ்வாமை கூறினாள். எ - று.

நாவு ளழுந்து தலைசாய்த்து நீகூறு
மாயமோ தைப்படுக்கப் பட்டாய்நீ கண்டாரை
வாயாக யாங்கூற†வேட்டுவாய் கேளினி

எ - து: ‡உள்ளே அழுந்துநாவுடனே தலையைச்சாய்த்து நீகூறுங்கூற்றே பொய்; ஆகையினாலே நீ எம்மால் அகப்படுக்கப்பட்டாய்; நீ கண்ட கடவுளரை உண்மையாக யாங்கள் சொல்லக் கேட்க வீரும்பியவனே! இனி யாங்கள் கூறக்கேளென்றாள். எ - று.

கள பெற(உ)னைசை வேட்டையி னின்குறி வாய்ப்பப்
(ங)பறிமுறை நேர்ந்த (ச)||நகாராகக் கண்டார்க்

றறியப் பறையறைந்து நாட்கேட்டுக், கல்யாணஞ் செய்து கடிபுக்க - மெல்லியற், காதன் மனையாளும்" நாலடி. அசு. (இ) "காள் கூட்ட மூர்த்த மவற்றொடு நன்றாய, கோள் கூட்டம் யோகங் குண னுணர்ந்து - தோள் கூட்ட, லுற்றானு மல்லானு மைத்து மூணர் வானற், பெற்றானுட் கொள்க பெரிது" சீறுபாஞ்ச. சசு. (ஈ) "கணி மொழிந்த நாளிற் கடிமணமுஞ் செய்தார்" நள. சுயம்வர. கசுஞ். என்பவைகளும் இங்கே அறிதற்பாலன.

க. (அ) "புள்வாய்ப்புச் சொன்ன கணி" சீலப். கஉ: 'முருந்தேர்' (ஆ) "புள்வாய்ப்பச் சொன்ன புலவர்க்கும்" பு - வெ. வெட்சி. கச.

உ. (அ) "நின்னசை வேட்கையின்" புறம். ங: உச; (ஆ)"நீர்நசை வேட்கையின்" மணி. உங: ககஉ.

ங. (அ) "செறிநிரை வெண்பலும் பறிமுறை நிரம்பின" தஞ்சை. ஙஙஎ. (ஆ) "பல்லின், பறிமுறை பாராட்டினையோ" கலி. உஉ: கo - கக.

ச. நகாரென்பது எயிற்றின் பெயராதலை, "மடவோர், நகாஅ ரன்ன நளிநீர் முத்தம்" (சீறுபாண். நிசு - நிஎ) என்பதனாலும் அதன் உரையாலும் அறிக.

(பிரதிபேதம்) * முகூர்த்தமென்று வாய்ப்ப. † கேட்டீவாய் கேளினி, ‡ உள்ளேபழுத்து, உயைபழுந்து. || நகாரக்கண்டார்க்கு, கையாரக்கண்டார்க்கு.

இறுமுறை செய்யு முருவொடு நும்மிற்
செறிமுறை வந்த கடவுளைக் கண்டாயோ

எ - து: நின்னைப் பெறுதலே நச்சின ஆசையாலே நீசெய்த குறியிடத்தே தப்பாமல் வந்த கடவுள்; கண்டவர்களுக்குஇறந்துபடும்நிலைமையைச் செய்யும் வடிவோடே (க)விழுந்தெழுந்த முறைமை சேர்ந்த எயிற்றினையுடையராய் நும்மனையிடத்தே சேரும் முறைமையோடே வந்த கடவுளரை நீ கண்டாயோ வென்றாள். எ - று.

* நகார், ஆகுபெயர்.

(உ)பொருளதனைப் பெறுதல்நச்சின ஆசையாலே நின்மனத்திற் கருகிய கருத்துக்களெல்லாம் வாய்ப்பப் பறித்துபோம் முறைமையைச் சேர்ந்த † கடவுள்; மனவேட்கையை அடக்கும் ‡முறைமையை இகழாராய்த் தம்மைக் கண்டவர்களுக்குத் தீவினை இறும் முறைமையைக் கொடுக்கும் வடிவுடனே நும் இல்லிடத்தே வந்த கடவுளரைக் கண்டாயோ || வென வேறுமொரு பொருள் தோன்றியவாறு ÷காண்க.

வாய்ப்பப் பறிமுறையென்றார், வேரோடே பறிதலின். செறிதல்-அடக்கம்; +நகை, எள்ளல்.

உக நறுந்தண் டகரமு நானமு நாறு
நெறிந்த குரற்கூந்த னளணிக் கொப்ப
நோக்கிற் பிணிகொள்ளுங் கண்ணெடு மேனணீ
(ங)× பூப்பலி விட்ட கடவுளைக் கண்டாயோ

க. "கூரெயிற்று முகை வெண்பல்" (கலி. நிஅ: ச) என்பதும் அதன் உரையும் அவ்வுரையின் குறிப்பும் இங்கே அறிதற்பாலன.

உ. பேரருளதனை யென்றும் படிக்கலாம்.

ங. (அ) "பூப்பலி செய்மின்" (ஆ) "ஒண்டொடித் தடக்கையி னெண் மலர்ப் பலிதூஉய்" (இ) "பூப்பலி செய்து" (ஈ) "வெண் மருப் பிரட்டைய வேழ மீமிசைக், கண்மருட் டுறுப்பன கமலப் பூப்பலி, விண்மருட் டுறுப்பன வேந்தி வேதியர், மண்மருட் டோப்பதோர் வகை யின் மன்னினர்" (உ) "பேரொளிப் பீதக வுடையர் பைம்பொனு, வாரொளிதழுவியவலர்செய்பூப்பலி, போரொளியானமே னிரைத்துப் போந்தனர்" (ஊ) "நிரந்தன பூப்பலி" (எ) "நிரந்து தேனிமிர் பூப் பலி" (ஏ) "சங்கொடு சிலம்பு நூலும் பாதசா லகமூன் தாழப், பொங்கு

பிரதிபேதம்) *நகாரு பொருளதினை, (நகை ஆகுபெயர்நகரென்றும் பாடமென்பது மூன் பதிப்பு.) † கடவுள், வாய்ப்பப்பறியவென்றார் வேரோடே பறிதலின், மனவேட்கை ‡முறையை, || என்று, ÷. காண்க செறிதல். + நகை என்னல். × பூப்பலியிட்ட.

எ - து: பார்வையாலே பிணித்தலேக் கொள்ளுங் கண் வருத்துத லாலே நறிய [தென]குளிர்ந்த * மயிர்ச் சாந்தமும் புழுகும் காறும் அறல்பட்ட (க) பற்றத்தையுடைத்தாகிய மயிர்க்கு நாட்காலத்து அணியும் அணிக்குப் பொருந்த நீழுதலுட் பூவைப்†பலியாகப்போகவிட்ட கடவுளரைக் கண்டாயோ வென்றுரை. எ - று.

ஒடி, ஆலாக்குக. மேல், கடவுளென்றதற்கேற்பப் பலியென்றார். அரு ணேக்கினற் பிணியை வாங்கிக்கொள்ளுங் ‡ கண்ணினராகையாலே கூந்தலே யுடையாள் நாட்காலத்து அணிதற்கேற்பப் பூப்பலியைக் கைவிட்டு அர்ச்சித்த கடவுளென்பதும் ஒன்று. கூந்தல், ஆகுபெயர். ‖ பராசத்தியைப் பூவால் அர்ச்சித்த கடவுளென்றுணர்க. நீ கண்டாயோவென்க.

உரு (உ)ஈரணிக் கேற்ற வொடியாப் படிவத்துச்
சூர்கொன்ற செவ்வேலாற் பாடிப் பலநாளு
மாராக் கணைகாமங் குன்றத்து நின்னெடு
மாரி பிறுத்த கடவுளைக் கண்டாயோ

எ - து: கெடாத வீரத்தாலே முகங் குதிரைமுகமும் உடல் மக்க ளுடலுமாகிய இரண்டு அழகுக்குப் பொருந்திய சூரபன்மாவைக் கொன்ற சிவந்த வேலேயுடைய முருகனேப் புகழ்ந்து நிறையாத செறிந்த காம வேட்கை யாலே திருப்பரங்குன்றினிடத்தே நின்னெடே மாரிக்காலத்தே பலநாளுந் தங்கின கடவுளரைக் கண்டாயோ வென்றுரை. எ - று.

இனி, பெண்ணும் ஆணும் ஆகிய இரண்டு× அழகினுக்கும் பொருந்திய செவ்விதாகிய (ங)+ எழுச்சியையுடைய இறைவனே அமையாத செறிந்த வீடு பேற்றில் ஆசையாலே பலநாளும் புகழ்ந்து கொடுந்தொழில்களைக் கொன்ற

பன் முரச மார்ப்ப வில்லுறை தெய்வம் பேணிக், கொங்கலர் கூந்தற் செவ்வா யரம்பையர் பாணி.கொட்டி, மங்கள கீதம் பாட மலர்ப்பலி வுகுக்கின்றுரை" என்று பூப்பலி பலநூல்களிலும் கூறப்படுதல்காண்க.

க. பற்றம் - கொத்து; கற்றையென்றும் கூறப்படும்.

உ. (அ) "இருபே ருருவி னெருபே ரியாக்கை.....மாமுத றழுந்த மறு வில்கொற்றத், தெய்யா நல்லிசைசெவ்வேற் சேஎய்" முருகு. நிஎ-கூக. (ஆ) "ஈருருவத் தொருபெருஞ்சூர் மருங்கறுத்த விகல்வெய்யோய்" தொல். செய்.சூ. கஙிஉ. பேர். நச். மேற்கோள்; 'செஞ்சுடர்'

ஙூ. எல் என்பது ஏர் என்பதுபோலவே எழுச்சி யென்னும் பொருளில் வருதலே(அ)'எல்பெற்று' (கீவக. ஙஉஉ.) என்றதற்கு, இவர் 'எல்-மன வெழுச்சி' என்று சொற்பொருள் குறித்து உணர்ச்சிபெற்று, என்று கருத்துரைஎழுதியிருப்பதும் (ஆ)"எதிர்மலர்க்குவளையிடிதீர்சொரிந்து,

(பிரதிபேதம்) * மயிர்ச்சந்தனமும், † பலியாகவிட்ட, ‡ கண்ணிடையர ராகையாலே, ‖ பாசத்தியைப், × அழகுக்குப்பொருளை. + எழுச்சியுடைய.

கெடாத வீரத்தோடே மலைகளிலே மாரிக்காலத்திலேநின்னெடுறவுகொண் டிருந்த தலஞ்செய்த கடவுளரைக்கண்டாயோவென்பதும் ஒன்றுதோன்றிற்று. சத்தியுஞ் சிவனும் ஒன்றுபோலிய வடிவைப் பாடி என்க. நின்னெடென்ற ஒடு விற்கு உறவு கொண்டிருந்தவென ஒரு வினை வருவிக்க.

உகூ கண்ட கடவுளர் தம்முளு நின்னை
வெறிகொள் வியன்மார்பு வேறுகச் செய்து
குறிகொளச் செய்தார்யார் செப்படமற் றியாருஞ்
(க்)சிறுவரைத் தங்கின் வெகுள்வர் *செறுதக்காய்
தேறினேன் சென்றீநீ†செல்லா விடுவாயே
(உ)னற்ரு ரகலத்துக்‡கோர்சார மேவிய
நெட்டிருங் கூந்தற் கடவுள ரெல்லார்க்கு
முட்டுப்பா டாகலு முண்டு.

எ - து: நீ கண்ட கடவுளர் தங்களுள்ளும் நின் மணத்தைத் தன்னிடத்தே கொண்ட அகலத்தையுடைய மார்பைப் பழையதன்மை குலைந்து பேரும்படி பண்ணிப் பிறர்முயங்காதபடி அடையாளமாக வடுப்பண்ணுவித்தலைச் செய்தார் யார் சொல்லு; ||பின்னை அப்பரத்தையர் யாவரும் சிறிதாகியகாலத் தளவு இக்கேதங்குவையாயின் ÷கோபிப்பார்; ஆகையினுலேயெம்மாற்செறக்கத் தக்கவனே! நின் +பொய்மையெல்லாம் உள்ளபடி யான் அறிந்துதெளிர்தேன்; இனி அவர்பாற் செல்லாதொழிவையாயின், நினது நல்ல தாரையுடைய மார்பத்துக்கு ஒரு முட்டுப்பாடு உண்டாமது; நீ சாரும்படி நின்னை முயங்கிய நெடிய ×தரியகூந்தலையுடைய பரத்தையரெல்லார்க்கும் முட்டுப்பாடு உண்டாதலும் உண்டு; ஆதலால் அண்டே செல்லெனப் புலந்து கூறினுள். எ - று.

தம்முளுமென்ற உம்மை, சிறப்பும்மை.

இனி, கடவுளர்தம்முளும் வியன்மார்பையுடைய நின்னை மனம் வேறுகப் பண்ணி வானப்பிரத்தத்தைக் குறித்தல் கொள்ளுமும்படி பண்ணின இருடிகள்

சீதச் சந்தனந் தாதோ டப்ப, வேஎல் பெற்றெழுந் திருந்தன னுரைக் கென" (பெருங். (உ)கூ: கஞ்சு-கஞ்சு) எனவருவதும் வலியுறுத்தும்.

க. சிறுவரை - சிறுதாழிசை. அகம். கூ: அ. பு-வே. பெருந். கஎ. இது, சிறுதாழிசைத்திரமான இடமென்னும்பொருளிலும்வரும்ஐங்.ஙூ அ.அ.

உ. "இல்லது காய்தலென்பது, களவின்கட் போலாது தலைமகற்கு இல்லாதனை உண்டாக்கிக் கொண்டு காய்தல்; அது: 'நற்ரூரகலத்து... ....முண்டு' எனவரும்; இது கடவுளரையே கண்டு தங்கிளுளையி

(பிரதிபேதம்) * செறுத்தக்காய். +செல்லாய் விடு, ‡ கொருசாமேவிய.||பின்னையாவரும். ÷அப்பரத்தையர் கோபிப்பார். +பொய்மெய்யெல்லாம், × கருங்கூந்தலையுடையசெல்லார்க்கும்,

பார்தான் சொல்லு; யாவரும் வெகுள்வர்; அவர்பாற் செல்லாதொழிவாயேல், நல்ல ஒழுங்கினையுடைத்தாகிய கடாவின்புறத்தே தோன்றும் விடைகளையுடைய, (க)நீரைப் பலகாலுஞ் சாருதலாலே ஈரம்பொருந்திய நெடிய கரிய சடையினையுடைய இருடிகளெல்லார்க்கும் மூட்டுப்பாடு பிறத்தலும் உண்டென்பதும் ஒன்று தோன்றநின்றது. அவர்க்கு மூட்டுப்பாடு நினைக்குக் கூடும் பொருள்களைக்கூடாமையாலுள்ளமுட்டுப்பாடு. தார்-ஒழுங்கு(உ)அகலமென்றது, பரசமயத்தார் கூறுங் கடாவிற்கு விடையாகக் கூறும் †விகற்பங்களே. "தன்னூன் மருங்கினும் பிறனூன் மருங்கினுந், தன்னிய கடாவின் புறந்தோன்றும் விதற்பும், பன்னிய வகல மென்மனூர் புலவர்" "தெள்ளிது" (ங) என்றதனால், நின்னே மார்பை வேறுகச் செய்தென்[றூர்](றலுமாம்).

இதனால், தலைவிக்கு இழிவும் தலைவற்கு அசைவும் பிறந்தது.

"மரபுநிலைதிரியா‡மாட்சியை"என்னும்(சு)சூத்திரத்தில், தலைவிகடவுளைப் பரத்தையராகக் கூறுமென்பது கூறினும்.

இஃது ஐஞ்சீரடிக்கி வெண்பாவாய்வந்து இடைநிலைப்பாட்டுப் பெற்று வருதலிற் கலிவெண்பாவுறுப்பொத்துப் பாவேறுபட்டு வந்த கொச்சகம். (உசு)

(கூஇ.) என்னேற் றறிகொல்லோ
நீரு ணிழற்போ னுடங்கிய மென்சாய
லீங்குருச் சுருங்கி
யியலுவாய் நின்னே நிசாவுவே னின்றித்தை ;

னும், நெட்டிருங் கூந்தற் கடவுளையே கண்டா யென்று இல்லது சொல்லிக்காயுமாகலின் அப்பெயர்த்தாயிற்று" என்பர். பேர்; தோல். மெய்ப். சூ. உசு இ - வி. நூலாரும் இதன் முன் வாக்கியத்தை எழுதி இம்மெய்ப்பாட்டிற்கு இதனை மேற்கோள்காட்டினர்; இ-வி.சூ. நிஅ.

க. "நீர் பலகான் மூழ்கி" (டி - வே. வாகை. கசு) "நெடுவரை யருவி யாடி.....புறந்தாழ் புரிசடை புலர்த்து வோனே" (புறம். உடுக) என்னும் தாபதவாகைத்துறைச் செய்யுட்கள் இங்கே அறிதற்பாலன.

உ. அகலமென்பது சூத்திரத்துப் பொருளைத் தூய்மைசெய்தற்குக் கடாவிடையுள்ளுறுத்து உரைக்கும் உரையென்பர் இறையனாரகப்பொருளுரைகாரரும்.

ங. தோல். வேற்றுமைமயங்கியல். சூ. நி.

ச. தோல். அகத். சூ. சஅநி; இச்சூத்திரத்தினுரையில் இவர் இச்செய்யுளை, காவற் பாங்கினுங்கோர் பக்கத்தில் தலைவன் கூறியவற்றைக், கற்பியலுள், தலைவன் பகுதியினீங்கிய தகுதிக்கண் தலைவி, பரத்தையராகக் கூறியதற்கு மேற்கோளாகக் காட்டியிருக்கிறார்.

(பிரதிபேதம்) * கூறுமலாளன. † விகற்பங்கள், ‡மாட்சிமையென்னுஞ்.

நி அன்னையோ, காண்டகையில்லாக் குறணழிப்போழ்தினு
ணண்டலைக் கீன்ற பறழ்மகனே நீயெம்மை
வேண்டுவ லென்று விலக்கினீ நின்போல்வார்
தீண்டப் பெறுபவோ மற்று ;

கூ மாண்ட, எறித்த படைபோன் முடங்கி மடங்கி
நெறித்துவிட் டன்ன நிறையேரா லெண்ணப்
பொறுக்கல்லா நோய்செய்தாய் பொறீஇ நிறுக்கல்லே
னீநல்கி னுண்டென் னுயிர் ;

கஙூ குறிப்புக்காண், வல்லுப் பலகை யெடுத்து நிறுத்தன்ன
கல்லாக் குறளை கடும்பகல் வந்தெம்மை
யில்லத்து வாவென மெய்கொளீஇ யெல்லாநின்
பெண்டிர் குளர்மன்னே கூறு ;

கள நல்லாய்கேள், உக்கத்து மேலு நடுவுயர்ந்து வாள்வாய
கொக்குரித் தன்ன கொடுமடாய் நின்னையான்
புக்ககலம் புல்லினெஞ் சூன்றும் புறம்புல்லி
னக்குளுத்துப் புல்லலு மாற்றே னருளீமோ
பக்கத்துப் புல்லச் சிறிது ;

உஉ போழ்த்தை, மக்கண் மூரியேநீ மாறினித் தொக்க
மரக்கோட்டஞ்சேர்ந்தெழுந்த பூங்கொடிபோல
நிரப்பமில் யாக்கை தழீஇயின மெம்மைப்
புரப்பேமென் பாரும் பலராற் பரத்தையென்
பக்கத்துப் புல்லீயா யென்னுமாற் றெற்க
வுழுந்தினுங் துவ்வாக் குறுவட்டா நின்னி
னிழிந்ததோ கூனின் பிறப்புக் கழிந்தாங்கே
யாம்வீழ்து மென்றுதன் பின்செலவு முற்றீயாக்
கூனிகுழை யுங்குழைவு காண் ;

ஙூக யாமை யெடுத்து நிறுத்தற்றுற் றேளிரண்டும் வீசி
யாம்வேண்டே மென்று விலக்கவு மெம்வீழுங்
காமர் நடக்கு நடைகாண் கவர்கணைச்
சாமனுந் தம்முன் செலவு காண்க ;

டுடி ஓஒகாண், நம்மு ணகுதற் றொடீஇயர் நம்முணை
முசாவுவங் கோனடிதொட் டேன் ;

நூஎ ஆங்காக, சாயலின் மார்ப வடங்கினேன் ஏள
பேயும் பேயுந் துள்ள லுறுமெனக்
கோயிலுட் கண்டார் நகாமை வேண்டுவ
றண்டாத் தகடிருவ வேறுகக் காவின்கீழ்ப்
போத ரகடாரப் புல்லி முயங்குவேந்
துகடபு காட்சி யவையத்தா ரோலை
முகடுகாப் பியாத்துளிட் டாங்கு.

இஃது ''அடியோர் பாங்கினும் * வினைவலர் பாங்கினுங், கடிவரை ?லபுறத்தேன்மனர் புலவர்''(க)என்பதனுல் அடியோராகிய கூனுந்தரளும் றழ்ந்து †கூறிக்கூடியது.

இதன் பொருள்.

என்னைற் றணைகொல்லோ
நீரு ணிழற்போ னுடங்கிய மென்‡சாய
‖லீங்குருச் சுருங்கி
யியலுவாய் நின்னை நிசாவுவே னின்றீத்தை

க. தொல். அகத். சூ. உடி. (அ) இச்சூத்திரத்தின் உரையில் 'அடித் தொழில் செய்வாரும் வினைசெய்வாரும் அகத்திணைக்குரியரல்லர்; அகத்திணையாவது: அறத்தின். வழாமலும் பொருளின் வழாமலும் இனபத்தின்வழாமலும் இயலல்வேண்டும். அவையெல்லாம் பிறர்க்குக் குற்றேவல் செய்வார்க்குச் செய்தலாகலானும் அவர் நாணுக் குறைபாடையராதலானும் குறிப்பறியாது வேட்கை வழியே சாரக் கருதுவராதலானும் இன்பம் இனிது நடத்துவார் பிறரேவல் செய்யாதாரென்பதனலும் இவர் புறப்பொருட்குரியர்' என்று கூறி, இச் செய்யுளை மேற்கோள்காட்டி, 'இதனுள் ஒருவரையொருவர் இழித்துக் கூறினமையான் அடியாரென்பதூஉம் மிக்க காமத்தின் * வேறுபட்டு (* வேட்டு என்றும் பிரதிபேதம்) வருதலாற் பெருந்திணைப்பாற் படுமென்பதூஉம் கண்டுகொள்க. இதுதானே கைக்கிளைக்கும் உதாரணமாம்' என்றார் இளம்பூரணர்; (ஆ) இழிகுலத்தார்க்கு அகப்புறக் கைக்கிளை உரித்தென்பதற்கு இதனை மேற்கோள் காட்டினார் நாற்கவிராச நம்பியென்பவர்; நாற்கவி. சூ. உசஉ.

பிரதிபேதம் * வினைவல பாங்கினும், வினைவர் பாங்கினும்; †கூடிக்கூறியது; ‡ சாயலினுஞ் சுருங்கி, ‖சுங்குச் சுருங்கி.

எ - து: கரையில் நின்றதொன்றின் நிழல் நீருக்குள்ளே *நுடங்கினைத் போல நுடங்கிய மெல்லிய மென்மையோடே இவ்விடத்து உடலிலே கூன் †புறப்பட்டு நடக்கின்றவளே! நின்னோடு ஒருகாரியத்தை உசாவுவேன்; அங்ஙனம் உசாவுதற்கு நீ என்ன நல்வினையைச் செய்தாய்‡காண்? இங்ஙனே நித்பாயாகவென்றுன் குறளன். எ - று.

இயலுவாய்.....நின்றீத்தை, வினைத்திரிசொல்.

நு அண்ணியோ, காண்டகை யில்லாக் ||குறணுழிப் போழ்தினு
(க) ணண்டலைக் கின்ற பறழ்மகனே நீயெம்மை
வேண்டுவ லென்று விலக்கினை நின்போல்வார்
தீண்டப் பெறுபவோ மற்று

எ - து: அதுகேட்ட கூனி, அம்மையோவென இகழ்ந்து தன் நெஞ்சிற் கூறி, கண்ணுற் பார்க்குந் தன்மையில்லாத குளாய்ப்பிறத்தற்கு எதுவாயிய நாழிகையின் ÷மூகூர்த்தத்தே(உ)ஆண்டலைப்புள்ளுக்குத் தன்பெடையீன்ற பறழாய மகனே! நீ எம்மை விரும்புவேனென்று போகாமற் றடுத்தாய்; நின்னைப் போற் குறளாயிருப்பார் பின்னே என்னைத்தீண்டப்பெறுவார்களோவென்றுள். எ - று.

க. தலைமகன் தலைமகளாகிய இருவரும் இளமைப் பருவம் நீங்கியவழி அறத்தின்மேல் மனம்நிகழ்த்தலன்றிக் காமத்தின்மேல் மனம்நிகழ்த்தலாகிய இளமைதீர்திறப் பகுதியில், தலைமகன் இளமைதீர்திறத்திற்கு "ஆண்டலைக்கின்ற.....மற்று" என்பதும், தலைமகள் இளமைதீர்திறத்திற்கு "உக்கத்து மேலு.....றிது" என்பதும் மேற்கோள்; தொல். அகத். சூ. நிச. இளம்.

உ. (அ) ஆண்டலையென்பது பாழ்பட்டவிடத்தே வதியும் ஒரு பறவை; இதுகோட்டில்வதிவதாகப் பெரும்பாலுங்கூறப்படுகின்றது. (ஆ) இஃது "ஊண்டலை ‹துற்றிய வாண்டலைக் குரலும்" (மணி. சு: எவ) என்பதனுலும் (இ)'"ஆண்டலை யடுப்பும்" (தில்லப். கடு: உகக) என்பதற்கு, 'ஆண்டலைப்புள் வதிவாகப்பண்ணிப் பறக்கவிட உச்சியைக் கொத்தி மூளையைக் கடிக்கும் பொறி நிரைகளும்' என்ற அடியார்க்குநல்லார் எழுதியிருக்கும்உரையாலும் தலைமூளையை உணவாகவுடையதென்றும் (ஈ) "யாமத் தீண்டிவந் தாண்டலை மாண்பிலவழைக்கும்" (நீல. தரும. கூ) என்பதனுல் நள்ளிரவில் கூட்டமாகவந்து கத்துமியற்கையுடையதென்றும் தெரிகின்றது. (உ) இஃது ஆண்மகன்றலைபோன்ற தலையையும் புள்ளின் உடல்போன்ற உடலையுமுடையது; (ஊ) இஃது, இவ்விடத்தும்நிழநுகாற்றுப்படையுரையிலும் இவரெழுதியருறிப்பாலும் (எ) "தூண்டருங் கணைபடத் தமிழ்த்த துள்ளிய, தீண்டரு நெடுந்தலை

(பிரதிபேதம்) * உடைஞனும், † பிறப்பட்டு, ‡ தான். || குறைகாழிப்போழ் ஞண்டலைக் கின்ற, ÷ மூகுத்தத்தே.

"பறழெனப் படினு முறழாண் டில்லே" (க)என்பதனால், பறழ் பறவைக்
ாகாதாயினும் இவனே, 'யாமையெடுத்த நிறுத்தற்றால்' என ஊர்வனவாகக்
டறவிற் பறழென்றார். தலே, ஆண்டலையா யிருத்தல் பற்றி ஆண்டலைக்கு
ன்ற மகனென்றான்.

கூ * மாண்ட, எறித்த படைபோன் முடங்கி மடங்கி
நெறித்துவிட் டன்ன † நிறையோரா லென்னைப்
பொறுக்கல்லா நோய்செய்தாய் ‡ பொறீஇ நிறுக்கல்லே
னீநல்கி னுண்டென் னுயிர்

எ - து: அதகேட்ட குரளன், மாட்சிமைப்பட்ட கலப்பையிற் றைக்கும்
உ)படைவாள்போலே ஓரிடங் கூனுப்ப் புறப்பட்டு ஓரிடமுன்னே வளைந்து
ுவிய முறித்து விட்டாற்போன்ற நிறைந்த அழகாலே என்னைப் பொறுக்
ல்லாத காம நோயைச் செய்தாய் ; யான் ஆற்றிநிறுக்கமாட்டேன்; நீ அருளு
ாயாயின் என்னுயிருண்டி; இனி நின்னினைவைக் ||கூறுவாயென்றான். எ-று.

பொறியும் பாடம்.

கஙு குறிப்புக்காண், (ங) வல்லுப் பலகை யெடுத்து நிறுத்தன்ன
கல்லாக் ÷குரா கடும்பகல் வந்தெம்மை

தழுவிச் சேர்ந்தன. பூண்டெழு 'கரதலம் பொறுக்க லாதன, வாண்
டலே நிகர்த்தன வெருவை யாடவ" என்னும் கம்பர்வாக்காலும் அறிய
லாகும். (எ) இச்சொல்லுக்குப் பொருள் 'யானைமுகன்' 'துடியிடை'
என்பவற்றிற்குப் பொருள் கொள்ளுதல்போலக் கொள்க. (ஐ)"நீண்ட
பலி பீடத்தி லரிந்துவைத்த நெடுங்குஞ்சிச் சிரத்தைத்தன் னினமென்
றெண்ணி, யாண்டலேப்புள் ளருகிருந்து பார்க்கு மாலோ வீணைதலு
மச் சிரமச்ச முறுத்து மாலோ" என்ற சயங்கொண்டார் கூறுதலால்,
இப்புள்ளே ஆண்மகன் றலேபோன்ற தென்று கூறுவாரும் உளர்.

க. தோல். மரபியல். சூ. எ.

உ. இதுகொழுவென் றும்காரென் றும்கூறப்படும்; குற்றியென்பருமுளர்.

ங. (அ)"வல்லென்கிளவி தொழிற்பெய ரியற்றே" "நாயும் பலகையும்
வருஉங் காலை, யாவயி னுகரங் கெடுதலு முரித்தே, யுகரங் கெடுவழி
யகர நிலையும்"1 (தோல். புள்ளி. சூ. எஅ - எக) என்புழி, கெடுதலு
மென்பதில், "உம்மை எதிர்மறை யாதலான் உகரங் கெடாதே நின்று
.....'வல்லுப் பலகை' என வருதலும் கொள்க" என்பர். நச் ;
(ஆ) "வல்லே தொழிற்பெய ரற்றிரு வழியும், பலகைநாய் வரினும்
வேற்றுமைக் கவ்வுமாம்" (நன். மெய்யீற். சூ. உஅ) என்பதனுரையில்

1 ரதிதேம்) * மாண்ட, † நிறையோரா, ‡ போறிஇறுக்கல்லே, || கூறென்றான், ÷குரவே.

யில்லத்து *வாவென மெய்கொளீஇ யெல்லாநின்
பெண்டி †ருளர்மன்னே கூறு

எ - து: அதுகேட்ட கூனி, இவன் மனக்குறிப்பைப் பாராயென நெஞ் சொகூறி, (க)நெத்தப்பல கையை எடுத்து நிறுத்தினும்போன்ற, மகளிரைக் கூடும் முறையைக் கல்லாத குறளனே! (உ)மக்கள் இயங்காத உசியம்பொழு தினே வந்து எம்மைக் கையப்பிடித்து நின்னில்லத்தே வாவென்று சொல்லு தற்கு எடா! மிகவும் நின்னுடைய பெண்டிராயிருப்பார் சிலருளரோ? சொல்லாயென்றாள். எ - று.

கஎ நல்லாய்கேள், உக்கத்து மேலு நடுவுயர்ந்து வாள்வாய
‡கொக்குரித் தன்ன கொடுமடாய் நின்னையான்
புக்ககலம் ‖புல்லினெஞ் சூன்றம் புறம்புல்லி
னக்குளுத்துப் புல்லலு மாற்றே னருளிமோ
பக்கத்துப் ÷புல்லச் சிறிது

எ - து: அதுகேட்ட குறளன், ×நல்லாளே! தலைக்குமேலும் நடுவில்லை யாய் வாள்போன்ற வாயையுடைய கொக்கை உரித்தாற்போன்ற வளைந்த +மடிப்பையுடையாய்! யான் கூறுகின்றதனைக் கேள்; நின்னை யான் மார்

'அவ்வுமென்ற உம்மையான், உகரப்பேறே வலியுடைத்தென்க' என்று மயிலைநாதரும் அவ்வுமென்பது இறந்தது தழுவிய வெச்ச வும்மைஎன்றுவிருத்தியுரையாசிரியரும் இராமாநுசகவிராயரும் கூறி, வல்லென்பது பலகை யென்பதனைநோ புணர்வுழி வேற்றுமையில் உகரச்சாரியை பெற்று வந்ததற்கு, 'வல்லுப் பலகை' என்பதை மேற் கோள் காட்டினார். இதற்கு வல்லினது அறைவரைந்த பலகை என்று பொருள் கூறுவர்.

க. நெத்தப்பலகையென்பது வல்லினது அறைகீறிய பலகையென்னும் பொருளிலே கன்னடத்தில் இருவகை வழக்கிலும் பண்டும் இன்றும் சிறிது திரிந்துவழங்குகின்றதென்பர்.

உ. கடியென்பது விளக்கமென்னும் பொருளில் வருதற்கு கடும்பகலென் பது, தொல். உரி. சூ. அடை: சே; அடி. நச். மேற்கோளாகக் காட்டப் பட்டிருக்கிறது; ஆயினும் இவ்விடத்துக்கு அதனினும் வரைவென்னும் பொருள் சிறந்ததென்றுகொண்டு இவ்வாறு கூறினார்போலும். 'இவ் வுரிச்சொல் பெரும்பாலும் திரிந்து நிற்கும்' என நச்சினார்க்கினியர் எழுதியிருத்தலும் இங்கே அறிதற்பாலது.

(பிரதிபேதம்) * வாவென்மெக்கொழியவெல்லா, † உளமன்னே, ‡ கொக்கரித்தன்ன, ‖ புல்லினென்னெஞ்ச, ÷ புல்லல் சிறிது, × நல்லோனே, + மடிப்பை யுடையாய்.

பிடத்தே சென்று புல்லுவேனுயின் என்னுடைய நெஞ்சிலே அக்கூன் ஊன்றும்; முதலிலேபுல்லுவேனுயின்முதலிற் *கூன்(க)அக்குளுக்காட்டுதலே டைத்து; ஆதலால், கூடுதலேயன்றி முயங்குதலேயுஞ் செய்யமாட்டேன்; இனிப் பக்கத்தே சிறிது முயங்கும்படியாக வருவாயாகவென்றன். எ - று.

நடுவுயர்ந்தென்றது "நோன் †புயர்ந்தது" என்றாற்போல நின்றது.

உஉ (உ) ‡போ(ங)சித்தை

எ - து: அதுகேட்ட கூனி, சீ! கெட்டதன்மையையுடையவனே! நீ எம்மிடத்தினின்றும் போவென்றாள். எ - று.

மக்கண் (ஓ)ழியேநீ மாறினிற் தொக்க
மரக்கோட்டஞ் சேர்ந்தெழுந்த பூங்கொடி போல
நிரப்பமில் யாக்கை ‖தழீஇயின மெம்மைப்
புரப்பேமென் பாரும் பலராற் பரத்தையென்
பக்கத்துப் புல்லீயா யென்னுமாற் றெறுக்க

க. அக்குளுக்காட்டுதல் - கக்கமுதலிய உறுப்பில் தீண்டிக் கூச்சமுண்டாக்குதல்; இஃது, அக்குளுப்பாய்ச்சுதலெனவும் வழங்கும்; இப்பொருளில் இக்காலத்து, கிச்சுக்கிச்சுமூட்டுதலென்னும்சொல், பெருவழக்காக உள்ளது.

உ. உயர்திணை அஃறிணையாய்ச் செறலின்கட் டிணைமயங்கிவெக்ததற்கு, 'பொய்ச் சித்தை வந்தது; போயிற்று' என இ - வி. சூ. உகக - இல், ஒருமேற்கோள் காணப்படுகின்றது; செய்யுளின்பத்துக்கும் அதுவே சிறந்ததாக வுள்ளது; அவ்வாறு பிரதிபேதமுமுள்ளது; அந்தப் பிரதியிலுள்ளவுரையும் போசித்தை யென்னுமூலத்திற்கேபொருத்துகின்றது.

ங. (அ) சித்தையென்பதற்கு, இங்குப்போலவே கலி. அச: கஅ-இல் கைவிடப்படுமவனென்றும் கலி. அசு: ஙo - இல் கைவிடப்பட்டவனென்றும் ஆண்பாலாகப் பொருள் கூறப்பட்டிருக்கிறது; (ஆ) "குரவன் மேலவ னுயினுங் குணமிழி சித்தை, வீரவு சேடனுய் விடினவன் கெடுவது மெய்யே" எனப் பிற்காலத்துளிலும் ஆண்பாற் பெயராகவுந்துள்ளது; கலி. கசு: உக-இல் இச்சொல்லுக்கு, 'சி கெட்டது' என்று பொருள் கூறப்படுகிறது; இது செறற்சொலென்பது இதற்கு மூன்றின குறிப்பால் விளங்கும்.

ச. பிரிதலென்பது பிறிதலென்று வருவதுபோல, மூரிதலென்பது மூறிதலென்றும் வரும்; இதற்கு முதனிலையாகிய மூறியென்பது பாதியென்னும் பொருளில் வருதலே, "இந்த மூறி" என்னும் நவீனவழக்காலும் அறிக.

(பிரதிபேதம்) * கூனதுக்குளுக்காட்டுதலே. † உயர்ந்தென்றுபோலே, ‡ பொய்ச்சித்தை, ‖ தழீஇயெம்மைப்புரப்பென்பாரும்.

(க)வுழுந்தினுந் தூவ்வாக் குறுவட்டா நின்னி
னிழிந்ததோ கூனின் பிறப்பு

எ - து: அது*கேட்டு அவன் அணுகுதலின், மக்களிற் பாதியானவனே! இனி மீ இந்நிலையைக் கைவிடென்று கூறி, பின்னர்த் திரண்ட மரத்தின் வீளேவான இடத்தை வீட்டு நீங்காமற் பற்றிவளர்ந்த பூங்கொடிபோலே எம் முடைய கூலல் வழிவொத்தலில்லாத யாக்கையை முயங்கி எம்மைப் பாது காப்பேமென்று கூறுவாரும் பலராயிருக்கும்; (உ) இப்பரத்தமையையுடைய வன்† பக்கத்துப் புல்லுதலைத் தாராயென்று கூறுகிற்குமால்; இங்ஙனங் கூற நமக்கு உண்டாகிய குறை யாதுதா னென அவன் கேட்பத் தன்னெஞ் சொகூறி, குறிய வட்டின்றன்மையையுடையாய்! பலவுங்கூடின உழுத்தம் பணியாரத்தினுங் காட்டில் (கூ) தூய்க்கப்பட்டிருக்கின்ற கூன்சாதியினுடைய பிறப்பு ‡ நின்னிற் ரூழ்த்ததோவென்ரூள். எ - று.

கழிந்தாங்கே
யாம்வீழ்து மென்றூ‖தன் பின்செலவு மூற்றீயாக்
கூனிகுழை யுங்குழைவு காண்

எ - து: அதுகேட்ட குறளன், யாம் நின்னை விரும்புவேமென்று கூறித் தன்பின்னே செல்லுதல் செய்தேயும் அதற்கு மனம்பொருந்தாத கூனி நம் அருகுகின்றும் அவ்விடத்தே போய் நுடங்கும் நுடக்கத்தை நெஞ்சே பாரா யென அவள் கேட்பக் கூறினன். எ - று.

உற்றீயா, பெயரெச்சமறைத்திரிசொல்.

கூக யாமை யெடுத்து நிறுத்தற்றூற் ரூளிரண்டிம் மீசி
யாம்வேண்டே மென்று விலக்கவு மெய்ம்மூங்
+காமர் நடக்கு நடைகாண்(ஐ) தவர்கணைச்
சாமஞர் தம்முன் செலவு ×காண்க

க. "உழுந்தினும்.....பிறப்பு" என்பது ஒப்பின் வகை பத்தலுள், பிறப்புவகையின் பாற்படுமென்பர் பேர்; தொல். மெய்ப். சூ. உடு.

உ. பரத்தை யென்பது பேதை யென்பதுபோல உயர்திணை யொருமை யிறண்டிலும் வரும்போலும். கிடைத்த பிரதிகளிலெல்லாம் 'பரத்தை யென்' என்றே உள்ளது.

கூ. 'தூயக்கப்பட்டிருக்கின்ற' என்றும் படிக்கலாம்; 'இருக்கின்ற' என்பது வருவித்தது போலும்.

ரு. (அ)"கடுந்தொடைக் கவர்கணைக்காமன்" சீவக. கடகஅ. (ஆ)"கவர்கணை நோன்சிலைக் காமனிவனென, மையலுள்ளமொடு" பெருங். (உ) கடு:

(பிரதிபேதம்) *கேட்டதனைவனது குகலின், † பக்கத்தைப் புல்லுதலை, ‡ நின்னும். ‖ தம்மின் செலவு. + காமிடக்கு நடைகண்டு வார்னை. × காண் என்பது.

எ-து: அதுகேட்ட கூனி, ஊருகின்ற(க)யாமையை எடுத்து* நேரேநீறுத் தினற்போல நெடியனுய்த் (உ)தோளிரண்டையும் விலாவுக்குள்ளே வீசி, யாம் நின்னை விரும்பேமென்று விலக்காநிற்கவும் எம்மை விரும்பி வருகின்ற காம னூர் நடக்கும் நடையை நெஞ்சே காணுயென்றுள் ; அதுகேட்ட குறளன் ஒருவரை ஒருவர் மூயங்குதற்குக் காரணமான கணேயினேயுடைய(ங)சாமனூர் தமையனுகிய காமனூர் நடையை நீ காணுயென நடந்†காட்டினுன். எ - று.

கூடு ஒஒகாண், ‡நம்மு ணுகுதற் றொ இயர் நம்முண
‖முசாவுவங் தோனடிதொட் டேன்

எ - து: அதுகேட்ட கூனி, ஒஒ! ÷இவன் நடையைப்பாராயென நெஞ் சொடு கூறினுள்; அதுகேட்ட குறளன் நம்மூள்ளே நாங் கூடி மகிழ்தற்கு யான் நின் மெய்யைத் தீண்டுதற்குக் குறி யிடம் + இன்ன இன்ன இடமா மென்று நம்மூள்ளே நாம் உசாவக்கடவேம் ; இனி நின்னே இகழ்ந்து கூரு மைக்கு அரசன் (சு)அடியைத் தொட்டுச் சூளுற்றேX னென்றுன். எ - று.

ஒஒ, இகழ்ச்சிக்குறிப்பு.

கஎ-கஅ. (இ) "காமவேள் கவர்கணே" (ஈ) "காமனு, ரைதுலாங் கவர் கணே" (உ)"அனங்க னுய்மலர்க், கவர்கணே" சூளா. நகர. கஅ. குமார. ஙி; கக. எனப் பலவிடத்தும் வருவன ஒப்புநோக்கத் பாலன. (ஊ) "கவர்வு விருப்பாகும்" என்பது தோல். உரி. சூ. சுஉ.

க. (அ) "நீலத் தெண் ணீர் நீந்து மாமையிற், கோலக் குறுக் கைவாட் கூட்டுட் கழீஇப், பாலிகை பற்றிய குறள்வழிப் படரவும்" பெருங்.(க) சுசு: உசக - உசஙு. (ஆ)"கொட்டுப் பிடிபோலுங் கூனுங் குறளாமை, விட்டு நடப்பனபோற் சித்தம்" கீவக. உஎகஅ.

உ. "வீரம் படக்கையை மெய்வழி வீசித், தேரை நடப்பன போற்குறள் சிந்திஞே, டோரு நடந்தன" (கீவக. சுஙக.) என்பதும் அதில், "கையை மெய்வழி வீசி" என்பதற்கு, 'வீலாப்புடைக்குள்ளே கையை வீசி' என்று எழுதியிருக்கு முரையும் இக்கே அறிதற் பாலன.

ங. காமனுக்குச் சாமனென்ற தம்பி யொருவனுண்டென்பதை, இந்நூற் பக்கம், கசச: ங-ஆம் குறிப்பால் அறிக.

ச. (அ) "ஐய சூளி னடிதொடு குன்றெடு, வையைக்குத் தக்க மணற்சீர் சூள் கூறல்" பரி. அ: எ0 - எக. (ஆ) "நி னடிதொடு கடனிது" (இ)"குமரிநி னடிதொடு படுகட னிது" சிலப். கூ: 'சுடரொடு' 'துடி யொடு'(ஈ)"மதிவாண் முகத்து மணிமே கலைதனே, யொழியப் போகே னுன்னடி தொட்டேன்" மணி. கஅ: கஎ0 - கஎக.

(பிரதிபேதம்) *கேரிறுத்தினும், †காட்டினுன் ஒஒஇகழ்ச்சிக்குறிப்புஅதுகேட்ட, ‡நம்மூரு மாதற்றொடுகிய, ‖ உசாஅக் கோள், உசாஅக் கோள். ÷ இன்னடையைப் + இன்னதென்னவிடமம், X என்றுன் ஆங்கதனை சாயலின்,

கூள ஆங்காக, (க)சாயலின் மார்ப *வடங்கினேன் ஏள
பேயும் †பேயுந் துள்ள லுறுமெனக்
கோயிலுட் ‡கண்டார் நகாமை வேண்டுவ
‖றண்டாத் தகடருவ! வேறுகக் × காவின்கீழ்ப்
+போத ரதடாரப் புல்லி (உ)=முயங்குவேங்
துகடபு காட்சி யலையத்தா ரோலே
முகடு**காப் பியாத்துவிட் டாங்கு

எ - து: அதுகேட்ட கூனி, அப்படியேயாகுக ; யானும் மென்மையால் இனிய மார்பனே ! இகழ்ந்து கூறுதலைத் தவிர்ந்தேன்; இனி இக்கோயிலுட் கண்டவர்கள் நம்மை எஎயென †† இகழ்ந்து பேயும் பேயுந் தம்மிலே துள்ளுதலே இக்கூனுங் குறளும் உரைதிற்குமெனக் கூறி நகாதிருத்தலே விரும்புவேன்; ஆதலால், அமையாத பொற்றகடுபோலும் உருவத்தினையுடையாய் ! கோயிலுக்கு நீங்காவாகக் காவின்கீழே போதருவாயாக; ‡‡ தகளறுகின்ற அறிவினையுடைய அவையிலுள்ளார் திரட்சிபொருந்தின ஓலையின்றலையைக்கட்டி அதன் தலையிலே (கூ) |||அரக்கிலச்சினை யிட்டுவிட்டாற்போல நிரம்பாத உடலின் உள்வாய் முயக்கம் பெற்ற நிறையும்படி இறுகப் புல்லிக் கூடக்கடவே × ×மென்முரள். எ - று.

க. "இன்சாயன் மார்பன்" கலி. சுடு: கூ. என்பதும் அதன் குறிப்பும் "சாயலின் மார்பின்" கலி. ககஉ: உகஎன்பதும் ஒப்புநோக்கற்பாலன.

உ. இங்குள்ள பிரதிபேதத்தை நோக்கின், "கண்டார் நகாமை வேண்டுவ றண்டா" என்பதை ஓடியாக்கி, பிற்பகுதியைக் ககரவெதுகை நயம் பொருந்தின நான்கடியாகப்பிரிக்கலாம். உரை இடங்கொடுக்கவில்லை.

ங. (அ) "ஓலை, யரக்குப்பொறி யொற்றி யாணையிற் போக்கி" பெருங். (க) ஙஎ. உ0அ - உ0ங. (ஆ) "அரக்கிலச் சினையின் வைத்த, வெஞ் சலி லோலை காட்ட" சூளா. தூது. அஉ. எனவும் (இ) "பொறியுடை யோலை" (ஈ) "ஓலைத்தூதிற், பெரும்பொறி யண்ண லரும்பொறி யொற்றி" (உ) "பொறியொற் றோலையோ டறியப் போக்கி" பெருங். (க) சஙு. ங0, டிஅ: அக - அஉ, (கு) எ: எக. எனவும் (ஊ) "புன்புல வழியடைத் தரக்கிலச் சினைசெய்து" நாலாயிர. திருச்சந்த. எசு. எனவும் ஒருவன காண்க.

(பிரதிபேதம்) * வணங்கினேன் எள, பேயும் பேயுந்ன, † பேயுநீர்துள்ளல், ‡ கண்டோர் நகாமல், || கண்டாய்தகவி, × ரூயிற்கீழ்ப், + போதியகடார, = முயங்குவேன்ரோடா தகஉர்ப்பு. **யாப்பியாத்து.†† இகழ்ந்தகறிப்பேயும், ‡‡ தகவர்கின்றவறிவினை. ||| அரக்கிலச்சினை யிட்டுவிட்டாற்போல, × × என்னுள் போதலுபோதானெ.

ஆங்கு, அசை. போதரு, போதரென விகாரமாயிற்று. "தோடே மடலே" என்னும்(க)சூத்திரத்தால் ஓலியென்றார்.

இதனால், இருவர்க்கும் முன்னர் கரைபிறந்தது; பின்னர்ப் புணர்ச்சி புவகை பிறந்தது.

இதனுள்,(உ)'கோனடிதொட்டேன்' எனவும் 'கோயிலுட்கண்டார் ஈகாமை வேண்டுவல்' எனவும் கூறலின், அடியோரென்பதுபெறுதும்.(ங)'கொக்குரித்தன்ன' எனத் தோல்திரைத்தமைகூறலின்,இளமைதீர்திறமாகியபெருந்தினை யாயிற்று. இது "வேட்கைமறுத்து" என்னும் (சு) பொருளியற்சூத்திரத்தால் வேட்கையறுத்துக் கூறியபெருந்தினை. இஃது (ஙு) ஊடற் பகுதியாகலின் மருதத்துக்கோத்தார்.

இஃது 'என்னெஞ்சறிவனேகொல்லோ' எனவும் 'ஈங்குருச்சுருங்கி' எனவும் மூட்டடியின்றிக் குறைவுசீர்த்தாகிய சொற்சீரடியும் வந்து, இரண்டடியான் இற்றதோர் கொச்சகமும் ஐஞ்சீரடுக்கிவந்த வெண்பா ஐந்தும் ஐஞ்சீரடியான் வந்து, கொச்சகம் ஒன்றும் இரண்டடிக்கொச்சகம் ஒன்றும் ஆசிரியத்தளை விரவின கொச்சகவெண்பாவும் பெற்று வெண்கலிப்பாவின் வேறுபட்டு வந்த கொச்சகக்கலிப்பா. (உக)

க. தோல். மபி. சூ. அசு. இச்சூத்திரத்தின் பேராசிரிய ருரையிலும் ஓலியென்பது அகக்காழில்லாத ஓறிவுயிராகிய புல்லின் உறுப்பாய் வருதற்கு,"தூகடபுகாட்சி யவையத்தா ரோலை" என்பது மேற்கோள்.

உ. அடியோர் பாங்கினும் தலைமக்களுண்டென்பதற்கு, "கம்மூணுதல் .....தொட்டேன்" "பேயும் பேயுக்.....வேண்டுவல்" என்னும் பகுதிகளை மேற்கோள்காட்டி, இது பெருந்தினைக்கண் அடியோர் தலைவராக வந்தது; என்னை? கோனடி தொட்டேனென்றமையாலும் கோயிலென்றமையாலும் இவர்கள் குற்றேவன்மாக்களாயிற்று என்றனர் இவ்வுரைகாரர்; தோல். அகத். சூ. உங.

ங. "உக்கத்தி.....சிறிது" என்பது கொக்குரித்தன்னவென்பதனால் தோல் திரைத்தமை கூறலின் இளமை தீர்திறமாகிய பெருந்தினையென்பர், நச்; தோல். அகத். சூ. ஙிக. இந்நூற்பக்கம் ஙிகஅ: க-ஆம் குறிப்பும் பார்க்க.

ச. தோல். பொருளி. சூ. கஎ. இச்சூத்திரத்தின் இவருரையிலும் "எறித்த படைபோல்.....னுயிர்" "உழுந்தினுந்.....பிறப்பு" என்பவை அடியோர் தலைவராக வேட்கைமறுத்தணர்த்தியதற்கு மேற்கோள்.

ஙி. "உரிப்பொருளல்லன மயங்கவும் பெறுமே" என்னும் தோல். அகத். கஙூ - ஆம் சூத்திரத்தின் இவருரையிலும், கூலங் குறையும்..... உறழ்ந்து கூறும் பெருந்தினை ஊடற்பகுதியகத்தலின் மருதத்துட் கோத்தாரென்னும் குறிப்பு உள்ளது.

(கூடு.) நில்லாங்கு நில்லாங் கிவர்தர லெல்லாநீ
நாறிருங் கூந்தலா றிற்செல்வா யிவ்வழி
யாறு மயங்கினே போறிநீ வந்தாங்கே
மாறினி நின்னுங்கே நின்சே வடிகிவப்பச்
செறிந்தொளிர் வெண்பல்லா யாம்வே றியைந்த
குறும்பூழ்ப்போர் கண்டே மனைத்தல்ல தியாது
மறிந்ததோ வில்லைநீ வேற்றுப் பது ;

அ குறும்பூழ்ப்போர் கண்டமை கேட்டே னீயென்றும்
புதுவன வீசை வளம்பாடிக் காலிற்
பிரியாக் கவிகைப் புலியன்றன் யாழி
னிருத்த செவிசாய்த் தினியிளிப் பட்டன
வீசைப்போர் கண்டாயும் போறிமெய் யெண்ணிற்
றபுத்த புலர்வில புண் ;

கச ஊரவர் கவ்வை யுளைந்தீயா யல்கனின்
நூரின்வாய்க் கொண்டு முயங்கிப் பிடிமாண்டு
போர்வாய்ப்பக் காணினும் போகாது கொண்டோடும்
பார்வைப்போர் கண்டாயும் போறிநின் றேண்மேலா
மீரமாய் விட்டன புண் ;

கக கொடிற்றுப்புண் செய்யாது மெய்ம்முழுதுங் கையிற்
றுடைத்துநீ வேண்டினும் வெல்லாது கொண்டோடு
மொட்டியபோர் கண்டாயும் போறி முகந்தாளே
கொட்டிக் கொடுக்குங் குறிப்பு ;

உக ஆயி னுயிழா யன்னவை யாளுங் கறியாமை
போற்றிய நின்மெய் தொடுகு ;

உஙி அன்னையோ, மெய்யைப்பொய் யென்று மயங்கிய னையொன்
றறிகல்லாய் போறிகா ணீ ;

உச நல்லாய், பொய்யெல்லா மேற்றித் தவறு தலைப்பெய்து
கையொடு கண்டாய் பிழைத்தே னருளினி ;

உசு அருளுகம் யாம்யாரே மெல்லா தெருள
வளித்துநீ பண்ணிய பூழெல்லா மின்னும்
விளித்துநின் பாணனே டாடி யளித்தி

விடலீநீ நீத்தலி னேய்பெரி தேய்க்கு
கடலீப்பட் டெல்லாநின் பூழ்.

இது "கோடியோர் கோடுமை சூடுமென வோடியாது, நல்லிசை நயந்தோர் *சொல்லோடு தோகைஇப், பதுதியீ னீங்கிய ததுதிக்கண்" (க) தலைவி (உ)பாத்தையரைப் (ங)பூழாக்கிக் கூறியது.

இதன் பொருள்.

நில்லாங்கு நில்லாங் கிவர்தர லெல்லாநீ
காறிருங் கூந்தலா நிற்செல்வா (ச)†யிவ்வழி
யாறு மயங்கினை போறிநீ வந்தாங்கே
மாறினி நின்னங்கே நின்(ஞ)‡சே வடிசிவப்ப

ள - து: எடா! நீ நாறகின்ற கரிய கூந்தலையுடைய பரத்தையரில் லின்கட் ||செல்கின்றாயாய் இவ்விடத்துப்போகின்றவழி தப்பிவந்தாய்போலே இருக்தாய்; நீ இவ்விடத்துப் பரந்து பாராதேகொள்; + அவ்விடத்தே நில், அவ்விடத்தே நில்; இனி நின்னுடைய பரத்தையர் மனைக்கண்ணே நின் (சு)வெந்த அடி மிகச் சிவக்கும்படி ×வந்தாற்போலப் போவென்றாள். எ - து.

செறிந்தொளிர் வெண்பல்லா யாம்வே றியைந்த
(எ)-†குறும்பூழ்ப்போர் கண்டே மனைத்தல்ல தியாது
மறிந்ததோ வில்லீநீ வேற்றூர்ப் பது

க. தோல். கற்பியல். சூ. சு.

உ. "தூவுற் பாங்கின் அங்கோர் பக்கத்திற் றலைவன் கூறியவற்றைக் கற் பியலுள் தலைவன் பகுதினீங்கிய தகுதிக்கண், தலைவி பரத்தைய ராகக் கூறுவனவும் இச்சூத்திரத்தானமைக்க. அவை மருதக்கலியுட் கடவுட்பாட்டு முதலியன. அவற்றை ஆண்டுக்காட்டுதும் கண்டுணர்க" என்பது ஈண்டும் அறியத்தக்கது; தோல். அகத். சூ. சஞ். நச்.

ங. "கானமர் புள்ளும்.....எங்கையரே" அம்பிகாபதி. இசo.

ச. "எம்மனை, வாரனீ வந்தாங்கே மாறு" கலி. அக: உ - ங.

ஞ. "கண் சிவந்தில கால்கள் சிவந்தவே" "ஐவர் தூதுசென்று, பாதாம் புயஞ் சிவந்தான்"

சு. "செவ்வரல் சிவப்பூர" (கலி. எக: சு.) என்பதும் அதன் உரையும் குறிப்பும் பார்க்க.

எ. (அ) குறும்பூழ் மருதத்திற்குரிரித்தென்பது, "காடொறுங், கையுள தாகி வீடினுங் குறும்பூழ்க்குச், செய்யுள தாகு மனம்" என்பதனாலும்

(பிரதிபேதம்) * சொல்லொடுதொகைஇ, † அவ்வழி, ‡ சேடி, || செல்கின்ற நீ இவ்விடத்தை. + அவ்விடத்தேயில் இனி, × வந்தாப்போலேபோ, + குறும்பூட்போர்.

கலித்தொகை கடவுள்.

எ - து: *அதுகேட்ட தலைவன், செறிந்து விளங்குகின்ற வெள்ளிய பல் லினையுடையாய்! யாம் புதிதாக வந்து பொருந்தின † குறும்பூழ்ப்போர் கண் டேம்; அவ்வளவல்லது நீ எனக்குத் தீங்காகக் கருதும் ஒழுக்கஞ் சிறிதும் யான் அறிந்ததோ இல்லையென்றான். எ - று.

ஓகாரம், ஐயம்.

அ குறும்பூழ்ப்போர் கண்டமை ‡கேட்டேனீ யென்றும்
புதுவன வீதை வளம்பாடிக் காலிற்
பிரியாத் கவிகைப் ‖புலையன்றன் யாழி
னிருத்த செவிசாய்த் தினியினிப் பட்டன
வீதைப்போர் கண்டாயும் போறிமெய் யெண்ணிற்
றபுத்த புலர்வில புண்

எ - து: அதுகேட்ட தலைவி, நீ எந்நாளும் குறும்பூழினது போரைக் கண்டபடியை யான் கேட்டேன்; அது கூறக் கேள்; ஒருநாட் + கொடித்தாற் போலன்றிப் புதிய வாயிருக்கின்ற கொடையினது பெருமையைப் பாடி நின் னிடத்தினின்று நீங்காத, யாழ்வாசித்தலாற் கவிழ்ந்த கையினையுடைய பாணன் தன்னுடைய யாழோசையாலே முன்பு தாழ்க்கப்பட்ட செவிகளே அவன் ÷ கூறுகின்றவற்றைக்கேட்டற்கு அவர்சாய்க்கையிலுலே இப்பொழுது அக்கூற்றுலே புதிதாக அகப்பட்டனவாகிய பூழினுடைய புதிய போர்களைக் கண்டாயும்போலே இருந்தாய்; அதனை உண்மையாக எண்ணிற் புலர்சஇ யிலவாகிய புண்கள் உன்னைக்கொன்றன; இதனை ஆற்றியவா றென்னென் றான். எ - று.

(ஆ) அது கோழியும் கிவற் (செவ்வல்) காடையும் கவுதாரியும் போலப் போர்த்தொழிலிற் சிறந்த பறவை யென்பது, "கறவொடு மொன்றே டொன்று காரணமின்றிச் சீறிப், பொறியுடைக் குறும்பூழ் தம்மிற் போர்செயப் பொருத்து மோதை, செறிமயிர்த் தகர்க டம்மிற் றீயெழத் தாக்க னேக்கி, யறைகழல் வீரார்க்கு மமலையை யவிக்கு மன்றே" என்பதனாலும் (இ) அதன் போர் காணல் ஆடவர்க்குரியமர் பென்பது இச்செய்யுளாலும் "கலியின் வென்றியுங் காரியி யிற்றமே காலாண், மலையும் வென்றியுஞ் சூட்டை வாரணக் குறும்பூ, ழுலைய மோதுவன் கடாப்பிற போரிடை யுறத்திக், குலவும் வென்றியுங் கொண்டன வாடவர் குழுக்கள்" என்பதனாலும் அறியலாகும். (ஈ) குறும்பூழ் என்பது ஒரு பறவைச்சாதிப் பெயரென்றும் இனஞ் சுட்டியதன்றென்றும்கூறவர் ஒருரைகாரர்; தோல். இளவி. சூ. 4அ. குறும்பூழ், காடையென்று வழங்கப்படும்.

(பிரதிபேதம்) * இதுகேட்ட, † குறும்பூழினதுபோலை, ‡ கேட்டனன். ‖ புலேன், + கொடித்தாப்போலன்றி, ÷ கூறின்றனவற்றைக்,

இனி நின் மெய்யிற் *புலர்வில்லாப் புண்கள், எண்ணிப்பார்க்கில் அவ் வெண்ணைக் கெடுத்தனவென்றுமாம். இனி என்றும் புதியனவாயே பூழினது வளப்பத்தை யாழோசைபோலே பாடி அப்பூழ் பொருத்துமிடத்து விட்டு நீங்காத புலையனென்று புலையனுக்கு அடைகூறினுள். யாழோசைகேட்டாரை அகப்படுக்குமாறுபோல இவன் பாட்டும் அகப்படுத்தலின் யாழிற்பாடியென்றுள். †பூழைத் தடவிக் கலிழ்ந்தகையினையுடைய புலையன்-‡ பூழ் பொருத்துமவன்; புலையன்றன்னுடைய இப்பொழுதிப்பொழுது அகப்பட்டனவாகிய பூழ், தத்தஞ் செவிகளைச் சாய்த்து இவன் கூறும் (க)மந்திரமுதலியன கேட்கையினூலே அவன் தன்வசமாகத் தாழ்க்கப்பட்ட பூழ்; அப்பூழின்போரைக் கண்டாயும்போறியெனப் பூழிற்கும் எற்பதோர் பொருளுந்தோன்றுகின்றது. இனி, யாழின் இருத்த செவிக்கு, யாழைப்போலும் (உ)மந்திரத்தாற் சூழ்ந்த செவியென்பாருமுளர்.

கச (கூ)ஊரவர் கவ்வை யுளர்த்தீயா யல்கனின்
சூரின்வாய்க் கொண்டு முயங்கிப் பிடிமாண்டு
போர்வாய்ப்பக் காணினும் போகாது ‖கொண்டாடும்
பார்வைப்போர் கண்டாயர் போறிகின் றோண்மேலா
மீரமாய் விட்டன புண்

எ - து: ஊரிலுள்ளார் கூறும் அலருக்கு வருந்தாயாய்த் தங்குகிலையுடைய நின் மார்பிற் சூரிடத்தே கையாலே அணைத்துக்கொண்டு தழுவி அகப்படுத்துதலாலே மாட்டிமைப்பட்டு வேறுஞ் சிலரை அகப்படுத்திக் கொண்டு —வருதற்குப் பார்வையாகப் போகவிட்ட மகளிராலே உண்டான ஊடற்போரை வாய்ப்பக் × கண்டாராகிலும் அதற்குஊடிப்போகாதேஉண்ணெய் கைக்கொண்டு நுகருங் கலவிப்போரைக் கண்டாயும்போலே இருந்தாய்; நின் தோளிற் புண்களெல்லாம் புலராமல் ஈரமாயே கிடந்தனவென்றுள். எ - று.

இனி, ஊரிலுள்ளார்எக்காலமும்பூழ்பொருத்தித் + திரிவையென்று கூறும் ஆரவாரத்திற்கு வருந்தாயாய் மார்பிலே அணைத்துக்கொண்டு முயங்கித்

க. "சொல்லுஞ் சுவட்டவர் சொல்லுக சொல்லுவகாற், சொல்லும் பலவுள சொன்னபின் - வெல்லும் .,... ....பூழ்" என்பதும் 'சொல்லக்கடவ மந்திரம் பலவாவன: தீற்றும் அரிசி ஒது மந்திரமும், பச்சிலே பிசைந்து தடவும்போது சொல்லு மந்திரமும், செவியுள் ளூறுத்து மந்திரமும்' என்று எழுதியிருக்கும் அதன் விசேடவுரையும் ஈண்டு அறிதற்பாலன; பு - லை. பெருந்திணை. வென்றிப் க.

உ. "மந்திரங் கேட்குஞ் செவிய போல" பெருங். (ச) கூ: அவ.

கூ. "ஊரவர் கௌவை" குறள். ககசஎ.

(பிரதிபேதம்) * புலர்வில்புண்கள், † அப்பூழைத்தடவி. ‡ பூழ்ப்பொருத்து. ‖ கொண் டோடும். + வருத்தற்குப்பார்வை, × கண்டார்களேனும். + நிரிவென்று

தசை கரையும்படி கையாற் பிடித்தலாலே மாட்சிமைப்பட்டுத் தனக்கு மாறுகிய பூழின் போரை வாய்ப்பக் காணினும் அதற்கு அஞ்சிப் போகாதே போர்செய்தலேத் தன்னிடத்தேகொண்டு * பின்னும் போர்செய்யும் பார்வை யாகிய பூழின் போரைக் † கண்டாயும்போறியென வேறுமோர் பொருள் தோன்றி நின்றவாறு காண்க.

கசு கொடிற்றுப்புண் செய்யாது மெய்முழுதுங் கையிற்
றுடைத்துநீ வேண்டினும் வெல்லாது ‡ கொண்டாடு
மொட்டியபோர் கண்டாயும் போறி (க)முகந்தானே
கொட்டிக் கொடுக்குங் குறிப்பு

எ-து: இவட்கு வருத்தமாகவுங்கூடுமென்றகருதிப் புணர்ச்சிக்காலத்துக் கவுளிடத்துச் செய்யும் வடுக்களேயுஞ் செய்யாமல் மெய்முழுதையும் கையாலே எப்பொழுதுந் தடவி நீ விரும்பினும் நீ தன்னே வெல்லாமற் கொண்டு புணரும் ஒட்டகேலயுடையாளது கலவிப்போரைக் கண்டாயும் போலே இருந்தாய்; நின் மனக்குறிப்பை நின் முகந்தானே ‖ காட்டிக் கொடாநிற்குமென்றாள். எ - று.

க. (அ) "முன்னங்காட்டி முகத்தினுரையா" (ஆ) "முன்ன முகத்தி னுணர்ந்து" (இ) "ஒருவன், முகனுரைக்கு முண்ணின்ற வேட்கை" (ஈ) "முன்ன, முகம்போல முன்னுரைப்ப தில்" (உ) "அடித்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சம், கடித்தது காட்டுமுகம்" (ஊ)"முகத் தின் முதற்குறைந்த துண்டோ வுவப்பினுங், காயினுந் தான்முந் துறும்" (எ) "முகநோக்கி நிற்க வமையு மகநோக்கி, யுற்ற துணர் வார்ப் பெறின்" (ஏ) "ஒளிப்பினு முள்ளம், படர்ந்ததே கூறுமுகம்" (ஐ) "நோக்கி யறிகல்லாத் தம்முறுப்புக் கண்ணுடி, நோக்கி யறிப வதுவே போ-னுேக்கி, முகனறிவார் முன்ன மறிப" (ஒ)"முகத்தினுற் பொருண்முடிவு கண்ணினுன்" (ஓ) "தூத னின்முகப் பொலிவி னுற் சுடர்க், காத வேலினுன் கருமமுற்றுற, வோதி ஞாயிபோ லுணர்ந்த பின்" (ஔ) "நோக்கின னவர்முக நோக்க நோக்குடைக், கோக்கும ரருமடி குறுக" (ஃ) "அற்றக்தான், மனங்கள் போல முகமு மறைக்கு மே" (அஅ) "சிந்தை யுண்ணெஞ்சு சேற்றக் திருமுகர், தந்தளிப்ப" (ஆஆ) "அகத்தியன் முகத்திற் காட்ட" (இஇ) "முழையுறு சிய மன்னுன் முகத்தினு லகத்தை நோக்கிக், குழையுறுமெய்யன் பைய வரன் மூறை கூற வுற்றுன்" (ஈஈ) "உளத்தனவாண் முகத்தனவா யுறிக்கு மனை குறிப்பினும், தெளித்துரைத்தல் சிர்மைத்தே" (உஉ) "உள்ள முகத்திற் சுடர்கிற்ப" (ஊஊ) "அகத்தி னழகு முகத்திற்றோரியும்."

(பிரதிபேதம்) * பின்னும்பின்னும்போர். †கண்டாய்போறி. ‡கொண்டோடும். ‖சொட்டிக்.

தான் விரும்பிய நீர்விளையாட்டுமுதலியவற்றிலே உன்னை ஒட்டுதலை யுடையாள்.

இனி முருகுகிடுதற்குச் செவியின் மயிரைப் பறிக்குங்காற் புண் ணைப் பறியாதே மெத்தெனப் பறித்து மெய்யைமூழுக்கப் பலகாற்றுடைத்து நீ இவ்வாறு *கொண்டாடினுந் தான் எதிர்ந்த பூழினை வெல்லாமல் அப்பூழி னைக்கொண்டு போர்செய்யும் (க) இயக்கனுடைய பூழின் போரைக் கண்டாயும் போறியென வேறுமொரு பொருள்தோன்றி நின்றவாறு காண்க.

உசு ஆயி னையிழா யன்னவை யானுங் கறியாமை
†போற்றிய நின்மெய் தொடுகு

எ - து: அதுகேட்ட தலைவன், அப்படியாயின், ஆயிழாய்! நீ கூறுகின்ற அத்தன்மையவான குறிகளை யான் அவ்விடங்களிற் செய்தறியாமையை நின் னெஞ்சிடத்தே போற்றுதற்கு நின் மெய்யைத் தொட்டுச் சூளுறுவே னென்றான். எ - று.

தொடுமென்றும் பாடம்.

உஞ அன்னையோ

எ - து: அதுகேட்ட தலைவி, ‡அம்மையோவென இரங்கி கூறினாள். எ - று.

மெய்யைப்பொய் யென்று மயங்கிய தையொன்
றறிகில்லாய் போறிதா னீ

எ - து: அதுகேட்ட ||தலைமகன், யான் கூறுகின்ற மெய்யைப் பொய் யென்று மயங்கிய நீ உலகவொழுக்க மொன்றும் அறியாய்போலே இருக்தாய் காணென்றான். எ - று.

உள | நல்லாய், (உ)பொய்யெல்லா மேற்றித் தவறு(ரூ)தலைப்பெய்து
கையொடு ÷கண்டாய் பிழைத்தே னருளினி

க. இயக்கன்-இயக்குபவன்; ''இயக்கலி னியக்கி யாருமே'' சீவக. கoகடி.

உ. (அ)''பொய்யெல்லா மேற்றி.....அருளினி'' என்பதை இவ்வுரைகாரர் (தோல். கற்பி. சூ. கி.) மேற்கோள் காட்டி, இது தலைவன் நின்றாளை பிரிவி னஞ்சிய பையுளில் அடங்குமென்றார். (ஆ) ''பரத்தையி னகற் சியிற் பிரிந்தோட்டுறுதி, பிரத்தலுந் தெளித்தலும்'' என்பதன் உரை யில், இப்பகுதியை இரத்தற்கு மேற்கோள்காட்டினர் இளம்பூரணர்; தோல். அகத். சூ. சக. 'ஒன்றுத் தமரினும்'

ரூ. (அ) ''பண்டு மொருகாற் கண்டகத் தடக்கிய, வையப் பூத்தையைக் கையொடு கண்டே, யினிப்பொய் புணர்ணு மேழைய மல்லம்'' பெருங்.

(பிரதிபேதம்) * கொண்டாடிற்றத் தானெதிர் பூழினை வெல்லாமல்பூழினைக். † போற் றியர் நின்மெய். ‡ அம்மேயோவென, || தலைவன் + கண்டை.

எ-து: பின்னும் கல்லாளே! யான் * செய்த தவறுகளே என் தலையிலே †யிட்டு என் பெரும்கனவெல்லாம் எனக்கு ஏறத் தெளிவித்து என் கனவைக் கையோடே பிடித்துக்கொண்டாய்; யானும் நின்னைத் தப்பினேன்; இனி எனக்கு அருளென்றான். எ - று.

உசு ‡அருளுதம் யாம்யாரே மெல்லா தெருள
வளித்துநீ பண்ணிய பூழெல்லா மின்னும்
விளித்துநின் பாணனை டாடி ||யளித்தி
(க)விடலீநீ ÷நீத்தலி னெம்பெரி தேய்க்கு
நடலைப்பட் டெல்லாநின் பூழ்

எ - து: அதுகேட்டு அவன், எடா! யாம் நீ கூறியவாறே ×அருளுவேம்; அங்ஙனம் அருளுதற்கு யாம் யாராந்தன்மையையுடையேம்? விடலாய்! நின் பூழெல்லாம் நீமுன்னர் அளித்துப் பின்னர்க் கைவிடுதலின் +நின்னடிப்பிலே அகப்பட்டு நோயைப் பெரிதாகப் பொருந்தும்; அவை வருந்தாதபடி நீ உனக்கு ஆம்படி பண்ணின பூழெல்லாவற்றையும் இன்னும் நின் பாணனுலே அழைத்துவிட்டு அவற்றின்மனந்தெளியும்படி அளித்த **ஆவோயாக வென்றான். எ - று.

எனவே, பரத்தையர்க்கும் பூழிற்கும் ஏற்ப நின்றது.

இதனால், இருவர்க்கும் புணர்வாகிய உவகைபிறந்தது.

"தொடுமை யொழுக்கங் கோடல் வேண்டி, யடிமேல் வீழ்ந்த கிழவனை தெருக்கிக், காத லெங்கையர் காணி னன்றென, மாதர் சான்ற வகையின் கண்ணும்"(உ)என்றதனுள் அருளினியென அடிமேல் வீழ்ந்தவாறும், ††அருளுதம் யாம்யாரேமெனக் காதலமைந்தவாறும், அளித்தியெனப் பணிவை நின் பெண்டிர் கொள்வரென்றவாறுங் காண்க.

(க) சு0: சுசுடு - சுசுஎ. (ஐ) "தான்மூன் கண்ட தவற்றினு ளாதலிற், சென்ற வாயிற் கொன்றல ரூடி" பெருங். (க) ஈஎ: கசுஎ - கசுஅ.

க. "பரத்தையி னகற்சியிற் பிரிந்தோட் குறுகி, பிரத்தலுந் தெளித்தலும்" என்பதனுரையில் 'விடலே நீ நீத்தலின்.....நின்பூழ்' என்பதை மேற்கோள்காட்டி, இதில் பூருதநிலத்திற்றலைமகன் விடலையெனப்பட்டா னென்பர் இளம்பூரணர்; தொல். அகத். சூ. சச. 'ஒன்றுத்தமரினும்'

உ. தொல். கற்பி. சூ. சு. இச்சூத்திரப்பகுதியி னுரையில் (அ) 'கல்லாய் .....பூழ்' என்பதை மேற்கோள்காட்டி, "இதனுட் 'கையொடு கண்டாய் பிழைத்தேனருள்' என அடிமேல்வீழ்ந்தவாறும் 'அருளுதம்

(பிரதிபேதம்) * செய்யாத, † இட்டெனப்பொய்க்கே. ‡ அருளுக யாம்யாரே யெல்லா, || அளித்தவிடலே, ÷ நீக்கலின், × அருளுகம் அங்ஙனம் + அங்கடிப்பிலே, ** ஆகுவாயாக, †† அருளுகம் யானெக்காதலமைந்தவாறும் காண்க.இது

இது பல கொச்சகங்களும் வருதலிற் கலிவெண்பாவுறுப்பின் வேறுபட்டு வந்த கொச்சகக்கலி. (கo)

(கூசு.) ஏந்தெழின் மார்ப வெதிர்ல்ல நின்வாய்ச்சொற்
பாய்ந்தாய்ந்த தானைப் பரிந்தாஞ மைந்தினை
சாந்தழி வேரை சுவற்றுழ்ந்த கண்ணியை
யாங்குச்சென் றீங்குவந் தீத்தந்தாய் கேளினி

நி ஏந்தி, எதிரிதழ் நீலம் பிணைந்தன்ன கண்ணுய்
குதிரை வழங்கிவரு வல்;

எ அறிந்தேன் குதிரைதான்
பால்பிரியா வைங்கூந்தற் பன்மயிர்க் கொய்சுவன்
மேல்விரித் தியாத்த சிகழிகைச் செவ்வுளை

கo நீல மணிக்கடிகை வல்லிகை யாப்பின்கீழ்
ஞாலியன் மென்காதிற் புல்லிகைச் சாமரை
மத்திகைக் கண்ணுறை யாகக் கவின்பெற்ற
வுத்தி யொருகாழ்ஞா லுத்தரியத் திண்பிடி
நேர்மணி நேர்முக்காழ்ப் பல்பல கண்டிகைத்

கநி தார்மணி பூண்ட தமனிய மேகலை
நூபுரப் புட்டி லடியொ டமைத்தியாத்த
வார்பொலங் கிண்கிணி மார்ப வியற்றிநீ
காதலித் தூர்ந்தநின் காமக் குதிரையை
யாய்சுதை மாடத் தணிநிலா முற்றத்து

உo ளாதிக் கொளீஇய வசையிலீ யாகுவை
வாதுவன் வாழிய நீ;

யாம் யாரேம்' எனக் காதலமைந்த வாறும் நீ நீத்தலின் பூழெல்லாம் நடலைப்பட்டு நோய்பெரிதேய்க்கும், அவற்றைஇன்னும்விளித்து நின் பாணனேடு ஆடியளித்துவிடு என இப்பணிதல் நின் பெண்டிர்க்கு நன்றுமென்றவாறும் கூறியவாறு காண்க. ஈண்டுப்' பூழென்றது, குறிப்பினுந் பரத்தையரை" என்பர். இளம்பூரணர்; 'அவனறிவு' (ஆ) நச்சினர்க்கினியர் "மெய்யைப் பொய்யென்று.....பூழ்" என்றபகுதியை மேற்கோளாகக்காட்டி, இங்கே தாமெழுதியிருக்கும் விசேடக் குறிப்பையும் எழுதியிருக்கிறார்.

உஉ சேகா, கதிர்ஸிரி வைகலிற் கைவாரூஉக் கொண்ட
மதுரைப் பெருமுற்றம் போலகின் மெய்க்கட்
குதிரையோ வீறி யது;

உடு கூருகிர் மாண்ட குளம்பி னதுருன்றே
கோரமே வாழிருதி ரை;

உள வெதிருழக்கு நாழியாற் சேதிகைக் குத்திக்
குதிரை யுடலணி போலகின் மெய்க்கட்
குதிரையோ கவ்வி யது;

கூ0 சீத்தை, பயமின்றி யீங்குக் கடித்தது நன்றே
வியமமே வாழிருதி ரை;

கூஉ மிகநன், றினியறிந்தே னின்றுநீ யூர்ந்த குதிரை
பெருமணம் பண்ணி யறத்தினிற் கொண்ட
பருமக் குதிரையோ வன்று பெருமகின்
னேதில் பெரும்பாணன் றூதாட வாங்கேயோர்
வாதத்தான் வந்த வளிக்குதிரை யாதி
யுருவழிக்கு மக்குதிரை யூரனீ யூரிற் பரத்தை
பரியாக வாதுவனு யென்றுமற் றச்சார்த்
திரிகுதிரை யேறிய செல்.

*இது "கோடியோர் கோடுமை சுடுமென வோடியாது, நல்லிசை நயந்தோர் சொல்லோடு †தோகையிப் பதகியி னீங்கிய ததகிக்கண்" (க) ‡தலைவி பாத்தையரைக் தத்தையாக்கிக் கூறியது.

இதன் பொருள்.

க. (அ)தொல். கற்பி. சூ. சு. இச்சூத்திரப் பகுதியினுரையிலும் நச்சினர்க் கினியர் இச்செய்யுளை மேற்கோள் காட்டி, "இதனுள் பாணன் தூதாட வாதத்தால் வந்த குதிரை யென்பதனால், அவன் கூட்டிய புதிய பரத்தையர் என்பதூஉம் அவன் பகுதியினின்று நீங்கியவாறும் குதிரையோ வீறியதென்பது முதலியவற்றாற் கொடுமை சொல்லைச் சுடுகின்றவாறும் அதனை நீக்கிய பரத்தையரைக் குதிரையாகக்கூறித் தானதற்குத் தக்குகின்றவாறும் காண்க" என இதனிறுதியிலுள்ள குறிப்புக்குச் சிறிதுவேறுபட ஒரு குறிப்பும் - எழுதியுள்ளார். (ஆ) இத்தூற்பக்கம் இளஎ: உ - ஆம் குறிப்பு இவ்வும் அறியத்தக்கது.

(பிரதிபேதம்) * இது பகுதியின்கிய, † தோகையிபகுதி, ‡ தலைவிகூறியது.

(க)ஏந்தெழிற் மார்ப வெதிரல்ல நின்வாய்ச்சொற்
(உ)பாய்ந்தாய்ந்த தாணைப் பரிந்தாஞ *மைந்தினை
சாந்தழீ வேரை சுவற்றுழ்ந்த கண்ணியை
யாங்குச்சென் (ங)றிங்கு†வந் தீத்தந்தாய்

எ - து: உயர்ந்த அழகினையுடைய மார்பனே! நின் வாயிற்சொல் நினக்கு மாறல்ல; நின் தன்மைகண்டு விளுவுகின்றேன்; நீ மடிவிரிந்து கரையற்று முகிந்த (ச) ‡புடைவையையுடைய அமையாத வலியினையுடையை; சந்தனம் அழிதற்குக் காரணமான || வேர்வையையுடையை; தோட்கட்டிலே கிடந்து நிறங்குறைந்த கண்ணியையுடையை; ஆகையிஞலே எவ்விடத்தே சென்று இவ்விடத்தே வந்தா†யென்ருள். எ - று.

ச கேளினி

ஏந்தி, (ரு)ஏதிரிதழ் நீலம் பிணைந்தன்ன கண்ணுய்
சுதிரை வழங்கிவரு வல்

×எ - து: அதுகேட்ட தலைவன், யான் கூறுகின்றதனை இப்பொழுது கேள்; உயர்ந்து தன்னில் இணையொத்த நீலப்பூவைத் தொடுத்தாலொத்த கண்ணினையுடையாய்! சுதிரையேறி வருவேனென்ருன். எ - று.

க. "ஏந்தெழின் மிக்கான்"

உ. (அ)ஆய்தலென்பது உள்ளத வுணுக்கமாகிய குறிப்புணர்த்து மென்பதற்கு இவ்வடி மேற்கோள்; தொல். உரி. சூ. ஈச. சேனு; சூ. உசு. 'ஒய்தல்' தெய்வச். சூ. ஈஉ. ஈச; நன். உரி. சூ. கஅ. இரா; இ-வி. சூ. உஅக. (ஆ) "பாய்ந்தாய்ந்த மா" பதிற். ஙக: எ.

ங. "ஈங்குவந் தீத்தந்தாய்" என்பது முன்னிலை மூற்று வினைத்திரிசொல் லுக்கு மேற்கோள்; தொல். எச்ச. சூ. ஙக. ஈச்.

ச. புடைவையென்பது ஆண்பாலாருடைக்கும்பெயராய்ப் பண்டுவழங்கிற் றென்பது; முல்லைப். நிக. மது. நிகஅ. பு - வே. வாகை. கச; பெருந். பெண்பாற். கஅ. உரையாலும், "மெய்தருவா னெறியடை வார் வெண்புடைவைமெய்சூழ்ந்து" என்னும்சேக்கிழார்செய்யுளாலும் அறியலாகும்.

ஞ. (அ)"நீலத், தெதிர்மலர்ப் பிணைய லன்னவிவ, ளரிமதர் மழைக்கண்" (ஆ)"நெடி நீர் பயந்த நிரையிதழ்க் குவளை, யெதிர்மல ரிணைப்போ தன்ன தன், னரிமதர் மழைக்கண்" எனவும், (இ) "மலர்பிணைத் தன்ன மாயிதழ் மழைக்கண்" (ஈ) "மாத்தாட் குவளை மலர்பிணைத் தன்ன,

(பிரதிபேதம்) * மைந்தினைச் சாந்தழி. † வந்தீத்தாய் கேளினி: எ - து. ‡ புடவை யோடே அமையாத, || வேர்ப்பையுடையை, + என்ருன் பின்னர்த்தலைவன்யான் கூறுகின்றதனை இப்பொழுதுகேள் எந்தி, × எ - து: உயர்ந்த தன்னில்,

எ அறிந்தேன் குதி[illegible]* தான்
பால்பிரியா (க)வை[illegible]ந்தற் பன்மயிர்க் கொய்சுவன்
மேல்விரித் தியாத்த சிகழிகைச் செவ்வுளை,
கo நீல மணிக்(உ)கடிதை வல்லிகை யாப்பின்கீழ்
ஞாலியன் மென்காற்றிற் புல்லிகைச் சாமரை,
†முத்திகைக் கண்ணுறை யாகக் கவின்பெற்ற
வுத்தி யொருகாழ்நூ ‡ுத்தரியத் திண்பிடி,
நேர்மணி நேர்முக்காழ்ப் பல்பல கண்டிகைத்,
கடி தார்மணி பூண்ட தமனிய மேகலை,
நூபுரப் புட்டி லடியொ டமைத்தியாத்த
வார்||பொலங் கிண்கிணி, யார்ப்ப ÷ லியற்றிநீ
காதலித் தூர்ந்தநின் காமக் குதிரையை
யாய்சுதை மாடத் தணிநிலா முற்றத்து
உo ளாதிக் +கொளீஇ யசையியீ யாகுவை
வாதுவன் வாழிய நீ

மாயிதழ் மழைக்கண் மாஅ யோளொடு"(உ)"தாமலர்த் தாமரைப் பூவி னங்கண், மாயிதழ்க் குவளை மலர்பீணைத் தன்ன, திருமுகத் தலமரும் பெருமதர் மழைக்கண்"(ஊ)"குவளையின் பீணையல் செற்று.....செவ் வரிபொதிந்த வாட்கண்" (எ) "கொங்கிவருங் கருங்குழலி பெருந் தடங்க ணீருங்குவளைப் பீணையல் போல..... ..இளைத்த வன்றே" எனவும் (ஏ) "முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளி, னெதிர்மலர் மற்றவன் கண்ணெக்கும்" (ஐ)"கண்ணே, புகழ்சா ரருமரை யலரிணைப் பீணையல்" எனவும் வருவனகாண்க.

க. (அ) "ஐங்கூந்த லுளர" கலி. கoஞ: நிநு. (ஆ) "நாறைங் கூந்தற்... .....மகளிர்க்கு" (இ) "இருளோங் கூந்த லின்றுயில்" (ஈ) "ஒல் லோந் கூந்தல்" அகம். சுஞ: கஅ - உo; உநூ: கஞ; உகக: ஙூ. (உ) "நாறைங் கூந்த னணைத்தென" (ஊ) "புயலோங் கூந்தல்" (எ) "நா றைங் கூந்த னடுங்குதுய ரெய்த" சிலப். கo: சாநு; கக: கoக, கஞ: கூஎ.

உ. களிகையென்பது, கடிகையெனத் திரிந்துநின்றது; களிறு கௌி றென்பன கடிறு கெடிறெனத் திரிந்து வருதலுங் காண்க; வட மொழியில் திரிந்துவந்ததென்றலுமாம். "கண்ணுளர் களிகை" "திருத்

(பிரதிபேதம்) * தான் எ - து: அதுகேட்டதலைவி நீ ஏறின குதிரைதான் யானறிந்தேன் அத னைக்கேள் பால்பிரியா. † முத்திகைகண்ணுறை. ‡ உத்திரியத். || பொலக் கிண்கிணி, ÷ பயிற்றிநீ. + கொளீஇய வசையிணீ யாகுவா யாதுவன்.

*எ - து: இதுகேட்ட தலைவி, 'நீ எறிந்த [illegible]திரைதான் யானறிந்தேன்; அதனைக்கேள்; ஐம்பாற் பகுதி நீங்காத ஐந்திணைகளினையுடையை கூந்தலாகிய பலமயிர்களைப் பலகாலுங் கத்திரிகையிடுங்(க)†கேசாரியின்மயிரினையும், மயிர் முடியின்மேலே விரித்து நீலமெறுத்தின ‡ துஞ்சாகிய சிவந்த தலையாட்டத்தினையும்,||நீலமணியைத் தோலிலேவைத்துத் தைத்துச்செய்த,சட்டுவுமாகிய கழுத்திற் கட்டுதலையுடைய÷வல்லிகையினையும், மெல்லிய காதிற் கிடக்கும் (உ)புல்லிகையென்னும்பூணுகிய கீழ்ஞாலும் இயல்பையுடைய (ங) கன்ன சாமரையினையும், (ச) தெய்வவுத்தியென்னும்பூணாருகேதுவுக்கிஒருவடமாய் நாலுஞ் சுட்டியாகிய, குதிரை கண்ணுக்கண்டு அஞ்சும்படியாக லிட்டுவைத்த அழகுபெற்ற (ஞ) சும்மட்டியினையும், நூலாற்செய்யப்பட்ட உத்தரியமாகிய

கேழ்க் களிகை" என்பவை பெருங்கதை. இதனைக் கண்டிகையின் திதென்பாருமுளர்.

க. கேசாரியென்பது, இங்கே குதிரையின் பிடரிக்குப் பெயராய் வந்தன்றது; கேசரம் - பிடரிமயிர்; அம்மயிரையுடையமையால் இதற்குக் கேசரியென்ற பெயராகி அது இடையே நீண்டுவந்ததுபோலும்; வட மொழியில் குதிரைக்குக் கேசரியென்ற பெயர் சிறப்பான்மை வழங்குமென்பு. கேசரியென்னுஞ் சொல் "சுவல்" (மது. ஈகூக.) என்பதற்கும் 'உளை' (நெடுநல். கூஉ.) என்பதற்கும் பொருளாக இவ்வுரைகாரரால் ஆளப்பட்டிருக்கிறது.

உ. புல்லிகை - கன்னப்பூவென்னும் அணிகலம்; குடைக்கடுக்கனெனினும் வாளியெனினும் பொருந்தும்.

ங. கன்ன சாமரை - குதிரையின் காதிலணியும் சாமரை.

ச. (அ) "தெய்வ [illegible]தியொ[illegible]லம்புரி வயின்வைத்து" முருது. ஊ; (ஆ) "தெய்வ வுத்[illegible] ஆர்ந் வலம்புரி.....மையீ ரோதிக்கு மாஅ [illegible]து" சிலப். சு: கூசு - கூஅ.

ஞ. சம்மட்டி - சவட்டை; இது சாட்டையென வழங்கும்; சவுக்கென்பதும்இது. நன்றாக அடிப்பது (அடித்து ஓட்டுவது) என்னும் பொருட்டாகிய ஸம்மர்த்தியென்னும் வழக்காறற்ற வடசொற்றிதைவுபோலும்; மத்திகையென வருதலும்நோக்குக. இச்சொல் மலையாளத்திலும் சம்மட்டியென்றேவழங்கும்; கன்னடத்தில் 'சம்மட்டிகெ' என ஒருசொல் உண்டென்றும் அதுசாமபட்டிகையென்பதன் திரிபென்றும் கூறுவர்.

(பிரதிபேதம்) * எ - து: பால்பிரிசுவல் - ஐம்பாற்பகுதி, † கேதாரியின்மயிரினையும் சுவலாகுபெயர்; கெழிகை மேல்விரித்தியாத்த செவ்வுளை-மயிர்முடியின், ‡ ('குஞ்ஞொகிய' என்பதுமுன்பதிப்பு)|| நீலமணிக் கடிகை யாப்பின் வல்லிகை - நீலமணியாற் செய்த÷வல்லிகையினையும்; அது நீலமணியைத் தோலிலே வைத்துத் தைத்தது. மென்காதிற் புல்லிகைக்கீழ் ஞாலியல் சாமரை - தண்டுமெல்லிய காதிற் .....கன்னசாமரையும், உத்தியொருகூழ் கண்ணுறை யாகக்கவின்பெற்ற மத்திகை - தெய்வவுத்தியென்னும்.....சம் மட்டியினையும், நூலுத்திரியத்திண்பிடி - நூலாற் செய்யப்பட்ட

திண்ணிய(க)*குசையினையும், இனமொத்த மணிகளாற்செய்த தன்னிலொத்த முக்கண்டன் கட்டுவடமாகிய பலபலநிறத்தையுடைய † கண்டிகையினையும், பொன்னாற்செய்தமேகலையாகியகழுத்திலேகட்டினசதங்கைத் ‡ தண்டையினையும், அடியிடத்தேசமைத்துக்கட்டின ஒழுகினபொன்னாற்செய்த (உ) சதங்கைகளும் அடியிடத்தே சமைத்துக்கட்டின (ங) சிலம்பாகிய (ச) கெச்சையும் ஆரவாரிப்பச் செலுத்திநீகாதலித்துவரினிருப்பத்தையுமுடையகுதிரையைச் (ஞ) செண்டு வெளியிலன்றி அழகினையுடைய சாந்து வாரின மாடத்தில் அழகினையுடைய (ஊ) நிலாமுற்றத்தே (எ) ஆதியென்னும் நெடுஞ்செலவை அதற்குக் கொளுத்தி இளைத்தாய்; ஆகையினாலே மேல்(அ)கல்ல அரசவாரியஞ்ஞை; நீ வாழ்வாயாகவென்றாள். எ - று.

க. குசை - கடிவாளம்; குதிரைக்கயி றென்றலுமாம்.

உ. "தாரும் புட்டிலு மற்றவ" சீவக. களவு.

ங. நூபுரமும் சிலம்பும் வெவ்வேறணிகலமாகவும் கூறப்படும்; "நூபுரம் புலம்பிடச் சிலம்பு கொந்தழ" என வருதலும் காண்க.

ச. கெச்சை, வாயில்லாச் சதங்கை யென்பர்.

ஞ. செண்டுவெளி - வையாளிவீதி; இது யானை குதிரைகளைப்பயிற்றுதற்கும் கடுகச்செலுத்துதற்கும் உரிய இடம்.

ஊ. நிலா முற்றம் - நிலவின்பயன்கொள்ளுதற் குரித்தாய் மேலே வேயாத மேற்றளம்; இது வடமொழியில் சந்திர சாலை யென வழங்கும்; வழக்கில் மொட்டை மாடியெனப்படும்.

எ. "அடிபடு மண்டிலத் தாதி போகிய, கொடிபடு சுவல விடுமயிர்ப் புரவியும்" மது. ஈகூ - ஈகூக.

அ. 'நல்ல வாசவாரியன்' என்றே எடுகெளிலிருப்பதை நோக்க, நல்ல வாசி வாரியனென்றிருக்க வேண்டுமோ வென்ற உண்டான ஐயத்தை இச்செய்யுளின் ஈற்றடியல் வரி உரையாகிய 'நீ யாசவாரியனாய்' என்ற டெடர் கீக்கி அரசவாரியனென்று துணியச்செய்தது.

(பிரதிபேதம்) *குசையினையும், கோர்மணி.....கண்டிகை - இனமொத்த †கண்டிகையினையும்; அது தோலிலே மூன்றடுக்கையாகப் பலநிறத்து மணியைவைத்துத்தைத்துக் கழுத்திற்கட்டுவது; தமனியப்மேகலை பூண்டமணித்தார்-பொன்னாற் ‡தண்டையினையும், அடியொடமைத்தியாத்த நூபுரப்புட்டில் - அடியிடத்தே சமைத்துக்கட்டின சிலம்பாகிய கெச்சையும்; ஓடு, உருபுமயக்கம். அடியொடமைத்தியாத்த வார்பொலக்கிண்கிணி-அடியிடத்தே.....சதங்கையும்; சதங்கை பரத்தைக்குங் குதிரைக்குமொக்கும். ஆர்ப்பவியற்றி - புட்டிலுஞ் சதங்கையும் ஆரவாரிப்பச் செலுத்தி யென்க. நீ காதலித்தார்ந்த காமக்குதிரை - நீகாதலித்துப் புணர்ந்த நின்னுடைய காமத்தையுடைய பரத்தையை யெனவும் காதலித்தேறின.....குதிரையெனவும் நின்றது. செண்டு வெளியிலன்றி.....கொளுத்தவீளைத்தரயாகையினாலே.

ஆதி(க)மாதியென்பவற்றுள் ஆதி-தெடுஞ்செலவு. நீ காதலித்தூர்ந்தமயிர் முதலியவற்றையுடைய, காமக்குதிரையை ஆர்ப்ப இயற்றி ஆதிக் *கொளீஇ அசையினை யென்க.

சுவல், ஆகுபெயர். ஒலி, உருபுமயக்கம். ஒலியில்

கெழிகைமேல் விரித்தியாத்த செவ்வுளையெனமாறுக. நீலமணிக்கடிகை யாப்பின்வல்வினைகையென்க. மென்காதிற் புல்லிகைக்கீழ் ஞாலியல் சாமரை யெனவும், உத்தி யொருகாழ் 'கண்ணுறையாகக் கவின்பெற்ற மத்திகை யெனவுங் கூட்டுக. தமனிய மேகலையுண்ட மணித்தாரெனமாறுக.

கண்டிகை, தோலிலே மூன்று நிரையாகப் பலநிறத்து மணியைவைத்துத் தைத்துக் கழுத்திற் கட்டுவது.

அடியொடமைத்தியாத்த என்பதனை வார்பொலங்கிண்கிணி நூபுரப் புட்டில் இரண்டற்குங்கொள்க.

சதங்கை, பரத்தைக்குங் குதிரைக்கும் ஒக்கும்.

நீ காதலித்தூர்த்த நின்காமக்குதிரை எனபதற்கு, நீகாதலித்துப் புணர்த்த நின்னுடைய காமத்தையுடைய பரத்தை[யெனினுமாம்.] (எனவுங்கொள்க.)

உஉ சேகா, கதிர்விரி லாவகலிற் கைவாருஉக் கொண்ட
மதுரைப் பெருமுற்றம் போலநின் மெய்க்கட்
குதிரையோ வீறி யது

எ - து: ஞாயிற்றின் கதிர் விரிகின்ற விடியற்காலத்தே கையிற் பிடித்த அலகாலே (உ) தூராலே வாருதல்கொண்ட மதுரையிற் பெரிய முற்றம்போல நின்மெய்க்கட் கிறியது †குதிரையோ ? எ - று.

சேவகா, சேகா எனத் திரிந்து நின்றது; விகாரமெனினுமாம்.
‡வாருதலென அலகும் பெற்றது; வீறுதல் - கீறுதல்.

உந சூருகிர் மாண்ட ‖குளம்பினதுநன்றே
கோரமே வாழிகுதி ரை

எ - து: அக்குதிரை கூரிய உகிராலே மாட்சிமைப்பட்ட குழத்தினை ÷யுடையது; ஆதலின், மிகவுங் கொடிதே; +அதனை ஏறுகின்ற நீ தப்பின்றி வாழ்வாயாக. எ - று.

க. மாதி - வட்டமாயோடல்.

உ. தூரால் - செற்றை குப்பை.

(பிரதிபேதம்) * கொளீஇயவகைவினையென்க, சேகா, சேயகாவென்பது.....விகாரமுமாம். கதிர்விரியாவைகலிற், †குதிரையோ வாருதலென அலகும்பெற்றது வீறுதல். ‡ (வாரு வாருஉவென அலகுபெற்றது என்பது மூன்பிரிப்பு) ‖ குளம்பினது வன்றே. ÷ உடையதுவாதலின், + இதனை.

உள வெதிருழக்கு நாழியாற் சேநிகைக்(க)குத்திக்
குதிரை (உ)யுடலணி போலநின் மெய்க்கட்
குதிரையோ கவ்வி யது

எ-து: மூங்கி(ரு)ழுக்காலும் நாழியாலும்(ச)சேதிகையென்னும்பெயரை யுடையதொழில்களாக *வண்ணங்களைத் தோய்த்துக்குத்தின குதிரையுடலிற் (ரு)பக்கரைபோல நின்மெய்க்கட்கவ்வியதுகுதிரையோகூறுயென்றுள்.எ - று.

கo சீத்தை, பயமின்றி யிங்குக் கடிந்தது நன்றே
வியமமே வாழிகுதி ரை

எ - து: சி! கெட்டது; தனக்கொரு பயனின்றியிருக்க வடுப்படுத்தற்கு உரித்தல்லாத இடத்தே வடுப்படுத்திற்று; ஆதலால், இக்குதிரை பெரிதும் †வியப்பே; அக்குதிரையை எறின நீ இங்கின்றி வாழ்வாயாக. எ - று.

வியவென்னும் உரிச்சொல்‡முதனிலையாகப்பிறந்து வியமமெனப் பெயர் படநின்றது; அம் அசை. உரிச்சொன் முதனிலையாக எல்லா நிலைகளும் பிறக்குமாறுணர்க. இனி விஷமமென்னும் வடமொழியென்பாரும் உளர். அது ஷ டகரம் பெற்றே வருமென உணர்க.

"வேட்கை மறுத்துக் ||கிளந்தாங் குரைத்தன், மரீஇய மருங்கி னுரித்தென மொழிப"(ங)என்பதனுள்,ஒன்றெனமுடித்தலால், மரீஇயவா று வினைய வற்றிற்குங்கொள்கவென்று அதனுள் இழிந்தோர்கூற்றைஉயர்ந்தோர்கூறுவன அமைத்தாம். அவை: வீறுதலுங் கவ்வுதலும்.

க. 'குத்திக்குதிரை' என்றே பிரதிகளிலுள்ளது; 'குத்தின குதிரை' என்னு முரையைநோக்க, 'குத்தீ குதிரை' என்றிருக்கலா மென்று தோற்றுகிறது.

உ. "புடைப் போர்ப் புளகத் துடைப்புமறை பருமத்தி" பெருங். (க)சுஅ: எ

ங. உழக்கு நாழி யென்பவை முகத்தலளவைக் கருவிகள்.

ச. சேதிகையென்பது, யானைக்கு உரித்தாகக் காளிதாஸ மஹாகவியாற் கூறப்பட்ட பத்திச்சேதம்போலத், குதிரைக்கு உரித்தானதொரு ஜித்திர விசேடமாயிருக்குமென்று அறிஞர் கூறுகின்றனர்.

ஞ. பக்கரையென்பது குதிரைச்சேணமென்னும் பொருளினதாய், (ஜீவக. கஎஎஉ. தூளா. கல்யாண. கச. அரசியற் உங.o.) செய்யுணடையிலும் (பெரும்பாண். சகஉ; முல்லை. எஉ; நெடுநல். கஎக, ஜீவக. ஙசுஎ) உரை நடையிலும் பயின்று வருதல்காண்க.

ட. தோல். பொருளி. சூ. கஎ. இச்சூத்திரத்தின் இவருரையிலும் இக் குறிப்போடு "குதிரையோ வீறியது" என்பது மேற்கோள்.

பதம்) * வண்ணங்களை. † வியமமே இக்குதிரையை, ‡ முதனிலையாக எல்லா நிலை களும் பிறக்குமாறுணர்க. அதுவியமமெனப் பெயர்படின்றது அம்மசை வியமென்னும் வடமொழி, || னொர்தாக்கு.

ங.உ மிகநன், நினியறிந்தே னின்றுநீ யூர்ந்த குதிரை
பெருமணம் பண்ணி யறத்தினிற் கொண்ட
(க)பருமக் குதிரையோ வன்று * பெருமநின்
னேதில் பெரும்பாணன் றாதாட வாங்கேயோர்
† வாதத்தான் வந்த வளிக்குதிரை யாதி
யுருவழிக்கு மக்குதிரை யூரனீ யூரிற் பரத்தை
பரியாக ‡வாதுவனு மென்றுமற் றச்சார்த்
திரிகுதிரை யேறிய செல்

எ - து: இன்று நீ ஏறிய குதிரை மிகவும் ||ன்றுயிருந்தது ; அதனை இப்பொழுதறிந்தேன் ; அது ×தான் அறநூல் கூறிய வழியாற் பெரியமணஞ் செய்துகொண்ட (உ) மேகலையையுடைய காமக்கிழத்தியாகிய குதிரையோ அன்று; பெருமா ! பாண்டொழிற்கு ஏதிலனாகிய பெரிய பாணன் தாதாய்ச் (ங)செல்ல, அவ்விடத்துப்பரத்தையருடனே உண்டான மாறுபாட்டாலேவந்த (ச)காற்றுப்போற்கடிய குதிரை; அதுதான் நினது புதுமையுருவை முற்கூறிய றே கெடுக்கும்; ஆதலால், அக்குதிரையை இனி ஏறுதேகொள்; அன்றி அப் தை குதிரையாக நீ அரசவாரியனும் எந்நாளும் +ஏறில்மேல் ஈண்டுவாராக ங்கு லே திரி; இனி ஈண்டுத் ÷தாழ்க்கில்லாதே அக்குதிரையை ஏறுதற்குப் போ த் தலேவி புலந்துகூறினுள். எ - று.

க. பருமமென்பது, குதிரைச்சேணத்துக்குப்பெயராய்வருதல்: (நெடுநெல். களக, நாலடி. கசக, கள. ககு. பெருங். (க) சுஅ: எ, (உ) கஅ: கஇ) இவற்றாலும் அறியலாகும்.

உ. மேகலையுள், பருமமென்பது ஒன்று ; அது பதினெட்டுக் கோவை யுடையது; "பருமந் தாங்கிய பணிந்தேந் தல்குல்" (ஞாநூ. கசசு.) என்பதும் அத்தனுரையும்பார்க்க. பதினென்கு கோவையுடைய தென்று கூறுவாரும் உளர்.

ங. ஆதிதலென்பது செல்லுத லென்னும் பொருட்டாய் வருமென்பதை, "நின் றாதாடித் துறைச்செல்லாள்" கலி. எஉ: கங. என்பதனாலும் இக்கூற்றுக்கு சுங.இ: சு-ஆம் குறிப்பாலும் அறிக.

ச. (அ) "கால்வினர்க் தன்ன கதழ்பரிப் புரவி" (ஆ) "கால்வினர்ந் தன்ன கடுஞ்செல லிவுளி" (இ) "காற்கடுப் பன்ன கடுஞ்செல லிவுளி" (ஈ) "காலியக்கன்ன கதழ்பரி"(உ)"காலியற்புரவி" (ஊ) "வளிகடந் தன்ன வாச்செல லிவுளியொடு" (எ) "காலியற் கலிமா" (ஏ) "வளிதொழி லொழிக்கும் வண்பரிப்புரவி"(ஐ) "காலிய லிவுளி"

பிரதிபேதம்) * பெருமானின், † வாதத்தால், ‡வாதுவனுமற்றச்சார். || ன்றுயிருந்ததனை × தானனால், +எறிஈண்டு, மேல்ஈண்டு, ÷தாழ்க்கில்லாதே.

இதனுட் (க)'பாணன் தூதாடவந்த' என்றதனுன் அவன் கூட்டிய புதிய பரத்தையரென்பதூஉம்'அறத்தினிற்கொண்டகுதிரையோவன்மு'என்பதனுல், காமக்கிழத்தியன்றென்பதூஉம் அவன் பகுதியி னீங்கியதூஉம் மேனியில் வடுக்கள் நெஞ்சினைச் சுடுகின்றதூஉம் பாத்தையரைக் குதிரையாகக் கூறித் தான் அதற்குத் தக்குநின்றதூஉங் கூறியவாறுணர்க. "மரபுநிலை திரியா *மாட்சிய"(உ)என்பதனுல், தலைவி அங்ஙனங்கூறும்வழுஅமைத்தாம். இதனுள் மடன் அழிந்த †வழுவமைதி, "தன்வயிற் காத்தலு மவன்வயின் வேட்டலு, மன்ன விடங்க ளல்வழி யெல்லா, மடனெடு நிற்றல் கடனென மொழிப" (ங)என்பதனுள் அமைத்தாம்.

இதனுல், இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது ‡சொற்சிரடி பெற்று ஐஞ்சீரடுக்கிவந்தகலிவெண்பா. (ஙக)

(கூஎ.) அண்ணே கடுஞ்சொ லறியாதாய் போலநீ
யென்னைப் புலப்ப தொறுக்குவேன் மன்யான்
சிறுகாலே யிற்கடை வந்து குறிசெய்த
வவ்வழி யென்றும்யான் காணேன் றிரிதர
வெவ்வழிப் பட்டாய் சமனுக விவ்வெள்ளல்;

சு முத்தேர் முறுவலாய் நம்வலைப் பட்டதோர்
புத்தியாணை வந்தது காண்பான்யான் றங்கினேன்;

அ ஒக்கும்;

அவ்வியாணை வனப்புடைத் தாகலுங் கேட்டேடன்
அவ்வியாணைதான், சுண்ணநீ ருடி நறுநரு நீருண்
டொண்ணுதல் யாத்த திலக வவிரோடைத்
தொய்யில் பொறித்த வனமுலை வான்கோட்டுத்
தொய்யகத் தோட்டிக் குழைதாழ் வடிமணி

க. இத்தூற்பக்கம் இஅச: க - ஆம் குறிப்புப் பார்க்க.

உ. தொல். அகத். சூ.சஎடு; இத்தூற்பக்கம் இஎஉ: உ-ஆம் குறிப்புப்பார்க்க.

ங. தொல். பொருளி.சூ. கக.இச்சூத்திரத்தின்இவருரையில், "இவ்வீரிடத்தும் மடனழிதலுடையளென வழுவமைத்தார்; அது 'குதிரைவழங்கி வருவல்' என்று அவன் காத்தவழி அதனை மெய்யெனக் கோடலன்றே மடமை; அங்ஙனங் கொள்ளாது 'அறிந்தேன் குதிரைதான்' எனப் பரத்தையர்சட் டன்னெனயெனக் கூறுதலின், இது மடனழிந்த வழுவமைதியாயிற்று" என்னுங் குறிப்புக் காணப்படுகின்றது.

(பிரதிபேதம்) * மாட்மைய, † வழுவமைத்தன்.‡சொற்சிரடியும்பெற்று.

யுத்தி பொறித்த புனைபூண் பருமத்து
கரி முத்தேய்க்கும் வெண்ப னைகைதிறந்து
நன்னகர் வாயிற் கதவ வெளில்சார்ந்து
தன்னலங் காட்டித் தகையினுற் காறட்டி வீழ்க்குந்
தொடர்தொட ராக வலந்து படர்செய்யு
மென்றோட் டடக்கையின் வங்கித்தற் கண்டார்

உ0 நலங்கவளங் கொள்ளு நகைமுக வேழத்தை
யின்றுகண் டாய்போ லெவனெம்மைப் பெரும்பதீ;

உஉ எல்லா, கெழீஇத் தொடிசெறிந்த தேரானீண தத்தித்
தழீஇக்கொண் டிருந்தாயு நீ;

உச குழீஇ, அவாவினுற் றோம்புவா ரிற்கடை யாரு
வவாவணி யுரிந்தாயு நீ;

உசு மிகாஅது, சிரப்பட வண்ட சிறுகளி யேருண்க
ணீர்க்குவிட் டிருந்தாயு நீ;

உஅ சார்ச்சார், நெறிதா ழிருங்கூந்த னின்பெண்டி செல்லாஞ்
சிறுபாக ராகச் சிரற்றா தெல்ல
விடாஅது நீயெம்மில் வந்தாயம் விபானீ
கடாஅம் படுமிடத் தேதாம்பு.

இது "கொடியோர் கொடுமை கூடுமென.....பததியி னீங்கிய ததநிக்கனி" (க) தலைவி (உ)பரத்தையரை யானையாகக் கூறிப்புலந்தது.

இதன் பொருள்.

(ஈ)அன்னை கடுஞ்சொ லறியாதாய் போலநீ
†யென்னைப் புலப்ப தொறுத்தாயே மன்யான்
(ச)சிறுகாலை யிற்தடை வந்து குறி ‡செய்த

க. தோல். கற்பியல். சூ. சு.

உ. இக்குறிப்பக்கம் இளை: உ-ஆம் குறிப்புப்பார்க்க.

ஈ. "அன்னை கடுஞ்சொல்.....எள்ளல்" என்பது பரத்தையர் அன்பினுற் * கூடியதற்கு (* கூறியது, ஏனும் பிரதிபேதம்) மேற்கோள்; தோல். களவி. சூ. கடுக. இளம்.

ச. (அ) "ஒருபாற் கிளவி யேனைப்பாற் கணும்" என்னுஞ் சூத்திரத்திற்கு, 'ஒருபக்கத்துக் கூறிய பொருண்மை ஒழிந்த பக்கத்துக் கண்ணும்' (பிரதிபேதம்) * புலர்ந்தது, † என்னைபுலப்பது, ‡ செய்தவழி யென்றுயான் காண.

வவ்வழி யென்றும்யான் காணேன் பிரிதர
வெவ்வழிப் பட்டாய் சமனுக விவ்வெள்ளல்

எ - து: நீ தலைநின்று ஒழுகுகின்ற பரத்தை, யான் புணர்த்தற்கு நீ குறித்தல்செய்த *அவ்விடத்து எக்காலும் உன்னைக் காணேனுப்ப் பலகாலுர் பிரிதலைச் செய்ய, நீ எவ்விடத்தே போனுயென்று நாட்காலத்தே எம்முடைய மனையின் வாசலிலே வந்து கடுஞ்சொற் சொல்லி உன்னைப் புலக்கின்ற தொழிலை நீ அறியாதாய்போல இப்பொழுது நடுவாக நின்று இங்ஙனம் எம்மை இகழ்கின்ற இகழ்ச்சியிடத்து யான் என்னை மிகவும் ஒறுத்துக்கொள்வேன்; நீ எக்காலும் அத்தன்மையையென்றுள் தலைவி. எ - து.

சு (க)முத்தேர் முறுவலாய் நம்(உ)வலைப் பட்டதோர்
(ங)புத்தியானை வந்தது † காண்பான்யான் தங்கினேன்

எ - து: அதுகேட்ட தலைவன், முத்தையொக்கும் முறுவலையுடையாய்! நம்வலையிலே அகப்பட்டுவந்த தொரு புத்தியானை ஈண்டு வந்தது; அதனை ஏறிக் ‡காண்பதாக யான் தங்கினே னென்றுன். எ - று.

வருவகைதாம் வழக்கு நெறி யென்று கூறப' என்று பொருளும் 'மனையோண்மாட்டும் காடிக்கிழத்திமாட்டும்நிகழும்புணர்ச்சியும் பிரிவும் ஊடலும் பரத்தையர் மாட்டும் நிகழும்' என்று விளக்கமும் எழுதி, "சிறுகாலை.....காணேன்" என்ற பகுதியைப் புணர்வுகுறித்து வந்ததற்கு மேற்கோள் காட்டினர் இளம்; தொல். பொருளி. சூ. உசு. (ஆ) "சிறுகாலைப் பட்ட பொறியும்" (இ) "சிறுகாலை, யட்டில் புகாதாள்" நாலடி. கசo, நகூநூ.

க (அ)தலைமகன், தனதொழுக்கத்தைத்தலைமகண்மாட்டுக்கரந்துணர்த்தும் வழி அவள் மடனழிய நின்றதற்கு, "முத்தேர் முறுவலாய் நம்வலை.....கேட்டேன்" என்னும் பகுதிகளே மேற்கோள் காட்டி, "முத்தேர்.....தங்கினேன்" என்றவழி, அதற் குடம்படாது "அவ்வியானை வனப்பு.....கேட்டேன்" எனப் பொய்கூறினு னென்னுங் கருத்தினனாகிக் கூறுதலின் மடனழித லாயிற் றென்பர் இனம்; தொல். பொருளி. 'சூ. கo. 'தன்வயிற்' (ஆ) "முத்தேர் முறுவலாய்" இந்நூற்பக்கம் நகூo: உ - ஆம் குறிப்புப்பார்க்க.

உ "மும்மதத்துவாவை, வலையை வீசியே பிடித்திட மதித்துளாரென்ன"

ங "காவற் பாங்கி னுங்கோர் பக்கமும்" என்புழி, "புத்தியானை வந்தது காண்பான் யான் தங்கினேன்" என்பதனுல், யானையைக் காத்தற்குப் பிரிந்தேனெனத் தலைவன் கூறினுனென்பர் நச்; தொல். அகத். சூ. சக.

(பிரதிபேதம்) * இடத்து † காணயான் தங்கினேன், ‡ காண்பதாயான்,

அ ஓக்கும்
(க)அவ்வியானை வனப்புடைத் தாகலுங் கேட்டேன்
அவ்வியானைதான், சுண்ண(உ)நீ றுடி (ங)நறுநரு நீருண்
டொண்ணுதல் யாத்த திலக வவி*ரோடைத்
(ச)தொய்யில் பொறித்த வனமுலை வான்கோட்டுத்
தொய்யகத் தோட்டிக் குழைதாழ் வடிமணி
யுத்தி பொறித்த புனைபூண் பருமத்து
கஞ முத்தேய்க்கும் †வெண்ப னகைத் திறந்து
(டு)நன்னகர் வாயிற் கதவ வெளில் ‡சார்ந்து
தன்னலங் காட்டித் தகையினுற் காரட்டி வீழ்க்குந்
தொடர்தொட ராக ‖வலந்து படர்செய்யு
மென்றோட் டடக்கையின் வாங்கித்தற் கண்டார்
உ0 நலங்× கவளங் கொள்ளு நகைமுக வேழத்தை
யின்றுகண் டாய்போ லெவனெம்மைப் பொய்ப்பதுநீ

ள - து: அதுகேட்ட தலைவி, நீ கூறியது ஒக்குமென நெஞ்சொடு கூறி, பின்னர் அவன் கேட்ப + அந்தப் புத்தியானை, ஒன்ளிய நெற்றியிலே நிலை பெறுத்தின (ங)திலகமாகிய வீளங்கிய=பட்டத்தினையும், தொய்யில் எழுதின

க. கலி. கூஅ: கந-ஆம் அடிக்குறிப்பின்க ணுள்ள அம்பிகாபதிகோவை. (நிகo.) செய்யுள், ஈண்டும் அறியத்தக்கது.

உ. "நீருடிய களிறுபோல" பட். சஅ.

ங. "தெண்கட் டேறன் மாத்தி" அகம். ஙூசு: சு.

ச. "தொய்யில் பொறித்த சுணங்கெதிர் திளமுலை" மது. சகசு.

ஞ. நன்னகரென்பதனை இவ்வடியின் முன்னடிக்கும் தன்னலமென்பதனை இவ்வடிக்கும்ஈற்றுச்சீராக்கிஇம்மூன்றடியையும் அளவடியாக்கலுமாம்.

ட. திலகமென்பது நெற்றியிலணியும் ஓரணிகலமுமாம்; இதனை (அ) "ஒருத்தி தொறுமுத்தஞ் சேர்ந்த திலகம், ஒருத்தி யிமா ணவிர்குழை யாய்காதுவாங்க" (கலி. கூஉ; ஙஞ-ஙூ) என்பதனாலும்(அஅ)உதயனன் வாசவதத்தையின் அணிகளைக் கண்டு புலம்புமிடத்து, "அந்திபுண் மூளைத்த வெண்பிறை போலச், செந்தீச் சிறுநுதன் மூழ்கத் தீண்டி, நிலமிசை மருங்கின் வீழ்ந்தனை யோவெனத், திலக நோக்கிப் பலபா ராட்டியும்", (பெருங். (உ) கக:அச-கச.) என்று கூறுதலாலும் அறிய

(பிரதிபேதம்) *ஓடை தொய்யில. †வெண்பன்னகை. ‡சாய்த்த, சாய்த்த. ‖ வலர்த்துபடர். × ஏழல்கொள்ளும். + வர்தபுத்தியானை. = வட்டத்தினையும்.

அழகினையுடையமுலையாகிய வெண்மையையுடைய தோட்டினையும்,(க)தொய்யகமென்னுந் தலைக்கோலமாகிய தோட்டியினையும், தாழ்ந்த மகரக்குழையாகிய வடித்த மணிகளையும், திருவைப் பொறித்துவைத்த பூணைத்த தலைப் பணியாகிய கழுத்துமெத்தையினையும் உடைத்து; ஆகையினாலே அழகுடைத்தாகலும் பிறர் கூறக் கேட்டேன்; அந்த யானைதான் சுண்ணமாகிய நீற்றை அணிந்து *கறிய கள்ளாகிய நீரை உண்டு நல்ல மனைவாசலிற் கதவமாகிய கம்பத்தைச் சேர்ந்து அதனோடே தூவக்குண்டதே தனக்குச் சங்கிலியாகக் கட்டுண்டு தன்னழகைக் காட்டி அவ்வழகாலே ஒருவரும் போகாதபடி காலைத் தடித்து வீழ்க்கும்; அதுவேயுமன்றிப் பிறர்க்கு வருத்தத்தைச் செய்யும் மெல்லிய தோளாகிய தடக்கையாலே வாங்கிக்கொண்டு தன்னைக் கண்டாருடைய நலமாகிய கவளத்தை மூத்தையொக்கும் கையினையுடைய வெண்பல்லைத் திறந்து கொள்ளும்; அந்தச் சிறப்பை † முகத்தையுடைய†வழகை இன்று கண்டாய்போலே நீ எம்மைப் பொய்யாக்குவது என்ன‡பயனையுடைத்தென்றாள். எ - று.

"பருமப் பணையெருத்திற் பல்யானை புண்கூர்ந்து" (உ)என்றார் பிறரும். ஆடியென்பது முதலிய செய்தெனெச்சங்கள் வீழ்க்குமென்னும் முற்றுச் சொல்லோடு || முடிந்தன. அதுவேயுமன்றிக் கவளமும் கொள்ளுமெனப் பின்னும் முடிக்க. ÷நகையமுங்வேழமென்றது சுட்டாய் நின்றது.

உஉ எல்லா, கெழீஇத் தொடிசெறித்த + தோளினீ தந்தித்
தழீஇக்கொண் டேந்தாயு நீ

எ - து: எடா! ×தொடியைச்செறித்த தோளாகிய மருமத்தே கெழுமித் தழுவிக்கொண்டு பின்னர்த் தந்தி எறிஞயும் நீ எ - று.

இது முயக்கமும் புணர்ச்சியுங் கூறிற்று. யானைபாகனின், தந்திபூர்த்தாயென்றாள்.

உச குழீஇ, அரசினைற் றேம்புவா றிற்கடை யாற்
வுவாவுணீ யூர்ந்தாயு நீ

லாகும்.(இ)"திந்தூரத் திலகநுதற் சிந்தூரத்தின்"(ஈ)"தாரா ரோடைத் திலகநுதற் சுமிலம்" வில்லி. கிருட்டினன். கக. நான்காம்போர். கூஉ. என்புழி யானைநெற்றியிலும் திலகம் கூறப்படுகின்றது.

க. "தொய்யகம்" கலி. உஅ: கூ. இதற்கு, பூரப்பாளை யென்று பொருள் கூறுவர் அடியார்க்கு நல்லார்; சிலப். கூ: கஅஎ.

உ. களவழி. கூஅ.

(பிரதிபேதம்) * கறிதாகிய, † முகத்தையுடைய, ‡ பயனுடைத்து, || முடியும் அதுவேயுமன்றிக் கவழமும், ÷ நகையேழமென்றது. + தோளினைத் தந்திதழீஇக், ×தொடிசெறித்தநோள.

எ - து: நின்மேல் வேட்கையால் எதிர் கொண்டுவந்து கூடிப் பின்னர் வருந்துகின்ற பரத்தையருடைய மனையின் வாயிலே வழியாகக் கொண்டு போய் அவ்வியானையை அழகுண்டாக எறிஞயும் நீ. எ - று.

உவாவென்றதனை இளையமகளிராகவும் யானையாகவும் கூறுக. அது யுகம் உகமாயினும்போல் நின்றது.

உஈ மிகுஅதி; சீப்பய வெண்ட சிறுகளி மிருங்க
ளீர்த்துவிட் டிரந்தாயு நீ

எ - து: நின்னே மிகமதர்ச்சிப்பட நுகர்ந்த சிறிய களிப்பினையுடைய அழகினையுடையவாகிய மையுண் †கண் அழும்படி சிலநாள் வீட்டுப் பின்னர்க் கூடினையும் நீ. எ - று.

நின்னைக் கைகடவாமல் ஓர் அளவிற்பட மதம் பிறத்தற்கு வேண்டுவன வற்றை உண்ட, சிறிய களிப்பையுடைய, மக்க ளழகை உண்டற்குக் காண மான கண்ணையுடைய (க)யானையை நீர்க்கு விட்டு எறிஞய் நீ என்றும் ஒரு பொருள் தோன்றுகின்றது. அழகையுண்டல்-அவரைக் கொல்லுதல். கண், ஆகுபெயர்.

உஅ ‡சார்ச்சார், (உ) நெறிதா ழிருங்கூந்த னின்பெண்டி ரெல்லாஞ்
சிறுபாக ராகச் (கூ)சிரற்றரு தூ ||மெல்ல

க. "நிறையழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப், பறையறைந் தல்லது செல்லற்கு" கலி. நெய்: கூஉ - கூ, என்பதும் இந்நூற்பக்கம் கூசக: சை-ஆம் குறிப்பும் இங்கே கருதத்தக்கன.

உ. (அ)எல்லாமென்னுஞ்சொல் உயர்திணைக்கண்உளப்பாட்டுத்தன்மைக்கே வருமென்றும் அது "நெறிதா ழிருங்கூந்த னின்பெண்டி ரெல்லாம்" எனப் படர்க்கையின் வருதல் இலக்கணவழக்கன்று; நின் பெண்டி ரெல்லாரு மென்னுஞ்சொல் எல்லாமென மருவுவழக்காகி வந்த தென்றும் அதனைச் செய்யுண்மருங்கினுமென்னும் அதிகாரப்புறனடை யாற் பிறநூன் முடிபெனக் தழீஇக் கோடலுமா மென்றும் கூறுவர் தெய்வச்சிலையார்; தொல். பெயரி. சூ. கூஉ. 'எல்லாமென்னும்' (ஆ) எல்லா மென்பது "தன்னுளறுத்த பன்மைக்கல்லது உயர்திணை மருங்கினுக்கமில்லை" என்பதனால், சிறுபான்மை முன்னிலைக்கண்ணும் படர்க்கைக்கண்ணும் வருமென்றுகொண்டு, "நெறிதா ழிருங்கூந்த னின்பெண்டி ரெல்லாஞ, சிறுபாகராக" என்பதனைப்படர்க்கைக்கண் வந்ததற்கு (தொல். பெயரி. சூ. கூஉ.) நச்சினார்க்கினியரும், (இ) இ-வி. சூ. ககூக. இ-வி. தூவாரு மேறதேகாள் காட்டுவோர்; (ஈ) இதனை, சேனாவரையர் இடவழு வமைதியென்பர்; தொல். பெயரி. சூ. கூஉ.

கூ. சொற்றுதலென்பது பொதுவென்றும்வரும்; உடற்றுதல் உடறுதலென அருகிவருதலும் காண்க.

பாடபேதம்) * சிலைபட. †கண்ணைஅழும்படி. ‡ சாஅர்ச் சாஅர். || மெல்லவிடா.

விடாஅது நீயெம்மில் வந்தாயவ் வியாணை
கடாஅம் படுமிடத் தோம்பு.

எ - து: சார்ந்த சார்ந்த இடங்களிலுள்ள அறல்தங்கின கரிய கூந்தலை யுடைய நின் பெண்டிரெல்லாரும் நின்னைக் கோபியாதபடி எம்முடைய இல்லிலே வந்தாய்; *அதற்கு அப்புத்தியானே நீ ஏறுமாட்டாத(க்)பாகனும்படி யாக நின்னைக் கைகடந்து மதம்படும்; அவ்விடத்து விடாதே அதனை மெல் லெனப் பரிகரித்துத்தொள்ளெனப் புலர்துகூறினள். எ - று.

புதிய பரத்தையரைப் †புணர்த்தற்கு ஏனைப் பரத்தையர் கோபியாதபடி அதற்குப் பரிகாரமாக‡ஈண்டுவந்து என்பால்அடைத்தாய்; தலைவி மனைக்கண் தங்கினனென்று அவர் கருதுவாராக நினைத்தாயென்றாள்.

இதனால், இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது தாழுகொச்சகங்களும் சொற்சோடிகளும் வெண்பாக்களும் விரவி வந்த கொச்சகக்கலி. (கூஉ)

(கூஅ.) யாரைநீ பெம்மில் புகுதர்வா யோரும்
புதுவ மலர்தேரும் வண்டேபோல் யாழ
வதுவை விழவணி வைகலுங் காட்டிநீயாய்
மாட்டுமாட் டோடி மகளிர்த் தரத்தரப்

நி பூட்டுமான் றிண்டேர் புடைத்த மறுகெல்லாம்
பாட்டாதல் சான்றநின் மாயப் பரத்தைமை
காட்டிய வந்தமை கைப்படுத்தேந் பண்டெலாங்
கேட்டு மறிவேன்மன் யான்;

கூ தெரிகோதை யங்கல்லாய் தேறீயல் வேண்டும்
பொருகளை வாய்சூழ்ந்த பூமலி வையை
வருபுன லாடத் தவிர்ந்தேன் பெரிதென்னைச்
செய்யா மொழிவ தெவன்;

கஉ ஒலு, புனலாடி னுபெனவுங் கேட்டேன் புனலாங்கே
நீணீர் நெறிகதுப்பு வாரு மறலாக
மாணெழி லுண்கண் பிறழுங் கயலாகக்

க. பாகனென்னும், உரையுநோக்க, பாகரென்பதை ஈற்றில் அர்பெற்று வந்த பாகென்னுஞ் சொல்லாகக் கொண்டனரென்று தோற்றுகிறது.

(பிரதிபேதம்) * அதற்குப்புத்தியானே. † புணர்த்தற்கு ‡ ஈண்டுவேந் தாபென்பால்வந்தாயன் றென்றுள்ளினை.

கார்மலர் வேய்ந்த கமழ்பூம் பரப்பாக
காணுச் சிறையழித்து நன்பகல் வந்தவிவ்
வியாணர்ப் புதுப்புன லாடினுப் முன்மாலைப்
பாண்ன் பூணியாகப் புக்கு;

உ0 ஆனது, அளித்தமர் காதலோ டப்புன லாடி
வெளிப்படு கவ்வையை யானறித லஞ்சிக்
குளித்தொழுகி ஞயெனவுங் கேட்டேன் குளித்தாங்கே
போர்த்த சினத்தாற் புருவத் திரையிடா
வார்க்கு ளெகிழத்தா னன்னீர் நடைதட்பச்
சீர்த்தக வந்த புதுப்புன னின்னீக்கொண்
டூர்த்துய்ப்பக் கண்டா ருளர்;

உள ஈர்த்தது, உரைசால் சிறப்பினின் னீருள்ளம் வாங்கப்
புரைதீர் புதுப்புனல் வெள்ளத்தி னின்னுங்
கரைகண் டதூஉ மிலை;

ஈ0 நிரைதொடீஇ, பொய்யாவாட்டாணிப்புணிகழற்காற்றென்னவன்
வையைப் புதுப்புன லாடத் தவிர்த்ததைத்
தெய்வத்திற் றேற்றித் தெளிப்பேன் பெரிதென்னைச்
செய்யா மொழிவ தெவன்;

ஊச மெய்யதை, மல்கு மலர்வேய்ந்த மாயப் புதுப்புனல்
பல்காலு மாடிய செல்வுழி யொல்கிக்
களைஞரு மில்வழிக் காலாழ்ந்து தேரோ
டிளமண லுட்பட லோம்பு மூணேர்
முறுவலார்க் கோர்நகை செய்து.

இது பாத்தையிற்பிரிந்துவந்த தலைவன் ஆற்றமையே வாயிலாகச் சன்னுழி அவனைக் கண்டு நீ தாழ்த்த காரணமென்னை, புதுப்புன லாடித் * தாழ்த்ததென்ன, தலைவி இன்ன புதுப்புனலே ஆடியதென நருங்கிக் கூறியது.

இதன் பொருள்.

(க)†யாரைநீ யெம்மில் புகுதர்வா யோரும்
புதுவ மலர்தேரும் வண்டேபோல் யாழ

க. (அ) "யாரைநீ யெம்மில் புகுதர்வாய்" என்பது தலைவி அகமலி யூட லகற்சிக்கண் வேற்றுக்கிளவி கூறியதற்கு மேற்கோள்; தோல். கற்பி. திதிபேதம்) * தாழ்ததேனெனத்தலைவி நீ யின்னபுதுப்புனலோவர்டியது, † பாரையோ வெம்மில்.

(க)வதுவை விழவணி வைகலுங் காட்டினீயாய்
மாட்டுமோட் டோடி(உ)மகளிர்த் தகத்தரப்
பூட்டுமோன் றிண்டேர் புடைத்த மறுகெல்லாம்
பாட்டாதல் சான்றநின் மாயப் *பரத்தைதை
(ங)காட்டிய வந்தமை கைப்படுத்தேன் பண்டெலாங்
கேட்டு மறிவேன்மன் யான்

†எ - து: (சு)புதியனவாகியமலர்களைஆராய்ந்து நகரும்வண்டுபோலே நீ புதிய பரத்தையரை நுகர்தற்கு விரும்புதலின் அவரைக் கொண்டுவருதற்கு அவரிருக்கின்ற இடந்தோறும் இடந்தோறும் ஓடிச் சென்று அப்பரத்தையரைக் கொண்டுவருகையிலே எப்பொழுதும் பூட்டப்படுங் குதிரையை

சூ. சசு. 'அவன் குறிப்பு' இளம். (ஆ) "யாரைநீ சொல்லுகென்றலும்" (இ) "யாரைநீ தேற்றேன்", நந்தி. மார்க்கண்ட. உகஅ. அசுரர் யாக. உஎ. (ஈ) "நீயாரை நின்னிலே, சொல்லுதி" (உ) "யாரைநீ, யென்னோ டியம்பியது" கம்ப. வி.டீடண. நிஙூ. மீட்சி. கூ0. (ஊ) "யாரைநீ செப்புகென" (எ) "ஆரைநீயென" கூர்ம. இராமன்வனம். நுசு, கூஎ. (ஏ) "யாரைநீ ..... போற்றுகென்னே" நைடதம். பிரிவு உசு. என்பவற்றிலும் (ஐ) "நீயாரை" கலி அஅ: நு: என்பதிலும் அகன் குறிப்பிலுள்ளவற்றிலும் யாரை என்பதில் ஐகாரம் மூன்னிலை விளக்கிவருதல் காண்க; ஐ, அசையென்பாரு மூளர்.

க. "அறிவுடை யந்தண னவளைக்காட் டென்றுஞை" கலி. சஉ: கஅ.

உ. (அ) "இவ்வூர் மஞ்சையர்த் தொகுத்தினி, யெவ்வூர் நின்றன்று மகிழ்ந நின் றேரே" ஐங். சுஉ. (ஆ) "நல்லாரை நெடுநகர்த் தந்தநின், நேர்பூண்ட நெடுந்தேமான் றெண்மணிவந் தெடுப்புமே" (இ) "தேர் மயங்கி வந்த தொிகோதை யங்கல்லார்" கலி எ0: கஎ-கஅ, அஅ: கஅ. (ஈ) "தேர்தர வந்த நேரிழை மகளிர்" அகம். நுசு: கக.

ங. "செவியிற் கேட்பினுஞ் சொல்லிறந்து வெகுள்வோள், கண்ணிற் காண்பி னென்னை குவள்கொல்..... .....பலர்படிக் துண்ணுநின் பரத்தை மார்பே" ஐங்குறு. அசு.

சு. (அ) "வண்டு புதிதுண்ண" கலி. கஎ: கடு. என்பதும் (ஆ) அதன் குறிப்பும் இந்நூற்பக்கம் உநசு: சு-ஆம் குறிப்பில் (இ)இச்செய்திக்குப் பொருந்துவனவும், (ஈ) "தேனீப் புதுநரு வருந்தி யார்த்து" நந்தி. சுரம்புகு. உஅ. (உ) "பூந்துகள் விரவித் தோற்றுப் புதுமதுக் கவர்ந்து தேனீ, மார்துதன் மாந்தி" திருவாலவா. ஆரஞ். சுசு. என்பனவும் இங்கே ஒப்புநோக்கற் பாலன.

(பிரதிபேதம்) * பரத்தமை, † எ - து: ஒருமுசை, புதியன.

யுடைய திண்ணியதேர் ஆரவாரித்த தெருவுகளெல்லாம் நின்(க)பரத்தைமை கூறிய பாட்டி உண்டாதற்குப் பொருந்தின நின் பொய்யாகிய பரத்தைமைக் குணத்தை யான் முற்காலமெல்லாம் மிகவும் கேட்டும் அறிந்திருப்பேன்; அதுவேயன்றி நாடோறும் வரைந்து கொள்ளுங் *கல்யாணமாகிய வீழாவாலுண்டாகிய ஒப்பனையை என்னை ஒழிந்தவர்களுக்குக் †காட்டுதற்கு நீ வந்து இப்படி வருவையென நெஞ்சிலே தெளிந்துவிட்டேன்; (உ) எம்முடைய இல்லிலே புகுதலைச் செய்வாயாகிய நீ எமக்கு ஆராத்தன்மையையுடையை ‡ யென்றாள். எ - று.

ஒரும், அசை. கேட்டுமென்னும் உம்மை, எச்சம். யாழ, அசை. (ங)கைப் படுத்துதல், ஈண்டுத் தெளிதலே உணர்த்திநின்றது. புகுதருவாயென்பது, (சு) புகுதர்வாயெனத் திரிந்துநின்றது; உகரம் விகாரத்தாற்||றொக்கதெனினுமாம்.

கூ (டு)தெரிகோதை யந்நல்லாய் ×தேறியல் வேண்டும்
பொருகரை வாய்சூழ்ந்த (கூ)பூமலி (எ)வையை
வருபுன லாடத் தவிர்ந்தேன் (அ)பெரிதென்னைச்
செய்யா மொழிவ தெவன்

எ - து: அதுகேட்ட தலைவன், தெரிந்த மாலையினையும் அழகினையுமுடைய நல்லாய்! யான் செய்யாதனவற்றைப் பெரிதாக என்னைச் சொல்வது என்னபயனையுடைத்து? தன்னிடத்தேசூழ்ந்த பூக்கள் மிக்க நீர்பொருகின்ற கரையையுடைய வையையாற்றில் வருகின்ற நீரையாடுதற்குத் தங்கினேன்; அதனை நின் னெஞ்சால் + (கூ)தெளிதல்வேண்டுமென்றான். எ - று.

க. "மகிழ்நன் பரத்தைமை பாடி யலிழிணர்க், காஞ்சி நீழற் குரவை யயரும்" அகம். ஙூஙு: அ - கூ.

உ. "எம்மனை, வாரலீ வத்தாங்கே மாறு" கலி. அக: உ - ஊ.

ங. "தைப்படுதி" (சீவக.ககஂஂ.) என்பதற்கு, 'காண்பை' என்று பொருள் செய்திருத்தலும் இங்கே கருத்தம்பாலது.

சு. "திரிதர் வாய்" பரி. கஂ: கஉக.

டு. "தெரிகோதை யந்நல்லார்" கலி. அஅ: கஅ.

கூ. "வையை யென்ற பொய்யாக் குலக்கொடி,.....புண்ணிய நறு மல ராடை போர்த்து,.....புனல்யா றன்றிது பூம்புனல் யாறென" சீலப். கங: கஎஂ - கஎச.

எ. "வையை வருபுன லாட லினிது கொல்" தொல். மெய்ப்பாட். சூ. கக. இளம். மேற்கோள்.

அ. கலி. கூஅ: ஙஉ - ஙஙூ.

கூ. ஒஒதல் வேண்டும்' (குறள். கூடுங) என்பதற்கு, தவிர்க வென்று பொருளெழுதி யிருப்பதும் 'காத்தல் வேண்டும்' (சீவக. உ0க.)

(ரு நிதிபேதம்) *கல்லியாணமாகிய, †காட்டுதற்குஎன்றுநினைப்படியையென,‡என்றுன்கேட்டும், || தொக்கது. தெரி, × தெரியல்வேண்டும். + தெளிதல்வேண்டும்.

கக ஒஒ ! என, கூறிய பொய்யை வியந்து நெஞ்சோடு கூறினள்.

புனலாடி ஞயெனவுங் கேட்டேன் (க)புனலாங்கே
நீணீர் நெறி(உ)கதுப்பு வாரு மறலாக
மாணெழி லுண்கண் பிறழுங் கயலாகக்
கார்மலர் வேய்ந்த கமழ்பூம் பரப்பாக
நாணுச் சிறை*யழித்து (ங)நன்பகல் †வந்தவவ்
வியாணர்ப் புதுப்புன லாடினுப்(ச)முன்மாலைப்
பாணன் பூணியாகப் புக்கு

எ - து: அவ்விடத்தே புனலாடினு ‡யென்றுங் கேட்டேன்; நீ ஆடிய புனல்தான் ஒழுகும் அறல் நீண்ட தன்மையையுடைய நெறித்த மயிராக, ஆண்டுப் பிறழுங் கயல்கள் மாட்சிமைப்பட்ட அழகினையுடைய உண்கண்ணாக, ‖ கருமை மலர்தல் பொருந்தின கமழ்கின்ற பூக்களையுடைய சோலையிடத்தே நாணுகிய அணையை முறித்துப் பலருங் காணும்படி பகற்பொழுதிலே ×வந்த அந்தப் புதுவருவாயையுடைய புதுப்புனலைப் பாணன்வாயிலாக ஊட=நீர்த்து மாலைக்காலத்திற்கு முன்னே சென்று ஆடினுயென்றாள். எ-று.

மலர்தல், பரத்தற்பொருட்டு. +

என்பதற்கு, கரப்பாயாகவென்று பொருள் கூறி வேண்டுமென்பது உம்மீற்றுவந்ததேர் எவல்கண்ணிய வியங்கோள்; "வாழ்தல்வேண்டுமிவண் வரைந்த வைகல்" (புறம். ஈகூஎ) என்றுரை பிறரும் என்று மேற்கோள்காட்டியிருப்பதும் "ஊக்கல் வேண்டும்" (தீவக. உசுஎ.) என்பதற்கு, போவாயாகவென்று பொருள் கூறி வேண்டுமென்பது ஒரு'வியங்கோளென்று எழுதியிருப்பதும் ஈண்டு அறிதற்பாலன.

க. "தேனுகர் வண்டு ஞிமிறுஞ் சுரும்புஞ் செறிகுவளைப், பூநகு தண்புனற் பொய்கைகல் லூர புதுப் புனலும், கானமர் புள்ளுங் கடவுளும் வாசியும் காய்னெமால், யானேயு மாவர்கொல் லோகாஞ் ஞாளும்வந் தெங்கையரே" அம்பிகாபதி. இக0.

உ. "விலங்குநிமிர்ந் தொழுகிய கருங்கய னெடுங்கண், வீரைமலர் நீங்கா வவிரறற் கூந்த, லலரருபுரந் தூட்டி முயர்பே ரொழுக்கத்துப், புலவர் நாலிற் பொருந்திய பூங்கொடி, வையை யென்ற பொய்யாக் குலக் கொடி" சீலப். கஈ: கசுசு - கஎ0.

ஈ. இந்நூற்பக்கம் சசடு: உ-ஆம் குறிப்புப் பார்க்க.

ச. முன்மாலையென்பது இரவின் முன்னதாகிய அந்திக்கும் பின்மாலை யென்பது இரவின் பிற்னதாகிய அந்திக்கும் பெயராகுமென்றும் கூறுவர்.

(பிரதிபேதம்) * அழிக்த. † வந்தவிவ்வீ பாணர்ப். ‡ என்று கேட்டேன், ‖ கருமையலர் தல் × வந்த புதுவருவாயை. = நீர்த்த. + ('புதுவருவாயையுடையது புதுப் புனல்' என்பது முன் பதிப்பு.)

உ0 ஆனது, ஆளித்தமர் காதலோ டப்புன லாடி
வெளிப்படு கவ்வையை யானறித லஞ்சிக்
(க)குளித்தொழுகி னையெனவுங் கேட்டேன் குளித்தாங்கே
போர்த்த சினத்தாற் புருவத் திரையிடா
வார்க்கு ளெகிழத்தா னன்னீர் நடைதட்பச்
சீர்த்தக வந்த புதுப்புன னின்னைக்கொண்
டூர்த்துய்ப்பக் கண்டா ருளர்.

எ - து: மேன்மேலே தலையளிசெய்து அமர்ந்த காதலோடே அப்புனலே ஆடுதலால் வெளிப்படுகின்ற அலரை யான் அறிதலே அஞ்சி ஒறைந்து நடந்தாயென்ற பிறர் சொல்லவுங் கேட்டேன்; அதுபொருமல் மெய்யை மறைத்த சினத்தோடே புருவமாகிய *திரையையிட்டு நல்லநீர்மையையுடைய நின் ஒழுக்கத்தைத் தடுக்கும்படி கனம்பட வந்த சிலம்பொலியாலே ஆர வாரிக்கும் புதியபுனல் நீ குளித்த அவ்விடத்தே நின்னைக் கைக்கொண்டு இழுத்துச் செலுத்தக் கண்டாரும் உளரென்றாள். எ - று.

குளித்த கடைக்குறைந்தது. குளித்தொழுகுவென்று நீரிற் பிறக்குந் தொழிலுந் தோன்றநின்றது. கோபத்தாற் பல்காலும் புருவம் எறி மூரி வதனைத்†திரையிடாவென்றாள். ஒழுகினையெனவுமென்ற உம்மை எச்சவும்மை. பாணன் பூணையாக ஆடியதே ‡யன்றி யென நிற்க லின்.

உஎ ஈர்த்தது, (உ)உரைசால் சிறப்பினின் னீருள்ளம் வாங்கப்
புரைதீர் புதுப்புனல் வெள்ளத்தி னின்னுங்
கரைகண் டதூஉ மில்லை

எ - து: அங்ஙனம் இழுத்த நீர், புகழமைந்த தலைமையினையுடைய நினது நீர்மையையுடைய நெஞ்சை வாங்கிக்கொள்கையினாலே குற்றமற்ற அப்புதுப்புனலினுடைய பெருக்கினின்றும் கரையேறுதற்கு இன்னும் கரை கண்டதுதானும் ||இல்லையென்றாள். எ - று.

இன்னுமென்ற உம்மை, சிறப்பு. கண்டதுமென்ற உம்மை, காணுமையே யன்றிக் கண்டதுமில்லையென எதிர்மறை.

ஈ0 நிரைதொடீஇ,(ங)பொய்யாவாட்டானைப் புணைகழற்காற்றென்ன
வையைப் புதுப்புன லாடத் தவிர்ந்ததைத் [வன்

க. குளித்தல் - மறைதல். "மயின்மயிற் குளிக்குஞ்சாயல்" சிறுபாண்.கக.

உ. "உரைசால் சிறப்பின், மன்னன் மாரன்" சிலப். அ: இ-க.

ங. இப்பொருளில், "ஆய்வாள்" என்ற சொல்லாட்சியே பெரும்பான்மை.

(பிரதிபேதம்) *நிரையைவிட்டு. † நிரையிடவென்றாள். ஒழுகினையென்றவும்மை ‡ அன்றி நிற்றலின், || இலையென்றாள்.

(க)தெய்வத்திற் றேற்றித் தெளிப்பேன் பெரிதென்னைச்
செய்யா மொழிவ தெவன்.

எ - து: அதுகேட்ட தலைவன், *நிரைதொடியினையுடையாய்! (உ) தப்பாத வாட்டானையினையும் புனைந்த கழற்காலினையுமுடைய பாண்டியனது வையை யாற்றின் வந்த புதிய புனலே ஆதற்குத் தங்கினபடியை வார்த்தையாற் றெளிவித்து, பின்னர்த் தெய்வத்தாற் றெளிவிப்பேன்; நினக்கு யான் செய்யாதனவற்றை என்னைப் பெரிதாகச் சொல்லுகின்றது என்னபயன்தரு மென்றான். எ - று.

இந்நிலத்திற்கு உரியதெய்வம் (ங) இந்திரன்.

கூச (ச)மெய்யதை, †மல்கு மலர்வேய்ந்த மூதப் புதுப்புனல்
பல்காலு மாடிய செல்வுழி யொல்கிக்
களைஞரு மில்வுழிக் காலாழ்ந்து தேரோ
டுளமண லுட்பட லோம்பு முளைநிர்
முறுவலார்க் தோர்நதை செய்து

எ - து: ‡பெருகிய மலரைச் சூடின பொய்யையுடைய புதிய புனலைப் பலகாலும் ஆடல்வேண்டித் தேரோடுசெல்லுமிடத்து (ஙு)முளையொத்த முறு வலையுடையார்க்கு ஒரு சிரிப்பை உண்டாக்கி நின்னைப் பிடித்துக் கரையேற விடுவாரில்லாதகாலத்தே இளமணலினுள்ளே || கால்நிலை தளர்ந்து கழுமி அகப்படுதலைப் பாதுகாப்பாயாகெனத் தலைவி நெருங்கிக்கூறினள். எ - று.

க. "செய்யாத சொல்லிச் சினவுவ தீங்கெவ, னையத்தா லென்னைக் கதி யாதி தீதின்மை, தெய்வத்தாற் கண்டு தெளிக்கு" கலி. கூக: கு-அ.

உ. தப்பாத வாள் தானை - தவறுமல் வெட்டுகின்ற வாட்படை.

ங. "ஊடலுங் கூடலுமாகிய காமச்சிறப்பு நிகழ்தற்கு, மருத நிலத்திற்குத் தெய்வமாக 'ஆடலும் பாடலு மூடலு முணர்த்தலும்' உள்ளிட்ட இன்ப வினோயாட்டு இனிதினுகரும் இமையோர்க்கும் இன்குர லெழிலிக்கும் இறைவனுகிய இந்திரனே ஆண்டையோர் விழவுசெய்து அழைத்தலின் அவன் வெளிப்படுமென்றார். அது 'வையைப் புதுப்புன.....தேற்றித் தெளிக்கு' என இந்திரனைத் தெய்வ மென்றதனுலும்..... உணர்க" தொல். அகத். சூ. இ. கச்.

ச. மெய்யதையென்பதற்கு, உரை காணப்படவில்லை.

ஙு. காணன் முளையை மகளிர்பல்லுக்கு உவமைகூறுதல் தமிழ்நான் மரபு; "இனேயரி நாணத் திழந்து மணற் கீன்ற, முளேயோ ரன்ன முள் ளெயிற்றுத் துவர்வாய்" (அகம். உகஉ: ச-ஙு.) என வருதல்காண்க.

(பிரதிபேதம்) * நிரைத்தொடியினை. † மல்லிமலர்வேய்ந்த. ‡ பெருகுமலை. || தான்னிலை தளர்ந்து கழுமி அகப்படுத்தலைப் பாதுகாப்பாய்நென.

இதனுல், இருவருக்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது தரவும் போக்கும் ஐஞ்சீரடுக்கிய பாட்டும் இடைமிடைந்த கலி வெண் பா. (க) (ஙஙு)

(கூகூ.) நறவினே வரைந்தார்க்கும் வரையார்க்கு மவையெடித்
தறவினே யின்புறூஉ மந்தண ரிருவருந்
திறம்வேறு செய்தியி னூனெறி பிழையாது
குழவியைப் பார்த்துறூஉந் தாய்போ லுலக்கத்து
மழைசுரந் தளித்தோம்பு நல்லூழி யாவர்க்கும்
பிழையாது வருதனின் செம்மையிற் றரவாய்ந்த
விழையணி கொடித்திண்டே ரினமணி யானைபாய்;

அ அறனிழ லெனக்கொண்டா யாய்குடை யக்குடைப்
புறநிழற்கீழ்ப் பட்டாளோ விவளிவட் காண்டிகா
பிறைதுதல் பசப்பூரப் பெருவிதுப் புற்றூளே;

கக பொய்யாமை தூவலுநின் செங்கோலச் செங்கோலின்
செய்தொழிற்கீழ்ப் பட்டாளோ விவளிவட் காண்டிகா
காமநோய் கடைக்கூட்ட வாழுநாண் முனிந்தாளே;

கசஃ ஏமமென் றிரங்குநின் னெறிமுரச மம்முரசி
னேமத் திகந்தாளோ விவளிவட் காண்டிகா
வேய்நல மிழந்ததோள் கவின்வாட வீழப்பாளே;

ஆங்கு;

கஅ நெடிதுசே ணிகந்தவை காணினுந் தானுற்ற
வடுக்காட்டக் கண்காணு தற்றுக வென்றூழி
தொடிகொட்ப நீத்த கொடுமையைக்
கடிதென வுணராமை கடிந்ததோ நினக்கே.

*இஃது அரசன் தலேவனுயவன்தலேவியைநீங்கி இருந்ததற்குத் தலேவி புலவிநீட்டித்து ஆற்றளாயவழி அவட்கு நீகழ்ந்த (உ) காமத்துமிதற்றை அவ்வரசனே நோக்கிச் சான்றோர் கூறியது. இது பெருந்திணை.

க. காவற் பாங்கி ஞங்கோர் பக்கத்திற் றலேவன் கூறியவற்றைத் தலேவி பரத்தையராக்கிக் கூறுவதற்கு இதுவும் மேற். தோல். அகத். சூ. சஙி.

உ. இச்செய்யுள் காமத்து மிகுதிறத்தான் அரசனே நோக்கிச் சான்றோர் கூறியதாதலின் மருதத்துக் கோத்தாரென்பது. (தோல். அகத். சூ. கஙூ. நச்.) காணப்படுகின்றது.

(பிரதிபேதம்) * இவ அரசன்.

இதன் பொருள்.

நறவினை வுரைந்தார்க்கும் வரையார்க்கு மவையெடுத்
தறவினை யின்புறாஉ மந்தண ரிருவருந்
திறம்வேறு செய்தியி னூனெறி பிழையாது
குழவியைப் பார்த்துறாஉந் தாய்போ லுலகத்து
மழைசுரந் தளித்தோம்பு (க)நல்லூழி யாவர்க்கும்
பிழையாது *வருதனின் செம்மையிற் றரவாய்ந்த
(உ)விழையணி கொடித்திண்டே ரினமணி யானையாய்

எ - து: கள்ளே உண்ணல் ஆகாதென்று நீக்கின †தேவர்க்கும் அதனை உண்டலே நீக்காத அசுரர்க்கும் (ங) வரைத்தும் வரையாமையுமாகிய அவ்விரண்டினையும் கைக்கொண்டு அறத்தொழிலாக இன்பமுறுத்தும் வியாழமும் வெள்ளியுமாகிய‡குரு இருவருஞ் செய்த வழி வேறுகிய தொழில்களையுடைய

க. (அ) மழைதொழி லுதவு மாதிரங் கொழுக்க... ....நல்லூழி யடிப்படரப், பல்வெள்ள மீக்கூற, வுலக மாண்ட வுயர்ந்தோர் மருக" மது. கO-உங. (ஆ)"உரவிப் பெருங்கலித் தன்பங்கள் போய்முத லூழியின்பம், வரவிப்படிதன்னை வாழ்வித்தவாணன்" தஞ்சை.உசு. என் பவை "நல்லூழி.....யானையாய்" என்பதனோடு ஒப்புநோக்கற்பாலன.

உ. (அ) "இழையணிந் தியல்வருங் கொடிஞ்சி நெடுந்தேர்" தும்பை. ஙசடு. (ஆ) "இழையணி நெடுந்தேர்" (இ) "இழைகிளர் நெடுந்தேர்" புறம். கஉங: ச; ஙடுக: கடு.

ங. வியாழமும் வெள்ளியுஞ் செய்த அசுரியனூல்கள் முறையே பாருகற்பத்திய சூத்திரமென்றும் சுக்கிரநீதியென்றும் பெயர்பெறும்; கள்ளுண்டல் பல நூல்களிலும் விலக்கப்பட்டுள்ள தென்பது உலகமறிந்த தொன்று; பிறவற்றுற் றீராப் பிணிநீர வேண்டி, நறவைத்தா னுண்டாற்கு நற்றீர்-வுறவைத்தான், பண்டுபொன்னேன் றத்த பராகசாந் தாயணப் பேர், கொண்ட திருச்சிரங்கள் கொண்டு, இதனுல் வியாழத்துக்கும் கொள்கை அதுவாதல் புலனுகும். சுக்கிரநீதியில் அளவு கடவாத மத்தியபானம் பிரதிபையையும் புத்தித்தெளிவையும் தைரியத்தையும் சித்தநிச்சயத்தையும் உண்டாக்குமென்று கூறப்பெற்றிருக்கிறது; வேறு விளக்கமாக அந்நூலிற் கண்டாலும் உசனஸ்மிருதியிற் கண்டாலும் பின்பு அசசெய்தி குறிக்கப்பெறும்; யாக்ஞ்ய வற்கியர் மத்தியபான சுராபான நிஷேதம் அந்தணர்க்கே யென்றும் அரசர் மூதலியோர்க்கன்றென்றும் மக்கட்பிரிவுக்கு வருத்துக் கூறியுள்ளார்; அஷ்டாங்க ஹ்ருதயம் சிகித்ஸாஸ்தானம் ஏழாவது அத்தியாயத்தில் நறவின் சிறப்பும் அதன் வகையின் பெயர்களும் பயனும் மற்றும் பலவும் விரித்துரைக்கப்பட்டிருத்தல் இங்கே அறியத்தக்கது.

(பிரதிபேதம்) * வருதனின், † தேவர்களுக்கும். ‡ அந்தணரிருவரும்.

அரசியலைக் கூறும் நூல்வழியைத் தப்பாமல், குழவியைப் பார்த்துஇன்புறூஉக் தாய் (க) அதற்கு மூலைசுரத்து கொடுக்குமாறுபோல, (உ) மழையானது தன்னை(ங)வேண்டின காலத்தே பெய்து(ச)உலகை அளித்துப் பாதுகாக்கும் கல்ல முறைமையை எல்லார்க்குந் தப்பாது வருதலை நினது நடுவுநிலைமை

"வெள்ளியும் பொன்னு மென்போர் விதிமுறை மெய்யிற் கொண்ட, வொள்ளிய காளினல்ல வோரையி னுலகமூன் றும்,துள்ளினர் குனிப்ப மௌலிசூடினுன் கடலில் வந்த, தெள்ளிய திருவுந் தெய்வப் பூமியுஞ் சேருந் தோளான்" கம்ப. திருவபிடேக. ங.அ. என்பதும் இவ்விருவ ரும் அரசியனூல் செய்தன ரென்பதனை வலியுறுத்தும்.

க. (அ) "புனிறுதீர் குழவிக் இலிற்றுமூலைப்போலச், சுரந்த காவிரி மரங் கொன் மலிநீர், மன்பதை புரக்கு நன்னுட்டுப் பொருநன்" புறம். ங.அ: அ - கo. (ஆ) "சரயு வென்பது தாய் மூலை யன்னதிவ், வரவு நீர்நிலத் தோங்கு முயிர்க்கெலாம்" கம்ப. ஆற்று. கஉ. (இ) "ஈன்ற குழவி முகங்கண் டிரங்கித், தீம்பால் சுரப்போ டன்மூலை போன்றே, ...அவர், முகங்கண்டுசுரத்தல் காண்டல் வேட்கையேன்" மணி. கக: ககச - ககஅ. என, பிறவற்றுக்கும் உவமையாய் கூறப்பட் டுள்ளது.

உ. (அ)"வேந்தன் மூறைநெறியிற் சேர்தலும்.....இங்கண்மும் மாரிக்கு வித்து" திரிகடுகம். ங.அ. (ஆ) "இயல்புளிக் கோலோச்ச மன்னவ னுட்ட, பெயலும் விளையுளுந் தொக்கு" குறள். நிசெடு. (இ)"மழைவளஞ் சுரக்கு மாறும் வயனிலம் வீளைய மாறும்,..... .....பிறழ்தாக் கோலி னுகும்" விநாயக. அரசியற்கைப். அங. என்பனவும் (ஈ) "மூறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி யொல்லாது வானம் பெயல்" குறள். நிடுங. (உ) "கோனிலை திரிந் திடிற் கோணிலை திரியுங், கோணிலை திரிந்திடின் மாரிவறங் கூரும்" மணி. எ: அ-ங. (ஊ) "செங்கோல் கோடியோ.....நலத்தகை நல்லாய் நன்னு டெல்லா, மலத்தற்காலை யாகியதறியேன்" மணி.உஅ ககஅ - ககக. (எ) "நீணிலை மாரி யின்றி வீளைவஞ்சிப் பசிய நீடிப்,... .....வுலகு கேடா மரசுகோல் கோடி னென்றான்" சீவக. உநிடு. (ஏ) "வேந்தன் முறைதிறம்பின்.....மாந்தர் பசியா லுணங்க மழைவறந்து, பாந்தண் முடிஇடந்த பாரின்வீளை வஞ்சு மால்" பிரமோத்தர. பத்திராயுவுக்கு. கஅ. என்பனவும் இங்கே ஒப்பு நோக்கற்பாலன.

ங. "மூறைவேண்டு பொழுதிற் பதனெளி யேரீண், மறைவேண்டு பொழுதிற் பெயல்பெற் றேரே" புறம். நடு: கடு - கக.

ச. "மண்ணுடை ஞாலம் புரவெதிர் கொண்ட, தண்ணிய வெழிலி" பதிற்: கஅ: ங - கo.

யாலே உலகத்திற்குத் தரும்படியாக வாய்த்த இழையணிந்த கொடியினை புடைத்தாகிய திண்ணியதோளினையும்(க)மணிகட்டின இனமாகியயானையினையு முடையாய்! எ - று.

ஊழ் ஊழியெனத் திரிக்கத.

அ (உ)அறனிழ லெனக்கொண்டா *யாய்குடை யக்குடைப் புற†நிழற்கீழ்ப் பட்டாளோ விவளிவட் ‡காண்டிகா பிறைநுதல் பசப்பூரப் பெருவிதுப் புற்றாளே

எ - து : ‖ நின் அழகிய குடையினது நிழல் அறத்தைச் செய்யுமென்று எடுத்தாய் ; அத்தக்குடையினது நிழலின்புறத்தே இவளைப்பட்டாளோ ? அதிற் பட்டவளல்லள் ; இங்ஙனம் பிறைபோலும் நுதல் பசப்புப் பரப்பப் பெரிய (ங)நடுக்கமுற்ற இவளை இவ்விடத்தே அருளிப்பாராய். எ - று.

Xகாண்டியென்னும் முன்னிலைவினையோடு (ச)காவென்னும் அசைநிலை யிடைச்சொல் நின்றது.

க. "மணியிலைக் குஞ்சரம் வேந்தூர்த லின்னு" இன்னு. கச.

உ. (அ) "வெண்குடை, நிலவுக்கடல் வரைப்பின் மண்ணக நிழற்ற, வேம முரசு மிழுமென முழங்க, நேமி யுய்த்த.....கவுரியர் மருக" புறம். ங: க - ஙி. என்பதும் (ஆ) "மன்னுயிர் காக்குமிம் மன்னனு மென் கொலோ, வின்னுயி ரன்னானைக் காட்டி யெனைத்தொன்று, மென்னுயிர் காவா தது" கலி. கசஙங: ஙங - ஙி. (இ) "மண் காவல் கொண்ட வடிநெடு வேன்முடி மன்னவர்க்குப்,பெண்காவல் கொள்கை பெரும்பழி போலும் பெருந்தகையே" அம்பிகாபதி. ஙஉ0. என்பவையும் (ஈ) "முன்னமே மொழிந்தா யன்றே யிவன்குறை முடிப்ப தைய, பின்னிவன் வினையின் செய்கை யதனையும் பிழைக்க லாமோ" கம்ப. வாலிவதை. கஉஎ. (உ) "வானும் வையமும் காத்து வரம்பிலா, ஞான மாவியு மோம்பிய மாயற்கு, மீனும் வேலும் வெருவரு கண்ணியும், யானுமோபிற ரென்றுளங்கன்றுமால்" திருக் கழக்காண்டம். நாராயணச். கச. என இதனிழலாய் வருவனவும் இங்கே அறிதற்பாலன.

ங. வீதுப்பென்பதற்கு, புறநானூற் றுரையாசிரியரும் நடுக்க மென்றே பொருள் கூறினர். இவர்கள்கொள்கை, இச்சொல் வீதிர்ப்பின் மரூஉ வென்பதுபோலும்; விதும்பலென்பதற்கு விரைதலென்று பொருள் கூறுவர் பரிமேலழகர்.

ச. காவென்னுமிடைச்சொல் அசைநிலையாய்வருதற்கு "அறனிழ..... .....காண்டிகா" என்பது நன். இடை சூ;உஉ. மயிலை. விருத்தி.

(பிரதிபேதம்) * நின்குடையக்.†நிழற்பட்டாளோ. ‡கண்டிகா.‖நின்குடையினது. X கண்டி.

ரூ ரு பொய்யாமை நுவலுநின் *செங்கோலச் செங்கோலின்
செய்தொழிற்கீழ்ப் பட்டாளோ விவளிவட் †காண்டிகா
காமம்‡ நோய் தடைக்கூட்ட வாழுநாண் முணிந்தாளே

எ - து: (க) நினது || செங்கோலினுடைய உயர்ந்த நடுவுநிலைமை தப்பாமையை உலகம் புகழ்ந்து கூறுநிற்கும்; அந்தச் செங்கோலினுடைய இனிய செய்தொழிலுக்குக் கீழாகிய கொடுந்தொழிலின்கண்ணே இவள் அகப்பட்டாளோ ? அதிற்பட்டவளல்லள்; இங்ஙனம் காமநோய் இறந்துபாட்டைச் சேர்த்துகையினுலே தான்உயிர்வாழும் ÷நாளே வெறுத்த்இவளே இவ்விடத்தே யருளிப்பாராய். எ - று.

ரூ ச ஏமமென் றிரங்குநின் னெறிமுரச மம்முரசி
+னேமத் திகந்தாளோ விவளிவட் × காண்டிகா
வேய்நல மிழந்ததோள் கவின்வாட விழப்பாளே

எ - து: நின்னுடைய எறிகின்ற முரசம் இவ்வுலகத்திற்குக் காவலன்று கூறும்படியாக ஒலியாநிற்கும்; அந்த முரசினது காவலினின்றும் நீங்கினளோ ? நீங்கினவளல்லள்; இங்ஙனம் மூங்கில் தன்னலனிழத்தற்குக் காரணமான தோள் பழைய அழகுகெடும்படி வருந்துகின்ற **இவளை இவ்விடத்தே அருளிப்பாராய். எ - று.

ஓகாரங்கள், எதிர்மறை.
ஆங்கு, அசை.

ரூ அ நெடிதுசே ணிகந்தவை காணினுந் தானுற்ற
(உ)††வடுக்காட்டக் கண்காணு தற்றுக வென்றோழி

இ - வி. சூ. உளள. இவற்றிலும் "புறநிழற்.....காண்டிகா" என்பது தோல். இடை. சூ. ரூக. சேனு; நச். சூ. ரூ0. 'யாகா' தெய்வச். நன். இடை. சூ. உஉ. இரா; இவற்றிலும் மேற்கோள்.

க. "நடைதனக்குக், கோடாமொழிவனப்புக்கோற்கதுவே" சிறுபஞ்ச. எ. என்பதும்"தெரிவுகொள்செங்கோல்அரசென்பதுணை அரசெல்லாம் தங்நாட்டு நன்றுதீதும் ஆராய்ந்து அதற்குத்தக்க தண்டஞ்செய்தற்கு உரிமையும் அதுவெனக்கொள்க" (தோல். மபு. சூ. எக. பேர்) என்பதும் இக்கே அறிதற்பாலன.

உ. (அ) "தன்வழிக் குற்றங் காணுக் கண்ணெனத் தான்செய் குற்ற, முன்னிடா தவனைக் கோபித்து" மேருமந்தர. உசூக. என்பதும்,

(பாடபேதம்) *செங்கோற்செங்கோலின், †காண்டிகா. ‡ கோய்க்கடைக் கூட்ட, ||செங்கோலினையுடைய, ÷ நான்வெறுத்த,+ ஏமத்தினிகந்தாளோ. × கண்டிகா, ** இவளையருளிப்பாராய். †† வடிக்காட்டிற்கண்.

தொடிகொட்ப நீத்த கொடுமையைக்
கடிதென வுணராமை கடிந்ததோ நினக்கே

எ - து: கண் * சேணெடிதாக நீங்கின பொருள்களைக் காணினும் தான் தன்னிடத்தே உற்ற வடுவைப் பிறர்காட்டவும் காணுத தன்மைத்தாக † என்னுடையதோழியினது தொடிகள்சுழன்று கழலும்படியாக நீ கைவிட்ட கொடுமையை நீகடிதென்று உணராதிருத்தல் நினக்குச் (க) சான்றோராற் கடியப்பட்டவற்றில் ‡ ஒன்றே ! அஃதின்றேயென்றான். எ - று.

இதனைக் (உ) கைக்கிளையென்பார்க்குச் சுட்டி ஒருவர் பெயர் கொள்ளாது நிற்றலிற் கைக்கிளை || யாதாயினவும், இதனைக் (ங) குறுங்கலியென்பார்க்கு அதற்கியலுநரும் தொல்காப்பியனுரும் கூறுமையின் அப்பெயர் —பொருந்தாதெனவும் கூறி மறுக்க.

(ஆ) "காதன் மிக்குழிக் கற்றவும் கைகொடா, வாதல் கண்ணகத் தஞ்சனம் போலுமால்" (இ) "கற்ற கல்வியுங் கண்ணகத் தஞ்சனம் புறத்தே, யுற்ற வொண்பொருள் விளக்கியுண் கண்ணிற்கு குகவாப், பெற்றி யெரப்புற" என வடிவினிலையில் அஞ்சனத்தையும் சேணிகத்த வற்றினிலையில் பிறபொருளையும்நிறுவி ஒருவாறாக அமைத்திருத்தலும் இங்கே அறிதற்பாலன.

க. "கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதா, முடிந்தாலும் பீழைதரும்" என்பது இங்கே அறிதற்பாலது; திருவள். கூகூ அ.

உ. 'கலிவெண் பாட்டே' என்னுஞ் சூத்திர வுரையில், ("அறனிழல்... .....விதுப்புற்றாலே" என்பதை மேற்கோள் காட்டி, இது சுட்டி ஒருவர் பெயர் கொள்ளாக் கைக்கிளை வந்ததாலென்ன், அற்றன்று; தலைமகன் அன்பின்மை மெய்யாகினன்றே அன்னதாவது; இஃது அன்னதின்றி ஊடல் காரணமாக அன்பிலனென்று இல்லது சொல்லினமையின் இஃதொருதலை யன்பாகாதென்பர் பேராசிரியர்; தொல். செய். சூ. கசுo; நச்சினார்க்கினியரும் இதனையே தழுவியெழுதினர்.

ங. குறுங்கலியென்பது அகப்புறத்திணையுளொன்றாகிய பெருந்திணையின் துறை பத்தனுள் ஒருதுறையென்று வீரசோழிய உரையாலும் அத்திணையில் அத்துறையில் "நாறிருங் கூந்தன் மகளிரை நயப்ப, வேறு படு வேட்கை வீயக் கூறின்று" என்று புறப்பொருள்வெண்பாமாலையாலும் தலைவனால் துறக்கப்பட்ட தலைவியை அவனெடு கூட்டல் வேண்டிச் சான்றோர் அவன்பாற் கூறுவதென்று புறநானூற்றுரையாலும் அறியப்படுகிறது.

(பிரதிபேதம்) *கண்கள், †என்னுடைய தொடிகள், ‡ஒன்றே வன்றே என்னும், || ஆகாத இதனைக்குறுங்கலி யென்றல் அகத்தியனாரும். +பொருந்தாது. இது ழடி.

இஃது எழடித்தரவும் மூன்றடித்தாழிசையும் தனிசசொல்லும் நான் கடிச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலிப்பா. (சூ)

(400.) ஈண்டுநீர் மிசைத்தோன்றி யிருள்சிக்குஞ் சுடரேபோல்
வேண்டாதார் நெஞ்சுட்க வெருவந்த கொடுமையு
நீண்டுதோன் றுயர்குடை நிழலெனச் சேர்ந்தார்க்குக்
காண்டகு மதியென்னக் கதிர்விடு தண்மையு
மாண்டநின் னெழுக்கத்தான் மறுவின்றி வியன்ஞாலத்
தியாண்டோருந் தொழுதேத்து மிசங்கிசை முரசினுய்;

எ ஐயந்தீர்ந் தியார்க்கண்ணு மருந்தவ முதல்வன்போற்
பொய்கூறு யெனநின்னைப் புகழ்வது கெடாதோதா
னல்கிநீ தெளித்தசொ னசையெனத் தேறியாள்
பல்லிதழ் மலருண்கண் பனிமல்கக் காணுங்கால்;

கக சுரந்தவான் பொழிந்தற்றுச் சூழுநின் றியாவர்க்கு
மிரந்தது நசைவாட்டா யென்பது கெடாதோதான்
கலங்கஞ ருற்றுநின் கமழ்மார்பு நசையியா
னிலங்குகோ லளிதொடி யிறையூரக் காணுங்கால்;

கஙு உறைவரை நிறுத்தகோ லுயிர்திறம் பெயர்ப்பான்போன்
முறைசெய்தி யெனநின்னை மொழிவது கெடாதோதா
னழிபடர் வருத்தநின் னளிவேண்டிக் கலங்கியாள்
பழிதபு வாண்முகம் பசப்பூரக் காணுங்கால்;

ஆங்கு;

உ0 தொன்னல மிழந்தோஎ நுணையெனப் புணர்ந்தவ
ளின்னுறல் வியன்மார்ப விணையையாற் கொடிதென
நின்னையான் கழறுதல் வேண்டுமோ
வென்னோக்க ளிடும்பையுங் களைஇவாய் நினக்கே.

இதுவுமது.(க)

இதன் பொருள்.

ஈண்டுநீர் மிசைத்தோன்றி யிருள்சிக்குஞ் சுடரேபோல்
†வேண்டாதார் நெஞ்சுட்க வெருவந்தகொடுமையு

க. காமத்து மிகுதிறத்தான் ஆசனை நோக்கிச் [செ(ர)ன்றோர். கூறிய தாகலின் மருதத்துக் கோத்தாரென்பர். நச். தொல். அகத். சூ. கஉ. (பிரதிபேதம்) * சிக்கும். † ஒண்டாதார்.

நீண்டுதோன் றுயர்குடை நிழலெனச் சேர்ந்தார்க்குக்
காண்டகு மதியென்னக் கதிர்விடு தண்மையு
மாண்டநின் னெழுக்கத்தான் மறுவின்றி வியன்ஞாலத்
தியாண்டோருந் தொழுதேத்து மிரங்கிசை முரசினுஞ்

எ - து: குற்றமற்று மாட்சிமைப்பட்ட நின் ஒழுக்கத்தாலே கடலின்மீதே தோன்றி இருளைக்கெடுக்கும் (க)ஞாயிறுபோல இவ்வுலகத்திலுள்ள பகைவர் * நெஞ்சம் அஞ்சும்படி வெருவுதல்வந்து கொடுந்தொழிலையும் நெடிதுரய்த் தோன்றுகின்ற (உ) எனையவற்றின் உயர்ந்ததுடையைத் †தமக்கு நிழலென்று கருதிச் சேர்ந்தவர்கட்குந் காட்சிதருங் கதிரைச சொரியும் (ங)மதியையொத்த குளிர்ச்சியினையும், அகற்சியையுடைய உலகில் எவ்விடத்துள்ளோரும் வணங்கிப் புகழும் இரங்குகின்ற ஓசையினையுடைய முரசினையுமுடையாய்! எ - று.

ஈண்டு - இவ்வுலகம். எத்துமென்னும் பெயரெசசம், முரசின்மேலன்றி ‡அதனையுடைய மன்னவனென்னும் பெயரோடு முடிந்தது.

எ ஐயந்தீர்ந் தியார்கண் ணுஞ (சு) மருந்தவ முதல்வன்போற்
பொய்கூறு யெனநின்னைப் புகழ்வது கெடாதேதா

(அ) "ஞாயிற் றன்ன வெந்திற லாண்மையுங், திங்க ளன்ன தண் பெருஞ் சாயலும்..... .....உடையை யாகி" (ஆ) "ஞாயி றனையை நின் பகைவர்க்குத், திங்க ளனையை யெம்ம னோர்க்கே" புறம். ஙடு: கந - சு; நிக: சு - எ.(இ) "நின், வெம்மையும் விளக்கமு ஞாயிற்றுளை, நின், தண்மையுஞ் சாயலுந் திங்களுளை" பரி.சு: உடி - உசு. (ஈ) "நண்ணுநர் பகைவரென் றிவர்க்கு நாளினுங், தண்ணியன் வெய்யனன் றானை மன்னனே" தஞ்சை. நகர. கஎ. என்பன இங்கே ஒப்புநோக்கற் பாலன.

உ. இருருடை பின்பட வோங்கிய வொருகுடை, யுருகெழுமதியி னிவ்வுல சேண் விளங்க" புறம். நக: சு - சு.

ங. "திங்களைப் போற்றுதற் றிங்களைப் போற்றுதுங், கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடை போன்றிவ், வங்க ணுலகளித்த லான்" என்பதும் அதன் உரையில் இது பண்பும் பயனுங் கூடின வுவமென் றெழுதியிருத்தலும் இங்கே அறிதற்பாலன. சீலப். க: க - சு.

ச. இங்கே அருந்தவ முதல்வனென்றது சிவபெருமானைப் போலும்; (அ)"தாழ்சடைப் பொலிந்த வருந்தவத் தோற்கே" புறம். க: கசு. (ஆ)"நற்றவனைப் புற்றரவ ராணிஞனை" (இ)"நற்றவனே நான்மறைக ளாயி னனை" (ஈ)"நற்ற வாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுகா நமச்சி வாயவே" (உ) "நற்ற வன்காண்"(ஊ)"மாதொர்கூறுடை நற்றவனை"

(பிரதிபேதம்) * நெஞ்சுநடுங்கப்படி, நெஞ்சுகம்பிக்கப்படி. † தாழ்க்குமிழலென்று. ‡ அதனுடையமன்னவன்,

நல்கினீ தெளித்தசொ னசையெனத் தேற்றியாள்
பல்லிதழ் மலருண்கண் பனிமல்கக் காணுங்கால்

எ - து: அன்புற்று நீ நின்னிற் பிரியேனென்று தெளிவித்த சொல்லே இது தான் நச்சப்படும் வார்த்தையென்று கருதித் தெளிந்தவளுடைய பல இதழையுடைய *மலர்போலும் உண்கண் நீர்நிறைய நீ காணுமிடத்து அரிய தவத்தையுடைய(க) அறம்வளர்த்த நாயனுரைப்போலயாவரிடத்தும்(உ)பொய் ஊருமென ஐயமற்று உலகம் நின்னைப் புகழ்கின்றதன்மைநினக்குக்கெடாதோ தான்? எ - று.

க சுரந்தவான் †பொழிந்தற்றுச் சூழுநின் றியாவர்க்கு
(ஈ)மிரந்தது நசைவாட்டா மென்பது கெடாதோதான்

தே. (எ) "அருந்தவ னகிசயித்து" .திருவால. கூ: கூ. எனவும் (ஏ) "பனிவெண் பிறைகறங்கொன்றைச்சடைபலிதேரியற்கை,முனிவன்" பதிஞெஅாந். மூத்தநாயனுர். கூ. (ஐ) "முனிவன்" திருவால. காப்பு. உ. எனவும் வருவன பார்க்க.

க. சிவபெருமான் தக்ஷிணமூர்த்தியாயிருந்து அறமுரைத்தா ரென்று தேவார முதலியவற்றிற் கூறப்படுதலும் அறமெல்லாம் வளர்க்கும்படி உமாதேவியாருக்கு அருளினரென்று காஞ்சிப்புராண முதலியவற்றிற் கூறப்படுதலும் இங்கே அறிதற்பாலன.

உ. "நெற்றி, யிமையா நாட்டத் தொருவனங் கொண்டு, விலங்கென வீண்ணோர் வேள்வி முதல்வன்,விரிகதிர்மணிப்பூ ணவர்க்குத்தா னீத்த, தரிதென மாற்றுன் வாய்மைய ஞதலி, னெரிகனன் ருளுக் குடாரி கொண்டவனுருவு, திரித்திட்டோன்" பரி. டு: உக - கூடு. என்பதும் "நெற்றிக்கண் இமையா நாட்டத்தையுடைய அவன் பக்கலிலே இந்திரன் ஒரு வரத்தைக் கொண்டு 'இந்தப் புணர்ச்சியாற் ருேன்றிய கருவை யழிப்பாயாக' எனை, மழுப்படையைத் தரித்தவன் வாய்மைய ஞதலின் அவ்விந்திரனுக்குத் தான் கொடுத்த வரத்தைச் செய்தற் கரிதென மாற்ருதே இவ்வுல கேழும் தன் மெய்ம்மையை வியக்க அதனுருவைப் பலகண்டமாகச் சேதித்தான்" என்னுமதனுரையும். "மண்ணினுர் ,தம்மைப் போல்வார் மாட்டதே யன்று வாய்மை, நண்ணினுர் நிறத்துங் குற்றங் குற்றமே நல்ல வாகா, வெண்ணினுர் புரழ்ந்தற் கொத்த விழுமியோ னெற்றி போழ்ந்த, கண்ணினுன் கண் டந்தன்மேற் கறையையார் கறையன் றென்பார்" தூண்டல. "சாதத்தினரூனை யொப்பார்" திருக்கழக்குன்ற. கசரச். உ0. என்பவைகளும் இங்கே நோக்கற்பாலன.

கூ. (அ)"மாரி பொய்க்குவ தாயினுஞ், சேரலாதன் பொய்யல னஞையே" பதிற். கஅ: கக-கஉ. (ஆ) "இரவலர்க் குள்ளிய, நசைபிழைப் பறியாக்

(பிரதிபேதம்) * மலர்போனுண்கண். † பொழிந்தற்றுஞு,

கலங்குஞ் ருற்றுநின் கமழ்மார்பு நசைஇயா
னிலங்குகோ லவிர்தொடி யிறையூரக் காணுங்கால்

எ - து: மனங்கலங்குகின்ற வருத்தத்தையுற்று நின்னுடைய கமழ்கின்ற மார்பை நச்சினவளுடைய விளங்குகின்ற கோற்றொழில் விளங்குந் தொடி இறையினின்றுங் கழல நீ காணுமிடத்து மேசச் சுரந்த (க)மேகம் அங்ஙனைப் பொழிந்ததன்மைத்தாக நின்னைச் சூழ்கின்று இரந்த பொருளே நச்சுகலே யாவர் சிலர்க்குங் கெடாயென்று உலகங் கூறும் வார்த்தை நினக்குக் கெடாதோதான்? எ - று.

கரி உறைவரை நிறுத்தகோ (உ)லுயிர்க்கிறம் பெயர்ப்பான்போன்
முறைசெய்தி யெனநின்னை மொழிவது கெடாதோதா
னழிபடர் வருத்தநின் னளிவேண்டிக் கலங்கியாள்
பழிதபு (ங)வாண்முகம் பசப்பூரக் காணுங்கால்

கழலுறழ் யதிகன்" (இ) "ஆர்வம், மிரந்தோர்க்கியா தீட்டியோன் பொருள்போற், பரந்து வெளிப்படா தாகி, வருந்துக" அகம். கசுஉ: கள - அ, உஎக: கஉ-ஙி. (ஈ) "நின்னசை வேட்கையி னிவ்வலர் வருவ ரது, முன்னமுகத்தி னுணர்ந்தவ, நின்மை தீர்த்தல் வண்மையானே" (உ) "ஒல்லுவ தில்லென மறுத்தலும்..... ..இரப்போர் வாட்டல்" புறம். ங: உச-சு; ககூசு: ச - சு. (ஊ) "நுசையுழுங்க, நின்றுழிப் பொய்த்தனிரைதொடீஇ செய்ந்நன்றி, கொன்றுரிற்குற்றமுடைத்து" நாலடி. ககக. (எ) "பசைதொண் டவனிற்பப் பாத்திண்ணு னையி, னசை கொன்றுண் செல்லுலக மில்" பழ. உ.ச. (ஏ) "தருவமென் றுமுன் சாற்றி மறுத்தவர், நரகஞ் சேர்ந்து கலிகுவ ரென்றுமுந், துரை செய்தாய்" பாகவத. (அ) வாமனவதார. ஙிசு. என்பவைகளும் (ஐ) இந்நூற்பக்கம் கசஎ. க-ஆம் குறிப்பும் இங்கே அறிதற்பாலன.

க. (அ) "கின், சுரப்பதலும் வண்மையு மாரியுள" பரி. ச: உள; (ஆ) "வானத் தன்ன வண்மையும்" (இ)"மாரி யன்ன வண்மைத், தேர்வே ளாயை" (ஈ) "உள்ளி வந்த பரிசில னிவனென, நெய்யுறப் பொரித்த குய்யுடை நெடுஞ்சூடு, மண்கல னிறைந்த மணலுமை தேறல், பாம் புரித் தன்ன வான்பூங் கலிங்கமொடு, மாரி யன்ன வண்மையிற் சொரிந்து" புறம். ஙிஇ: கஇ; கசூசு சு - எ; ஙகூள: கஉ-சு.

உ. (அ) தெரிகோன் "ஞமன் போல வொருதிறம், பற்ற லிலியரோ" புறம். சு: கூ - கo. (ஆ) "கூற்றமும் விழையக் கோலினி தோச்சித், கோட்ட மின்றிக் குடியுறங் காத்து" பெருங். (இ) அ: ககூ - உo.

ரு. "மையில் வாண்முகம் பசப்பூ ரும்மே" கலி. எ: அ.

(பிரதிபேதம்) * நிறம்பொய்ப்பான்போல்.

எ - து: நெஞ்சழிகின்ற நினைவு வருத்துகையினாலே நினதருளே நாடிப்போய் கலங்கினவளுடைய பழித்தலையும் ஒளியினையுடைய முகம் பசப்புப் பாரப்ப நீ காணுமிடத்து உயிரை உடம்பிடத்தே நின்றும் போக்குங் (க) கூற்றை நினைப்போல, யாவரையும் உலகத்தையும் எல்லோதனிலே நிறுத்தின காலாலே முறைமைசெய்வையென்று உலகம் நின்னைக் கூறும் வார்த்தை நினக்குக் கெடாதோதான் ? எ - று.

ஆங்கு, அசை.

உ தொன்னல மிழந்தோணீ துணையெனப் புணர்ந்தவ
(உ)ன்னுறல் வியன்மார்ப நினையையாற் கொடிதென
நின்னையான் கழறுதல் வேண்டுமோ
(கூ)*வென்னோர்க ளிடும்பையுங் கூர்ந்தீவாய் நினக்கே

எ - து: † எத்தன்மையுடையோர்களுடைய ‡ வருத்தமும் கூர்கின்ற அதனால் இனிய முயக்கத்தையுடைய வியன்மார்பனே ! நீ புணருந் துணையென்று கருதிப் புணர்ந்தவள் தனது இயற்கைநலத்தையும் இழந்தாள் ; நீ இத்தன்மையையாய் இராநின்றாய் ; இது நினக்குக் கொடிதென்று நின்னையான் கோபித்தல்வேண்டுமோ ? நீயே அளிப்பாயாகவென்றான். எ - று.

‖இழந்தோள்: ஆ, ஓவாய்நின்றது.

இதனால், தலைவற்கு அசைவுபிறந்தது.

இஃது ஆறடித்தரவும் நான்கடித்தாழிசையும் தனிச்சொல்லும் நான்கடியாசிரியச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. (கூ)

× மருதக்கலி முற்றும்.

க. நிறுத்துதலைக் கூற்றின் ரொழிலாகப் பொருத்திக் கொள்ளின், "செயிரிற் குறைநாளாற் பின் சென்று சாடி, யுயிருண்ணுங் கூற்றமும் போன்ம்" கலி. கஅடு: கூஎ - கூஅ. என்பதும் அதன் குறிப்பும் ஒப்பு நோக்கற்பாலன.

உ. "இன்னுறல் வியன் மார்ப" கலி. அ: உசு.

கூ. "ஏன்னோர் மருங்கினு மேத்தி" என்புழி ஏன்னோருமென்பதற்கு எல்லோரு மெனப் பொருளெழுதி யிருத்தல் ஈண்டறிதற் பாலன. சீவக. உகஉஅ. உரை.

பிரதிபேதம்) * ஒன்னோர்கள், † எத்தன்மையையுடையோர்களுடைய. ‡ வருத்தங்கூர்கின்ற, ‖ இழந்த தோள், × மருதப்பாட்டு முற்றும், மருதத்துக்கு நச்சினார்க்கினியார் செய்தவுரை முடிந்தது இது ஆசிரியன்பாத்தியாகுக. தனிபெறு.

@ -
[illegible]
[illegible]
[illegible], [illegible]

உ.
ஸ்ரீ. மயிலைக்கபி,
மகாவித்துவான்,
சென்னைப்பேட்டை, சேலம்.

உ

திருமால் துணை.

கலித்தொகை

மூலமும்

நச்சினார்க்கினியருரையும்.

நான்காவது மூல்லைக்கலி.

(கூ0க.) தளிபெறு தண்புலத்துத் தலைப்பெயற் கரும்பீன்று
முளரிமுதற் பொதுளிய முட்புறப் பிடவமுங்
களிபட்டா னிலையேபோற் றடவுபு தூப்பீன்று
ஞெலிபுட னிரைத்த ஞெகிழிதழ்க் கோடலு
நி மணிபுரை யுருவின காயாவும் பிறவு
மணிகொள மலர்ந்த கண்ணியர் தொகுபுடன்
மாறெதிர் கொண்டதம் மைந்துட னிறுமார்
சீறரு முன்பினேன் கணிச்சிபோற் கோடசீஇ
யேறுதொழூஉப் புகுத்தன ரியையுட ஞெருங்கு;

கo அவ்வழி, முழக்கென விடியென முன்சமத் தார்ப்ப
வழக்குமாறு கொண்டு வருபுவரு பீண்டி
நறையொடு தகளெழ நல்லவ ரணிநிற்பத்
தூறையு மாலமுந் தொல்வலி மராஅமு
முறையுளி பராஅய்ப் பாய்ந்தனர் தொழூஉ;

கநி மேற்பாட் டிலண்டி னிறனெக்கும் புன்குருக்க
ணேக்கஞ்சான் பாய்ந்த பொதுவணைச் சாக்குத்திக்
கோட்டிடைக் கொண்டு குலைப்பதன் றேற்றங்கா

ணஞ்சீ ரசையியல் கூந்தற்கை கீட்டியா
னெஞ்சம் பிளந்திட்டு நேரார் நடுவட்டன்
வஞ்சினம் வாய்த்தானும் போன்ம்;

உக சுடர்விரிர் தன்ன சுரிநெற்றிக் காரி
விடரியங் கண்ணிப் பொதுவனைச் சாடிக்
குடர்சொரியக் குத்திக் குலைப்பதன் றேற்றங்காண்
படரணி யந்திப் பசுங்கட் கடவு
ளிடரிய வேற்றெருமை நெஞ்சிடங் திட்டுக்
குடர்கூளிக் கார்த்துவான் போன்ம்;

உள செவிமறை நேர்மின்னு நுண்பொறி வெள்ளைக்
கதனஞ்சான் பாய்ந்த பொதுவனைச் சாடி-
நுதிநுனைக் கோட்டாற் குலைப்பதன் றேற்றங்கா
ணுரிரு ளென்ன னருங்கங்குல் வந்ததன்
ருளிற் கடந்தட்டுத் தந்தையைக் கொன்றுனைத்
தோளிற் றிருகுவான் போன்ம்;

எனவாங்கு;

கூச அணிமாலைக் கேள்வற் றருஉமா ராயர்
மணிமாலை யூதுங் குழல்;

கூசு கடாஅக் களிற்றினுங் கண்ணஞ்சார் வேற்றை
விடாஅதுநீ கொள்குவை யாயிற் படாஅகை
யின்றன வாயமக டோள்;

கூசூ பகலிடக் கண்ணியன் பைதற் குழலன்
சுவன்மிசைக் கோலசைத்த கைய னயலது
கொல்லேறு சாட வீருந்தார்க்கெம் பல்லிருங்
கூந்த லணிகொடுப்பேம் யாம்;

சஎ கோளாள ரென்னெப்பா ரில்லென நம்மானுட்
டாளாண்மை கூறும் பொதுவ னமக்கொருநாட்
கோளாள ருகாமை யில்லை யவற்கண்டு
வேளாண்மை செய்தன கண்;

ஈன ஆங்கு, ஏறும் வருந்தின வாயரும் புண்கூர்ந்தார்
நாறிருங் கூந்தற் பொதுமகளி ரெல்லாரு
முல்லையந் தண்பொழில் புக்கார் பொதுவரோ
டெல்லாம் புணர்குறிக் கொண்டு.

இஃது "ஆயர் வேட்டுவ ராதேத் தீணைப்பெய, ராவயின் வருஉங் கிழவரு முளரே" என்னும் (க) சூத்திரத்தில் 'தீணைநிலைப்பெயராகிய கிழவருங் கிழத்தியரும் உளர்' என்னும் விதியாற்கொண்ட அத்தலைவிக்கு அவள் தோழி ஆயர் ஏறுதழுவுகின்றமைகாட்டி அவள் அதுகண்டு வருந்தாமல் ஆண்டுப் பெற்ற நன்னிமித்தங் கூறித்தெளிவித்து, *அதனை அவ்விதியாற்கொண்ட தலைவற்குங்கூறி, மீட்டும் அத்தலைவிக்குத் தஞ் சுற்றத்தார் கூறியிருக்குங் கூற்றினையுங் கூறி, தலைவனும் இன்னும் ஒருஞான்று ஏறு தழுவி நம்மை வரைந்துகொள்வனென்று ஆற்றுவித்தது.

இதன் பொருள்.

தளிபெறு தண்புலத்துத் (உ)தலைப்பெயற் கரும்பின்று
முளிமுதற் பொதுளிய (ங) முட்புறப் பிடவமுங்
களிபட்டா னிலேயேபோற் (ச) றுடவுபு (டு) துடுப்பின்று
ஞெலிபுட னிரைத்த †ஞெகிழிதழக் (சு)கோடலு

க. தோல். அகத். சூ. உக.

உ. "தலைப்பெய றலேஇய தண்ணறுங் கானத், திருள்படப் பொதுளிய பராரை மராஅத்து" முருகு. கூ - கo.

ங. பிடாவென்பதுமுட்காலையுடையதொரு புதல்; 'மழைக்குத் தளிர்த்து அரும்பிக் குலையாகப் பூப்பது; இதன்பூ நீண்ட காம்பையும் வெண்ணிறத்தையுமுடையது (அ) "முட்பிடவார்சிறுநெறி" (ஆ) "வான்பிசிர்க் கருவியிற் பிடவுமுகை தகையக், கான்பிசிர்கற்பக்கார்தொடங்கின்றே" (இ) "சிறுகரும் பிடவின் வெண்டலைக் குறும்புதல், கண்ணியின் மலருந் தண்ணறும் புறவில்" (ஈ) "குறும்புதற்பிடவி னெடுங்காலலரி" (உ) "நிலவெனத், தொகுமுகை விரிக்த முதுகாற் பிடவின்" எனவரு தலும் காண்க. பிடாவென ஒரு மரமும் உண்டென்பர்.

ச. "தடவென் இளவி கோட்டமுஞ் செய்யும்" தோல். உரி. சூ. உங.

டு. (அ) "காந்தட் டுடுப்பிற் கமழ்மடல்" மலை. ங்ஙசு. என்பதும் (ஆ) கலி. டுக: ங - ச வது அடிக்குறிப்பில் காந்தட்டுடுப்பென வந்திருப்பவையும் ஈண்டு அறிதற்பாலன.

சு. கோடலென்பது பெரும்பாலும் முல்லைநிலத்துக்குரித்தாகக் கூறப்படும்ஒருபூக்கொடி; இதன்குலைக்குப் பாம்பின் படமெடுத்தலியலும்

(பிரதிபேதம்) * இதனை, † ஞெகிழதழ்க் கோடலும்.

நி (க)மணிபுரை யுருவின காயாவும் பிறவு
மணிகொள மலர்ந்த கண்ணியர் தொகுபுடன்
மாறெதிர் கொண்டதம் மைந்திட னிறுமார்
சீறரு முன்பிறைன் (உ)கணிச்சிபோற் கோடுசீஇ
யேறுதொழூஉப் புகுத்தன ரியைபுட னெருங்கு

எ - து: மழையைப் பெறுகின்ற குளிர்ந்த நிலத்தே நின்ற கார்காலத்து மூற்பட்ட மழைக்கு *அரும்பிஞ்கின்று முன்புலர்ந்த முதலிடத்தே தழைத்த முள்ளைப் புறத்தேபுடைய பிடவம்பூவும், (ங) கள்ளுண்டு†களித்தலுற்றவ னிலைமைபோல அசைந்து ‡ வளைந்து தடுப்புப்போலும் முகையை முன்னர்

இதன்பூவுக்கு விளக்கும் உவமையாகக் கூறப்படுகின்றன; இஃது இடையாறாற் சூடப்படுவது; இது பெரும்பாலும் வெண் காந்தளுக்கே பெயராய்வருமென்பர்; இங்குச்செங்காந்தட்கு வந்திருப்பது புண்டரீக மென்பது செந்தாமரைக்கு வருவதுபோல அருகியவழக்கு; (அ)"குரு வுடையன கொடிமிடைவொடு குலவிரிவன கோடல்" (ஆ) "வெஞ் சின வரவின் பையணந் தன்ன, தண்கமழ்கோட ரூதுபிணி யவிழ" (இ) "அணர்த்தெழு பாம்பின் றலைபோற் புணர்க்கோடல், பூங்குலை யின்ற புறவு" (ஈ) "கோடலக் தீப மேந்தி" (உ) "வரிவெண்கோடல் வாங்குலை வான்பூப், பெரிய சூடிய கவர்காற் கோவலர்" என்பவற் றுல் இவை விளங்கும்; இதுவும மகளிர்வியையும் ஒன்றற்கொன் று உவமையாதல் இந்நூற்பக்கம் சக: க-ஆம் குறிப்பால் அறியலாகும். தோன்றி யென்பதும் இதன்வகைபோலும்.

க. (அ) "மணிக்காயா" பொருந. உஒக. (ஆ) "மணியெனத், தேம்படு காயா மலர்ந்த" ஐங். சஉ0.

உ. கணிச்சி, மழுவின் வேருய தொருபடை; இதனை, "கையது கணிச்சி யொடு மழுவே மூவாய், வேலு மூண்டத் தோலாதோற்கே" என்பது வலியுறுத்தும்.

ங. (அ)"காளா தந்து நறவுகொடை தொலைச்சி, யில்லடு கள்ளின் றேப்பி பருகி.....தோளோச்சி வலன் வளைஇ, பகன்மகிழ் தூங்குந் தூங்கா விருக்கை" பெரும்பாண். கசக - கசஉ. (ஆ) "தசும்பு துளங்கிருக்கையென்றது தன் களிப்புமிகுதியால் தன்னை யுண்டா ருடல்போல அத்தசும்பிருந்து ஆடும்படியான இருப்பென்றவாறு; இச்சிறப்பான், இதற்கு, 'தசும்புதுளங்கிருக்கை' என்றபெயராயிற்று" பதிற். சஉ: கக.உரை.(இ) "துழந்தடு கள்ளின் றேப்பியுண் டயர்ந்து, பழஞ்செருக் குற்ற வனத்தர்ப் பாணியும்" மணி. எ: எக - எஉ. (ஈ) "அரிய லார்ந்த வனத்தர்" தணிகை. திருநாட்டு. சoo.

(பிரதிபேதம்) * அரும்பியீ நின்ற, † களித்தலுற்றவனிலைமை ‡ வளைந்ததுடுப்பு.

ன்று, பின்னர்த்(க)தியைக் கடைந்து, அதிற்பிறந்த நெருப்பைச்சேரநிரைத்
ற்போன்ற அலர்ந்த இதழினையுடைய செங்காந்தட்பூவும், நீலமணியை
யாக்கும் நிறத்தினையுடையவாகிய(உ)*காயாம்பூக்களும் பிறவும் அழகுகொள்
ளும்படி குடிய கண்ணியையுடையவர் சேரத்தொக்கு ஏறுதழுவுவாரோடே
ாறுபடுதலே ஏறட்டுக்கொண்ட தம் மைந்தினைச் சேரநிறுத்துதற்கு மகட்
காடை கோர்ந்த ஆயர் சேரக்கூடி, பிறரால் சீறுதற்கரிய வலியினையுடைய
)றைவனுடைய குந்தாலிப்படைபோலே கூரிதாகக் கொம்புகளைச் சீவி, ஏறு
ளைச் சேரத் தொழுவிடத்தே புகுதவிட்டார். எ - து.

தண்புலத்துநின்ற பிடவும் காந்தளும் காயாவும் பிறவுமென்க. இவை
க.)முதற்பொருட்கேற்ற அடையடுத்துநின்ற ஆகுபெயர். ஈன்றென்பதுநிகழ்
ாலமுணர்த்துஞ் செய்தெனெச்சம். (சு) ஞெகிழியுடனென்னுது ஞெலிபட
னென எச்சமாகக்கூறுதலின் இவ்வாறு பொருள் †கூறினும். "ஞெலிகோற்
கொண்ட பெருவிறன் ஞெகிழி" (ரு)என்பதனானும் இது வினைச்சொல்லாம்.

க0 அவ்வழி, முழக்கென விடியென முன்சமத் தார்ப்ப
வழக்குமாறு கொண்டு வருபுவரு பீண்டி
நறையொடு துகளெழ நல்லவ ணிநிற்பத்
(ரூ)துறையு மாலமுந் தொல்வலி மராஅமு
முறையுளி பராஅப்ப் பாய்ந்தனர் தொமுஉ

எ - து: அவ்விடத்து ஏறுகளைத் தழுவிப்‡போக்கும்படியை உட்கொண்டு
வந்து வந்து நிரண்டு மழைமுழக்கென்ன இடியென்ன நடுவானநிலத்தின்

க. "தீயி னன்ன வொண்செங் காந்தட்,... .....நெருப்பி னன்ன பல்லிதழ்" மலை. கசடு-கசக.

உ. "காயாம்பூங் கண்ணிக் கருந்துவராடையை" கலி. கoஅ: கo.

ரூ. "தளிபெறு.....பிடவமும்" என்பது பூங்குமிழென்பது முதலாகிய தன் பொருட்கேற்ற அடையடுத்து நின்ற தோராகுபெயரென்பதற்கும் (தோலையாசி. க: பேர்.) செய்தென்னும் வினையெச்சத்திற்கு நிகழ்கால வாய்பாடும் சிறுபான்மையுண்டென்பதற்கும் (தொல். வினை. சூ. நக. நச்.) உகரவீறுசிறுபான்மை நிகழ்காலம் பற்றி வருமென்பதற்கும் (இ - வி. சூ. உசசு.) மேற்கோள்.

சு. "தொடி மழைக் காற்றூ தங்கட் குளிர்பெயன் மாறவெண்ணி, தெடி மலை யெடுத்துக் காட்டி நெட்டிதழ்க் காந்தட் கொள்ளி"

ரு. பெரும்பாண். கஎஅ.

ஙூ. (அ) "பார்முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்குச், சூர்முத றடிந்த சுட ரிலே நெடுவேல்" திருமுரு. சுடு - சசு. (ஆ) "பாயிரும் பனிக்கடல் பார்துகள் படப்புக்குச், சேயுயர்பிணிமுக மூர்ந்தம ருழக்கித், தீயழ றுவைப்பத் திரியவீட் டெறிந்து, கோயுடை நுடங்குசீர் மாமுத றடிந்து, வென்றியின் மக்களு ளொருமையொடு பெயரிய, கொன்றுண லஞ்சாக் கொடியினைக் கொஃறகை, மாய வவுணர் மருங்கறத் தபுத்தவேல்" பரி. ஙி: க-எ. (இ) "கட்டுடைச் சூருடல் காமங்கொண்டு, பற்றியுட் புகுந்து பசுங்கடல் கண்டு, மாவொடுங் கொன்ற மணிநெடுந் திருவேற், சேவலங் கொடியோன்"-(ஈ) "விண்ணுடைத் தண்ணும் கண்ணிலா வொருத்தன், மறிதிரைக் கடலுண் மாவெனக் கவிழ்ந்த, களவுடல் பிளந்த வொளிகெழு திருவேற், பணிப்பகை பூர்தி" (உ) "மேல்கடற் கவிழ்முகப் பொரியுடன் மாவு, நெடுங்கடற் பரப்பு மடுந்தொழி லரக்கரு, மென்னுளத் திருளு மிடைபுகுந் துடைத்த, மன்றிரத் திருவேன் மறங்கெழு மயிலோன்" (ஊ) "கடலினே யகுராண் காட்டியுள் ளழுக்கா, றெண்டிரைச் சாகைகொண் டிருண்மனம் பொதுளிக், கொடுங்கோலை வகுத்துக் கடும்பழிச் சடையலோன், றிரண் டைஞ்ஞூ றுதிரண்டவக்காவதஞ், சுற்றுடல்பெற்றுத் தூணேப்பதினெயிர, மற்றதி னீண்டு மணியுடற் போகி, யைம்பதி நூறட னகன்றுசுற் றெழுக்கிப், பெருங்கவி ழிணர்த்தவைகீழ்க் குலவிய, வடன்மாக் கொன்ற நெடுவேற் குளவன்" கல். கக: சு - எ; சுக: உ எ - ஙூ; எங: உ - ஙி; அசு: க - கூ. என்பவைகளும் (எ) "கனியிரும் பரப்பின் மாக்

(பிரதிபேதம்) * புலம்புனை, † சேவுமாங்க.

எ - து: தன் நாட்டைக் கடலினுடைய மிக்க திரையேறிக் கைக் கொண்டுவிடுகையினாலே தனக்கு நாடு இடமுண்டாம்படியாக மனத்தின் இளைப்பின்றும்ப் பகைவரைத் தன் வலியினாலே தாழ்க்கவேண்டி அவர்மேலே சென்று அவருடைய புலிப்பொறியையும் விற்பொறியையும் அவர் நாட்டினின்றும் போக்கி விளங்குகின்ற கயலை அவ்விடத்தே பொறித்த புகழையுடைய தொடாத தலைமையினையுடைய பாண்டியனுடைய பழைய புகழை நிலைபெறுத்தின குடியோடு ஒக்கத் தோன்றின பசுனத்தில் ஆயரெல்லாரும் சேரத் திரண்டு விளங்குகின்ற வானிலேயுறும்படி *ஓங்கிய ஒளிபெருகுகின்ற (க)பனைக்கொடியினையுடைய(உ)பாலின குணத்தையுடைத்தாகிய நிறத்தினை

கடன் முன்னி, யணங்குடை யவுண ரேமம் புணர்க்குஞ், சூருடை முழுமுத றடிந்த பேரிசைக், கடுஞ்சினவிறல்வேள்" (பதிற். கக: ரு-சு)

என்பதும் அதில் சூருடை முழுமுதலென்பதற்கு, "சூரவன்மா, தனக்கு அண்ணகவுடைய மாவின்முதலென்றவாறு; இனி, சூரவன்மா, தான் ஒருமாவாய் நின்றனென்று புராணமுணர்டாயிற் சூரனுதற் றன்மையையுடைய மாவின் முதலென்றவாறும்' என்று எழுதியிருக்கும் உரைப்பகுதியும் (ஏ) "போரெதிர்ந் தேற்றார் மதுகை மதந்தபக், கா ரெதிர்ந் தேற்ற கமஞ்சூ லெழிலிபோ, னிர்நிரந் தேற்ற நிலந்தாங் கழுவத்துச், சூர்கிழந்து சுற்றிய மாதபுத்தி வேலோய்" (பரி. கச: க-ச) என்பதும் அதன் உரையும், (ஐ) "கவிழிணர், மாமுத றடிந்த மறுவில் கொற்றத், தெய்யா னல்லிசைச செவ்வேற் சேஎய்" திருமுரு. நிக - சுக. என்பழி, "மாமுத றடிந்த" என்பதற்கு 'அவுணரெல்லாரும் தம்முடனே எதிர்ந்தார் வலியிலே பாதி தங்கள் வலியிலே கூடும்படி மந்திரங்கொண்டிருந்து சாதித்ததொரு மாவை வெட்டினான்' என்று எழுதியிருக்கும் விசேடவுரையும் ஈண்டு அறியற்பாலன.

க. (அ) "அடல்வெங் நாஞ்சிற் பனைக்கொடி யோனும்" புறம். நிகக: ச. (ஆ) "பொற்பனை வெள்ளையைப் போற்று தொழுகின்ற" இன்னா. க. (இ) "மடற்பனை யுயர்த்த மதிநிறப் பெருமனுக்கு" (ஈ) "கார், வெண் டோட்டிளம் பனைமீமிசை யுயர்த்தோனென விளர்த்த"(உ)"வானுற்ற தண்பனை யுயர்த்தவன்" (ஊ) "கள்ளவிழும் வெண்டோட்டுக் கரும் பனைமீ மிசையுயர்த்த, வெள்ளிவரை யனையானும்" (எ) "போர்த்தை மீதுயர்த்த வென்றிப் புரவலன்" பாகவத. (கூ) சையாதி, உச. (கo) வேய்ங்குழல். கக. உருக்குமிணி மண. க. பிரத்துமனன்மணம். கச. சுபத்திரைமணம். கஅ.

உ. (அ) "பானிற வண்ணனேக்கிற் பழியுடைத்து" சிவக. உoக. (ஆ) "பான்மேனியான்" பழ. கந.

(பிரதிபேதம்) * ஓங்கிய பனைக்கொடி.

புடையவனைப்போலே பழித்தலற்ற வெள்ளியேற்றையும் பொருந்திய மாறு பாட்டினுலேயனையவற்றின்மேலான பொன்னுற்பனேர்த்தபுகழையுடைத்தாகிய சக்கரப்படையையுடைய திருவாகிய மறுவையுடைத்தாகிய மார்பினைப் போலே அமைந்த கரிய ஏற்றையும் மிக்குலிளங்குகின்ற தாம்ர்த்த (க) சடை யினையும்ஒரு*பாகத்திலேமேவுதல்வரும்பிறைபோன்றதுதலினையுடையாளை முடைய மூன்றுகண்ணையுடையானுடைய நிறம்போலே மாறுபாடு மிக்க நாலேற்றையும்பெருமையையுடையதடல் கலக்கமுறும்படி உள்ளேசென்று மாமாத்தைவெட்டின மீளாத †போரையுடைய வேலை எடுத்திய (உ) முருகனது நிறம்போல அச்சம்வந்து கிளர்ந்த எற்றையும் அவ்விவர்ப்புருந் குணத்தினை யுடைய வற்றையும் வெற்பில்லாத பிறவற்றையும் வாடலையுடையவாகியபல மேகங்கள் கிரண்டனைபோல முழங்குப்ப. விரும்பி விரும்பித் தொழுலிலே புகுதலிட்டார். எ - று.

கஅ அவ்வழி, (ங) முள்ளெயிற் நோளை (சு)ரிவளைப் பெறுமிதோர் வெள்ளேற் றெருத்தடங்கு வான்

எ - து: ‡அவ்விடத்து இந்த ஒப்பில்லாத வெள்ளிய எற்றின் கழுத்திலே கிடக்குமவன் கூரிய எயிற்றினையும் அழகினையுமுடைய இவளைக்கூடும். எ-று.

க. (அ)"பிறைநுதல் வண்ணமாகின்ற" (ஆ) "கறைமிடற்றண்ணல் காமர் சென்னிப், பிறைநுதல் விளக்கு மொருகண்போல" (இ) "பால்புரை பிறைநுதற் பொலிக்தசென்னி. நீல மணிமிடற்றொருவன்" புறம். க:கூ. நிஙி: சு - நி கூ: நி - சு (ஈ) "பிறைநெற்றியோடுற்ற முக்கண்ணி னூர்" (உ) "பிறைதாங்கு நெற்றியர்" (ஊ) "பிறைசேர் நுதலிடைக் கண்ணமர்க் தவனே" (ரு)"திங்க டிலகம் பதிக்க நுதலர்" நேவாரம். என வருதலால், பிறைநுதலென்பதற்கு, பிறையணிந்த நுதலென்று பொருள்கொண்டு 'சுடைமேவுதல்'என்பதற்கு அதற்கேற்ப்பொருள் கொள்ளினும் அமையும.

உ. முருகவேள் செந்நிறமுடையவரென்பதை, 'செவ்வேள்' 'சேய்' என வழங்கும்,பெயர்களும வலியுறுத்தும். "உருவு முருவத்தீ யொத்தி" என்பது பரி. கக: கூகூ.

ங. (அ) ஏறுதழுவினலுக் குரியளிவ்வினைவந்த கைக்கிளைக்கு, "மூன் ளெயிற்றேளர்..... .....கொள்பவன்" என்னும் பகுதி மேற்கோள். தொல். அகத். சூ. கங. நச். (ஆ) முள்ளெயிறு இந்நூற்பக்கம் கூங: க-ஆம் குறிப்புப் பார்க்க.

சு. "இவளைப் பெறுமிதோர்.....சார்பவன்" இவ்வடிகளோடு "காரி கதனஞ்சான் பாய்தானைக் காமுறுமிவ், வேரி மலர்க்கோதை யாள்...

(பிரதிபேதம்) * பாகத்தேமேவுதல், † போரையுடைய முருகனது,‡ அவ்விடத்து கல்லாயிரந்த வொப்பில்லாத.

உo ஒள்ளிழை, வாருறு(க)கூந்தற் றுயில்பெறும் வைமருப்பிற்
(உ)காரி கதனஞ்சான் கொள்பவன்

எ - து: கூரிய கொம்பையுடைய கரிய எற்றினது கோபத்தை அஞ் சாது அதனைத் தழுவுமவன் இந்த ஒள்ளிய இழையினையுடையாளுடைய வாருதலுற்ற கூந்தலிலே துயிலுதலைப் பெறும். எ - று.

உக ஈரரி

*வெரூஉப்பிணை (ங)மானேக்கி னல்லாட் பெறூஉமிக்
|(ச)குரூஉக்கட் கொலையேறு கொள்வான்,

எ - து: குரால் †நிறத்தவாகிய கண்ணினையுடைய கொலைத்தொழிலை யுடைய ஏற்றைத் தழுவுமவன், வெருவுதலையுடைய பிணையாகிய மானைக்குப் போலும் நோக்கினையுடைய இரண்டாகியகண்களையுடைய இந்த ‡ல்லாளைக் கூடும். எ - று.

(டு)அரி, ஆகுபெயர்.

உங வரிக்குழை,
வேயுறழ் (சு)மென்றோட் டுயில்பெறும் வெந்துப்பிற்
‖சேஎய் கினனஞ்சான் சார்பவன்

.....பூவைப் புதுமல ராள்" (சிலப்.கள: கொலை, க - எ.) என்னும் பகுதிகள் ஒப்புநோக்கற் பாலன.

க. (அ) "மகளிர், விரிமென் கூந்தன் மெல்லணை வதிந்து" பதிற். ஐo: கஅ - கக. (ஆ) "இருளேங் கூந்த லின் றுயில்" (இ) "கூந்தன் மெல் லணைத் துஞ்சி" அகம். உங.ங: கடு, ஙo அ: கங. (ஈ) "இருண்மென் கூந்த லேமுற துயிலே"

உ. "காரி கதனஞ்சான்" கலி. கo்ச: எச.

ங. "மான்பிணை யன்ன மிழ்மட நோக்கே"

ச. "குரூஉக்கட் கொலையேறு" கலி. கo்ச: எக.

ஞ. அரி, செவ்வரி கருவரி; இச்சொல் இங்கே அவற்றையுடைய கண்ணை உணர்த்தி நிற்றலான் ஆகுபெய ரென்றார்.

ட. ஆடவர் தம்மனோவியர்தோளிற் றுயில்வதாகக் கூறல் மரபு:(அ)"அரிவை தோளிணைத் துஞ்சி, கழிந்த காளிவண் வாழு நாளே" குறுந். ஙஉங. (ஆ)"தாம்வீழ்வார் மென்றோட் டியிலு னினிதொ, ருமளைக் கண்டு னுலகு" குறள். கஙo்ங.

(பிரதிபேதம்) * வெரூப்பிண, † நிறத்தையுடையனவாகிய, ‡ கல்லோளை கூடும்வரிக்குழை. ‖ சேஎனஞ்சான்.

எ - து: வெய்ய வலியினையுடைய வெந்த எற்றினது னெத்தை அஞ் சாஞாய் அதனைத் தழுவுமவன், வரியினையுடைத்தாகிய குழையினையுடையா ளுடையமூங்கிலெயொக்கும் மெல்லியதோளிலே* தயிலுதலைப் பெறும். எ-து.

வரி - (க) அருப்புத்தொழில்.

உரு, என்றாங்

கறைவனர் நல்லாரை யாயர் முறையினு
ணண்மீன்வாய் சூழ்ந்த மதிபோன் மிடைமிசைப்
பேணி நிறுத்தா ரணி

எ - து: †என்று நல்லாயர் தமக்குரிய முறைமையாலே‡சுற்றுவனவாகிய நாளாகிய மீன்கள் தன்னிடத்தைச் சூழப்பட்டமதிபோலே அவ்விடத்திலிட்ட பாண்களின்மேலே தத்தம் மகளிரைத் திராளாக ஒப்பித்து நிறுத்தினார். எ - து.

(உ) மீனும் மதியும், அயத்திற்கும் மகளிர்க்கும் ||உவமை.

உசு அவ்வழிப், பறையெழுந் திசைப்பப் பல்லவ ராரப்பக்
குறையா மைந்தர் கோளெதி ரெடுத்த
நறைவலஞ் செயவிடா விறுத்தன வேறு

எ - து: அவ்விடத்துப் புகை யுலம்வர விடப்பட்டு நிறுத்தப்பட்டன வாகிய எறுகள், பறை மிக்கொலிக்கையினாலும் பலரும் ஆரவாரிக்கையினாலும் வலிகுறையாத ஆயர்கோடற்றொழிற்கு எதிரே என்றன. எ - து.

உஉ அவ்வேற்றின்

(ங) மேனிலை மிகலிகலின் மிடைகழி பிழிபு மேற்சென்று
வேனுதி புரைவிறற் றிறனுதி மருப்பின் மாறஞ்சான்

க. அருப்புத்தொழில் என்றது ஆபரணங்களில் நுண்ணிதாகச் செய்யும் சிறிய அரும்புபோன்ற வேலைகளை. "தான் களங்கொலக் கழல்பறைத் தன" (புறம். சு: ங) என்புழி 'கழல்பறைத்தன' என்பதற்கு 'வீரக்கழ அருப்புத்தொழில் பறைந்தவை' என்று எழுதியிருக்கும் உரை ஈண்டுஅறிதற்பாலது.

உ. "தாரகையோடு அயத்தார்க்கு ஒத்த பண்பு, பன்மையும் ஒன்றற்குச் சுற்றமாய் அதனிற் றுழ்ந்து நிற்றலும்.....மதியோடு தலைமகட்கு ஒத்த பண்பு, கட்கினிமையும் சுற்றத்திடை அதனின் மிக்குப் பொலிதலும்" என்று (கோவையார். கஉச) பேராசிரியர் எழுதியிருக்கும் விசேடவுரை இங்கே அறிதற்பாலது.

ங. "ஐஞ்சீரடி மூடுதியலோடொன்றாய் வந்த வெண்பா கலிக்கு உறுப்பாய் வருதற்கு, "மேனிலை மிகலிகலின்.....வண்ணனும் போன்ம்" எனனும் பகுதி மேற்கோள்; தொல். செய். சூ. ஙன, நச்.

(பிரதிபேதம்) * தயிலப்பெறும் என்பது கறைவன நல்லார, † என்று தமக்குரிய, ‡ சுற்றுவனராகிய, ||உவமைஅரியாகுபெயர், வரிஅருப்புத்தொழில்.அவ்வழி.

பானிற வெள்ளை யெருத்தத்துப் *பாய்ந்தானை
நோனுது குத்து மிளங்காளித் தோற்றங்காண்
பான்(க)மதி சேர்ந்த வரவினைக் கோள்விடுக்கு
நீனிற வண்ணனும் போன்மே

ள - து: அந்த ஏறுகளின்மேலே நிலவெறும் மிருதுலையுடைத்தாகிய மாறுபாட்டினுலே மிடைமிசையினின்றும் இழிந்து அதனைவிட்டுச்சென்று வேலினது முனையையொக்கும் †முனையையுடைய கொம்பினது விறலாகிய திறத்தினையுடைய மாறுபாட்டிற்கு அஞ்சாளுகிப் பானிறம்போலும் வெள்ளிய ஏற்றினது கழுத்திலே ‡பாய்ந்தானைப்போன்றே மேற்சென்று குத்தும் இளைய காரிய ஏற்றினது தோற்றவு, பால்போலும் மதியைச் சேர்ந்து மறைத்த பாம்பினை அது முறைத்துத்தன்மையை விடுவிக்கும் நீலநிறம்போலும் || நிறத்தையுடையவனையும் ஒக்கும்; அதனைப் பாராயென்றவாறு. எ - று.

வண்ணன், மாயோன்.

கூகூ (உ)இரிபெழு பதிர்பதிர் பிகந்துடன் பலர்நீங்க
வரிபரி பிறுபிறுபு குடர் சோரக் குத்திக்கல்
கோடழியக் கொண்டானை யாட்டித் திரிபுழக்கும்
(ங)÷வாடில் வெகுளி யெழிலேறு கண்டை +யிஃதொன்று

க. (அ) "மாமதிகோண், முன்னம் விடித்த முகில்வண்ணன்" பெரிய திரு மடல். கூசு. (ஆ) "தேம்பலிளக்கிங்கட் கிறைவிடித் தைவாய்ப், பாம்பினணைப் பள்ளிகொண்டாய்" பெரியதிருமொழி. (கக) அ: எ.(ஐ)"கோள் வாய் மதிய நெடியான்விடித் தாங்கு" சீவக. சதுசு. (ஈ) "பான்மதி விடித்தனை" யா - வி. மேற்.

உ. நாற்சீரடியும் ஐஞ்சீரடியும் முடுகியலடியாக வந்ததற்கு (அ) "இரி பெழு.....தலேச்சென்று" என்னும் அடிகள் தோல். செய். சூ. கடுகி. 'பேர். உரையிலும் (ஆ) "இரிபெழு..... .....கண்டை யிஃ தொன்று என்னும் அடிகள் தோல். செய். சூ. சுசு. பேர். உரையிலும் முடுகுவண்ணத்திற்கு (இ) " இரிபெழு பதிர்பதிர் பிகந்து" என்பது தோல். செய். சூ. உகூ. நச். உரையிலும் மேற்கோள்.

கூ. வாடுதல் குறைதலென்னும் பொருளில் வருதலை "வாடற்க வையை நினக்கு" (பரி. சு: கo சு) என்பதன் உரையாலும் அறிக.

(பிரதிபேதம்) * பாய்ந்தானைக் கோணது குத்து, † முனையுடைய கொம்பினது விறலாற் றுதியையுடைய, ‡ பாய்ந்தவனைப், || நிறதையுடையவனையும், + வாடா வெகுளி, +இஃகுதொன்று, அஃதொன்று.

வெருவரு (க)தூம மெடுப்ப வெருண்டு
திரிதரங் கொல்களிறும் போன்ம்

எ - து: பலரும் எழுந்திருந்து சென்று அதிர்ந்து அதிர்ந்து கெட்டு அவ்விடத்தைக் கடந்து சேர நீங்கும்படியாக *எலும்பு முறித்து குடர்களற்றுக் கவிழும்படி குத்திவிட்ட பின்பு தன் கொம்பின் †வலியழியத் தழுவினவனை அலைத்துக்கொண்டு திரிந்து தூகைக்குங் குறையாத கோபத்தினையுடைய அழகினையுடைய எறு. வெருவுதல் வருத்தற்குக் காரணமான மதந்தினைத் புகைக்க அதற்கு வெருண்டு திரிதரும் கொல்கின்ற களிற்றையும் ஒக்கும்; இஃதொன்றைப் பாராயென்றாள். எ - று.

சாரி காளைழு தணிரிணி யிசைச்‡தலிர் பிறந்தித் தலைச்சென்று
தோள்வலி தணிரிணி றறந்திறந் தெய்தி மெய்சாய்ந்து
கோள்வழக்கித் தன்முன்னர் வீழ்ந்தான்மேற் செல்லாது
மீளுந் புகரேற்றுத் தோற்றங்காண் மண்டாநுண்
(உ)வாளகப் பட்டானே பொல்லா னெனப்பெயரு
மீளி மறவனும் போன்ம்

க. தூமமெழுத்தலால் களிறு வெருளுமென்பது உதயணன் சரித்திரத்து, யூகி பிரச்சோதனன் ஏகலைக்கலக்குதற்கு யானைக்குத் தூமமூட்டிய செய்தியைக்கூறும் "ஆனேதன் னிலேகண் டெய்தியகிலிடும் புகையு மூட்டிச், சேனைமன் னவ பூதுச் சிறைவீடின் கடனே யென்று, மானகல் யூகி யானைச் செவியின்மந் திரத்தைச் செப்ப, யானைதன் மதக்கம் பத்தி லருந்தலே யுதறிற்றன்றே" என்னும் (உதயணகுமார (க) உஞ்சைக்காண்டம். அரி - ஆம்) செய்யுளாலும் அறியலாகும்.

உ. (அ) "வடவாழ் மார்பி, னம்புசே ருடம்பினர்ச் சேர்ந்தோ ரல்லது, தும்பை சூடாது மலைந்த மாட்சி யன்னர் பெருமை" (ஆ) "ஒன்னார் மெலிவிடத்தும்.....செல்லாமை தான்றலேயே" (இ) "மங்கை மஞ்சு வுறையேனேல் வானமருட், பங்கப்பட் டார்மேற் படை நினைக் தே னுகென்றான்" (ஈ) "கைப்படை யொன்று மின்றிக் கைகொட்டிக் குமர னார்ப்ப, மெய்ப்படை வீழ்த்த நாணி வேழமு மெறிதல் செல்லான், மைப்படை நெடுக்கண்மாலே மகளிர்தம் வனப்பிற்சூழ்ந்து, கைப்படு பொருளிலாதான் காமம்போற் கரிமீண்டான்" (உ)"கைத் துயிர் குடிப்ப னென்னு வெற்பினு னிடதுகையான், மெய்த்தலைச் சூலமோச்சான் வெகுடகையா னென்று வெள்கி" (ஊ) "சென்றவன் றன்னைநோக்கிச் சிரித் துநீ சிறுமை யுன்னே, வென்றவ மும்மை யெல்லாம் விளிவிட்டெஞ்சே" (எ) "எனக் காற்ற வோர்மேன், மாகால் வரிலெஞ்சிலேயோடும் வளைத்தோது, சேகரும்" என்பவை, காண்டி அறிந்தற்பாலன.

(பிரதிபேதம்) * எலும்பு மெலும்பு முறிந்து, † வலிகெடத் தழுவினவனை ‡ தலிர்வினறி.

எ - து: தோள்வலியாலே துணிந்த எறுதழுவுதல் எக்காலமும் மனத்தைச் செலுத்துதலின் அம்மனம் பிணித்த முயற்சியாலே எழுந்து துணிந்த இசை தவிர்தலன்றி அதனிடத்தே சென்று மற்றுள்ளார் தழுவுமாற்றைக் கடந்து சேர்ந்து மெய்யைத்தழுவித் தான்கொள்ளும் நிலையைத்தப்பித் தன் முன்னே வீழ்ந்தவன்மேலே செல்லாமல் *மீளுகின்ற புகர் நிறத்தையுடைய எற்றினது தோற்றாவு, மிக்குச்செல்லும் போருள் தன்கையில் வாளோடே அகப்பட்டவனே எனக்கு ஒவ்வானென்று வெட்டாமல் மீளும், கூற்றுவனே யொத்த மறவனேயும் ஒக்கும்; இதனைப் பாராயென்றாள். எ - று.

நிக ஆங்க, செறுத்தறுத் தழுக்கி †யேறெதிர் நிற்ப
மறுத்து மறுத்து மைந்தர் சாரத்
தடிகுறை யிறுபிறுபு தாயின கிடப்ப
விடியுற ழிசையி னியமெழுந் தார்ப்பப்
நிடு பாடேற்றுக் கொள்பவர் பாய்ந்துமே லூர்பவர்
‡கோடிடை துழைபவர் கோட்சாற்று பவரொடு
பூரிபுமேற் சென்ற நூற்றுவர் மடங்க
(க)வரிபுனை (உ)வல்வி லேவ ரட்ட
பொருகளம் போலுந் தொழுஉ

எ - து: அவ்வனம் கொம்பு மார்பிற்படுதலே மார்புகொடுத்து எற்றுக் கொள்பவரோடும் மேலே பாய்ந்து ||எழபவரோடுங்கோட்டிடையிலே சென்று புகுவாரோடும் எறுகொள்ள வல்லேனென்று சாற்றுவாரோடும் எறுகள் பொருது பின்பு பொருவாரை அறுத்துச் செறுத்து எதிரேநிற்க அதனைப் பொருமல் மைந்தர் விலக்குமவரை +மறுத்துமறுத்துச்.சென்று தழுவுகையி னலே என்புகள் முறிந்து முறிந்து தசைகளற்றுப் பரந்தனவாய்க் கிடக்க (ங) இடியோடே மாறுபடுகின்ற எற்றினது முழக்கோடே வாசியெங்கள் மிக்கு ஆரவாரிக்க அத்தொழு, போரைவிரும்பி மேலேசென்ற தரியோதனனிகள் படும்படி வரிந்து புனைந்த வலிய வில்லையுடைய தருமன் முதலியோர் கொன்ற பொருகின்ற களத்தையொக்கும். எ - று.

க. "வரிப்புனை பந்தொடு" முருகு. சுஅ.

உ. (அ)"வல்வி லோரி கொல்லிக் குடவரை" தூறுநீ. கoo.(ஆ) "கொல்லி யாண்ட வல்வி லோரியும்" புறம். கடுஅ இ. (இ) "வல்வி லிராமன்" நாலா. பெரியதிருமொழி. (இ) க: ச.

ங. "உருமி னதிருங் குரல்போற் பொருமுர, னல்லேறு" (கலி. ககங: உசு - உஎ.) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

(பிரதிபேதம்) * மீளுகின்ற நிறத்தை, † எற்றெதிர், ‡ கோட்டிடை, || எறுமவரோடு, மறுத்துச் சென்று.

சுo தொழுவினுள், கொண்டவே றெல்லாம் புலம்புகத் தண்டாச்சீர்
வாங்கெழி னல்லாரு மைந்தரு மல்லலூ
ராங்க ணயர்வர் தழூஉ

எ - து: அத்தொழுவிடத்துத் தழுவிக்கொண்ட எறுகளெல்லாம் மேயும் நிலத்தேபோக அமையாத சீரினையும் நோக்கினூர் கண்ணே வாங்கிக்கொள்ளும் *அழகினையுமுடைய ஆய்ச்சியரும் ஆயரும் வளப்பத்தையுடைய ஊரிடத்தே குரவையாடுவரெனத் தோழி தலைவிக்குக் காட்டிக் கூறினள். எ - று.

சுசு பாடுகம் வம்மின் பொதுவன் கொலையேற்றுக்
கோடு குறிசெய்த மார்பு

எ-து: கூறி, பொதுவனுடைய கொலைத்தொழிலையுடைய எற்றினுடைய கொம்புகள் குறியிட்டுவிட்ட மார்பைப் பாடுவேமாக வாருங்கோளென த் தலைவியையும் ஆயத்தையும் நோக்கிக் கூறினள். எ - று.

சுரு நெற்றிச் சிவலை †நிறையழித்தா ணீண்மார்பிற்
செற்றார்கண் சாயயான் சாரா தமைகல்லேன்
பெற்றத்தார் கவ்வை பெடுப்ப வதுபெறி
தற்றியா ளாயர் மகள்

எ - து: அதுகேட்ட தலைவி, நெற்றியிலே சிவந்த சுட்டியினையுடைய எற்றைவிரவி நிறைதலைக்கெடுத்தவனுடைய நீண்ட மார்பிலே பகைத்து அலர் கூறுகின்ற மகளிர் நம்மை இகழ்ந்து பார்க்குங் கண்கள் இகழ்ந்து பாராதிருக் கும்படியாக யான் சாராமல் அமைந்திரேன்; இனி, பசுவையுடைய ஆய்ச்சியர் அலர்கூறுவதற்குப் பெரிதும் வருத்தமுறேன் யாஎனென்றாள். எ - று.

ஆயர்மகளென்று தன்னைப் பிறர்போற் கூறினள்.

சுசு (க)தொழீஇ இ
எ - து: தொழில்செய்கின்றவளே. எ - று.
(உ)ஒருக்குநா மாடுங் குரவையு ணம்மை
(ங)யருக்கினன் போலேக்கி யல்லலெனைப் செய்தல்

க. இந்நூற்பக்கம் சுசச: க-ஆம் குறிப்புப் பார்க்க.

உ. புகுமுகம்புரிதல் கைக்கிளைக்கண் வந்ததற்கு; "ஒருக்குநாம்..... மகன்" என்னும் பகுதி மேற்கோள்; தொல். மெய்ப். சூ. சுசு. பேர். இ - வி. சூ. சுஅo.

ங. "அருக்கு மங்கையர் மலரடி" திருப்புகழ்.

(பிரதிபேதம்) * அழகினையுடைய, † நிறையழித்த நீண்மார்பிற் சென்றார்.

(க)குரூஉக்கட் கொலேயேறு கொண்டேன்யா னென்னுந்
தருக்கன்றே வாயர் மகன்

எ - து: ஆயர்மகன் ஆயத்தோடே நாம் ஆடுங் குரவைக்கூத்திலே நம்மை அருமைசெய்தான்போலே நோக்கி நமக்கு வருத்தத்தைத் தரும் கோலையச் செய்தல் *நிறத்தையுடைய கண்ணையுடைய கொலேயேற்றையான்கொண்டே னென்னும் மனச்செருக்கன்றே? அது வேறொன்றல்லவே என்றாள். எ - று.

எரூ கேரிமுராய், †கோளரி தாக நிறுத்த கொலேயேற்றுக்
காரி கதனஞ்சான் பாய்ந்த பொதுவற்கே
யார்வுற் றெமர்கொடை நேர்ந்தா ரலரெடுத்த
வூசாரை (உ)யுச்சி மிதித்து

எ - து: அதுகேட்ட தோழி, ஒப்ப இழையினையுடையாய்! கொள்ளுதலரிதாக நஞ்சுற்றத்தார் நிறுத்தின கொலேத்தொழிலேயுடைய எருமை காரியினது கோபத்திற்கு அஞ்சாமையைத் தழுவின பொதுவனுக்கே எம்முடைய சுற்றத்தார் ‡மகிழ்ச்சிநிறைதலுற்ற அலரை மிகக் கூறிய ஊரிலுள்ளாரைத் தலேயிலே மிதித்துக் கொடுத்தலேப்பொருந்தினார்; இனி வருந்தாதே கொள் ளென்றாள். எ - று.

‖எமதென்றாள்;"தாயதினடையா" என்னும்(ங)சூத்திரவியலால். அவர் அலர் கூறிய அவற்கே கொடுத்தலின். அவர் உச்சியிலே மிதித்த தன்மைத் தென்றாள்.

எள ஆங்கு
தொல்கதிர்த் திகிரியாற் பரவுதொலேந்தா
வுருமுறழ்ந் (சு)முரசிற் பிறங்கானவற்
(ரு)கொருமொழி கொள்கலிவ் வலருட ÷னெனவே

க. "குரூஉக்கட் கொலேயேறு" கலி. கo.ச: உரை.

உ. உச்சியிலே மிதித்தலென்றது இழிவுபடுத்தலே: "மதித்திறப் பாரு மிறக்க மதியா, மிதித்திறப்பாரு மிறக்க" என்பது; நாலடி. சுக.

ரு. தொல். பொருளி. சூ. உஎ.

ச. பாண்டியற்கு முரசாற் சிறப்புக் கூறுதலே. "முரசுமுழங் குள்ளவர்" (கலி. கரூ: ச) என்பதனாலும் அதன் குறிப்பாலும் அறிக.

ஞ. "சுமரியொடு வடவி மயத், தொருமொழிவைத் துங்காண்ட சேரலா தற்கு" சிலப். உக.

(பிரதிபேதம்) * நிறத்தையடைத்தாகிய, † கோளரியாக, ‡ மகிட்சி, ‖ எமரென்றுன் தாய் தாயத்தி, ÷என்னவே.

எ - து: தொடாத (க)உருமேற்றை மாறபடுகின்ற முரசினையுடைய அவ்வீடத்திற் பாண்டியனுக்கு இவ்வுலகுசேர அவனுடையஒருமொழியைக்கேட்பதாகவென் றுகூறிப் பழைதாகிய கதிரையுடைய சக்கரப்படையையுடையானே *வாழ்த்துதும்; அதற்கு நீயும் வருகவென்றாள். எ - று.

ஒருமொழி, ஆணை. தென்னவற்கென்னும் நான்காவது இவ்வுலகம் நடப்பதாகவென்று போக்த பொருளொடு முடியும்.

இதனால், தலைவிக்குப் புணர்ச்சியுவகை பிறந்தது.

"ஆயர் வேட்டுவர்" என்னும்(உ)சூத்திரத்தில்†ஆயிரலுங்கிழவருங்கிழத்தியரும்,உளரென்றார்‡ஆதலான், இவர்க்குங் களவொழுக்கம் நிகழுமென்பதாம். "நாடகவழக்கினும்" என்னும் (ங)சூத்திரத்திற் பாடலுள் அமையாதனவாய்க் களவொழுக்கம் நிகழ்ந்து ஏறுதழுவி வரைவுடன் பட்டாராகக் கூறினார். மேலும் இங்ஙனம் களவு நிகழ்ந்து ஏறுதழுவி வரைகின்றதாகக் கூறும் +பாட்டுக்களுக்கெல்லாம் இதுவே விதியாகக் கொள்க.

இது தரவும் ஐஞ்சீரடிப்பெற்ற குறவெண்பாட்டும் ஐஞ்சீரடிப்பெற்ற நெடுவெண்பாட்டும் ஐஞ்சீரடிப்பெற்ற கொச்சகமும் ×வழியசைபுணர்த்த சொற்சீரடியும் முடியுமிலோடு தொடர்ந்த கொச்சக வெண்பாவும் நாற்சீரடி முடியுமிலோடு தொடர்ந்து ஐஞ்சீரடியும் வந்த கொச்சகவெண்பாவிரண்டும் ஐஞ்சீரடியும் ஆசிரியத்தளையும் விரவி ஈறு வேறுசீர் சீரான் இற்ற கொச்சக வெண்பாவும் **ஐஞ்சீரடுக்கியவற்றிற் குறவெண்பாட்டும் ஐஞ்சீரடுக்கிய நெடுவெண்பாட்டிரண்டும் தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்றுவந்த கலிவெண்பாவின்வேறுபட்ட (சு)கொச்சகம். "வெண்டளை விரவிய மாசிரியம் விரவியு,

---

க. (அ) "உருமிடி முரசமொடு" (ஆ) "இடிமுரசியம்ப" (இ) "இடியுமிழ் முரசம்" (ஈ) இடியென முழங்கு முரசின்" (உ) "உருமின் முர செழுந் தியம்ப" (ஊ) உருமுமற் றன்ன வுட்குவரு முரசமொடு" (எ) 'உருமி னிரங்கு முரசின்" (ஏ) "முரசம் .....உருமி னுரற்பு சிலேப்ப" (ஐ) "உருமிசை முரசம்" (ஒ) "முர சிடியுமிழ் தழங்கென முழங்க" (ஓ) "உருமி னிடிமுர சார்ப்ப" என முரசினுலைலிக்கு உரு மொலி உவமையாய் வருதல் காண்க.

உ. தொல். அகத். சூ. உக.

ங. தொல். அகத். சூ. திங.

ச. (அ) " மலிதிரை யூர்ந்து " என்னு முல்லைப்பாட்டின், "இரிபெழு பதிர் பதிர் பிகர்துடன் பலர் நீங்க" 'தாளெழு துணிபிணி யிசைதவிர் பின்றி' எனவு முடுகுதலிற்கொச்சகமாயிற்று; இதனுட் சொற்சீரடியும் வந்தது என்பர் நச்; தொல். செய். சூ. கடுடு. (ஆ) இச்செய்யுள்

(பிரதிபேதம்) * வாழ்த்துமதற்கு, †ஆயிரலுங் கிழத்தியரும், ‡ ஆதலின், || மென்றதூஉ நாடக, + தழுவ வரைவு, + பாட்டுக்களுக்கு மிதுவே, × வழியசைப் புணர்த்த, ** ஐஞ்சீரடுக்கிய வெண்பாட்டிரண்டுந் தனிச்சொல்லும்.

மைஞ்சீ ரடியு முளவென மொழிப" (க) என்பதனுள் மூவகைப் பாவிற்கும் ஐஞ்சீரடிவருதல் பெற்றும். (சு)

(கo(டு.) அரைசுபடக் கடந்தட் டாற்றிற் றந்த
முரைசுகெழு முதுகுடி முசண்மிகு செல்வற்குச்
சீர்மிகு சிறப்பிலேன் றெல்குடிக் குரித்தெனப்
பரிவளர் முத்தமொடு படுகடல் பயந்த
வார்கலி யுவகையா சொருங்குடன் கூடித்
தீதின்று பொலிகெனத் தெய்வக் கடியயர்மார்
வீவில் குடிப்பி னிருங்குடி யாயருந்
தாவி னுள்ளமொடு துவன்றி யாய்புடன்
வள்ளுரு ணேமியான் வாய்வைத்த வளைபோலத்
கo தெள்ளிதின் விளங்குஞ் சுரிநெற்றிக் காரியு
மொருகுழை யவன்மார்பி லொண்டார்போ லொளிமிகப்
பொருவறப் பொருந்திய செம்மறு வெள்ளையும்
பெரும்பெயர்க் கணிச்சியோன் மணிமிடற் றணிபோல
விரும்பின ரெருத்தி னேந்திமிற் குராஉ
கசு மணங்குடை வச்சிரத்தோ ளுபிரங் கண்ணேய்க்குங்
கனங்கொள் பல்பொறிக் கடுஞ்சினப் புகரும்
வேல்வலா னுடைத்தாழ்ந்த விளங்குவெண் டுகிலேய்ப்ப
வாலிது கிளர்ந்த வெண்காற் சேயுங்
கால முன்பிற் பிறவுஞ் சால
உo மடங்கலுங் கணிச்சியுங் காலனுங் கூற்றுங்
தொடர்ந்துசெல் லமையத்துத் துவன்றுயி ருணீஇய
வுடங்குகொட் பனபோற் புருத்தனர் தொழூஉ;
உசு அவ்வழி;
காரெதிர் கலியொலி கடியிடி யுருமி னியங்கறங்க
வூர்பெழு கிளர்புளர் புயர்மங்குலி னறைபொங்க
கேரிதழ் நிரைநிரை நெறிவெறிக் கோதைய ரணிநிற்பச்
சீர்கெழு சிலம்பிலைச் செயிரிகன் மிருதியிற் சினப்பொதுவர்

புணர்தற்பொருண்மைத்தாயினும் மூல்லைக்குரிய கருப்பொருளான் வருதலின் மூல்லையாயிற்றென்பர் இளம்; தோல். அகத். சூ. உ.

சு. தோல். செய். சூ. சுசு:

தூர்பெழு தூதைபுதை தூகள்விசும் புறவெய்த
வார்புடன் பாய்ந்தா ரகத்து;

கூ0 மருப்பிற் கொண்டு மார்புறத் தழீஇயு
மெருத்திடை யடங்கியு மிமிலிறப் புல்லியுந்
தோளிடைப் புகுதந்துந் தூதைத்தூபா டேற்று
நிரைபுமேற் சென்றுரை நீண்மருப் புறச்சாடிக்
கொளவிடங் கொளவிடா நிறுத்தன வேறு;

கூநி கொள்வாரைக் கொள்வாரைக் கோட்டுவாய்ச் சாக்குத்திக்
கொள்வார்ப் பெறுஅக் குரூஉச்சேகில் காணிகா
செயிரிற் குறைகாளாற் பின்சென்று சாடி
யுயிருண்ணுங் கூற்றமும் போன்ம்;

கூஈ பாடேற் றவரைப் படக்குத்திச் செங்காரிக்
கோடெழுந் தாடுங் கணமணி காணிகா
நகைசா லவிழ்பத நோக்கி நறவின்
முகைசூழுந் தும்பியும் போன்ம்;

சஈ இடைப்பாய்ந் தெருத்தத்துக் கொண்டானே டெய்தி
மிடைப்பாயும் வேள்ளேறு கண்டைகா
வாள்பொரு வானத் தரவின்வாய்க் கோட்பட்டுப்
போதரும் பான்மதியும் போன்ம்;

சள ஆங்க, ஏறும் பொதுவரு மாறுற்று மாரு
விருபெரு வேந்தரு மிகலிக்கண் ணுற்ற
பொருகளம் போலுந் தொழுஉ;

நிஅ வெல்புக ழுயர்நிலைத் தொல்லியற் றுதைபுதை தூளங்கிமி
னல்லேறு கொண்ட பொதுவன் முகனேக்கிப்
பாடில வாயமகள் கண்;

நிகூ நறுதுதா லென்கொலிங் கூந்த லுளரச்
சிறுமுல்லை தாறிய தற்குக் குறுமறுகி
யொல்லா துடன்றெமர் செய்தா ரவன்கொண்ட
கொல்லேறு போலுங் கதம்;

நிஙி நெட்டிருங் கூந்தலாய் கண்டை யிஃதோர்சொல்;

(அ) கோட்டினத் தாயர் மகனெடியாம் பாட்டதற்
கெங்க ணெமரோ பொறுப்பர் பொருதார்
தங்கண் பொடிவ தெவன்;

(க) ஒண்ணுதால்;

இன்ன வுவகை பிறிதியாதி யாயென்னைக்
கண்ணுடைக் கோல ளலைத்ததற் கென்னை
மலரணி கண்ணிப் பொதுவனே டெண்ணி
யலர்செய்து விட்டதிவ் வூர்;

(ங) ஒன்றிப் புகரினத் தாயமகற் கொள்ளிமூ
யின்றெவ னென்னை யெமர்கொடுப்ப தன்றவன்
மிக்குத்தன் மேற்சென்ற செங்காரிக் கோட்டிடைப்
புக்கக்காற் புக்கதென் னெஞ்ச;

எனை,

(எ) பாடிமிழ் பரப்பகத் தரவணை யசைஇய
வாடுகொ ணேமியாற் பரவுது நாடுகொண்
டின்னிசை முரசிற் பொருப்பன் மன்னி
யமைவர லருவி யார்க்கு
மிமையத் தும்பரும் விளங்குக வெனவே.

*இஃது ஏறுதழுவியவாற்றைத் தோழி தலைவிக்குக் காட்டிக் கூறி, அவள் ஏறுதழுவிய தலைவனே விருப்போடு நோக்கியவற்றைத் தன்னுள்ளே கூறி, முன்னர்க் களவின்கண் தமர்கோபித்ததனையும் அயலார்போறலிருந்த தன்மையினையும் தலைவித்துக் கூற, அவளும் அவர் அலர்கூறியது நன்றென்று கூறி, †அன்றே என்னெஞ்சு கலந்துவிட்டது; இனி அவர்கொடுப்பதாகக் கூறிய நாளிற் செய்வதென்னென மகிழ்ந்து ‡கூற, அதுகேட்ட தோழி யாம் அங்ஙனங் கூடி இனிதிருந்தாமாறு காக்கின்ற பாண்டியன் நீடு வாழுமாறு தெய்வத்தைப் பரவுகம் வாவெனக் கூறியது.

இதன் பொருள்.

(க) அரைசுபடக் கடந்தட் டாற்றிற் றந்த
முரைசுகெழு முதுகுடி முரண்மிகு செல்வற்குச்

க. (அ) அரைசு என்பது உயர்திணை யாண்பாலை யுணர்த்தி வருதற்கு 'அரைசுபடக் கடந்தட்டு' என்பது மேற்கோள்; தொல். இளவி. சூ. (பிரதிபேதம்) * இது ஏறுதழுவியவற்றைத் தோழி. † இன்றே, ‡கூறுவதுகேட்ட.

சீர்மிகு சிறப்பினேன் (க)ரெல்குடிக் குரித்தெனப்
பார்வளர் முத்தமொடு படுகடல் பயந்த
நி வார்தலி *யுவகைய ரொருங்குடன் கூடித்
தீதின்று பொலிகெனத் தெய்வக் கடியயர்மார்
(உ)வீவில் குடிப்பி னீருங்குடி யாயருந்
(ரு)தாவி லுள்ளமொடு துவன்றி யாய்புடன்
வள்ளுரு ணேமிமான் வாய்வைத்த வளைபோலத்
க0 தெள்ளிதின் விளங்குஞ் (ச)சுரிநெற்றிக் காரியு
(ந)†மொருகுழை யவன்மார்பி லொண்டார்போ லொளிமிகப்
பொருவறப் பொருந்திய செம்மறு வெள்ளையும்

இ.எ. கச். (அ) "அரசுபடக் கடந்த வானஞ் சேற்றத்தவன்" பரி. உஉ: ங. (இ) "அரைசுபடக் கடக்கு முரைசா ரேன்றல்" புறம். உகக: கூ.

க. "நெல்லு நீரு மெல்லார்க்கு மெளியவென, வரைய சாந்தமுக் கிரைய முத்தமு, மிமிழ்குரன் முரச மூன்றுட னளுங், தமிழ்கெழு கூடம் நண்கோல் வேந்தே" புறம். நிஅ: க0 - கங.

உ. "தொல்லிசை கட்ட குடியொடு தோன்றிய, நல்லினத் தாயர்" கலி. க0ச: நி-ச.

ரு. இப்பகுதி 'தாவி லுள்ளமொடு' என்றும் படிக்கும்படி ஒரு பிரதியி லுள்ளது; தாவென்னுஞ் சொற்போலவே தூவென்னுஞ் சொல்லும் வருத்தமென்னும் பொருளை யுடையதாயின் மோனை நயமுற, "தூவி லுள்ளமொடு" என்றும் கொள்ளலாம்.

ச. "சுரிநெற்றிக் காரி" கலி. க0க: உக.

ந. (அ) பலராமன் யமுனையால் அளிக்கப்பட்டதும் மிகச் சிறந்ததுமான ஒரு குண்டலத்தை அணிந்தனனென்பது புராணகதை; (ஆ) அவனிலே யைக் கூறுதலாகிய "கண்களியா" என்னு முதலியுடைய வெண்பாவி லுள்ள 'ஒண்குழையொன் ரெல்கி யெருத்தலைப்ப' என்பதை இனைத் தெனவுரித்துபொருள்வினைப்படுதொகுதியின்உம்மைபெற்றவருமென் பதற்கு மேற்கோள்காட்டி, (தொல். எளெவி. சூ. நஉ), சேனாவரை யரும் (நேமி. சொல். கச) நேமிநாத வுரைகாரரும் (நன். பொது. சூ. சஅ) மயிலைநாதரும் 'ஒன்றும்' எனற்பாலது, 'ஒன்று' என உம்மை யின்றி வந்தது செய்யுள் விகாரமென்றும் (தொல். எளெவி. சூ. நஉ) நச்சினார்க்கினியர் (குழை) ஒன்றேனும் இனைத்தென அறிந்தபின் உம்மை வேண்டும்; அது விகாரத்தாற் ரொக்கதென்றும் எழுதியிருப்ப வையும் இவன் ஒரே குழையினனென்பதை வலியுறுத்தும். (இ)

(பிரதிபேதம்) * உவகையர். † ஒருகுழை யொருவன் மார்பினொண்டார்.

பெரும்பெயர்க் கணிச்சியோன் மணிமிடற் றணிபோல
விரும்பிண ரெருத்தி னேக்கிமிற் சூழாது
கடு மணங்குடை வச்சிரத்தோ ளுயிரங் கண்ணேய்க்குங்
கணங்கொள் பல்பொறிக் கடுஞ்சினப் புகரும்
*வேல்வலா னுடைத்தாழ்ந்த விளங்குவெண் டுகிலேய்ப்ப
வாலிது கிளர்ந்த வெண்காற் சேயுங்
(க)கால முன்பிற் பிறவுஞ் சால
உ0 மடங்கலுங் கணிச்சியுங் (உ)†காலனுங் கூற்றுங்
தொடர்ந்துசெல் லமையத்துத் துவன்றுயி ருணீஇய
வுடங்குகொட் பனபோற் புகுத்தனர் தொழூஉ

எ - து: ‡அரசுகள் படும்படியாக வென்று கொன்று நெரியாலே கொண்டுவந்த தலைமையிருக்கின்ற ‖ சிறப்புக்களையுடையோனுடைய பழைதாகிய குடிக்குரித்தென்றுகூறிய, பாண்டிமண்டலம் பயந்த வீளைவகளும் ஒலிக்கும் +கடலில் வளர்ந்த முத்தத்தோடே மற்றும் பயந்த பொருள்களும் (ங)மூன்று ×முரசமும் கெழுமும் முதிய குடியிற்பிறந்த மாறுபாடு மிகுகின்ற

"ஒருகுழை யொருவன்போ லிணர்சேர்ந்த மராஅமும்" கலி. உசு: க. (ஈ) "காதொரு குழையோ னிளவலே" வில்லி. இராசசூய. கசக. (உ) "எரிமணிக் குன்றிரண் டென்ன வேந்துதோ, ளொருகுழை யொருவனும்" (ஊ) "கங்கையிற் றிருவ மாகுகர், வாவொரு குழையி னன் வாங்க" (எ)செக்கர்மாமணி, யொருகுழை யுலாவரு வுலங்கொ டோளினுன்" (ஏ) "திருநகர் .....கங்கையில் வீழ்தல் போன்றமற், றெருகுழை யவன்வலியுணர்த்து கின்றதால்" பாக. (கo) அக்குரூரன் வந்த. உஉ. சாம்பன்மணம்புரி. ஙo, ஙந, ஙுச. என வருபவையும் இங்கே அறிதற்பாலன.

க. (அ) "காலமுன்ப" புறம்: உந: கஎ. (ஆ)"ஆற்றல் காலனே டொக்கும் ... .தேள்வியன்" பெருங். (க) ஈசு: கoo - கoஉ. (இ) "வெந்திறற் காலனே" கந்த. மார்க்கண்டேய. உகசு.

உ. (தென் புலத்திறைவன்) "நெற்றியிற் காலன் செல்ல நீள்பெருங் கால பாச, மற்றைவெங் கால தண்டம் வந்திரு மருங்குஞ் செல்ல, வுற்றபே ரூழிக் காலத் திருத்திர மூர்த்தி யொப்ப, சுற்றிய சேனை யோடுந் தோன்றின னுலகத் தட்க" இராமா. திக்குவிசயப். சுசு.

ங. "மூரைசுமூன் முள்பவர்" கலி. கஙஉ: சு. என்பதும் அதன் குறிப்பும் ஈண்டு அறிதற்பாலன.

(பிரதிபேதம்) * வேல்வல்லான். † காலமுங்கூற்றும். ‡ அரைசுகளம்படும்படியாக, ‖ நெற் புக்கீனியுடைய பழைதாகிய, + கடலினிந்தமுத்தத். ×முரசுக்கெழுமும்.

அச்செல்வனுக்குத் தீதின்றிப்பொலிவனவாகவென்று உட்கொண்டு, தெய்வத்திற்குச் சிறப்புக்களைச் செய்தற்கு அவனுடைய கேடில்லாத குடியின்பின்பு தோன்றிய பெரியகுடியிற் பிறந்த ஆயரும், ஒருங்குநிறைந்த செருக்கினையுடைய உவகையராய்ச் சேரக்கூடி, எறுதழுவுங்காற் பிறர்க்குத் துன்பம் நிகழுமென்னும் வருத்தமில்லாத உள்ளத்தோடே நிறைந்து ஏறுகளை ஆராய்ந்து, வள்ளிய உருண்ட நேமிப்படையவன் ஊதிய சங்குபோலத் தெள்ளிதாக விளங்குஞ் சுட்டியையுடைத்தாகிய நெற்றியையுடைய கரிய ஏற்றையும், (க)நம்பிமூத்தபிராணுடைய திருமார்பில் ஒள்ளிய சிவந்த(உ)மாலை போல ஒளிமிகுப்படியாகஒப்புநிகர்ந்து பொருந்திய சிவந்தமுகவினையுடைய வெள்ளியஏற்றையும், பெரிய *பெயரையுடையதணிசுகிப்படையினையுடையவனுடைய நீலமணிபோலுந் திருமிடற்றில் அழகுபோலக் கரிய சர்ச்சரையையுடைய கழுத்தினையும் எந்நிலைகுட்டேற்றினையுமுடைய (ங)குரால் நிறத்தினையுடைய ஏற்றையும், வருத்தமுடைய வச்சிரப்படையையுடையோனுடைய ஆயிரங் கண்களையொக்குந் திரட்சிகொண்ட பலவாகிய புள்ளிகளையுங் கடிய †சினத்தையுமுடைய நிறத்தையுடைய ஏற்றையும், முருகனுடைய உடையாய்த் தாழ்ந்த விளகுகின்ற வெள்ளியதுகிலேபோப் நன்றூய் உயர்ந்த வெள்ளிய கால்களையுடைய சிவந்த ஏற்றையும், ‡காலனது வலிபோலும் வலியையுடைய ப்ற ஏறுகளையும், கால நிறைகின்ற பல்லுயிர்களை உண்ண வேண்டி ஊழிதியும் கனச்சியும் காலனும் கூற்றவனும் அவ்வுயிர்களை வீடாமற்செல்கின்ற ஊழிமுடிவாகிய காலத்தே அவை சேரச் சுழன்று திரியுமாறுபோலச் சுழன்று திரியும்படி தொழுவிடத்தே சேரப் || புகுதவிட்டார். எ - று.

பார்பயந்தன கடல்பயந்தனவென இரண்டிடத்தும் பயந்தன என்னுந் தொழிற்பெயரைக் கூட்டுக. இனிப் பார்(வளர்முத்தம்)-(ச) நிலத்தில் வளர்ந்த

க. இந்நூற்பக்கம் கசச. உ-ஆம் குறிப்புப் பார்க்க.

உ. "கொடுமிட ஞெஞ்சிலான் ஞரப்போன் மராத்து, நெடுமிசைச் சூழு மயிலாலுஞ் சீர்" கலி. ங்சு: க - உ.

ங. குரால்நிறம் - கபிலநிறம்; "குராலான் பதிதய ரிராவிற்கண்ட, வுயர் திணை யூமன் போலத், துயர்பொறுக் கல்லேன்" தருநீ. உஉச.

ச. முன்பொருகாலத்துப் பாண்டியனவையிற் பொருளீட்டுதற்குச்சிறந்த வழியாதென்று கேள்வி வந்தது. அப்போது ஒரு வணிகன் வாணிகஞ் செய்தலென்றும், ஒரு வேளாளன் பயிர்செய்தலென்றும் கூறினர். அரசன் அவ்விருவருக்கும் சிறிது பொருளுதவி இதனைக்கொண்டு நீங்கள் கூறியவழியால் பெரும்பொருளாக்குகவென்று விடுத்துச் சிலயாண்டு கழித்துத்தன் னூதரை நோக்கி அவர் நிலையை வினவினன்.

பிரதிபேதம்) * பெயரையுமுடைய, † னெந்தையுமுடைய வேற்றையும், ‡ காலதுவலி, || புகுதவிட்டார். எ-று: பயந்தனகடல்பயந்தன.

முத்தென் றுமாம். உடன் *புகுத்தனரென்க. (க) முருகன் தனக்கு உரித்தல்லாத வெண்டுகில் உடுத்தாற்போலக் கால் வெளுத்த தெருது. முன் இறைவன் கைய தாய் ஊழிமுடிவின்கண் அவன் எவலால் உயிர்த்திறமேற் றிரியுங் கணச்சி. (உ) காலன், †கூற்றுவனேவுவாளன்.

அத்தூதர் வணிகன் வாணிகத்தாற் பெருஞ்செல்வம் ஈட்டியுளானென் றும் வேளாளன் சிறப்பாக ஒரு கருப்பந்தோட்டம் பயிர்செய்திருக் கிறானென்றும் சொன்னார்கள். அரசன் அதனைக்கேட்டு அவர் நிலையை நேரே அறியக் கருதியதனால் அவ்விருவருக்கும் உறையும் ஊரிலுள்ள கொற்றவையின் திருவிழாவிற்குச் சென்றிருந்தபொழுது முதலில் வணிகனையழைப்பித்து வினவ அவன் தனக்குக் கொடுத்த பொருளைப் பதின்மடங்கு பெருக்கியிருப்பதாகச் சொன்னனன். பின்பு அரசன் வேளாளனை யழைப்பித்து வினவ, அவன் அங்கிருந்தே தன் கருப்பந் தோட்டத்தைக் காட்டி இது என் பொருளீட்டம் என்றனன். அரசன் இது செழித்த தோட்டமேயாயினும் வணிகனீட்டிய பொருளிற் பத்தி லொரு பங்கிற்கேனும் இணையாமென வேளாளன் அவன் பொருள் இதன்வீலையிற்பத்திலொருபங்கிற்கும் இணையாகாதென்றான். அரசன் அதனைக்கேட்டு வேளாளனை இகழ்ந்துரைக்க, அவன் தன் தோட்டத்திலிருந்து ஒரு கரும்பைக் கொணர்ந்து அரசன் முன்னிலை யில் அடித்து முறித்தனன். அதிலிருந்து முத்துக்கள் தெறித்தன. அரசன் அம்முத்துக்களை நோக்கி ஒவ்வொன்றும் மிக்க விலைபெற மென்பதையறிந்து மகிழ்ந்து அவ்வேளாளனுக்கு முத்து என்றும் அக் கரும்படித்தவிடத்திற்கு முத்தடித்த களமென்றும், அங்குள்ள அம்பி கைக்கு முத்துநாச்சியம்மனென்றும் அந்நாட்டிற்கு முத்துநாடென்றும் பெயர் புனைந்தனன் என்ப. இச்செவி வழிக்கேள செய்தி இங்கே கருதத்தக்கது.

க. "உடையு மொலியலுஞ் செய்யை" என்பதனால், (பரி. கசு: கூஎ) முருக னுக்கு வெண்டுகில் உரித்தென்றனர்.

உ. (அ) "ஆல மென்ன வனலென்ன வந்தகன், ஞால மெல்லா நடுங்கக் கொதித்திடும், வேலை வெங்கன லென்ன வெருண்டுவெங், காலனன் னவற் கின்ன கழறினன்" (ஆ) "என்னை யேவுதியென்னி லிராவ ணன், றன்னை நானுயி ருண்பன்" இராமா. திக்குவிசய. எஉ - எங. (இ) "அந்தகனத்துணை யமைச்ச னுகிய, வெந்திறற்காலனை விளித்துக் காசியி, லந்தண னொருமக னவன தாவியைத், தந்திடு கென்றலுந் தரணி யெய்தினன்" (ஈ) "போன காலனு மறலியை வணங்கியே புகுந்த, பான்மையாலையு முரைத்தலும்" கந்த. மார்க்கண்டேய. உகசு, உஉசு. (உ) "கடையுகத்திடியிற்பாய கடற்படை வடக்குவாயிற்,

(பிரதிபேதம்) * புகுத்னெரென்க. † கூற்றுவனேவலாள். அவ்வழி,

உஙூ அவ்வழி

ள - து: அங்ஙனம் அவர் புகுத விட்ட இடத்து. ள - மு.

(க)காரெதிர் கலியொலி கடியிடி (உ)யுருமி னியங்கறங்க
(ங)வூர்பெழு கிளர்புளர்ப்புயன்மங்குலி னறைபொங்க
நேரிதழ் நிரைநிரை நெறிவெறிக் கோதைய ரணிநிற்பச்
சீர்கெழு சிலம்பிலைச் செயிரிதன் மிகுதியிற் கினப்பொதுவர்
தூர்பெழு துதைபுதை துகள்விசும் புறவெய்த
வார்புடன் *பாய்ந்தா ரகத்தி.

ள - து: கார்காலத்துத் தம்மில் எதிர்ந்த கலிப்பினையுடைய உருமினது கடிய இடியொலிபோல வார்கியங்கள் ஒலியாநிற்கப், பரந்து உயர்ந்து எழுகின்ற அசைதலையுடையமேகம்போலத் திரைசளிலே புதைமூச்செழாநிற்கப், புறவிதழ் ஒடிந்த மணத்தையுடைய ஒத்தவிதழாற் கட்டின மாலையையுடைய மகளிர் நிரைநிரையாக அணியாநிற்கக் குற்றத்தைச் செய்த மாறுபாட்டின் மிகுதியாலே தலைமைபொருந்தினவிலக்கின்றநிலைமையினையுடைய சினத்தையுடைய பொதுவர் எழுகின்ற பெருங்கின கண்களைமறைத்தற்குக் காரணமான துகளாலே வீசும்பு † தூர்ந்துமிகும்படி அத்துகள் சென்று சேரும்படியாக அர்த்து அத்தொழுவினுள்ளே சேரப் பாய்ந்தார். ள - மு.

ஙூ மருப்பிற் கொண்டு மார்புறத் தழீஇயு
மெருத்திடை யடங்கியு ‡மிமிசிறப் புல்லியுங்
தோளிடைப் ||புகுதந்துந் துதைந்துபா டேற்று
நிரைபுமேற் சென்றுரை நீண்மருப் புறச்சாடிக்
கொளவிடங் கொளவிடா நிறுத்தன வேறு

புடைவினித் தார்க்கு மோதைப் பொருமுழக் கியமன் கேளா, வீடை தெரித்தமைமினென்ன விலங்கெயிற்றலங்கொ டிண்டோண், மிடை வலி மிருத்துக்காலாரிருவரை விடுப்பச் செல்வார்" வேதாணிய. சோரச். கள.

க. கலிப்பாவில் ஐஞ்சீரடி மூடுதி வந்ததற்கு, "காரெதிர்.....ரணி நிற்ப" என்பது மேற்கோள்; தொல். செய். சூ. கூகூ. பேர்.

உ. "இடியார் பணிதுவைப்ப" பு - வெ. உழிஞை. உஎ.

ஙூ. "புமெழை யாடிம் வரையகம் போலும், கொடிதாறைசூழ்ந்த தொழூஉ" கலி. கஙூ: உ - உக.

(பிரதிபேதம்) * பாய்ந்தனாகத்த. †தூர்ந்தபோம்படியத்துகள், ‡இமிலித்புல்லியும், ||புகுந்தந்தைத்த,

ஈடு கொள்வாரைக் கொள்வாரைக் (கு) *கோட்டிவாய்ச் சாக்குத்திக்
கொள்வார்ப் பெறூஅக் குரூஉச்சேகில் காணிகா
(க)செயிரிற் குறைநாளாற் பின்சென்று சாடி
யுயிருண்ணுங் கூற்றமும் போன்ம்

ன - து: அங்ஙனம் பாய்ந்து கொம்பிடக்கே பிடித்துக்கொண்டும் மார் பிலே உறும்படி தழுவிக்கொண்டும் †கழுத்திடத்திலே அடங்கிக்கிடத்தும் சூட் டேறு முறியும்படி தழுவியும் தோளுக்குமேலே கழுத்தைப் புகுதவிட்டுப் பிடித்தும் நெருங்கிக் கொம்புகள் தம்மேலேபடுதலே ஏற்றுக்கொண்டும் நிரைத் தித் தம்மேலே சென்ற ஆயரைப் பின்னர்க் கீழேவீழ்த்து நீண்ட மருப்புத் தைக்கும்படி குத்தி அவர்கள் தழுவுகின்ற கழுத்திடத்தைக் கழுவக்கொடாதே ஏறுகள் அவரை நீக்கி நிறுத்தின; அங்ஙனம் நிறுத்தினபின்பும் சென்று தழுவுவாரைத் தழுவுவாரைக் கோட்டிடத்தே சாம்படி குத்திப் பின்பு சென்று

க. "சாப்புல்லற் பாற்று" என்பதற்கு, 'சாம் வண்ணம் பொருந்துற் பான்மை யுடைத்து' என்று பொருள்கூறி, 'சாவுவென்பதனிறுதிநிலை விகாரத்தாற் றொக்கது' என இலக்கணமெழுதி, 'கோட்டின்வாய்ச் சாக்குத்தி' என்பழிப்போல வென இதனை மேற்கோளுங் காட்டினர் பரிமேல்; தற்ஸ. அ.கூ. இந்நூற்பக்கம் கூ.ஈ: உ-ஆம் குறிப்புப்பார்க்க.

உ. (அ) "காலனுங் காலம் பார்க்கும்" புறம். ஃக: க. (ஆ)"எண்ணி யுயிர் கொள்வான் வேண்டித் திரியினு, முண்ணுக் தீணைக்காக்குங் கூற்று" பழ. அக. (இ) "ஞாலத் தின்னுயிர் வாழ்வோர் நாப்பட், காலம் பார்க்குங் காலன் போல" பெருங்.(க) ஈ.எ: உ0ச-உ0ஙி.(ஈ) "சாற்று நாளற்ற தெண்ணித் தருமம்பார்த், தேற்றும் விண்ணென்ப தன்றி யிவ்வோப்போ, ஞற்றுங் கேட்டலுக் கின்ன நயப்பதோர், கூற்றுண் டோ" கம்ப தாடகை. சுச. (உ) "கோற்றநோன் புடைய வாழ் நாள் வரம்பினை நுனித்த வெல்லாம், கூற்றினுக் கன்றே வீரன் சரத் திற்குங் குறித்தது ணன்டோ" கம்ப. நிக்கினைப். சஈ. (ஊ) "அடுத லோம்பிய செய்கையி னென்பதா லவனைக், கொடிய னென்பரா லறி வீலார் செய்வினை குறித்து. முடிவி லாருயி ரெவற்றிற்கு முறை புரிந்திடலா, னடுவு னென்கின்ற தவன்பெய ருலகெலா கவிலும்" (எ) "கொல்வன்னெனக் காலந்தெரி கூற்றமென நின்றேன்" கந்த. மார்க்கண்டேய.!உஉ. இரண்டாநாட் சூரபன்மன். உகூ. (ஏ)"நாள் வரைக்கு நமனெனத்த வாளியார்" கழுக்குன்ற. பசுவராத. அ. (ஐ)"மாயு நாளுற நடுவு னேர்ந்தே,யாட்படுக்தூதர் நீர்போ யாங்கவற் கொணர்மி னென்ன" வேதாரணிய. சோரச். கஈ. (ஒ) "நாள்வரை யறையே நோக்கு நடுவுளர் தூத ரேய்ப்ப" திருவானைக்கா. திருகாட்டுச். அஈ.

(பிரிதிபேதம்) *கோட்டின்வாய்ச். † கழுத்திலே.

தழுவுவாரைப் பெருமல் நின்ற நிறத்தையுடைய சிவந்த ஏறு உயிர்குறை
ன்றநாளிடத்தே அவர்பின்னேசென்று குற்றத்தைச்செய்து துகைத்து
உயிரையுண்ணுங் கூற்றுவனையும்போலும்; இதனைப்பாராயென்றருள். எ - று.

கூசு பாடேற் றவரைப் படக்நத்திச் செந்தாரித்
கோடெழுந் தாடுங் கணாணி காணிகா
xநகைசா லவிழ்பத நோக்கி நறுவின்
முகைசூழுந் தும்பியும் போன்ம்

எ - து: சிவந்த கரிய ஏற்றினுடையகொம்புகள் †படித்தலை மார்பிலே
ஏற்றவர்களைக் கொம்புகளாலே படும்படி குத்தி மேலேஞ்குதலாலே வீழ்ந்த
குருதியால் நனைந்து அசையும் பலவாகக் திரண்ட நிட்சியையுடைய சிறிய
மணிகள் ஒளியமைந்த நறும்புவினது முகையவிழுந் செவ்வியைநோக்கி
அதனைச் சூழ்ந்து நிரியும் தும்பியையும்போலும்; அதனைப்பாராயென்றருள்.
எ - று.

"நறுவிதழ் கன்டன்ன ‡செவ்விரற் கேற்ப" (க) என உவமைகூறலின்
நறும்பூவைஞண்டுமணிக்கு (உ)உவமைகூறவே நிரியமணிகள்கோத்துக்கட்டின
மையும் கோடெழுந்தென்றதனால் அக்கோடு எழுந்தகாலத்து வீழ்ந்த குருதி
யால் அவை சிவந்தமையும் பெற்றாம்.

சாசு இடைப்பாய்ந் தெருத்தத்துக் கொண்டானை டெய்தி
மிடைப்பாயும் வெள்ளோறு கண்டைகா
(ங)வாள்பொரு வானத் தரவின்வாய்க் கோட்பட்டுப்
போதருந் பான்மதியும் போன்ம்

க. கலி. அசு: உஉ.

உ. நறும்பூவை ஏற்றின் கொம்புக்கும் தும்பியை அக்கொம்பிற் கட்டிய மணிக்கும் உவமையாகக் கொள்வது பொருத்த மென்று தோற்று கிறது. "அவ்வானே வெறிநி னாக்கீர்த் தன்ன. செவ்வரி யிதழ சேணுறு நறுவி, னறந்தா தாடிய தும்பி பசுங்கேழ்ப், பொன்னுரை கல்லி னன்னிறம் பெறாஉம், வளமலே" (நற்.உநி)என்பதனால்நறும்பூ, செவ்வரியையும் தும்பிமொய்த்தலையுமுடைய தென்பது விளங்கும்; "களிர் கொடியன நறவிரையக நறமலரன நறவம்" (சூளா. தூது. சு.) என வருதலால் இதன் முதல் ஒருகொடி யென்று தெரிகிறது. மயிலேநடாரும் ஒருகொடியென்றே கூறினர். இதனை ஒடையென்பது போல ஒரு மரத்துக்கும் ஒருகொடித்துக்கும் பெயரென்பாரு முளர்.

ங. "வாள்போழ் வானத்து வயங்குகதிர் சிதறி" நாற். சூ. கசஎ. மேற்.

(பிரதிபேதம்) * தகைசால், † படித்தலை மார்பிலே, ‡ மெல்விரற்கேற்ப,

எ-து: ८0வே பாய்ந்தெய்திக் கழுத்திடத்தே தழுவிக்கொண்டு கிடந்தவனுடனே பரணின்மேலே தாவிப்பாயும் வெள்ளிய எறு பரம்பின்வாயாற் சிறிதிடம் விழுங்கப்பட்டு அப்பாம்புடனே ஒளியைத்தருகின்ற விசும்பிலே போதலைச்செய்கின்ற, பால்போலும் மதியையும்போலும்; இதனைக்காணு மென்றாள். எ-று.

(க)*இகா முன்னிலையசை. அது காவெனத் திரிந்தது.

சள ஆங்க, ஏறும் பொதுவரு மாறுற்று †மாரு
விருபெரு வேந்தரு மிகலிக்கண் ணுற்ற
பொருகளம் போலுந் தொழூஉ

எ-து: அங்ஙனே ஏறுகளும் இடையரும் தம்மின் மாறுபடுகையினாலே அத்தொழு இருவராகிய பெரியவேந்தர் மாறுபட்டு எதிர்ப்பட்ட போர்மாறுத பொருகளத்தையொக்கும் என்றாள். எ-று.

இத்தினையும், தோழி தலைவிக்குக்காட்டிக் ‡கூறியது.

ஙo வெல்புக ழுபர்நிலைத் தொல்லியற் றுதைபுதை துளங்குமி
னல்லேறு கொண்ட பொதுவன் முகனேக்கிப்
பாடிலை வாயமகள் கண்

எ-து: நெருங்கின கழுத்தையெல்லாம் மறைத்தலையுடைய அசை தின்ற குட்டேற்றினையுடைய || கல்ல எற்றைத்தழுவின, வெல்கின்ற புகழ் உயர்கின்ற நிலைமையையுடைய. பழைதாகிய சூலத்தியல்பினையுடைய, பொதுவன் முகத்தை நோக்கி ஆய்ச்சாதியிற்பிறந்த மகளுடைய கண் இமைத்தலை ×யிலவாயிருந்தன. எ-று.

இது, தோழி தன் னெஞ்சோடே அவள் விரும்பக் கூறியது.

க. "நில்லிகா வெண்பாள்போ னெப்தற் னொடு தாளே, மல்லிகா மாலை வளாய்" என்புழி, நில்லிகா வெண்பாள் போல் என்பதற்கு நில்லென் பாள் போல் என்று பொருள் கூறி, 'இகவென்னும் அசை இகாவென வீறு திரிந்தது' என்று (பரிபாடல். ஈக: ८0ச-८0கு.) பரிமேலழகரும் காணிகா வென்பதற்குக் காண்பாயாக வென்று பொருள்கூறி, 'இக வென்னும் முன்னிலையசை இகாவென ஈறு திரிந்தது' என்று (சீலப். கஅ: சசு) அரும்பதவுரைகாரரும் அடியார்க்கு நல்லாரும் எழுதியிருப்பதை நோக்க இங்கும் 'இக, முன்னிலையசை; அது இகா வெனத் திரிந்தது' என்று இருக்கவேண்டுமென்று தோற்றுகிறது.

(பிழிபேதம்) * இதமுன்னிலையசை. † மாருலிருபெரு. ‡கூறினளெ லெல்புகழ். ||லல்லேற்றை, × இல்லவாயிருந்தனவெனத் தோழி தன்னுடனேயவன்விரும்பக்கூறினள், றறுதலாய்.

நிஉ *நறுநுதா லென்கொ(க)லெங் கூந்த லுளரச்
சிறுமுல்லை நாறிய தற்குக் †குறுமறுகி
யொல்லா துடன்றெமர் செய்தா ரவன்கொண்ட
கொல்லேறு போலுங் கதம்

எ-து: நறிய நுதலினையுடையாய்! ஐவகைப்பட்ட கூந்தலை ஆற்ற அது (உ)வெண்ணெயின் நாற்றம் நீக்கிச் சிறிய முல்லைப்பூவின் நாற்றம் மேலிட மிக நாறியதற்கு ‡எம்முடைய சுற்றத்தார் பொருந்தாதே ‖அண்ணிதாக மனஞ் சுழன்ற மாறுபட்டு அவன் தழுவின கொல்லுகின்ற ஏறுபோலுங் கோபத் தினைச்செய்தார்; அன்று அவர் இங்ஙனம் ÷கோபித்தது என்னபயனையுடைத் தாயிற்றென்றாள். எ - று.

இது தலைவியைநோக்கிக் கூறியது.

நிஎ (நூ)நெட்டிருங் கூந்தலாய் கண்டை +யிஃதார்சொல்;
கோட்டினைத் தாயர் மகனெடியாம் × பாட்டதற்
கெங்க ணொரா பொறுப்பர் பொறுதார்
தங்கண் பொடியுதெவன்

எ - து: நெடிய கரிய கூந்தலையுடையாய்! இன்னும் யான்கூறின்ற சுதொரு சொல்லையும் கேளாய்: ஆசுத்துபாரை; கொம்பையுடைய வாகிய எருமையினத்தை யுடைய ஆய்மகளேபோல **கடியதற்கு எம் முடைய சுற்றத்தார் இன்னும் பொறுப்பர்; அதுபொருத அயலார் ††தம் முடைய கண்கள் எங்கண்களே நோக்கித் தீய்த்துபோவது என்னபயனே ‡‡யுடைத்தென்றாள். எ - று.

சூக ஒண்ணுதல்

இன்ன வுவகை நிறுதியா தி (சு)பாயென்னைக்
(டு)கண்ணுடைத் தீகாலை யாலதத்தற் கென்னே

க. இத்தூற்பக்கம் தி.அசு: க-ஆம் குறிப்புப் பார்க்க.

உ. பாலேயும் வெண்ணெயையும் நெய்யையும் தந்தலையில் தடவிக் கொள்ளுதல் ஆய்ச்சாதியாருக்கு இயல்பு.

ங. "நெட்டிருங் கூந்தற் கடவுளர்" கலி. கூங: உடு.

ச. "அன்னை, யலேயு மலேபோயிற்று" ஐந்திணையெழு. ங.

ஙி. (அ) "நுண்ணிய மென்பா லுலேக்குங்கோல் காணும்கால், கண்ணல்லு தில்லேபிற" என்பதும், 'நுண்ணிய மென்றிருக்கு மமைச்சரை அரசர்

(பிரதிபேதம்) * நறுநுதலா யென்கொங்கூந்தலனாய்ச். † குறுமறுகுபொல்லாது, ‡ தம் முடைய, ‖ அண்ணிதாக அண்ணிதாக மனம், ÷ கோபித்தென்ன பயனே, +இஃகுதோர், × பட்டதற்கெங்கண். ** கடியவதற்கு, †† தம்முடைய தங்கண்கள், ‡‡ உடைத்தென்னத் தம்மியைநோக்கிக்கறினள், ஒன்றுதல்.

மலரணி கண்ணிப் பொதுவனே டெண்ணி
யலர்செய்து விட்டதிவ் வூர்

எ-து: அதுகேட்ட தலைவி, ஒள்ளிய நுதலினையுடையாய்! (க)யாய் தன் கண்களுடையவாகிய கோலை *யுடையளாய் என்னைவருத்தியதற்கு இவ்வூர் என்னை மலரணிந்த கண்ணியையுடைய பொதுவனேடே கூட்டமென் றெண்ணி (உ)அலரையுண்டாக்கிவிட்டது: இஃதன்மைத்தாகியஉவகை நமக்கு வேறியாதுதானென மகிழ்ந்து கூறினள். எ-று.

அலைக்குங்கோலின் காரியத்தைக் கண்கள் செய்தமைபற்றிக் கண்களுடையவாகிய கோலென்றாள்.

சுக ஒன்றிப் புகுனைத் † தாயமகற் றொள்ளிழா
யின்றெவ னென்னை யெமர்கொடுப்ப தன்றவன்
மிக்குத்தன் மேற்சென்ற செந்தாரிக் கோட்டிடைப்
புக்கக்காற் புக்கதென் னெஞ்சு

எ-து: அங்ஙனம் கூறியபின்னரும் ஒள்ளிய இழையினையுடையாய்! தன்மேல் மிக்குச்சென்ற இவ்வித கரிய ஏற்றினுடைய கோட்டிடையிலே இற்றைநாள் ‡அவன்செல்ல என்னெஞ்சம்புக்கதன்றது;இனிஞ்சுற்றத்தா ரெல்லாரும் பொருந்திப் புகுதையுடைய பருத்திரளையுடைய ஆய்ச்சாதியிற் பிறந்த மகனுக்கு என்னைக்கொடுப்பதா அமைதியிட்ட அற்றைநாளிற் கொடுக்கின்றது என்னபயனை யுடைத்தென்று தலைவி மகிழ்ந்து கூறினள். எ-று.

எனa (ங)

அலைக்குங்கோலாவது கண்ணெனவைத்துத் தன்வெகுளிநோக்கால் அவர் வெருட்டற் குறிப்பறிக வென்பது கருத்தாக்கு வாருமூளர்' எனப் பரிமேலழகர் பிறர்கோட் கூறி யிருத்தலும் (குறள். எக0) (ஆ)"கொன் தார் மலர்க்குழல் வல்லிநம் மன்னை குரிசில்வந்த, சென்தா மரை யடி கண்டனள் போலுமித் திண்சிலம்பில், வன்தா வெனவென வந்தார் சிலரிலர் மற்றிங் கென்கோ, ளெனுந்தா ணெடிதுயிர்த் தாள்கொடி தா யென்னை நோக்கினளே" (அம்பிகாபதிகோவை. உஙக) என்பதும் ஈண்டு அறிதற்பாலன.

க. யாய் - என் தாய். "யாயு ஞாயும் யாரா கியரோ" குறுந். ச0.

உ. "களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்றுற் காமம்; வெளிப்படுற் தோறு மினிது" குறள். கசசுஙி.

ங. எனலென்பது, இங்கே அசைநிலை.

(பிரதிபேதம்) * உடையாயாய் † ஆயமகற்கு. ‡ இவண்செல்ல.

நான்காவது முல்லை கூ.

எக (க)பாடிமிழ் பரப்பகத் தரவணை யுறைஇய
வாடுகொ ணேமியாற் பரவுது நாடுகொண்
டின்னிசை முரசிற் (உ)பொருப்பன் மண்ணி
யமைவர லருவி யார்க்கு
மிடைபடத் துப்பரும் †மிளை ந்ந வெல்லே

எ-து: அதுகேட்ட தோழி.யாம்(கூ)இல்லும்மிகழ்த்தி இனிதிருக்குமாறு காத்தற்குப் பிரகாடகேரக்கோண்டு இரவிய வுலையையுடைத்தாகிய முரசினையுடைய பாண்டியன் அமைந்து வருதலை யுடைய அருவி ஆரவாரிக்கும் இமயத்திற்கு வட ‡திசையிலேயும் மன்னி விளங்குகவென்று உட்கொண்டு மூறித்தலையுடைத்தாகிய முழங்குகின்ற கடலிடத்துப் பாம்பணையிலே பள்ளி கொண்ட வெற்றி கொண்ட சக்கரத்தினை யுடையோனே வாழ்த்தியே மென்றாள். எ - று.

இதனுள், தலைவிக்குப் புணர்வாகிய உவகை பிறந்தது.

இது தானும் தனிச்சொல்லும் ஐஞ்சீரடி பலவும் விராய் மூடுவண்ணம் அடியிறந்தேநாடிய கொச்சகவெண்பாவும் கொச்சகமும் இரண்டு நெடுவெண் பாட்டும் "வெண்பாட்டிற்றடி மூச்சீர்த்தாகும்" (ங)என்றதனுள் இடையீற்று மூச்சீரடிவந்த நெடுவெண்பாட்டும் ஐஞ்சீரடி பெற்ற குறுவெண்பாட்டும் ஐஞ் சீரடி மூடுகியலோடு தொடர்ந்த தொச்சகவெண்பாவும் நெடுவெண்பாட்டும் ஓரடியாலொன்றும் குறுவெண்பாட்டும் தனிச்சொல்லும் இரண்டு நெடுவெண் பாட்டும் தனிசசொல்லும் சுரிதகமும் பெற்று வந்த கொசசகம். (இ)

(கூ) கழுவொடு சுடுபடை சுருக்கிய தேர்க்கண்
ணிமிழிசை மண்டை யுறியொடு தூக்கி
யொழுகிய கொன்றைத் தீங்குழன் முரற்கியர்
வழூஉச்சொற் கோவலர் தத்த மினநிரை
பொழுதொடு தோன்றிய கார்க்கண வியன்புலத்தார்;

க. முல்லை நிலத்துக்குத் திருமால் தெய்வ மென்பதற்கு "பாடிமிழ் பரப்பகத் தரவணை.....பரவுதும்" என்பது மேற்கோள்; தொல். அகத். சூ. இ. நச்.

உ. இந்நூற் பக்கம் ககஎ: க-ஆம் குறிப்புப் பார்க்க.

ங. "காவற்பொருட்டு அரசன் வாழ்க.....என யாய் இல்லறத்திற்கு வேண்டுவன விரும்பி ஒழுகியதல்லது பிறிது நினைத்திலள்" என்னும் (ஐங்குறுநூறு. க.) உரைப்பகுதி இங்கே நோக்கத்பாலது.

ச. தொல். செய். சூ. எஉ.

பிரதிபேதம் * முன்னி, † வினக்குகெனவே, ‡ திசையிலே மின்னி.

சு அவ்வழி,
நீறெடுப்பவை நிலஞ்சாடுபவை
மாறேற்றுச் சிலைப்பவை மண்டிப்பாய் பவையரிய்த்
துளங்கிமி னல்லேற் றினம்பல களம்புகு
மள்ளர் வனப்பொத் தன;

கக தாக்குபு தம்மூட் பெயர்த்தொற்றி யெவ்வாயும்
வைவாய் மருப்பினுன் மாறுது குத்தலின்
மெய்வார் குருதிய வேறெல்லாம் பெய்காலைக்
கொண்ட னிரையொத் தன;
அவ்வேற்றை;

கசு பிரிவுகொண் டிடைப்போக்கி யினத்தோடு புனத்தேற்றி
யிருதிறனு நீக்கும் பொதுவ
ருருகெழு மாநில மியற்றுவான்
விரிதிரை நீக்குவான் வியன்குறிப் பொத்தனர்;

உ0 அவரைக் கழல வுழக்கி யெதிர்சென்று சாடி
யழல்வாய் மருப்பினுற் குத்தி யுழலை
மரத்தைப்போற் றொட்டன வேறு;

உக தொட்டதம், புண்வார் குருதியாற் கைபிசைந்து மெய்திமிரித்
தங்கார் பொதுவர் கடனுட் பரதவ
ரம்பியூர்ந் தாங்கூர்ந்தா ரேறு;

உசு ஏறுதங், கோலஞ்செய் மருப்பினுற் றோண்டிய வரிக்குடர்
ஞாலக்கொண் டெழுஉம் பருந்தின் வாய்வழீ இ
யாலுங் கடம்பு மணிமார் விலங்கிட்ட
மாலைபோற் றூங்குஞ் சினை;
ஆங்கு;

ஊக தம்புல வேறு பரத்தர வுய்த்தத
மன்புறு காதலர் கைநிணந் தாய்ச்சிய
ரின்புற் றயர்வர் தழூஉ;

ஊச முயங்கிப் பொதிவே முயங்கிப் பொதிவே
முலைவேதி னெற்றி முயங்கிப் பொதிவேங்
கொலையேறு சாடிய புண்ணெயெங் கேளே;

கூஎ பல்லூழ் தயிர்கடையத் தாஅய் புள்ளிமேற்
கொல்லேறு கொண்டான் குருதி மயக்குறப்
புல்லலெந் தோளிற் கணியோவெங் கேளே;

சூ0 ஆங்கு, போரேற் றருந்தலை யஞ்சலு மாய்ச்சியர்
காரிகைத் தோள்கா முறுதலு மிவ்விரண்டு
மோராங்குச் சேற லிலவோவெங் கேளே;

சூஙூ கொல்லேறு கொண்டா னிவள்கேள்வ னென்றாரார்
சொல்லுஞ்சொற் கேளா வளைமாறி யாம்வருஞ்
செல்வமெங் கேள்வன் றருமோவெங் கேளே;

ஆங்க;

சூஎ அருங்கலை யேற்றெடு காதலர்ப் பேணிச்
சுரும்பிமிர் கானகாம் பாடினம் பரவுது
மேற்றவர் புலங்கெடத் திறைகொண்டு
மாற்றரைக் கடக்கவெம் மறங்கெழு கோவே.

இது தத்தம் இனம் தத்தம்புலத்துப் பிரிப்பான்புக்கவர்ஏறுகொண்ட வாறுகண்டு*ஆயிச்சியர்தங்காதன்மிதியால்†தங்காதலரைக்கைபிணித்து தாவையடித்‡தென்னன்வாழ்கெனக் கானம்பாடியது.

இதன் பொருள்.

(க)கழுவொடு சுடுபடை சுருக்கிய தோற்கண்
ணிமிர்நிசை மண்டை யுறியொடு தூக்கி

க. "கொன்றையங் கிங்குழல்.....கேளாமோ தோழீ" (சிலப். கள. 'கன்றுகுணிலா') என்னும்தாழிசைகளின்விசேடவுரையில், "கொன்றை ஆம்பல் முல்லே என்பன சிலகருவி. இனி அவற்றைப் பண்ணென்று கூறபவெனின். அங்ஙனம் கூறுவாரும் ஆம்பலும் முல்லையுமே பண்ணுதற்குப் பொருத்தக் கூறினவது கொன்றை என ஒருபண் இல்லே யாதலா(..)னும் கலியுள் முல்லே நிணையின்கண் ஆறும்பாட்டினுள், இப்பாட்டில் 'கழுவொடு.....வியன் புலத்தர்' எனக்கருவி கூறினமையாலும் அன்றைப் பகற்கிழித் தாளின் நிராப்பகற், கன்றின் குரலுங் கறவை மகறங்க், கொன்றைப் பழக்குழற் கோவல ராம்பலு, மொன்றல் சுரும்பு நாம்பென வார்ப்பவும்' என வலையா பதியுள்ளும் கருவி கூறிப் பண்கூறுதலாலும் இவை ஒரு பொருண் மேல் மூன்றடுக்கிவந்த வொத்தாழிசையாகலானும் இரண்டு பண்ணும்

(பிரதிபேதம்) * ஆச்சியர், † தங்னைகாதலரை, ‡ தென்னவன்வாழ்கென.

யொழுகிய கொன்றைத் தீங்குழன் முரற்சியர்
*வழுஉச்சொற் கோவலர் தத்த மினநிரை
பொழுதொடு தோன்றிய கார்நீ யியன்†புலத்தார்

எ - து: பால் பற்றறச் சீவுதலேச்செய்து (க) கறவைக்கலங்கள் வைத்த உறியோடே தோற்பையிடத்தே கழுவோடேசூட்டுக்கோல்களையும் இட்டுச்சுருக்கிய பைகளையுந் தூக்கி நீளவளர்ந்த கொன்றைக்காயைத் நிறைத்து சமைத்த இனிய குழலில் உண்டான ஓசையராய் வழுவின சொல்லையுடைய ‡கோவலர் தம் முடைய தம்முடைய இனமாகிய பசுக்கள் கார்காலத்தோடே தோன்றின அப்பொழுது வரும் மழையாலே மனம்நெக்க அச்சையையுடைய நிலத்திடத்தாராயினர். எ - று.

பழிசை ||பாடமாயின், பழித்தலையுடையதென்க. பழித்தலையுடையது பழிசை. முரற்சியர் என்னும் எச்சம் உடையவென்னும் வினைக்குறிப்போடு +முடிந்தது. (உ) கழுவாவது கறத்தற்கரிய பசுக்களைக் கறத்தற்கு இரண்டு தலையுஞ் சீவி மாலையாகக்கட்டிக் கழுத்தில் இடுவது.

கூ அவ்வழி

(கூ)றெறிப்பவை நிலஞ்சாடுபவை
மாறேற்றுச் சிலைப்பவை மண்டிப்பாய் பவைபாய்ந்

ஒன்று கருவியுமாகக் கூறின் செய்யுட்கும் பொருட்கும் வழுஉச் சேறலாலும் அங்ஙனங்கூறுத லமையாதென்க" என்று அடியார்க்கு நல்லார் எழுதியிருப்பது ஈண்டு அறிதற்பாலது.

க. "திண்கா லுறியன் பாலைய னகலன்" அகம். உஎச: கூ.

உ. (அ)"நாகுசு னீங்கிய சேதாத் தொகுத்துக், குளம்புகோடும் விளங்கு பொன் னுறீஇத், தலையுந் தாம்பு மீளாகடை மடுத்து, கழுவுங் கலனும் வழுவில பிறவும், பைம்பொனி னியன்றவை பாற்பட வகுத்துக் குன்றுக் கோடி கொடுத்தவப் போரும்" பெருங். (க) நூக: கூச-கக (ஆ) "தழுவெறூடு பாகர் கலங்காமல் யாத்தற், தொழுவிடை யாயர் தொகுமின்" (தொல். புறத். சூ. கூ. நச. மேற்.) என்பவற்றில் இச்சொல் வருதல் காண்க.

ஙு. (அ) "அடியிட்டு நிலவ் இலேத்தண்டமெண் டிக்கும் போர்ப்பப், பொடியிட்டியர்த்துப் பொருகோட்டினிற் குத்திக் கோத்திட், டடியிட்டதிர்கா ரெதிரேற்றெழுந் தாங்கு நோக்கிச், செடியிட்டிருகண் ணழல்சிந்த நடந்த தன்றே" தீநூவினை. மாயப்பசுவை. கஎ. (ஆ) "கானிலவ

(பிரதிபேதம்) * வழுச்சொல், † புலத்தர் எ-து: கழுவாவது.....கழுத்திலிடுவது பாக பற்றறச், ‡ கோவர் தம்முடைய, || பாடமாயின் பழித்தலையுடையது பழிசை யாம்.முரற்சியை யென்னும், + முடிந்தது அவ்வழி.

துளங்கிமி னல்லேற் றினம்பல களம்புகு
மள்ளர் வனப்பொத் தன

எ - து: அவ்விடத்துத் துளங்குகின்ற குட்டேற்றினையுண்டய நல்ல ஏற் றினங்கள் பலவும் முன்பு காலாலே வெட்டி நீற்றை எழுப்புமவை இப் பொழுது (க)மழைபெய்தமையிற் (உ) கோட்டுமண் கொள்ளுமவை ஒன்றே டொன்று மாறுபடுதலே மேற்கொண்டு முழங்குமவை யிக்குப்பாயுமவையாய்ப் போர்க்களத்தே *செல்லும் வீரர் அழகையொத்தன. எ - று.

கக தாக்குபு தம்முட் பெயர்த்தொற்றி யெல்வாயும்
வைவாய் மருப்பினுண் மாறுது குத்தலின்
மெய்வார் குருதிய வேறெல்லாம் பெய்காலைத்
தொண்ட னிரைபொத் தன

எ - து: ஒன்றேடொன்று தாக்கி மீண்டு அடிப்பறித்துச்சேர்த்து கூரிய இடத்தையுடைய கொம்பாலே மாறுமல் எவ்விடத்தும் குத்துதலையினாலே மெய்யினின்றும் வடிகின்ற குருதியையுடைய †ஏறுகளெல்லாம் நாட்காலைப் பெய்யும் ‡மேகரிரையையொத்தன. எ - று.

நாட்காலைமேகம் சிவந்திருத்தலின், உவமையாயிற்று. பெய்யு மேகம் அதற்கு அடைகூறிற்று.

கஞ அவ்வேற்றை

பிரிவுகொண் டிடைப்போக்கி யினத்தோடு புனத்தேற்றி
யிருகிறனு நீக்கும் பொதுவ

கீறி வான்மிசை யுயர்த்துக் கதிர்மணி மருப்பிடை நோக்கி, யானிள வேறு யடுசமர்க் கெழுந்தா னசனியே றென்னவோ ரவுணன்" பாக. (கo) ஸ்ரீ நாரதர். சு.

க. "பெயல. கடுநீர் வரித்த செந்நில மருங்கின், விடுகெறி யீர்மணல் வாரணஞ் சிதறப், பாம்புறை புற்றத் தீர்ம்புறங் குத்தி, மண்ணுடைக் கோட்ட வண்ண னல்லேஎ, முடனிலே வேட்கையின் மடநாகு தழீஇ, யூர்வயிற் பெயரும் பொழுதில்" அகம். கூசு: ன - கஙு.

உ. (அ) "கோட்டுமண் கொண்ட மார்பம்" சீவக. உஉகூசு. (ஆ) "கோட்டு மண் கொள்ளா முலே" முத்..... (இ) "கோட்டுமண் கொண்டு குளிர்திங்கள்" நள. சுயம். கoஉ. (ஈ) "கோட்டுமண் கொண்டு கூர்ம. ஆதவர்சிறப்பு. அ. (உ) கோட்டுமண் கொள்ளும் வேழப் தணிகை. வீரரட்ட. கூஉ.

(பிரதிபேதம்) * கொல்லும் வீர, † ஏறெல்லாம், ‡ மேகரிரையொத்தன.

ருருகெழு (க)மாநில மியற்றுவான்
*விரிதிரை நீக்குவான் வியன்ருறிப் பொத்தனர்

எ - து: † அவ்வேறுகள் போர்செய்யாமற் பிரிதலேத் தாம் உட்கொண்டு அவை இரண்டு கூறுக நீக்கும்படி நடுவே சிலவறுகளைச்செலுத்தி விலக்கிப் பின்னர்ப் பகத்திரளோடே மேயும்புலத்திலே எற்றித் தத்தம் இனங்களைப் பிரிக்கும் இடையர், பழையவடிவுகளெல்லாங்கெழுமும்படி பெரியநிலத்தைப் ‡படைத்தற்கு அகற்சியையுடைய கருத்தினையுடைய,(உ) அந்நிலத்தை மறைத்துக்கிடந்த கடலைப் போக்கும் நான்முகனேயொத்தார். எ - று.

ஏற்றையென்றது ஏற்றிற்கு ஆகாவீற்றதோர்பெயர்; "ஆற்றலொடு புணர்ந்த வாண்பாற் கெல்லா, மேற்றைக் கிளவி யுரித்தென மொழிப" (கூ) என்றலின்.

உ0 அவரைக், (ச)கழல வுழக்கி யெதிர்சென்று சாடி
யழல்வாய் மருப்பினுற் குத்திக் (ஞ)யுழுகை
முரத்தைப்போற் றொட்டன வேறு

எ - து: அங்ஙனம் நீக்குகின்றவர்களே அவ்வேறுகள் ஓடும்படி மிதித்து ஓடாமல் நின்றவர்களே எதிர் சென்று அழலுகின்ற இடத்தையுடைய கொம்பாலே குத்திச் சாடி உழுகின்ற மரத்தைப்போலத் தூளாத்தன. எ - று.

க. (அ) "மாறி யுலகம் வருத்தகாள் வம்பு கடந்து மண்முழுது, மேறி யொடுங்கு மெறிகடல்போ லெயின்மா நகர மெய்தினர்" (ஆ) "தேர் செலும் வேகத்து வேலோ, ரோகுரு நாளி னெருங்கு முலகுபோற், றூங்க லாற்றலில் லார்தடு மாறித்தா, நீங்கினர்"

உ. "உரைசெய் நான்முக னுறங்குழிப் புவிகொள வொருங்கே, திரைசெய் வான்கடல் சென்றெனச் சென்றது சேனை" கந்த. திக்கு. கo.

ரு. தோல். மரபி. சூ. சுசு.

ச. "கோவுலவர், கழலக் காடுபோய்" சீவக. சுஉஉ.

ஞ. உழுலைமரம், தொழுவமுதலியவற்றுள் மாடுகளேப் புகாமல் தடுப்பதற்கு அவற்றின் வழியில் இருபக்கத்தும் உழுலையை (கழிகளை) இழுத்துப் போடும்படி தூளேத்திறுத்தியிருக்கும் மரம்; இது கடப்புக்காலென வழங்கும். "கன்று தாம்பரிந், தழுலை பாய்த்துலா முன்றில்" என்பது சீவக. சுஉஉ.

(பிரதிபேதம்) * விரைதிரை, † ஏற்றையென்றது.....என்றலின் அவ்வேறுகள், ‡ படைத்தற்கு இந்நிலத்தை மறைத்துக்கிடந்த அகற்சியையுடைய கடலைப் போக்கும் கருத்தினையுடைய நான்முகனேயொத்தார், அவரைக்.

உங. தொட்டதம், புன்வார் குருதியாற் கைபிசைந்து மெய்திமிரித்
தங்கார் பொதுவர் கடலுட் பரதவ
(க)ரம்பியூர்ந் தாங்கூர்ந்தா ரேறு

எ - து: பொதுவர் அங்ஙனந் துணித்த தம்முடைய புண்களினின்றுஞ் சோருகின்ற குருதி வழுக்குதலாலே மணலை அள்ளிக் கையைப் பிசைத்து *உடம்பையுங் (உ)திமிர்த்து தாழ்க்க நில்லாராய்க் கடலுக்குள்ளே பரதவர் (ங)சிறியதெப்பத்தை ஏறினற்போல ஏற்றைத் தழுவினர். எ - று.

உசு ஏறுதங், கோலஞ்செய் மருப்பினுற் றேண்டிய வரிக்குடர்
ஞாலக்கொண் டெழுஉம் பருந்தின் †வாய்வழீ இ
யாலுங் கடம்பு மணிமரா மிலங்கிட்ட
மாலிபோற் றாங்குஞ் நினை

எ - து: அவ்வேறுகள் தம்முடைய அழகுசெய்கின்ற கொம்பாலே தோண்டிய வரிகளையுடைய குடர்கள், நான்று விழும்படி எடுத்துக்கொண்டு உயர்ந்துபோம் பருந்தின் வாயினின்றுந் தப்பி, ஆலமரத்தையுங் ‡கடம்பமரத்தையும் (சு)ஆணடி உறையுந்தெய்வங்களுக்கு ||மகிழ்ச்சியுண்டாகவேண்டி அணிதலைச்செய்தற்கு மிலங்க இட்டிவைத்த மாலைகள்போலே தொம்புகடோறுந் +தூங்காநிற்கும். எ - று.

ங.O ஆங்கு
தம்புல வேறு பகத்தர வுய்த்தத
மன்புறு (ங)காதலர் கைபிணைந் × தாய்ச்சிய
றின்புற் றுயர்வா தழுஉ

க. "மறை யேற்றின் மேலிருந் தாடித் துறையம்பி, பூர்வான்போற் றேண்டு மகன்" பலி. கருங்: உடை.

உ. திமிர்தல் - பூசுதல்; "திமிரத் திமிரக் கனலாய சந்தன சீதளமே" என வருதல் காண்க. திமிருதச் செய்தலென்பாரு முளர்.

ங. அம்பியென்பது தெப்பத்துக்கும் நீரிற் செலுத்தும் எல்லாக் கருவிகளுக்கும் பெயரென்பவாயினும் இற்றைக்கு உவமையாய் வருதலிற் சிறியதெப்பமென்று பொருள்கூறினர். "தண்புன லாடித் தடங்கோட் டெருமை, இண்பிணையம்பியிற் றேன்றுமூழ்" என்பது ஐங்குறு. கசஎ.

ச. இந்தூற்பக்கம் சுஉச: சு, சுஉஉ: க-ஆம் குறிப்புக்கள் பார்க்க.

ஙி. குரவை யென்பது: (அ) "குரவை யென்பது கூறுங் காலைச், செய்தோர் செய்த காமமும் வீறலு, மெய்த வுரைக்கு மியல்பிற் றென்ப"
(ஆ) "குரவை யென்ப தெழுவர் மங்கையர், செந்நிலை மண்டலக்

(பிரதிபேதம்) * உடம்புதிமிர்த்த, † வாய்வழியாலும், ‡ கடம்பமரத், || மகிழ்சியுண்டாக வேண்டியதணிதற்கேசெய்தற்கு, + தூங்காநிற்கும். தம்புல. × சூச்சியர்.

எ - து: அப்பொழுது ஆய்ச்சியர் தாம் மேயும் புலத்திலே ஏறு பரத்தலைச் செய்யும்படி செலுத்தின .தம்முடைய அன்புமிக்க காதலருடைய கையைக் கோத்து இன்பமுற்றுக் குரவையாடுவர். எ - று.

கூச முயங்கிப் பொதிவே முயங்கிப் பொதிவே
(க)முலைவேதி ஞெற்றி முயங்கிப் பொதிவேம்
கொலையேறு சாடிய புண்ணெங் தேமோள

எ - து: எம்முடைய தோழீ ! கொலைத்தொழிலையுடைய ஏற்றின் சாடின புண்களைத் தழுவிக்கொண்டு பொதிந்துவிடக் கடவேம்; எங்ஙனந் தழுவுவதென்று கேட்பாயாயின் முலையின் வெம்மையாலே ஆறும்படி ஒற்றித்தழுவிக் கொண்டு பொதிந்துவிடக் கடவேம். எ - று.

கடகக் கைகோத், தங்நிலைக் கொட்பின் ரூட லாகும்" என்னும் (சிலப். பதி. எவ. உரைமேற்.) சூத்திரங்களால் தலைவனது காமமும் வென்றியும் தோன்றக்கூறி எழுமங்கையர் கைதொழுதுச் சுழன்று ஆடுவதென்றே அறியப்படுமாயினும், (சிலப். கூ: கஉ.) "இருவகைக் கூத்தின்" என்பதன் விளக்க வுரையால், குரவையென்றது: காமமும் வென்றியும் பொருளாகக் குரவைசெய்யுள் பாட்டாக எழுவரேனும் எண்மரேனும் ஒன்பதின்மரேனும் கைபிணைந்தாடுவது என்றுமறியப் படுகின்றது. இவையும் (இ) "மாயவனுடன் றம்முழுதிய, வாலசரிதை நாடகங்களில், வேனெடுங்கட் பிஞ்ஞையோடாடிய குரவையாதும்" (ஈ) "மாயவன்றன் முன்னிஞெடும் வரிவளைக்கைப் பன்னெ யொடுங், கோவலர்தஞ் சிறுமியர்கள் குழற்கோதை புதஞ்சோட், வாய்வளைச்சீர்க் கடிபெயர்த்திட் டசோதையார் தெழுதேத்த, நாதெருமன் றத்தாடுங் குரவையோ டகவுடைத்தே" சிலப். கஎ. என வருபவைகளும் (உ) "இடவல" என்பதற்கு, 'ஆய்ச்சியரோடு குரவைகோத்தலால் அவர்க்கு இடமும் வலமும் ஆயிருப்பே' பரி. கூ: அங என்ற எழுதியிருக்கும் உரையும் (ஊ) "நளிதலென்பதற்கு தன்னை சேலிக்கு மகளிரொடு குரவையாடிச் செறிதல்" (பதிற்றுப். நஉ: கசு) என்று எழுதியிருக்கும் உரையும் (எ) "பரத்தல், வெப்புடைய மட்டென்று, தண்குரவைச ரீர் துங்குந்து" (ஏ) "குரவர் மாக்கள், வாங்கமைப் பழுனிய தேறன் மகிழ்ந்து, வேங்கை முன்றிற் குரவை யயரும்" புறம். உச: ச - சு, கஉக: க - ங, என வருபவைகளும் இங்கே அறிந்தற்பாலன.

க. (அ) "புண்களோத் தடமுலை வேதுகொண் டொற்றியும்" கலிங்க. கடை. கஙூ.(ஆ) "புண்வருத்தந் தன்னைநோக்கித், தொங்கையையொற் றிடங்கொடுத்து" தனிப்பாடல். என்பவையும் (இ) "கொம்மை வரிமுலை வெம்மை வேதுறீஇ" சிலப். உஅ: கசு. (ஈ) "கொம்மை வரிமுலை வெம்மையிற் றடைஇ" நெடுநல். சுகூ. என்பவையும் இங்கே அறிதற்பாலன.

கூக பல்லூழ் (க)தயிர்கடையத் தாஅய *புள்ளிமேற்
கொல்லேறு கொண்டான் குநதி மயக்குறப்
புல்லலெக் தோளிற் கணியோவெங் கேளே

எ - து: எம்முடைய தோழீ! பலமுறையாகத் தயிரைக் கடைகையி னுலே பாய்ந்த புள்ளிகளின்மேலே கொல்லுகின்ற ஏற்றைத் தழுவினவ னுடைய குருதி மயக்கமுறும்படி தழுவுதல் எம்முடைய தோளிற்கு அழகு மாத்திரமோ? அதிலுஞ்சிறந்ததொன்றன்றே. எ - று.

சo ஆங்கு, போரேற் றருந்தலை யஞ்சது மாய்ச்சியர்
காரிகைத் தோள்கா முறுதலு மிவ்விரண்டு
மோராங்குச் சேறலி னீவாவெங் கேளே

எ - து: எம்முடைய தோழீ! ஆயர் பொருகின்ற வற்றினது சேருதற் கரிய†தலையையஞ்சுதலும் ஆய்ச்சியர் எதுதழுவாதவருடைய காரிகைத்தோளை விரும்புதலுமாகிய இவ்விரண்டு நிலையும் இருதிறப்பட்டவர்களுக்கு ஒன்றுபோல ‡செல்லுதல் உண்டு இல்லையோ. எ - று.

காரிகைத்தோளென்றது, இகழ்ச்சி; வடுப்படாததோளாதலின்.

சஉ கொல்லேறு கொண்டா னினவெங்கேள்வ னென்றாரார்
சொல்லுஞ்சொற் கேளா வளாமுறி யார்வருஞ்
செல்வமெங் கேள்வன் தருமோவெங் கேளே.

எ - து: எம்முடைய தோழீ! இவளுடைய கணவன் கொல்லுகின்ற ஏற்றைத் தழுவினனென்று ||ஊரார் புகழ்ந்துசொல்லுகின்ற அச்சொல்லைக் கேட்டு மோரைவிற்று யாம் வருஞ் செல்வத்தை எங்கணவன் தருமோ. எ-று.

ஓகாரம், தெரிநிலை. என்றது, அவன் புறத்துப் + போய் இப்புகழ்கேட்க னன்னைவிடாதினன அவன் தன்மேலுள்ள விருப்பங் கூறிற்று. இவை குரவைப்பாட்டு.

சஅ ஆங்க

(உ)அருந்தலை யேற்றெரு காதலர்ப் பேணிச்
சுரும்பிமிர் கானகாம் பாடினம் பரவுது
மேற்றவர் புலங்கெடத் நிறைகொண்டு
மாற்றரைக் கடக்கவெம் மறங்கெழு கோவே

க. "தயிர்ப்புளி, மொய்த்த தோணலார்" சீவக. சஉக.

உ. அருந்தலை யென்பதற்கு இக்கும் இச்செய்யுள் சo-ஆம்அடியிற்குறித்த பொருளே கொள்க.

(பிரதிபேதம்) * புள்ளியின்மேற், † தலையஞ்சுதலும், ‡ சொல்லுதலினடுவில்லையோ, ||ஊர் புகழ்ந்து, × போயப்புகழ்.

எ - து: ஏற்றையும் நங்காதலரையும் பாதுகாத்துச் சுரும்பினம் ஒலித்தின்ற கானத்தை காம் பாடினமாய்த் திருமாலைப் பரவுவேம்; அப்பயனாலே எம்மூடைய மறம்பொருந்திய பாண்டியன் பகைவர்நிலமென்னும் பெயர் கெட்டுத் தன்னிலமென்னும் பெயர்பெறும்படி அவர்நாட்டைத் திறைகொண்டு பகைவரை வெல்வானாக என்றார். எ - று.

இந்நிலப்பண்பிருந்தவா*றென்னென்று கண்டோர் கூறிற்றாகக்கொள்க.

இது, கண்டார்க்குப் புதுமையாகிய மருட்கை பிறந்தது.

இது முன் ஒருகொச்சகமும் தனிச்சொல்லும் மீட்டியின்றிக் குறைவு சீர்த்தாகிய சொற்சீரடிபெற்ற தொச்சகவெண்பாவும் நெடுவெண்பாட்டும் தனிச்சொல்லும் சொற்சீரடிவந்த தொச்சகமும் ஐஞ்சீரடுக்கிய குறுவெண்பாட்டிரண்டும் ஐஞ்சீரடுக்கிய நெடுவெண்பாட்டும் தனிச்சொல்லும் குறுவெண்பாட்டும் நான்கு தாழிசையும் தனிச்சொல்லும் சிந்தகமும் பெற்ற தொச்சகம்.

(கடவுள்.) எல்லா விஃதொன்று கூறுங் குறும்பிவர்
புல்லினத் தாக்குங் குடஞ்சுட் டவர்க்குமெங்
கொல்லேறு கோடல் குறைபெனக் கோவினத்தார்
பல்லேறு பெய்தார் தொழுவு;

(டு) தொழுவத்து;

இல்லோர்; செவியறைக் கொண்டவன் சென்னிக் குவிமுல்லைக்
கோட்டங்காழ் கோட்டி னெடுத்துங்கொண் டாட்டிய
வேழை யிரும்புகர் பொங்கவப் பூவந்தென்
கூழையுள் வீழ்ந்தன்று மன்;

கஎ அதனைக், கெடுத்தது பெற்றுப்போற் கொண்டியான் முடித்தது
கேட்டன னென்பவோ யாய்;

கஉ கேட்டா லெவன்செய்ய வேண்டுமோ மற்றிகா
வவன்கண்ணி யன்றே வது;

கசு பெய்போ தறியாத்தன் கூழையு ளேதிலான்
கைபுனை கண்ணி முடித்தானென் றியாய்கேட்பிற்
செய்வதி லாகுமோ மற்று;
எல்லாத் தவறு மறும்;
ஓஒ அஃதற மாறு;

(பிரதிபேதம்) * என்றுகண்டோர்கூற்றாகக்கொள்க.

கசு ஆயர் மகளாயி னயமக ணீயாயி
னின்வெய்ய ளாயி னவன்வெய்யை நீயாயி
னின்னீனோ தக்கதோ வில்லிம னின்னெஞ்ச
மன்னீனெஞ் சாகப் பெறின்;
அன்னீயோ;

உச ஆயர் கூகனீயுங் காதலி கைம்மிக
ஞாயையு மஞ்சுதி யாயி னரிதரோ
நீயுற்ற நோய்க்கு மருந்து;

உள மருந்தின்றியா னுற்ற துயராயி னெல்லா
வருந்துவே னல்லனே யான்;

உசு வருந்தாதி;
மண்ணிமா சற்றகின் கூழையு னேறவன்
கண்ணிதந் திட்ட தெனக்கேட்டுக் திண்ணிதாத்
தெய்வமால் காட்டிற் றிவட்கென நின்னையப்
பொய்யில் பொதுவற் கடைசூழ்ந்தார் தந்தையோ
டையன்மா ரெல்லா மொருங்கு.

இது தலைவி தோழிக்கு அறத்தோடுநிற்பத் தமரி *வரைவுடன்பட்டமை அவட்கு அவள் சொல்லியது.

இதன் பொருள்.

எல்லா வீஃதென்று †கூறு குறும்பிவர்
(க)புல்லினத் தார்க்குங் (உ)குடஞ்சுட் டவர்க்குமெங்
(கூ)கொல்லேறு கோடல் (சு)குறையெனக் கோவினத்தார்
பல்லேறு பெய்தார் தொழூஉ

க. (அ) "புல்லினத்தாயனே யாயிற்குடஞ் சுட்டு நல்லினத் தாயரெமர்" கலி. ககஈ: அ - கூ. (ஆ) "புல்லினத்தாய மகன்" கலி. ககடி: சு.

உ. (அ) "நீரார் நிழல குடஞ்சுட் டினத்துள்ளும்" கலி. கஅக: கூ. (ஆ) "கடுஞ் சுரையா னுன்கு, குடஞ்சுட் டினத்தாற் கொடு" பு - வே. வெட்சிப். கஅ.

கூ. "கொல்லேறு கொண்டான்" கலி. கஅக: சுகூ.

சு. குறை யென்பதற்கு இன்றியமையாததென்று சேனாவரையரும் பரிமேலழகரும் முடிக்கப்படும் பொருளென்று புறநானூற்றுரையாசிரியரும் பொருள் கூறுவர்.

பிரதிபேதம்) * வரைவுடம்பட்டமை.† கூறுங்குறும்பு.

எ - து: ஏடீ! குறும்பிடத்தே பார்த்திருக்கின்ற ஆட்டிடையர்க்கும் இப்பசு இன்னதனைக் குடம்பால் போதுமென்று சுட்டுதலையுடைய பசுவிடையர்க்கு மாகக் கோவினத்தையுடைய நஞ்சுற்றத்தார் எம்முடைய கொல்லுகின்ற எற்றைத் தழுவுதலே காரியமென்று தொழுவிலே எறுகளைப்புகுதவிட்டார். எ - று.

நி தொழுவத்துச்

கில்லைச், (க)செவிமறைக் கொண்டவன் சென்னிச் குவிமுலில்லைக்
(உ)கோட்டங்காழ் கோட்டி னெடுத்துக்கொண் டாட்டிய
வேழை யிரும்புகர் பொங்கவப் பூவந்தென்
கூழையுள் வீழ்ந்தன்று மன்

எ - து: அத்தொழுவிடத்துச் சிலுவைக்குணத்தையுடைய செவிமறையாயிருக்கின்ற எற்றைத் தழுவினவனுடைய சென்னியிற் கிடந்த குவிந்த (ங) முல்லைப் பூவாற் கட்டின வளைவினை யுடைய கண்ணியைக் கொம்பிலே எடுத்துக்கொண்டு அலைத்த எழையாகிய பெரிய புகரோடு துள்ளுகையினுலே அப்பூ வந்து என்மயிருக்குள்ளே மிகவும் வீழ்ந்தது. எ - று.

எழையென்றுள் களவொழுக்கம் *வெளிப்படுதல் இறவாமற் கோட்டால் அலைத்தமைபற்றி.

கo அதனைக்,(ச)கெடுத்ததுபெற்றாற்போற் கொண்டியான்முடித்தது
கேட்டன னென்பவோ யாய்

எ - து: அக்கண்ணியை, கெடுத்ததொன்று மீண்டு பெற்றாற்போல எடுத்துக்கொண்டு யான்முடித்ததன்மையை யாய் கேட்டாளென்று சொல்லுவர்களோ? ஈதொரு வார்த்தையை எனக்கு விளங்கக் கூறுவாயென்றுள். எ - று.

†இஃதொன்று கூறு என்னுஞ்சொல்லே என்பதன் பின்னே கூட்டிப் பொருள்கூறுக.

க. "செவிமுதை கேர்மின்னு நுண்பொறி வெள்ளே" கலி. கoக: உஎ.

உ. (அ) "கோட்டங் கண்ணியுங் கொடுங் திரையாடையும்" புறம். உஎதி: (ஆ) "கோட்டுப்பூச் சூடினும்" குறள். கஙகங.

ங. "தேன்சொரி முல்லைக்கண்ணிச் செந் துவராடையாயர்" சீவக. சஅதி.

ச. (அ)கெடுத்துப்பழி நன்கல மெடுத்துக் கொண்டாங்கு" நற். கஅஉ: நி. (ஆ) "பழந்தன மிழந்தன படைத்தவரை யொத்தாள்" கம்ப. உருக் காட்டு: சுநி. (இ) "இழந்ததனம் பெற்றவர்போ லிராக்கதாக ளிரைத் தீண்டி யிழந்ததங்கள், பழம்பதியிற் குடிபுகுந்தி" இராமா. வரை யெடுத்த. நிநி.

(பிரதிபேதம்) * வெளிப்படுத்தல், † இதுவொன்று.

கூ கேட்டா லெவன்செய்ய வேண்டுமோ மற்(க)றிகா
வவன்கண்ணி யன்றோ வது

எ - து: மேல் தோழி, அக்கண்ணி வரைத்துகோடல் தாழாத அவ னுடைய கண்ணியன்றோ? அதனற் பின்னே யாய் கேட்டால் என்ன பரி காரம் *யாஞ்செய்யவேண்டும்? அதற்கு ஒன்றும்வேண்டாவென்றாள். எ - று.

ஓ, அசை.

கச (உ)பெய்போ தறியாத்தன் கூழையு ளேதிலான்
கைபுனை கண்ணி முடித்தாளென் றியாய்கேட்பிற்
செய்வதி லாருமோ மற்று

எ - து: அதுகேட்ட தலைவி, (ங)முடிக்கும் பூ †இதுவென்றறியாத தன் னுடைய மயிரில் எதிலான் கையாலே புனைந்தகண்ணியை முடித்தாளென்று தாய்கேட்கில் அதற்குப் பின்னே அவள் வெருளாமற்செய்வதொரு பரிகாரம் இல்லையாயிருக்குமோ என்றாள். எ - று.

மயிருக்கு (ச)மணத்தும் பூ முடித்தல் வேண்டுமென்று அறியாதவள்.

கஎ எல்லாத் தவறு மறும்

எ - து: அதுகேட்ட தோழி, இனி எல்லாத் தவறுகளும் நீங்குங்கா ணென்றாள். எ - று.

அவன் வரைவுணர்த்தமையின்.

கஅ ஓஒ அஃதறு மாறு

எ - து: அதுகேட்ட தலைவி, ஓஒஎனவியந்து அத்தவறு அறுமாறென்னை யென வினாயினாள். எ - று.

க. இருத்தல் - தாழ்த்தல்.

உ. "புல்லினத் தாய மகன் சூடி வந்தோர், முல்லை யொருகாழுங் கண்ணியு மெல்லியால், கூந்தலுட் பெய்து முடித்தேன்" கலி. ககடி. ச - கூ.

ங. முடிக்கும் பூ - சூடும்பூ; சூடாப்பூ, எருக்கு முருக்கு முதலியவை.

ச. மணத்தின் பொருட்டே பூக்களை மக்கள் அணிவரென்பது, "ஆணித் தனக மணந்தரிற் பூமண மார்கொள்ளுவர்" என்பதனாலும் எருக்கு முதலியன மணமில்லாதன வென்பது, "தின்னியஞ் ரிணும் விரை சார்ந், தறியாத புல்லெருக்கும்" (வாட்போக்கிக். கூ.) என்பது முதலியவற்றாலும் அறியலாகும்.

(பிரதிபேதம்) * செய்யவேண்டுமதற்கொன்றுவேண்டா, †ஈதென்றறியாததன்மயிரில்.

கூ | ஆயர் மகனுயி னுயமக ணீயாயி
(கு)னின்வெய்ய னுயி னவன்வெப்பை நீயாயி
னன்னீனோ தக்கதோ வில்லீமை *னின்னெஞ்ச
மன்னீனெஞ் சாகப் பெறின்

௭ - து: அதுகேட்ட தோழி, அவன் ஆயருடையமகனு யிருப்பானுயின், நீ ஆய்ச்சாதியிற் பிறந்த மகளா யிருப்பையாயின்; (உ)†அவன் உன்னை விரும்பி யிருப்பானுயின், நீ அவனை விரும்பியிருப்பையாயின், தாய் மிக்கவும் நோவுத் ‡தக்கதொருகாரிய மில்லைகாணென்றுரை; அதுகேட்டதலைவி, அன்னையுடைய நெஞ்சு நின்னுடைய நெஞ்சாகப் பெறின் அவள் || நோவுத்தக்கதோ இல்லை யென்றுள். எ - று.

உரு அன்னீயோ

எ - து: அதுகேட்ட தோழி, இன்னும் — அத்தன்மையையோவென்றுள். எ - று.

என்றது, யான் இத்தனையெல்லாம் கூறவும் கொள்ளாத தன்மையை யோ? எ - று.

உச | (ங)ஆயர் மகனீயுங் காதலி;+ கைம்மிக
(ச)ஞாயையு மஞ்சுதி யாயி னரிதோ
நீயுற்ற நோய்க்கு மருந்து

க. "தண்ணிய சிறிய வெய்ய தழற்சொலாற் சாற்று கின்றுன்" (சீவக. எசஎ:) என்புழி 'வெய்ய' என்பதற்கு, விரும்பப்படுதலின் வெய்ய வென்றுரென்று விசேடவுரையெழுதி, 'நின் வெய்யனுயின்' என்பதை மேற்கோள்காட்டினர். நச்.

உ. "தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றூரே, காமத்துக் காழில் கனி" குறள். ககஉக.

ங. 'ஆயர் வேட்டுவர்' என்னும் (தொல். அஃத். உக.) சூத்திரவுரையில், 'ஆயர் வேட்டுவரென்னும் இரண்டுபெயரே எடுத்தோதினுரேனும் ஒன்றென முடித்தலான் அந்நிலங்கட்குரிய ஏனைப் பெயர்களான் வருவனவுங் கொள்க' என்று கூறி, "ஆயர்மகனீயுங்.....நோய்க்கு மருந்து" என்பதை மேற்கோள்காட்டுவர். நச்.

ச. ஞாய் - நின்றுய்; (அ) "யாயு ஞாயும் யாரா கியரோ" (குறுந். சo.) என்பதனுல் யாயென்பது தன்மைப் பெயரடியாகவும் ஞாயென்பது முன்னிலைப் பெயரடியாகவும் பிறந்த முறைப் பெயரென்று துணிய

(பிரதிபேதம்) * நின்னெஞ்சமென்னீனெஞ்சாகப், † இவள், ‡ தக்கதோர், || நோகத்தக்க தோ. + அத்தன்மையோவென்றுள், + கைமிக.

எ - து: *கைம்மிக ஆயர்மகனையும் காதலித்தலையுடையையாய்க் *கைம் மிகயாயையும் அஞ்சியிரா†நின்றாயின், இனி நீயுற்ற காமநோய்க்குமருந்து அரிதென்றாள். எ - று.

அரோ, அசை.

உள மருந்தின்றியா னுற்ற தியராயி னெல்லா
வருந்துவே னல்லனே யான்

எ - து: அதுகேட்ட தலைவி, ஏடீ! யானுற்ற வருத்தத்திற்கு மருந்தில்லை யாயின், இனி வருந்தியே விடுவேனல்லனே என்றாள். எ - று.

உக வருந்தாதி

(க)மண்ணிமா சற்ற(உ)நின் கூழையு ளேறவன்
கண்ணிதந் திட்ட தெனக்கேட்டுத் திண்ணிதாத்
தெய்வமால் காட்டிற் றிவட்கென நின்னையப்
பொய்யில் ‡பொதுவற் கடைசுற்றார் தந்தையோ
டையன்மா ரெல்லா மொருங்கு

எ - து: அதுகேட்ட தோழி, இனி வருந்தாதேகொள்; கழுலி அழுக்கற்ற நின்னுடைய மயிரிடத்தே ஏற அவன் கண்ணியைத் தந்தென்ற பிறர் சொல்லக் கேட்டு, தந்தையோடே தமையன்மாரெல்லாரும் சேரக் கூடியிருந்து, தெய்வமாகிய மால் இவளுக்கு இவனைத் || திண்ணிதாகக்கொண்டு வந்து காட்டிற்றென மகிழ்ந்து, நின்னை அந்தக் களவொழுக்கத்தைப் பிறர் அறியாமல் ஒழுகவல்ல பொதுவனுக்கு அடித்தலைசூழ்ந்தார் காணென்றாள். எ - று.

லாரும். பதிப்பில் ஞகரம் யகரமாக மாறியதனால் ஞயமாறிக்கிடந்த இப்பகுதியைத் திருத்தி யின்புறுத்தியது தமிழ்நெறி விளக்கமே. யாயென்பது தன்மையொடுத்த முறைப்பெயரென்பதுமட்டும் தொல்காப்பிய உரைகளிற் குறிக்கப்பட்டுள்ளது; ஞா யென்பது முன்னிலையொடுத்த முறைப்பெயராதலே (ஆ) "ஞாயர் பயிற்ற" (இ)"ஞாயர்பா லுண்டி"(ஈ)"ஞாயர்மாட்டைப்பால்" கலி. அக: கஉ; அகி: உஅ, ஙக. எனவே இக்நூலிற் பலவிடத்தும் வருதலும் வலியுறுத்தும். இவைஇவ்வரம்புகடந்துதாயென்னும்பொருளிலும்வருதலுண்டு.

க. "மாசற மண்ணுற்ற மணியேசு மிருங் கூந்தல்" கலி. எஎ: கக. என் பதிலும் அதன் குறிப்புக்களும் பார்க்க.

உ. "அவன்கண்ணி நீபுனைந்தா யாயி னமரு, மவன்க ணணுகாரிந்தார் நின்னே" கலி. ககஙி: கஎ - கஅ.

(பிரதிபேதம்) * கைமிக, † நின்றாய் இனிர், ‡ பொதுவர்க்குடை.|| நின்னிடமாக.

இதனுள், தலைவிக்குப் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது கொச்சகவெண்பாவும் தனிச்சொல்லும் ஐஞ்சீரடுக்கிய கொச்சக *வெண்பாவும் ஐஞ்சீரடுக்கிய குறுவெண்பாட்டும் ஈரடியாலொன்றும் கொச்சகவெண்பாவும் †மூச்சீரடியாலொன்றும் இருசீரடியாலொன்றும் நெடுவெண்பாட்டும் தனிச்சொல்லும் குறுவெண்பாட்டும் கொச்சகவெண்பாவும் தனிச்சொல்லும் சுரிதகமும்பெற்ற கொச்சகக்கலி. (எ)

(கஅ) (க)இகல்வேந்தன் சேஎ யிறுத்தவாய் போல
வகலல்குமேரூள் கண்ணென மூவழிப் பெருங்
குதலடி நுசுப்பென மூவழிச் சிறுகிக்
கவலையாற் காமனும் படைவிடு வனப்பினெ
டகலாங்க ணளிமாறி யலமந்து பெயருங்கா
னகைவல்லேன் யானென்றென் னுயிரோடு படைதொட்ட
விகலாட்டி நின்னே யெவன்பிழைத்தே னெல்லாயான்;

அஃதவல மன்று மன;

கூ ஆய ரெமரானு லாய்த்தியேம் யாமிகக்
காயாம்பூங் கண்ணிக் கருங்குவ ராடையை
மேயு நிரைமுன்னர்க் கோலூன்றி நின்றுயோ
ராயமே யல்லி பிறவோ வமரருண்
ஞாயிற்றுப் புத்தேண் மகன்;

கச அதனுன் வாய்வாளேன்;

மூல்லை முகையு முருந்து நிரைத்தன்ன
பல்லும் பணைத்தோளும் பேரம ருண்கண்ணு
நல்லேன்யா னென்று நலத்தகை நம்பிய
சொல்லாட்டி நின்னெடு சொல்லாற்று கிற்பார்யார் ;

கசு சொல்லாதி;

நின்னைத் தகைத்தனே னல்லல்காண் மன் ;

உக மண்டாத கூறி மழுகுழக் காகின்றே
கண்ட பொழுதே கடவரைப் போலநீ

க. புணர்த்த வென்னு முரிப்பொருள் வந்த மூல்லைப்பாட்டுக்கு இச் செய்யுள் மேற்கோள்; நாற்கவி. சூ. உஉ.

(பிரதிபேதம்) * வெண்பாட்டு மீரடியாலொன்றுக்கொச்சகவெண்பாவுமைஞ்சீரடியாலொன் றும்நெடுவெண். † ஐஞ்சீரடியாலொன்றும் இரு.

பண்டம் விலைய படிற்றுற் றொடீஇயநிற்
கொண்ட தெவனெல்லா யான் ;

கொண்டது;

உசு அளைமாறிப் பெயர்தருவா யறிதியோ வஞ்ஞான்று
தளவமலர் தைதந்தேர் கானச்சிற் றுற்றய
வீளைமாங்காய் போழ்ந்தன்ன கண்ணினு லென்னெஞ்சங்
களமாக்கொண் டாண்டாயோர் கள்விலை யல்லியோ; [கும்;
நின்னெஞ்சங், களமாக்கொண் டியாமாள லெமக்கெவ னெளிதா

ஈக புனத்துளா னெய்தைக்குப் புகாவுய்த்துக் கொடுப்பதோ
வினத்துளா னெண்ணிக்குக் கலந்தொடு செல்வதோ
திணைக்காலுள் யாய்விட்ட கன்றுமேய்க் கிற்பதோ;

அனைத்தாக;

ஈஎ வெண்ணெய்த் தெழிகேட்கு மண்மையாற் சேய்த்தன்றி
யண்ணித் தூராயி னன்பகற் போழ்தாயிற்
கண்ணெக் கொழிக்குங் கவின்பெறு பெண்ணீர்மை
மயிலெருத்து வண்ணத்து மாயோய்மற் றின்ன
வெயிலொ டெவன்விரைந்து சேறி யுதுக்காண்
பிடிதுஞ்சு வன்ன வறைமேல துங்கின்
றடிகண் புரையுங் குறுஞ்சுனை யாடிப்
பனிப்பூக் கமழொடு முல்லை பறித்துத்
தனிக்காயாந் தண்பொழி லெம்மொடு வைகிப்
பனிப்படச் செல்வாய்தும் மூர்க்கு ;

இனிச்செல்வேம்யாம்;

சஅ மாமருண் டன்ன மழைக்கட்சிற் றுய்த்தியர்
மேருட்டுஞ் சொற்கண் மருள்வார்க் குரையவை
யாமுனியா வேறுபோல் வைகற் பதின்மரைக்
காமுற்றுச் செல்வாயோர் கட்குத்திக் கள்வினை
நீயெவன் செய்தி பிறர்க்கு;
யாமெவன் செய்து நினக்கு;

ஙூ கொலையுண்கட் கூரெயிற்றுக் கொய்தளிர் மேனி
யிலைவனப்பின் மாயோய் நின்னிற் சிறந்தார்
நிலவுலகத் தின்மை தெளிநீ வருதி

மலியொடு மார்பமைந்த செல்வ னடியைத்
தலையினுற் றொட்டுற்றேன் சூள் ;

இள ஆங்குணர்ந் தார் நோப்ப வதுபொய்ப்பாய் நீயாயிற்
றேங்கொள் பொருப்பன் சிறுகுடி யெம்மாயர்
வேங்தூட் டரவத்து நின்பெண்டிர் காணுமற்
காஞ்சித்தா துக்கன்ன தாதெரு மன்றத்துத்
தூங்குங் குரவையு ணின்பெண்டிர் கோளாமை
யாம்பற் குழலாற் பயிற்பயி றெம்படப்பைக்
காஞ்சிக்கிழ்ச் செய்தேங் குறி.

இஃது "அடியோர் பாங்கினும் *வினைவல பாங்கினும், கடிவரை யில புறத் தேன்மனுர் புலவர்"(க)என்பதனுற் பிறர் ஏவிய தொழிலைச்செய்தல் †வல்ல அகப்புறத் தலைவனும் தலைவியும் முன்னுெருகாற் கூடிப் பின்னர் அவரனதிர்ப்பட்டுழி அவன்வயிற் பரத்தைமையால் ஊடிக் குறிநேர்ந்தது.

இதன் பொருள்.

இகல்வேந்தன் (உ) சேணி யிறுத்தவாய் போல
(ங)வகலல்குறேன் கண்ணென மூவழிப் பெருகி
நுதலடி நுசுப்பென மூவழிச் சிறுகித்
கவலியாற்(ச) காமனும் ‡படைவிடு வனப்பினே
டகலாங்க ணளாமாறி ||யலமந்து பெயருங்கா
னுதைவல்லேன் யானென்றென் னுயிரோடு படைதொட்ட
விதலாட்டி நின்னே யெவன்பிழைத்தே னெல்லாயான்

க. தோல். அகத். சூ. உங.

உ. 'சேணி யிறுத்தவாய்போல' என்பது இறுத்தலென்பது வந்து விடுத லென்னும் பொருளில் வருதற்கு மேற்கோள்; சிலப்: ச: கஉ. அடியார்க்கு நல்.

ங. "பெருந்தோண் மடந்தை" (சிலப். ங: சு.) என்பதற்கு, மகளிர்க்குத் தோள்பெருக்கை இலக்கணமென்று விசேடவுரை எழுதி 'அகலல்கு றேன் கண்ணென மூவழிப் பெருகி' என்பதை மேற்கோள்காட்டினர் உரைகாரிருவரும்.

ச. (அ) "உருவி லாள னெருபெருஞ் சிலையொடு, வீரைமலர் வாளி வெறுநிலத் தெறிய" சிலப். ங.o: உஞ் - உச. (ஆ) "படையிட்டு நடுக்குஞ் சீரமன்" மணி. ங:உங.எனவருபவையும் இக்கேநோக்கற்பாலன.

(பாடபேதம்) * வினைவர் பாங்கினும், † வல்லாதவகப், ‡ படையிலேனப். || அலம்வந்து.

எ-து: அகன்றவல்குல் தோள் கண் என்று சொன்ன மூன்றிடமும் பெருத்து, நுதல் அடி இடை என்று சொன்ன மூன்றிடமுஞ் சிறுத்துக் காமனும் பிறர்க்கு மனக்கவலை செய்தலோடே தன் அம்பை *விடுதற்குக் காரணமான அழகோடே(க) ஊரிடத்தே† அலமர்த்து மோரைவிற்று நீ மீளுங் காலத்தே யான்நகுதலேவல்லேனென்று நக்கு, பின்னர் இகலிடத்தே சென்று விட்ட பரண்டியன்சேனை உயிரோடு போம்படி படை தொடு மாறுபோல என் னுயிரோடு போம்படி படையைத்தொட்ட மாறுபாட்டையுடையவளே! எடீ! யான் நின்னைவப்படித் தப்பினேன் கூறென்றான். எ - று.

இகல்வாயிறுத்த வேந்தன்சேனைபோல என மாறுக.

அ †அஃதவல மன்று மனை

எ - து: அதுகேட்ட தலைவி, அதைமாறிக் திரிகின்றது மிகவும் எங்குலத் திற்குத் தீதன்று. எ - று.

கூ (உ)ஆய ரெமரானை லாய்த் தியேம் யாமிகக்
காயாம்பூங் கண்ணித் (ங)தருந்துவ ராடையை
(சு)மேயு நிரைமுன்னர்க் (ஞ)கோலூன்றி நின்றுயோ
ராயீனை ‖யல்லே பிறவோ வமரருண்
ஞாயிற்றப் புத்தேண் மகன்

எ - து: ×எஞ்சுற்றத்தார் ஆயரானை, யாங்கள் மிகவும் ஆய்த்தியரேம்; அதனிடக்க, நீதான் காயாம்பூவாற்செய்த கண்ணியையும் துவரூட்டின கரிய ஆடையையு ÷முடையாய்; மேய்கின்ற நிரைகளுக்குமுன்னே ஒருகோலை

க. அகலாங்கண் - அகன்ற ஊரிடத்தே. மது. கூஉ.

உ. பூர்ப்பார் அரசர் இடையர் குறவர்முதலியவர்பால்ஒருவரையொருவர் ஒவ்வாமற் கிடக்குஞ் சாதியியல்பறிய தன்மை யென்னு மெய்ப்பாட் டின் இடையர் தன்மைக்கு, "ஆயரெமரானை.....புத்தேண் மகன்" (ஒரு பிரதியில் "காயாம்பூங் ....ஆயனையல்லே") என்பது மேற் கோள்; தொல். மெய்ப்பாட்டியல். சூ. கஉ. இளம்.

ங. "அத்துவ ராடைப் பொதுவனெடு" (கலி. கoஉ: ஈஉ.) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

ச. (அ) "மேயுநிரை.....மகன்" என்பது தலைவன் வினைவல பாங்கி னன் என்பதற்கும் தொல். அகத். சூ. ஙூ. நச்; (ஆ) பிறவென்பது அசைநிலையாய்வருதற்கும், நன். இடை. சூ. உஉ. மயிலை. வீருத்தி. இரா. மேற்கோள்.

ஞ. "தண்டொ லூன்றிய தனிநிலை யிடையன்" அகம். உஎச; அ.

(பிரதிபேதம்) * விடுத்தற்கு. † அலம்வந்து, ‡ அஃதுதவல, ‖ அல்லபிறவோ. × எஞ்சுற்றத் தார், ÷உடையையாய், உடையாய்.

ன்றி அச்சிரை மேய்த்து நின்றநீ இடையனுக்தன்மையை உடையையல்லை; வேறுகத் தேவர்களுள் ஞாயிறுபோல்வது தெய்வத்தின் மகனே? கூறென்றான். எ - று.

மகன், தன்னன்; *இஃது இகழ்ச்சி. ஆய்ச்சியேம் யாமாயின் என்றும் பாடம்.

கச அதனன் வாய்வாளேன்

(க)மூல்லை முகையு முருந்து நிரைத்தன்ன
பல்லும் பணைத்தோளும் பேரமருண்கண்ணு
நல்லேன்யா னென்று நலத்தை கரியை
சொல்லாட்டி நின்னெடு †சொல்லாற்று நிற்பாரியார்

எ - து: அதுகேட்டவன் நீ இங்ஙனம் ‡ இகழ்ந்துகூறுதலால் நின்னோடு ஒன்றும் ||கூறேன்; மூல்லையினது முகையையும் (உ)பீலிமுருக்கையும் நிரைத்தாலொத்த பல்லும் (ங)பணைபோலுக் தோளும் பெரிய அமர்செய்யும் உண்கண்ணும் ÷யான் நல்லேனென்று, நின்னுடைய தகுதியைப் பிறர் நச்சுதலன்றி நீதானே நச்சியிருக்கின்ற ×சொல்லையுடையவளே! நின்னோடு மறுமாற்றஞ் சொல்லுதலே யார் நிகழ்த்துவாரென்றான். எ - று.

[மூல்லை](பல்லு)முதலியன, தினைவினை முதலொடு முடிந்தது. +ஆற்றுவித்பார்.வினைத்திரிசொல்.

கசு சொல்லாதி

எ - து: அதுகேட்டவள், அங்ஙனமாயின் ஒன்றுஞ் சொல்லாதே கொள்ளென்றான். எ - று.

உo நின்னைத் தகைத்தேனன்

எ - து: அதுகேட்டவன், **நின்னைப் போகாமல் விலக்கினேனென்றான். எ - று.

அல்லல் காண்மன்

எ - து: அதுகேட்டவள், இவன் கம்மிடத்து நிகழ்த்துகின்றதோர் வருத்தத்தைப் பாராயென சொஞ்சொடு கூறினாள். எ - று.

க. (அ)உருவென்னு மெய்ப்பாட்டிற்கு, "மூல்லை முகையு.....யார்" என்பது மேற்கோள்; தொல். மெய்ப். சூ. உரு பேர். (ஆ) "மூல்லை முகையு முருந்துநிரைத்தன்ன, பல்லர்" (கலி. கo:கூ-எ) என்பதும் அதன்குறிப்பும் இங்கே ஒப்புநோக்கற்பாலன.

உ. பீலி - மயிலிறகு. ங. பணை - மூங்கில்.

(பிரதிபேதம்) *இதனிகட்சி, †சொல்லாற்றவிற்பார், ‡ மகிழ்ந்து. || கூறேனென்றான். என்று மூல்லை, ÷ யானல்லனென்று, × சொல்லுமுடையவளே, + ஆற்றவிற்பார், **போகாமல் நினைவிலக்கி னென்னென்றான்.

உக (க)மண்டாத கூறி மழகுழக் (உ)*காகின்றே
கண்ட பொழுதே கடவரைப் போலநீ
பண்டம் வினைய படிற்றுற் றெடீஇயநிற்
கொண்ட தெவனெல்லா யான்

எ - து: கூறி, பின்னும் மனம் மயங்குதலையுடைய குழவிப்பருவத்துக்கு † ஆகின்று; என்மனம் நிக்கு வீரும்பிச ‡செல்லாத சொற்களைச் சொல்லி என்னைக் கண்டபொழுதே (ங)தனிசு கடவாரிடத்துக் கொடுத்தவர்கள் ‖அவரவர்களுக்குள்ள பண்டங்களே உசாவுமாறுபோல நீயும் என்னிடத்துள்ள பண்டங்களே இவை யாவை என்று வினவின வஞ்சனையாலே எனது வட்டியைப பிடித்தற்கு எடா ! நின்னிடத்து யாம் வாங்கிக்கொண்ட பொருள் எப்பொருள் என்றாள்? எ - று.

(சு)குழக்கு, "தாங்கக்கு ×வணணகக்கு" (ஞ)என்றாற்போல் நின்றது.

உடு கொண்டது

எ - து: அதுகேட்ட(வன்) நீ என்னிடத்து வாங்கிக்கொண்ட பொருள் கூறக்கேள். எ - று.

உசு அளைமாறிப் பெயர்தருவா யறிதியோ வஞ்ஞான்று
+தளவுமலர் தைதந்தேர் தானச்சிற் றூற்றய
லிளமாந்தூய் போழ்ந்தன்ன கண்ணினு லென்னெஞ்சங்
களமாக்கொண் டாண்டாயோர் தன்மையை யல்லியோ [கும்
நின்னெஞ்சங், களமாக்கொண் டியாமாள லெமக்கெவ னெளிதா

க. "மண்டாத சொல்லி" கலி. கூ0: உ.

உ. நிடைத்த கையெழுதுப்பிரதிகளுள் ஒன்றிலேனும்'ஆகின்றேன்' என னகாவீறுள்ள பாடம் இல்லை. முன்பதிப்பில் 'ஆகின்றேன்' என்று மூலமும் 'ஆகா நின்றேன்' என்று உரையும் உள்ளன. அவ்வாறு படிக் கும்படி யூகித்திட்டிருப்பினும் அவற்றை "ஆகின்றென்" எனவும் 'ஆகா நின்று என்' எனவும் கொள்ளலாமென்று தோற்றுகிறது.

ங. தனீசு - கடன். பழ. கூஅ.

ச. குழவென்பது இளமைப் பொருட்டென்பதை அறிஞர் பலரும் அறிவர். இங்கே குழக்கென்பதற்கு எடுத்துக்காட்டியிருக்கும் மேற்கோளை நோக்க, அகசொல் குழமென மகர வீறாகவும் இருக்குமோவென்று ஐயமுண்டாகிறது.

ஞ. "தாங்கக்கும் வண்ணகக்கும்" என்பது: யா-கா. ஒழி. எ.

பிரதிபேதம்) * ஆகின்றகண்ட, † ஆகாநின்றென்மனம், ‡ சொல்லாதசொற், ‖ அவர் களுக்குள்ள. × வண்ணக்குனக்கும், + தளமலர்.

கூக (க)புனத்துளா னெங்கைக்குப் (உ)புகாவுய்த்துக் கொடுப்பதோ
வினத்துளா *னெண்ணேக்குக் கலத்தொடு செல்வதோ
திணைக்காலுள் †யாய்விட்ட கன்றுமேய்க் கிற்பதோ

எ - து: அந்தாளிலே மோர்விற்று மீள்கின்ற நீ செம்முல்லே நெருங்கின தோர் தானத்திடத்துச் ‡நிறிய யாற்றினயலிடத்தே (கூ)||இளையமாவுவைப் பிளந்தாலொத்த கண்ணுலே எனக்குரித்தாகிய என்னெஞ்சைநினக்கு இருப்பிடமாக வாங்கிக்கொண்டு அடிமைத் தொழில்கொண்டாய்: ஒரு கன்னியை யல்லியோ? அது நீயறியாயோ என்றான்; அது கேட்டவள், நின் னெஞ்சை எனக்கு இருப்பிடமாக ÷வாங்கிக்கொண்டியாம் அடிமைத்தொழில்கொள்ளுதல் எமக்கு எங்ஙனம் எளிதாயிருக்கும்? நின்னெஞ்சு புனத்திடத்தானுகிய(சு)என் தமையனுக்கு உணவைக்கொண்டுசென்று கொடுக்குமதான்றே? பசுத்திர ளிடத்தானுகியவன் தந்தைக்குக் கறவைக்கலங்கொண்டு × செல்லுமதான்றே? நினை அரிந்த +தாளிடத்தே யாய் மேயவிட்ட கன்று மேய்க்குமதான்றே? அன்றே! ஆதலால் அரிதேகாணென்றாள். எ - று.

கூச அனைத்தாக

எ - து: அதுகேட்டவன், இனி நீ எவின தொழில்களே என்னெஞ்சு செய்வதொன்றுக என்றான். எ - று.

க. தலேலி வினேவல பாங்கின னென்பதற்கு "புனத்துளா..... மேய்க்கிற்பதோ" என்பதை, (தொல். அசத். சூ. உகூ.) மேற்கோள் காட்டி, இஃது 'எமரேவலான் யாம் செய்வதன்றி யாங்களேவ நின் னெஞ்சம் இத்தொழில்கள் செய்கின்றனவில்லே யென்றலின், வினே வல பாங்கினுளாய தலேலி கூற்றாயிற்று' என விளக்கினர். நச்.

உ. புகா-உணவு; தொல். களவு. சூ. கசு: சூ. அற. சகசு, கஉ.

ங. (அ) "வடிவிடை போழ்ந்தகன்ற கண்ணுய்" கார். சூ. (ஆ) "வடிப் போழ்ந் தன்ன வாளரிநெடுங்கண்" (இ) "வடிப்போழ்ந் தன்ன வா ளரித் தடங்கண்" பெருங். (க) சுசு: உஉசு; (உ)சு: கஉ. என்பவையும் கலி. சுசு: உக-ஆம் அடியும் அதன் குறிப்பும் ஒப்புநோக்கற்பாலன.

ச. ஏன்னே யென்பதற்கு என் தமையனென்ற பொருளும் எக்தை யென்பதற்கு என் தகப்பனென்ற பொருளுமே காணப்படுதலால், இங்கே எதோ ஒரு முறைப்பற்றி அச்சொற்களே மாற்றி இயைத்தா ரென்று தோற்றுகிறது. அன்றி எக்தையென்பதற்கு என் தமைய னென்ற பொருளு முண்டெனின் பிரதிபேதத்தால் ஆற்றெழுக் காகவே பொருள் அமையும்.

(பிரதிபேதம்) *ஞ்சைக்கு. † யாம்விட்ட. ‡ நிற்றற்றய, நிற்றியாற்றய, ||இனமாவலேவை.—வாங்கிக்கொண்டு அடிமைத், × செல்லுமதொன்றே, + தாளிடத்தேயா யா மேயவிட்ட.

கூநி வெண்ணெய்த் *தெழிகேட்கு மண்மையாற் சேய்த்தன்றி
(க)பண்ணணித் தாராயி னன்பகற் † போழ்தாயிற்
(உ)கண்ணேக் கொழிக்குங் கவின்பெறு பெண்ணீர்மை
மயிலெருத்து வண்ணத்து மாயோய்மற் றின்ன
வெயிலொ டெவன்விரைந்து சேறி (ங)யுதுக்காண்
*(ச) ‡பிடிதருஞ்சு வன்ன வறைமேல நுங்கின்
றடிகண்டாயுங் (ஞ)குறுஞ்சுனை யாடிப்
(எ)பனிப்பூக் (ஈ)தளவொடு முல்லை பறித்துத்
தனிக்காயாக் கண்பொழி லெம்மொடு வைகிப்
புனிப்படச் செல்வாய்நும் மூர்க்கு

க. "இப்புனத்தின், மருங்கண்ணேயதுண் டோவந்த தீங்கொரு வான்கலையே" (கோவையார். நூசு.) என்பதன் உரையில், 'மருங்கென்பது மருங்கிணை நெறிநிர்த்துநின்றது. அணித்தாகவென்னும் பொருட்டாய அண், அண்ணைக் குறைத்து நின்ற தெனினு மமையும்' எனப் பேராசிரியர் எழுதியிருப்பதும், தொல்காப்பியவுரையில் அண்ணையென்பது அடையடுத்ததென்று நச்சினார்க்கினியரெழுதியிருத்தலும் இங்கே அறியத்தக்கன.

உ (அ) "கண்கவர் காரிகை".....(ஆ) "கண்டவர் மனமும் கண்ணுங் கவர்ந்திட வனப்பு வாய்ந்த, வொண்டொடி" நைடத. போர்புரி. இ. என்பவையும் (இ) "வாங்கெழி னல்லாரும்" (கலி. கo: சுக.) என்பதற்கு, 'நோக்கினோர் கன்னேவாங்கிக்கொள்ளும் அழகினையுடைய ஆய்ச்சியரும்' என்றெழுதியிருக்கு முரையும் இங்கே நோக்கற்பாலன.

ங. "உதுக்காண்" என்பது சுட்டுமுதல் உகர நெறுநிய சொல்லின்முன் வல்லெழுத்து மிர்கு வந்ததற்கு மேற்கோள்; தொல். உயிர். சூ. சுக. நச். தூரத். சுசு; ஐந்தாறு. கoக; சூடுங: புறம். சுoள: சுக.

ச. "சுரும்புணங் களித்த புகர்முக வெழில, மிரும்பிணர்த் துறுகற் பிடிசெத்துத் தழூஉநின், குன்று" ஐங்குறுநூறு. உசுக.

ஞ. "குறுஞ்சுனைப் புறவம்" காஞ்சி. திருநாட்டுப். சுச.

ட. "பனிவளர் தளவின் சிலம்பாய்ச் செம்முகை"

எ. (அ) "தண்டினிக் கோற்ற பைங்கொடி முல்லை, முகைதலை திறந்த நாற்றம் புதன்மிசைப், பூமலர் தளவமொடு தேங்கமழ்பு கனல" (ஆ) "முல்லை, மீபாத்வீழ் தளவமொடு" (இ) "நெடுங்கொடி முல்லை யொடு தளவமல ருதிர்" (ஈ) "கல்லேர் புறவிற் கவினிப் புதன்மிசை, முல்லை தளவொடு போதவிழ" (உ) "வெருகு வேட்பச் சிரிப்பனபோன்

(பிரதிபேதம்) * தொழில்கேட்கு, † பொழுதாயின், ‡பிடித்தருஞ்ச வன்னவறைமேலுங்கின்

எ - து: என்ற, பின்னர்க் கடைந்தமோரைக் கையால் *அலைக்கும் ஓசைகேட்கும் அணுமையினுலே தூரம் அன்ருய் ஊர் மிகவும் அணித்தாயின், பொழுது உச்சியம் பொழுதாயின், கண் வேலொருரு வடிவை நோக்குதலைத் தவிர்க்கும் அழகைப்பெறுகின்ற பெண்டன்மையினையும் மயிலினுடைய கழுத்தினுடைய நிறத்தையுமுடையமாயோளே! இப்படி வெய்தாகிய பொழுதோடே விரைந்து செல்லாகின்ருய்; இதனுல் மற்றப் பெறும்பயனென்? காயாம் பூவையுடைய குளிர்ந்த பொழிலே அவ்விடத்தைப் பாராய்; அவ்விடத்திற் பிடி தஞ்சுவனவற்றையொத்த †பாறையிடத்தனவாகிய (அ) நுங்கினது வெட்டின கண்ணேயொக்கும் (உ) நீர்நிறைந்த அண்ணுகுனேகளிலே ஆடிக் ‡குளிர்ச்சியையுடைத்தாகியபூக்களையுடைய(ஈ)செம்முல்லேமலரோடேமுல்லே மலரையும் பறித்துத் தனியே அப்பொழிலிடத்தே எம்முடனே தங்கிப் பொழுது குளிர்ச்சியுண்டாக தும்மூர்க்குச் செல்வாயென்ருன். எ - று.

சந்தி இனிச் ||செல்லேம்யாம்

எ - து: அதுகேட்டவள், நீ போகவேண்டா வென்கின்ருயாதலின் யாம் போவேமென ஊடல்தோன்றக் கூறினுள். எ - து.

சசு (அ)மாமருண் டன்ன மழைக்கட்சிற் றுப்த்தியர்
நீமருட்டுஞ் சொற்கண் மருள்வார்க் குரையாவை
யாமுனியா வேறுபோல் வைகற் பதின்மரைக்
காமுற்றுச் செல்வாபோர் கட்குத்திக் கள்வனே

முகைத்த முல்லே.....குருதிக் கூதெயிறு கூந்தியர்கட் கொண்ட கொடிந் தளவமே" என்பவற்றுல் தளவமும் முல்லேயும் வேறுவேறு ஆதலே அறிக.

க. "நுங்கின் தடிகண்ணிலுள்ள நீர் சுனேயின் நீருக்கும் அதன் நீர்நிறைவு சுனேயின் நீர் நிறைவுக்கும் உவமை.

உ. "ஆளுத்தன்ன நிறைசுனேப் புறவின்" மலே. கoச.

ஈ. தளவும் செம்முல்லேக்குப் பெயராய்வருதலே (அ) "செல்வா யுற்ற தளவின்" (ஆ) "புதன்மிசைத் தளவி னிதன்முட் செற்ருனே" (இ) "செல்வாய் வனப்பின வாகி நிரலொப்ப, வீர்ந்தண்டளவம் தகைத்தன" என்பவற்றலும் இந்நூற்பக்கம் சுகக: சு; சுகக: எ (உ) குறிப்புக்களாலும் அறிக. இது முல்லேயென்னும் பொருளிலும் வரும்.

சு. ஏலவி குறிப்பானன்றிக் கூற்றுல் வழிபாடு மறுத்தற்கு, "மாமருண் டன்ன... ...நினக்கு" என்பது மேற்கோள்; தோல். களவி. சூ. உo. இளம்.

(பிரதிபேதம்) *அலேக்கும் ஒசைஞசைகேட்கும். † பாறையிடத்தக்கனவாயிய. ‡ குளிர்ச்சி, || செல்லேம், எ-து: அது.

நீயெவன் செய்தி பிறர்க்கு
யாமெவன் செய்தும் நினக்கு

எ - து: கூறி, பின்னும் *மான் மருண்டு நோக்கினாலொத்த குளிர்ச்சியை யுடைய கண்ணையுடைய சிறியாய்த்தியாரா நீமயக்கிக்கூறுஞ் சொல்லிடத்தே மயங்குவார்க்கு அம்மொழிகளைக் கூறு; யான் அதற்கு மருளேன்; நீதான் பல சூக்கங்களையும் தெவிட்டாமற் கூடும் ஏறுபோல நாடோறும் பதின்மரை ஒருவரைப்போலே விருப்பமுற்று அவர்மேற் செல்வாய்; ஒரு கட்குத்தியாகிய கள்வன்; ஆதலால் நீ பிறர்க்கு என்ன நன்மை செய்வாய்? இத்தன்மையை யுடைய நினக்கு யாம் என்ன நன்மை செய்வேமென்றாள். எ - று.

கட்குத்திர்கள்வன் என்றது, (க)†"விழித்திருக்கமிண்டையைக்கொள்வான்" என்னும் பழமொழி. ஐ அசை. நீ அம்மகளிரையும் அவர் கருத்து முற்ற நுகராதது அவர்வருத்தநீங்குவையென்பதுதோன்ற 'நீயெவன்செய்தி' என்றாள். 'யாமெவன் செய்தும்' என்றது எம்மிடத்து நீங்காத அன்புடையையல்லை என்பது தோன்ற நின்றது.

நிஉ கொலையுண்கட் கூசொறித்தும் கொப்புளிர் நேமனி
யிணைவனப்பின் மாயோய் நின்னிற் சிறந்தார்
நிலவுலகத் திம்மை தெளிநீ வருகி
மலையொடு மார்பமைந்த செல்வ னடியைத்
(உ)தலையினுற் றொட்டுநிற்றன் சூள்

எ - து: அதுகேட்டவன், கொலைத்தொழிலையுடைய கண்ணினையும் கூரிய எயிற்றினையும் கொய்யப்படுந் தளிர்போலும் நிறத்தினையும் கண்டார் ஒருத்தும் அழகினையுமுடைய மாயோளே! யான் விரும்புதற்கு உரியாராய் நின்னிற்காட்டிற் சிறந்தமகளிர் மண்ணுலகத்தில் இல்லாமையை நீதானே தெளிவாய்; இனி நீ நினைந்தவாறுகளின்றென்று யான் தெளிவித்தற்கு நீ அணுக வருவாய்; மார்பு மலையோடு ஒப்பமைந்த திருமாலடியைத் தலையினாலே வணங்கிக் கையினாற் றொட்டு சூளுற்றேனென்றான். எ - று.

நிஎ ‡ஆங்குணரார் நேர்பவதுபோய்ப்பாய் நீயாயிற்
(ங)றேங்கொள் பொருப்பன் சிறுகுடி யெம்மாபர்

க. 'விழித்திருக்கச் [சே](செய்தே) விழியைக் கொண்டுபோய் விடுவான்' என ஒருவன் நிறமை மிகுதியைச் சிறப்பித்தற்கு வழங்கும் வாக்கியம் இப்பழமொழியின்பொருட்டென்று தோற்றுகிறது.

உ. "'தலைதொட்டேன் தண்பரம் குன்று" பரி. சு: கடு.

ங. தலைவி மறுத்தெதிர்கோடலுக்கு "தேங்கொள்..... .....குறி" என்பது மேற்கோள்; தொல். களவி. சூ. உ0. இளம்.

பாடபேதம்) * மாமானமருண்டு. †மிழித்திருக்க. ‡ஆங்குணர்வார்கேர்வதை.

வேந்தூட் டரவத்து நின்பெண்டிர் காணுமற்
(க)காஞ்சித்தா துக்கன்ன (உ)தாதெரு மன்றத்துத்
தூங்குங் குரவையு ணின்பெண்டிர் கோணமை
(ங)யாம்பற் குழலாற் பயிர்பயி ரெம்படப்பைக்
காஞ்சிக்கீழ்ச் செய்தேங் குறி

எ - து: அதிகேட்டவன், அப்படியை மெய்யென்று உணரும் அறியா * மகளிர் கூட்டத்திற்கு உடன்படுவார்; அங்ஙனமன்று பொய்க்குவன் நீ; நின் விருத்தத்தை ஆராய்ந்து பார்க்கில் அதற்கு உடன்படுதலில் வேண்டுதலின் எம்முடைய புழைக்கடைபிற் காஞ்சிமரத்தின் கீழ குறியஞ்செய்தேம்; ஆண்டு வருங்கால் தேனைத் தின்கிடந்தே கொண்ட (ச) பொதியின்மலையை புடையவனுடைய நிறுகுயில்வாழும் எம்மூர் அவ்வேங்கன் இனிதிருந்து வாழ்வதற்கு அச்சிலம்பிற் றெய்வத்திற்கு மடைகொடுக்கும் ஆவாரத்தாலே வந்த நின்னுடைய பெண்டிர் நின்னைக் காணுமல், காஞ்சிப்பூவின் தாது உதிர்ந்தாற்போன்ற தாதாகியவருவையுடைய மன்றத்திடத்து ஆடும் குரவைக் கூத்திடத்து வந்த நின்னுடைய பெண்டிர் கோணாமல், செய்பவுங்(ங)குறியை

க: (அ) "புன்காஞ்சித் தாதுதன் புறம்புதையக் கிளியினைக்கண், டன்புகொண் மடப்பெடை யலமந்தாங் ககல்வதனை, பெண்புருகு குரலைழுஇ பிருஞ்சிறகர் குலைத்துருட்டி, தன்பெடையைக் குயிறழுவத் தலைவந்த நிளவேனில்" (சீவக. சுச அ.) என்பதனுல் காஞ்சித் தாது பச்சைநிறமுடையதென்பது அறியலாகும். (ஆ) "குயிற்கு ழாங்குடை காஞ்சியின் கோபனந் தாது, வெயிற்கு ழாமறைத் திருவிசம் பிருள் செய" என்பது காஞ்சிப்புராணம்.

உ. (அ) "தாதெரு மன்றத் தயிர்வர் தழூஉ" கலி. கo:உ: சுஉ. (ஆ) "தா தெரு மன்றம் ணுணுடன் கழிந்து" (இ) "தாதெருமன் றத்தாயிற் குரவையோ தகவுடைத்தே"(ஈ)"தாதெரு மன்றத்து மாதரியழுந்து" (சிலப். கசு: கoஉ, கஎ: 'மாயவன்றன்', ஏ: எச எனத் தாதெருத் தூறப்பட்டிருக்கும் இடங்களையும் அதற்கு இங்கே காஞ்சித்தாதை உவமை கூறியிருப்பதையும் நோக்க, தாதெருவென்றது சாணுகத்தை யென்று தோற்றுகிறது. இது யானை குதிரைகளின் இலத்தி முதலிய வற்றிற்கும் வரும்.

ங. ஆம்பற் குழலென்பது வெண்கலத்தால் ஆம்பற்பூவுபோல ஆகச் செய்து பண்ணிசசெறித்த குழலென்று வினைக்குவர் அடியார்க்குநல்லார்.

இத்தூற் பக்கம் ககஙு: க-ஆம் குறிப்புப் பார்க்க.

ஙி. "நின்னோ ரகம்புகுந் தாற்குறி காட்டு நெஞ்தகையே" நற்றை. கசஅ. (பிரதிபேதம்) * மகளிர்கூட்டத்திற்கு.

(க) ஆம்பலென்னும் பண்ணையுடைய குழலாலே குறிசெய்து வருவாயாக என்றன். எ - று.

இதனால், இருவர்க்கும் புணர்ச்சியுவகைபிறந்தது.

இதனுள், தலைவன் வினைவலபாங்கினளையவாறு காண்க. இது கைக்கிளை.

இது தாவும் சொற்சீரடியும் நெடுவெண்பாட்டும் சொற்சீரடியும் கொச்சகமும் தனிச்சொல்லும் சொற்சீரடியும் நெடுவெண்பாட்டும் தனிச்சொல்லும் ஒருதாழிசையும் ஐஞ்சீரடியானொன்றும் கொச்சகமும் தனிச்சொல்லும் நெடுவெண்பாட்டும் சொற்சீரடியும் நெடுவெண்பாட்டும் முச்சீரானொன்றும் நெடுவெண்பாட்டும் வெள்ளொச்சரிதகமும் பெற்று வந்த கொச்சகக்கலி. (அ)

(கoகூ.) காராரப் பெய்த கடிகொள் வியன்புலத்துப்
பேராது சென்று பெருந்தவப் புன்மாந்தி
நீரார் நிழல குடஞ்சுட் டினத்துள்ளும்
போராரா வேற்றிற் பொருநா னிளம்பாண்டி
நூ றேரூரச் செம்மாக் கதுமோன் மதைஇனள்
பேரூருஞ் சிற்றாருங் கௌவை யெடுப்பவள்போன்
மோரோடி வந்தா டகைகண்டை யாரோடுஞ்
சொல்லியா னன்றே வனப்பு;

கூ பண்ணித் தமர்த்தந் தொருபுறங் தைஇய
கண்ணி யெடுத்தல்லாக் கோடேந் தகலல்குல்
புண்ணில்லார் புண்ணை நோக்கு முழுமெய்யுங்
கண்ணுளோ வாய மகள்;

கஉ இவடான், திருத்தாச் சுமட்டின லேணைத்தோள் வீசி
வரிக்கூழ வட்டி தழீஇ யிரிக்குழை
யாடற் றகையள் கழுத்தினும் வாலிது
நூண்ணிதாத் தோன்று நுசுப்பு;

கள இடைதெரியா வேள ரிருவருந் தத்த
முடைவனப் பெல்லா மிவட்டித்தார் கொல்லோ
படையிடுவான் மற்கண்டீர் காமன் மடையடும்
பாலொடு கோட்டம் புகின்;

க. (அ) "இயலுர், நீக்குழ லாம்பலி னினிய விமிரும்" ஐங். உகடு. (ஆ) "அய னினம்பெயர்த் தாம்ப லடைதர" நீணமொழியம். உச.

உ இவடான், வருந்தநோய் செய்திறப்பி னல்லான் மருந்தல்லள்
யார்க்கு மணங்காதல் சான்றனென் றார்ப்பெண்டிர்
மாங்காய் நறுங்காடி கூட்டுவேம் யாங்கு
மெழுநின் னிளையொடு போகென்று தத்தங்
கொழுநரைப் போகாமற் காத்து முழுநாளும்
வாயி லடைப்ப வரும்.

இது வினைவலபாங்கிற் றலைவியையுத்தமிட வினைவலபாங்கிற் றலைவன் "காமஞ் சாலா விளமை யோள்வயி. னேமஞ்சாலா விடும்பை யெய்தி"(க) கூறியது.

இதன் பொருள்.

காராரப் பெய்த கடிகொள் விபன்புலத்துப்
பேராது சென்று பெரும்பதவப் புன்மாத்தி
நீரார் நிழல (உ)குடஞ்சுட் டினத்துள்ளும்
(ங)போராரா வேற்றின் பொருநா (ச)கினர்(டு)பாண்டி
(ஞ) றேரூரச் (ஈ)செம்மாக் கதுபோன் *மதைஇனள்
பேரூருஞ் சிற்றாருங் கொளவை பெடுப்பவுள்போன்
(எ) †மோரோடு வந்தா டுகைகண்டை யாரோடுஞ்
சொல்லியா ளன்றே வனப்பு

க. தொல். அகத். சூ. ஙo. இச்சூத்திரத்தின் இருரையிலும் இச்செய்யுள் இச்செய்திக்கே மேற்கோள்.

உ. கலி. ௧0௬: உ-ஆம் அடியையும் அதன் குறிப்பையும் பார்க்க.

ங. மத வென்னு மூரிச்சொல் மிருதிப்பொருளில் வருமென்பதற்கு "போராரா வேற்றின்..... .....மதைஇனள்" என்பது (தொல். உரிச். சூ. அo. நச்.) உரையிலும். "நாகிளம் பாண்டில்.....மதைஇனள்" என்பது (தொல். உரிச். சூ. ௧௪. "மிகுதியும்" தெய்.) உரையிலும் மேற்கோள்.

ச. "செல்லு மழவிடைபோற் செம்மாந்து" நள. சுயம். கடிக.

ஞ. (அ)பாண்டில், தேர்பூணு மெருதென்பர், பதிற்றுப்பத்தினுரைகாரர்; பதிற். ௧௪: ௧o. (ஆ) எருத்தைப் பாண்டி லென்பது தெலுங்குச் சொல்லென்பர்; இ - வி. சூ. ௬௪. நன். பெயரி. சூ. ௧௯. இரா;

ஈ. செம்மாத்தல். பழ. ஈ௧டி, ஈ௧ஈ.

எ 'கண்டை' என்பது அசைநிலையாய் வந்ததற்கு, "மோரோடு.....வனப்பு" என்பது மேற்கோள்; தொல். எச்ச. சூ. ஈo. 'கேட்டையென்ற' தெய்.

(பிரதிபேதம்) * மதைஇயினள், † மோருடன் வந்தா.

எ-து: மழைநிறையப்பெய்த விளக்கங்கொண்டஅகற்சியையுடையநிலத்தே *சென் றுநின் றுஅவ்விடத்தேநின்ற(க)பெரியஅறகாயியபுல்லே நிறையத்தின்று நீர் நிறைந்த நீழலிடத்தனவாய (உ)இன்னதனைக் குடம்பால் போதுமென்று கருதப்படும் பசுத்திரளில் †வைத்துக்கொண்டும் எனையவற்றிற்கு (கூ) ஒப்புச் சொல்லப்படும் நாகு (ஈ) போர்த்தொழில்அமையாத எற்றினுக்கின்ற இனிய எருது(ங்)கொல்லர்வண்டியைஊராதிர்க்க இளமையால்இறுமாக்குமாறுபோலத் தலையில் மோர்ப்பானையுடனே அழகாலும் இளமையாலும் மிகுதியையுடைய ளாய்ப் பெரிய ஊர்களையுஞ் சிறிய ஊர்களையும் ஆவாரத்தைச் உண்டாக்கு வாள்போலே மோரோடே வந்தவளுடனை கெஞ்சே காண்பாயாக; இவள்தான் மிக்க வனப்புடைய மகளிரெல்லாரொடும் கன் அழகு ஒவ்வாமை சொல்லப் பட்டவள். எ - று.

இது சினைவினை முதலொடு முடிந்தது.

கூ (கு)‡பண்ணித் தாரைக் கொருபுறந் தைஇய
கண்ணி ||பெடுத்தலாக் தோடுந் தகலல்குற்

க. பெரிய அறகு - யாவை யறகு.

உ. இன்னதனைக் குடம் பால் போதும் - இத்தனை குடம் பால் கறக்கும்.

கூ. "பொருகு" என்பதற்கு. உவமிக்கப்படுவா யென்று பொருள் கூறி, 'பொருவப் படுமவன் பொருகு னென னின்றது' என்றும் (முருகு. உரை.) ஒப்பற்றவனேயென்று பொருள் கூறி, 'பொருகுனென்றது தான் பிரர்க்கு உவமிக்கப்படுவானென்னும் பொருட்டு' என்றும் (மது. சுஉ.) இவரால் எழுதப்பெற்றிருக்கும் விசேடவுரை வாக்கியங் களும் இங்கே அறிதற் பாலன.

ச. "கொய்புற் கொடித்துக் குறைத்தென்றுக் கிற்றினும், வையம்பூண் கல்லா சிறுகுண்டை" நாலடி. கூடுஎ.

ஞ. 'கள்ளிக் கோட்டை முதலிய இடங்களில் மாடுகட்டிய கூட்டு வண்டி கொல்லர் வண்டி யென வழங்கப்படுகின்ற தென்பர்' என்பது சீவக. கூ-ஆம் பதிப்பு அரும்பத. பக். கஉஞ. இது கொல்லா வண்டியெனவும் கொல்லாப்பண்டியெனவும் சிலப். உரையிற் காணப்படுகின்றது.

ரு. "சிறந்தழியையஞ்சிறந்ததென்ப" என்னும் (தொல்.களவி. கூ.) சூத்திரத்தின் வீசேடவுரையில் 'உலகத்துத் தலைமகனும் தலைமகளுமாகி நம்மால்வேண்டப்பட்டார் அந்தணர்முதலாகிய நான்குவருணத்தினுமு ஆயர் வேட்டுவர் குறவர் பரதவ ரென்னும் தொடக்கத்தினும் அ குலத்தாராகிய சூது நில மன்னர் மாட்டும் உளராவ ரன்றே.

(பிழைதிருத்தம்) * கன்று நின்றவிடத்தே நின்றுபெரிய, † வைத்துக்கொண்டே வினை ‡ மண்ணித் தமதைத்தொகு. || எடுக்கல்லா.

புண்ணில்லார் புண்ணுக நோக்கு (க)முழுமெய்யுங்
கண்ணளோ *வாய மகள்

எ - து: சுற்றத்தார் கட்டிக்கொண்டு †வந்து, மயிர்முடியில் ஒருபுறத்தே' செருகிவைத்த கண்ணியைச்சுமத்தமாட்டாத பக்கம் எந்தின அகன்றவல்குலே புடைய இவ்வாயர் மகள், மனத்திற் (உ)காமவேட்கையில்லாத ‡இருடிகளும் புண்பட்டு நெஞ்சு வருந்தும்படி பார்க்கும்; அதுவேயன்றி மெய்முழுதுங் கண்ணியுடையவளோ? எ - று.

‖என்பது,(கூ)கண்கள்செய்கின்றவருத்தம்போல மெய்முழுதும்வருத்தலின், மெய்முழுதுங் கண்ணளோ என்றதாயிற்று.

கஉ. (ச)இவடான் ÷ திருத்தார் சுமட்டின னேனைத்தோள் வீசி
வரிக்× கூழ வட்டி தழீஇ யிரிக்குழை
யாடற் றகையள் கழுத்தினும்+வாலிது
நுண்ணிதாய்த் தோன்று நுசுப்பு

எ - து: இவள் தான் பல நிறத்தையுடைய செல்லியுடையவளாகிய (டு)வட்டியை ஒருகையால் அணைத்து மற்றைத்தோளை இளமைச் செருக்குக்

செல்லாரினும் செல்வத்தாரும் குலத்தாரும் வடிவாணு முயர்ந்த தலை மகனுந் தலைமகளு மாயினர் மாட்டே ஐயம் நிகழ்வது. அல்லாதார் மாட்டு அவ்வழி மரபினையே சுட்டியுரை நிற்கும்" என்று எழுதி "பண்ணித் .... மகள்" என்னும் பகுதியை ஐயமின்றிச் சுட்டியுணர்த்தமைக்கு மேற்கோள்காட்டினர் இளம்.

க. "முழுமெயும்" கீவக. கூசo. உகடுக; 'முழுமெயும் - மெய்முழுது மென மாறுக' என்பர் அடியார்க்கு நல்லார்; சிலப். சo: கூ.

உ. (அ)"காமமொடு, கடுஞ்சினங் கடிந்த காட்சியர் .. ..மூனிவர்" முருக. கசூ - கஉ. (ஆ) "பெண்டிரு முண்டியு மின்பமென் றுலகில், கொண்டா ருறுஉங் கொள்ளாத் தன்பம், கண்டன ராகிக் கடவுளர் வரைத்த, காமம்" சிலப். கச: கூக - சஉ.

ஙு. (அ) "கண்ணுற் கலேஇய நோய்செய்யு நடாஅக் கரும்பமன்ற தோளாரை" கலி. ககஉ: டு-சு. (ஆ) "இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு, நோய்நோக்கு" குறள். கoக.

ச. ஐஞ்சேர்க்கி வந்ததற்கு "இவடான், றிருந்தார்.....நுசுப்பு" என்னும்" பகுதி மேற்கோள்; தொல். செய். சூ. கஞிச. நச்.

ஞ. வட்டி - கடகப்பெட்டி, இஃது உட்புறம் பனங்குருத்தாலும் வெளிப் புறம் பனையகணியாலும் தெற்றி மிடையப்படுவது.

(பிரதிபேதம்) * ஆயர்மகன், †வந்த.....சொருகிவைத்த, ‡இருடிகளுக்குமுட்படநெஞ்சு ‖என்றது. +நிருத்தார், × கூழையட்டி, +வாலிது நுண்ணிதாத்தோன்று.

தோன்ற வீசித் தன் அழகிற்குத் திருத்தியாத (க) சுமையினையுடையனாய் மெய்க்கட் பூண்டனவன்றிக் கழுத்திடத்திலும் அழகையுடைய மகரக்குழை யாதேனுண்டான அழகையுடையவள்; அதுவேயன்றி அல்குலுந் தோளுஞ் சுமந்து இளைத்த நுசுபுக் கண்ணெயெடுக்கலா மென்மைக்கேற்ப நுண்ணிதாய் *நன்றாய்த் தோன்றுதிற்கும். எ - று.

களை இடைதெரியா வேளை நிருவருந் தந்த
†முடைவனப் பெல்லா மிவட்கித்தார் கொல்லோ
‡படையிடுவான் மற்கண்டார் காமன் (உ) முடையடும்
பரலொடு கோட்டம் புகின

எ-து: தம்மில்வ்வது ||பெயர்வினங்கி அழகையுடையராகிய(கூ)உருப்பசியும் திலோத்தமையும் தம்முடைய தம்முடைய அழகையெல்லாம் இவட்குக் கொடுத்தார் கொல்லோ? அது தெரிந்ததில்லே; +இவள் தெய்வத்திற்குப் பலியாகச்சமைக்கும் பாலோடே காமன் †காயிலிலேசெல்லில்(ச) அக்காமனும் நெஞ்சழிந்து தன்கையிற் படையை மிகவும் x போகடுவன். எ - று.

க. "தக்கை யிலேசுமடன்" என்புழி, சுமடென்பது சுமையென்னும் பொருட்டுப்போலும்; "குழிசி பூருசுமட்டிரி" என்புழி இது சும்மா டென்னும் பொருளில் வருகிறது.

உ. "பான்மடை கொடுத்துப் பண்பிற் பெயர்வோ, ளாயர் முதுமகள்" (சீலப். கடு: கஎ - ககஅ.) என்பதனுலும் அய்ச்சியர் தெய்வத் தருள்பெறப் பலியாக அட்டபாலளித்தல் அறிய லாகும்.

கூ. உருப்பசியும் திலோத்தமையும் அழகிய மகளிர்க்கு உவமை கூறும்படி மிகச் சிறந்த அழகுடையராய் விளங்கும் தேவதாசியர்; இவர்களுள் உருப்பசியாவாள் திருமாலின்கூறிய நாராயணமுனிவர் வதரிகாச்ரமத்துத் தவஞ் செய்வதை அழித்தற் பொருட்டுத் தேவேந்திரனல் விடுக்கப்பட்ட தேவதாசியர்கள் வெட்கியோடும்படி அம்முனிவரால் தமது தொடையில் உண்டாக்கப்பெற்றவனென்றும் ஊரு (தொடை) வில் தோன்றினமையால் அவளுக்கு ஊர்வசி யென்ற பெயர்வந்த தென்றும் சொல்லுவர். அப்பெயர் உருப்பசி யெனத்திரிந்து நின்றது. திலோத்தமையாவாள் ப்ரமதேவரால்அழகுடையபொருளொவ்வொன் றினுமுள்ள சிறந்த அழகை எள்ளளவு எள்ளளவாக எடுத்துச்சேர்த்துப் படைக்கப் பெற்றவளென்ப. இப்பெயரே இப்பொருளை அறிவிக்கும்

ச. "நீலை வல்லான் போலுஞ் செறிவினுன்" கலி. (கசஉ: கூ.) என்பது சிறப்பிக்கப் படுதல் கருதி, காமனும் என உம்மை கொடுத்தார்.

(பாடபேதம்) * நன்றாயதொன்றிற்கும், † உடையவனப்பெல்லாமிவட்கீயித்தார், ‡ படை விடுவோன், || போர்வினல்கி, + அவன். x போடுவன்.

காமன் மாயோன்மகனதலின் அவனும் அந்நிலத்திற்குத் தெய்வமாதல் "அவ்வகைபிறவும்" (க) என்றவழி வகை என்றதனாற் கொள்ளப்பட்டது. தெரியாஎன்பது *செய்தெனெச்சம். இருவர், திருமகளும் † பூமகளுமெனினு மாம். (உ)கண்டீர் வினுவொடு சிவணிநின்ற அசை.

உக (ங)இவ்டான்
இவடான் ‡என்று நெஞ்சொடு வினையினன்.
வருந்தினோய் செய்திறப்பி னல்லான் மருந்தல்லள்
யார்க்கு மணங்காதல் சான்றுமொன் றூர்ப்பெண்டிர்
மாங்காய் ||நறுங்காடி கூட்டுவேம் யாங்கு
மெழுநின் (ச) ÷ இனைபொடு போகென்று தத்தங்
கொழுநரைப் போகாமற் காத்து முழுநாளும்
வாயி லடைப்ப வரும்

எ - து: அதுவேயுமன்றித் தன்னை மோகித்தினுமில்லாள்க்கும் வருத்த மாதல் அமைந்தவினை அறிந்து கருதிஇவ்வூர்களிற் பெண்டிரெல்லாரும் மோருக்கு மாறுக மாங்காயை நறிய ×ஊறுகாயாகக் கூட்டியுணுகாக்கடவோம்; நீ எவ்விடத்தும் + போய் மோர்முதலியன விற்றுத்திரியும் நின் சுற்றத்தாருடனே போவாயாக என்று கூறித் தம்முடைய கணவரைப் புறத்துப் போகாமற் காத்துக்கொண்டு இவள்வருங்காலமேயன்றி ஒருநாள்முழுதும் வாயிலை இடை

க. தோல். அகத். சூ. கஅ. இவ்வரைகாரர் தோல். அகத். இ - ஆம் சூத்திரவுரையில் "படையிதுவான்.....புகின்" என்னும் பகுதியை மேற்கோள் காட்டி இக்குறிப்பையும் எழுதியுள்ளார்.

உ. "படையிதுவான்..... புகின்" என்னும் பகுதி கண்டீரென்பது அசைநிலையாய்வருதற்கு மேற்; தோல். எச்ச. சூ. உக. 'கண்டீர்' தெய்.

ங. ஐஞ்சீறடுக்கிய சுரித்தகத்தான்வந்ததற்கு "இவடான், வருந்தினோய்..... ..... வரும்" என்னும் பகுதி மேற்கோள். தோல்.செய்.சூ. கடுச. நச்.

ச. "இனையொடும் காத்தன் கொழுநன் மார்பே" குறுந். அ0. என்னுந் தொடர் இக்கே நோக்கற்பாலது.

இ. காடியென்பது ஊறுகாயென்னும் பொருளில் வருதலே, "காடி வைத்த கலனுடை மூக்கின்" என்புழி, 'புளியங்காய் நெல்லிக்காய் முதலியன ஊறவிட்டு வைத்தனைக் காடியென்றார்' என்று இவர் எழுதியிருக்கும் விளக்கத்தால் அறிக.

(பிரதிபேதம்) * செய்தெனெச்சம், † பூமகளுமாம் கண்டீர், ‡ என்றது நெஞ்சொடு, || நறுங்கடி 'கூட்டு,' ÷ இனையெமும் போவென்று, × ஊறுகறியாகக், + போயம்மோர்.

யிட்டுக்கொண்டு நிற்கும்படியாக வாராநிற்கும் ; இவள் தான் மனம்வருந்தும்படி நோயைச்செய்து போவதன்றி அந் நோய்தீர்க்கும் *மருந்தல்லளெனச் சொல்லெதிர் பெறுஅன் சொல்லி யின்புற்றான். எ - று.

சுற்றத்தொடு போவென்றார், அவரோடு இவள் போக்காலத்து, தங் கணவற்குப்பின் †சேறல் இயையா[ன]தென்பது பற்றி.

இதனால், இவனுக்கு அசைவு பிறந்தது.

இது காமஞ்சாலாவிளமையோளென்னும்(க)சூத்திரத்து வினைவலபாங்கி னேரும் இங்ஙனங் கூறலா மென்றமைத்தாம்.

மருந்தல்லளென்றது, காமஞ்சாலா விளமையோளென்றது.

மோர்வீற்கின்றமை கூற வினைவலபாங்கினளாயிற்று.

இஃது இவடானென ஐஞ்சீர் அடுக்கிய சுரிதகத்தான் இற்ற கலிவெண் பாட்டு. (க)

(கக0.) கடிகொ ளிருங்காப்பிற் புல்லினத் தாயர்
குடிதொறு நல்லாரை வேண்டிநி யெல்லா
விடுதேண் மருந்தோநின் வேட்கை தொடுதரத்
தன்னித்தந் தாங்தே நகைசுறித் தெம்மைத்
தினைத்தற் கெளியமாக் கண்டை யளைக்கெளியாள்
வெண்ணெய்க்கு மன்ன ளெனக்கொண்டா யொண்ணுதா
லாங்குநீ கூறி னினைத்தாக நீங்குக;

அ அச்சுதான் மாறி யசைவினுற் போத்தந்து
நிச்சந் தடுமாறு மெல்லிய லாய்மகண்
மத்தம் பிணித்த கயிறுபோ னின்னலஞ்
சுற்றிச் சுழலுமென் னெஞ்சு;

கஉ விடிந்த பொழுதினு மில்வயிற் போகாது
கொடுந்தொழுவி னுட்பட்ட கன்றிற்குச் சூழுங்
கடுஞ்சூலா நாகுபோ னிற்கண்டு நாளு
நடுங்கஞ் நுற்றதென் னெஞ்சு;

கசு எவ்வ மிகுதர வெந்திறத் தெஞ்ஞான்று
நெய்கடை பாலிற் பயன்யாது மின்றுகிக்

க. தொல். அகத். சூ. ஙo.

(பிரதிபேதம்) * மருத்தல்லன். எ - று. மருந்தல்லளென்றது காமஞ்.....வென்றது மோரை விற்கின்றமைகூற.....ளாயிற்று. இது இவடானென வஞ்சீரடுக்கி ...பாட்டு. †சேறலியையாமையான் என்பது.

கைதோயன் மாத்திரை யல்லது செய்தி
யறியா தளித்தென் னுயிர் ;

உo அண்ணியோ, மன்றத்துக் கண்டாங்கே சான்றார் மகளிரை
யின்றி யமையேனென் றின்னவுஞ் சொல்லுவாய்
நின்றாய்நீ சென்றீ யெமர்காண்பர் நாளையுங்
கன்றொடு சேறும் புலத்து.

இது வினைவலபாங்கினுல் *வெண்ணெய் (க) நோடைக்குச் சென்ற தலைவியைக்கண்டு வினைவலபாங்கிற்றலைவன் மெய்தீண்டித் தனது ஆற்றமையை அறிவித்துழி, அவள் ஈண்டுப் பிறரறிவர், நாளைக்கன்றொடு †சேறுமென இடங்கூறியது.

இதன் பொருள்.

கடிகொ ளிருங்(உ)காப்பிற்(ரு)புல்லினத் தாயர்
குடிதொ றுறல்லாரை வேண்டுதி யெல்லா
விடுதேண் மருந்தோதின் †வேட்டை தொடுதரத்
தின்னித்தந் தாங்கே நகைகுறித் தெப்மைந்
திளைத்தற் கெளியமாக் கண்டை யளைக்கெளியாள்
‖வெண்ணெய்க்கு மன்ன ளெனக்கொண்டா ÷யொண்ணுதா
லாங்குநீ கூறி னணிந்தாக நீங்குக

எ - து: எடா ! வளைகொண்ட பெரிய குறும்பிடத்தே இருக்கின்ற ஆட்டிடையருடைய குடிதோறுமுள்ள மகளிரை விரும்பாதின்றாய் ; =நினது காம வேட்கை ஏறிய தேளுக்குக் கடிப்பற + அப்பொழுதே இட்டுத் தீர்க்கும் மருந்துபோல வேட்கைதோன்றியபொழுதே கூடத்தீர்க்க வேண்டுவதொன்றே ? அல்லவே ! நின்னெஞ்சு தூர்தைசெய்தலைக் குறித்து நீ என் மெய்யைத் தீண்டுதற்கு யாம் நின்னை அணிந்து மெய்யைத் தந்த +அப்பொழுதே, எம்மைப் புணர்ச்சிக்கும் ×எளியமாக நீ மனத்தாலேகண்டாய் ; அங்ஙனங் கண்டது, மோரை வேண்டினுர்க்குச் சிறிது மோரைவார்த்து எளியளானவ ளொருத்தி வெண்ணெயை வேண்டினுர்க்கு**வெண்ணெயைஇட்டு எளியளா

க. கொடைக்கு - விற்பதற்கு. இது கொடுவென்னும் பகுதியடியாகப் பிறந்த தொழிற் பெயர்.

உ. தரப்பினென்றும் படிக்கலாம்.

ரு. \"புல்லினத்தாயர்" (கலி. கoரு: சுள.) என்பது மதன்குறிப்பும்பார்க்க.

பாடவேறுபாடு) * வெண்ணெ, † சென்றுமென, ‡ வாழ்க்கைதொடிதர, ‖ வெண்ணெக்கும் ÷ஒன்னுதலாய்கு, = நின்காமவாட்கை, +இப்பொழுதே, × எளியேமாதனீ. ** வெண்ணெயை.

யிருப்பள் என்று நெஞ்சாலே * கருதினற்போலே இருந்ததென்றுள் ; அது கேட்ட தலைவன் ஒள்ளிய நுதலினையுடையாய் ! அங்ஙனம் நீ கூட்டத்தை மறுத்துக் கூறலையாயின், அக்கூட்டம் இல்லையாவதாக இனி நின்னை விட்டு நீங்குக என்றான். எ - று.

அ அச்சத்தான் மாறி யசைவினற் போத்தந்து
நிச்சந் தடுமாறு மெல்லிய லாய்மகண்
(க)மத்தம் பிணித்த கயிறுபோ னின்னலஞ்
சுற்றிச் சுழலுமென் னெஞ்சு

எ - து: மெல்லிய இயல்பினையுடைய ஆயச்சாதியிற் பிறந்த மகள்! மத்தைச் † சுற்றிய கயிறுபோல ‡ நின்னுடைய நலத்தைச் சூழ்ந்துகொண்டு சுழன்றுநிற்கின்ற என்னுடைய நெஞ்சு நீ கூறிய கூற்றினல் தனக்கு உண்டாகிய அச்சத்தினலே நின்னிடத்தினின்று மீண்டு தான் நிலைபெறமாட்டாது பின்னரும் அசைகின்ற அசைவாலே என்னிடத்தினின்றும் புறப்பட்டு நாடோறும் மீளத் தடுமாறுதிற்கும் என்றான். எ - று.

கஉ விடிந்த பொழுதுநினை யில்வயிற் போகாது
(உ)தொடுத்தொழி னிட்பட்ட கன்றிற்குச் சூழுங்
(ங)கடுஞ்சூலா நாடோ னிற்கண்டு நாருரு
॥ நடுங்கஞ ருற்றதென் னெஞ்சு

க. (அ) "மத்தம் புல்லிய கயிற்றின் மற்றவ, ரத்த லேவிடி னித்த லேவி டார்" கீவக. சஉஉ. (ஆ) "போயொருகான் மீளும் புகுந்தொருகான் மீணடேகு. மாயர் கொணர்ந்த வடபாலின்—றேயல், கடைவார்தங் கைபோலு மாயிற்றே காலன், வடிவாய வேலான் மனம்" நள. கலி தொடர். ௧0ங.

உ. "நோக்கினின் முள்ளெறிப் பட்டதன், காவற்கன் றிற்புனிற் முவன கார்மயிற் சாயலே" கீவக. ககஙங. (ஆ) "கன்று தடையுண் டெதி ழைக்கக் கதறிக் கனைக்குந் புனிற்றுப்போலு" பெரிய.கழறிற். சஙஙி. (இ) 'கன்று பிடியறத் தீரருறு தாயைப்போல" கம்ப. பிணிவீட்டு. ஙசு. (ஈ) "கன்றெழி பனிற்று வென்னக் கதினர்" கந்த. பாலு. உ0டு. (உ) "அண்ணற்காவீன்ற,கன்றெஞ் சவினக்கினைத்து மறகாகின்ற கபிலையைப்போலென் பட்டான்" வில்லி. பதினேழாம்போர். உடுஎ. என்பவையும் (ஊ) இந்நூற்பக்கம் சமதி: உ-வது குறிப்பில் இவ்விடத்திற்குப் பொருந்துவனவும் ஈண்டு அறிதற்பாலன.

ங. கடுஞ்சூல் என்பது (அ) "கடுஞ்சூன் மந்தி" பெரும். ஙகஙி. (ஆ) "பிடிக்குற்ற, கடுஞ்சூல் வயாவிற்கு" கலி. சஅ: உசு-உச். (இ) "கடுஞ்

(பிரதிபேதம்) * கருதிரூப்போலே, †சுழற்றிய. ‡ நின்னலஞ்சூழ்ந்த, ॥ நடுங்கஞரிட்டதென்.

எ - து: என்று, பின்னும் முதற்சூல்கொண்ட பசு, இல்லிடத்தினின்றுந் *தூரிய இடத்தில் இடப்படாத வூனந்த தொழுவினுள்ளே கட்டிவைத்த தன் கன்றிற்குப் பொழுது விடிந்த காலத்திலும் மேயப்போகாது சூழ்ந்துநிரியும்; அந்நாகு போலே நின்னைக் கண்டு என்னெஞ்சு நாடோறும் (க) நடுங்குகின்ற வருத்தத்தை உற்றதுகாணென்றான். எ - று.

(உ)நாகு, ஈண்டு இளமை.

ககூ எவ்வ மிகுதர வெந்திறத் தெஞ்ஞான்று
(ஙூ)நெய்கடை பாலிற் பயன்யாது மின்றுகித்
கைதோயன் மாத்திரை யல்லது செய்தி
யறியா தளித்தென் னுயிர்

எ - து: †என்று பின்னரும் எவ்வளித்து‡எந்நாளும் வருத்தம் மிகுகையி னலே அளித்தக்க என்னுடைய வுயிர் மருந்தையிட்டு நெய்யைக் கடைந்து வாங்கின பாலிடத்து துகர்வார்க்குச் சிறிதும் ||பயன்படுதலில்லையாய் அவர் கைசென்று தோய்ந்து விடுகின்ற அளவாய்விட்டது; அதுவும் ஒழிய மேல் தான் செய்வதோர் செயலையும் அறியாதென்றான். எ - று.

என்றதனால், நீ என் வுயிரிடத்துள்ள நன்மையை ஒருவழியாலே வாங்கிக் கொண்டு விட்டாயென்றும் அது பின்னர் நீ பயன் கொள்ளுங்காலத்து நினக்கு ஓர் இன்பந் + தருதல் ஆற்றுதென்றும் கூறினளாயிற்று.

சூன் மடப்பிடி" அகம். எஅ: சு. என விலங்குகட்கும், (ஈ) "கடுஞ் சூன் மகளிர்" மது. சுoக; (உ) "கடுஞ்சூற் சிறுவன்" (ஊ) "கடுஞ் சூன் மகளே" ஐங். சுoக, சுஅசு; (எ) "கடுஞ்சூன் மகளிர்" மணி. எ: அஉ. என மக்கட்கும் கூறப்படுதலுமன்றி. (ஏ) "கடுஞ்சூல் முண் டகம் கதிர்மணி கழாஅலவும்" சிறுபா. கசஅ. எனவாறிவுயிர்க்குங் கூறப்படுகிறது.

க. "நடுங்கஞர் - நடுங்குதற்கு எதுவாய அஞர்" கலி. நுசு: கஅ; குறள். கoஅசு. உரைபார்க்க.

உ. நாகு, ஈண்டு இளமை யென்றது: நாகென்பதனை, (தொல். மர. சூ. சு.) பெண்பாற் பெயராகக் கொள்ளாது (தொல். மர. சூ. உசு.) இளமைப் பெயராகக்கொண்டு இளமையையுடைய கன்றென்னு பொருள்கொள்ளவேண்டுமென்று கருதிப்போலும்; இஃது இப்பொரு ளில் வருவது, "கல்லாவின் கன்றுயி ஞரும் வில்லெறூஉம்" (நாலடி. சகஙி.) என்பதனாலும் அறியலாகும்.

ங. பாலைக் காய்ச்சாமலே இயந்திரத்தினுதவியால் அதிலுள்ள வெண்ணெ யையெடுத்துவிட்டு, சென்னை முதலிய இடங்களில் விற்கும் பால் உண்பவர்க்குப் பயன்படாமை இங்கே அறிதற்பாலது.

(பிரதிபேதம்) * தூரிய இடப்படாத. † பின்னரும், ‡ எந்நாளும். ||பயன்படுதலில்லையாய வாசைசென்று, + தருமாதலாற்றுதென்றும்.

உ0 (க)அன்னையோ, மன்றத்துக் *கண்டாங்கே சான்றார் மகளிரை
†றின்றி யமையேனென் றின்னவுஞ் சொல்லுவாய்
நின்றாய்நீ சென்றீ யெமர் காண்பர் ‡நாளையுங்
கன்றொடு சேறும் புலத்து

ஏ - து: அதுகேட்டவள், நீ அத்தன்மையையுடையையோ என அருள் செய்து, பலருங் கிரிகின்ற மன்றத்திலே எதிர்ப்பட்ட அப்பொழுதேகின்னைப் போலன்றி அமைதியை யுடையோர் மகளிரை இவ்விடத்துப் புணர்ச்சி யின்றாயின் உயிர்வாழேனென்று நின்றாய்; இவ்விடத்து நின்றால் எம் மூடையசுற்றத்தார் காண்பர்; இனிஇன்றேயன்றி நாளையும் புலத்திலே கன்று மேய்த்தற்குப் போவேம்; அண்டி வந்து இத்தன்மையன ‖ உற்றவை மேற் சொல்லுவாய்; நீதான்இனி ஈண்டு நில்லாமற்போவென இடங்கூறினள்.எ-து.

இதனால், இருவர்க்கும் புணர்ச்சிவேட்கை பிறந்தது.

இது நெடுவெண்பாட்டும் ×பின்னர் மூன்றுவெண்பாட்டும் தனிச்சொல் லும் சுரிதகமும் பெற்ற அகப்புறக் கலிவெண்பாட்டு. (கo)

(ககக.) (உ) நீம்பால் கறந்த கலமாற்றிற் (ங)கன்றெல்லாந்
தாம்பிற் பிணித்து மனைநிறீஇ யாய்தந்த

க. பழிதீர் மூறுவல் சிறிதே தோற்றலென்பதற்கு, (அ) "அன்னையோ... .....புலத்து" என்னும் பகுதியை மேற்கோள் காட்டி, இதனுள் 'அன்னையோ' என்பது நகையொடு கூடிய சொல் என்பர் இளம் பூரணர்; தொல். களவி. சூ. உo. (ஆ) வறிது நகை தோற்றற்கு "அன்னையோ.....சொல்லுவாய்" என்னும் பகுதியை மேற்கோள் காட்டுவர் நாற்கவிராசநம்பியும்; நாற்கவி. சூ. கஉஎ.

உ. (அ) "ஆயர் வேட்டுவர்" என்னும் (தொல். அகத். உக.) சூத்திர வரையில், 'ஆயர் வேட்டுவரென்னும் இரண்டு பெயரே எடுத்து ஓதினு மேனும் ஒன்றெனமுடித்தலான் அந்நிலங்கட்குரிய எனைப்பெயர்க ளான் வருவனவும் கொள்க' என்றுகூறி, அதற்கு இச்செய்யுளை மேற் கோள் காட்டினர் நச்சினார்க்கினியர்; (ஆ) இதனைத் தலைமகள் உள்ளப் புணர்ச்சியின் உரிமைபூண்டிருந்தவாற்றிற்கும் வரைந்தெய்தக் கூறலுற்ற வாற்றிற்கும் (தொல். களவி. சூ. அ.) (இ) * பிறதலையான் (* இயற்றலையான் என்றும் பிரதிபேதம்) வந்த கலிவெண்பாட்டுக்கும் (தொல். செய். சூ. கசசு. 'ஒருபொருள்') மேற்கோள் காட்டினர் இளம்பூரணர். (ஈ) இந்நூற்பக்கம் எகள: க-ஆம் குறிப்புமபார்க்க.

ங. (அ) "நிறுதாம்பு தொடுத்த பசலைக்கன்றின்" முல்லைப்பாட்டு, கஉ. (ஆ) "கன்று தாம்பரிந்து" சீவக. சஉஉ.

(பிரதிபேதம்) * கண்டாங்குச் சான்றார், † அன்றியமையலனென். ‡ காணியெங் கன்றொடு. ‖ உற்றமேற். ×பின்னிரண்டுவெண்பாட்டும், பின்னிரண்டுவெண்பாட்டும்.

(க)பூங்கரை நீலம் *புடைதாழ மெய்யசைஇப்(உ)பாங்கரு
மூல்லையுக் †தாய (ங)பாட்டங்காற் றேழிரும்
(சி (ச)புல்லினத் தாயர் மகளிரோ டெல்லா
மொருங்கு வீளையாட வவ்வழி வந்த
(ஞ)குருந்தம்பூங் கண்ணிப் பொதுவன்மற் றென்னை
‡மூற்றிழை யேளர் மடநல்லாய் நீயாடுந்
சிற்றில் புணைகோ சிறிதென்ரு னெல்லாநீ
கo பெற்றேம்யா மென்று பிறர்செய்த வில்லிருப்பாய்
கற்ற திலைமன்ற காணென்றேன் ||மூற்றிழாய்
(ஈ)தாதுசூழ் ÷கூந்தற் றகைபெறத் தைஇய
கோதை புணைகோ நினக்கென்ரு னெல்லாநீ
|யேதிலார் தந்தபூக் ×கொள்வாய் நுனிமிதப்
கரி பேதையை மன்ற பெரிதென்றேன் +மாதரா
யைய (எ)பிதிர்ந்த (அ)சுணங்கணி மென்முலைமேற்
ரெய்யி லெழுதுதோ மற்றென்ரு னியாம்பிறர்

க. "பூங்கரை நீலக் தழீஇ" கலி. ககடி. கசு.

உ. 'பாங்கரும்' என்பதை நான்காமடியின முகற்சோகக்கொண்டு அதனை ஐஞ்சீரடியாக்கலுமாம்.

ங. "பாங்கரும் பாட்டங்காற் கன்ரெடு செல்வேம்" கலி, ககசு: க.

ச. இந்நூற்பக்கம் சுஅள: க-ஆக குறிப்புப்பாாக்க.

ஞ. (அ) "குருந்தவ கண்ணிக் கோவலர்" ஐங். சாகூ. (ஆ) "குருந்தலே வான்படலே சூடிச 'சுரும்பார்ப்ப, வாயன் புகுதரும் போழ்தினுன்" ஐந் - எழு. உஅ. (இ) "குருந்தமென் கண்ணி சூடிய கோவலர் கொழுந்து" பாகவதம். (கo) வேய்ஙகுழலிசைத்த. ககூ.

ட. "தாதுசூழ் கூந்தல்" என்பதனெடு, (அ) "கொய்பூந், தாதுகொண லுளகத் தப்பி" சீவக. உகூசஅ; (ஆ) "போதுகொண் டணியிற் பொறுக்க லாற்றுத், தாதுகொண டிருந்த தாழிருங கூந்தல்" பெருங். (சி) சாங: கசo - கசக. என்பவை ஒப்புநோக்கற்பாலன.

எ. (அ) "சுணங்கு பிதிர்ந்து... ...வெம்முலே" சிறுபாலீ. உச - உசு. (ஆ) "பிதிரு முலேமேற் சுணங்கு" தீணமோழி. உஅ. (இ) "பிதிர் ணங்கணி வெம்முலே" நைடத. வேற்றுரு. கூ.

அ. "சுணங்கணி வனமுலே" நற் கூ: சு; கலி. கo: க.

(பிரதிபேதம்) * புடைத்தாழ, †தாயப்பாட்டங்கால், ‡ மூற்றிழையோணமட, மூற்றிழை யேர்மட ||மூற்றிய. ÷கூந்தறகை. × கொள்வானனி, + ஆயிமாய்.

*செய்புற நோக்கி யிருத்துமோ நீபெரிது
மையலை மாதோ †விடுகென்றேன் றையலாய்
உ0 சொல்லிய வாறெல்லா மாறுமா றியான்பெயர்ப்ப
வல்லாந்தான் போலப் பெயர்ந்தா னவணீ
யாயர் மகளி (க)ரியல்புரைத் (உ)தெந்தையும்
(ங)யாயு மறிய வுரைத்தீயின் யானுற்ற
நோயுங் கீளுகுவை மன்.

இது தலைவி ஆயத்திடைத் தலைவனைக் கண்டவாறும் அவனைக்கூறி யனவும்கூறி, தோழியைத் தலைவனை வரைவுகடாவி யாய்க்த அறத்தோடு நிற்கவேண்டுமென்றது.

இதன் பொருள்.

தோழீ! இனிய பாலைக் கறந்த கலங்களை அவ்விடத்து நின்றும் எடுத்துவைத்துக் கன்றுகளையெல்லாந் தாம்பாற் கட்டி மனைக்கண்ணே நிறுத்திக் தாய்தந்த பூந்தொழிலினையுங்கரையினையுமுடைய நீலத்தையுடைய ஆடை பக்கத்தே தாழாநிற்க மெய்யை அசைத்துப் (சு) பாங்கர்க்கொடியும் முல்லைக்கொடியும்பரந்த (ங)மூற்றாட்டாகிய தோட்டத்திடத்தே நம்முடைய ஆட்டினத்தையுடைய ஆயர்மகளிரோடே(சு)மற்றை இருகூற்றில்‡ஆயர்மகளி ரெல்லாருஞ் சேர வீளையாடாநிற்ப அவ்விடத்தேவந்த குருந்தம்பூவாற் செய்த கண்ணியையுடைய பொதுவன் ||பின்னை என்னைநோக்கிச் சூழ்ந்த அணிகலங் களையும் — அழகினையும் மடப்பத்தையுமுடைய நல்லாய்! நீ இழைத்து வீளை யாடுஞ் சிற்றில் யானுஞ் சிறிது புனைவேனை என்ருன்; யான் அதற்கு வடா!

க. 'இயல்' என்பது 'இலக்கணம்' என்னும் பொருளில் வருதல் பெரு வழக்கு. 'இயல்பு' என்பதும் அப்பொருளில்வருதலை(அ)"அந்தான்கே மொழிபுண ரியல்பே" (ஆ) "இயல்புற காடின்" என்னுந் தொல்காப் பியப்பருநிகட்கு இவரெழுதியிருக்கும் உரையாணுமறிக.

உ. "எந்தையும்.....மன்" என்பது குரவரை வரைவெதிர் கொள்ளு வித்தற்கு மேற்கோள்; நாற்கவி. சூ. கசுச.

ங. "வாவி யுறையு மடவனமே யென்னுடைய, ஆவி யுவந்தளித்தா யாதி யால் - காவினிடைத், தேவேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி" நள. சுயம்வர. இ.

சு இந்நூற்பக்கம் கூசுஅ: இ-ஆம் குறிப்புப் பார்க்க.

இ. மூற்றாட்டி - ஸர்வமானியம்.

கூ. மூற்றை இருகூறு - பசுவினம், எருமையினம்.

(பிரதிபேதம்) * செய்வை. † விடுவென்மேன். ‡ ஆயமகளிர், || பின்னேயென்னே.+ அழ
னையுமுடையமடப்பத்தையுடைய நல்லாளோ.

வரைந்துகொண்டு எமக்கு ஓரில்லே அமைத்தலறியாயாய்த் தன் சுற்றத்தார் எடுத்த இல்லிலே இவளிருக்க யாம்பெற்றேமென்ற நினைத்திருக்குமவன் நீ; ஆதலால், உறுதியாக நீ உலகியலிற்கற்றதொன்றும் இல்லேக்காணென்றேன்; *அதன்பின்புமுற்றிழாய்! கட்டினமாலேயை நினக்குத் தாதருஞ்தகுதலிலே அழகு பெறப் புனேவேனே என்ருன்; யான் †அத்தற்கு ஏடா! நீ வரைந்து கொண்டு, விடாமற் கோதை புனேதல்அறியாயாய், (க)எஞ் சுற்றத்தார் மிகக் கொண்டுவந்து சூட்டின பூவை மிகப் பூவென் றுகொளாஞுமவன் நீ; ‡ஆதலால் உலகில் உறுதியாகப் பெரிதும் பேதைத்தன்மையையுடையை என்றேன்; அதன்பின்பு || மாதராய்! வீயக்கூதக நிதழின சுணங்கு அணிந்த மெல்லிய (உ)மூலேமேலே தொய்யில்எழுதுங குழம்பால் எழுதுவேனே என்ருன்; யான் அதற்கு நீ வரைந்துகொண்டு வெளிப்பாக எழுதுதல் நின் மனத்து இல்லே,யாம் எப்பொழுதும் (ங) என்சுற்றத்தார் கோலஞ்செய்து எழுதுங்காலம் பார்த்த÷திருப்பேமோ? இனி இங்ஙனம் இருத்தலாற்றேம், ∴இங்ஙனங்கூறுதலின் நீ பெரிதும் மயக்கத்தையுடையை, இங்ஙனம × அன்புள்ளார்போலக் கூறினீரும், அவற்றைத்தவிர் என்று கூறினேன்; தையலாய்! அவற்றின் பின்னர் அவன் சொன்ன நெறிகளெல்லாவற்றையும் +இவ்வகனம் மாறுமாறுய் யான் மறுக்க, = இனிக் களவு ரிழாதென்று(ச) ** அலமந்தான் போலே மீண்டு போயினன்; அவனே ஆயர்மகளிரை ††வரைந்துகொள்ளும் இலக்கணத்தை அறிவித்து, பின்னர் என்னுடைய தகுதியும் (ஞ) யாயும் இக்களவொழுக்கம் அறியுமபடி அரத்தித்தாடு ‡‡ நிலேவகையால் உரைப்பை

க. "பணணித்தமர்த்தொருபுமந் தைஇய, கணணி" கலி. கo:கூ-கo.

உ. "இளமுலேமேமற், பொய்யி லெழுதவும் வல்லன்" கலி. கசஉ-ஙஉ-ஙஙு.

ங. "என்றேனெமேற், கரும்பெடிபூது தொய்யிற்கு" (கலி. சுஙு: சு - எ.) என்பதனுரையால மகளிர்தகு அவாக்கணவரேயன்றிச சுற்றத்தாரும் கோலஞ்செய்தலுண்டென்பது அறியலாகும.

ச. அலமருதல் - சுழலுதல்; என்றது, மனமயங்குதலே. இப்பொருளில அல்லாத்தலென்னுஞ்சொல வருதலே, (அ) "அலலாத்தா ரலவுற" (கலி. உக: உ) (ஆ) "அல்லாத தவணடுங்கு" (இ) "அலலாத் தகன் கோயி லாழ்கடல்போ லாயிற்றே" (ஈ) "அலறி யல்லாப்ப போன் றூரே" (சீவக. உகுகூ,உகுசு, உகுசு) என்பவற்றின் உரையாலும் அறிக. (உ) "அல்லாப்புற் றஞுகிலேன்" (சீவக. ஙoகஎ) என்புழி, அல்லாப்பென்பதறகு, வருத்தமென்னுமபொருளும்காணப்படுகிறது.

ஞ. யாய் - என் தாய். (அ) "யாயு ஞாயும் யாரா கியரோ" குறுந். சo. (ஆ)"யாயேகண்ணு னுகு கடுங்காதலளே" அகம்.கஉ: ச;(இ)"நீனின்ற

பிழிபேதம்; * அதன்பின்பு கட்டினமாலேயை நினக்கு மூற்றினதாது, † அதறகுவரைந்து, ‡ ஆதலாறுறியாக, || ஆயிழாய், ÷இருப்போமோ. ∴ அங்ஙனம், × அன் புள்ளாரைப்போல, + இவ்வன மாறுயான். = இக்களவு, ** அலமாந்தான், †† வந்தகொள்ளும். ‡‡ நிலேவகையாயுரைப்பையாயின்.

ரயின், அவன் உற்ற நோயன்றி யான் உற்ற நோயையும் மிகப்போக்குவை ; தினைக் குறிக்கொள் என்றாள். எ - று.

இதனால், தலைவிக்கு அசைவு பிறந்தது.

இது (க)பன்னீரடியின் இகந்து தனியும் விரவி ஐஞ்சீரடியும்வந்து ஒரு பொருணுதலாது வந்த கலிவெண்பாட்டு. (கக)

கூ.) யாரிவ னென்னை விலக்குவா னீருளர்
பூந்தா மரைப்போது தந்த விரவுத்தார்க்
கல்லாப் பொதுவனை நீமாறு நின்னெடு
சொல்லலோம் பென்று ரெமர் ;

டு எல்லா, கடாஅய கண்ணுற் கலிஇயநோய் செய்யு
நடாஅக் கரும்பமன்ற தோளாரைக் காணின்
விடாஅலோம் பென்று ரெமர் ;

அ கடாஅயார், நல்லாரைக் காணின் விலக்கி நயந்தவர்
பல்லித ழுண்கண்ணுந் தோளும் புகழ்பாட
நல்லது கற்பித்தார் மன்ற நுமர்பெரிதும்
வல்ல ரெமர்கட் செயல் ;

ஈ ஓஒ, வழங்காப் பொழுதுநீ கன்றுமேய்ப் பாய்போல்
வழங்க லறிவா ருரையாரே லெம்மை
யிகழ்ந்தாரே யன்றே வெமர் ;

ஒக்கு, மறிவல்யா னெல்லா னிடு ;

ஊ விடேன்யா, னென்னீ குறித்த திருங்கூந்
னின்னையென் மூன்னின்று
சொல்லலோம் பென்றமை யன்றி யவணீ
புல்லலோம் பென்ற துடையரோ மெல்ல

படிவத்தா னெடியோனே முதற்பயந்த, தாயென்று முதுமறை பரவி னும், யாயென் றல்ல நியாந்துணி யலமே" (தொல். செய். சூ. கசஉ. பேர். உரை.மேற்கோள்) என்பவையும் இது தன்மையொடுத்தபெய ரென்று கல்லாடரும் தன்மையொடொட்டிய பெயரென்று நச்சினார்க் கினியரும் எழுதியிருப்பவையும் இங்கே அறிதற்பாலன.

க. பன்னிரண்டடியின் இகந்து ஒரு பொருணுதலாதவரும் கலிவெண் பாட்டுக்கு இச்செய்யுள்மேற்கோள்; தொல். செய். சூ. கஙஉ. பேர். நச்.

உ0 முயங்குநின் மூள்ளெயி றுண்கு மெவன்கொலோ
மாயப் பொதுவ னுரைத்த வுரையெல்லாம்
வாயாவ தாயிற் றலைப்பட்டாம் பொய்யாயிற்
சாயலின் மார்பிற் கமழ்தார் குழைத்தநின்
னுயித முண்கண் பசப்பத் தடமென்றோள்
சாயினு மேன ருடைத்து.

இது வினைவலப்பாங்கிற் றலைவியை ஆற்றிடைக் கண்டு வினைவலபாங்கிற்றலைவன் விலக்கி நகையாடி இருவருஞ் சிலமொழி கூறியவழி அவள் கூட்டத்திற்று உடம்பட்டது. இது (க)கைக்கிளை.

இதன் பொருள்.

(உ)யாரிவ னென்னை விலக்குவா *னீ(ங)ருளர்
பூந்தா மரைப்போது தந்த விரவுத்தார்த்
(ச)தல்லாப் பொதுவனை நீமா றுநின்னெஞ்
சொல்லலோம் பென்ற மொழி

எ - து: என்னை விலக்குவானுகிய இவன் எமக்கு என்ன உறவுடைய னென(ங)முன்னிலைப்புறமொழியாகப் †புலத்துகூறி, பின்னர் அவனைநோக்கி நீரிலே‡ அசைகின்ற பொலிவையுடைய தாமரையினது பூவை எமக்கு வீளை

க. (அ) "தல்லாப் பொதுவனை நீமாறு" எனப்பொதுவியர் கூறலும் "கடாஅக் கரும்பமன்ற தோளாரைக் காணின், விடாஅலோம் பென்ற ரெமர்" எனப பொதுவர் கூறலும் மிக்க காமத்து மிடலாகிய பெருந் திணை யாதலின் முல்லையுட் கோத்தாரென (தொல். அகத். சூ. கங.) உரையில் இவரே வேறு திணையாக எழுதியிருப்பது இங்கே ஆராயத் தக்கது.

உ. தலைவன் சொல்லெதிர் தலைவி உடம்பாடிருப்பவும், இசைவில்லா தாரைப்போல அல்ல கூற்றுக் கூறுதற்கு, 'யாரிவ னென்னை..... .....ரெமர்' என்பதனை மேற்கோள் காட்டி, 'எவன்கொலோ..... .....எவருடைத்து' என உடம்பாடு கூறினுளாதலின், முற்கூறியது அல்ல கூற்றுயிற்று என்பர் இளம்பூரணர்; தொல். களவி. சூ. கக.

ங. உளர்தல் - அசைதல்.

ச. "தல்லாக் கோவலர்" (ஐங். ங0ச) என்பது இங்கு ஒப்புநோக்கற் பாலது.

ஞ. 'யாரைநீ யென்னை விலக்குவாய்' என்னுது "யாரிவனென்னை விலக்குவான்" என்றது முன்னிலையிற் புறமாக மொழித்தது.

(பிரதிபேதம்) * நீருளர்தாமரை. † புலத்துச். ‡ அசைக்கின்ற பூவையுடையதாமரை.

டத் தந்த, (க)பலமலர் விரவுதலையுடைத்தாகிய தாரினையுடைய, *நினது
ராதித்தன்மை கல்லாதபடி இயல்பாகப்பட்ட இடையனைத் தன்மையை
டையை; இவ்வொழுக்கம் அறிந்தாரைப்போல எம்முடைய சுற்றத்தார்
ன்னோடு சிலசொல்லுதலைப் பாதகாத்துக்கொள் என்றார்; ஆதலால் நீ
ண்டு நில்லாது போ என்றாள். ‡ எ - று.

"எந்நில மருங்கிற் †பூவும்" (உ)என்பதனுள், தாமரை கூறினார்.

நி எல்லா, கூடாஅய (ங)கண்ணுறு கலிஇயநோய் செய்யு
நடாஅக் (சி)கரும்பமன்ற தோளாரைக் காணின்
விடாஅலோம் பென்ரு மெமர்

எ - து: அதுகேட்டவன் ஏடீ! வேட்கை செலுத்தினை கண்ணுலே
னத்தைக் கலக்கின காமநோயை உண்டாக்கும் எழுதுகருப்பு நெருங்கின
தாளினையுடைய மகளிரைக் கண்டாயாயிற் போகவிடாதே கொள்; அவர்
செய்த நோயை அவரைக் கொண்டே பரிகரித்துக்கொள்ளென்று கூறினர்
ம்முடைய சுற்றத்தார் என்றான். எ - று.

அ கடாஅயார், நல்லாரைக் காணின் விலக்கி நயந்தவர்
பல்லித ழுண்கண்ணுந் தோளும் புகழ்பாட
நல்லது கற்பித்தார் மன்ற நுமர்பெரிதும்
வல்ல ரெமர்கட் செயல

எ - து: அதுகேட்டவள் அங்ஙனம் பரிகரித்துக்கொள்ளென்று கூறி
ரவர்கள் அதுவேயன்றி நல்ல மகளிரைக் கண்டாயாயிற் போகாமல் தடுத்து
பிரும்பி அவருடைய (ஙி) பல பூக்களையும் போலுங் கண்ணையும் புகழ்ப்படிக்

க. (அ) "பிடவமுங் .....கோடலும்.....காயாவும் பிறவு, மணிகொள
மலர்ந்த கண்ணியர்" (ஆ) "மெல்லிணர்க் கொன்றையு மென்மலர்க்
காயாவும், புல்லிலை வெட்சியும் பிடவுந் தளவுங், குல்லையுங் குருந்துங்
கோடலும் பாங்கருங், கல்லவுங் கடத்தவுங் கமழ்கண்ணி மலர்ந்தனர்"
கலி. கூக: உ - சு; கூங: க - ச என்பவையும் இந்நூற்பக்கம் சூசு: உ-ஆம் குறிப்பும் ஒப்புநோக்கற்பாலன.

உ. தொல். அகத். சூ. கக.

ங. இந்நூற்பக்கம் எூக: ங-ஆங் குறிப்புப்பார்க்க.

ச. "தோண்மேற், கரும்பெழுது தொய்யிற்கு" கலி. சூங. எ - அ என்ப
தும் அதன் குறிப்பும் இங்கே அறிதற்பாலன.

ஙி. பல பூக்களென்பதற்கு, மகளிர் கண்ணுக்கு உவமையாகக் கூறப்படுமெ
செந்தாமரை,குவளை,கருநெய்தல்,கருவிளை,நறுமுதலியமலர்களென்று
பிரதிபேதம்) * சாரித்தன்மையைக்கல்லாதவடிவியல்பாக. † பூவும்புனலும்.

தோளேயும் பாடும்படியாக நல்லதொரு தொழில் சூற்பித்தார்; அவர்தாம் அறுதியாக; எம்முடைய சுற்றத்தாரிடத்து அவர் வரைவுகோடற்குச் செய்யுஞ் செயலே நம்முடைய சுற்றத்தார் பெரிதும் வல்லராயிருந்தாரென்றாள். எ-று.

*இஃது, இகழ்ச்சி.

கஉ ஓஒ, (க)வழங்காப் பொழுதுநீ கன்றுமேய்ப் பாய்போல்
வழங்க லறிவா ருரையாரே †லெம்மை
யிகழ்ந்தாரே யன்றோ வெமர்

எ-து: அதுகேட்டவன் கன் மனத்தே ஓஒ! என வியந்து, பின்னர் வெயில்வெம்மையால் ஒருவரும் வழங்காத உச்சிக்காலத்தே நீ கன்றுமேய்ப் பாய்போலப் பிறர்க்கு நோயைச்செய்து திரிகின்றதன்மையை அறிந்திருக் கின்றவர்கள் இப்படிக் திரிகின்றாளென்று எனக்குரையாதிருப்பாராயில் எம் முடைய சுற்றத்தார் எம்மை இகழ்ந்தாரேயல்லரோ என்றான். எ-று.

கஙி ஒக்கு, மறிவல்யா னெல்லா விடு

எ-து: அதுகேட்டவன் ‡ கூறியது ஒக்கும்; எடா! இது பொய் யென்றுயான் அறியவேண்டா; இக்கூற்றைக் கைவிடென்றாள். எ-று.

கசு விடேன்யா, னென்னீ குறிக்த திருங்கூந்த
னின்னீயென் முன்னின்று
சொல்லலோம் பென்றமை யன்றி யவனீ
புல்லலோம் பென்ற தடையரோ மெல்ல
2O ||முயங்குநின் முள்ளெயி றுண்கு மெவன்கொலோ
மாயப் பொதுவ னுரைத்த வுரையெல்லாம்

கொள்ளலாம். இவ்வுரையாசிரியர் இதழென்பதைச் னீயாகு பெய ராக்கிப் பல்லிதழென்பதற்கு, பல பூவென்று பொருள் கூறினர். இதற்கே பலவாகிய இதழினையுடையதென்று அன்மொழித் தொகை யாக்கிப் பூவென்ற பொருள் கூறுவாருமுளர். ‘பல்லித முண்கண்’ என்னுந்தொடர்மொழி, (நற். உசO: கக; குறுந். ஙி; ஐங். கஎO, ககO, ஙஙசு, ஙஙிக, சஎக; கலி. சஙி: கக, கOO: கO) பலவிடங்களிலும் வருதல்காண்க.

க. வினைவல பாங்கின ளாய தலைவியை நோக்கித் தலைவன் கூறியதற்கு, “வழங்காப் பொழுதுநீ.....வெமர்” என்பது மேற்கோள்; தொல். அகத். சூ. உங. நச்.

(பிரதிபேதம்) * நீதானெட்சி. † என்னே. ‡ மேய்ப்பாரைப்போலே. || முயங்கின் முன்னெ பிறண்டுமெனன்.

வாயாவ தாயிற் றலைப்பட்டாம் பொய்யாயிற்
(க)சாயலின் மார்பிற் கமழ்(உ)தார் *குழைத்தநின்
ஞெரிதி முண்கண் பசப்பத் தடமென்றோள்
சாயினு மேனு ருடைத்து

ஏ - து: அதுகேட்டவன் யான் நின்னை விடேன்; கரிய கூர்த்தலை டையாய்! யான் கூறிய கூற்றை நீ பொய்யாகக் குறிக்தனென்? யான் பாய்கூறிற்றிலேன்; அது நிற்க, நின் சுற்றத்தார் நின்னை என்முன்னே ன்ற சில சொல்லுதலைப் பாதுகாத்துக்கொள்ளெனச் சொன்னமையன்றி வனை நீ புல்லுதலைப் பாதுகாத்துக்கொள்ளென்ற வார்த்தையை அவர் டையரோ? இல்லையன்றே! ஆகலால் நீ மெத்தென முயங்குவாய், அப் பாழுது யான் நின் கூரிய (ங) எயிற்றை உண்பேனென்றான்; அதுகேட் வள், இவன்கூறியது எத்தன்மைத்தோவென நெஞ்சொடு உசாவி, பின்னும் ன்னெஞ்சை நோக்கி, பொய்யை வல்ல பொதுவன் கூறிய கூற்றெல்லாம் மெய்யாயிருப்பதோர் வார்த்தை யாயில் அவனிடத்து †மனைவாழ்க்கையிலே ட்டேமாகின்றேம்; அன்றி அது பொய்யாயிற்றேல் மென்மை இனிதாகிய ார்ப்பி கமழ்கின்ற மாலையை வருக்கின நின்னுடைய அழகிய இகழ்போலுங் ண்கள் பசலைநிறங் கொள்ளப்‡பெருமையையுடைய மெல்லியதோள் பின் னர் மெலியினும் நின் மேனி இப்பொழுது பெறுகின்ற அழகையுடைத்துக் ாண் எனக் கூட்டத்திற்கு உடம்பட்டுக் கூறினள். எ - று.

குழைத்த என்னும் பெயரெச்சம் நின் என்னும் பெயரொடு முடிந்தது. ன்று மேய்ப்பாய் போ லென்பதனால், வினைவல பாங்காயிற்று. "நோயு

க. (அ) "ஊரன் மார்பே,..... ..இன்சா யற்றே" (ஐங். கசை.) என்பதும் (ஆ) "இன்சாயன் மார்பன்" (கலி. சுரு: ஙி.) என்பதும் அதன் குறிப்பும் ஈண்டு அறிதற்பாலன.

உ. தார்குழைத்லைக்குறித்து, கீவக. உ0ஙசை, உ0ஙஉ; பு - வே. பெருந். கஉ; இவற்றில் வருபவையும் "குழைந்தநின் ரூரும்" (கலி. ஙக: ஙக - கஉ.) என்பதும் அதன் குறிப்பும் இங்கே நோக்கற்பாலன.

ங. (அ) "கரும்பின், காலரி கடிஞைக் கண்ணியின் றன்ன, வாலெயி றூறிய வசையி நீரீர்" குறுந். உகஎ. (ஆ) "முள்ளுறழ் மூளையெயிற் றமிழ்தூறுக் தீநீரைக், கள்ளினு மகிழ்செய்யுமெனவுரைத்தும்" கலி. சை: ஙஉ - ஙசை. (இ) "பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி, வாலெயி றூறிய நீர்" குறள். ஙஎஉசை. என்பவையும் (ஈ)இந்தூற்பக்கம் ஙஉ: ங-ஆங்குறிப்பில் இவ்விடத்துக்குப்பொருத்துவனவும் அப்பக்கம் ஙஉ - ஆங் குறிப்பும் பார்க்க.

சை. இந்தூற்பக்கம் உஎக: ஙி - ஆம் குறிப்புப் பார்க்க.

(பிழைதிருத்தம்) * குழைத்தவென், † மனைவாட்கையிலே. ‡ பெருமையையுடைய தோள்.

மின்பமும்" என்னும்(க)சூத்திரத்து, "உறப்புடை யதுபோ லுணர்வுடையதி போன், மறத்துரைப் பதுபோ னெஞ்சொடு *புணர்த்தும்"என்பதனால் உறுப் புடைத்தாகக் கூறினான்.

இதனுள், இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.
இது மூஞ்சேடியும் இருசேடியும் இடையேவந்த கொச்சகக் கலி. (கஉ)

(ககங.) நலமிக நந்திய நயவரு தடமென்றோ
ளலமர லமருண்க ணாந்நல்லாய் நீயுறீ இ
யுலமர லுயவுநோய்க் குய்யுமா றுரைத்துச்செல் ;

சு பேரேமுற் றூர்போல முன்னின் றுவிலக்குவா
யாரெல்லா நின்னை யறிந்ததூஉ மில்வழி ;

சூ தளரியா லென்னறிதல் வேண்டிற் பகையஞ்சாப்
புல்லினத் தாயர் மகனேன் மற்றியான் ;

அ ஒக்குமன்;
புல்லினத் தாயனீ யாயிற் குடஞ்சுட்டு
நல்லினத் தாய ரெமர் ;

கக எல்லா;
நின்னெடு சொல்லி னேதமோ வில்லீமன் ;
ஏதமன் றெல்லீ வருவான் விடு ;

கச விடேன்;
உடம்பட்டு நீப்பார் கௌவி மடம்பட்டு
மெல்லிய வாத லறியினு மெல்லியா
னின்மொழிகொண் டியானே விடுவேன்மற் றென்மொழிகொண்
டென்னெஞ்ச மேவல் செயின் ;

கசு நெஞ்சேவல் செய்யா தெனநின்றுப்க் கெஞ்சிய
காதல்கொள் காமங் கலக்குற வேதிலார்
பொய்ம்மொழி தேறுவ தென் ;

உஉ தெளிந்தேன் றெரியிழா யான் ;

உசு பல்கால்யாங் கான்யாற் றவிர்மணற் றண்பொழி
லல்க லகலறை யாயமோ டாடி

க. தொல்.பொருளி. சூ. உ.
(பிரதிபேதம்) * னெர்தமென்பதனுள், னெர்த்த மென்பதனுள்.

முல்லை குருந்தொடு முச்சிவேய்ந் தெல்லை
யிரவுற்ற தின்னங் கழிப்பி
யரவுற் றுருமி னதிருங் குரல்போற் பொருமுர
ணல்லே றுநாகுட னின்ற னை
பல்லா னினநிரை நாமுடன் செலற்கே.

இது வினவலபாங்கிற் றலைவியை ஆற்றிடைக்கண்டு அவனோ வினவலபாங்கிற் றலைவன் விலக்கி அவளோடு சிறிது கூறியவழி அவள் *கூடலுறுகின்றுள் கூறியது. இது கைக்கிளை.

இதன் பொருள்.

நலமிக நந்திய நயவரு தடமென்றோ
(க)ளலடர (உ)லமருண்ட கணங்கல்லாய்†நீயுறீஇ
(ங)யுலமர லுயவுநோய்க் குய்யுமா றுரைத்துச்செல்

எ - து: நன்மை மிகப் பெருகிய விருப்பம் வருகின்ற பெருமையினையுடைய மெல்லிய தோளினையும் சுழலுதலுடைய, மூக்குத்தோடு பொருந்தின கண்ணினையும் அழகினையுமுடைய கல்லாளே! நீ ‡உற்றதனால் உழத்தலையுடைய வருந்து நோய்க்கு (ச) உய்யும் நெறியைக் கூறிப் பின்புபோ என விலக்கினன். எ - று.

ச (ரு)||பேரேமுற் றுர்போல முன்னின்று விலக்குவா
யாரெல்லா நின்னை யறிந்ததூஉ மில்வழி

க. |"அலமர லுண்கண்ணுர்" (கலி. எஉ: கஉ) என்பதும் இந்நூற்பக்கம் சசக: உ-ஆம் குறிப்பும் பார்க்க.

உ. |அமர்க்கண் கலி சஎ: க; நிஎ: உஙூ.

ங. (அ) "உலமரல் வருத்த முழுதும்" அகம். கஅ: கஙூ; (ஆ) "யா முல மர" கலி. அங்: உ.

ச. |உய்யும் நெறி - தப்பிப் பிழைக்கும் வழி; உயவு நோயைப் போக்குகின்ற வழியென்றுமாம்.

ஞ. (அ)எல்லான் என்பது எல்லாவென அண்மைக்கண் ஈறழிந்ததென்று கொண்டு, "பேரேமுற் றுர்போல.....யாரெல்லா" என்னும்பகுதியை மேற்கோள்காட்டுவர், மயிலைநாதர்; நன். பெயரி.சூ. ஞஎ. (ஆ) "ஏழுற வீரண்டு முளவென மொழிப" என்புழி, ஏழுறல் மயங்குதலை யுணர்த்திவருதற்கு, "பேரேமுற் றுர்போலமுன்னின் றுவிலக்குவாய்"

(பிரதிபேதம்) * கூடலுடம்பட்டாளாக அவன் கூறியது. இது, † நீயுறீஇயலமர்ல், ‡உறுதி சூழ்தலையுடைய, || பேரேமுற் றுய்போல.

எ - து: அதுகேட்டவள், எடா! நின்னே முன்பு கண்டு அறிந்ததூஉ மில்லாத எண்ணிடத்தே பெரிய பித்தேறினரைப் போல முன்னே நின்று (க)லீலக்குகின்ற நீ யார்தான் என்ருள். எ - று.

சு (உ)தளரியா லென்னறிதல் வேண்டிடிற் பதையஞ்சாய்
(ரு)புல்லினத் தாயர் மகனேன் மற்றியான்

எ - து: அதுகேட்டவன், என்னே நீ அறிதலே வீரும்பின் மனத்தளர் கின்ற இயல்பினையுடையாய்! யான் பதைக்கு அஞ்சாத ஆட்டினத்தை யுடைய ஆயரானவர்க்கு ஒருமகனுக * லீளெனென்று தன் செல்வக்குடிப் பிறப்பு உணர்த்தினன். எ - று.

அ †ஓக்குமன்
புல்லினத் தாயணீ யாயிற்(சு) தடஞ்சுட்டு
நல்லினத் தாய ரெமர்

எ - து: அதுகேட்டவள், அது மிகவும் ஒக்குமென அதற்குடம்பட்டு, பின்னர் நீ ஆட்டினத்தையுடைய ஆயனுக் தன்மையையுடையையாயின் எம்மூடைய சுற்றத்தார் தும் இனத்திற் சிறந்த இன்னதனேக் குடம் பால் போதுமென்று கருதப்படும் பசுவினத்தையுடைய இடையரெனத்தன்செல்வக் குடிப்பிறப்பு உணர்த்தினுள். எ - று.

ககஎல்லா
நின்னெடு சொல்லி னேதம்பா மில்லேமன்

எ - து: அதுகேட்டவன், எடி! இங்ஙனஞ் சிறந்த நின்னேடே சில மொழி கூறின் மிகக் குற்றமோ இல்லே என்ருன். எ - று.

கஙூ ‡ஏதமன் றெல்லே வருவான் மிடி

எ - து: அதுகேட்டவள், இருவரும் ஒத்த குடியாயிற் பின்னைச் சில ||கூறிற் குற்றமென்? யான் நாளேவருதற்கு இப்பொழுது போகவிடி என்ருள். எ - று.

என்பது மேற்கோள்; தோல். களவு. சூ. கஅ. நச். (இ) "எம்மை, முன்னேநின் ருங்கே விலக்கிய வெல்லாரீ, யென்னேமுற் ருஅய் விடி" (கலி. ககசு: உ - ச.) என்பது இதனேடு ஒப்புநோக்கற்பாலது. (ஈ) "பேரா முறுநர்" என்பது நற். உஉ0: எ. (உ) இந்நூற்பக்கம் சசடு: ச-ஆம் குறிப்பும் பார்க்க.

க. "நின்னேத் தகைத்தனேன்" கலி. க0அ: உ0.

உ. "தளரிய லவரொடு" கலி. கூசு: களவு. என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

ரு. கலி. க0எ: உ. அடியையும் அதன் குறிப்பையும் பார்க்க.

ச. இந்நூற்பக்கம் கூஅஎ: உ - ஆம் குறிப்புப் பார்க்க.

(பாடபேதம்) * உடையேனென்று, † ஓக்கும்புல்லி. ‡ஏதமன்றென்னே, ||கூறிக்கும்மென்.

கச விடேன்

உடம்பட்டு நீப்பார் கிளவி மடம்பட்டு
மெல்லிய *வாத லறியினு மெல்லியா [கொண்
(க) னின்மொழிகொண் டியானே † விடுவேன்மற் றென்மொழி
டென்னெஞ்ச மேவல் செயின்

எ - து: அதுகேட்டவன், யான் விடேனென்று கூறி, பின்னரும் (உ)என்னுடைய வார்த்தையைக்கேட்டு என் நெஞ்சம்அறியாமையிலேபுகுந்து எனக்கு எவ்லைச்செய்யுமாயின், உலகத்தில் ஒருகாரியக்கூற்றால் (ங) உடன்பட்டு மனத்தால் உடன்படாதார் கூற்றுச் செவிக்கு மெத்தென்றிருத்தலை அறிந்திருந்தேஇனுமின், மெல்லிய இயல்பினையுடையாய்! நின்னுடைய வஞ்ச மானமொழியை உண்மையாகக்கொண்டு யானே போகவிடுவேன்; அதனற் பெற்றதென் ? அஃது எவ்லைச்செய்யாதாயிற்றே என்றான். எ - று.

கஙு நெஞ்சேவல் செய்யா தெனநின்றாய்க் கெஞ்சிய
(ச)காதல்கொள் காமங் கலக்குற (டு)வேதிலார்
‖பொய்ம்மொழி தேறுவ தென்

எ - து: நின்னைக் கைகடந்து நின்ற காதலைக்கொண்ட காமங் கலக்குத லுறுகையினாலே என்னெஞ்சு எனக்கு எவ்லைச்செய்யாதெனச் சொல்லிநின்ற உனக்கு எதிலார் கூறிய பொய்யாகிய வார்த்தையைத் தெளியுந்தன்மை எங்ஙனே உண்டாயிற்று என்றான். எ - று.

க. "நின்மொழி... .....செயின்" என்பது மறுத்துரைப்பதுபோல் தலைமகன் கூற்று உவகைபற்றிவந்தற்கு மேற்கோள்; தோல். பொருளி. சூ. உ. இளம்.

உ. "அவர்நெஞ் சவர்க்காதல் கண்டு மெவனெஞ்சே, நீயெமக் காகாதது" குறள். கஉகக.

ங. (அ) "மனத்தி னமையா தவரை யெனத்தொன்றுஞ், சொல்லினும் றேறறற்பாற் றன்று" (ஆ) "நட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்சொ, லொல்லே யுணரப் படும்" குறள். அஉஙி; அஉசு.

ச. (அ) "காதற் காமங் காமத்துச் சிறந்தது" பரி. க: கச. (ஆ) "காதல் செய் காமக் கனற்ற" பு-வெ. கைக்கிளை. பெண்பாற். ச.

ஞ. "எதிலார் யாதும் புகல விறைமகன், கோதொரீஇக் கொன்கை மூதக்குறைவு - கோநின்று, காக்கை வெளிதென்பா ரென்சோலார் தாய்க்கொலே, சால்புடைத் தென்பாரு மூண்டு" நீதிநூறி. ஙங.

(பிரதிபேதம்) * ஆலலியினும். † விடுவேனென்மொழி, ‡ஆயினும், ‖இன்மொழி.

ஏதிலாரென்றது, தான் ஏதிலேனல்லேனென்னும்பொருண்மை குறிப்பாய்த் தோன்றக் கூறியது. பொய்ம்மொழியென்றது தான் உண்மைகூறவும் பொய்யாகக் கொண்டாரென்பது தோன்றக் கூறியது.

உஉ தெளிர்தேன் *றெரியிழா யான்

எ - து: அதுகேட்டவன், தெரிந்த இழையினையுடையாய்! நீ இப்பொழுது கூறிய கூற்றுல் நீ முன்னர் 'வருவான் விடு' என்றது உண்மையென்று யான் †தெளிர்தேன் என்றான். எ - று.

உங பல்கால்யாங் கான்யாற் றவிர்மணற் றண்பொழி
லல்ல லகலறை யாயமோ டாடி
முல்லை குருந்தொடு மூச்சிவேய்ந் தெல்லை
யிரவுற்ற ‡தின்னங் கழிப்பி
யரவுற்(க)றுமி னதிருங் குரல்போற் பொருமுர
ணல்லேறு நாகுட னின்றன
பல்லா னினநிரை நாமுடன் செலற்கே

எ - து: என்று பின்னர், யாம் முல்லைப்பூவைக் குருக்கம்பூவோடே முடியிலே சூடிப் பலகாலுங் காட்டூற்றில் விளங்குகின்ற மணலையுடைய குளிர்ந்த பொழிலிடத்து யாம் முன்பு || தங்கும் அகன்ற பாறையிலே ஆயத்தோடே வினையாடுகையினுலே பகற்பொழுது போய் இராப்பொழுது வந்து தோன்றிற்று; அது வருவதற்குமுன்னர்ப் போகாமல் + தாழ்க்கின் நம்மைக் கோபிப்பார்கள்; அதனை உணராது நீ இன்னங் காலங்கழியாதின்றுய்; பல பசுவினத்தினுடைய திரளுக்குள்ளே,(உ)பாய்புசேர்கையினுலே அதிரும் உருமினுடைய குரல்போல அதிரும் பொருகின்ற மாறுபாட்டினையுடைய ஆல்ல (ங)ஏறுநாகுடனே தம்மிற் கூடி நின்றன; அவைபோல நாமுங்கூடிச் சேரப் போதற்குக் கூட்டத்திற்கு உடம்படுவாயாக என்றான். எ - று.

(அ) "வானேறு வானத் துரற்ற வயமுர, னூனேற் றெருத்த லதனே டெதிர்செறப்ப" கார். கo. (ஆ) "இடியார் கடுமுழக் கேறு" தே. (இ) "இடிக்குர லானேற் றினமெதிர் செறப்ப" கலி. கூஅ: கo. (ஈ) "(அடலேறு)இடியிட்டதிர்கா ரெதிறேற்றெழுந் தாங்கு நோக்கி" திருவிளை. மாயப்பசுவை வதைத்த. கஎ.

உ. இந்நூற்பக்கம் உஎச: நி-ஆம் குறிப்புப் பார்க்க.

ங. "மல்லன் மறுகின் மடநா குலைகச், செல்லு மழலிடைபோற் செம்மாந்து" நள. சுயம். கடுசு.

பிரதிபேதம்) * தெரியிழாய் எ-து, † தெரிர்தேன், ‡ இன்னும், || தங்கும்பாறையிலே + தாட்கின்.

"ஒங்குனேத் தொடுத்த*வுசல் பாம்பென, முழுமுத முமிய வருமெறிக் கன்றே"(க)என்னுர் பிறரும்.

(உ)யாங் கூட ஆயத்தோடு ஆடியெனத் தானுங்கூட ஆடினனென்றதனு னும், பொழுது †வைகிப்போதற்குத் தாம் தமக்குரியரல்லரென்றமையாணும், ஏறும் நாகுங் கூடப் போமாறுபோல நாமுங் கூடப்போக என்றமையாணும், வினைவில பாங்கினராயிற்று. அறவுறவெனத் திரிக்க.

இதனுல், இருவர்க்கும் புணர்ச்சிவேட்கை பிறந்தது.

இது தரவும் இரண்டடியான் இரண்டு கொச்சகமும் தனிச்சொல்லும் குறவெண்பாட்டும் தனிச்சொல்லும் ஒரடியான் இரண்டும் தனிச்சொல்லும் நெடிவெண்பாட்டும் குறவெண்பாட்டும் சித்தடி ‡யோரடியா னென்னும் சொற்சிரடியும் ஐஞ்சீரும் வந்து (ங) போக்கிலக்கண ‖ மில்லாத அரியச் சுரிதகமும் பெற்ற × உறழ்கலி. (ஙு)

(ககசு.) வாரி நெறிப்பட் டிரும்புறந் தாஅழ்ந்த
வோரிப் புதல்வ னழுதன னென்பவோ
புதுவ மலர்தை இ யெமரென் பெயரால்
வதுவை யயர்வாரைக் கண்டு மதியறியா
வேழையை யென்றகல நக்குவந் தீயாய்நீ
தோழி யவனுழைச் சென்று ;
எ சென்றியா னறிவேன் கூறுக மற்றினி ;

க. அகம். சுஅ: சு - எ.

உ. "அடியோர் பாங்கினும்" என்னும் தோல். அகத். உங-ஆம் சூத்திர வுரையிலும் இவ்வுரையாசிரியர் தலைவனும் தலைவியும் வினைவல பாங்கின ரென்பதற்கு "பல்கால்யாங் .....செலற்கே" என்னும்பகுதியை மேற்கோள்காட்டி, இக்குறிப்புக்குச் சிறிது வேறுக "இது தாழ்த்துப் போதற்குத் தலைமையின்றிக் கடிதிற்போகல் வேண்டுமென்றமை யானும், தலைவனும் நாகும்போல் நாமும் கூடப் போகல் வேண்டு மென்றமையானும் தலைவன் வினைவபாங்கின ரெயிற்றென்க. வினை வல்லரனென்ஞுபாங்கினென்றதனுல்தமரேவல்செய்வதுபெறுதும்; இஃது அவ்வநிலத்து இழிந்தோர்க்கு ஏஞ்ஞான்றும் தொழிலேயாய் நிகழும்" என்று எழுதியிருக்கிறார்.

ஙு. இது போக்கிலக்கணமில்லாத ஆசிரியச்சுரிதகம் பெற்று உறழ்கலி யாயிற்றென்பர் பேராசிரியரும். நச்சினர்க்கினியரும் அவ்வாறே கூறுவர். தோல். செய். சூ. கடுசு.

(பிரதிபேதம்) * பூதலம்பாம்பென, † வைகிப்போதற்கு. ‡ ஓரடியாலெனினுமஞ்சீரும். ‖ இல் வழிஆசிரியச், × ஒத்தாழிசைக்கலி.

அ சொல்லறியாப் பேதை மடவைமற் றெல்லா
நினக்கொரூஉ மற்றென் றகலகலு நீடின்று
நினக்கு வருவதாக் காண்பா யணைத்தாகச்
சொல்லிய சொல்லும் வியங்கொளக் கூறு ;

கஉ தருமணற் முழப்பெய் தில்பூவ லூட்டி
யெருமைப் பெடையோ டெமரீங் கயரும்
பெருமண மெல்லாக் தணித்தே பொழிய
வரிமணன் முன்றுறைச் சிற்றில் புனைந்த
திருதுத லாயத்தார் தம்முட் புணர்ந்த
வொருமணக் தானறியு மாயி னெனைத்துக்
தெருமரல் கைவிட் டிருக்கோ வலர்ந்த
சிரிநீ ருடுக்கை யுலகம் பெறினு
மருகெறி யாயர் மகளிர்த்
திருமணங் கூடுத லில்லியல் பன்றே.

இஃது "ஆங்கதன் புறத்துப் புரைபட வந்த மறுத்தலோடுதோகைஇ (க) *என்பது, அவன் வரைவுவேண்டின †இடத்து அவ்வரைவு புறத்த தாகியவழித் தலைவி தன்னுயிர்வு உண்டாகத் தோன்றிய மறுத்தலோடே முற்கூறியவற்றைத் ‡தோதத்து" என்று பொருள்கூறி, "அதன்புறமெனவே அதற்கு அயலாகிய நோதுமலர்வரைவாயிற்று" என்றும்; உயிர்வு, (உ)குடிப் பிறப்புங் கற்பும்; அதற்கேற்பப் பிறர்வரைவு மறுத்துந் || தலைவன் வரையுமாறு நீ கூறேனத் தோழித்தக் =கூறியது.

இதன் பொருள்.

வாரி நெறிப்பட் டிரும்புறந் ÷காஅந்த
(ங)வோரிப் புதல்வ னழுதன +னென்பவோ

க. தொல். களவி. சூ. கசு. இதனுரையில் இவர் இச்செய்திக்கே இச் செய்யுளேமேற்கோள்காட்டி, சிறிதுவேறுபட இக்குறிப்பையும் எழுதி யிருக்கிறார்.

உ. (அ) "இற்பிறப்பு ❶யாழுக்கு ❷மிழுக்க மில், கற்பம் யான்பிறர்க் கெற்ணன் காட்டேன்" (ஆ) "இற்பிறப் பென்ப தொன்று மிரும் பொறையென்ப தொன்றுங், கற்பெனும் பெயர்தொன்றுங் களிகடம் பூரியத் கண்டேன்" கா.ப. சூடாமணி. களவு, திருவடி. சூஉ.

ங. ஓரி-ஆண்பிள்ளையின் தலைமையிர்.

(பிரதிபேதம்) * என்றது. † இடத்தே வரைவு, இடத்தவரைவு. ‡தொகுத்தென்பததற்குப் பொருள். அதன்புறமெனவேதோமலர்வரைவாயிற்று. உயிர்வு. || தலைவன் வரையுமாறு. = கூறினள். ÷ தாழ்ந்த. + என்பவோ வோரும்புதவ.

புதுவ மலர்தைஇ யெமரென் பெயரால்
வதுவை யயர்வாரைக் * கண்டு மதியறியா
வேழையை யென்றகல நக்குவந் தீயாய்நீ
தோழி யவனுழைச் சென்று

†எ - து: தோழீ! புதியனவாகிய மலர்களைச் சூடி எம்முடைய சுற்றத்தார் என்பெயரைச் சொல்லிப் பெண்பிள்ளைக்கலியாணஞ் செய்கின்றவர்களைக் ‡கண்டு வைத்தும் கோதி நெறித்தற்றொழிலிலே பட்டுப் பெரிய முதுகிலே தாழ்ந்துகிடக்கின்ற மயிரினையுடைய புதல்வன் அழுதனனென்பவோ? அங்ஙனங் கூறுவார்களாயின், நீ அவனிடத்தே சென்றுஇவ்வதுவை நின்னை விட்டு அகலாநிற்க அது நின்னிடத்தே ஆம்படி வளர்த்துகொள்ளும் மதியை அறியாதஎழைத்தன்மையையுடையையென்றுசிரித்துவாரா||என்றுள்எ-து.

கோதி நெறித்த முதுகிலே கிடக்கின்ற மயிரினையுடைய புதல்வனென்றதனாற் பயன், மயிர்முடி கூடி இளமை முதிர்ந்து காமச்செவ்வி அறிந்து கனவொழுக்கத்திற்கு உரியனாயும் தான் வளர்ந்து கொள்ளுந் தன்மை அறியாமல் இருமுதுகுரவர்மேற் நிற்கின்றபிள்ளையாயிருக்கின்றனனென்பது உணர்த்திற்று.

அழுதனனென்பவோ என்றது, (க)கொதுமலர்வளைவுக் தழியும் தான் வளைவின்முயலாது வருந்தினனென்று கூறினுள்ளார் கூறுவார்களோ என்றவாறு.இஃது அழுகையெனினும் மெய்ப்பாடு.பெயராலென்பது உருபுமயக்கம்.

ஏ செவ்வியா னறிவேன் கூறுக = மற்றினி

எ - து: அதுகேட்ட தோழி ஆண்டுச்சென்று அவனிலையை அறிவேன்; பின்னே, அவற்குக் கூறுவனவற்றை இனிக் கூறுவாயாக என்றுள். எ - து.

அ சொல்லறியாப் பேதை மடவமற் றெல்லம்
நினக்கொரூஉ ÷மற்றென் றகலகலு நீடின்று
நினக்கு வருவதாக் காண்பா யீண்டதாகச்
செல்லிய சொல்லும் வியங்கொளாக் × கூறு

எ - து: அதுகேட்ட தலைவி, மடவாய்! நீ அவனிடத்தே சென்று எடா! நின்குரவரை நோக்கி இவ்வதுவை என்னிடத்தே +யாகவேண்டு

க. கொதுமலர் - அயலார்.

(91திபேதம்) * கண்டுவிலக்கிமற், † எ-து. இந்த நெறிதலும்.....தாழ்ந்துகிடக்கின்ற புதல்வனென்றதனும் பயன்.....கனவொழுக்கத்திற்கு முரியனும்..... மெய்ப்பாடு. தோழீ ' புதியனவாயின, ‡ கண்டுவைத்துமோரிப்புதல்வன், || என்றுள. பெயராலென்பது, = மாற்றினி, ÷ மற்றென்றகல். எ-து: அதுகேட்ட தலைவி மடவாய் என்றுள்.....விஞ்ஞானமைபறறி. அகலுநீடின்று நினக்கு. + கூறு என்பது மடவாய்நீ, × ஆகவேஇஃதென்று.

மென்று சொல்லுஞ் சொல்லே அறியாதபேதை; ஆகையினாலே *இவ்வதுவை னைக்குரித்தன்றி அகலும்; அவ்வகற்கிதான் நீட்டித்தலில்லே; அது தொது மலர்க்கின்றி நினக்குவருவதாக நெஞ்சாலே காண்பாய்; அங்ஙனம் †காணு யாயின் அது நின்னை ஒருவுமென்று நீக்கு; அங்ஙனம் நீக்கும்பொழுதீ இவ்வதுவை தனக்குரித்தாக முயலும்படி நீ சொல்லிய சொற்ருனும் முன்பு வரைவுகடாயவுஞ் ‡சொல்லாத அவன் நினையாமல்(க)கின் எவ்வாலுவன்மனங் காரியமென்றே கொள்ளும்படி கூறுவாயாக ||என்ருள். எ - று.

மடவாயென்ருள், ஆண்டுக்கூறுவனவற்றைத்(உ)தான் அறியாள்போலத் தன்னே விஞயினமைபற்றி.

கஉ (ங) தரு(ச)மணற் ருழப்பெய் தில்(டு)பூவ லூட்டி
யெருமைப் பெடையோ டெமரீங் கயரும்
பெருமண மெல்லாங் (ஞ)தனித்தே (எ)யொழிய
(அ)வரிமணன் மூன்றுறைச் சிற்றில் ÷ புனைந்த

க. "வீரைந்து தொழில்ஃகட்கு ஞால நிரந்தினிது, சொல்லுதல் வல் லார்ப் பெறின்" தமிஎ கசஅ.

உ. "தானறிந்து கூறுங் தலேமற் றிடையது, தோனறைந்த தீதென்று கூறுமால்" பாரதம்.

ங. (அ) "தருமணன் ஞெமிரிய திருநகர் முற்றத்து" நெடுநல். கூ0. நற். கசஙு. உ. பெருங். (க) சஎ: கஙஎ.(ஆ) "தருமணன் ஞெமிரிய திருநகர் முற்றம்" அகம். கஅஎ. ஙு. (இ) "தருமணன் முற்றத்து" மது. ஙஅசு; பெருங். ஙக) ஙசு: சo.(ஈ) "தருமணன் ஞெமிரிய திருநா ருருஙைறை" மணி. கஅ: சசு. (உ) "தருமணற் பேரில" (ஊ) "தருமணற் பத்தர்" (எ) "தருமணன் ஞெமிரிய தண்பூம் பத்தருள்" பெருங். (க) ஙங: கஙசு; ஙசு: சஙு; (ச) சு: கஉ.

ச. "வரைப்பின் மணற்ருழப் பெய்து" கலி. கஙடு: கஙு.

ஜ. (அ) "பூவலூட்டிய பூணுமாண் பத்தர்க், காவற்சிற்றிற்கடிமனே" சிலப். கஙு: டு - சு. (ஆ) "பூவற் படிவில" புறம். ஙகஙு: க. (இ) "பூவலங் குன்றம்" கஎவழி. கஉ.

ஞ. "தனித்து" என்பதைத் தனிக்கவெனத் திரித்து, யான் தனியே நீவ்வெனஞக என்க.

ட. 'ஒழிய' என்பதற்கு அவனேயன்றி வேறு லெரிடத்தே தங்குகையி லுலே என்பதைப பொருளாக்கொள்க; ஒழிதல் - நீங்குதல். இஃது இப்பொருட்டாதலே 'ஒழிய' 'ஒழிந்திட்டாள்' (சீவக. உருஙசு,உடிoசு) என்பவற்றுக் கெழுதியிருக்கும் உரையான் உணர்க.

அ. "வரிமணல்" பட். கo. கலி. கஉஎ. இ.

(பிரதிபேதம்) *பின்னேயிவ்வதுவை, † காணுயாயிற பின்னேயது, ‡ சொல்லாக அவன், || என்ருன்தருமணல், ÷ புனேந்திருந்தது.

திருதுத லாயத்தார் * தம்முட் புணர்ந்த
வொருமணந் தானறியு மாயி னெனைத்துந்
தெருமரல் கைவிட் டிருந்தோ † வலர்ந்த
விரிநீ ருடுக்கை(க)யுலகம் பெறினு
மருநெறி யாயர் மகளிர்க்
கிருமணங் ‡ கூடுத லில்லியல் பன்றே

எ-து: என்ற பின்னும் தோழியை நோக்கி, ஆராய்ந்துபார்க்கில் அறலினையுடைத்தாகிய மணலினையுடைய (உ) துறைபின்மூன்றே சிற்றிலிழைத்து விளையாடிய அழகிய நுதலினையுடைய ஆயத்தார் தம்முள்ளே கின்று ‖ பான்தனியே நீங்கினேனுக அவன் புணர்ந்த ஒருமணத்தை நம்முடைய நெஞ்சுதான் அறியும்; அங்ஙனம் அறிந்திராநிற்கவும். (ங) கொண்டுவந்து குவித்த மணலைத் தங்கட் பரப்பி இல்லே (ச) கெம்மணலைப்பூசித் தெய்வமாக வைத்த (ஞ) ஏழுமையாகிய பேட்டின்கொம்போடே எம்முடையசுற்றத்தார் இவ்விடத்து நடத்தும் பெண்பிள்ளைக் கல்லியாணமெல்லாம் அவனை யின்றி வேறுலகிடத்தே தங்குகையினாலே இருமணம் — உண்டாகாகின்றது; இவ்விருமணம் பாத்த தினை வீரிகின்ற கடலே உடுக்கையாகவுடைய உலகத்தைப் பெறினும் அரிய நெறியையுடைய ஆயர்மகளிர்க்கு உண்டாதல் குடிப்பிறப்பிற்கு இயல்பன்றென்று யான் தெருமருகலேன் × சிறிது கைவிட்டிருக்கலோ? கைவிட்டிருக்கின், குடிப்பழுதுமாய்க் + ற்பும் நீங்குமன்றே என்றாள். எ - று.

இனி, இருமணங்கூடுதல் இயல்பன்றாயிருக்க ஒருமணந்தான் அறியுமாயிற் பெருமணமெல்லாந் தனிக்தே + ழியச்செய்தே தெருமரல் கைவிட்டிருக்கோ என்றற் பொருண்முடியுமாறு காண்க.

இதனுல், தலைவிக்குத் தம் மிறைமால் அச்சமே தோன்றிற்று.

க. "பழியெனி, னுலகுடன் பெறினுங் கொள்ளலர்" புறம். கசஉ: ஓ - சு.

உ. "முன்றுறை" என்பதற்குத் 'துறை மூன்' என்றே. பொருள் கூறுவர் பிறரும்; பரி. கஉ: ஙக: புறம். கஙக: உஓ.

ங. "தாயே, புனைமா ணிஞ்சி பூவ லூட்டி, மனைமண லிடித்து மாலை நாற்றி, யுவர்த்தினி தயரும்" அகம். ககஙி: உ - ஓ.

ச. "பூவலூட்டி" (அகம். ககஙி: ங) என்பதற்கு, சுவரைப் புதுக்கோலஞ் செய்து நீரும் பூவல் - சிவப்பு என்றும் குறிப்புக் காணப்படுகிறது.

ஞ. இச்செய்தி வேறெங்கும் கண்டதன்று.

(பிரதிபேதம்) * தம்மிற்புணர்ந்த, † மலர்ந்த, ‡ கூறுதல். ‖ யானிங்னேனுக. + உண்டாகின்றது, × பிரிதல்லை, + ஒழிகைசெய்தே.

எருமைப் பெடையென்றது *"பேடையும் பெடையும்" என்னும் (க) சூத்திரத்து நாடினென்றதனால் அமைத்தாம்.

(உ) இது வெள்ளைக்கொச்சகமும் ஓரடியாளெண் றும் கொச்சகமும் போத் திலக்கண †மில்லாத ஆசிரியச்சுரிதகமும் பெற்ற உறழ்கலி. (கச)

(ககடு.) தோழிநாங், காணுமை யுண்ட கடுங்கள்ளே மெய்கூர
நாணுது சென்று நடுங்க வுரைத்தாங்குக்
கரந்ததூஉங் கையொடு கோட்பட்டாங் கண்டாய்நம்
புல்லினத் தாய மகன்சூடி வந்ததோர்
நு முல்லை யொருகாழுங் கண்ணியு மெல்லியால்
கூந்தலுட் பெய்து முடித்தேன்மற் றேழியாய்
வெண்ணெ யுரைஇ விரித்த கதுப்போடே
யண்ணியு மத்தனு மில்லாரா யாய்நாண
வண்ணமுண் வீழ்ந்தன்றப் பூ ;

கo அதனை, வினவலுஞ் செய்யாள் சினவலுஞ் செய்யா
ணெருப்புக்கை தொட்டவர் போல விதிர்த்திட்டு
நீங்கிப் புறங்கடைப் போயினள் யானுமென்
சாந்துளர் கூழை முடியா நிலந்தாழ்ந்த
பூங்கரை நீலந் தழீஇத் தளர்பொங்கிப்
பாங்கருங் கானத் தொளித்தே னதற்கெல்லா
வீங்கெவ னஞ்சு வது ;

கள அஞ்சல், அவன் கண்ணி நீபுனைந்தா யாயி னமரு
மவன்க ணடைசூழ்ந்தார் நின்னை யகன்கண்
வரைப்பின் மணற்றுறைப் பெய்து திரைப்பில்
வதுவையு மீங்கே யயர்ப வதுவேயா
மல்கலுஞ் சூழ்ந்த வினை.

இது தலைவிகளவுவெளிப்பட்டதென்று அஞ்சித்தோழிக்குச் ‡சொல்ல, ‖ நமர் நின்னை அவற்கே கொடுக்கச் சூழ்ந்தாரோனச் சொல்லி அச்சம் தீக்கியது.

க. தோல். மரபியல். சூ. நிச.

உ. இச்செய்யுள் போக்கிலக்கணமில்லாத ஆரியச் சுரிதகம்பெற்ற உறழ் கலிக்கு மேற்கோள்; தோல். செய். சூ. கநிக. பேர். நச்.

(பிரதிபேதம்) * பேடை பெடையும், பெட்டையும் பெடையும். † இல்லாவாரிரிய. ‡ சொல்லவேண்ணை. ‖ எமர்.

இதன் பொருள்.

(க)தோழிகாய், (உ)காணமை(ங)யுண்ட கடுங்கள்ளே மெய்கூர
(ச)காணுது சென்று நடுங்க வுரைத்தாங்குக்
காந்தளூரு (ஞ)கையொடு கோட்பட்டாங் கண்டாய்நம்
(அ)புல்லினத் *தாய மகன்சூடி வந்ததோர்
(கி) முல்லை யொருகாழுங் கண்ணியு மெல்லியால்
கூந்தலுட் பெய்து முடித்தேன்மற் றேழியாய்
(எ)†வெண்ணெ யுரைஇ விரித்த கதப்போடே
யன்னையு மத்நனு ‡மில்லாரா யாய்காண
வன்னைமுன் வீழ்ந்தன்றப் பூ

க. 'ஆயர்வேட்டுவர்' என்னும் (தோல். அகக். உக.) சூத்திரவுரையில் 'ஆயர்வேட்டுவரென்னும் இரண்டு பெயரே எடுத்தோதினுரேனும் ஒன்றென முடித்தலான் அந்நிலங்கட்குரிய னெப்பெயர்களான் வருவனவுங் கொள்க' என்ற கூறி, "தோழிகாய்.....மகன்" என்னும் பகுதியை மேற்கோள் காட்டுவர். நச.

உ. (அ) "நம்மு ணுணுநர் போலத் தம்முண், மதுமறைச் துண்டோர் மகிழ்ச்சிபோல, வுள்ளத் துள்ளே மகிழ்ப" தோல். களவி. சூ. உங. நச; நாற். சூ. கசக. மேற். (ஆ) "கன்னொற்றிக் கண்சாய் பவர்" குறள். கூஎ. (இ) "மட்டொளித் துண்ணு மாந்தர் மாண்புபோன் மறைந்து வண்ணப், பட்டொளித் தொழிப வல்குற் பசுங்கதிர்க் கலாப நீ தோன்ற" சீவக. உருங.

ங. "அந்திந்தேத்தன் மாந்தினர் மயங்கி .....புலவிக்காலத்துப் போற்று துரைத்த. காலியங்கண்ணர் கட்டுரை யெட்டுக்கு, நாவொடு கவிவா கைபடு கிளவியும்" சிலப். கச: கஙங - கஙக.

ச. "நாணென்னு நல்லாள் புறங்கொடுக்கு கன்னென்னும், பேணுப் பெருக்குற்றத் தார்க்கு" குறள். கூஉ.

ஞ. "தலேப்பெய்து, கையொடு கண்டாய்" கலி. கஞ: உஎ - உஅ என்பதும் அதன் குறிப்பும் இங்கே அறிதற்பாலன.

ட. "புல்லினத் தாயர்மகன்" (கலி. கஅங: சஎ) என்பதும் அதன்குறிப்பும் பார்க்க.

எ. "ஐங் கூந்த லுளரச், சிறமுல்லை நாறியதற்கு" (கலி. கஅஞ: ஙெ-ஙச.) என்றதற்கு, 'ஐவகைப்பட்ட கூந்தலை ஆற்ற அது வெண்ணெயின் நாற்றம் மீங்கிச் சிறிய முல்லைப்பூவின் நாற்றம் மேவி மிக நாறியதற்கு' என்ற எழுதியிருக்குமுரை ஈண்டு அறிதற்பாலது.

(பிரதிபேதம்) * தூயர்மகன். † வெண்ணெயுரைஇ. ‡ இல்லாராயாய்காண.

*எ - து: மெல்லிய இயல்பினையுடையாய்! கம்யாட்டினத்தையுடைமை (க)ஆயர்மகன் சூடிவந்ததொரு முல்லைத்தொடையினையும் அதனும் †செய்த தேர்(உ)கண்ணியையுங்கூடத்தலிலேயிட்டுமிகவும்‡முடித்தேன்;தோழீ! அப்பூச் செவிலித்தாய் ||வெண்ணெய்தேய்க்கவிரித்த மயிரோடே நற்றூயுர் தந்தை முதலியோரும் இல்லிடத்தேயிராநிற்க நற்றூயுங் கெட்டொணும்படியாகச் செவிலிமுன்னே வீழ்ந்தது; ஆகையினாலே () தோழீ! பிறர் காணுமையுண்ட (ங)கள்ளின்களிப்பு மெய்யிடத்தே தோன்றி மிருகையினாலே பின்னே காணு மற்சென்று பிறர் நடுங்கும்படி அக்கடுங்கள்ளைத் தாமுண்டபடியை உரைத்தாற்போல +நாம் கரந்தகனவொழுக்கமும் கையோடே பிடித்துக்கொள்ளப் பட்டேங் காணென்றாள். எ - று.

க0 அதனை, +வினவலுஞ் செய்யாள் சினவலுஞ் செய்யா
னெருப்புக்கை தொட்டவர் போல விதிர்த்திட்டு
நீங்கிப் புறங்கடைப் போயினாள் யானுமென்
சாந்தளர் கூழை முடியா நிலந்தாழ்ந்த
(உ)பூங்கரை நீலந் தழீஇத் தளர்பொங்கிப்
(ங)பாங்கருங் கானத் தொளித்தே னதற்கெல்லா
வீங்கெவ × னஞ்சு வது

எ - து: பின்னரும் அப்பூவை வந்தபடி என்னென்று கேட்டலுஞ் செய்யாளாய்ச் சினத்தலுஞ் செய்யாளாய் நெருப்பைக் கைபோலே தீண்டினவர்கள் =அக்கையைப் பிதிர்க்குமாறுபோலக் கையைப் பிதிர்த்து நீங்கிப் புறமாகிய புறத்தேபோனாள்; அவள்போன பின்பு யானும் என்னுடைய மயிர்ச்சந்தனம் பூசி உலர்த்தின மயிரை முடித்து நிலத்தே ** தாழ்ந்த பூத்தொழிலையுடைத்

க. (அ) "முல்லைக் கண்ணிப் பல்லான் கோவலர்" பதிற். உக: உ0.
(ஆ)"முல்லையுங் சண்ணிகிந்தக் கால்விசை முறுக்கியாய, றொல்லென வொலிப்ப வோடி" சீவக. சசு.அ.

உ. "கூழையு னேதிலொன், கையினை கண்ணி முடித்தாள்" கலி. க0எ: கச - கடி.

ங. "மெய்க்கண், மகிழா னறிய நறு" நான்மணி. எக.

ச. "பூக்கரை நீலம் புடைதாழ" கலி. ககக: ங.

ஞ. "பாக்கரும் பாட்டங்கால்" கலி. ககக: க.

(பிரதிபேதம்) * எ - து, மெல்லியலாய் நம்மாட்டினத்தை. †செய்தவழினையுடைய கண் ணியையும். ‡ முடித்தேன் அப்பூ. ||வெண்ணெய்தேய்க்க. எண்ணெய்தேய்க்க. () தோழி. +நாங்கரந்த ஒழுக்கமும். + வினவலுஞ்சொல்லான் னெனவுஞ். சொல்லான். × அஞ்சுவது அஞ்சல். எ-து: =தக்கையைப், ∴சந்தனமெழுகி யுலர்த்தின, ** தாழ்ந்தபூத்தொழிலை.

தாகிய கரையினையுடைய நீல ஆடையைக் கையாலே நிறிதேறத் தழுவிக் கொண்டு அச்சத்தால் தளர்ந்து நடந்து பக்கத்திலுண்டான செல்லுதற்கரிய கானத்திலே சென்று ஒளித்தே னென்றாள்; அதுகேட்டதோழி, ஏடீ! அப்பூ வீழ்த்தற்கு நீ அவ்விடத்தே அஞ்சுவது என்னகாரியத்திற் *கென்றாள். எ-து.

களஅஞ்சல், (க) அவன்கண்ணி நீபுணர்ந்தா யாயி னமரு
மவன்க ணைடைசூழ்ந்தார் நின்னை யகன்கண்
வரைப்பில் (உ) மணற்முழப் †பெய்து திரைப்பில்
வதுவையு மீங்கே யயர்ப வதுவேயா
மல்கலுஞ் சூழ்ந்த விந்

எ-து: என்று பின்னும் நின் தலைவன் கண்ணியை நீ சூடினையாயின் அதற்கேற்ப நம்முடைய சுற்றத்தாரும் நின்னை அவனிடத்தே அடுத்தலைச் சூழ்ந்தார்; அது வியன்றி அகன்ற இடத்தையுடைய முற்றத்தே மணலைத் ‡தங்கப்பெய்து நிரையிட்டுக் கல்யாணமும் இப்பொழுதே செய்வார்கள்; பகலேயன்றிப் போன இரவிலும் ஆராய்ந்த காரியம் ‖ அக்காரியமேயாம்; நீ அஞ்சாதேகொள்ளென்றாள். எ-று.

இஃது, தலைவிக்குப் புணர்ச்சியுவகை பிறந்தது.

+இஃது ஐஞ்சீரடுக்கி வந்த தரவும் பாட்டுஞ் சுரிதகமும் பெற்ற கலி வெண்பா. (கடு)

(கஉஉ.) பாங்கரும் பாட்டங்காற் கன்றொடு செல்வேமெங்
தாம்பி னெருதலை பற்றினை யீங்கெம்மை
முன்னினின் முங்கே விலக்கிய வெல்லா நீ
யென்னையே முற்றுப் விடு;

நீ விடேளென், தொடீஇய செல்வார்த் துமித்தெதிர் மண்டுங்
கடுவய காகுபோ னேக்கிக் கொடுமையா
னீங்கிச் சினவுவாய் மற்று;

க. "நின் கூழையு னேறவன், கண்ணிதந் திட்ட தெனக்கேட்டு.....| நின்னையப், பொய்யில் பொதுவற் கடைசூழ்ந்தார் தந்தையோ, டையன்மா ரெல்லா மொருங்கு" கலி. கடஎ: ஈ0 - ஈச.

உ. "மணற்முழப் பெய்து" (கலி. கசச: கஉ) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

(பாடபேதம்) *:னென்றாள் அவன்கண்ணி, †பெய்து வதுவையும், ‡தங்கப்பெய்து கல்யாணமிப்பொழுதே. ‖ அக்காரியமேயாமினியஞ்சாதே, +இஃதைஞ்சீரடுக்கி.

அ நீநீங்கு, கன்றுசேர்ந் தார்கட் கதவீற்றுச் சென்றுங்கு
வன்கண்ணை யாய்வர லோம்பு ;

கo யாய்வருக வொன்றே பிறர்வருக மற்றுநின்
கோவரினு மிங்கே வருக தளரேன்யா
னீயருளி கல்கப் பெறின் ;

கஉ நின்னியான் சொல்லினவும் பேணுய் நினைஇக்
கனைபெய லேற்றிற் றலைசாய்த் தெனையதூஉ
மாறெதிர் கூறி மயக்குப் படுகுவாய்
கலத்தொடியாஞ் செல்வுழி நாடிப் புலத்தும்
வருவையா ணுணிவி நீ.

இது வினைவலபாங்கிற் றலைவியை வற்றிடைக்கண்டு * விலக்கிய தலைவனெடு அவள் சில மொழிகூறித் தூறியிடங் கூறியது.

இதன் பொருள்.

(க)பாங்கரும் (உ)பாட்டங்காற் (ஙு)கன்றெடு செல்லேமெம்
† தாம்பி னெருதலே பற்றினை யீங்(சு)கெம்மை
முன்னிநின் முன்கே ளிலக்கிய வெல்லா நீ
‡ யென்னை (டு)யே முற்றுய் விடு

எ - து: மனைப் ||பக்கத்திற், பிறர் சேருதற்கரிய, நாம் பயிர் செய்யுந் தோட்டத்திடத்தேகன் றேடுபோகாதிரென்றேம்; அங்ஙனம்போகின்றவெம்முடைய கையில் தாம்பின் ஒரு தலையைப் பிடித்தனையாய் எம்மை இவ்விடத்தே ÷முன் பேயும் ஒருதர நின்று விலக்கினதுபோல விலக்குதற்கு, எடா ! நீ என்ன பித்தேறினாய் ? நீ என்னைப் போகவிடு என்றாள். எ - று.

க. "பாங்கரும் காணத்து" கலி. ககஙு: கடி.

உ. "பாட்டங்கால்" கலி. ஙுக: உ.

ஙு. "கன்றெல்லாந் தாம்பில்" கலி. ஙுக: க - உ. என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

சு. "பேரேமூற்றுர்போல முன்னின்று விலக்குவா, யாரெல்லா நின்னின் றறிந்ததூஉ மில்வழி" கலி. ஙுஙு: சு - டி.

டி. இந்தூற்பக்கம் எஉங: டி - ஆம் குறிப்புப் பார்க்க

(பிரதிபேதம்) * விலக்கியவத்தலைவனெடு, † தாம்பிலொருதலே, ‡ என்னே முற்றுவாயிடு, || பக்கத்திற்சேருதற்கரிய தாம்பயிரைச்செய்யும், ÷ முன்பேயுமொருத்தர் நின்று விலக்கினைப்போல.

நி * விடேளன், (க)தொடீஇய செல்வார்த் தமித்தெதிர் மண்டுங்
கடு †வய நாகுபோ னேக்கித் (உ)தொடுவாயி
னீங்கிச் சினவுவாய் ‡ மற்று

எ - து: அதுகேட்டவன், யான் நின்னைப் போகவிடேன்; தன்னைத் தீண்டுதற்குச் செல்லுமவர்களே இடையே விலக்கி எதிரே மிக்குச்செல்லுங் கடிய வலியினையுடைய நாகுபோலே செறுத்தலோக்கித் தொழுவின் வாயிலினின்றும் போந்து நின்று பின்னைச் சினப்பா ||யென்ருன். எ - று.

அ நீநீங்கு, கன்றுசேர்ந் தார்கட் ÷கத (ங)வீற்றுச் சென்றுங்கு
வன்கண்ண ளாய்வர லோம்பு

எ - து: அதுகேட்டவன், நீ இவ்விடத்து நின்றும் போ; அதுவென்னெனில் தன்னுடைய கன்றைச் சேர்ந்தார்மேலே கோபத்தலுடையவளாய் புனிற்றுச் ×சென்றாற்போல நீ என்மேலே வந்தது காணில் யாய் தறுகண்மையையுடையளாய் வந்திறுதலுமுண்டொன்; அவ்வரவை நீபேணிக் +கொள்வா யென்ருன். எ - று.

கo யாய்வருக வொன்றே பிறர்வருக மற்றுநின்
தோவரிஞ மிங்கே வருக **தளரேன்யா
(ச)னீயருளி நல்கப் பெறின்

க. வயாவென்பது வேட்கைப் பெருக்கத்தை யுணர்த்துமென்பதற்கு, "தொடீஇய செல்வார்த் தமித்தெதிர் மண்டுங், கடுவய நாகுபோ னேக்கி" என்பதனை மேற்கோள்காட்டி, வயாவென்பது கன்றின்மேற் காதன்மிகுதி குறித்து நின்றதென்பர், தெய்வச்சிலையார்; தொல். உரி. சூ. இஎ. 'வயாவென்'

உ. எழுப்புதல் எடுப்புதலென வருதல்போல, தொழு, தொடுவென முகரம் டகரமாய் வந்ததுபோலும்.

ங. (அ) "ஈற்று, அச்சப்பொருளில் ஒன்றுகச் (தொல். மெய்ப். சூ. க) கூறப்பட்டிருத்தலும் (ஆ) "கடுஞ்சூலா நாகுபோ னிற்கண்டி நாளு, நடுக்குரு றற்றதென் னெஞ்சு" (கலி. கசo: கச- கடு.) என்பதும் (இ) "கன்றமர் கறவை மான, முன்சமத் தெதிர்ந்ததன் றேழற்கு வருமே" (புறம். உஎடு: அ - ங.) என்பதும் ஈண்டு அறிதற்பாலன.

ச. (அ) "நின்றேழி யென்னை, யருளீயல் வேண்டுவல்" (ஆ) "களிறன் னுன் றன்னையொரு, பெண்டிர ருளக் கிடந்த தெவன்கொலோ")

(பிரதிபேதம்) * விடேன் தொடிய செல்வோர்த். †.வயாநாகுபோனேக்கிக் கொடுமையா. ‡ மற்று நீநீங்கு. எ-து: || என்ருன் தன் கன்று, + கதறிற்றுப், × சென்ருப்போல, சென்றதற்போல, + கொன்னென்ருன். யாய்.

எ - து: அதுகேட்டவன், நீ அருள்செய்து என்னைக் கூடப்பெறின், அவ்வீடத்தே ஒன்று தாய் வருக; ஒன்று அயலார் வருக; அவர்களேயன்றிப் பின்னே நின் தந்தை தான் வரினும் வருக; அதற்கு யான் வருந்தேனென்றான். எ - று.

கக *நின்னையாள் சொல்லினவும் பேணாய் நினை இக்
(க)கனைபெய †லேற்றிற் றலைசாய்த் தெனையதூஉ
மாறெதிர் கூறி முயக்கு நடு படுநுவாய்
கலத்தொடியாள் செல்வுழி நாடிப் புலத்தும்
‡வருவையா ணுணிநி நீ

எ-து: அதுகேட்டகலவி, "என்னையான் எந்தன்மையவாகவுஞ்சொன்ன ||வார்த்தைகளைப் பரிகரியாயாக் கூட்டத்தையே ஈனேந்து செய்த மழையிடத்து எருதுபோலே தலையைச் சாய்த்து யான் கூறியதற்றிற்கு எதிராகச் சில சொற்களைக் கூறி இங்ஙனம் முயக்கமுறுகின்றவனே! நாணமில்லாதவனே! நீ கறவைக்கலத்தோடே யாஞ் செல்லும் பகுமேய்க்கின்ற இடத்தையும் நாடி என் கணையன்மார் நிற்கும் புலத்திலும் வருவையாயிருந்தாய்; ஆண்டுக் கூடுதுமெனக் குறியிடங் கூறினள். எ - று.

இதனுள், ÷இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.
இஃது ஐஞ்ஞூறடுக்கிவந்த கலிவெண்பாட்டு. (கசு)

(ககள) மாண வுருக்கிய நன்பொன் மணியுறீஇப்
பேணித் தொடைத்தன்ன தேனிரையாய் தோங்கின்
முதிரா விளமுகை யொப்ப வெதிரிய
தொய்யில் பொறித்த வனமுலையாய் மற்றுநின்
கைய தெவன்மற் றுரை ;

சு கையதை, சேரிக் கிழவன் மகளென்யான் மற்றிஃதோர்
மாதர்ப் புலித்தி விலையாகச் செய்ததோர்
போழிற் புகுந்த வரிப்புட்டில் புட்டிலு ளென்னுள
காண்டக்கா யெற்காட்டிக் காண் ;

(ஜ) "இருளுறழ் கூந்தலா னென்னை, யருளுறச் செயினுமக் கறனுமன் றதுவே" (ஈ) "நீகல்கி னுண்டென் னுயிர்" கலி: சுக: ககை - கள, ககை - உ0; கச0: கூங - கூச; கச: கஉ.

க. \"நினையெயல்" (கலி. சடு: ச) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

(பிரதிபேதம்) * நினையான், † எற்றித் தலைசாய்த்த, ‡வருவையால், || வார்த்தைகளையும். ÷ருவரும் புணர்ச்சியுவகை யெய்தினர் இது அஞ்சி,

க0 காணினி, தோட்டார் கதுப்பினென் றேழி யவரொடு
காட்டுச்சார்க் கொய்த சிறுமுல்லை மற்றிவை
முல்லை யிலையாயின் முற்றிய கூழையா
யெல்லிற்றுப் போற்தாயி னீதோளிக் கண்டேனுற்
செல்லென்று நின்னை யிடுவேன்யா னற்றெனக்கு
மெல்லிய தோழா வறிவு.

*இஃது ஆற்றிடைத்தலைவன் தலைவியைக் காயதுவினுய்ச்சேர்ந்தது.

இதன் பொருள்.

மாலை யுருக்கிய கன்(க)பொன் மணியுநீ இப்
பேதைநித் நுடைத்தவ்வ தேனியம்பு வேதாங்கின்
றாதிரா னிறமுகை பொப்ப வெகிரிய

க. "பொன்னுரை மணியன்ன மாமைக்கன்" (கலி. சுஅ: கள) என்பதும் அதன் குறிப்பும் ஒப்புநோக்கற்பாலன.

உ. கோங்கு பாலைநிலத்துக்குரித்தாகக் கூறப்படுவது; பொரியரையுடையது; வேனிற்காலத்து மலரும் இயல்பினது; தோகைச்செய்கையில் மகளிர்குலே கேட்டு மலர்வதாகக் கூறப்படுவது. இம்மலர் பொன் னிறமும் விரிந்து தோன்றலுமுடையதாதலால், இதற்கு விளக்கும் பொற்பின்னமும் பொற்றட்டும் பொற்றகத்தட்டும்பொற்குடையும் சுரிதகமின்னுமாபணமும் உவமையாகக் கூறப்படுகின்றன. இவை (அ) "அலரமுலே டதரேர னான கோங்கமு. மிலவமு மெல்லடி யினை வருவகைத், தலைவரே டன்வழிச் சார்க ரின்புற, நிலைபெறு பஞ்சியி னெறிக மர்க்குமே" எனவும் (அ) "பொரியரைக் கோங்கின் பொன் மருள் பசுவீ" எனவும (இ) "திலகக் கோங்கம பயந்த, வண்டிமிரு தொழுமுகை யுடையும் பொழுதே" (ஈ) "வேனிற் கோங்கின் பூம் பொருட்டு" எனவும் (உ) "தோங்க மாதர் குதலையைக் கேட்டலுந், தேங்கொள் போது கிளைதொறும் பூத்தலால்" எனவும் (ஊ) "பொன் போதலர் கோங் கோங்கு சோலை" எனவும் (எ) "கோங்கின், கா லுறச் சுழன்ற கண்கமழ் பனிமலர், கைவிடு கடரிற் றேன்றும்" (ஏ) "செல்சுடர் கெடுங்கொடி போலப், பல்பூங் கோங்க மணிந்த காடே" எனவும (ஐ) "வள்ளம்போற் கோங்கு மலருந் திருநுடன்" எனவும் (ஒ) "தோகைகலர் சேர்ந்த மாங்கனி தன்னைப், பாகுறை விருந்து பல்பொறி மஞ்ஞையைச், செம்பொற்றட்டிற் றீம்பா லேந்திப், பைங்கிளி யூட்டுமோர் பாவையா மென்றும்" எனவும் (ஓ) "பொன்

(பிரதிபேதம்.) * இது ஆற்றிடைத்தலைவியை.

(க)தொய்யில் பொறித்த வனமுலையாய் மற்றுநின்
கைய தெவன்மற் றுரை

எ - து: மாட்சிமைப்பட உருக்கி ஓடவைத்த நல்ல பொன்னிலே நீல மணியை அழுத்திப் பேணி ஒப்பமிட்டாற்போன்ற கரிய நிறத்தையுடையாய்! மூதிராத் கோங்கினது இளைய முகையையொப்பத் தோன்றின தொய்யி லெழுதினவனமுலையையுடையாய் ! பின்னே நின் கையிடத்தது யாதுதான் உரையென்றான். எ - து.

ஈ கையதை, சேரிக் கிழவன் மகளேன்யான் மற்றிஃதோர்
மாதர்ப் புலித்தி லிலையாகச் செய்ததோர்
போழிற் புனைந்த வரிப்புட்டில்; புட்டிறு ளென்னுள
*காண்டக்கா யெற்காட்டிக் காண்

எ - து: அதுகேட்டவள், என் கையிடத்தது, இச்சேரிக்குரிய இடை யர்மகளாயிருப்பேன் யான், பின்னே என் கையில் இருக்கின்ற இது காதலி புடைய புலித்தி லிற்கப்படுவதொன்றாக முடைத்ததோரு புட்டில் ; அது தான் பின்பு பனங் குருத்தின் வகிரால் பொத்தின தொழிலையுடைய புட்டி லென்றான். அதுகேட்டவன், (உ) காட்டிக்கவளே ! இப்புட்டிலுள் என்ன பண்டங்களுள? அவற்றை எனக்குக் காட்டிக்கா†ணென்றான். எ - று

செய் கன்னம் பொலிய வெள்ளி, நுணகோ லறைகுறைந் தூதிர்வன போல, வரவ வண்டின மூதுதொறுங் குவவுத், தோங்குசினை நறவீ கோங்கல ருறைப்ப" எனவும் (ஒள) "புல்லிதழ்க் கோங்கின் மெல் லிதழ்க் குடைபபூ" (ஸ்) "குடைமாக மெனவேந்திக் கோங்கம்போ தவிழ்ந்தனவே" (அஅ) "குடையவிழ்வன கொழுமலரின குளிர்களி யன கோங்கம்" (ஆஆ) கோங்கு பொற்குடை கொண்டு கவிழ்ந்தன" எனவும் (இஇ) "கைவல் வினைவன் றையுபு சொரிந்த, சுரிதக வுருவின வாகிப் பெரிய, கோங்கங் குவிமுகை யவிழி" எனவும் வருவன வற்றால் அறியலாகும். இதன் றூது பொன்னிறமுடையதென்பது கலி. நூ: கஉ-ஆம். அடியானுணரப்படும். இதன் காய் சால்போன்ற தென்றமு புஞ்சுடையதென்றும் கூறுவர்; இதன் அரும்பும் மகளிர் கொங்கையும் ஒன்றற்கொன்று உவமையாகக் கூறப்படுதலே இந்நூற் பக்கம் நூசச. உ - ஆம் குறிப்பால் உணர்க.

க. (அ) "தொய்யில் பொறித்த சுணங்கெறி ரிளமுலை" மது. சகக. (ஆ) "தொய்யில் பொறித்த வனமுலை" (இ) "தொய்யில் பொறித்த வழி" கலி. கஎ: கஉ; கசச: நூச.

உ காண் - அழகுமாம்.

பிரதிபேதம்) *காண்டக்காய் காட்டிக்காண். † என்னும் தோட்டார்.

காணினி, (க)தோட்டார் கதுப்பினென் றேழி யவரொடு
காட்டுச்சார்த் தொய்த சிறுமுல்லை; மற்றிவை;
முல்லை யிவையாயின் முற்றிய கூழையா
யெல்லிற்றுப் போழ்தாயி னீதோளிக் கண்டேனுற்
(உ)செல்லென் றுரைவேண்யான் மற்றெனக்கு
மெல்லிய தோரா வறிவு.

எ - து: அதுகேட்டவள், இனிக்காண்பாயாக; பின்னே இவை இத ழாலே நிறையப்பட்ட மயிரினையுடைய என் தோழி ஆயத்தாருடனே காட்டிடத்தே பறித்த சிறுமுல்லையென்றாள்; அது கேட்டவன், முடிகூடின மயிரினையுடையாய்! யான்தனியே இவ்விடத்தே*கண்டேனல்; இருந்த இவை முல்லைப்பூவாயின், இவை தொடுத்துமுடித்து நாங் கூடுதற்குப் பொழுதா யின், ஒளி இத்தன்மைத்தாயிராநின்றது; நின் நினைவு போக்கிலேயாகில் யான் போவென்று விடுவதுஞ் செய்வேன்; பின்னை எனக்கு நின்னைப் போகவிடுதலே †ஓராது இவண என் அறிவு இளைத்திராநின்றது; இனி இக் கூட்டத்திற்கு உடம்பட நில்லேலென்றாள். எ - று.

இது (ங.)‡இதோளி ஈதோளியெனச் சுட்டு நீண்டு நின்றது; இது சுட்டு முதலாகிய இரண்டிற்று வல்லெழுத்து மிக்கு நின்றது.

க. (அ) "தோட்டார் கதுப்பினுள்" நற்றிணை. கசஎடு. (ஆ) "தோட்டார் குழலியொடு" சிலப். கடு: கக.அ.

உ. "நின்மொழிகொண டியானே விடுவேன்மற் றென்மொழிகொண் டென்னைஞ மேவல் செயின்" கலி. ககங: கஎ - கஅ.

ங. "ஒரு காலத்து வழங்கப்பட்ட சொல் ஒரு காலத்து வாராதாகலும் பொருள் வேறுபடுதலுமுடைய; அதோளி இதோளி உதோளி எனவும் குயின் எனவும் நின்ற இவை ஒருகாலத் தனவாகி இக்காலத் நில வாயின. இவை முற்காலத்தனவென்பதேகொண்டு வீழ்ந்தகாலத்தும் செய்யுள் செய்யப்பட்ட. அவை ஆசிரியர் நூல் செய்த காலத்து உளவாயினும் கடைச்சங்கத்தார் காலத்து வீழ்ந்தமையிற் பாட்டினுக் தொகையினும் அவற்றை காட்டிக்கொண்டு செய்யுள் செய்திலர்; அவற்றுக்கு இது மாபிலக்கண மாகலி னென்பது" என்று பேராசிரி யரும் "ஒருகாலத்து வழங்கிய சொற்கள் ஒருகாலத்து வழங்காதனவு மூன" என்பதற்கு, அதோளி இதோளி உதோளி குயின் என்ப வற்றை மேற்கோள் காட்டி, 'இவை இடைச்சங்கத்திற் காதாரவாயின'

பிரதிபேதம்) * கண்டேனு மிருந்திலை, † ஓராநிலனாறறிவு, ஓராநி லவணாரறிவு, ‡ இது தொளி யீதொளியென.

இதனால், இருவர்க்கும் புணர்ச்சியுவகை *பிறந்தது.

என்று நச்சினார்க்கினியரும், "மரபேதானும்" என்னும் (தோல். செய். அ0.) சூத்திரத்தினுரையில் எழுதி யிருக்கிறார்கள்; "இவை இடைச் சங்கத்திற் காகாவாபின்' என்ற நச்சினார்க்கினியருக்குக் கடைச்சங்கத்திற் காகுமெனபது கருத்தென்று கொள்ளலாகாது; இச்சொற்கள் வழக்கி லில்லையென்பதே கருத்தென்று கொள்ள வேண்டும். ஆனல், 'சுட்டு முதலாகிய விகாரவிறுதியும்' என்னும் (தோல். தொகை. கள) சூத்திரவுரையில் இளம்பூரணர்சுட்டுமுதலாகிய இகாரவிறுதிக்கு. அதோளி, இதோளி, உதோளி என்னுஞ் சொற்களே உதாரணங்காட்டி யிருக்கிறார். நச்சினார்க்கினியரும் அவரையே பின் பற்றி அச்சூத்திரவுரையில் அப்பகுதிக்கு அச்சொற்களேயே உதாரணங் காட்டி யிருப்பதோடு 'அதோளி - அவ்விடமென்னும் பொருட்டு' என்று குறிப்பும் எழுதியிருக்கிறார். 'ஞகமவ்வென்னும் புள்ளிமுன்னர், யஃகான் றிற்கண் மெய்பெற் றன்றே' என்னும் (தோல். நூன்மரபு உஎ.) சூத்திரத்தையில், நிங்ஙனம் ஆசிரியர் சூத்திரஞ்செய்தலின் அக்காலத்து இச்சாண்டு புள்ளிகளின் முன்னும் யகரம் வரப்பெற்று ஒரு மொழியாக வழங்கிய பொருள்கள் உளவென்பது பெற்றும். அவை இக்காலத்து இறந்தன வென்று கூறுபவராகிய இவர், அதோளி முத லியசொற்கள் முற்காலத்துளவாகி இவர்காலத்து இலேயாயின் 'சுட்டு முதலாகிய விகாரவிறுதியும்' என்னுஞ்சூத்திரவுரையிலும் 'இங்ஙனம் ஆசிரியர்சூத்திரஞ்செய்தலின் அக்காலத்துச், சுட்டுமுதல் இகரவீறுன சொற்கள் உளவென்பது பெற்றும்; அவை நிக்காலத்து இறந்தன' என்றன்றே கூறவேண்டும். இவர் கூற்றுள்ளே மூன்றுக்குப் பின் மூனுகின்றதே வரின் மு னுறை அமைத்துக்கொள்ளல் வேண்டும். நாமறிந்த அளவில் இதுகொறுப் பொருளறிவித்தவர் இவரே. அங்ஙு, 'அதோளியென்பதற்கு அவ்விடமென்று பொருள்கூறி யிருப்பது போலவே இந்நூலிலும் இச்செய்யுளில் 'இதோளி' என்னுஞ் சொல் லுக்கு 'இவ்விடம்' என்று பொருள் கூறியிருக்கிறார். இவற்றையும் செய்யுளியலுரையில் இவர் எழுதியிருப்பதையும் நோக்கின், இச் சொற்கள் மிகுதியாக வழங்காமை கருதிச் செய்யுளியலில் அவ்வாறு எழுதினரென்றும் இவை அருகி வழங்குமென்பதே இவர் கருத்தென் றும் கொள்ளுதலேதகுதியாம். "கதிர்த்தகண் பூண் கம்புடாழ் பீலிக் கதிரை ஞரைவண் டானம்" (சீவக. உ0அ.) என்பதனுரையில் 'பூணிகம்பு னென்பன இறந்தவழக்கு' என்று இவர் எழுதியுள்ள

(*ரதிபேதம்) * தோன்றிற்று.

இது கொச்சகக் கலி. (எ)

*முல்லைக்கலி முற்றும்.

கருத்தையும் நோக்குக. 'இதோளி' என்னுஞ்சொல் ஒன்றே முதல் நீண்டாவது இந்நூலிற் காணப்படுகின்றது; அதோளி உதோளி யென்பன நாமறிந்தளவில் ஒரிடத்துங் காணப்படவில்லை. வடமலையாளமாகிய தளிசேரிப்பக்கத்து இப்போதும் ஒளியென்பது இடமென்னும் பொருளில் பெரிதும்வழங்கி உயர்ந்தோர் இளவியாய் வழங்குமென்ப; இச்சொற்கண்ணடைச்சாலத்தே ஈற்றிகரங்குறைந்து ஈ ஊ ஏ ஆயும் வழங்கின வென்பது தேறும். புன்னி. எ0உ-ஆம் சூத்திரவுரையிலுள்ள காரணகாரியம் அறியலாகும். கன்னடத்தில் அதொள் இதெ்ரள் எம்பன அதில் இதிலென்னும் பொருளில் வழங்குமென்பதும் இங்கே ஒருங்குக்கத்தது. அன் றியும், இச்சாலத்து அவ்விடம் இவ்விடமென்னும் பொருளில் வழங்கும் அதோ இதோ என்னுஞ் சொற்களும் அதோள் இதோள் என்பதன் சிதைவோவென்றும் ஐயமுண்டாகிறது. இவற்றைப் பாகதச் சிதைவென்பாருமுளர். இவற்றுள், இதோவென்பது வெருளாமுனிவாற் செய்யுளிலும் பல இடத்து எடுத்தாளப்படுகிறது. "மற்றிதா தோன்றுகின்ற, சோலையுஞ் சுனையினற்றி" (சீவக. கஉஉஉ) என்பதி. இதா வென்பது இவ்விடமென்னும் பொருளில் சிந்தாமணியிலும் வந்துள்ளது. அங்கு 'இதர, நிசாசிசால்' என்று இவ்வடையாகிரியர் குறிப்பு எழுதியிருக்கிறார்.

(பிரதிபேதம்) * முல்லைப்பாட்டு முதலும், முல்லை முற்றும்.

கே

உ. வை. சாமிநாதன்,

பதிப்பாசிரியர், பி. ஏ., சேலம்.